அருட்பெருஞ்ஜோதி அகவல்

உரைவிளக்கம்

(இரண்டாம் பாகம்)

தூய நூல் வெளியீட்டு அறக்கட்டளை
திண்டுக்கல்

சரவணானந்தா

முதற்பதிப்பு : 1974 - 3000 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு : 1990 - 2000 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு : 1997 - 1000 பிரதிகள்

வெளியீடு:
தயவு நூல் வெளியீட்டு அறக்கட்டளை
தயவு சத்திய ஞான கோட்டம்,
4, நாகசாமி அய்யர் சந்து,
திண்டுக்கல் - 624 001.

விலை ரூ. 250/-
(இரண்டு பாகங்களும் சேர்த்து)

அச்சிட்டோர்:
சோலை பிரிண்டர்ஸ்,
1079, முருகன் காலனி, திருத்தங்கல்-626 130.
(சிவகாசி). போன்: 72443, 23017.

அகவல் பொருளடக்கம்

உரை விளக்கம்

இரண்டாம் பாகம்

★ எண்-உள் தலைப்புகளின் தொகை

அருட்பெருஞ்ஜோதி அகவல்

உரைவிளக்கம்

190. எண் வகை

(1)

621. ஒன்றினிலொன்றே யொன்றிடை ஆயிரம்
622. அன்றற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) எண் என்பது, எண்ணம் என விரிந்து, கணக்கிடு குறியையும், கருதுதலாகிய நினைவையும் குறிக்கும். மேலும், எண், எட்டையும் இதற்கான தமிழ் எண் குறிக்கும், அகரத்தையும் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

எண்ணிலே முதல் எண் ஒன்றாகும். ஏன் இம்முதல் எண்ணை ஒன்று என்றனர்? அக அனுபவத்தில் விளங்கும் கடவுள் உண்மை உணர்த்தும் காரணமேயாம். கடவுளுண்மையும் இவனது உணர்வும் இரண்டாய் இல்லாத ஒரு பொருளாய் இருக்கின்றது. கடவுளும் ஆன்மாவும் இதுவேயாம். இதனால் அத்துவிதம் எனவும் படுகின்றது. இரண்டும் பிரிவறக் கலந்தது போல் விளங்குகின்றதாம். பாலும் அதன் சுவையும் போல் எனலாம். பாலில் சுவை இயற்கையிலுள்ளதே போல் கடவுளிடத்தில் அவரது அருள் என்னும் தன்மையாகிய நாம் இயல்பாகவே இருந்துகொண்டுள்ளோம். அகஉண்மை அறியாத தேகிகளே நம்மைக் கடவுளுக்கு அன்னியமானவர்களாகக் கருதுவர். இவ்வுண்மை எல்லாம் ஓர்ந்துதான், முதல் எண்ணுக்கு ஒன்று என்ற பெயரைக் குறித்து, அதற்கு ஒன்றுதல், இணைதல், கூடுதல் என்று வினைப் பண்பு விளக்கப் பொருள் கூறியுள்ளனர். இதே காரணத்தைக்கொண்டு ஏகம் என்ற சொல்லும் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் ஒன்று என்ற சொல்லுக்குரிய மற்றொரு வார்த்தை. ஏகுதல் என்றால், உடன் சேர்தல் என்பது பொருளாம். ஆகவே, ஒன்று என்பதை நம் கடவுளான்ம உண்மையைச் சுட்டும் வகையில் குறித்துள்ளன

ராம். அகரம் கடவுள் உருவாயும், உகரம் நம் எண்ணமாயும் இருக்கின்றதால், எழுத்திலும், எண்ணிலும், அகரமும் உகரமும் காட்டி முடிவில் அ,உ,ம் சேர ஓமாகிக் கடவுள் வண்ணமாயும் அ+உ=ய், பத்தாகிய ஆன்ம வடிவாயும் விளங்குகின்றதாம்.

ஒன்றினில் ஒன்று என்பது, கடவுளில் ஒன்றிநில் - எனல் சத்விசாரநிலையாம். ஒன்றிடை ஆயிரம் என்பது அந்தக் கடவு ணிலையிலிருந்து கொண்டு, எண்ணம் செயல்பட ஒளி செய் திருத்தல் விளங்கவாம். உகரஇறுதி கொண்டே எண் முடிவில், மகர மெய்ச் சோதியாய் விளங்குவது ஆயிரம் என்னும் போதாம். இந்த ஒளி நிலையையே ஆயிரம் இதழ்த் தாமரை என்கின்றனர். இங்குதான் மனிதன் ஒன்றாகிய கடவுட்ஜோதியினின்று நித்தி யானந்தமாய் விளங்கலாகின்றதாம். இந்நிலை யனுபவம் உண் டாதற்பொருட்டே சிருஷ்டித் தொடக்கத்தில்தானே சூக்குமமாய் இவ்வமைப்பு ஏற்படுத்தியுள்ளார் நம் பதி.

(2)

623. பத்திடை யாயிரம் பகரதிற் கோடி
624. அத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பத்தாகிய ஆன்மநிலையிலிருந்துகொண்டு, பரோப காரச் செயலால் உலகிடை வாழ்தல் ஆயிரநிலையாம். அதுவே முத்திநிலையாக விளங்கும். கடவுள் ஒன்று என்றால், ஆன்மா ஒரு சிற்றணுவாய், சூனியமாய், பூஜ்யமாய், ஒன்றாகிய கடவு ளோடு கூடினால்தான் விளங்கமுடியும். தனி ஆன்மாவுக்கு மதிப் பில்லை, கடவுளைவிட்டுப் பிரிந்திருக்கவும் முடியாது என்பது அனுபவம். ஆகையால்தான், நம் ஆன்மாவை ஒன்றும் ஒரு சூனியமும் (10) சேர்த்துப் பத்தாகப் குறிக்கின்றோம். தமிழ் எழுத்துருவிலும் பத்தை, (ஒன்றும் சூனியமும் சேர்ந்துள்ளது) போல யகரமாய் வரையப்படுகின்றது.

ஆயிரம் என்பதற்கு ஒன்றும் மூன்று சூனியமும் குறிக்கப்படு கின்றது.இது முத்தேக முத்திநிலையாயுள்ளதைச் சுட்டும். இந்த முத்தியின் முடிவுதான் கோடியாம். இது ஆறு ஆதாரத் திருவடி நிலைகளுக்கு அப்பாலாம். ஏழாவது நிராதாரநிலை எனவும் இங்குறுவோர் தான் பிறவாநிலை எய்துவர் என்றும் முடிவுகட்டப்பட்டிருந்தது. ஆகையால் இதனைக் கோடி

என்றும், அது ஒன்றுக்குப்பின் ஏழு சூனியங் கொண்டிலங்குவது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அந் நிலையில் ஆழ்ந்துபோய் அழிந்துவிடாமல், அங்கு உற உற்றுநின்று வாழற்குச் சுத்தநெறி யுதவுகின்றதாம்.

(3)

625. நூற்றிடை யிலக்க நுவலதி லனந்தம்

626. ஆற்றிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) மனம்தான் மெய்ப்பொருள் காண வழியாயுள்ளது. அம் மனமே எண்ணக்குவியலாக இருக்கின்றதாம். ஆனால் மன அறிவு புலன்வழி சென்று உணர்வதெல்லாம் குறைபொருளாகத் தான் உள்ளனவாம். மனம் ஒடுங்கிய இடத்தில் அகவெளியில் லட்சியப்பொருள் விளங்குகின்றது. முடிவில் அக்குறிக்கோளை அடைவது திருவுளச்சம்மதமாகும். இந்த உயர்நிலை அனுபவம் வெளிப்பட வேண்டியே, கடவுள் தாமே யாவையும் வகுத்து, செயல்பட்டு இந்த மா பிரபஞ்சத்தில் அனந்தவண்ண பேதத் தோடு விளங்குகின்றதாகத் தெரிகின்றது.

ஒன்றாகிய கடவுள் முதலில் ஆன்மாவாய் எங்கும் நிரம்பி யுள்ளார். இது தான் ஒன்று பத்தாகியதாம். இந்தப் பத்தான ஆன்மஉண்மை வெளிப்பட, மனித வடிவில் மன ஒடுக்க நிலை ஏற்பட்டதாம். இது மன எண்ணம், நூறு ஆம், நிலையாம். நூறு என்றால் ஆன்மப் பத்தோடு, மனோ எண்ணமாகிய ஒரு சூனியம் சேர்வதைக் குறிக்கும். இதனால், நூறு, ஒன்றும் இரு பூஜ்யமும் கொண்டிலங்குகின்றதாம். நூறுதல் என்றால் அடங்கி யொடுங்குதல் என்றே பொருளாம். இம் மன மோன நிலையில் தான் லட்சியப்பொருள், திரிதேக சித்தி நிலையை மேலும் இச் சூனியத்துடன் விளங்கக் காட்டி வழங்குகின்றதாம். இதனால் நூற்றுக்குமேல் லட்சம் என்னும் இலக்கம் ஒன்றுடன் ஐந்து பூஜ்யம் பெற்றுள்ளதாம். இந்த லட்சியசித்தி பெற்று உலகிலே என்றும் விளங்க வேண்டித்தான் கடவுள் இப் பிரபஞ்சத்தை அனந்தமாகத் தோற்றுவித்துள்ளார் என்பது உண்மை.

(4)

627. கோடியி லனந்தம் கோடிபல் கோடி
628. ஆடுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அனந்தமாகிய பிரபஞ்சத்தின் முழு உண்மையையும் நாம் திருவருள் உணர்வால் கண்டுகொள்ளும்படி, கோடியில், அதாவது ஏழாவதாகிய நிராதார பீடத்தில், ஆன்ம அணுவில் அமைத்துள்ளாராம். கோடி பல் கோடி என்பது (பல் கோடி கோடி) திரயோதச அருள்ஒளி வளர் கமலாலயம். இங்கு தான் நம் பரம்பொருள் அனந்தானந்த நடனம் புரிந்துகொண்டே யுள்ளார். கோடி கோடி என்பது பதுமம் என்றும், ''பல்'' என்றது, பகர வடிவ மீதுள்ள பதின்மூன்றாவதான லகரமெய்யால் விளக்கப்படும் அருள் ஒளியைக் குறிப்பதாம். இவ்வருள் ஒளியின் ஆனந்தநடனம்தான் சதாகாலமும், எங்கெங்கும் நடந்துகொண் டுள்ளதாம். இது இன்று இம்மனிதனில் வெளிப்பட்டு, அனுப வத்தில் என்றென்றும் விளங்கற்கென்றே அன்றே, ஆதிமுதலிலே நம்பதி ஏற்பாடு செய்துவிட்டுள்ளார்.

191. வித்தும் விளைவும்

(1)

629. வித்தியல் ஒன்றா விளைவியல் பலவா
630. அத்தகை யமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அக அனுபவம் உண்டாக, ஆன்ம ஆனந்தம் விளைய, புறஉலகப் படைப்புகள் எல்லாம் திருவருள் நியதிப்படி தோற்று விக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஈண்டு தாவரப்படைப்பின் வித் தும் விளைவும் பற்றி விளக்கத்தைக் கொண்டு, மனிதனின் அகப்புற வாழ்வின் தத்துவத்தையே அறிந்துகொள்ளச் செய்கின்றார்.

பலவாகிய விதைகளில், அவற்றின் பொது இயல்பாக, முளையும், சத்தான உட்பகுதியும், காப்பான புறத்தோற்றப் பகுதியும் அமைந்துள்ளனவாம். இப்படி ஓரியல்பு உடைய பல வாம் விதைகளும் முளைத்து விளைவு கொள்ளும் போது பலவேறு தாவரவண்ணமாக விளங்குகின்றனவாம். இதுபோல், தம்மில் வித்தியாசமில்லாத, அபேதமான ஆன்மாக்கள் பலவும் இவ்வுல

கிடை அளந்தவண்ண பேதமாய் விளைவுகொண்டுள்ளனவாம். இது நம் பதி அமைத்த நியதிமுறை.

(2)

631. விளைவிய லனைத்தும் வித்திடை யடங்க
632. அளவுசெய் தமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஒரு விதையில் முளையும், அது வெளிப்பட்டு வளர்ந்து தழைத் தோங்கிப் பயன்தரும் விளைவுசக்தி முழுமையுமே அதி சூக்குமமாய் அடங்கியிருக்கின்றனவாம். இதுபோன்றே நம் ஆன்ம வித்தில், ஜீவ தேகக் காரியச் சத்தியல் முற்றும் ஒடுங்கிக் கிடந்து, அது வெளிப்பட, உலகிடை பிறப்பிக்கப்பட்டு வாழ் வடைந்துள்ளதாம்.

இதற்குமேல், அணுத்துவமாகிய ஆன்ம அணுவைப், நம் பதி தன் இயற் சக்தி முழுவதையும் அடக்கி நின்று, அதுகொண்டு, அது வெளிப்பட பிரபஞ்சநடனம் புரிகின்றார். ''ஆட்டுக்கு வால் அளந்து வைத்திருக்கிறது'', என்றதன் உண்மை, நம்பதி திருநடனம் புரிவதற்கே, இந்த ஆன்மாவைக் குவாலாக (சக்தி குவிந்து விளங்குமிடமாக) அளவுபடுத்தி அடக்கிவைக்கப்பட் டுள்ளதாம்.

(3)

633. வித்தும் பதமும் விளையுப கரிப்பும்
634. அத்திற லமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஒரு விதையையும், அதனுள் அதற்கு வேண்டிய எல்லாச் சூக்கும சக்திகளையும் அமைத்துள்ள ஆண்டவர், அந்த அகச்சக்தி முற்றும் வெளிப்பட்டுப் பயன் விளைவிக்கவேண்டிப் புறத்தே துணைக்காரணப் பொருள்களையும், சக்திகளையும், அப் போதப்போது நியதிப்படி உதவிக்கொண்டே யுள்ளார். இவ் வண்ணமே ஆன்ம வித்துக்களுக்கும்கூட, அகமும் புறமும் சூழ்ந்து நின்று, பெருங்கருணையுபகரிப்பால், வேண்டிய வேண்டியாங்கு வழங்கி வழங்கி முடிவில் பெருநலத் திருவாழ்வு அருள்கின்றார்.

(4)

635. வித்திடை முளையும் முளையிடை விளைவும்
636. அத்தக வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) விதையினுள் சிறிதாய் அன்மந்துள்ள முளைமுளைப்ப தற்கு முதற்காரணமாயுள்ளது இம்முளையே. இதனைத் தன் அகத்தே மறைத்துக்கொண்டுள்ளது விதை. இவ்விதை முளைப் பதற்குப் புறக்காரணமாய் அமைவன, மண், நீர், காற்று, சூரிய ஒளி, வெளி யாவுமே. இவற்றின் துணையால் முளை வெளிப் பட்டு, வேர் கீழ் சென்று விளைவு கொள்கின்றது. ஆன்மவிளைவுக் கும் கடவுள் தயவால், ஆணவ முளையும், மாயாகன்மப் பிரபஞ்சச் சேர்க்கையும் துணையாக ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம்.

(5)

637. வித்தினுள் வித்தும் வித்ததில் வித்தும்
638. அத்திறம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அணுவுக்குள் அணுவாய், ஜோதியுட் ஜோதியாய், உள்ளத்துக்குள்ளாய்க் கடவுளுண்மை மறைந்து இருக்கின்றதே போல், ஒரு விதையினுள் அதி சூக்குமமாக அதன் இனவித்தின் தாதுவும் உள்ளதாம். முதலில், விதையினின்று விளைவு உண்டா கிப் பூத்துக் காய்த்துப் பழுத்து அதன் இன வித்துக்களை வெளிப் படுத்துகின்றது.

ஓர் ஆன்மாவில் கடவுள் அருள் செயல்படும்போது, அவ்வான் மாவைச் சூழ ஒரு குறிப்பிட்ட ஜீவதேகம் விளைவு கொள்ளும். அப்போது அந்த ஆன்மாகாசத்தில் அதன் சந்தானமயமான ஆன்மாக்கள் நிரம்பியிருக்கும். இதனால் இனவிருத்தியுண்டா கிறது. இதுபோல் விதைகளிலும் என்றறிகின்றோம்.

(6)

639. விளைவினுள் விளைவும் விளைவதில் விளைவும்
640. அளையுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஒரு விதை, ஒரு தாவரமாக முளைத்துப் பெருத்துப் பக்குவப்பட்டு விளங்கும் நிலையே அதன் முழுவிளைவாக மொழி

யப்படுகின்றது. இந்த விளைவினுள் விளைவாக உருப்பெற்று வெளிப்படுகின்றன அதன் விதைகள். மேற்படி தாவர விளைவின் போதே அதற்குள்ளீடாய் மறு விளைவுக்காம் விதையின் விளைவும் மிகமிக நுணுக்கமாய் வளர்ந்துகொண்டுதான் இருக்கின்றதாம். இப்படி, விளைவுக்குள் சூக்கும விளைவாக விளைந்துகொண்டுள்ளதே போல், ஆன்மாவுக்குப் பிறப்புக்குள் பிறப்பாக அளையுற (கலந்த வண்ணம்) அமைத்துள்ளார் நம் கருணை வள்ளல்.

(7)

641. முளையதன் முளையும் முளையினுள் முளையும்
642. அளைதர வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) முளை, விதையின் ஒரு பகுதியாகவேயிருந்து காலத்தே வெளிப்படுவது. ஆனால், அம்முளையைத் தனித்துப் பிரித்தெடுத்து முளைக்கவைக்கலாகாது. முளை முளைப்பதற்குச் சூழ்பகுதியும் அவசியம். உமி விண்டுபோனால் அரிசி முளைக்கா தன்றோ? ஆன்மவித்தினுள் ஆணவமுளை இயற்கையாயிருந்து, மாயாகன்மச் சேர்ப்பால், பிறவி யுண்டாவதுபோல் விதையின் முளை கலந்திருக்கின்றதாம்.

கடவுளான்மாவில், அக்கடவுள் அருளே யிருந்து பிறப்பு வடிவம் சூழக் காரணமாய் இருக்கின்றதே உண்மை. அருட் பக்குவமுறாத மருள் ஆன்மாவில், அதன் பிரணவ உண்மை விளங்காது ஆணவமலமாகத் திகழ்வதும், மேல் மாயா கன்ம மல உடம்பாகச் சூழ்வதும் தோற்றுகின்றன. ஆகவே சுத்த ஆன்மவித்தில் விளங்கும் முளை, அருளே. அதுவே உடலாய்ச் சூழ்கின்றதும் உண்மையாம்.

(8)

643. வித்திடை பதமும் பதத்திடை வித்தும்
644. அத்துற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) வித்திடை பதம், பதத்திடை வித்து என்பதன் விளக்கம்: பதம் என்ற சொல், பக்குவம் என்ற பொருள்படுவ தல்லாமல், பாதம் என்னும் கடவுள் திருவடியையும், பதவிநிலை

யையும் சுட்டுவத்தாம். ஒரு விதையில் பக்குவசக்தி மறைந்து கிடக்கின்றதை அறிவோம். அது வெளியுறாதவரை அகத்தே அபக்குவ சக்தியாயுள்ளதாம். அந்தப் பக்குவசக்தியிலேயே வித்தும் சூக்குமமாய் இருந்து வளர்கின்றதாம்.

வித்திடை பதம் என்பதற்கு, ஆன்மவித்தையும், அதிற் பொருந்தியுள்ள திருவடி சக்தியும் சுட்டுவனவாய்க் கொண்டால், பின் பதத்திடை வித்து என்பதற்குத் திருவடியால் விளையும் ஞானத்தையும் குறிப்பதாய்க் கொள்ளலாகும். அபக்குவ ஆன்மாவுக்குப் பக்குவம் ஏற்பட்டு, உட்கூடி பதமுத்தி ஏற்படுவதும், தேவப்பதவி கிடைப்பதும் அனுபவமே.

இவ்வித்தின் அடியாகவே, வித்தை, வித்தம், வித்தகம், வேதம் எல்லாம் தோன்றியுள்ளனவாம். திருவடியுண்மையைச் சத்விசாரத்தாற் கண்டு கலந்துகொண்டு வாழவேண்டும் என்பது திருவுள்ளம்.

(9)


645. பதமதிற் பதமும் பதத்தினுட் பதமும்
646. அதிர்வற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இங்கு ஆன்மவித்தின் குறிப்பே அதிகம் தெளிவாவதாம். கடவுள் திருவடியே மனிதனின் ஆன்மாவாயுள்ளது. எங்கும் நிறைந்த கடவுள்தானே ஒரு பெரு வித்தாய் இருக்க, அவரது திருவடியாம் கான்முளை ஒரு மனித ஜீவான்மாவாயுள்ளதாம். இதனால் இவனை(த் திருவடியை அகம் கொண்டுள்ளதால்) அடியான் என்றும், அடிமை என்றும், அகஅனுபவத்தால் அதுவாய் விளங்கும்போது அடிகள் என்றும் கூறப்படுதல் மரபாயுள்ளது.

அகம் ஒளிர் சிற்ஜோதியில் கடவுட்பூர்ண உண்மையும் வெளிப்பட்டுப் பேரின்பானுபவத்தை வழங்குவதாம். இதுவே பதத்தினுட்பதமாக உள்ளது. பதம்-என்றதில் பகரம் சிரநடு ஆன்மபீடமாயும், த-அவ்வான்ம பீடத்தொளிர் கடவுட் ஜோதி (சிவரூபம் என்பர் சைவசித்தாந்திகள்) நிறை யனுபவத்தில் மகர மெய் சுட்டும் மௌனானந்தமாயு மிருக்கின்றதாம். இதைத்தான் சன்மார்க்கி பதத்தினுட் பதமாய்க் கண்டடைந்து சச்சிதானந்த நிலையில் திகழுகின்றான்.



வள்ளலார் தண்ணீரில் விளக்கேற்றி அருளிய அறை, கருங்குழி



சித்திவளாகத் திருமாளிகை

192 ஒற்றுமை வேற்றுமை இயல்

(1)

647. ஒற்றுமை வேற்றுமை உரிமைக ளனைத்தும்
648. அற்றென வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஒன்றாகிய கடவுள் தமது தயா பெருஞ் சித்வசத் தால், உயிர் உலகு எல்லாமாய்த் தோற்றிக்கொண்டுள்ளார். சுத்த சத் விசாரத்தாலே இந்த உண்மையை அறிந்து கொள்ளும் போதுதான், திருவருளால் பேரின்பம் பெறமுடியும். அகத்தே இந்த உண்மையைக் கண்டடையாதவரை, புறத்தே பலப்பல வாகத் தோன்றுகின்ற, உரு குணச் செயல்களும், உறவு உடமை களும் கொண்டு பார்த்தால் வேற்றுமைக்காட்சியே புலனாகும். இந்த ஒற்றுமை வேற்றுமைகளும் சொந்த முறைகளும் அற்றம் (பொய்) ஆம். ஒன்றாகிய தன்மையே ஒற்றுமை, வேறாகிய தன்மை வேற்றுமையாம்.

(2)

649. பொருணிலை யுறுப்பில் பொதுவகை முதலிய
650. அருளுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உலகிலுள்ள எல்லாப் பொருள்களும், ஐம்பூத அணுக்களின், பலவேறு பேதச் சேர்க்கையால், பலவேறு வண்ண வடிவங்களாகத் தோற்றியுள்ளனவாம். இப் பொருள்களில் உள்ளும் புறமும் பலவேறு இயல்புடைய உறுப்புக்கள் குணவீரி யங்கள் முதலியன பொதுவகையான் அமைந்து, சக்திச்செயல் களாக வெளிப்பட்டுச் சிறப்புவகையான் பலவேறு பயன்களும் வழங்குகின்றனவாம். இவை எல்லாம் நாம் அருள் உண்மையை அறிந்து அடையவே நம் பதி வகுத்துள்ள விதியாகும்.

(3)

651. உறவினி லுறவும் உறவினிற் பகையும்
652. அறனுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உறவு, பகை, ஒன்றுக்கொன்று எதிரானதாகத் தோற்றுகின்றது. ஆனால், உண்மையில் உள்ளது ஒன்றே,

பக்குவானுபவம் ஏற்படுவதற்கு, இப்படி இருநிலைத் தோற்றம் கொள்ளுகின்றதாம். எப்பொருளிலும், எவ்வுயிரிலும், இயலிலும், குணத்திலும் இந்த மாறுபாடான இருநிலைத் தோற்ற வேற்றுமையைக் காணக்கூடும். கடவுளான்ம இயலிலும் இந்த உண்மையையே காணலாகும். கடவுள் - அகத்தில் நித்திய சச்சிதானந்தமாய் இருக்கப், புறத்தில் அநித்திய சட பூதத் தத்துவங்களாக விளங்குகின்றதாம். மனிதனும் அகத்தில் நித்தியானந்தமாய் இருக்கப் புறத்தில் அநித்திய உடல் வடிவினனாய் உள்ளானாம். அகத்தில் நிறை அனுபவம் உண்டாக உள்ளிருந்தே நல்லது கெட்டது இரண்டும் வெளியாகின்றன. நல்லதோடு நல்லது சேர்ந்தால் வளர்ச்சியும், நல்லதோடு தீயது சேர்ந்தால் அழிவும் உண்டாம். இந்த அழிவும்கூட, புதிய மாற்ற தோற்றம் உண்டாகவும் நல்லதே ஓங்கி நிறைவுறவும் உதவுவதாம். இந்தக் கருத்தே ஈண்டு, உறவினில் உறவும், உறவினில் பகையும் எனக் கூறப்பட்டுள்ளது. இவை எல்லாம் அறனுற (அருள் அனுபவம்) அடையத்தானாம்.

(4)

653. பகையினிற் பகையும் பகையினி லுறவும்
654. அகைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஓரின உயிர்களினிடத்தும் முற்றும் ஒற்றுமையும் உறவும் நிலைப்பதில்லை. அதுபோல வேறு வேறான உயிரினத்திடையும்கூட பகைமையே முற்றிலும் விளங்குவதில்லை. விரோதிகளிடையும் குரோதமிருக்கிறவரை விரோதமே விளைந்து, பின்னர் இரக்கம் தோன்றிடும்போது, தம் அறியாமைக்காக வருந்தி விரோதம் நீங்கிச் சிநேகிதம் கொள்ளுகின்றனர். இப்படிப் பகையாலும் உறவாலும் பிரிந்தும் கூடியும் துய்த்துத் துய்த்துத் தூய்மை அடைந்த ஆன்மா, சுத்த தயவாலே உய்வு பெறுகின்றதாம்.

அகைவுற - தழைத்திட.

(5)

655. பாதியு முழுதும் பதிசெயு மந்தமும்
656. ஆதியும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பதியாகிய கடவுளின் அனுபவம், மனிதனுக்கே உரிமையாய் இருக்கின்றது. ஆதியும் அந்தமும் இல்லா அப் பரம் பொருள், இந்த மனித வடிவில் அருட்பெருஞ்ஜோதியாய் வெளிப் பட்டு, மெய்யருள் உணர்வால் உணரப்பெற்று, அருள் நிறை அனகவாழ்வால் அனுபவத்தில் விளங்கிக்கொண்டுள்ளார்.

இந்த அருள் அனுபவத்தில் விளங்குகின்ற கடவுள்நிலை, அகத்தில் ஆன்மக்கூறும், புறத்தில் உடற்கூறும், ஆண் பெண் சத்தம்சமாக உள்ளதாம். ஆண்கூறு வலமும் பெண்கூறு இடமு மாகக் கூட்டி ஒருரு வமைத்து, மாதொருபாகன் வடிவம் கடவுட் குரித்தெனக் காட்டியுள்ளனர். இதுதான், ''பதிசெயும் பாதியும் முழுதும்'' ஆன வடிவம். இந்தக் கடவுட் சொருபத்தில், ஆண் பெண் அம்சமான மனித வடிவத்தில், அந்தம்-புறத்தே விளை வுற்று விளங்கும் தேகமாகும். ஆதியோ-அகத்தே, கருச்சிருஷ்டி முதலே ஒளிசெய்திலங்குகின்ற ஆன்மாவாகும். திருவருள் ஞானத்தால் அறியப்படுகின்ற இந்த ஆன்மா, அனாதியாயுள்ள கடவுட்சிற்றணுவே. இவ்வான்மாவையே முதலாகக் கொண்டு நித்தியமாய் விளங்கும் நாம், ஆதிமுதலே அகண்டஜோதியினால் தான் சூழப்பெற்றுள்ளோம். அச் சூழ்ஒளியே பலபல பொருள் வடிவாயும், உயிரின வடிவாயும், மனித உடல் வடிவாயும் வந்துள் ளதாம். இதுவே, இவ்வொளி ஆதியான ஆன்மாவுக்கு அந்தமான தேகமாக இருக்கின்றதாம். ஏனெனில், இந்த உடல், திரு வருளாலே அழியாமையுற்று, ஆன்மானுபவத்தோடு, என்றும் விளங்குவதாய் இருக்கின்றதால், இது ஆன்மாவின் முடிந்த அல்லது ஆனந்த வடிவம் ஆம்.

(6)

657. துணையு நிமித்தமும் துலங்கதி னதுவும்
658. அணைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) கடவுள் உண்மை வெளிப்படுவதற்கு, அருளனு பவம் உண்டாவதற்கு, ஜீவனும் தேகாதி பிரபஞ்சமும் ஏற்படுத் தப்பட்டுள்ளன. கடவுள் முதற் காரணமாயும், திருவருள் துணைக் காரணமாயும், ஜீவ தேகாதி பிரபஞ்சம் நிமித்த காரணமாயுமிருந்து ஆனந்தானுபவமாகிய காரியம் நடந்து கொண்டுள்ளதாம். இக்காரண காரிய உண்மை குறிக்கக் கற்

பிக்கப்பட்டவை, சிவம், சக்தி, மாயை என்ப. அன்றியும், குலாலன், தண்டசக்கரம், களிமண் கொண்டும் பிரபஞ்சக்காரியப்பாடு குறிக்கப்படும். ஆனால் சுத்த சன்மார்க்கத்தில் தயவே யாவுமாம். தனிப்பெருங்கருணையே எல்லாமாம்.

(7)

659. உருவதி னுருவும் உருவினுள் ளுருவும்
660. அருளுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) புற உலகத்திலே தோன்றுகின்ற தேகாதி பிரபஞ்ச உருவங்கள் முற்றும், மாற்றமும் அழிவும் உள்ளவைகளாம். இத் தூல வடிவங்களுக்குள்ளாக சூக்கும வடிவங்களும் உள்ளன. உருவினுள்ளுரு என்பது, இச் சூக்கும தேகமே. உருவதினுரு என்றது, புறவடிவத்தின் பிரதியாகிய, படம், சிலை முதலியன வாம். தூலவடிவம் உலக அனுபவத்திற்குரியது, சூக்கும வடிவம் சித்திச் செயற்கு உதவுவது, காரணமாகிய ஆன்மவடிவம் நிறை இன்பானுபவ வாழ்வுக்காம். இத்திரிதேக சித்தியும், திருவருளின் துணையால் பெற்றுக்கொண்டு வாழ வேண்டியுள்ளதாம். ஆகையால், தூல வடிவத்தையும், அதன் பிரதியாம் படம், சிலை முதலியவற்றையும் பற்றுதல் கூடா, சூக்கும ஆவி வடிவங்களின் சித்துச் செயல்களிலும் நாட்டம் கூடா. விசாரத்தால் அகநிலையில் இருந்து சூழ்நர்க்குத் தயவு செய்திருத்தல் முறையாம்.

(8)

661. அருவினுள் ளருவும் அருவதி லருவும்
662. அருளிய லமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) எப்பொருட்கும் அகத்திலே திருவருளே, அருவமாய் இருந்து கொண்டுள்ளது. அந்த அகநிலையே அருவம் ஆதலின், அவ் அருவமாகிய, அகத்திலிருக்கும் அருளும் அருவமேயாம். இதுவே, ''அருவினுள் ளரு'' என்றது. அந்த அருவ அருளிலே நாம் அருவ ஆன்மாவாய் இருக்கின்றோம். இந்த ஆன்மா அருவாய் இருப்பதனால் கருவி கரணங்களுக்கும் தோற்றுகின்றதில்லை. அருள் உணர்வாகிய அருவுருவமானால்தான் உணர்ந்து கொள்ளப்படுவதாயிருக்கின்றது. அன்பாலே, ஜீவ தயவாலே அருள் உணர்வைப் பெற்றுக்கொள்ளாவிடின் அருட்பெரும்பதி

யுண்மை சிறிதும் அறியப்படவும், அனுபவத்திற் பெறப்படவும் முடியாதாம். உலகியல் அருளியலாக வேண்டும்.

(9)

663. கரணமும் இடமும் கலைமுத லணையுமோர்
664. அரணிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) கரணம்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் நான்கும் அந்தக் கரணமாம். மனோ வாக்கு காயம் மூன்றும் புறக் கரணமாம். சில சடங்குக்கிரியைகளும் கரணம் எனப்படும். இடம், அகத்திலும் புறத்திலுமுள்ள எந்த இடமுமாம். கலை- உலகறி கலை எல்லாமும். அணையும் ஓர் அரண்: இவைகள் யாவும் வந்து சேர்கின்ற புறக்கோட்டை மதிற்குள் இருக்கின்றது நம் பதி யுறையும் கோயில். இக் கோயிலிலிருந்து கொண்டு தான், யாவையும் திருவருளாலே ஆக்கிக் காத்து, அழித்து, மறைத்து, அருள்பாலித்து வருகின்றார் நம் பதி. இந்தப் பதியின் கோயிலுள், எவரும், எதுவும் செல்ல முடியாது அவ்வளவு வலிமை மிக்கது அதன் அரண். மற்றொரு இடத்தில் தீண்டாத வெளியில் வளர் தீண்டாத தெய்வம் என்கின்றார் அடிகளார். இங்கும், கரணமுமிடமும் கலைமுதல் அணையுமோர் அரண் என்றதில், கரண முதலியனவெல்லாம் வந்துசேரும் இடம் என்பதை விட, அவை யாவும் அணைந்து, அவிந்து செயலற்றுப் போம் இடம் என்னலே பொருத்தமானதாம். சுத்த அருளனுபவம் உறுவோர், அம்பலத்திலேயே பதியோடு அத்துவிதமாய் இருப்பதை யுணர்ந்து இன்புறுவர்.

(10)

665. உருவதி லருவும் அருவதி லுருவும்
666. அருளுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உருவாயுள்ள சடப்பொருள்கள் யாவும் அருவசக்தியாக மாற்ற முடியும் என்பதும், அவ்வாற்றலைக்கொண்டே உருவப்பொருளையும் ஆக்கமுடியும் என்பதையும் இன்றைய விஞ் ஞானம் ஒருவாறு கண்டுள்ளதே. அருவாக அருகியிருந்த கடவுட் சக்திதானே அனந்த வண்ணபேத அண்ட பிண்ட சராசர உயிர்ப்

பொருள்கள் யாவுமாய்த் தோற்றியும் ஒடுங்கியும் கொண்டுள்ள உண்மையை அன்றே மெய்ஞ்ஞானம் கண்டுரைத்துள்ளதாம். இவ்வுண்மையை யுணர்ந்து அருள் அனுபவநிலை பெறவே நம் பதி யாவையும் அமைத்துள்ளார் ஒன்றில் ஒன்றை மறைத்து.

(11)

667. வண்ணமும் வடிவும் மயங்கிய வகைபல
668. அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இயற்கையின் தோற்றத்தில் எத்தனை எத்தனை எழில் வண்ணக் கோலங்களைக் காண்கின்றோம். எத்தனைக் கவர்ச்சிகரமான உருவங்களைப் பார்க்கின்றோம். இந்த வனப்புத் தோற்றங்களில் மயங்காதார் யாரே! இவ்விந்திரசாலக் கவினில் மயங்கிக் கவிழ்ந்து போய் விடற்கா கடவுள் இவைகளைப் படைத்துள்ளார்? அல்ல. இவற்றிற்கெல்லாம் காரணமாயும், நமக்கு உண்மையையுணர்த்தி மேனிலைக்கேற்றி, தயாவடிவாக்கிப் பேரின்பில் விளங்கச்செய்யவே யாவையும் வெளிப்படுத்தியுள்ளார் நம் பதி என்பது உண்மையாம்.

புற வண்ணத் தோற்றங்களில் மயங்கிநிற்காது உள்ளுணர்விலே அருள் உணர்வு கொண்டு யாவையும் திருவருளின் அனுபவம் வழங்கும் பெருஞ்செயலெனக் கண்டு நிரதிசயானந்த முறுவோமாக.

(12)

669. சிறுமையிற் சிறுமையும் சிறுமையிற் பெருமையும்
670. அறுதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) சிற்றுருவும், சிறுமைக் குணமும், சிறு செயலும் தாழ்வு உண்டாக்குவது உண்டு. அன்றி, அவற்றிலிருந்து உயர்வும் உண்டாவதுண்டு. சிற்றணுவில் பெருஞ் சக்தி பொதிந்து நின்று வெளிப்படுவதுபோலும், சிறு விதையினின்று பெருந் தாவரம் விளைவதுபோலும், சிறு மாமனிதனிடம் பெருங்கடவுட் சக்தி வெளிப்படுகின்றதாம். உருவும் செயலும் கண்டும் கேட்டும் இழிவாகக் கருதுதல் கூடாது. உண்மையை அறிந்து உய்வு பெறப் புற வேற்றுமைகள் எல்லாம் வகுக்கப்பட்டுள்ளனவாம்.

(13)

671. பெருமையிற் பெருமையும் பெருமையிற் சிறுமையும்
672. அருணிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) நற்குணச் செயல்களால், சம்பத்துக்களால் நல் வாழ்வு வாழ்கின்றவர்கள் புகழப்படுகின்றார்கள். அவர்களுக்குப் பொருளும், சுக சௌக்கியமும் நிறைந்து பெருமை தருகின்றன, ஆனால், குறைவொன்றும் தெரியாது சகல செல்வயோக வாழ்வில் திகழ்ந்தவர்கள், திடீரென்று யாவுமிழந்து மிடியும் சிறுமையும் அடைகின்றார்கள். ஏன் இப்படி நல்லோர் நலிவது என்று மனி தனால் சரியாக அறியமுடிகின்றதில்லை. ஈதெல்லாம் மனிதனுக்கு, உலகில் நிராசையை உண்டாக்கவும், கடவுளிடத்தில் தீவிரப் பற்றை விளைவிக்கவும் திருவருளால் அமைக்கப்பட்டனவேயாம்.

(14)

673. திண்மையிற் றிண்மையுந் திண்மையி னேர்மையும்
674. அண்மையின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) கடினமான ஒரு பொருள், ஆற்றல்மிக்க ஒரு வல்ல வன் உண்டெனில், அதற்கும் அவனுக்கும் மேற்பட்ட ஒன்றும் ஒருவனும் நிச்சயம் இருக்கும் என்று அறிதல் வேண்டும். கடினமும், மென்மையும், பெருமையும், சிறுமையும் உயர்வும் தாழ் வும், ஒற்றுமையும் வேற்றுமையும் அடுத்தடுத்தேயுள்ளன. நோயும் அந்நோய் தீர்க்கும் மருந்தும்கூட அடுத்தே அமைக்கப் பட்டுள்ளனவாம். அறியாமையால், தொல்லையுலகில் அல்லல் படுகின்ற மனிதனும், அறிவானந்த நித்தியப்பொருளும் மிக மிக நெருங்கியேயுள்ளன.

நேர்மை மிக நுண்ணிய, சன்னமான தன்மையாம்.

(15)

675. மென்மையின் மென்மையும் மென்மையில் வன்மையும்
676. அன்மையற் றமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) மென்மையாவது மெல்லிய தன்மை அல்லது மெதுத் தன்மை கொண்டதாம். இதற்கு எதிரிடை வலிய தன்மையாம் வன்மை என்க. ஒரு பொருள் மெலிந்து தோற்றினும், அது இன்னும் மிகமிக மெலிந்துபோகவும் கூடும். அல்லது அந் நிலைக்கு வேறுபாடாகிய வலிமை பெற்ற பொருளாகவும் மாறி விடக்கூடும். இப்படி எல்லாம் உண்டாவதற்குக் காரணம் அவ் விருவேறு குணத்தன்மைகளும், ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப் பினும், ஒன்றினுள் ஒன்று விரோதமின்றித் தீமையின்றி (அன்மை யற்று) அமைந்திருப்பதாலேயாம்.

(16)

677. அடியினுள் ளடியு மடியிடை யடியும்
678. அடியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உலகிலுள்ள எப்பொருளுக்கும், எச்செயலுக்கும், அடி, நடு, முடி என்னும் முந்நிலைகள் உண்டு. இம் மனிதப் பிறப்புக்கும் இம் முந்நிலை யனுபவம் காலத்தே யுண்டாவதற் கென்றே திருவருள் நியதி வகுக்கப்பட்டுள்ளதாம். மனிதனுக்கு அடிநிலையாகப் பொருந்தியுள்ளது ஆன்மா. இந்த ஆன்மாவாகிய அகவுண்மை மனிதன் பல்வேறு பிறப்பிடைத் தோன்றி ஜீவ தேக போகத்தை அனுபவிக்கின்ற வாழ்க்கைநிலை, நடுவதாகும். இறுதி யில் அருளடி யனுபவமுற்று, நித்தியமாகிய ஆனந்த நிலையில் விளங்குவது மூவா முடிநிலையாகும்.

(17)

679. நடுவினுள் நடுவும் நடுவதி னடுவும்
680. அடர்வுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) நடுவினுள் நடு, எப்பொருளின், உயிரின், அணுவின், அண்டத்தின், முக்கியமாக மனிதனில், அவனது ஆன்மாவில், வாழ்வில் நடுநிலை யுண்டாம். இந்த நடுநிலைக்குள்ளும் ஒரு நடு வுண்டாம். அந்த ஒரு நடுவைத்தான் பரம்பொருளாக உணர்தல் வேண்டும். இந்நடுநிலைப் பரம்பொருள் ஒன்றேயொன்றுதான் இருக்கின்றது. ஆனால், அது எங்கும், எதிலும் தானே பூர்ண மாக இருந்து விளங்கிக்கொண்டு யாவையும் விளங்கச் செய்து

கொண்டும் இருப்பது அருட்பெருஞ்செயலின் ஒப்பற்ற தன்மை யாகும். மிகச்சிறிய அணுவானாலும் சரி, மிகப்பெரிய அகண் டாண்ட வெளியானாலும் சரி, அதன் அதன் நடுநிலைக்கும், சூழ் நிலைக்கும், முட்டலும் மோதலும், தீண்டுதலும் ஏற்படாதபடி அடர்வு அற, மிக நெருங்கியும் நெருக்கமில்லாதபடி அமைக்கப் பட்டிருக்கின்றனவாம். முடிவில் திருவருளால் அந்நடுநிலை வாழ்வு சேர்வதற்கே இவ்வேற்பாடுகள் எல்லாமாம்.

(18)

681. முடியினுள் முடியும் முடியினின் முடியும்
682. அடர்தர வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஒவ்வொன்றும் அடி, நடு, முடி கொண்டு விளங்கு வது உலக அனுபவம். உலகில் தோன்றிய எதுவும் மறைவுறு வதே. ஆனால், கடவுளான்மாவானது நித்தியமாயுள்ளதுவாம். அது தோன்றுவதுமில்லை மறைவதுமில்லை. அதனைச் சூழத் தோன்றுவதும் அழிவதும் தேகமே. இப்படித் தேக அந்தியத் தில் அழிவு படாதிருப்பது ஆன்மாவாம். இதுவே முடியினுள் முடிவாம். உண்மை மனிதன் இந்த முடிவுறாத ஆன்மாவாய் இருக்கின்றான். இதனால் இந்த மனிதன் முடிவு என்ன? உடல் வடி வினனாய் வாழ்ந்துவிட்டு மடிந்து போவதல்ல இவனது முடிவு. அதற்கு மாறாக நித்திய ஆன்மசொரூபியான இவன், அதுவாகப் பொருந்தி அழியாவாழ்வில் விளங்குவதே இவனுடைய இயற்கை முடியா முடிவாம் நித்திய வாழ்வேயாம். இதுதான், முடியினின் முடிவு ஆம். அதாவது ஆன்மாவின் முடிவில்லா வாழ்வு நிலை யாகும்.

193. அகப் புறப் பூ

(1)

683. அகப்பூ வகவுறுப் பாக்க வதற்கவை
684. அகத்தே வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பூ என்பது, சூக்குமமாயும், தூலமாயும் மலர்ந்து விரிகின்ற, சக்தி, பொருள் முதலியனவாம். இவை இரண்டும்

உள்ளும் புறமும் நிகழ்கின்றன. அகத்தே சூக்கும சக்தியை அமைத்து, அது விரியும்போது, அவ்வகப்பூ மலர்ச்சியால் அக உறுப்புக்கள் பலவும் உள் விளைந்து பெருகுகின்றனவாம். அகச் சக்தி அகப்பொருள்களாக ஆக்கப்படுவதும், அந்த அக உறுப்புக் களால் அகச் செயல்களும், குண அனுபவங்களும் தோற்றுவதும் அருள் நியதியின்படியே நிகழ்கின்றனவாம்.

(2)

685. புறப்பூ புறத்திற் புனையுரு வாக்கிட
686. அறத்துடன் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அகம் - ஆன்மா, அகப்புறம் - ஜீவன், புறம்-கரணம், புறப்புறம் - இந்திரியம் என்பன அறிவோம். ஆதலின், அகப்பூ என்றது ஆன்ம இயற்கையுண்மைச் சக்தி ரூப விளக்கமாக விரிந்த உள் மலர்ச்சியைச் சுட்டியதாம். மேல் இப் புறப் பூவால் மனோகரணத்தின் சொரூப, ரூப, சுபாவமாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவை உருவாகி விரிந்து சூழ்கின்றன வாம். இங்ஙனம் இக் கரணப் பூ அரும்பி, மலர்ந்து, விரிந்து மணப்பது கடவுள் அருள் நியதியாகிய அறநெறிக்கு ஒப்ப நிகழ் கின்றதென அறியப்படும்.

(3)

687. அகப்புறப் பூவகப் புறவுறுப் பியற்றிட
688. அகத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அகப்புறம் ஜீவனாயுள்ளது. இந்த ஜீவ சக்தி ஆன்மாவிலிருந்து தோன்றி அது விளங்கும் இடங்களையும் மலர்ச்சி பெற்றுக் காரியப்படும் உட் கருவிகளையும் வளர்த்துக் கொண்டிருக்கின்றது. இவ்வகப்புற ஜீவனுக்குத் துணையாக பிராணக்காற்று உள்ளீர்க்கப்பட்டு சுவாசமும், இரத்த ஓட்டமும் நிகழ உயிர்ப்பு விளங்குகின்றதாம். இந்த ஜீவ மலர்ச்சி விளக் கத்தால்தான் மற்ற கரணேந்திரியங்களும் காரியப்படும்படி நம் பதி அகத்திருந்தே நியதி செய்திருக்கின்றார்.

(4)

689. புறப்புறப் பூவதிற் புறப்புற வுறுப்புற
690. அறத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) நம் பிண்ட தேகத்தில் பஞ்சேந்திரியங்களும், அவை காரியப்படும் ஐம்பொறியுறுப்புக்களும், புறப்புறப் பொருட்சக்தி மலர்ச்சியால் உண்டாகின்றன. பிண்டத்தே அக முதலிய இந் நான்கு சக்தி மலர்ச்சியும் உண்டாகிட வெளி அண்டத்தினுடைய நாற்பூவாகிய, அக்கினி, சூரியன், சந்திரன், நட்சத்திரம் ஆம் இவை தோன்றி விளங்கிப் புற நின்று உபகரிக்கின்றனவாம். இப்புறத் துணையால் பூக்கும் பூதகாரிய தேகேந்திரிய மின்றி அக அனுபவம் மலர்வதில்லை. ஆதலின் கடவுளின் அறம் இப்படியாக அமைக்கப்பட்டுள்ளதாம்.

194. நால்வகைத் தோற்ற விரி

(1)

691. பாரிடை வேர்வையிற் பையிடை முட்டையில்
692. ஆருயி ரமைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆன்மாக்களுக்குத் தேகம் உண்டாவது அல்லது தேகங்களில் ஆன்மா தோற்றுவிக்கப்படுவது நான்கு விதமாய் அமைவதாம். அவை: 1. விதை, கிழங்கு, வேர், குச்சி முதலியவைகளுக்கு மண், நீர், காற்று, ஒளி, வெளிகளின் சேர்ப்பால் தாவர ஜீவ வடிவங்கள் உண்டாம். இவ்வகைத் தோற்றம் உற்பீஜம் எனப்படும். 2. வியர்வை, அழுக்கு, அழுகல், புழுக்கம், இரசாயன மாற்றம் (Chemical change) முதலியவற்றால் உண்டாம் புழு பூச்சி இன உயிர்கள் சுவேதஜம் எனப்படும். 3. கருப்பை, கண்ணாடி, பிளாஸ்டிக் முதலான கருவி களில் ஆண் பெண் இனத்தாது சேர்க்கையால் தோன்றி வளரும் மனித, விலங்கின உயிர் வடிவங்கள், சராயுஜம் எனப்படும். 4. முட்டையில் உருவாகும் உயிரின வடிவங்கள் அண்டஜம் எனப்படும். இப்படி நான்கு வகை யோனிமூலம் உயிரின வடிவங்கள் உதிக்கின்றனவாம்.

ஆன்மாணுக்கள் எங்கும் நிரம்பியுள்ளன. அது ஒவ்வொன் றும் கடவுள் உண்மையை அகம் கொண்டு புறத்தே ஜோதியால்

சூழப்பட்டிருக்கின்றது. அக அருளின் வெளியீடு, படிப்படியாகப் பொருட்சக்தியிலிருந்து அருட்சக்திவரை விரிக்கப்படுகின்றது. அவற்றில் கிரியா சக்தியில் உயிர் விளக்கம் தோற்றும்போது தான், ஆன்மாவுக்கு உயிரின வடிவங்கள் முறையாக, சூழ்ஒளி கொண்டு ஆக்கப்படுகின்றன. ஓரறிவு முதல் ஏழாவதாகிய அருள் அறிவுவரை வழங்கப்படும்போது அதற்கதற்குரிய உயிரின வடிவங்கள் ஆணை செய்யப்படுகின்றன. அவை யாவும் நால் வகை யோனி வழி வருவிக்கப்படுகின்றனவாம். எந்த ஒரு குறிப்பிட்ட ஆன்மாவுக்கும் அகமிருக்கும் பதி ஆணைப்படி, குறிப் பிட்ட யோனியில் இசைக்கப்பட்டு உரிய வடிவம் உருவாகின்ற தாம். பக்குவ ஆன்மா, ஒரு தாயின் கருப்பையில் தோற்றி உருவாகும்போது, அகமும் புறமும் அருள் ஒளியின் நிறை விளைவு ஏற்படுகின்றது. இதனால், அகத்தில் அருள் விளக்கமும், புறத்தில் அருட்ஜோதி வடிவும் அனுபவப்பட நித்தியானந்த வாழ்வு உண்டாகின்றது.

(2)

693. ஊர்வன பறப்பன வுறுவன நடப்பன
694. ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) மேற்கூறிய நால்வகை யோனிகளில் தோன்றிய உயிர்கள் இந்த உலகில் சில ஊர்ந்து ஊர்ந்து செல்கின்றனவாய் உள்ளன: சில பறந்து செல்வனவாய் இருக்கின்றன. சில இருந்த இடத்திலிருந்து கொண்டே, விரிதலும், படர்தலும், நிறைதலுமாய் உள்ளன. இவையே உற்பீஜம் என்னும் தாவர உயிரினமாம். இவ்வினமே யீண்டு உறுவன எனப்படுகின்றது. நடப்பனவாய்க் கூறப்படும் உயிரினத்தில், கைகளையும் கால் களையும் பெற்ற இவ்வுயிர்கள், நடந்தும், தத்தியும், தாவியும், ஓடியும் திரிபவையாம். மனிதனில்தான் இந்தத் திரிதரு செயலின் முழுப்பயன் வெளியாக உள்ளதாம். யாதெனில், மனிதன் தான் பெற்றுள்ள கால் கைகளால் பல இடங்கட்குச் சென்று உண்மைப் பொருளை அறவழியில் ஈட்டி, ஜீவ தயவுச் செயலைப் புரிந்து, திருவருள் அனுபவம் பெற்றுப் பேரின்ப வாழ்வில் விளங்கற்கே இப்பிறப்பு ஏற்பட்டுள்ளதாய் அறி கின்றோம்.

(3)

695. அசைவில வசைவுள வாருயிர் திரள்பல

696. அசலற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உயிரினங்களில் நிலையியல் (அசர) ஜீவர்களும், இயங்கியல் (சர) ஜீவர்களுமாக இருவகையுள்ளனவாம். தாவர உயிரினங்கள் அசைவிலாதன. அவ்வினத்தில்தான் புல், பூண்டு, செடி, கொடி, மரம் எனப் பல பிரிவுகள் கொண்டனவாய், இவை ஒவ்வொன்றிலும்கூட எத்தனையோ வகையுளவாம். இவை யெல்லாம் ஓரறிவுயிராகக் கொள்ளப்படுகின்றன. அவ் ஓரறிவு, பரிசம் என்னும் தொட்டறிவுணர்வாம். முதலில் உயிரனுபவம் பெற வந்த ஆன்மாவுக்கு இந்த ஓரறிவுப் புல்வடிவமே வழங்கப்படுகின்றதாம். அந்த அறிவு அனுபவம் நிறைவு பெறுவதற்குள் பலவாகிய அத்தாவரப் பிறப்பு வடிவம் வந்து வந்து செல்லுகின்றனவாம். அதற்கு மேலேதான் ஈரறிவு உயிரின வடிவங்களும், மற்ற மற்ற, அசைவுள, இயங்கியல் ஜீவ தேக வடிவங்களும் ஒவ்வொன்றாய் வந்து குறிப்பிட்ட காலம் இருந்து அக அறிவனுபவத்தை வளர்த்து வளர்த்துச் செல்லு கின்றனவாம்.

மனிதப்பிறவி, ஓரான்மாவுக்கு ஏற்பட்டுள்ளது என்றால், அது மற்ற பலவாகிய சராசர பிறப்புகளில் எல்லாம் வாழ்ந்து வாழ்ந்து கடந்து ஆறறிவு விளக்கம் பெறும் இந்த மானிடப் பிறப்பு அடைந்திருக்கின்றதாக அறியலாகும். இதற்குரிய மன அறிவு நிறைவுறும்போது இம்மன அறிவு நிலையே அருள் ஞான மாக மாறி விளங்க, அதுகொண்டு, தன் உண்மையும் கடவுள் இயல் வடிவும் ஒன்றே என்று அறிந்து எங்கும் தானாக விளங்கும் காட்சி பெற்று விளங்குகின்றது. இந்நிலைதான், அயலறியா அறிவு; இதுவே அசலற விளங்கும் உண்மையாம். இது, ஆதி முதலே (கடவுளும் ஆன்மாவும் இரண்டற்ற அத்துவிதமாய்) இருந்துவரும் மனிதனின் உண்மை நிலையானாலும், இந்த நிலையை அனுபவபூர்வமாக அடைந்து வாழத்தான் இப்படிப் பலவாகிய உயிர் வடிவங்கள் பெற்றுப் பெற்று வாழ்ந்து கடந்து மேலேறி வந்து அடைய வேண்டியிருக்கின்றதாம். ஆகவே கடவுளின் அருட்பெருஞ்செயல் எவ்வளவு முன்னேற்பாடுகளுடன் பண்டே வகுக்கப்பட்டுள்ளது என்று உணர்ந்துணர்ந்து உள நெகிழ்ந் தின்புறுவோமாக.

(4)

697. அறிவொரு வகைமுதல் ஐவகை அறுவகை
698. அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) முன்னே உயிரினத்தை நிலையியல், இயங்கியல் என இரு பிரிவாய்க் கூறி முடிவில், மேனிலையில் அயலறியா அனுபவம் விளங்கும் என்றதோடு நிறுத்தப்பட்டது. இப்போது வேறு ஒரு வகையில் உயிரின வடிவச்சேர்க்கையால் அறிவு வளர்கின்றதை மீண்டு குறிக்கின்றார் நம் பெருமான்.

அறிவொரு வகை என்றதே ஓரறிவு நிலையைக் குறிப்பது. அவ் ஓரறிவு முதல் ஐந்தறிவுநிலை வரையும் ஒன்றாகவும், அதற்கு மேல் ஆறறிவு நிலையை மட்டும் வேறொரு பிரிவாகவும் கொண்டு குறிக்கின்றார். ஏனெனில், முதல் ஐந்தறிவும் பொறிபுலன் விளக்கம் தருபவையே. அவற்றினால் உண்மை சிறிதும் விளங் காது, மெய்யின்பானுபவமும் ஏற்பட வழியில்லை. அடுத்து ஏற்பட்டுள்ள இந்த ஆறறிவு மனிதப்பிறவியில் தான், யாவையும் நன்கு பகுத்தறியவும், உண்மையை யுணர்ந்து பற்றி உயர் அன்பு ஒழுக்கம் பூண்டு, கடவுள் இன்ப வாழ்வு பெற முடிவதாயுள்ள தாம். ஆகவே இதனைத் தனித்தெடுத்துக் குறிக்கப்பட்டது. இதுபோலத்தான் திருவருளால் நம் திருவருட்பாவும்கூட, முதல் ஐந்து திருமுறை உலகியல் பக்திநெறிக்கு உரியதாகவும், ஆறாம் திருமுறை ஒன்றே அருளியற் பேரின்பானுபவத்திற்குரித்தாய் வெளியாக்கப்பட்டுள்ளது ஆம்.

(5)

699. வெவ்வே றியலொடு வெவ்வேறு பயனுற
700. அவ்வா றமைத்த அருட்பெருஞ்ஜோதி

(உ-வி) நால்வகை யோனி, ஏழ்வகைப் பிறப்பு, எண்பத்து நான்கு நூறாயிரம் உயிரினத் தோற்றங்கள் இவ்வுலகில் படைக் கப்பட்டுள்ளனவாம். இவை போக இன்னும் சேர்க்கை வகை யாலும், மாற்று முறையாலும் இன்னும் எத்தனையோ உயிரினங் கள் தோன்றலாம். இவற்றின் தோற்றமும், இயலும், செயலும், அறிவும் அனுபவமும் வேறு வேறாக இருக்கலாம். இவற்றின் மூலம் நாம் தெரிந்து கொள்வது யாதெனில், நம் தனித்தலைமைப்

பதியின் அளப்பரிய இயல் உண்மைத் தோற்றத்தையும் அதனால் விளையும் நிறை இன்பானுபவப் பயனையும் அறிந்து அடைவ தேயாம்.

அருட்பெருஞ்ஜோதிபதி ஒருவராகவே எப்பொழுதும் இருக் கின்றார். அவரது அருள்தான் எல்லாச் சக்திகளுமாய், எல்லாத் தோற்றங்களுமாய், எல்லா அனுபவங்களுமாய் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இந்தப் புறநிலை வேறுபாட்டுத் தோற்றங்களால், இயல்புகளால், அந்த அக அருளின் பன்முகத் தோற்றப் பெருமை நன்கு கண்டு தெளியலாகின்றதாம். சுத்த சத் விசாரத்தால், சூழுலகப் பன்மைத் தோற்றத்திடையே ஒருமை உண்மையைக் காண்கின்றோம். இக்கருத்தையே Unity in diversity என்கின்றனர் மேனாட்டார். ஆனால், இது புலனறிவால் காணக்கூடியதல்ல, அருள் உணர்வாலே அக நின்று அறிதல் வேண்டிய ஒன்றாம். ஆண்டவருண்மையை அறிந்து, அவரது அருளின் பெருமையை மதித்து அருள் வாழ் வால் அடைதல் வேண்டும் ஒவ்வொருவரும்.

(6)

701. சித்திர விசித்திர சிருட்டிகள் பலபல
702. அத்தகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) தெய்வ இயல்களில் எழில் என்பது சிறப்பான ஒன்றாம். கடவுள் என்பது ஒன்றே, அக்கடவுளின் அருளியல் தோற்றம் பலவாக வெளிப்பட்டுப் புறப் பிரபஞ்சத்தில் அனந்த வண்ணக் கவினொடு விளங்குகின்றதாம். அகவுண்மையே புறத் தில் வேறான, மாறுபாடு போன்ற தோற்றத்தோடு விளங்கு கின்றது. அகம், நிலைத்த ஒன்று; புறம் நிலையற்ற, மாற்ற தோற்றமுடைய ஒன்றாம். அகம் மன்னெழில் என்றும், புறம் பொங்கெழில் என்றும் புகல்வர். அகம் கடவுள் என்றும், புறம் தெய்வம் என்றும் செப்புவர்.

இயற்கையழகு எங்கும், எவற்றிலும் வெளிப்பட்டு விளங்கு கின்றது. எதிலும், கோரத் தோற்றத்திலும்கூட அழகைக் கண்டு களிப்பர் சிலர். ஒருவனுடைய மனோநிலையைப் பொருத் ததே அழகின் தன்மை. எல்லாவற்றிலும் ஒரு வகை நியதி

முறைப்படி புறத்தோற்றங்கள் வெளியாகின்றன. ஓர் ஒரு சமயம் நியதிமுறைக்கு மாறான தோற்றம் ஏற்படும்போது அதனை விசித்திரம் என்கின்றோம். சித்திரம் என்றால் அழகுத் தோற்றமே. விசித்திரம் என்னும்போது ஒரு மாறுபாடான எழில் தோற்றத்தைக் குறிக்கும். வினோதமானது, வேடிக்கையானது எனவும் பொருள்படும். இயற்கைக்கு மாறான தோற்றங்களை விசித்திரத் தோற்றமாகக் காண்கின்றோம்.

கடவுள் விதியால் விளங்கும் தோற்றங்களிலே சித்திர எழிலைக் கண்டு களிக்கின்றோம். ஒருசில இடங்களில், மாறான விசித்திர கோலங்களைப் பார்த்து வியக்கின்றோம். அதுவும் கடவுட்செயலின் அருட்திறன் வெளியீடேயாம். அத் திருவருள் பெற்று ஒருவன், உலகநியதிமுறைக்கு மாறான அற்புதச்செயல் புரியக் கூடும். அதுவும் விசித்திரமேயாம். திருவருளால் எல்லாம் செயல்கூடும். இதனால் அருள்நிலை பெற்றவன், இயற்கையை மாற்றி, புதுத் தோற்றத்தைப் படைத்து நிலவச் செய்யக்கூடும். திருவருட்பூரணத்தால் நம் வள்ளற்பெருமான் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றுள்ளார். இது கண்டு உலகமெல்லாம் ஆச்சரியப்படுகின்றது. இது விசித்திரமா, இயற்கைக்கு மாறான வியப்புச்செயலா, அற்புதமா என்றால், அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, இதுவே திருவருட்சம்மதமான, பக்குவத்தே நிகழ வேண்டிய ஒரு செயலேயாகும். உலகம் இதனை அறியாமல் இருந்து வந்தது இதுகாறும். இப்போது மரணமில்லா வாழ்வு வெளிப்பட்டுள்ளதைக் கண்டு அப்படி எல்லாம் நினைக்கின்றது. உண்மை அறிந்து கொண்டால், மன்னிவாழ்வுடன் விளங்கலே கடவுள் நியதி; அதற்குமாறாக மனிதஉடலை விட்டு, இறந்துபட்டு ஒழிவது திருவருட்சம்மதமே அல்ல; அப்படி இறப்பது தவறு தலேயாம். ஆகவே, பலவகைப் பிறவிகளையும் தாண்டி, அருள் இயல் வடிவில் இருந்து வாழ முனைவோம். அவ்வருளும் உதவும்

195. ஆண் பெண் இயல்

(1)

703. பெண்ணினுள் ளாணும் ஆணினுட் பெண்ணும்
704. அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆண், பெண் தத்துவ விளக்க விரிவு கூறுவது இவ்வியல். மக்களினம் முழுமையும் ஒன்றே. ஆனால், இதில் ஆண், பெண் என்ற இரண்டு முக்கியப் பிரிவு இயல்பாக அமைந் துள்ளது. மற்ற, இடம், குணம், நிறம் முதலிய இயற்கைத் தன்மைகளாலும், செயற்கையாகியபழக்கவழக்கத்தாலும், செயற் கையிற் செயற்கையாகிய ஜாதி, மதம், சமுதாயம், வகுப்பு முதலி யவைகளாலும் பலவாகிய பிரிவினைகள் தோன்றியுள்ளன. இந்த இயற்கை வகையாலும், செயற்கைவகையாலும், செயற்கையிற் செயற்கை முறையாலும் ஏற்பட்டுள்ள பிரிவுகள் தயாவாழ்வுக்குத் தடையாயுள்ளனவாம். ஆகையால் அவற்றை எல்லாம் நீக்கிவிட்டு தயாநெறி பற்றி ஒருமையில் வாழவேண்டும் மக்கள் சமு தாயம் முழுமையும்.

தயாபெரும்பதியின் உண்மை இந்த மனிதப்பிறப்பில்தான் வெளியாகின்றது. இதில் அகத்தே கடவுளான்ம ஞானமும், புறத்தே தயாவாழ்வுக்கான முறையில் உடற்கூறுகளின் அமைப்பும் பொருந்தியுள்ளன. இதனால் அகமும் புறமும் பிரிவற இருந்து இறையனுபவம் அடையக்கூடிய தாயுள்ளதாம். இவற்றில் அகம் ஆண் சத்தின் கூறாகவும், புறம் பெண் சத்தின் கூறாகவும் உள்ளன. இது இருபாலர்க்கும் பொதுவே, ஆணின் அகநிலை உண்மை முதலில் அறியப்படுவதில்லை, புறவுடலைத் தான் வெளியிற் காண்கின்றோம். இதனைச் சுட்டவே முதலில், பெண்ணினுள் ஆண் என்று குறிக்கப்பட்டுள்ளது. அதாவது, பெண்ணான தேகத்திற்குள் ஆணான ஆன்மநிலை குறிக்கப்படுவ தாம். அடுத்து ஆணினுள் பெண் என்பது, இந்த ஆண் வடிவத் தில் உள்ளதும் உண்மையில் பெண்கூறுதான் ஆம். ஆகவே, ஒவ்வொருவர் தோற்றமும், ஒன்றில் ஒன்று கலந்துள்ள உண்மையை அறிகின்றோம். இதுகொண்டு அருள்வாழ்வு வாழ வழிகாண வேண்டுவது திருவுள்ளம்.

(2)

705. பெண்ணினுள் மூன்றும் ஆணினுள் ளிரண்டும்

706. அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பெண்கூறு உடல் வடிவம் என்றும், ஆண்கூறு உயிராகிய ஆன்ம சொரூபமென்றும் அறிகின்றோம். புறத்தில்

நாம் காண்பது உடலே. ஆன்மாவின் இருப்பும் அனுபவமும் தேக மூலமாகத்தான் விளங்குவதன்றி மற்றபடி காண்டற்கில்லை.

இவ்வுடல்தான் கருவினுருவாகித் தோன்றி வளர்ந்து உலகிடை வந்து இருந்து அழிந்து மறைந்து போய்க் கொண்டுள்ளதாம். இதுவே பெண்ணினுள் மூன்று எனப்பட்டது. அதாவது, பெண்தரு தேகத்தினிடத்தேதான், ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முச்செயல் நடக்கின்றனவாம். மேல், ஆணினுள் இரண்டு என்பது, உள்ளுயிராகிய ஆன்மா, உடலைவிட்டுப் பிரிந்தபோது, எங்கோ எப்படியோ திருவருளால் மறையுற்றிருந்து, பின்னர் மற்றொரு வடிவில் வருவிக்கப்படுகின்றது. ஆகவே, இந்த மறைத்தலாகிய திரோபவச்செயலும், அருளலாகிய அனுக்கிரகச்செயலும் ஆண்கூறாகிய ஆன்மாவினிடத்தில் நடைபெறுகின்றன என்பதை யுணர்த்தவே இப்படி ஆணினுள் இரண்டு எனப்பட்டதாம். இந்த ஐந்தொழிலால்தான் முடிவில் மனிதன் அகநிலையுற்றிருந்து அனக அருட்ஜோதி வடிவில் விளங்கக்கூடியவனாகின்றான்.

(3)

707. பெண்ணிடை நான்கும் ஆணிடை மூன்றும்
708. அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இம் மனிதப் பிறப்புத் தேகத்தில், பெண்ணின் சத்தாகிய சுரோணிதத்திலுள்ள, பிருதிவி, அப்பு, தேயு, வாயுவின் அம்சமாகிய இயமானன் என்னும் நான்கு பொருள்களும், ஆணுடைய சுக்கிலக்கூறின் அமைந்த, ஆகாசம், பிரகிருதி, ஆன்மஉணர்ச்சி ஆகிய மூன்று இயல்பும்கூடி இப்பிறப்பு வெளிப்பட்டுள்ளதாம். இதுவே, பெண்ணினுள் அல்லது பெண்ணிடை நான்கும், ஆணிடை மூன்றுமாக மொழியப்பட்டுள்ளதாம்.

கருச்சிருஷ்டி தொடங்கும்போது மேற்படி ஏழு அம்சங்களும் 7/60 நொடியில் ஒன்றுகலந்து, ஆன்மஜோதி அணுவை நடுவைத்துப் பிரணவாகாரக் கரு வளரத் தொடங்குகின்றதாம். இந்த வளர்ச்சியே சப்த தாதுக்களாலாகிய தேகமாகப் பெருகுவதாம்.

உலகிடைத் தோன்றியுள்ள மனிதன், அக ஆன்மநிலையைப் பற்றிநின்று தேகப் பற்றற்று, ஆன்ம இயல்பாகிய அருள் வாழ்வு

வாழ வேண்டியவனாவான். உடற்பற்றோடு இருக்கும்வரை, ஆன்ம, ஆனந்த வாழ்வு பெறமுடியாது. இதுதான் மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னதன் கருத்தாம். பெண்கூறாகிய உடற்பற்றை அவசியம் ஆண் பெண்ணாகிய இருபாலாரும் தவிர்க்கவேண்டு மென்பதுவே பொருளாம். இத் தேகப்பற்று நீங்கி அகநிலையுற்றோரே ஆண் வடிவானவராவர்; ஆண்டவர் இன்பமும் பெறுவர்.

''மான்செய் விழிப்பெண்ணே நீ ஆண்வடிவானது கேட்டு, உள்ளம் வியந்தேன் கண்டிட வந்தேன்,'' என இங்கிதம் பேசு கின்றார், திருவொற்றித் தியாகப் பெருமான். இவ்வுண்மை கண்டு வாழ முற்பட்டால் உலகம் பேரின்பமுறும்..

(4)

709. பெண்ணிய லானும் ஆணியற் பெண்ணும்
710. அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) மனிதனில், பெண்ணியலும் ஆணியலும் கலந்தே இருக்கின்றன. அன்பும், அடக்கமும், மென்மையும், பேணுந் தன்மையும் பெண்ணியலாம். நேர்மை, வீரம், உறுதி, ஆளுந் தன்மை ஆணியலாகும். இவ்விருவிதப் பண்புகளும் பொதுவாக இருபாலாரிடத்தும் ஓரளவு கலந்தே விளங்கும். சில பெண் ணினத்தில் ஆணியல் சற்று அதிகரித்தும், பெண்ணியல் சற்று குறைந்தும் இருக்கலாம். மாறாகச் சில ஆணினத்தில் பெண் ணியல் அதிகரித்து ஆணியல் குறைந்துமிருக்கும்.

சிறப்பாகப் பெண்ணிடத்தில் ஈரமும், ஆணிடத்தில் வீரமும் அதிகரித்திருத்தல் வேண்டும் என்பது மரபு. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை தாய்சொல் துறந்தால் வாசகமில்லை என்பர். இவற்றால் சுட்டப்படும், சாத்திரத்திற் சிறந்த திருமந்திரத்தை யும், தோத்திரத்திற் சிறந்த திருவாசகத்தையும் ஊன்றிப் பயின்றால், உண்மை விளங்கும். திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், கருங்கல் மனமும் கரைந்துருகக் காண்போம். அன்பால் உளமுருகுதல் பக்தர் அறிவர். திருமந்திரத்தை ஆழ்ந்து நோக் கின், ஆன்மக்கடவுள் உண்மை விளங்கும். உள்ளொளியில் அசைவற, உறுதியாய் விளங்கலாம். ஆகவே ஆண், பெண்

என்ற வித்தியாசமின்றி ஆணியல் உறுதியும், பெண்ணியல் அன்பும் உடையவர்களாகி உலகியலை அருளியலாகக் கொண்டு வாழ்தல் வேண்டும்.

இன்றைய உலகில் பெண்ணிடத்தில் பெண்ணியல் அன்பு புலனிச்சைப் பெருக்காக விளங்குகின்றது. ஆணிடத்தில் வீரமும், தேகபோக ஊக்கமாக ஓங்கியுள்ளது. எனவேதான் அருளியல் வாழ்வுக்கு இடம் சிறிதும் காண்பது அருமையாயுள்ள தாம். மருள் வாழ்வுதான் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே யிருக்கின்றது. இதனால் உலகில் பல பிரச்சினைகள் புதிது புதிதாக அதிகரித்துக் கொண்டும் தீர்க்கமுடியாதனவாய் வளர்ந்துகொண்டும் உள்ளனவாம். யாவும் நல்லனவாகும் அருட்பெருஞ்ஜோதியின் வருகையால்.

(5)

711. பெண்டிறல் புறத்தும் ஆண்டிற லகத்தும்
712. அண்டுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

(உ-வி) எந்த உயிரினத் தோற்றத்தை எடுத்துக்கொண்டு பார்த்தாலும், உடம்பும் உயிரும், புறத்தும் அகத்துமாக இருக் கின்றதையே காண்போம். புறத்தது பெண்ணின் சத்தாகவும், அகத்தது ஆணின் சத்தாகவும் இருப்பதையும் அறிவோம். இவ்விரு ஆற்றலும் ஒன்றுகூடி வாழும்போதுதான், எல்லா நன்மையும் இன்பானுபவமும் பெற முடியும். அருளியல் உண்மை அறியாதார், பெண்ணான தேகம் பொய், மாயை, அழிவுற் றொழிவது எனக் கருதிக்கொண்டு, அத்தேகபோக வாழ்வையும் தேகத்தையுமே துறந்து, அகத்தே கடவுள் ஒளியில் பற்று கொண்டு ஆழ்ந்து விட்டால் இறைவாழ்வு சித்திக்கும் எனக் கருதி ஏமாந்து போகின்றனர். உடலில்லாமல் ஆன்மாவுக்கு வாழ்வில்லையாம். ஆகையால், தேகத்தை இழந்துவிடக்கூடாது. உடல் போனபின், ஆன்மாவுக்கு முத்தி இன்பமோ நரகத் துன்பமோ உண்டாக வழி இல்லை. ஆன்மாவிலிருந்து எழும் உயிர்ச்சக்தி, ஓர் ஜீவ வடிவில் இருந்துகொண்டு, தேக மூலமாகத் தான் சுகத்தையும், துக்கத்தையும் அனுபவிப்பதாம். உயிர் உள்ளொடுங்கிவிட்டிருந்தால் எந்த அனுபவமும் ஆன்மாவால் பெற முடியாதாம். ஆகையால் புறவுடலை நீக்கிவிட்டபின்

சூனியமாகி கடவுட் ஜோதியில் மயங்கி எவ்வளவோ காலமாகக் கிடக்கினும் பயனின்றாம். ஆகவே முன்வினைக்கீடான அனுபவம் பெறத் திருவருளால் இவ்வுலகில் தக்க பிறப்பிற் செலுத்தப் படுகின்றது ஒவ்வொரு ஆன்மாவும்.

புறமும் அகமும், பெண்ணும் ஆணும் சரிநிகர் சமானம் என்று சொல்லிக்கொண்டு வாழ்வில் போட்டி போட்டுக்கொண்டு எதிர்த்துக் கொள்ளுதலும், ஒத்து ஒருவர்க்கு ஒருவர் துணையாய் இருந்து அன்பின்ப வாழ்க்கை நடத்தாமலும் அவத்தையுறுவது அறியாமையே. இருவரும் ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வு என்று கருதாது, உயிரும் உடம்பும் இணைந்து வாழ்வதுபோல தயா நலம் காணும் பணியில் ஒன்றி நின்று அன்பின்பம் பெருகப் பெருக வாழவேண்டும்.

(6)

713. பெண்ணியன் மனமும் ஆணிய லறிவும்

714. அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இம்மனிதனில், மனம்தான் எவ்வித வாழ்வுக்கும் வழி செய்வதாயிருக்கின்றது. மற்ற உயிரினங்களுக்குப் புலன் உணர்வுதான் உண்டு. மேனிலைக்கு வழிகாட்டும் இம்மன அறிவு இல்லையாம். இங்கு அறிவு என்றதன் கருத்தையும் மற்ற உணர்வின் உண்மையையும் அறிந்துகொள்ள வேண்டும். உயிரில் ஜீவ உணர்வு இருக்கின்றது, எவ்வுயிரினத்துக்கும் பொது வானதே இவ்வுணர்வு. சாதாரண ஐயறிவு வரையுள்ள உயிரினங்களில் இவ்வுணர்வு புலன் உணர்வு என்ற பெயருடன் விளங்கும். மனிதனில் இவ்வுணர்வு மனஅறிவு அல்லது பகுத் தறிவு எனப்படும். பக்குவமடைந்த மனிதனில் இது கடவுள் ஆன்மஞானமாக விளங்குவது. இம்மூன்று உணர்வு நிலைகளே பொதுவாக, புலன், மனம், அறிவு அல்லது ஞானம் என்று பழக்கத்தில் வழங்கப்படும்.

பெண் இயல் ஜீவ தேக மன உணர்வு இதயத்திலிருந்து செயல்படுகின்றது. இது சலனமுற்ற மனத்தின் அவா வெகுளிச் செயலால் இதயத்தின் இரத்த ஓட்டத்தையும், மூச்சுக்காற்று ஓட்டத்தையும் பாதித்துக் கேடு விளைவிப்பதாம். மனம் சுத்தமுற அன்பும் ஓர்மையும் பெருகும்போது அமைதியும் இன்பமும் அடை

கின்றதாம். இச் சுத்த மனமே மேனிலையுற்று அறிவுமயமாக விளங்கும். கீழ்நிலையில் பெண்ணியல்போடிருந்த மனம், மேனிலையில் ஆணியல் அறிவாக, மெய்ஞ்ஞானமாக மிளிரும். ஆகவே இந்த மனம் தன்னிலையினின்று கீழ் சென்று புலன்வழியில் உழலுமானால், மனிதன் விலங்கின் தன்மையோடு நடந்து கொள்வான். அப்படி அல்லாது நல்லொழுக்கத்தோடு வாழ்ந்தால், நல்ல ஒரு மனிதனாகவும், மேற்கொண்டு சுத்த சத்விசாரத்தால் உயர்நிலையுற்று அருளியல் வாழ்வு வாழ்ந்தால் சுத்த சன்மார்க்க நிறை மனிதனாகவும் விளங்குவான். ஆகவே, மனிதன் மேலான வாழ்வு பெற்று விளங்கவே இவ்வறிவு நிலையை இப்படி அமைத்துள்ளார் நம் பதி.

(7)

715. தனித்தனி வடிவினுந் தக்கஆண் பெண்ணியல்
716. அனைத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) மக்களிலும் பிற உயிரினங்களிலும் ஆண் பெண் இயல் கலந்துள்ளதை அறிவோம். இங்கு ஒவ்வொன்றிலும் கலந்துள்ள ஆண் பெண் இயல்களைத்தான் குறிக்கின்றார் அல்லாது ஆண் பெண் இன வடிவங்களை அல்லவாம். இந்த உயிரின வடிவங்கள் எல்லாம் பொருட்சக்தியுருவாயும், அவ்வவற்றின் உயிரியக்க ஆற்றல் கிரியாசக்தி இயக்கமாயும் அறியலாகும். உயிரினங்களிலேதான் ஆண் இயல், பெண் இயல் என்றல்லாது, உயிரற்ற சடப்பொருள்களில்கூட கிரியாசக்தி இயக்கம் இருப்பதை யுணர்கின்றோம். அணுமுதல் அண்டகோடிகள் வரை இக் கிரியா சக்தியின் திறலால் விளங்குகின்றனவாம். இவைகளிலும் ஆண் இயல், பெண் இயல் கலந்துள்ளனவாம்.

அணுக்களில் புரோட்டான், எலக்ட்ரான் ஆகவும், அலை நீர், காற்று, மின்சாரம் முதலியவற்றில் நேர், எதிர் (Positive Negative) ஆற்றல்களாகவும், அண்டவெளிப் பிரபஞ்சத்தில் சூரிய சந்திர சக்தியாகவும், இயற்கை ஆற்றல்கள், குணங்கள்,. செயல்கள், தோற்றங்கள் எல்லாவற்றிலுமே இந்த ஈரியல் கலப்பு இருந்து கொண்டுள்ளதாக உணர்கின்றோம்.

மனிதவாழ்வில் இந்த ஆண் இயலும், பெண் இயலும் சேர்ந்து இயற்றும் பெருஞ்செயலால் எவ்வளவு பயன் விளை

கின்றன என்பது அருள்ஞானநிலையுற்றுக் காணும்போது நன்கு விளங்குகின்றதாம். அறியாமை இருளிலும், தெளிவுறா மருளி லும் மக்கள் ஆழ்ந்துகிடக்கின்றதனால் ஆண்டவர் வகுத்து வழங்கி யுள்ள இந்த ஆண் பெண் இயல் உண்மையை யுணராது வாழ் வையே பாழ்படுத்திக் கொண்டுள்ளனர். பழநெறிகளால் மீள வழியில்லை. ஆகவே, அருள் சன்மார்க்கம் கொண்டு, உண்மை கண்டு, உலகம் இன்பவாழ்வில் தழைக்கத் திருவருளே வழங்கு விக்கின்றது இதனை இத்தருணம்.

196. காத்தருள் விரி

(1)

717. உனற்கரு முயிருள வுடலுள வுலகுள

718. அனைத்தையும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந்த மா பிரபஞ்சத்தில், உயிரினங்கள் மிகச் சிறந்தனவாம். அந்த உயிரினங்களிலே உள்ளீடாய் இருக்கின்ற உயிர்தான் மிகமிகச் சிறந்தது ஆகும். இதனையே உனற்கரும் உயிர் என்கின்றார். அதாவது உன்னுதற்கரிய ஜீவான்மாக் களாம். அந்த உயிர்களுக்குரிய உடல்கள் இரண்டாவதாகக் கூறப்படுகின்றன. பின்னர் அந்த உடல்களைக் கொண்டுள்ள உலகுகள் குறிக்கப்படுகின்றன. இப்படி உயிர், உடல், உலகு என்பவற்றின் எண்ணிக்கை இவ்வளவு என்று கூறவே முடியா தாம். இவ்வளவையும் தன் அருளால் தோற்றுவித்துத் தன் தனிப்பெருங் கருணையால் அவற்றிற்கு எல்லாம், எந்தக் காலத் தில், எந்த இடத்தில், எவ்வகைச் சூழ்நிலையில், எவற்றை எல் லாம் வழங்க வேண்டுமோ அவற்றை எல்லாம் சிறிதும் தடை யுறாது ஈந்தருளிக் கொண்டுள்ளார் நம் பதி. இவ்வகை உதவி கொண்டு வாழ்ந்து வருகின்ற உயிர்களைத் தன் அருளாலே காப்பாற்றி மேலும் மேலும் உயர்பிறப்பிடை ஏற்றிக் கொண்டு வருகின்றார்.

ஒருவரேயான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தன் கருணை யால் எவ்வெவ்வுயிர்க்கும் அகத்தும் புறத்தும் நீக்கமற இருந்து கொண்டு காத்துவருதல் உண்மையாம். இக்காத்தல் செயல் திருமாலுக்குரியது என்பர். எந்தத் திருமால், இந்த மாபிர

பஞ்சத்துள்ள எண்ணற்ற உலகங்களையும், அவற்றிலுள்ள அனைத்து உயிரினங்களையும் அவ்வுயிரினங்களின் தனித்தனி உயிருடம்புகளையும் இடையறாது அனந்தகோடி காலமாகத் தழைக்கச்செய்து காத்துவர முடியும்! மாலனந்தங் கோடியையும் தாங்கிக் காத்துவரும் நம் பதியின் பெருமையை யோர்ந்து இவரையே எத்திருமாலுக்கும் பெருமாலாகக் கொள்வோம். திருமால், உகர வண்ணராம். 12-சூரியகலை கொண்டவராம். இதனை யுணர்த்தும்படி இவ்விரண்டடிகளில் 12-உகரம் மிளிர் கின்றன.

(2)

719. ஓவுறா வெழுவகை வுயிர்முத லனைத்தும்
720. ஆவகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இவ்வுலகம் எதற்காகத் தோற்றுவிக்கப்பட்டு, எவ்வளவோ நெடுங்காலமாகச் சிறிதும் தடைபடாது காத்து வரப் பெறுகின்றது! உலகம் என்று சொல்லிவிட்டால் அதன் பெருநிலையும் அதிலிருக்கும் எண்ணில் கோடி அண்டங்களும், உயிர்களும், பொருள்களும், ஆற்றல்களும் இவ்வளவு இருக்கும் என்று நினைத்துப்பார்க்கவே முடியாதே! அவ்வளவையும் காத்தல் யாரால் எப்படி முடியும்!

ஓர் ஆன்மாவும் அதனைச் சூழவிருக்கும் அகண்டவெளிநிறை ஜோதியும் அனாதியாகவேயுள்ளனவாம். இந்த ஆன்மாவில் எல் லாம்வல்ல கடவுள் தயவு அல்லது அருள் இருந்துகொண்டு, அந்தத் தயவைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தி அனுப வத்தில் திகழச்செய்யவே இந்த மாபிரபஞ்ச காரியத்தைச் சதா நிகழ்த்திக்கொண்டே யுள்ளார். இதுதான் கடவுளின் இயற்கை யாகிய கருணைச்செயல், தயவுச் செயல், அன்புச்செயல் என்றெல் லாம் புகழ்ந்து போற்றிக் கொள்ளப்படுகின்றது. இச்செயலால் ஆன்மாவைச் சூழ உள்ள ஒளியே, சடபூத அணுவாகவும், பொருளா கவும், உயிர்களின் உடம்புகளாகவும் மாற்றம் அடைந்து அடைந்து வந்து இப்பொழுது அவ்வொளிமனிதவடிவோடு விளங்குகின்றதாம் இந்த உண்மையைச் சுட்டுவது முதலடி. எழுவகை உயிர்முதல் அனைத்தும் என்றதால், ஏழுவகைப் பிறப்பு தேகங்களையும் மற்ற பொருட்களையும், அணுக்களையுமே குறிக்கின்றதாகக் கொள்ளப்

படுகின்றது. இச்சூழ்நிலைத் தோற்றங்கள் ஓவுறாது (நீங்குதல் இல்லாது, இடையறாது) ஒவ்வொன்றாக வந்துகொண்டே யுள்ளனவாம். இப்படி ஆன்மாவுக்கு ஏழ் பிறப்புகளிலும் வழங் கப்படுகின்ற தேகபோக வாழ்வுச்செயல் கடவுளின் உழுவல் அன்பாக உரைக்கப்படும். உழுவல், இடைவிடா அன்பு ஆம். இதன் முடிவு யாதெனில், அந்த ஆன்மா நிறை அன்பு அனுபவத் தோடு மனிதனாக ஆகி விளங்குவதேயாம்.

(3)

721. பைகளின் முட்டையிற் பாரினில் வேர்வினில்

722. ஐபெற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உயிரினப்படைப்பு நான்குவித யோனிமூலம் தோற்றுவிக்கப்படுகின்றதாகக் கூறுவர். அவைகள்: 1. பை களில், சராயு என்னும் கருப்பை, பனிக்குடம், நஞ்சுக்கவசம், குடம்பை, கண்ணாடி, பிளாஸ்டிக் கருவிகள் முதலியனவாம். 2. முட்டைகளில் கருவிகளில், 3. மண்ணில் விளை விதைகள், கிழங்குகள், தண்டுகள், களைகள் முதலியன. 4. வியர்வை, அழுக்கு, புழுக்கமுறும் தானியங்கள், துகள்கள், இரசாயன பொருட்கலப்புகளில் ஆகியவற்றின்மூலம் பலவாகிய உயிரினங் கள் படைக்கப்படுகின்றன.

இயற்கைப் படைப்புகளின் தோற்றங்களை ஊன்றிக் கவனித் துப் பார்த்தால் எப்படி எப்படி எல்லாம் உருவாகி மாற்றம் அடைந்து இந்த உயிரினங்கள் வெளிப்பட்டு அழகுற விளங்கு கின்றன என்பதெல்லாம் நன்கு விளங்கும். ஒன்றை மட்டும் ஆய்ந்து நோக்குவோம். யாதெனில், மனிதக் கருவுருவின் தோற்றத்தைப் பார்த்துப் பல இரகசியங்களைப் புரிந்து கொள் ளலாம். முதலாவது இந்தக் கருவின் தோற்றம், தாய்க் கருப் பையில் சிற்றொலி ஆகத் தோன்றிப் பிரணவச் சூழலால் சிறிது சிறிதாகப் பிண்டப் பொருள் வடிவில் வளர்ந்து பெருகுகின்றது. அது ஓங்கார வடிவமாக விளங்குகின்றதாம். இது மனிதக் கருப் பிண்டம் மட்டுமல்ல, பிறவாகிய பையிடை தோன்றும் கருவுருவங் களுக்கும், மற்ற யோனிகளில் உருவாகத் தொடங்கும் உயிர் களின் வடிவங்களுக்கும் பொருந்துவதே. ஏனெனில், எல்லாப் படைப்பும் பிரணவச் சூழலினால் ஓங்கார வடிவமாகவே முதலில்

தோற்றுவிக்கப்பட்டு வளர்ச்சிக்கிரமத்தில் உருமாற்றம் பெற்றுத் திகழ்கின்றனவாம். இச் சிருஷ்டியின் காரணம் கடவுளின் அருள் உண்மை வெளிப்பட்டு, அனுபவப்படவேயாம். ஐபெற என்றதன் பொருள், அழகுபெற என்றும், ஐ என்ற கடவுள் இயல் உண்மை விளக்கமும் அனுபவமும் கிடைக்கப்பெற என்றாம்; அருட்பிரகாசவடிவம் அடைந்து ஆனந்தம் பெறலாம்.

(4)

723. தாய்கருப் பையினுள் தங்கிய உயிர்களை
724. ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) கருப்பையில் வளரத் தொடங்கிய உயிர்களை, ஆரம்ப முதல் உள்ளும் புறமும் இருந்து காத்துப் பக்குவப்படுத்தி வெளி யுலகுக்குக் கொண்டுவருகின்ற கடவுளின் அருள் ஆற்றல் என்னே! கரு வளரத் தொடங்கியபோதிருந்தே அதற்கு எத்தனையோ வித மான ஆபத்துகள் உண்டாகின்றனவாம். அந்தக் கருப்பையி லுண்டாகும் பலவாகிய இயக்கங்கள், சுழற்சிகள், வேகங்கள், தடைகள், புறத்தாக்குதல்கள், நெருக்குதல்கள், நிண மல சல முடை நாற்றங்கள், அமுக்குகள், ஆபாசங்கள் ஆகியவற்றால் சிறிதும் ஆபத்தும் அழிவும் உண்டாகாது நம் பதியின் அருளே காத்து வருகின்றதாம். ஏன் இப்படிக் காத்துவரப்பெறு கின்றது இந்தப் பிறப்பு வடிவம், என்றால் இதனால்தான் அக உண்மை கண்டுகொள்ளவும், அவ்வுண்மையினின்று அனகமாய் விரிந்து அருள் வாழ்வை உலகிற்றிகழச் செய்யவுமாம்.

தயவில்லாப் பொறி மயக்கப் புலனின்ப வாழ்வில் அதி மோகங்கொண்டு எழுந்துள்ள இன்றைய உலகம், கடவுள் சிருஷ்டியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமலும், பிறப்பின் குறிக்கோளை அறிந்துகொள்ளாமலும், எத்தனை எத்தனை கருக் களை வீணில் ஆக்கியும் அழித்தும் கொண்டுள்ளன! அளவுக்குக் கட்டுப்படாத மக்களினப் பெருக்கமும், சிதைவும், பொருள்களின் ஆக்கமும் அழிவும், இயற்கை ஆற்றல்கள், வளங்கள், விளைவுகள் யாவும் வீணாக்கப்படுகின்றனவாம். முன் எப்பொழுதையும்விட இப்பொழுது மக்களினத்தில் ஆவதும் அழிவதும் மிக அதிகமாய் இருக்கின்றன. கடவுளும் இச்செயல்களுக்கு எவ்விதத் தடை யும் செய்கின்றதாகத் தோன்றவில்லை. உண்மை இதுதான்:

மனிதனே தன் சுயானுபவத்தினால் நல்லது கெட்டது அறிந்து தேறித்தான் அருள்நிலைக்கு வரவேண்டியிருக்கின்றது. புல னிச்சையில் வேகந்தணியும் வரை அருணிலையை நாடமாட்டான். அதுவரை கடவுளும் அவன் போக்கிலே விட்டுத்தான் திருப்பு வார். எப்படியும் அருள்வழிக்கு வந்தே தீர்வான். அருளே எவரையும் காக்கும்.

(5)

725. முட்டைவாய்ப் பயிலு முழுவுயிர்த் திரள்களை
726. அட்டமே காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அண்டஜம் என்னும் முட்டையில் தோன்றுவன எத்தனையோ உயிர்கள் இருக்கின்றன. பொதுவாகப் பறவை கள் எல்லாம் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பனவாம். ஊர்வன வாகிய பாம்பு, பல்லி, ஓந்தி முதலியனவும், நீர்வாழ் மீன், தவளை, நண்டு, ஆமை முதலியனவும் முட்டையிலிருந்து தோன்று கின்றவைகளேயாம். சில, பட்டுப்பூச்சி போன்றவை முட்டை யிலிருந்து புழுவடிவாய்த் தோன்றி, மறுபடியும் அப்புழு நிலை குடம்பையுள் உருமாற்றம் அடைந்து பறக்கும் பூச்சியாக வெளி வருகின்றனவாம். இப்படிப்பட்ட உயிர்களின் எண்ணிக்கையும் மிகப் பெரிதேயாம். இவைகளை எல்லாம் தோற்றுவித்துக் காப்பதும் கடவுள் அருட்பெருஞ்செயலேயாம்.

முட்டைகளில் உள்ள ஆண்சத்து உள்ளுயிர் நிலையாகவும், பெண்சத்து புறவுடல் நிலையாகவும் வளர்ந்து உருவாகி விளங்கு கின்றனவாம். ஆகையால், முட்டையில் உயிர்ச்சத்து இருக் கின்றது உண்மை. உயிரிரக்கமிக உடையோர், முட்டை ஜீவர் களைச் சிதைத்து உணவாக்கிக்கொள்ள இசையார். அருள் அனுபவம் பெறத் தயவு நிரம்பிய அன்பு நெறியே உகந்தது. அண்ட ஜீவர்களைக் கடவுள் எப்படிக் காத்து வாழ்வித்து மேனிலைக்கு ஏற்றிக்கொண்டுள்ளார் என்பதையும், அண்ட சத்துப் பொருள் புலையே என்பதையும் அறிந்துகொண்டால், முட்டையை ஒருவன் உண்பது தவறு என்று நன்கு விளங்கும்.

அண்டம் என்பது முட்டையே. உலகங்களும் கோட்களும் கோளங்களும் ஒருவாறு முட்டை போன்றிருத்தலின் அண்ட

மென்றே மொழியப்படும். வான் வெளிக் கவசம், முட்டையின் ஓடுபோல் மூடிக்கொண்டிருத்தலின், அண்டகவசம் என்றும், அகண்டாண்ட கடாகம் என்றும் கூறப்படுகின்றதாம். இந்தப் பேரண்ட வெளியில் பரிபூரணமாகி நிறைந்துள்ள கடவுளைக் கூட அண்டன் என்கின்றார்கள். இந்த அண்டன்தான் ஆண்டவனாக இருந்து ஆண்டுகொண்டும், காவலனாக இருந்து காத்துக் கொண்டும் இருக்கின்றான் என்ப.

(6)

727. நிலம்பெறு முயிர்வகை நீள்குழு வனைத்தும்
728. அலம்பெறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந்த மண்ணுலகில் எல்லா உயிர்களும் பொதுவாக மண்ணிலிருந்துதான் உருவாகிப் பின் யோனி பேதங்களில் தோன்றிப் பல்வேறு வடிவொடு பல்கியுள்ளனவாம். இவற்றில் இங்கு உற்பீஜம் என்ற வகையில் வெளிப்படுகின்ற உயிர் வர்க்கம், விதை, கொட்டை, கிழங்கு, வேர், குச்சி, கொடி, நீர்ப் பாசி முதலியவற்றிலிருந்து தோன்றுகின்றனவாய்க் காண் கின்றோம். இத்தாவர யோனிகளில் தோன்றும் உயிர்களை எல்லாம் அதற்கதற்குரிய இடங்களில் இருத்திப் பக்குவகாலம் வரை காத்து உரிய சூழ்நிலையில் வெளிப்படுத்திக் கொண்டிருப் பது நம் பதியின் அருட்செயலேயாம்.

இங்கு நிலம் பெறும் உயிர்வகை என்றது சிறப்பாகத் தாவர ஜீவர்களைக் குறித்தாலும், பொதுவாக எல்லா ஜீவ வர்க்கங்களையும் குறிப்பதாகவும் கொள்ளலாகும். ஏனெனில் எவ்வுயிர் வடிவும் மண்கூறுதான் மிக்கதாய்க் கொண்டுள்ளதால் எத்தேகத்தையும் மண்ணுடம்பு என்றே கூறுகின்றோம். இதனால், நால்வகை யோனி, ஏழ்வகைப் பிறவி, எண்பத்துநான்கு லட்ச ஜீவபேத வடிவங்களும் மண் அம்ச வடிவு கொண்டனவே என்பது உண்மை. இம் மண்ணுருவங்களை எல்லாம் பண்டே தொட்டுப் படைத்துப் படைத்து உள்ளொளி வளர, உயிரினங்கள் ஒழிந்து போகாதபடி காத்துக் கொண்டேயுள்ளார் நம் அருட்பெருஞ்ஜோதி. இப்படிக் காத்துவரப் பெறுகின்றதன் குறிக்கோள் என்ன வென்றால், அலம் பெற எனப்படுகின்றது. அலம் என்றால், அழகமைப்பு என்பர். அகத்தில் அருள் ஒளி இருந்து, அது

இந்த மானுட வடிவில் திருவருளால் அனகநிறைவு பெறும்போது உடம்பும் அருள் ஒளிமயமாய் ஆகி வருகின்றது. இதுவே, மண்ணான உடம்பு பொன்னாக ஆகும் நிலை. மண்ணான உடம்பு களைக் காத்துவந்து முடிவில் மன்னருட் பொன்வடிவாய் மாற்றி விளங்கச் செய்தற்கேயாம்.

(7)

729. வேர்வுற வுதித்த மிகுவுயிர்த் திரள்களை
730. ஆர்வுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஐம்பூதக் கலப்பில் தேகாதி பிரபஞ்ச உருவங்கள் எல் லாம் தோற்றியுள்ளன. இவற்றில் புழுக்கத்தாலும், மட்கி மடிந்த பொருள்களாலும் வியர்வை அழுக்கு முதலியவற்றாலும், ஆவி, நீர், காற்று, சூடு, இரசாயன மாற்றம் முதலியவற்றாலும் கண் ணுக்குத் தெரியாத அணு ஜீவர்கள் முதல் கிருமி, கீட, நுண் ணுயிர்கள் பலவும், பூஞ்சைக்காளான், மரப்பாசி, நீர்ப்பாசி, கடற் பாசி முதலியனவும், மணற்சங்கு, சிப்பி முதலியனவும், மண்புழு, தேள், பூரான், இந்திர கோபப்பூச்சி முதலியனவும், தானியங் களிலும், பொடி தூள் முதலியவைகளிலும் உண்டாம் வண்டினங் கள் முதலியனவும் சுவேதஜம் என்னும் உயிரினங்களாம்.

இப்படி உயிரினங்களை எல்லாம் தோற்றுவித்துக் காத்து வருதல் கடவுள் அருட்செயல் என்று உணர்கின்றோம். இவை களால் என்ன நன்மை அல்லது என்ன பயன் என்று எண்ணிப் பார்ப்போமாயின் முதலில் குழப்பமாகத்தான் தோன்றும். ஆனால் அகநிலையுற்று அருட்ஜோதியின் நிறைநிலையை அறியும் போது யாவும், ஆன்ம பரிபாகமுறச் செய்தற்கே தோற்றுவிக்கப் பட்டுள்ளனவாயும், வளர்க்கவேண்டியதைக் காத்து வரவும், வேண்டாததை அழித்து ஒழிக்கவும், உலகியலை சமனப்படுத்த வுமே யாவும் நிகழ்த்தப்படுவனவாய் அறிவோம். யுகம் யுகமாக இந்தப் பிரபஞ்ச உயிர்களையும் பொருள்களையும், ஆற்றல்களையும் இடையறாது காத்து வருகின்ற கடவுளின் பேரருள் உண்மையை மனிதனில் வெளிப்படுத்தி அவனது நித்திய வாழ்வில் அனுப விக்கச் செய்யவே யாவையும் இப்படிக் காத்து வந்துள்ளார் என்பது இன்று திருவருளால் அறிந்து கொண்டுள்ளோம்.

(8)

731. உடலுறு பிணியால் உயிருடல் கெடாவகை
732. அடலுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) காக்கும் செயலே அருள்நெறியின் முக்கிய கூறாக இருக்கின்றது. உயிரிரக்கம், ஜீவ தயவு அல்லது ஜீவ காருண் யம்தான் சன்மார்க்க வாழ்வுக்கு முதற்படி என்பது வள்ளல் அனுபவ வாசகம். உயிரிரக்கத்தால் அவைகளைக் காத்து உயிர் விளக்கப் பணி செய்து உள்ளத்தில் அருள்ஒளி பெற்று உய்வது சன்மார்க்கியின் கடமையாம். கடவுளே இந்தத் தயவுச்செய லால்தான் உலகுயிர்களைத் தோற்றுவித்துக் காத்து வருகின்றார்.

உடல், புறத்தில் நன்கு விளங்கியோங்கி வாழ்கின்றபோது தான், அக உயிரில் ஆற்றலும் அறிவும் விளக்கமும் நன்கு திகழும். இதனால், உடலைக் காப்பது உயிரையும் காப்பதாகும். உயிர் விளக்கம் கொண்டுதான் உயிருக்கு உயிரான கடவுள் விளக் கத்தை அறிந்து அடைதல்கூடும். நம் அருட்பெருஞ்ஜோதிபதி, தன் தனிப்பெருங் கருணையால், உடலையும், உயிரையும் பலவகை சோதனையிலும், அழிந்து ஒழிந்து போகாமல் காத்து, அடலுற, அதாவது அருள்வலிமையுற்று வாழ்வு பெற உதவுகின்றார்.

அகத்தே அருள் அனுபவம் ஏற்படும்போது உண்மைச் சுகவாழ்வு உண்டாகும். அகத்தே இருள்நிலையும், மருள்நிலையும் உள்ளவரை, பிணிகளால் உடலும் உயிரும் தாக்குண்டு பலவகைச் சோதனைக் குள்ளாகிக் கொண்டேயிருக்கும். ஆன்மாவை ஆணவ முதலிய மலம்பற்றிக் கொண்டிருக்கும்வரை, அருள் விளங்காது, பிணிகளும் முழுமையாக நீங்குவதில்லையாம். பிணி என்றாலே, கட்டு எனப் பொருளாம். ஆணவமாகிய மூலமலம் ஆன்மாவை ஆதிமுதலே பிணித்துக்கொண்டுள்ளதாம். இதனால், ஆன்மாவாகிய உயிருக்கு இம் மலமே பிணியாம். நோய் என்பதும் நொய்ந்து குறுகிக் கெடச்செய்வது என்ற பொருள் உடையதாம். வியாதி என்ற சொல்கூட பிணி என்ற பொருளையே கொண்டதாய்க் கூறுவர். ஆதி என்பது ஆன்மாவாம். இந்த ஆதியான ஆன்மாவை மூடி மறைத்துக்கொண்டு, அல்லது பிணித்துக் கொண்டுள்ளது வி- ஆகும். இதனால், வியாதி, பிணி எனப்படுகின்றது. மனிதன்

தன் உண்மையை அறியாது, அன்பு உணர்வைப் பெருக்காது, அவா, வெகுளி, மயக்கங்களால்தான் எல்லாப் பிணிகளையும் அடைகின்றான். அப்பிணிகளைப் போக்கிச் சுகமுற்று வாழ எத்தனையோவகையான சிகிச்சை முறைகளைக் கையாளுகின்றான். ஆண்டவரும் இவனுடைய வினையாகிய செயலுக்கும் முயற்சிக்கும் தக்கபடி பிணிகளைப் போக்கிக் காத்தருளுகின்றார். உலக மருந்து முதலியன உடற்பிணிகளைத்தான் ஒருவாறு நீக்கும், அருள் ஒளி மருந்தே உடற்பிணியோடு உயிர்ப்பிணியையும் அடியோடு தீர்த்துப் பெருஞ்சுகமளிப்பதாம்.

புறவுடற் பிணியால், உயிருடல் (ஆன்மா) கெட்டுப் போகாத வண்ணம், மேலும் மேலும் பிறப்பு வழங்கிக் காக்கப்பட்டு அருள் அடலுறச் செய்கின்றார் ஆண்டவர்.

(9)

733. சிசுமுதற் பருவச் செயல்களி னுயிர்களை
734. அசைவறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பொதுவாக எல்லா உயிர்களையும் காத்தருளுவது நம் பதியின் நியதிச்செயலாய் இருந்தாலும், இம் மனித இனத்தைச் சிறப்பாகக் காத்து திருவருட்பெருவாழ்வுக்கு ஏற்றுகின்ற செயல்தான் மிக முக்கியமானதாம். ஆகையால், இந்த மனிதப் பிறப்பின் தொடக்கமுதல் எப்படி எல்லாம் காக்கப்படுகின்றது என்ற விளக்கத்தையே ஈண்டு அதிகம் தெளிவு செய்யப்படுகின்றதாம்.

ஒரு தாய்க் கருவில் தோற்றிய பௌதிகப் பிண்ட வடிவம் பெருகிச் சிசு உருவாய் வளரும்போதும், அச்சிசுவில் உட்கருவிகளும் புற உறுப்புகளும் தோன்றி வளரும் போதும், உள்ளும் புறமும் நின்று காப்பது நம் பதியின் அருட் சக்தியேயாம். மேற்படிச் சிசுநிலை நிறைவுற்றுக் கருப்பையினின்று வெளிப்பட்டு இவ்வுலகிடை வளரத் தொடங்கிய காலத்தும் நமது அருட்கடவுள் நமக்கு என்னென்ன, எப்பொழுதெப்பொழுது அவசியம் தேவையோ, அவைகளை எல்லாம் அப்பொழுதப்பொழுது வழங்குவித்து உள்ளுயிர்நிலை கெடாது (அசைவறக்) காத்து அக அறிவு விளக்கமும் ஆனந்த அனுபவமும் தழைக்கச் செய்கின்றார். இந்த

உடல் பெண்கூறு. இது தோன்றிச் சிசு முதற் பருவம் ஏழிலும் நிறைவேறுதல் குறித்துப் பெண்பாற் பருவம் ஏழெனச் செப்புவர். அப்பருவங்களாவன: பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் ஆம். ஆன்மாவை இவ்வேழ் நிலைகளிலும் காத்து முடிவில் பேரிளம் வடிவில் பேரின்பானுபவத் தோடு விளங்கச் செய்ய உள்ளார் நம்பதி.

(10)

735. உயிருறு முடலையும் உடலுறு முயிரையும்
736. அயர்வறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அகவுயிரால் புறவுடல் வளர்ந்து விளங்குகின்றது. புறவுடலால் அக உயிர் விளங்கி அனுபவம் வழங்குகின்றது. திருவருளால் ஓர் ஆன்மாவில் உயிர்ச்சக்தி காரியப்படும்போது, அது (அவ்வுயிர்ச்சக்தி) புறப்பொருளிலிருந்து சத்துக்களைக் கிரகித்துத் தனக்குத் தேவையான தாதுக்களாய் மாற்றி ஏற்று, உடல் உறுப்புக்களாய் ஆக்கிக்கொண்டு தழைத்தோங்குகின்ற தாம். இவ்வளர்ச்சிச் செயல் இடைவிடாது நடக்கவேண்டிய ஆன்மாவில் உயிர்ச்சக்தியை வெளிப்படுத்தி விளங்கச் செய்வதும், அந்தந்தப் பிறவிமுடிவில் உயிர்ச்சக்தியை உள்வாங்கி உடலை விட்டுவிட்டு, மறுபடியும் வேறு ஒரு பிறவி எடுத்து அதிலும் முன்போல் விளங்கச்செய்வதுமாயுள்ளார் நம் பதி. இதனால், ஆன்மாவிடத்துச் சதா இந்தக் கடவுளருட்சக்தியின் காரியப்பாடு நிகழ்ந்துகொண்டே இருக்கின்றதாம்.

ஆண்டவர் அருட்செயலுக்கு ஓய்வு ஒழிவு என்பதேயில்லை. இதுவே, அயர்வற என்ற சொற்றொடரால் குறிக்கப்படுகின்றது. அயர்தல் என்றால் ஒய்ந்திருத்தல் ஆகையால், அயர்வற என்றது, ஓய்ந்திடாது இடையறாது இயங்கச்செய்து கொண்டே இருக்கும் குறிப்பை யுணர்த்துகின்றது. பக்குவநிறைவுவரை காத்துவந்து, நிறை இறை வாழ்வு வழங்கிவிடுவதால் மேலும் அந்த அருட்செயல் என்றென்றும் தொடர்ந்து நடைபெற ஏதுவாய் இருக்கின்றதாம்.

(11)

737. பாடுறு மவத்தைகள் பலவினு முயிர்களை
738. ஆடுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உலகிடை தோன்றுகின்ற உயிர்கள் தம் வளர்ச்சிக்கிர மத்தில், ஒவ்வொரு நொடியிலும் ஒவ்வொரு நிலையிலும் எத்தனை எத்தனையோ இடர்களும், தடைகளும், தாக்குதல்களும் துன்பங் களும் குறுக்கிடப் பெறுகின்றனவாம். இவைகள் எல்லாம் தெய்வநியதிச் சட்டப்படியே உண்டாகின்றனவே யல்லாது, திருவருளுக்கு மாறாகத் தோன்றுகின்றன அல்லவாம். உயிர் களைத் துன்புறுத்துகின்ற அவத்தைகளைத்தான் பாடுறுமவத்தை கள் என்றுள்ளார். திருவருட்சம்மதமாகத் தோற்றுவிக்கப்படு கின்ற இந்த அவத்தைகள், உயிர்களைப் பக்குவப்படுத்தி உயர் நிலைக்கு ஏற்றுவதற்கேயாம். அகத்தே அருளனுபவம் ஓங்க, புறத்தே மாற்ற தோற்றச் சுகதுக்கங்களும் அவத்தைகளும் ஏற்பட்டு, அனுபவிக்கச் செய்து செய்து, உண்மையில் பற்று தலும் உண்மையல்லாதவற்றில் பற்றின்மையும், தயவுச்செயலில் நாட்டமும் உண்டாக்குவதற்கே இந்தச் சோதனைகள் வருவிக்கப் படுகின்றனவாம். இச்சோதனை வழியிற் செல்லாது மேல்நிலைக்கு ஏறிவிட முடியாது. உண்மையும், உண்மை இன்பானுபவமும் அறிந்து அடைந்து அனுபவத்திற் கொள்ள இந்த முறையே பொருத்தமானதாம்.

எல்லாம்வல்ல சர்வ ஜீவ தயாபரராகிய கடவுள் இந்த மக்களினத்தை ஏன் இம்மாதிரி அவத்தைப்பட்டு உழன்று கெட்டு அழியும்படி விடவேண்டும்? தன் தயவினாலே இவ்வவத் தைகள் நேராமல் காக்கலாமே. அல்லது அல்லல் ஏற்பட்டதைக் கண்டாவது கருணையால் அல்லலெல்லாம் தீர்த்து ஆனந்தம் அருளலாமே. என்றால், அது அவரால் முடியாதது என்றல்ல. இந்த அவத்தைகளை அனுபவித்துக் கடந்துதான் முடிவில் அரு ளின்பநிலைக்கு வரவேண்டியுள்ளதால், கருணையோடு செல்வழி சென்று காத்து வருகின்றார் நம் இறைவர்.

(12)

739. முச்சுட ராதியால் எச்சக வுயிரையும்
740. அச்சறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) முச்சுடர் என்பது, சூரியன், சந்திரன், அக்கினி என்ப. முச்சுடராதியால் என்றதால் மற்ற ஒளிகளையும் கொள்ள லாகும். பலவாகிய நட்சத்திர ஒளிகளும், மின்னல் ஒளியும், நுண்ணிதாகிய மின்காந்தத்துகள் ஒளியும், முச்சுடர் ஒளியின் கலப்பால் தோன்றிடும் பலவண்ண ஆற்றல் கொண்ட ஒளிகளும் வான்வெளியில் பரவியும், பாய்ந்தும் சென்று எவ்வுலகத்து எவ் வுயிர்களையும், எப்பொருள்களையும் படைத்தும், காத்தும் துடைத்தும் வருகின்றனவாம்.

இங்கு முச்சுடர் ஆதியால் எச் சக வுயிரையும் காப்பதாகக் குறிக்கப்படுகின்றது. எச்சக வுயிரையும் என்பது, இந்த சக மாகிய உலகிலுள்ள எந்த உயிரையும் எனக் கொள்ளலாம். இதனைவிட எந்த உலகத்திலுமுள்ள உயிரையும் என்று கொள் ளுதல் சிறப்புடைத்தாம். சிறப்பிற் சிறப்பாக இந்நிலவுலகம் போன்ற, மக்கள் வாழ் எவ்வுலகத்திலுமுள்ள மக்களையே குறிப் பதாகக் கொள்ளலாம். மற்ற உயிர்களைக் காப்பது நியதி முறையே. ஆனால் இந்த மக்களைக் காத்து அருள்நிலையிற் சேர்த்து வாழ்விப்பது விசேடமாகும். இதனால்தான், இங்கு எச்சக உயிரையும், அச்சறக் காத்தருள்வதாகக் குறிக்கப்பட் டுள்ளது. அச்சற என்றால், பயம், துன்பம் நீங்க என்ற பொருளை விட, அச்சு என்ற சொல் உடலைச் சுட்டுவதாகக் கொண்டு, இத் தேகத்தையே காத்து அருள்ஒளி மயமாக்கும் உண்மையும் விளங்குவதாம். இக்கருத்துண்மையை, ''எப்பாரும் எப்பதமும், எங்கணும் நான் சென்றே எந்தை நினது அருட்புகழை இயம்பி யிடல் வேண்டும்,'' என்ற வேண்டுகையாலும் அறிந்து தெளிய லாம். எப்பாரவரும் இவ் அருட்புகழை யுணர்ந்து பெற்றுப் பேரின்ப வாழ்வில் விளங்குதல் திருவுள்ளமாகும். இதன் பொருட்டே எவ்வுயிரின் காவலைவிட இம்மக்களுயிரின் காவ லையே அதிகம் கொண்டு விளங்குகின்றார் கருணைவள்ளல்.

(13)

741. வான்முகிற் சத்தியான் மழைபொழி வித்துயிர்
742. ஆனறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆன்அற, அதாவது ஆன்மாக்களைச் செவ்வையாக நன்றாக நம் பதி காத்தருளுகின்றது உண்மையாம். இங்குக் குறிக்கப்படுகின்ற ஆன்மாக்கள், உயிருடம்போடு கூடிய ஜீவான்

மாக்களே அல்லாது, வெற்று, தோற்றரிய ஆன்ம அணுக்கள் அல்லவாம். அந்த அணு ஆன்மாக்கள் நித்தியமானவை, மேலும் அவற்றிற்கு இந்தப் பேருலகில் எந்தப் பொருளாலும், ஆற்ற லாலும், வேறு எதனாலும், துன்பமும் ஆபத்தும், அழிவும் ஏற் படாது. ஆகையால், அவ்வான்மாக்கள் காக்கப்படவும் வேண் டியதில்லை. ஆகவேதான், காக்கப்படவேண்டியவை உலகிடை உடல்கொண்டு வாழ்கின்ற ஜீவான்மாக்களேயாம்.

மக்களைக் காத்து அருணிலைக் கேற்றுவது லட்சியம். இம் மக்கள் வாழ்வுக்காகவே மற்ற உயிர்களையும், பொருள்களையும் காக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாம். உயிர் வாழ்வுக்கு இன்றியமையாதது நீராம். அந்த நீர்நிலை இந்தப் பூமியில் கடல், ஆறு, குளம் முதலியவற்றிலிருப்பினும், நிலத்தின் பரந்த பரப்பின் எங்கெங்கும் வளமும், செழுமையும் தழைத்தோங்கி எவ்வுயிர்கட்கும் உதவ மழையாக வான்நின்று வழங்கி எங்கும் பரவச்செய்யப்படுகின்றதாம். வான்வெளியில் வாயுசக்தியும் பூதாக்கினியும் என்றும் நிறைந்து விளங்கிக்கொண்டிருப்பதால், வான்முகிலோடு அக்காலாங்கி சக்தியும் சேர்ந்து இடிகளையும் மின்னல்களையும் தோற்றுவித்து, எங்கும் மழை பொழியச் செய் கின்றதாம். கடவுள் கருணைக்கு இந்த வான் பெயலே அடையா ளமாகும். இதனால்தான் திருக்குறளில் கடவுள் வாழ்த்துக்கு அடுத்து, வான்சிறப்பு என்ற தலைப்புடை அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது.

மேலும், முத்தொழில் மூவரில், காத்தற் கடவுளைத் திருமால் எனவும், ஆன்ம சொரூபம் எனவும் கொள்ளப்படுவதால் உண்மை விளங்கும். திருமாலே நீலமேக முகில் வண்ணன் தானே.

(14)

743. இன்புறு சத்தியா லெழின்மழை பொழிவித்
744. தன்புறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உயிர்களுக்கு ஜீவனும் தேகமும் போகப் பொருள் களும், உண்மைத் தேவை அறிந்து தேவையானவை எல்லாம், தடையுறாது வழங்கி வாழ்விக்கின்ற சக்தி கடவுளின் அருட் பெருஞ்சக்தியேயாம். அந்த அருட்சக்தியைத்தான் இன்புறு

என்கின்றார். அன்பினால் அடையப்பெறுகின்ற சக்தி என்பதே பொருள். அன்பு உள்ளத்துணர்வில் தோற்றிச் செயலில் வெளிப்பட்டு விளங்கும்போதுதான் பிறர்க்கு அதனால் வேண்டி யவை பெற்று இன்புற்றிருக்க முடியும்.

கடவுள் இன்பமே வடிவானவர் அல்லது சச்சிதானந்த சொரூபி என்று கூறப்படுகின்றார். இன்பம் என்பது உணர்வு மயமான மகிழ்ச்சி; அதற்கேது தூல வடிவம்? உண்மை யாதெனில், மனித உருவில் உள்ளத்தில் அன்பு தோன்றி, தயவு அல்லது அருட்செயலைத் தூண்டிவிட, அது பிறர்க்கு உதவு கின்றது. அதனால் பெற்றவர்க்கு இன்பமுண்டாகின்றபோது, கொடுத்தவனுக்கும் உள்ளத்தில் அருளின்பம் தோன்றுகின்றது. இந்த அருளின்பநிறைவே இறை இன்பமாக உணர்கின்றான் மனிதன். ஆக, இவ்விறையனுபவமுற்றவன்தானே இறைமய மாகிச் சச்சிதானந்தமாய்த் திகழ்கின்றான். இவன் மூலமாய்த் தான் கடவுள் சச்சிதானந்தமானவர், ஆனந்த வடிவினர், இன்ப உருவினர் என்று மொழியப்படுவதாம். கடவுளின் இந்த இன்பம் தான் எழில் மழையாகப் பொழிகின்றது. எழில் மழை என்றது ஏனெனில், வானத்தில் தோன்றி விளங்கும் முகிற்கூட்டங்களும், அவற்றின் வண்ண ஓட்டங்களும், மலைகளில் மஞ்சு தவழ்கின்ற அழகும், மழை பொழிகின்ற பொலிவும் காண்போர் உள்ளத்தில் இன்ப உணர்வு தோன்றுவதோடு, அம்மழையால் புறத்தும் எழில் தோற்றங்களும் செழுமையும் வளமும், உணவுப்பொருள் களும் பெற்று இன்புறமுடிகின்றதாம். மழை முகிலை எழிலி என்கின்றனர். அக மன்னு இறை எழிற் சக்தியே புறத்தில் பொங்கெழில் எழிலியாக விளங்கி அமுதமழை பொழிந்து ஆனந்தம் விளைவிக்கின்றதாம்.

(15)

745. எண்ணியற் சத்தியா லெல்லா வுலகினும்
746. அண்ணுயிர் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) எண்ணற்ற உலகம் எல்லாவற்றிலும், எண்ணி அறிய முடியாத எத்தனையோ கோடி உயிர்கள் எப்படி எப்படியோ எல்லாம் தோற்றி வாழ்ந்துவருகின்றன. இவை களை எல்லாம் காத்தருள்கின்ற கடவுட்பெருஞ்சக்தியின்

பேராற்றல் என்னென்பது! இந்த அருட்பேராற்றலைத்தான் எண்ணியற் சத்தி என்கின்றார். இதனை எண்ணியற் சத்தி என்பது ஏனெனில், சாதாரண பகுத்தறிவுக்கு விளங்காத, அருள் ஞான உணர்வுக்கே விளங்கும் அருட்சக்தி என்பதாம். மேலும், எண்ணின் இயல் யாதெனின், ஒன்று முதலாய எண்கள் உகர இறுதி கொண்டு திகழ்வன. அந்த உகரமே ஐந்தாம் உயர்சக்தி எழுத்தாய், உயிர்வரிசையில் ஐந்தாவது எழுத்தாய் இருந்து, கடவுளின் அருள் என்னும் ஐந்தாம் தொழிற்செயலைச் சுட்டுவது ஆம். ஆண்டவர் இந்த அருளால்தான் மற்ற ஆக்க லாதி தொழில்களை எல்லாம் புரிகின்றார்.

அருள் என்றால், எவ்வுயிர்க்கும் இரங்கித் தன் ஈகைக் குணத்தால் வேண்டுவன வழங்குதல் என்பது பொதுவான பொருளாகும். நமது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரோ தனிப் பெருங்கருணை யுடையவர், தன் அருளாலேயே யாவையும் புரிந்து கொண்டுள்ளவர். எவ்வுயிர்க்கும் எப்பொருளுக்கும் உள்ளும் புறமும் நிரம்பியுள்ளவர். உள்ளும் புறமும் இவரே நிரம்பியுள்ளார் எனில், இவரேதான் எவருமாய், எவையுமாய் விளங்குகின்றார் என்பது உண்மையாம். இதனால், இவரை அல்லாது, நாமோ பிறரோ, பிற பொருளோ இவரல்லாது வேறாய் இல்லையாம். ஆகையால், இந்த ஒன்றான கடவுள் எவ் வுயிருமாய்த் தோன்றி நின்று, அப்படிச் சேர்ந்துள்ள உயிரை (அண்ணுயிரை) அழிவுறாது காத்து வந்து தன் உண்மையையே வெளிப்படுத்திக் கொள்ளுகின்றார். இப்படி வெளிப்பட்டு விளங்கும் நிலையே, மனிதன் பெறுகின்ற அருள் அனுபவ இன்ப நிலையாம்.

(16)

747. அண்டப் புறப்புற அமுதம் பொழிந்துயிர்
748. அண்டுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அமுதம் என்பது, உயிர், உடல், உலகு ஆகிய வற்றை நலனுறக் காத்து வளமுறச் செய்யும் பொருளாகவோ சக்தியாகவோ கொள்ளப்படுகின்றதாம். இந்த அமுதசக்திப் பொருள் ஓர் ஒரு நிலையில், ஓர் ஓர் அம்சமாகத் திகழ்ந்து பயன் விளைவிக்கின்றதாம். அதாவது, அண்டத்தும், பிண்டத்தும்

அக முதலாகிய நான்கு நான்கு இடங்களிலும் வேறு வேறு வண்ணமாய் விளங்கி நின்று வாழ்வு அளிக்கின்றதென அறியப் படும். இங்கு, அண்டப் புறப்புறம் ஆகிய உடுமண்டலம் என்னும் நட்சத்திரங்களின் நிலைகளிலிருந்து அவற்றின் ஒளிமய மான அமுதசக்தியைச் சொரிந்து நமது உலகுயிர்ப் பொருள் களைப் பக்குவமுறும் பொருட்டு என்றென்றும் காவல் புரிவிக் கின்றார் நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.

அகண்டவெளியில் கடவுட்சக்தி அருள்ஒளிமயமாய் நிரம் பியே எப்பொழுதும் இருக்கின்றது. அந்த அருள் ஒளியி லிருந்தே முச்சுடரும் தோன்றி எச்சகமும் விளங்க விளங்கு கின்றனவாம். அந்தக் கடவுள் அருள் ஒளியே அருள் அமுதமய மானது. ஆனால் அந்த அருள்ஒளியின் அனுபவப்பயன், அருள் ஞான மனிதனின் உள்ளத்தில் வெளிப்பட்டு, அனக ஆனந்த வாழ்வருளுகின்றதே யில்லையாம். மற்ற அண்டப் புறப்புறத்தும், புறத்தும், அகப்புறத்தும், அகத்தும் காட்சிப்புலனாம் ஜோதிமய மாய் விளங்கிக் காத்து வருகின்றது. அதுபோல் பிண்ட தேகத்திலே புறப்புற முதலிய நான்கிடத்தும் அறிவு ஒளிமய மாய்த் தோற்றியுள்ளதாம். இந்த எட்டிடத்துமுள்ள ஒளியமுதம் விதிமுறைக்கு கட்டுப்பட்டு ஆன்மாக்களுக்கு பல பிறப்பிடை உதவிக்கொண்டிருக்கின்றது. இதற்குமேல் அருள் அனுபவ நிலையில்தான் அருள்ஒளி யமுதம் வெளியாகி விதிநிலை கடந்து நித்தியமாய் வாழ அருள்பாலிக்கின்றதாம்.

(17)

749. தேவரை எல்லாந் திகழ்புற வமுதளித்
750. தாவகை காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆன்மாக்களுக்குக் கன்ம உடல் வழங்கப்பட்டு, அவை மேனிலை அடைய, அண்டப் புறப்புற உடுஜோதி அமு தால் உதவப்படுகின்றது. இக்குறிப்பை முன்னிரு அடிகளில் கண்டோம். கன்மதேகம் கழன்ற, சூக்கும உடல் கொண்ட ஆன்மாக்கள் ஆவிவடிவமாய் இருப்பவையாம். இச் சூக்கும உரு, நல்வினைப்பயனால் தோற்றியதெனின் சுத்த ஆவி ஒளி வடி வாய்த் தோன்றும், தீவினையால் தோற்றும் அசுத்த ஆவி உருவம்

இருளில் உழன்றுகொண்டிருக்கும். ஒளிவண்ண தேகிகளைத் தேவர் என்றும், இருள்வாசிகளை நரகர் என்றும் கூறுவர். இந்த தேவ ஆவி ரூபிகளுக்குத் தூலஉடல் இல்லாததால் இவ்வுலக உணவு தேவையில்லை. ஆகையால், இத்தேவர்கட்கு மதி ஒளியே அமுதமாக உள்ளதாம். இச்சந்திரிகை அண்டப்புற அமுதமாய் இருக்கின்றது.

இகவாழ்வில் அறஞ்செய்து நலம் பெற்று, நற்றவப்பயனால், புறவுடல் நீங்கிய ஆன்மாவுக்கு தேவதேகம் ஏற்பட்டு பலகால் விளங்கும். அவர்களுக்கு உணவு மதியொளியாம் தேவாமிர்தம் என்ப. அந்த வாழ்வல்லா வாழ்வில் குறிப்பிட்ட காலம் வரை இருந்துவிட்டு அருள் அனுபவம் பெறவே மறுபடியும் இவ்வுலகில் வந்து மக்களாய்ப் பிறக்கின்றனர். நரகவாசிகளும் இருளில் இடர்பட்டுக்கொண்டு, அங்கு கிடைக்கப்பெறும் காரொளியை உண்டு கழித்து, மேனிலைக்கு மனிதப்பிறவிக்கு வருகின்றனர்.

மக்களே நல்வினை தீவினைப் பயனால் தேவர்களாயும், நரகர் களாயும் ஆகி மறுபடியுந் திருவருளால் மனிதர்களாய் வரு கின்றனர். இதனால் மக்கள், தேவர், நரகர், உயர்திணை யாகவே குறிக்கப்படுகின்றனர். இங்கு, மக்களின் ஒரு பிரிவு ஆம் தேவரை புறமாகிய மதியமுதால் காத்தலைக் குறித்துள்ள தால், அத்தேவ நிலைக்கு மாறான நரகவாசிகளையும் அவர்களின் இருள்மய காரொளி நச்சமுத உண்டியும் குறிக்க நேர்ந்தது.

(18)

751. அகப்புற வமுதளித் தைவரா திகளை
752. அகப்படக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அண்டவெளியில் அகப்புற நிலை சூரியனாக இருக் கின்றது. பிண்ட உடம்பில் அகப்புறம் ஜீவனாகிய உயிராம். முன் சூக்கும ஒளியுருவினரைப் பொதுவாகத் தேவர்கள் என்று கொண்டோம். அந்த ஆன்மாக்களில் கடுந்தவ முயற்சியால், தேவபதவியில் மேலான, பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் நிலைபெற்றவர்களை ஐவர் என்பர். இவர்களை யொத்த மூர்த்திகள் பலர் உளராம். இவர் களுக்கும் இவர்களின் சக்தி சத்தர்களுக்கும் ஞாயிற்றுச் சோதி

சக்தியே அமுதமாக இருந்து ஒளியுருவங்களைத் தந்து வாழ் விப்பதாம்.

தேவப்பதி பெறுவது கடினம்தான். ஆயினும் அதனால் அருட்பெரும்பதியின் நிறையருள் உண்மையைக் காணவும் அடை யவும் முடியாது. தேவர்களுக்குத்தாம் தம் முயற்சியால் பெறற்கரிய பேறு பெற்றுவிட்டதாகவும், அந்நிலையிலிருந்து பன்னெடுங்காலம் தாமே முத்தொழிலும் ஐந்தொழிலும் புரிந்து உலகத்தை ஆள்கின்றவர்களாகவும் கருதி அகங்காரமுள்ளவர் களாய்த் திகழ்கின்றனர். இவர்களுக்கு ஆணவ மலம், அதிகார மலமாய் இருந்துகொண்டிருக்கின்றது. அந்த மலம் அந்தப் பிறப்பில் எந்த வகையிலும் நீங்காது. ஆகையால் அத்தோடு அந்த நெடுங்காலமும் பலவகையிலும் தொல்லைப்பட்டுக் கொண்டே போராடிக்கொண்டேதான் இருக்கவேண்டியுள்ள தாம். முடிவில் இங்கு இந்நிலவுலகில் வந்து மக்களாய் உதித்து அருள்ஞானமுற்று, அருளமுதம் பெற்று அருளின்ப வாழ்வில் நிலவ வேண்டியுள்ளதாம்.

ஆகவே இந்த ஐவராதிகளை எல்லாம் நம் அருட்பெரும்பதி, அவர்களுக்கு, அவர்களின் நெடிய ஆயுட்கால முழுவதும் வேண்டு வனவெல்லாம் வழங்கிப் பக்குவப்படுத்தி வரவேண்டியுள்ளதாம். இப்படி எத்தனையோ கோடி ஐவராதிகளைப் படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும், அருளியும் வருகின்ற அருட் பெருஞ்ஜோதிபதியின் காத்தருள் திறன் என்னே!

(19)

753. தருமக வமுதாற் சத்திசத் தர்களை
754. அருளினிற் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அகம் - பிண்டத்தில் ஆன்மாவாக இருக்கின்றது. அண்டத்தில் விண்ணிறைந்த பரஞ்ஜோதியாய் இருக்கின்றது. இந்த ஜோதிப் பரம்பொருளை, தீ பூதப் பொருள் போற் கருதி வந்தனர் முன்னோர். ஆகையால் கடவுளைப் பரஞ்ஜோதி என்றும், பெருஞ்ஜோதி என்றும், இறையொளி என்றும், ஞான சூரியன் என்றும், அருட்ஜோதி என்றும் கூடக் கூறிவைத்தனர். இக்கூற்றெல்லாம், அந்தக் கடவுட் ஜோதிக்கு வேறாய் இருந்து

தான் யூகித்து, உரை செய்யப்பட்டதென்று அறிவோம். ஆகை யால்தான் அவர்கள் கண்ட அருட்ஜோதியும், அவ்வொளியின் ஏகதேச அருட்குண ஆற்றலைக் குறித்ததன்றி நாம் இன்று கண் டுள்ள அருட்பெருஞ்ஜோதியின் விளக்கம் தந்ததல்ல என்று அறிகின்றோம்.

ஆன்ம இயற்கை தயவேயாக இருக்கின்றது. ஆதலின் அந்தத் தயவுடைய ஆன்ம சக்தியைத் தயாஅமுதம் அல்லது அருள் அமுதம் என்னலே பொருத்தமானதாம். பலவாகிய சக்திகளையும் அச்சக்திகளைப் பெற்றுள்ள சத்தர்களையும் தன் பேரருளாற் காத்து, பக்குவப்படுத்தி, மேனிலைக்கு ஏற்றிக் கொண்டுள்ளார் நம் அருட்ஜோதி ஆண்டவர்.

இங்கு தரும் அக அமுதம் என்றதில் ஒரு சிறந்த குறிப்பு பொதிந்து கிடக்கின்றதாம். அகஅ-முதல்தரும், அல்லது அக அமுதம் தரும் என்று கொள்ளுவதில் சிறப்பு ஒன்றும் இல்லை. தருகைக் குணத்தாலே, தயவுகொண்டு பிறர்க்குப் புரியும் ஈகை யாலே, ஒருவனுக்கு உள்ளத்திலே இந்த அருளமுதம் கிடைப் பதாய் இருக்கின்றது. மற்றபடி தருகையில்லாத தயவில்லாத எந்தச் செயலாலும் திருவருளமுதம் பெறமுடியாது என்ற குறிப்பை யுணர்த்துவதாய்க் கொண்டால், இத் தரும் என்பதின் சிறப்பு நன்கு விளங்கும்.

(20)

755. காலமு நியதியுங் காட்டியெவ் வுயிரையும்
756. ஆலுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆன்மாக்கள் தேகங்களைப் பெற்று வாழ்ந்து, வாழ்ந்துதான் பக்குவமுற வேண்டியுள்ளனவாம். இவ்வாழ்வுக் காகச் சில நியதி முறை வகுக்கப்பட்டுள்ளன. அந்த வாழ்வுக்கு அளவுகுறித்து எண்ணிக்கையும், ஆகும் நேரத்தையும் தோற்றுவித்துள்ளார் நம் பதி. காலதத்துவம் எவ்வளவு மேலான உண்மையைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது! இக்காலதத்துவம் அருட்பெருஞ்சக்தியால், சிருஷ்டித் தொடக்க முதலே விதிக்கப் பட்டு விளங்குகின்றதாம். விண்ணிற் கலந்த வாயுக் (கால்)காரண மாகத்தான் அணுமுதல் அண்டம் ஈறாக யாவும் இயங்கிச் சுழன்று கொண்டே சுற்றிச் சுற்றி வந்துகொண்டேயிருக்கின்றன. இச்

சுழற்சியால்தான் நம் உலகில் பகலும் இரவும் உண்டாகின்றன. இந்தப் பகலிரவு கூடியதையே நாள் என்றும், அவை இரண்டும் சரிபாதியாகக் கொண்டும், அவற்றையே மணி, நிமிடம், செக்கண்டு எனவும் அல்லது நாழிகை, விநாடி, தற்பரை என்றும் கணக்கிட்டுக் கொண்டுள்ளனர். நாட்களை வாரங்க ளாகவும், மாதங்களாகவும், வருடங்களாகவும், யுகங்களாகவும் கணக்கிடுகின்றனர். இப்படி வகுக்கப்பட்டு வழங்கி வருகின்ற காலக்கணக்கால் ஓர் ஆன்மாவின், முன்னேற்றமும், பக்குவமும் அனுபவங்களும் எப்படி எப்படி எவ்வளவு காலத்தில் நடைபெறு கின்றன என்பதையும், இப் பிரபஞ்சத்தில் ஒவ்வொரு படைப்பும் எவ்வளவு காலம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதுவும் அறியலாகின்றனவாம்.

நியதி என்பது விதிமுறையாகும். பிறவிக்குக் காரணம் வினை என்பர். ஆனால், ஆதியான முதற்படைப்புக்குக் காரணம் எந்த வினை? எது காரணம்? கடவுளுக்கு இயற்கை அவர்தம் அருள் விளக்கமே. சூரியனுக்கு ஒளி இயற்கையாய் இருப்பதுபோல. கடவுளே தன் அருள்விளக்கத்தால் யாவுமாய், ஐஞ்சக்தி வெளி யீடா யெங்கும் விரியும்போது எல்லாம் தோன்றிப் பின் நியதி முறைப்படி விருத்தியும் விளைவும் ஆகிக்கொண்டுள்ளனவாம். விரிந்த விளக்கத்தினால் ஒவ்வொரு ஆற்றலாக வெளிப்பட்டுக் கொண்டேயுள்ளது. திருவருளே காவலாக இருந்து முடிவில் அவ்வருள் தன்னை முற்றும் வெளியாக்கிக்கொண்டு விளங்கு கின்றது நிறைமனிதனாக.

(21)

757. விச்சையை யிச்சையை விளைவித் துயிர்களை

758. அச்சறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந்த உலகத்தில் வாழ வந்துள்ள ஆன்மாக் களுக்குப் பசியும், துயிலும், விழிப்பும், இச்சையும் இயற்கையில் உண்டாகின்றன. இயற்கையிற் செயற்கையாய் அவாவும், வெகுளியும், மயக்கமும் சேரப் பிணிகளும், துன்பமும் அழிவும் நேருகின்றனவாம். எல்லாவற்றிற்கும் பசியே அடிப்படைக் காரணமாய் இருந்து யாவையும் விளைவிக்கின்றன. ஆனால், அதே பசி என்ற ஒன்று இல்லையாயின், நன் முயற்சி செய்யவும்,

பிறர்க்கு அன்பும் பணிவும் காட்டவும், அறிவும் இன்பமும் அடையவும் ஏதுவில்லாமற் போம். வாழ்வே பயனற்றதாகும். மூடமும் அச்சமும் தோற்றி அழிவையே உண்டுபண்ணும்.

அப்படி உயிர்கள் வீணில் அழிந்து ஒழிந்துபோகாது காக்கவே, இப்படி விச்சை (அறிவை)யும், இச்சையும் அந்த உயிர்களிடத்தில் தோற்றுவித்து உலகியல் வாழ்வில் அழுந்தி எழுந்தும், அனுபவித்துத் தேறியும் மேலேறச் செய்கின்றார் அருட்பதி. முடிவில் உயிர்களை (ஆன்மாக்களை)க் காத்துப் பக்குவப் படுத்தி அச்சற (உடலை அழியா திருக்கும்படி)ச் செய்து விளங்க வைக்கின்றார்.

(22)

759. போகமுங் களிப்பும் பொருந்துவித் துயிர்களை
760. ஆகமுட் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) கருணைக் கடவுள் ஆன்மாக்களை ஜீவ தேகங்களில் வருவித்துள்ளார். இத்தேகத்தில் ஜீவ விளக்கம் எங்கும் நிறைந் திருந்த போதிலும், சிறப்பாக இவ்வுடலில் இதயத்திலிருந்து உயிர்ப்பியக்க விளக்கம் செய்துகொண்டும், சிரத்தின் இதய மாகிய (நடு) விடத்திலிருந்து அருள்ஞான அனுபவம் வழங்கியும் கொண்டுள்ளார். ஆகம் என்ற சொல்லால் பொதுவாகத் தேகமும், நெஞ்சும் சிறப்பு வகையால் ஆன்ம வடிவமும் குறிப் பதாம். இந்த ஆகத்தின் உள்ளிருந்துதான், தன் தனிப்பெருந் தயவால், ஜீவர்களுக்கு வேண்டிய எல்லாப் போகப் பொருட் களையும் அவ்வப்போது தடைபடாது வழங்கி வாழ்வித்து, உண்ணின்று உவகை வளர்ந்தோங்கச் செய்து கொண்டுள்ளார் நம் பதி. அருந்தல் பொருந்தல்களை மருந்தென வழங்கி ஆருயிர் களைக் காத்தருள்கின்றார் நமது அண்ணலார்.

(23)

761. கலையறி வளித்துக் களிப்பினி லுயிரெலாம்
762. அலைவறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆண்டவர் மனிதனுக்குக் கலையறிவு வழங்கியுள் ளதை, அருள் உணர்வோடு பயன்படுத்திக்கொண்டு ஆனந்தமுற

வேண்டுமென்பது திருவுள்ளம். ஆனால் அத் திருவுளமறியா மருள் மன மாந்தர்கள், கலையறிவால், பொருளீட்டியும், பொழுது ஓட்டியும், புலனின்பிற் புக்கழுந்தியும், நிலைகெட்டு அலைவுற்று அழிந்துபோய்க் கொண்டிருக்கின்றனர். மக்கள் அல்லாத பிற உயிரினங்களுக்கு, இயற்கைச் சுபாவமாகவே ஒரு சில கலை யுணர்வும், செயல் ஆற்றலும் வழங்கி அவற்றால் அவ் வுயிரினங் கள் களிப்பொடு வாழ்ந்தும், பல்கிப் பெருகிப் பரம்பரையாக உலகிடை விளங்கிடவும் காண்கின்றோம். கடவுள் அவற்றை எல்லாம் நியதிமுறைப்படி காத்தருளுகின்றார்.

உயர் பிறப்பாகிய மக்களினத்திற்குச் சிறப்பு வகையால், புலனின்பத்திற்கும் மனோகரண மகிழ்விற்கும், உயிர் இன்ப விளக் கத்திற்கும் மேலாக ஆன்ம இன்ப வாழ்வுக்கும் துணையாகக் கலை அறிவும் அருள் ஞானமும் வழங்கி அவை செயல்பட நிலைக்களனாக இவ்வகண்ட பிரபஞ்சத்தை அனந்தங்கோடி பொருள்களோடு, சக்திகளோடு படைத்து வழங்கிக் காத்தருளுகின்றார் நம் கடவுளர்.

கலை என்பதற்கு மெய்ப்பொருள், 'ஐ'யாகிய கடவுள் உண்மை யாம் அருளை அகத்திருந்து கல்லி, வெளிப்படுத்திக்கொண்டு அதுவாகி வாழ்தலேயாம்.

(24)

763. விடய நிகழ்ச்சியான் மிகுமுயிர் அனைத்தையும்
764. அடைவுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உயிரினம் ஒவ்வொரு தினமும் புதிதுபுதிதாய்த் தோன்றுகின்றன, அழிகின்றன. எல்லா உயிர்களுக்கும் அகத் திருந்து பிறப்பிறப்பை உண்டுபண்ணுவது நம் பதியின் நியதிச் செயலேயாகும். இதில், உயிரினப் பெருக்கத்திற்கு, விஷய அல்லது விடய இச்சை (புலனின்ப வேட்கை)யை மேலும் மேலும் அவ்வுயிர்களிடத்துத் தோற்றுவித்து, இணைகூட்டி அவற்றின் புத்தினங்கள் நிறைய நிறைய வெளிப்படுத்தப்படு கின்றனவாம். இவ்வினப் பெருக்கக் காரியப்பாடாகிய விஷய சுகத்தைச் சிறு இன்பமாக உலகம் கருதுகின்றது. இதில் பேரிச்சை வளர்ந்துள்ளதாலேதான் மக்களினம் கட்டுக்கடங் காமல் தோன்றிக்கொண்டும், சிதைந்து கொண்டும், மிகு நோய்ப்

பட்டுத் துன்புற்றுக்கொண்டும் இருக்கின்றதாம். மற்ற உயிர் வர்க்கம் நியதிக்கு மாறுபாடாகப் போகாமல் இருக்கின்றதால், அவற்றில் அளவுக்கு மிஞ்சுதல் என்பது இல்லையாம். நியதிப் படி பெருக்கமும் அழிவும் சமநிலை அடைந்துகொண்டேயுள்ளன.

கடவுள் எல்லா உயிர்களையும் காத்து மேனிலைக்கு ஏற்றி இன்புறச் செய்யத்தான் உள்ளார். கீழான பிறவிகளை எல் லாம் தாண்டி இம்மனிதப்பிறப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகை யால் மனிதன் தன் பிறப்பின் குறிக்கோள் பேரின்பப் பேறு என் பதை யுணர்ந்து அதற்கான முறையில், அன்பு ஒழுக்கம் பூண்டு, விஷய சுகத்தில் மிகுநாட்டம் கொள்ளாது அடக்கமான வாழ்வு மேற்கொள்ள வேண்டும். சத் விசாரமும் பரோபகாரமும் கடைப் பிடித்து வாழ்ந்தால் எல்லாப் பிரச்னையும் நன்முறையில் தீரும், நலம் ஓங்கும், கடவுள் ஆணையாம்.

(25)

765. துன்பளித் தாங்கே சுகமளித் துயிர்களை
766. அன்புறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உயிர்கள் இன்பமே அடைய விரும்புகின்றன. துன்பத்தை எவ்வுயிரும் வெறுக்கின்றன. துன்பத்தையொழித்து இன்பத்தைப் பெறுவதே எல்லோருடைய நோக்கமுமாம். சுகானுபவம் அல்லது இன்பப் பேறு ஆரம்பத்திலேயே உயிர் களுக்குத் தோன்றிவிடாது. அவ்வின்பானுபவம் உண்டாகுமுன் அறிவு வளர்ச்சி பெற்று, சட மூட உலக விஷய சுக துக்கங்களில் பற்று நீங்கி அருள்நாட்டம் பெறவேண்டியுள்ளதாம். இதற் காகவே அவ்வுயிர்களுக்குப் பலப்பலவாகிய பிறப்புத் தேகங் களும், போகப் பொருள்களும் வழங்கப்படுகின்றன. அவை களைக்கொண்டு வாழ்ந்துவரும்போது, இச்சையும், அன்பின்மையும் காரணமாகப் பலவேறு அவத்தையும், துன்பமும் பட்டுபட்டுப் பின் சுகமுற வேண்டி, இச்சை யொழித்து அன்பை வளர்க்க உட்படுகின்றனர் அறிவுடையோர். இவ் அன்பால் இன்பம் எய்தவே நம்மைக் காத்தருளுகின்றார் நமது ஆண்டவர்.

(26)

767. கரணேந் தியத்தாற் களிப்புற வுயிர்களை
768. அரணேர்ந் தளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஜீவர்களுக்கு இருவகையான இன்பானுபவம் ஏற் படுகின்றனவாம். ஒன்று கரணமாகிய மன எண்ணத்தின் வழி; மற்றொன்று, கண்முதலான ஐம்பொறி வாயிலாக. ஆகிய இரு வழியான் இன்பம் தோன்றுவது ஒவ்வொருவருக்கும் இயல்பே. மனிதனில் மனமாய் விளைந்துள்ள உணர்வு மற்ற உயிர்களில் அவற்றிற்குரிய இயல்புணர்ச்சி (சுபாவமாக) இருக்கின்றதால், அவ்வழி இன்பம் உண்டாதல் அறிவோம்.

மனோவாக்கு தேகமாகிய புறக் கரணங்களாலும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அகக் கரணங்களாலும், சில பல சடங்குச் செயல்களாலும் மனித வர்க்கத்திற்குப் புலபோக அனுபோகமுண்டாகிறது. இவ்வகை வாழ்வில் நேருகின்ற துன்பம் செய்யும் சிறு தடைகளை விலக்கிக்கொண்டு இன்பம் துய்க்க முயலுகின்றன எல்லாவுயிர்களும். இங்ஙனம் முயலு கின்ற உயிர்களைத் தனித்தனி ஒவ்வொன்றையும் சூழ்ந்து அரண் செய்து நின்று காத்தருளுகின்றார் நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். அரண் + நேர்ந்து = அரணேர்ந்து (பாதுகாப்பு செய்து.)

(27)

769. எத்தகை எவ்வுயி ரெண்ணின வவ்வுயிர்க்
770. கத்தகை யளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) வேண்டுவார் வேண்டுவதே ஈவோனாகிய அருளாளன், எவ்வுயிரின் உள்ளும் புறமும் உறைகின்ற உண்மையை உளக்கண் கொண்டு உணர்கின்றோம் நாம். உயிர் கள்தோறும் உண்ணின்று வேண்டச்செய்கின்றதும், புறமிருந்து வழங்குவிப்பதும் ஒரு நியதிமுறையில் நடைபெற்றுவருகின்றன. அபக்குவ வசத்தால், வேண்டச் செய்வதை உடன் அளிக்காது தடைசெய்வதும், வேண்டாததை வலிய ஈந்து வருத்துவதும் உயிர்களைப் பண்படுத்தற்கே என்று அறிதல் வேண்டும். ஓர் உயிர் இன்பானுபவ நிலை எய்த, உண்மையில் எது தேவையோ

அதனைத்தான் ஆண்டவர் வழங்கச்செய்து கொண்டுள்ளார். இந்த உண்மையை யுணர்ந்துகொள்ளாது விருப்பு வெறுப்பு காரணமாக மனிதன் தனக்கு உண்மைத் தேவை இன்னது எனத் தெரிந்து கொள்ளாமல் வேறான ஒன்றைக் கேட்கும்போதும், காலம், இடம், சூழ்நிலை யுணராது அவசரப்பட்டு வேண்டும் போதும் வேண்டினது தடைபட்டுப் போகின்றது அல்லது தாமத மாகிக் கிடைக்கின்றது. இவை யாவும் அகமுடையானின் அருட் பெருஞ்செயலே யாம்.

ஓர் உயிரின் எண்ணம் என்பது அதன் உள்விள்ளவு. ஆன் மாவின் அகத்தில் அருட்பெருங்கடவுட் சக்தி இருக்கிறது. அதன் கூறு சிறிது சிறிதாக வெளிப்பட்டு உயிரில் உணர்வாக, அதன் உண்மை எண்ணமாக விளங்குவது. அந்த எண்ணத் திற்குத் தக அல்லது பொருந்தவே தேவையானவற்றைத் திருவருள் வரவழைத்து வழங்குகின்றது. அவையே அவ்வுயிரின் உண்மைத்தேவை. ஆதலின் அவற்றைத்தான் அவ்வுயிர்க்கு வழங்குவித்தல் நியதியாக இருக்கின்றது. மனிதன் இவ்வுண்மை யைப் புரிந்து கொள்ளாமல்தான், தேவையற்றதைக் கேட்டும், தேவையானதை மறுத்தும் வீணில் அவத்தைப்படுகின்றான்.

(28)

771. எப்படி எவ்வுயி ரெண்ணின வவ்வுயிர்க்
772. கப்படி யளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) முன்னிரண்டு அடிகளின் கருத்தே மீண்டும் ஒரு முறை இப்படி வழங்கப்பட்டிருப்பதின் நோக்கம், அக் கருத்தை வலியுறுத்தற்கே யாம். அதில், தகை என்ற சொல் வந்துள்ளது. அதற்குப் பதில் இதில் படி என்ற வார்த்தை அமைக்கப்பட் டுள்ளது. தகை, படி, வண்ணம், விதம், ஆறு, வகை முதலிய சொற்கள் ஒரு பொருட் பன்மொழியேயாம். எனினும் இவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரண விளக்கம் ஓர்ந்து கொள்ளப் படும். அக் காரண விளக்கம் அகவுண்மைத் தொடர்பு கொண்ட ஒன்றாக உள்ளதால், அவ்வகநிலை நின்றே தெரிந்து தெளிதல் வேண்டும்.

நமது எண்ணம், மெய்யறிவுணர்வு, பரம்பொருளின் ஆகாச நிலை நின்று எழுகின்றதாகும். அந்தப் பரமாகாசம் நம்மில்

தகராகாசமாக இருக்கின்றது. இதனால் அந்த எண்ணத்திற்குத் தகை என்ற சொற்சேர்ப்பால் உண்மைநிலை யுணர்த்துவதாய் அறிந்து தெளியலாம். இதுபோல், படி என்ற சொல் நம் எண்ணம் மலரும் ஆன்மபீடத்தின் உண்மை குறித்து அதன் பகரவடிவிற் பதிந்திருந்து அல்லது படிந்திருந்து எழுகின்ற உண்மையைச் சுட்டுவதாய்க் காணலாகும். மேலும், தகை என்பது வான்பதி யின் உயர்நிலை நின்று எழும் எண்ணத்தையும் படி என்பது ஆன்மாவின் கண்ணின்று வரும் எண்ணத்தையும் குறிப்பனவாய்க் கொள்ளலாகும்.

(29)

773. ஏங்கா துயிர்த்திரள் எங்கெங் கிருந்தன
774. ஆங்காங் களித்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உலகில் எங்கெங்கும் உயிர் வர்க்கங்கள் தோன்றி விளங்குகின்றன. ஆனால், நிலவுலகமல்லாத சிலவுலகமான கோட் கோளங்களில் உயிர்கள் இல்லை எனத் தோன்றுகின்றன. உண் மையில், அங்கெல்லாம் உயிர்கள் வெளிப்படாமல் அபக்குவ நிலையி லிருக்கின்றன. சட பூத அணுவிலும் மறைந்து கிடக்கின்றது உயிர்ச்சக்தி. எல்லா உயிர்களுக்கும் உயர்வளிக்கும் வண்ணம் தான், நம் கருணாநிதி அங்கங்கிருந்து வேண்டுவனவெல்லாம் தடை படாது வழங்கி வாழ்வித்துக் கொண்டுள்ளார். அப்படி ஜீவ கோடிகளை எல்லாங் காத்தருளாவிட்டால் நம் பதியைத் தனிப் பெருங்கருணையர் என்று எப்படிச் சொல்ல முடியும்? கடவுட் கருணை எவ்வுயிர்க்கும் உண்டு எனினும், உயிரும் அறிவும் வெளிப் படாதவற்றில் அக்கருணைச்செயல் குறைந்தும், உயிர் வெளிப் பட்டும் அறிவு ஏகதேசம் பெற்றுள்ள உயிர்களிடத்தில் ஓரளவு கருணை வெளிப்பட்டும், உயர் பிறப்பாகிய மக்களிடத்தில் விசேட கருணை வெளியாகியும் விளங்குகின்றதாம். ஆண்டவர் எவ் வுயிரையும் மேனிலைக்குக் கொண்டுவந்து இம் மனிதனில் தன் இயல் உண்மை முழுவதையுமே வெள்ளிப்படுத்த வுள்ளார். இதனால் மனிதன் கடவுள் திருவுளமறிந்து அருள்வளர் பெருநெறி யில் ஒழுகவேண்டும். இவன் பொதுவாக எவ்வுயிரிடத்தும் இரக்கமுடையவனாய் இருந்துகொண்டு தன்னின மக்களுக்கு உயிர் விளக்க அறிவு விளக்கச் செயல் புரிதல் வேண்டும்.

ஆன்மாக்கள் எங்கு எப்படியிருந்தாலும், அங்கெல்லாம் நம் பதியே அருளால் தங்கி, உயிர்களுக்கு ஏக்கமுண்டாகாதிருக்க உதவுகின்றார். ஆனால், மக்கள் அருள்ஞானமின்மையால் வேண்டத்தகாதன வேண்டிக் கிடைக்கப்பெறாமல் ஏங்குவது அறியாமையே. இது மனத்தில் நிகழும் ஏக்கம், மாயா காரியச் செயலாம். ஆனால் கடவுள் ஆன்மாவை மேன்மேலும், ஏங்காத ஓங்கச் செய்யவே ஒவ்வொரு பிறப்பிலும் காப்பாற்றி வருகின்றார் இச்செயல் அருள்நிறை செயலாகும்.

(30)

775. சொல்லுறு மசுத்தத் தொல்லுயிர்க் கவ்வகை
776. அல்லலிற் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) தொல்லுயிர் ஆகிய பழமையான ஜீவர்களுக்கு அல்லது ஆன்மாக்களுக்கு, இயற்கையில் அசுத்த மல முடைத்தா யிருப்பதாலும், மேல் சேர்க்கையால், மாயா கன்ம விளைவால், பலவாகிய துன்பங்கள் தோன்றுகின்றனவாம். இத்துன்பானுப வத்தைத் துய்த்து ஒழித்துத்தான், பண்பட்டு இன்ப நிலை எய்த வேண்டியுள்ளதாம். நம் கருணை வள்ளல், அஞ்ஞானத்திலிருந்து ஞானத்தையும், அசுத்தத்திலிருந்து சுத்தத்தையும், அபக்குவத் திலிருந்து பக்குவத்தையும் அடைவிக்கவே தொன்மையான உயிர் களை அல்லலிலிருந்து காத்து முடிவில் ஆனந்தம் கொள்ளச் செய்கின்றார். அல்லல் என்பது துன்பம் என்ப. அது அகத்தே நிகழுகின்ற (அல்=இருள், அல்லல் மிக்கிருள் அல்லது பேரிருள் ஆகிய மூடத்தால் தோற்றிடும்) தொல்லைசெய் துன்பமாம். உள்ளத்தில் அறியாமையால், புறத்தில் அன்புபுரியாமையால் புறத்திலிருந்தும் தொல்லைகள் வந்து நெருக்கி அல்லற்படச் செய் கின்றனவாம். திருவருள், துன்புறு உயிர்களைக் காத்து அன் பறிவை யீந்து அன்புசெயல் புரியவைத்து இன்பில் தழைக்கச் செய்கின்றார்.

(31)

777. சுத்தமு மசுத்தமுந் தோயுயிர்க் கிருமையின்
778. அத்தகை காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இருமையானது, நன்மை தீமை என்ப. இது அறம், பாவம் என்று சமய சாத்திரங்கள் கூறும். உயிர்கள் இவ்விருவகைச் செயல்களால் வாழ்வில் சுகதுக்கம் அடைகின்றன வாம். இங்கு குறிக்கப்படுகின்ற உயிர்கள், சுத்தமும் அசுத்தமும் தோய்ந்தவையாம். முன்பு அசுத்த உயிர் குறிக்கப்பட்டது. அது அபக்குவ ஆன்மாவாம். இது பக்குவாபக்குவ ஆன்மா எனப்படும். இது முற்றும் இருளாகிய அறியாமையிற் கிடக் கின்றதன்று; ஓரளவு அறிவு பெற்றும், அறியாமை நீங்காமல் மருள்நிலையில் வாழ்ந்து வருகின்ற ஆன்மாவாம். இதுதான் இன்றைய மனிதனின் நிலை. இவன்தான் சுத்தமும் அசுத்தமும் தோய்ந்த வாழ்வில், உழன்று கொண்டிருக்கின்றான். இவனுக்கு ஏற்படுகின்ற சுக துக்கானுபவம் இப் பிறவியிலும் அடுத்த பிறவி யிலும் தொடர்ந்து வருகின்றனவாம். இதனால் இங்கு இருமை என்பதற்கு இம்மை, மறுமை எனக் கொள்ளலாம். இந்த ஆன்மா, என்ன நல்ல அறம் செய்தாலும் சரி, அல்லது என்ன தீய பாவம் புரிந்தாலும் சரி திருவருளால் கைவிடப்படுவதே யில்லை. அந்தந்த அறம் பாவத்திற்குத் தகுந்தாற்போல் வரும் பிறப்பில் இன்ப துன்ப வாழ்வு சூழச் செய்கின்றார் நம் பதி. இந்நியதி முறைப்படி ஒவ்வொரு பிறவியிலும் இன்ப துன்பத் திடை உழன்ற ஆன்மா பக்குவமடைகின்றபோது இவ்விருமை நிலை கடந்து அருட்பெருநிலை அடைகின்றதாம்.

(32)

779. வாய்ந்திடுஞ் சுத்த வகையுயிர்க் கொருமையின்
780. ஆய்ந்துறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பக்குவா பக்குவத்தால், இருமை நிலையில் உழன்று கொண்டிருந்த ஆன்மா,அருட்பக்குவமுற்றபோது, அக ஒருமை நிலை யுறுகின்றது. இப்படிச் சுத்தநிலை வாய்க்கப் பெற்ற ஆன்மாதான் அருள் உண்மையை ஆய்ந்து, நன்கு ஓர்ந்து தயா நன் முயற்சியால், தீமையை விலக்கிக்கொண்டு நன்மையையே வளர்த்து வந்து அருட்பெருநிலை அடைகின்றதாகும்.

சுத்தம் என்றது தூய்மையானது, மாசற்றது என்பது சாதாரணப் பொருள். சகலமாகிய நினைப்பும் கேவலமாகிய மறப்பும் கடந்து நிலைத்த அருள் உணர்வுதான் சுத்தநிலை அல்லது சுத்தாவத்தை என்பர். அந்த அருள் உணர்வுதான் ஆன்ம

இயற்கையாகிய மெய்ஞ்ஞான நிலையாகும். அருள்ஞான உண்மையால்தான் இந்த ஆன்மா, கடவுளின் நிறை இயல் கொண்ட சிற்றுருவம் என்று அறியலாகின்றதாம். கடவுள், தனக்கு ஒப்பில்லாத தனித்தலைமைப் பெரும்பதியாக, ஒருவரே யாக இருக்கின்றவராவார். அந்த ஒருவர்தானே எண்ணில் கோடி ஆன்ம அணுக்களாய் இருந்துகொண்டு, வேறு வேறான உயிர்ப்பொருள்கள் எல்லாமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றார் என்பது உண்மையாம். ஆகையால், அந்த ஒருவரை யல்லாது அவர் ஒருவரே பலவேறு மக்கள் வடிவேற்று உள்ளதேயல்லாமல் பிறர் என்பதே யில்லையாம். இவ்வுண்மை அறிவுபெற்று, அது தானாய் இருக்கும் ஆன்மா, தானே எங்குமிருந்து எவ்வெவர் உருவுமேற்று விளங்குவதாகவும் அறிகின்றான். இதுதான் உண்மையான ஒருமைநிலை. இவ்வொருமை யுற்ற ஆன்மாவே சுத்த பக்குவநிலை வாய்க்கப்பெற்றதாம்.

(33)

781. எவையெலா மெவையெலா மீண்டின வீண்டின
782. அவையெலாங் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆன்மாவுக்கு அருள் அனுபவ ஆனந்தவாழ்வு ஏற் பட்டு நித்தியமாய் நிலவச்செய்ய வேண்டியே இந்தப் பெரும் பிரபஞ்சச் செயல்கள் யாவும் நிகழ்த்தப்பட்டுக்கொண்டே இருக் கின்றனவாம். இந்த ஆன்மாவே உண்மைக்கடவுள் இயல் கொண்டதாய்த்தான் இருக்கின்றது. ஆகவே, கடவுள்தானே இந்த நித்தியானந்த அனுபவத்தை இந்த மனிதவடிவில் வெளிப் படுத்திக்கொண்டு, தானே இவ்வனாய் இருந்துகொண்டு, என் றென்றும் வாழவும், பக்குவமுற்ற ஒவ்வொருவரும், இப்படி நித்தி யானந்த வாழ்வு பெற்று விளங்கவும் வெளிப்பட்டுள்ளார் இத் தருணம்.

இக்கடவுள் அனுபவம் ஆன்மாவுக்கு ஏற்பட வேண்டி பண்டே தொட்டு ஒவ்வொரு ஆன்மாவையும் வந்து சூழ்ந்து விளங்கின, பொருள்களையும், வடிவங்களையும், உருவத் தேகங் களையும், ஆற்றல்களையும், உயிர் உணர்வுகளையும், அறிவு அனுப வங்களையும் காத்துக் காத்து அவற்றால் சிறிது சிறிது உண்மை வெளிப்படப் பக்குவப்படுத்தியுள்ளார் நம் அருட்பெரும்பதி.

இக்கருத்தையே முதலடியில் குறித்துள்ளார். ''எவை எலாம் எவை எல்லாம் ஈண்டின ஈண்டின'', என்றால், எவைகள் எல்லாம் வந்து வந்து சூழ்ந்து கூடினவோ, அவைகளை எல்லாம் குறிக்கோள் அடைவின் பொருட்டே காத்து வந்துள்ளார் என்பது தெளிவாகின்றதாம். யாவையும் இவ்வளவு நெடுங்காலமாகக் காத்து வந்து இப்பொழுது அதன் பெரும் பயனாகிய நித்தியானந்த வாழ்வையே வெளிப்படுத்துகின்றார். இந்த அருட்பெரும்பதியால் உலகமெல்லாம் நல்வழிப்பட்டு இன்பில் ஓங்கும்.

197. அடக்கியருள் விரி

(1)

783. அண்டத் துரிசையு மகிலத் துரிசையும்
784. அண்டற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந்தத் தலைப்பில் அருட்பெருஞ்ஜோதிக் கடவுளுடைய தனிப்பெருங்கருணை யாற்றலின் விரிந்த விளக்கம் தெளிவுறக் காணலாகின்றதாம்.

அகண்டாகாசப் பெருவெளியில் பூரணமாக நிரம்பி எப்பொழுதும் தோற்றக்கேடின்றித் தன் நிறை ஆற்றலோடு விளங்கிக்கொண்டுள்ளவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். தன் பேராற்றலையே ஐஞ்சக்தி வண்ணமாக விரித்து இப் பிரபஞ்சமாக்கி விளங்கச் செய்து கொண்டுள்ளார். அந்த ஐஞ்சக்தி விளக்கமே, பொருட்சக்தியால் பஞ்சபூத அணுக்களும் அவற்றாலான அண்ட பிண்டங்கள் எல்லாமாகவும், கிரியாசக்தியால் அணுவக மின்னியக்கம் முதல் அண்டபிண்ட இயக்க உயிர்ப்பு எல்லாமும், ஞானசக்தியால் பிண்ட உயிர்களில் புலன் உணர்ச்சி மன அறிவு, ஆன்மஞானம், எல்லாமும் யோகசக்தியால் கலைஞான சக்தி சித்திகளும், அருட்சக்தியால் இறை இன்பானுபவ சித்திகளும், ஆகத் தோன்றி விளங்கிக் கொண்டுள்ளனவாம்.

மேற்படி எல்லாச் சக்திகளையும் அவற்றின் தோற்றங்களையும் இயல்களையும், செயல்களையும் அனுபவங்களையும் முறைப்படி காத்துவரும் பெரும்பதி, அவைகளின் எல்லை கடவாது கட்டுப் படுத்தியும், ஒன்றையொன்று தாக்கி அழித்துவிடாது தடுத்தும்,

அவற்றின் வளர்ச்சியின் பொருட்டு உதவியும், தன் திருவுளப் படி ஆண்டு வருகின்றார்.

அண்டமாகிய பூமிபோன்ற மற்ற வானக் கோட்களையும், ஜோதி கோளங்களையும் அவைகளின் பிரபஞ்சப் பொருட்களையும் உயிர்களையும், அவற்றவற்றின் துரிசாகிய மாசும், குறைபாடு களும் போக்கிப் பக்குவப்படுத்தவும் தன் அருட்பேராற்றலால் அடக்கி ஆள்கின்றார் நம் பதி.

(2)

785. பிண்டத் துரிசையும் பேருயிர்த் துரிசையும்
786. அண்டற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அண்ட உலகத் துரிசாகிய குறைபாட்டை அதாவது அதிவேகம் சூடு, உயிர்ப் பொருள்களின் விருத்திக்கு உதவாத நிலைகள் எல்லாம் அண்டத் துரிசும் அகிலத்துரிசுமாம். அத்துரிசு நீங்கினால்தான், இங்கு கூறப்படுகின்ற பிண்டத் துரிசும் பேரு யிர்த் துரிசும் ஒழியும்.

அண்டப் பிரபஞ்சத்தின் சிறு சிறு கூறுகளாய் பின்னப் பட்டவைகள் உலகிலுள்ள பிண்ட தேகங்கள் யாவுமாம். இப் பிண்ட தேக வடிவங்களில் சிறந்திலங்குவது தத்துவநிறையாகிய நம் மனிதப் பிறப்புத் தேகமேயாகும். இம்மனிதவடிவம் பெரும் பிரபஞ்சத்தின் சிறு பிரதியாக முற்றும் பொருந்தியுள்ளதால் இது (இத் தேகம்) சிற்பிரபஞ்சம் (Miniature Universe) எனப்படு கின்றது. இத்தேகத்தின் அகத்தில் ஆன்மாவும், அகப்புறம், புறம், புறப்புறம் ஆகிய நிலைகளில் ஜீவ கரணேந்திரியங்களும் விளங்கியோங்குகின்றன. இவைகளில் குற்றம் குறைகள் நீங்கிச் சுத்த நிறை நிலை யுண்டாக அடக்கியாள்கின்றார் அருட்பதி.

பிண்டத்துரிசு யாதெனில், தேக கரணத்தில், ஜீவனில் தயாவொழுக்க மின்மையால் ஏற்படும், உடற்கேடு பிணி முதலி யனவும், மனத்தில் அவா வெகுளி மயக்கம் முதலியனவும், உயிரில் கடின சித்தத்தால், தயவின்மையால் ஜீவ விளக்கம் குன்றுதல் ஆகிய எல்லாம் பிண்டத்துரிசு எனப்படும். மேல், பேருயிர் என்பது உயிர்க்குயிரான ஆன்மாவாம். அவ்வான் மாவுக்குத் துரிசு ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்

களாம் ஆகிய இத்துரிசுகளை யாவும், சூழ்ந்து நின்று முற்றும் அடக்கி ஆள்கின்றவர் நம் பதியே ஆவர்.

(3)

787. உயிருறு மாயையின் உறுவிரி வனைத்தும்
788. அயிரற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உயிர் என்பது ஜீவன் என்பர் சிலர். ஆன்மா என்பர் சிலர். இங்கு உயிருடன் விளங்கும் ஆன்மா அல்லது ஜீவான்மாவே கொள்ளப்படுகின்றது. ஜீவசக்தி கொண்டு விளங்கும் ஆன்மாவில்தான் மாயையின் செயல் எல்லாம் காரியப் படுகின்றன. (இதனால் அருட்சக்தி கொண்டு விளங்கும் ஆன் மாவில், மாயையின் செயல் காரியப்படாது என்பது குறிப்பு.) உயிர் உணர்வில் பசி, புலன் அவா, நோய் நொடி முதலியன உள்ளிருந்து உடற்றுகின்றன. புறத்தே தேகப் பொருள்களாக, ஆற்றல்களாகத் தோற்றங்களாக மாயாவுலகம் தோன்றி மயங்கச் செய்கின்றன. இந்த மாயாசக்தியின் விரிவு சொல்லில் அடங்கா. ஜீவர்கள், மேலும் மேலும் பல பிறவிகள் எடுத்தும் ஆன்மபரிபாக முறாதவரை மேற்படி மாயா சக்தியால் பெரிதும் வாட்டப்படு கின்றன. பக்குவமுற்ற ஆன்மாக்களுக்கு அந்த மாயாசக்தியே அருள்ஞான சக்தியாக மாறி விளங்கி இன்பளிக்கின்றதாம். மாயையின் முழு ஆற்றலையும் அயிரற (சிறிதும் சந்தேகம் இல்லாமல் ஒழித்து) அடங்கிப் போகச் செய்வது அருட்பதியின் பெருஞ்செயலாம்.

(4)

789. உயிருறு மிருவினை யுறுவிரி வனைத்தும்
790. அயர்வற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) வினை என்பது பொதுவாகச் செயலைக் குறிக்கும். இதுவே, கருமம், கர்மம், கன்மம் எனப்படுவது. இவ்வினை நல்வினை என்றும் தீவினை என்றும் பகுக்கப்படுவது. அன்றி யும் அவ்வினை ஆன்மாவினின்று பற்றொடு காரியப்படும்போது பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமாகின்றதாம். அவ்வினையின் மூன்று பிரிவுகள், முன்பிறப்பு, நிகழ் பிறப்பு, வரும் பிறப்புக்

களின் செயற்பாடாக விளங்குகின்றன. அவற்றைப் பிராரப்தம், ஆகாமியம், சஞ்சிதம் என்பர். பிராரப்தம்-முன் பிறப்பில் செய்த வினையின் விளைவு. இது நிகழ் பிறப்பில் அனுபவிக்கப்படு கின்றது. இப்பிறப்பில் செய்கின்ற செயல் ஆகாமியம் எனப் படும். .இதன் விளைவில் மிஞ்சுவது அடுத்துவரும் பிறப்புக்கு முதலாயிருக்கின்றது. அந்தப் பிறப்பே சஞ்சிதமாம். அதி லிருந்து மறுபடியும் தொடர்ந்து கொண்டேதானிருக்கும். ஒவ் வொரு பிறப்பும், இப்படி ஆன்மாவுக்குத் தொடர் பிறப்பு உண்டாகி, வந்துகொண்டே யிருப்பதால் அதற்கு அயர்வு (தளர்ச்சி) உண்டாகின்றதாம். ''எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்'', என்று மணிவாசகர் கூறுவதையும் கொண்டறிய லாம். இந்தப் பிறவித் தொல்லை நீக்கித் திருவடி நிழலில் விஸ்ராந்தி அடையக் கருதி, சைவ சித்தாந்தி, இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதமுற்று சிவ ஐக்கியம் பெற்று மறைந்தவன், பிறவி எடாது போனது சிறப்பெனக் கருதப் பட்டது அன்று. இன்றோ, திருவருளால் வினையுரு, அருள்ஒளி யுருவாய் மாறி, மேல் இறப்பும் பிறப்பும் இல்லாது இறை இன்பானுபவத்தோடு வாழச் செய்கின்றதாம் நம் பதி. அருட் பெருஞ்ஜோதியால் வினைமலமும் இறப்பும் மேற்பிறப்பும் அடக் கப்பட்டு சுத்த வடிவொடு அருட்பெருஞ்சித்தியுடன் நித்தமும் வாழமுடிகின்றதாம்.

இருவினை என்பதை இரண்டு வினை என்பதைவிடப் பெரு வினை, பக்குவத்தில் விளங்கும் நித்தியமான அருட்செயல் எனக் கொள்ளலாம்.

(5)

791. காமப் புடைப்புயிர் கண்டொட ராவகை

792. ஆமற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உயிர்களின் பிறப்புக்கு, வினைதான் காரணம் என்று கூறுவர். அவ்வினை செயல்படற்குப் புறவுடம்பும் அகம்புலனிச் சையும் காரணமாம். இந்த உணர்வும் உடம்பும், செயலும் உண்மையில் அகமிருந்து ஆள்கின்ற அருட்பதியின் ஆணைப்படியே விளங்குகின்றனவாம். மக்களினம் அல்லாத பிற வுயிர்களிடத்தில் ஆண்டவர் நியதியால் ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்கி இந்தப்

படைப்புச்செயல் நிகழ்கின்றது. ஆனால், மனிதன் விதிமுறைக்கு உட்பட்டு இருந்தாலும் மனோசக்தியால் இப்படைப்புச் செயலில் மேலான தெய்வநிலைக்கு ஏறவும் அல்லது கீழான அசுரநிலைக்குத் தாழ்வுற்றுப் போகவும் கூடியவனாயிருக்கின்றான். இவன் அருள் உண்மையை ஓர்ந்து புலனிச்சை வழியில் வேகமோகம் கொண்டு செல்லாது நேர்மையான அன்பு மார்க்கத்தில் ஆண்டவரை நோக்கி முன்னேறி அருளடைந்து பேரின்பவாழ்வு பெறவேண்டிய வனாயுள்ளான்.

காமம் என்பது சிறறின்ப இச்சையாம். இந்த இச்சையை மிகைப்படுத்துவது அல்லது தூண்டிவிடுவது, விம்மலுறும் காம உறுப்புக்களாம். ஒருவன் சிற்றின்ப வேட்கையோடு, மதர்த்த உடலுறுப்புக்களை, முக்கியமாக ஜெனனேந்திரியக் கருவிகளைக் கண்ணால் பார்த்துக் கொண்டேயிருந்தாலும், மனக்கண்ணால் எண்ணிக்கொண்டே யிருந்தாலுங் கூட நிறை (கற்பு)க்குப் பங்கம் ஏற்படும். இதனால் பலவிதமான கேடுகளும் தோன்றும். இன்றைய நடன நாடகங்களும், ஆபாசப் படக் காட்சிகளும், மற்றைய கேளிக்கைகளும் வேட்கையைத் தூண்டிவிட்டுப் பெரிதும் நிறைகெடச் செய்வனவாயுள்ளவாம். இக் கேட்டால் தான், அடக்கமுடியாத ஆவல் பெருக்கும், மக்கள் பெருக்கமும் அதிகரித்து, உலகத்தில் எங்கும் பெருந்தொல்லைகளையும், கஷ்ட நஷ்டங்களையும் நோய்நொடிகளையும் அழிவையும் உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றனவாம். இது திருவுளச் சம்மதம் அன்று. அருட்பெரு நெறியில் ஒழுகி அமைதியும் இன்பமும் தழைக்கவ ஆணைசெய்யப்பட்டுள்ளான் மனிதன்.

ஆகவே, மக்கள் அருள்வழியை மேற்கொள்ள வேண்டுவது அவசியமாம். முதலில் மனத்தில் புலனின்ப வேட்கை புகாமல் இருத்தல் வேண்டும். அடுத்து தேகேந்திரிய உறுப்புக்களின் கவர்ச்சித் தோற்றங்களில் நாட்டம் கொள்ளாதிருத்தல் வேண்டும். இந்த நாட்டமே மனத்தில் இச்சையைப் பெருக்குவதாம். மருத் துவச் சிகிச்சை புரிவோர்க்குத் தேக உறுப்புக்களில் அதிகக் கவர்ச்சியோ, இச்சை நாட்டமோ உண்டாகாவிட்டாலும், உள்ளத்தில் கலவிப்பற்றை வளரச் செய்கின்றது இயல்பே. எனவே உள்ளத்தில் அன்பும் அறிவும் நிரம்பிய அருள் உணர்ச்சி யோடு கடமை கருதியும் சிகிச்சை புரிவது நன்றேயாம். சாதாரண மக்கள் உலக வாழ்வில் இவ் இச்சையைப் பெருக்கும்

வகையில் நடையுடை பாவனைகளை மேற்கொள்ளக்கூடாது. புலன் வேட்கையைத் தூண்டும் அங்கங்களைப் புறத்தார் பார்வையில் படும்படி இருத்தல் கூடாது. அவ்வுறுப்புக்களை மூடிமறைத் திருத்தல் நன்றாம். உலகில் ஓர் இயக்கம் ஆடையீன நாகரிகம் இச்சைப்பெருக்கிற்கே காரணமாயுள்ளதாம்.

அருள் வாழ்வுக்கு உடலிச்சை அறவேண்டுவதே மிகமிக முக்கியமாம். இதனாலேயே, மருவு பெண்ணாசை (புணர்ச்சி இன்பத்தை) மறக்கவேண்டும் என்றார் நம் வள்ளலார். ஆண் பெண் இருவருக்கு உடல் பெண்கூறே யாதலின் அந்த உடலிச்சை யாகிய பெண்ணாசை இருபாலார்க்கும் கூடாது என்பது கருத்து. இச்சையை அற அடக்கி நல்வாழ்வு பெற, அகத்தே ஆன்ம தீபத்தில் நிலைத்து, அருள் உணர்வோடு சூழ்உலகில் அன்புச் செயலில் ஈடுபடுதல் வேண்டும். காமக்காட்சியில் நாட்டம் கொள் ளாது இருந்தால் திருவருளாலே காம இச்சை உண்டாகாது அடக்கப்பெறும். இதனால் உலகப்பிரச்சினை பலவும் எளிதில் தீர வழி ஏற்படும். அருட்ஜோதியால் ஏம (இன்புநிறை) நெறி ஓங்குவதாக.

(6)

793. பொங்குறு வெகுளிப் புடைப்புக ளெல்லாம்
794. அங்கற வடக்கும் அருட்பெருஞ்ஜோதி

(உ-வி) வெகுளியாவது கோபத்தின் புறநிலைத் தோற்ற மாம். இதற்குக் காரணமாய் அகத்தில் இருந்து தூண்டிவிடும் கோபத்தின் கூறு சினம் எனப்படும். சினத்தால் உட்கனன்று அக அவயவம் கிளர்ந்து எழுந்து சூடுற்று ஆக்கிரமிக்க, சுவாச ஓட்டமும், இரத்த ஓட்டமும், நாடி நரம்புகளின் துடிப்பும் அதிகரிக்கின்றன. அதனால் புறத் தேகேந்திரியங்கள் வண்ண பேதமும் பெருக்கமும், கோரத் தோற்றமும் அடைகின்றனவாம். இதனால் உண்டாகும் தீங்குகள், நோய்கள் பலப்பலவாம்.

பொங்குறு வெகுளி என்பதன் கருத்தை ஆழ்ந்து ஆய்ந்து அறிதல் வேண்டும். இதயத்துடிப்பும் இரத்த ஏற்றமும் அதிகரிப் பதால் முகத்தில் ஏற்படும் தோற்றம் பயங்கரமாய் இருக்கும். கண் சிவத்தல், விழி விரிந்து சுழலல், புருவங்கள் உயர்தல், உதடுகள் துடித்தல், பல்கள் கடித்தல், கை கால்கள் நடுக்க முறுதல், மொத்தத்தில் தேகமே எரிச்சலும் சூடும் அடைதல்

உண்டாம். இவற்றால் உள்ளுறுப்புக்களின் வேலையும் கேடுறும், உணவுப்பொருள்கள் நன்கு செரியாது; இரத்தம் கொதித்தும் விஷப்பட்டும் பல நோய்க்குக் காரணமாகும். ஆகையால் இந்தக் கொடிய வெகுளியை அதன் தோற்றுவாயாகிய சின நிலையிலேயே களைந்துவிடுவது நன்றாம். இதுதான் அங்கு அற அடக்கும் வகை குறிக்கப்பட்டுள்ளது.

வெகுளியின் பெருந்தீங்குகளை எல்லாம் சத்விசாரத்தால் நன்கு அறிந்து, விலக்கிட உள்ளத்தில் ஒருமையும் தயவும் பெருகும், அப்போதே சினமும் வெகுளியும் அற அடங்கும்.

(7)

795. மதம்புரை மோகமும் மற்றவு மாங்காங்
795. கதம்பெற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இவை ஆறும் ஒழிக்கப்படவேண்டிய அகப்பகை களாம். இவற்றில், காமமும், குரோதமும் முன் இரண்டு இணை யடிகளில் இசைக்கப்பட்டன. இங்கு, மதமும் அதனுடன் பொருந்தும் மற்றனவாய உலோபமும், மாற்சரியமும், அன்றியும் ஈரிசை இடம்பம், அகங்கார முதலிய பலவான தீக்குணங்களும் ஒழிக்கப்பட வேண்டியவைகளே என்பது ஈண்டு சுட்டி உணர்த் தப்படுகின்றனவாம். குரோதம் - கோபம், உலோபம்-தானும் நுகராது பிறர்க்கும் ஈயாக்குணம், மோகம்-காமத்தால் உண்டாம் வெறி மயக்கம், மதம் - செருக்கு, மாற்சரியம் - மாச்சரியம் - பொறாமை, ஈரிசை - இராகத்துவேடம் - விருப்பு வெறுப்பு, இடம்பம் - ஆடம்பரம், அகங்காரம் - யாம் என்ற போத எழுச்சி, இறுமாப்பு.

மேற்படி வேண்டாத தீக்குணங்களை எல்லாம் விலக்கத் திருவருளைத் துணை கொள்ள வேண்டும். அத்திருவருளே மனிதனைப் பண்படுத்தற்காக இவற்றைத் தோற்றுவித்து அவை தோன்றும் தோறும், தோன்றும் தோறும் அந்த அந்த இடத்திலேயே அதம்பெற, (முற்றும் அழிவுற) அடக்கியருள் கின்றதாம்.

(8)

797. வடுவுறு மசுத்த வாதனை யனைத்தையும்

798. அடர்வற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) நன்மை தீமைகளின் பயனாக இன்ப துன்பானு பவம் உண்டாகின்றன. இவ்வனுபவம் நினைவு வடிவமாய் உள்ளத்தில் பதிவுறுகின்றது. தீமையினால், விலக்கத்தக்க கீழ்க்குணங்களால் தோன்றுகின்ற வாதனை அல்லது துன்பம் அசுத்தமானது. இது உள்ளத்தில் புண்ணாக்கிவிடு கின்றது. சிறிது காலப்போக்கில் இப்புண் ஆறிவிடும். ஆனால் அதன் வடு நெடுநாளைக்கு மாறாதிருக்கின்றதாம். அப்படி மாறா மல் இருப்பதனால்தான் அதன் அனுபவ விளைவு மறு பிறப்பிலும் அசுத்த வாசனையாக வந்து வந்து தாக்கி அல்லற்படுத்துகின்ற தாம். இப்படி வந்து நெருங்கி வாட்டும் வாசனா துன்பத்தைத் தன் தனிப்பெருங்கருனையால், அடர்வு அற வந்து நெருங்கிச் சார்தலில்லாது விலகியொழிந்திட அடக்கிவிடுகின்றார். மற்ற விதமான மனித 'முயற்சியால் அந்த வாசனா அனுபவத்தை யொழிப்பது மிகவும் அசாத்தியமாம்.

(9)

799. சுத்தமு மசுத்தமுந் தோய்ந்தவா தனைகளை

800. அத்தகை யடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பொறிபுலன் அனுபவப் புறவாழ்வில் சுத்த வாசனை யால் இன்பமும், அசுத்த வாசனையால் துன்பமும் உண்டாவன வாகக் காண்கின்றோம். இவ்விருநிலை யனுபவமும் ஒவ்வொரு உயிர்க்கும் தோன்றுவதும் மறைவதும் இயற்கையே. ஆனால் இவ்விரண்டிலும் ஒருவனின் வாழ்வு நிறைவு பெற்றுவிடாது. ஏனெனில், சுத்த வாசனையாலுறும் இன்பத்தை அனுபவிக்கின்ற போது, சுகமாய்த் தோற்றிடினும், அந்த இன்பம் நிலைப்பதில்லை. அப்படி நிலையற்றதாய் இருந்து கெடும் இன்பத்தை மதித்துக் கொண்டு மகிழ்வில் மூழ்கிக் கிடத்தல் அறியாமையே. அவ்வின்பம் சிறியகாலமிருந்து ஒழிந்துவிடுவதால், கவலையும் இடர்ப்பாடும் வந்து சூழும். அப்போது இன்பமெல்லாம் சூனியமாய் மறைந்து விடும். இதுபோல, அசுத்த வாசனையால் ஏற்படுகின்ற துன்பமும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை சூழ்ந்துநின்று தாக்கி வருத்தி

விட்டு மறைந்து போகக்கூடியதேயாம். ஆகையால் துன்பச் சூழலைக் கண்டு மிக அஞ்சி அவலமுற்று துக்கக்கடலில் அமிழ்ந்து போக வேண்டியதில்லை. மனிதனைப் பக்குவப்படுத்தவே இவ்வாதனை களை அளித்து, அவற்றினின்று காத்து, திருவருளினால் தன்பால் அடங்கிடச் செய்து இன்பந் தருகின்றார்.

(10)

801. நால்வயிற் றுரிசும் நண்ணுயி ராதியில்
802. ஆலற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) நால்வயிற் றுரிசும் நண்ணுயி ராதியில் என்பதை, உயிர் ஆதியில், நால்வயிற் றுரிசும் நண்ணும் எனக் கொள்ளலாம். ஆன்மாவுக்கு மலம் எப்படி ஏன் வந்து சூழ்கின்றது என்றால், அருள்நிதியால், மலச்சூழல் ஏற்பட்டு, பக்குவம் அடையச் செய்யும் ஆண்டவர், பக்குவநிறைவில் அச்சூழலையே அருள் ஒளியாக மாற்றி ஆனந்தவாழ்வில் நிலவச்செய்துவிடுகின்றார் அந்த ஆன்மாவை. ஆன்மாவுக்கு மலம் அருள்நியதி என்றது யாதெனின், உண்மையில், கடவுளே ஒவ்வொரு ஆன்மாவிலும் பூரணமாக இருப்பதும், அல்லது கடவுளேதான் ஆன்மசிற்றுரு வாய் என்றும் விளங்கிக்கொண்டிருப்பதும், தன் அருள் வெளி யீட்டை அனுபவப்படுத்துகின்றதுமேயாம்.

அருட்பெரும்பதி ஆன்மசிற்றுரு கொண்டு விளங்குவது உண்மை. அருள் அனுபவம் ஏற்படாதபோது, இவ்வான்மா ஒரு சிற்றணு வடிவாய் பேரொளிச் சூழலில் நிலவுகின்றதாம். இந்த ஆன்மாவின் அகத்தே பதியருள் உண்மை பரிபூரணமாய் நிறைந்தே இருக்கின்றதாம். இவ் அக அருளே, தன் நியதி யாணையால், சூழொளியைப் பலவாகிய வடிவாக, ஆற்றலாக, ஆக்கி ஆக்கி, அளித்து அளித்து, அழித்துக்கொண்டே யிருக்கின் றதாம். இந்த அருட்செயல் உண்மையை அறியாத அபக்குவ மனிதன், தன் ஆன்மாவுக்கு இயல்பாகவே, இயற்கையாகவே இருப்பது ஆணவ மலம் என்றும், அது ஒரு விதையில் முளை போல இருந்து, பிறவி விளைவுக்குக் காரணமாயுள்ளது என்றும் கருதுகின்றான். பிறவிப்பயன் ஏற்படற்கே, அவ் ஆன்மாவுக்குப் புற வடிவத் தோற்றமும், அகவுணர்வு விளக்கமும் வழங்கிச் சிறிது சிறிதாகப் பரிணமிக்கச் செய்யப்படுகின்றதாம். ஆன்மா

வுக்கு ஆணவம் இயற்கை என்றால், அவ்வான்மாவினின்று வெளி யாகின்ற ஆற்றல், இயற்கையில் செயற்கையாகும். இது மாயா மலம் எனப்படுகின்றது. மா-என்றால் அழிவது, யா-என்றால் ஆவது. அதாவது ஆன்மாவினின்று புறப்பட்ட ஆற்றல், அகம் ஒடுங்குவதும், புறம் விரிவதுமாக உள்ளதனைக் குறிப்பதாம். அப்படி அச்சக்தி விரிந்து விளங்குகின்ற தருணம் மேற்சேர்க்கை யாக ஏதோ வடிவம் தோன்றி விளங்குகின்றதாம். இச்சேர்க்கை யுருவே கன்மமலம் என்கின்றனர். இந்த ஆணவம், மாயை, கன்ம மலத்துடன் விளங்கும் மனிதன் சூழ்உலகை முற்றும் மகா மாயா பிரபஞ்சமாகக் காண்கின்றான்.

உண்மை விளங்காத இடத்து மேற்கூரிய நான்கிடத்தும் மறைத்துக் கொண்டிருப்பதுதான் நால்வயின் துரிசு எனப்பட் டுள்ளது. அம் மலத் துரிசு அல்லது அறியாமையாம் இருள் நச்சை முற்றும் அடக்கியருள்கின்றார் நமது ஆண்டவர்.

(11)

803. நால்வயிற் படைப்பும் நால்வயிற் காப்பும்
804. ஆலற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இங்கு நால்வயின் என்றால் நான்கிடமானவை. அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்பன நான்கிடமாம். அண்டத்தும் பிண்டத்தும் இந்நான்கிடங்கள் ஒளியாகவும், உணர்வாகவும் இருந்து ஆள்கின்றவர் நம் அருட்பெரும்பதியே ஆவர். நம் பதியின் ஆட்சி எப்பொழுதும் விளங்கிக்கொண்டுள்ள தால் அங்கங்கு நிலை மாறுபாடு உண்டாகாது அப்போதப்போது அருட்பேராற்றல்ால் அடக்கியாளப்படுகின்றதாம். பிண்டத்தில், ஆன்மா, உயிர், கரணம், இந்திரியம் ஆகிய நான்குக்கும் படைப்பு காப்பால் விளக்கம் செய்யப்படுகின்றனவாம். இவற்றில் ஒவ்வொன்றிலும் முறைபிறழாது, இயல் மாறுபடாது, சக்தி மீறாது அடக்கிவைக்கப்படுகின்றது திருவருட்செயலே. இது போன்ற அண்டவெளியில் அக்கினி, சூரியன், சந்திரன், நட்சத் திரங்கள் ஆகியவைகளையும் நம்பதியே ஆக்கியளித்து அடக்கி ஆண்டுகொண்டுள்ளார்.

(12)

805. மூவிடத் திருமையின் முன்னிய தொழில்களில் *
806. ஆவிடத் தடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பொதுவாக எல்லா ஆன்மாக்களும், அக நிலையி னின்று பார்க்கும்போது ஒரு தன்மைத்தாய் விளங்குகின்றன. கன்ம பேத வசத்தாலும், அகப்புற வளர்ச்சி இயல்பாலும், இடம் காலம் சூழ்நிலைகளாலும் ஆன்மாக்கள் தனித்தனி வண்ணமாக, அனந்தபேதத் தோற்றத்தோடு விளங்குகின்றன, செயல்புரி கின்றன. இதனால் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடத்தும் ஆன்மாக்கள் வெளிப்பட்டு, ஏகமாயும், அநேக மாயும் அல்லது ஒருமையாயும், பன்மையாயும், விதிக்கப்பட்ட செயலோடு திகழ்கின்றனவாம். இவ்வளவு தோற்றங்களும் செயல்களும் ஆன்மபரிபாகமுற்ற காலத்தே அருட்ஜோதியில் அடங்கித் திகழக் காண்போம்.

கடவுள் ஒருவரேதான் உண்மையில் அனந்த ஆன்மாக்களாய் இருந்து எங்கெங்கும் தோற்றமும் மறைவும் காட்டிக்கொண் டுள்ளார். ஆகையால், நாம் என்பதும் பிறர் என்பதும் உண்மை யில் அவரே. இப்படி அவரே நாமாய் இருப்பதால், நாமவராய் இருப்பதால், அகநின்று அருள்ஞானக் கண்ணால், சூழநோக்கு கின்ற தருணம், நாம் அகத்தில் ஆன்மசிற்றுருவாய் இருந்து அனக நிறைவாய் அருட்பெருஞ் ஜோதி வண்ணமாய் விளங்கிக்கொண் டுள்ளதை யுணர்கின்றோம். மேலும், அருட்பெருஞ்ஜோதி வெளி யில் உள்ள எல்லா ஆன்மாக்களுக்குள்ளும், நாமே நம் பதி மய மாய் இருந்து வேறு வேறு புறவண்ணம் கொண்டுள்ளதாகவும் அறிகின்றோம். இந்த ஒருமை நிலையில் இருந்தும் நம் இச்சையால் ஒரணுவும் அசைக்கமுடிகின்றதில்லை. நம்மை யாளுடைய ஆண் டவரின் திருவுள்ளப்படி யாவும் அடங்கி அணுவும் பிசகாமல் செயல்பட்டுக்கொண்டுள்ளனவாம்.

(13)

807. மூவிட மும்மையின் முன்னிய தொழில்களில் *
808. ஆவிட மடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடத்தனவாய் விளங்குகின்ற ஆன்மாக்களும் அன்றி, மக்கள் தேவர், நரகர் (இப் பூவுலகர், மேலுலகத்தவர், கீழ் உலகத்

---

* "தொழில்களில்" என்றதாய்க் கொண்டால் தொழில்களின் முடிவில் என்ற பொருளாம்.

தவர்) ஆகிய மூவுலகத்தவர்களும், பல்வேறு இயல்போடு, செயலோடு விளங்குகின்றனர். இவர்கள் யாவரும், இம்மை, அம்மை, மறுமை ஆகிய மும்மைப் பிறவிகளில், மூவினை வசப்பட்டுக் கருமங்கள் புரிந்துகொண்டேதான் உள்ளனர். இக் கருமங்கள் அல்லது வினைக்கீடான தொழில்கள் இடைவிடாது நடந்துகொண்டேதான் இருக்கின்றனவாம். இந்த வினைச் சக்கரச் சுழற்சி ஓட்டம் ஓயாது நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றதுவாம். மனிதனில், ஆன்மாவின்கண் திருவருள் வெளிப்படும்போது, அவ் ஆன்ம அகத்தில் நிற்கும் மனிதன் அருள்வண்ணராய் நிலவுவதால் எத்தொழிலும் இறையருட் செயலாகவே வெளிப்பட்டிலங்கவே காண்போம். அப்படி மனிதன், ஆன்மாவில் அடக்கப்படலால், புறவுடற்பற்று நீக்கமுறுகின்றான். புறப்பற்று நீங்கவேண்டுவது முறையே. ஆனால் புறவுலகிடை வெறுப்புகொள்ளாது தயவோடு வாழவே வகை செய்யப்பட்டுள்ளதாம். ஆகவே, கடவுளான்ம இயல் கொண்ட மனிதன், அகநின்றே புறக்கடமையை மறவாது, செயலற்றுக் கிடந்து ஒழியாது தயவு செய்து கொண்டிருத்தல் அருளாணையாகும்.

(14)

809. தத்துவச் சேட்டையும் தத்துவத் துரிசும்

810. அத்தகை யடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-ள்) இயல் உண்மையே தத்துவம் எனப்படுவது. உலகில், உடலில். உயிரில் எத்தனை எத்தனையோ வகைப் பொருள்கள், சத்திகள், செயல்கள், குணங்கள், நிலைகள் உள்ளன. அவற்றின் இயல் உண்மைகள் யாவும் தனித்தனித் தத்துவங்களாக விளம்பப்படும். மேலும், ஆன்ம தத்துவம், தெய்வ தத்துவம், கடவுள் தத்துவம் என்பனவும் அதனதன் இயல் உண்மையை விளக்குவனவேயாம். முடிவில், அதீத அனுபவத்தில் தத்+துவம் = தத்துவம், ''அது நீ'' என விளங்கும், எங்கும் நிறைந்த ஒன்றாகும் கடவுளான்ம அனுபவத்தைச் சுட்டுவதாம்.

தத்துவங்களின் செயலால், அக்கிரம அதிக்கிரம இயலால், தத்துவங்களின் ஆபாசக்கேடு, கழிவு, குற்றம் முதலிய துரிசு என்னும் மாசால் அகவுண்மை வளர்ந்தோங்கிடவும், புறத்

தோற்றங்கள் மாற்றமடையவும் செய்கின்றனவாம். இவற்றை எல்லாம் தன் கருணையால் கட்டுப்படுத்தி, உயிர்க்கின்பம் செய்வதே கடவுளின் திரு நோக்கமாகும்.

(15)

811. சுத்தமா நிலையிற் சூழுறு விரிவை
812. அத்தகை யடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி)சுத்தநிலை என்பது, நினைப்பு மறப்பு அல்லது சகலம், கேவலம் என்னும் இருநிலை கடந்து, அருள் உணர்வால் அகவுண்மை கொண்டு விளங்குவதாம். இந்தச் சுத்த நிலை மாநிலை எனப்படுகின்றது. ஆன்மாவாகிய அகவடிவைச் சூழ்ந்துள்ளது அகண்ட நிறைபெருஞ் ஜோதிமயமாகும். இப் பெரு நிலையில் தான் ஜீவ தேகாதி பிரபஞ்சம் அனைத்தும் விரிந்த நிலையிற் பரந்து அறிவரிதாய் இருக்கின்றதாம். இவ்வளவு பெரிய வெளியிடை விளங்குகின்ற பல்கோடி அண்ட உலகங்களையும், அவை ஒவ்வொன்றிலும் இருக்கும் பிண்ட உயிர்களையும் தோற்றுவித்து இயக்கி, தடைகளையும் கேடுகளையும் அடக்கியொடுக்கி ஒழித்து ஆள்கின்ற நமது தனிப்பெருங் கருணைக் கடவுளின் அருளற்புதச் செயலைக் கண்டு உளமுருகி அவரில் ஆழ்வோம். அவர் தம் அருளால் வாழ்வோம்.

198. திரை விளக்கம்

(1) கருப்புத்திரை

813. கரவின்மா மாயைக் கரும்பெருந் திரையால்
814. அரைசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) கடவுள், எங்கும், என்றும், நிறை நிலையில்தான் போக்குவரவற்ற பரிபூரணானந்தராக விளங்கிக்கொண்டுள்ளார் என்று, திருவருள் உணர்வாற் கண்ட சத்திய ஞானிகள் உரைக்கின்றார்கள். அவர்களுக்குக் கடவுள் சாட்சி யாதொரு மறைப்புமின்றி நித்தியமாய் விளங்கிக்கொண்டிருப்பதாகும். அவர்கள் உறுதியாகச் சத்தியஞ்செய்து தெரிவிக்கின்றார்கள். கடவுள் யாதொரு மறைப்பையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கவும் இல்லை.

தன்னை எதனாலும் மறைத்துக்கொண்டும் இருக்கின்றாரில்லை என்கின்றார்கள். அப்படி நிச்சயமாய்க் கூறப்பட்டுள்ள அவர் களின் திருவாக்கை நம்புவதா, நம்பாமல் மறுத்துத் தள்ளிவிடு வதா எது சரி? அவர்கள் சொல்வது உண்மையாகவே இருக்க வேண்டும். அவர்கள் எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்? ஆகையால் அவர்களை நம்பலாம். ஆனால், உண்மையை உள்ள படி நன்கு ஆய்ந்து அறிந்து கொள்ளாமல் நம்புவது மூடமாகும். உண்மையைத் தெரிந்துகொண்டுவிட்டால், அதாவது கடவுள் மறைப்பின்றி எங்கும் உள்ளார் என்பதைத் தெரிந்துகொண்டு விடுவோமாயின், பின்னர் நம்புவதும், நம்பாமல் இருப்பதும் பற்றிச் சொல்ல வேண்டியதே யில்லையாம்.

ஆகவே கடவுள் எங்குமுள்ளார் என்று யார் சொன்னாலும், மறுக்கவும் வேண்டாம், மூடமாக நம்பிச் சரி என்று ஒத்துக் கொள்ளவும் வேண்டாம். நாம் இப்பொழுது உள்ள நிலையில் கடவுள் உண்மையும் அறியோம். அக்கடவுள் எங்கும் இருக்கின் றதையும் காண்கின்றோம் இல்லை. எல்லாம் வல்ல பேரருட் கடவுள் அனாதியாக இருந்துதான் இந்த மாபிரபஞ்சத்து யாவை யும் விளங்கச்செய்து கொண்டுள்ளார் என்பதை மட்டும் பகுத் தறிவுக்குப் பொருத்தமாக அறிகின்றோம். அப்படி ஒரு பேராற் றல் கொண்ட நித்தியப் பரம்பொருள் இல்லாமல் இந்தப் பெரும் பிரபஞ்சம் அளவு கடந்த நெடுங்காலமாக விளங்கிக்கொண்டிருக்க முடியாது என்பதையும் உணர்கின்றோம். அப்படிப்பட்ட ஒரு பரம்பொருளையே கடவுள் என அறியும்போது, அதுவேதான் எங்கும் விளங்கிக்கொண்டிருப்பது பற்றி ஆய்ந்து தெளிய வேண்டியிருக்கின்றது. அத்தெளிவு உண்டாகாதவரை, உண்மை அறியப்படாதவரை, அந்தக் கடவுள் நம் காட்சிக்கு வெளிப்படாத அறியாமையால், கடவுட் காட்சி விளங்கவில்லை. உண்மையை உள்ளபடி அறிந்துகொண்டால், அக் கடவுள் விளங்குவதைக் காண்போம். எனவே இந்த உண்மை அறியாமையேதான் பெரு மறைப்பாய் நமக்கும் கடவுளுக்கும் இடையில் இருப்ப தாகத் தோற்றுகின்றது.

அறியாமை என்னும் திரையால்தான், கடவுள் விளக்கம் மனிதனுக்குப் பெரும் மறைப்பாக இருக்கின்றது. உண்மையில் திரை யேதுமில்லை, ஆகையால், இதனை மாயா திரை என்கின் றனர். கடவுள் உண்மை வெளியாக்கப்படற்கே திருவருளால்,

அப் பதி சக்தியே, அதனைச் சூழ வந்து நின்று, அக விளக்கம் வெளியிற் காணச் செய்கின்றதாம். ஒரு மாங்கொட்டை எடுத்துக் கொள்வோம். இக்கொட்டையில் மாங்கனி இருக்கிறது என்று சொன்னால், யாரும் நம்ப மாட்டார்கள். ஆனால் அக் கொட்டையை நட்டு முளைக்கச்செய்து, நல்விளைவு பெற்று, பூத்துப் பிஞ்சாகி, காய்த்துப் பழுத்தபோது கனியைக் காண்கின்றோம். இப்போதுதான் கனி கொட்டையில் இருந்து விளைவுற்று வெளிப் பட்டுள்ளதாய் அறிகின்றோம். இதுபோல ஓர் அணுவில் கடவுள் இருக்கின்றதை அறிய முடிகின்றது. எப்படி அணுவிலிருந்து கடவுள் உண்மை வெளியாகின்றது என்பதைப் பார்ப்போம். ஓர் அணு, சடபூத நிலையில், உயிர் உணர்வு ஏதுமின்றிக் கிடக் கின்ற இருள்மூடிய விதை நிலை 1. அதிலிருந்து உயிர்ச்சக்தி வெளிப்பட்டு வெளிவரும் தாவர முளை நிலை 2. மேல்தாவர உயி ராகி வளர்ந்து பயன்தரு நிலை 3. அத்தாவர நிலையில் விளங்கிய உயிருணர்வு மனிதனின் மன அறிவை வெளிப்படுத்தின நிலை 4. அம் மன அறிவு ஆன்ம ஞானத்தை வழங்கிய நிலை 5. ஆன்ம அறிவுக்கு மேல் அருள் விளக்க நிலை 6. இந்த அருளால்தான் கடவுள்நிலை 7.—ஆவது ஆக வெளியாம்.

இப்படிக் கடவுள் உண்மை அறியப்படற்கு, சடமூட நிலையி லிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உயிர், உணர்வு, அறிவு, ஞானம் வளர்க்கப்பட வேண்டியுள்ளன. இச் செயல் எப்படி உலகிடைத் திருவருளால் நடைபெறுத்தப்படுகின்றன என்பதையே ஈண்டு ஏழு மாயாதிரைகளின் வாயிலாக விளக்கம் செய்கின்றார் நம் வள்ளல். இது, முதலாவது திரை. 1. கறுப்புத் திரை: கர வின்மா மாயைக் கரும் பெருந்திரை என்றால், சொல்லற்கரிய, அழி வில்லாத சடபூத அணுநிலையில் கடவுள் உள்ளீடாய் இருந்து அப்படி இருக்கச்செய்த அணுக்களை ஒன்றுகூடிப் பொருள்வடி வாகவும், பின்னர் சிதைத்து அணுத்துகள்களாகவும் இருக்கச் செய்யும் கடவுட்சக்தி அவ்வணுவையே அழித்துவிடுகின்ற தில்லை. ஆனால் அந்நிலையில் கடவுள் சக்தி அவ்வணுவுள் இருக் கிறது என்பது கொஞ்சமும் அறியப்படுவதேயில்லை. அருள் ஆட்சி புரிகின்ற ஆண்டவர், இருள் மாயாபூத அணுவில் இருந்து ஆளும் உண்மையே ஈண்டு உணர்ந்தோதப்பட்டுள்ளதாம்.

(2) நீலத் திரை

815. பேருறு நீலப் பெருந்திரை யதனால்
816. ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) சடப்பொருள்களில், அணுவில் உயிர்ச்சக்தி இருப் பது தோன்றுகின்றதில்லை. ஆனால், அது அவ் அணு அகத்தே, மின்னியக்கமாகவும், புறத்தே ஆற்றல்களாகவும் தோன்றி யாவும் பிரபஞ்சத்தில் வேகம் கொண்டுள்ளதை அறிவியலால் நன்கு காண்கின்றோம் இன்று. அவ்வியக்க அணுவக சக்தியால் புல்லாதி உயிர்கள் வெளியாகி விளங்குகின்றனவாம். இச் சக்திச் செயலால் எல்லாக் கிரியைகளும் நிகழ்கின்றன. வான்வெளி முதல் எங்கும் நீல வண்ணத் தோற்றம் ஏற்பட்டுள்ளது.

தாவரம் முதலிய உயிர்களைப் பார்க்கின்றோம். அந்த உயிர் வடிவங்களில் உயிர்ச்சக்தி எப்படி இருக்கின்றது என்பதை ஒவ் வொன்றின் விளக்கத்தைக் கொண்டும் இயக்கத்தைக் கொண்டும் தான் உணரமுடிகின்றதாம். ஆனால் இந்த உயிர்ச்சக்தியோ தன்னுள் கொண்டுள்ள கடவுட்சக்தியை மறைத்துக்கொண் டுள்ளது. அதனை நாம் காண முடிகின்றதில்லை.

(3) பச்சைத் திரை

817. பச்சைத் திரையாற் பரவெளி யதனை
818. அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உயிர் உணர்விலே அறிவு விளக்கம் உண்டாகின் றது. அது முதலில் புலன் உணர்வாக விளைவுறுகின்றது கீழான உயிரினங்களில் எல்லாம். மனிதனும் இந்நிலை நின்று மேற்செல்ல உள்ளான். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் ஆகிய மூன்று ஆதாரங்களில் அறிவுக் கணபதியும், படைப்புப் பிரமனும், காத்து வளர்க்கும் பச்சை வண்ணத் திருமாலும் உள்ளனர் என்பது யோகியர் அனுபவம். இம்மூன்று நிலையில்தான் உலகம் இன்று அதிகம் திளைத்து உழன்று கொண்டிருக்கின்றது. செழுமையான உலகம் பசுமையான காட்சியால் மக்கள் வாழ்வில் உண்மையை விளக்க உள்ளது. இது அபக்குவிகளுக்கு கருமையிற் பச்சை வண்ண அசுத்தமாயா மறைப்பாகஇருந்து அஞ்சும் வாழ்வும் அழிவையும்

தருகின்றதாம். சுத்த மாயாசக்தி பொன்மையிற் பச்சைத் திரையாய் விளங்கி மேலேற்றி அறிவு ஒழுக்கம் பூண்டு ஓங்கச்செய்வதாம். இத்திரை, கடவுட் பராசக்தியின் ஈரம்சம் கொண்டதாய்க் காண்கின்றோம்.

இறைவனின் இயற்கை எழில் பசுந்திரையாக, அவரையே மறைத்து, மனித இனத்தில் மருள்மயக்கத்தை வளர்த்து வாழ் வில் பேரச்சத்தை விளைவித்துள்ளதாம். இந்த மருள் விலகினால் அருள் ஒளி தோன்றும். உலகெல்லாம் அருளிறைவன் கூறு என்பது அருளால் தான் காணலாகும்.

(4) செம்மைத்திரை

819. செம்மைத் திரையாற் சித்துரு வெளியை
820. அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந் நாலாவது திரை, நான்காம் ஆதாரமாகிய அனாகத பீடத்தில் செயல்படுகின்ற மன அறிவுக்கு ஒரு மறைப் பாக, காப்பாக இருந்து பக்குவத்தே உண்மையைக் கண்டுகொள் ளச் செய்வதாம். சித்துரு என்றது அறிவுருவாம். இது மனோ வெளியில் இச்சா சக்தியாக இருப்பது. இந்த மனோசக்தியால் தான் எத்தனை அழகுக்கலைகள் தோன்றியுள்ளன! அவ்வளவும் இறையுண்மை விளக்கவேண்டியிருக்க, அபக்குவ வசத்தால் அந்த உண்மையை நன்கு மறைத்து, மக்களை இச்சையிலே மூழ்கி இன்னலிலே அழியத்தான் செய்து கொண்டுள்ளனவாம்.

இச்சாசக்தி என்னும் மனோ ஆற்றல், இறைநிலைக்கு ஏறாது, மாறாக மாயா போகத்தில் இறங்கிக் கரையேற வழிதுறை காணாது அவலமுறும்படி செய்கின்றது மன்பதையை. மனோ அறிவால் எவ்வளவு பெரிய உண்மைகளைக் கூட அறிந்து மறை யாகமங்களையும் ஞான நூல்களையும் வெளியிட்டுள்ளான் மனிதன்; என்றாலும், இந்த ஞானத்தால் இச்சாசக்தி அருட்சக்தி யாக மாறிடுமுறை அறிந்து அனுபவத்தில் ஆக்கிக்கொள்ளப்பட வில்லையே! மாயா மறைப்புத் திரைகளைக் கூட முன்பே கண்டு விட்டான் மனிதன். அந்நிலைகளை அன்று 7 பிறப்புகள் என்றும், 7 ஞானபூமிகள் என்றும், ஆதாரசக்தி, வியாகிருதி, ஏழ்பரி, இலேஸ்யை, சப்தசுரம், சப்ததாது முதலியனவாகக் கற்பித் துள்ளனர்.

(5) பொன்மைத் திரை

821. பொன்மைத் திரையாற் பொருளுறு வெளியை
822. அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந்தப் பொன்னிறமான திரையை ஞானசக்தி என்பர். உலகம் பொருள்மயமானது. எத்தனையோ பொருள்கள் விதவிதமாகக் காணப்படுகின்றன. அந்தப் பொருள்கள் எல்லாம் பரம்பொருளின் பெருஞ்செயலால்தான் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை அந்தப் பரம்பொருளைக் கண்டுகொள்ளச் செய்யாது மக்கள் மனத்தை அறிவை மயங்கச்செய்து கொண்டுள்ளனவாம்.

இந்தப் பொருள்கள் மாயா தோற்றம் எனப்படும். மாயை என்றால் பொய் அல்லது இல்லாதது என்று பொருளல்ல. இந்தப் பொருள் தன் அகத்தே உண்மைப் பரம்பொருளைக் கொண்டுதான் விளங்குவது. ஆகையால், ஞானத்தால் புறப் பொருட்குள்ளிருக்கும் மெய்ப்பொருளைக் கண்டுகொள்ளுவது ஞானசக்தியின் அனுபவமாம்.

இன்றைய உலகம் பொன் பொருள் மீது அவா மிகக்கொண்டு எவ்வகையிலும் பெற்று இன்பம் காணவே முனைகின்றது. இதனால் எவ்வளவு கேடுகள் விளைகின்றன, அழிவுகள் உண்டாகின்றன என நன்கு அறிகின்றோம். இந்தப் பொற்றிரையால், ஞானம் கூட அழிவுக்கே காரணமாகச் சூழ்கின்றதாம். கடவுள் சுத்த அருட்பொன்னாக யாவற்றுக்கும் உள்ளீடாய் இருப்பதை யுணர்ந்து அடைய முயலாதவரை மாந்தர் வாழ்வில் புறப் பொன்னாசையால் தீமையே பெருகும். கடவுளே உண்மையில் அருட்பொன்னாக இருப்பதை மன அறிவும் பொய்ஞ்ஞானமும் காண்கின்றதில்லை. ஆகையால் மண்தரு பொன்னையே மதித்துக் கொள்கின்றனர். இப் பொன்னே உண்மையை மறைத்துக் கொண்டுள்ளதாகும். அறியாமை நீங்கினால், உண்மை விளங்கும். அன்பு செயல்பட்டால் அருள்கிடைக்கும். அருளால்தான் பொன்னுருவாகிய சுத்த தேகம் பெறலாகும்.

(6) வெண்மைத் திரை

823. வெண்மைத் திரையான் மெய்ப்பதி வெளியை
824. அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) மெய்ப்பதி, கடவுளின் பரமாகாச சொரூபத்தைக் குறிப்பது. இந்த ஆகாசம் நிர்மலமான தூயநிலையாகும். இதனால் இது வெண்மை நிறமுடையதாய்க் கொள்ளப்படுவது. இந்த வெண் திரையால் உள்ளிருக்கும் இறையொளி மறைக்கப்பட்டுள்ளதைச் சுத்த மனத்தினர் காண்பர். இது கடவுளின் ஆதிசக்தி என்கின்றனர். அனாதியாக வுள்ள கடவுள் உண்மை அருட்பெருஞ்ஜோதியாக உள்ளது. அந்தக் கடவுளை மனிதன் அறியாமல் இருக்கின்றான். கடவுள் அருளே உண்மையை அறிவிக்கத்தான் பிரிவற இருக்கின்றது. இருந்து அது (அருள் தானே) கடவுளை மறைத்துக்கொண்டிருக்கின்றதாகக் கருதுகின்றான் இவன். மின்சார விளக்கு எரிகின்றது. குமிழ் சூழ்ந்திருப்பது உண்மையே. ஆனால் அக்குமிழ் விளக்கை மறைத்துக் கொண்டிருப்பதாகக் கொள்வது எவ்வளவு அறியாமை! அக் குமிழே ஒளியை விளங்கச் செய்கின்றது உண்மையாம்!

அனாதியான பரம்பொருளின் ஒர் அணுவே ஆன்மாவாய் இருக்கின்றது. இந்த ஆன்மாவே, மனிதனில், வித்தாய், முதலாய், ஆதியாய் இருந்து ஜீவ தேக வடிவில் விளங்கிக் கொண்டிருக்கின்றது உண்மையாம். அப்படித் தூய ஜீவான்மா திகழ்கின்ற இடம் புருவமத்திய லலாட பீடமாகும். இந்தக் கடவுளான்மாவை மறைத்திருப்பதாகத் தோன்றுவது அருளாகிய ஒன்றே வெண்மைத் திரையாக உள்ளதாம். இந்த அருள்தான், மிக நெருக்கமாக, ஆன்மாவையும், கடவுளையும் மறைத்திருப்பது போன்றிருக்கின்றதாம். இவ்வருள் வெண்திரையே ஆதிசக்தி என்கிறார்கள்.

(7) கலப்புத் திரை

825. கலப்புத் திரையாற் கருதனு பவங்களை
826. அலப்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந்த ஏழாம் திரை, முன் கூறிய ஆறு வண்ணத் திரைகளின் கூட்டுவண்ணமான ஒன்றாம். ஏழாவதாகிய நிராதாரத்திலுள்ள பரம்பொருள் விளக்கத்தையே மறைப்பதாம். இங்குள்ள பரம்பொருள் ''அணுத்துவமாய்'' அருகி அதனால் தன் முழு உண்மையும் இந்த அணு நிலையிலே கண்டு அனுபவிக்கப் படக் கூடியதாயிருக்கின்றதாம். இதனால் இச் சக்தி சிற்சக்தி எனவும் படுகின்றது.

கடவுள் உண்மை ஆன்ம வடிவில் அருட்பெருஞ்ஜோதி கொண்டுள்ளது. இது தனிப்பெருங்கருணையோடு சிற்றுருவில் திகழ்கின்றது. இத் தனிப்பெருங்கருணையே ஆறு வண்ணக் கலப்புச் சக்தியும் கலந்த ஒன்றாக, ஆறு நிறக் கலப்புத் திரை யாக்த் தோற்றுகின்றது, மறைத்துக்கொண்டிருப்பதாகக் கருதப் படுகின்றது. நிறம் ஒன்றும்தோன்றாத சூரிய ஒளியிலே ஏழ் வண்ணம் கலந்தும் ஒளிநிறமற்ற, ஒன்றாய்த் தோற்றுகின்றதே போலத்தான் கடவுளின் தனிப்பெருங்கருணை ஒன்றிலே, மாயா சக்தி, கிரியா சக்தி, பராசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, ஆதிசக்தி, சிற் சக்தி என்னும் ஏழ் சக்திகளும் இருந்து பக்குவமுண்டாக உண் டாக ஒவ்வொரு சக்தியும் தன்னுண்மையைக் காட்டி அனுபவத் தைக் கூட்டிவைக்கும் இடம் இந்த சிரநடு சிற்சபையேயாம். இப் பக்குவ மனித உடலே சப்த தாதுக்கள் கொண்டுள்ளது. இதுவே ஏழு மாயாதிரையாகவும் கொள்ளப்படும். இந்தத் தேகம் கடவுள் உண்மையான அருட்பெருஞ்ஜோதியை விளங்கச் செய்துகொண்டுள்ளதே உண்மை. மறைத்துக்கொண்டிருப்பதாக நினைப்பது சரியல்ல- ''பல்பு'' மின்சார ஒளியை மறைப்பதல் லவே. ஆகையால், உடல் அழியாதிருக்கவேண்டியது எவ்வளவு இன்றியமையாதது என்று தெளிவாகும்.

(8) வேறு திரைகள்

827. விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால்
828. அடர்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) விடயம் என்றது விஷயம் என்ற வடமொழியின் தமிழாக்கம். இதற்குப் பொருள், புலன் ஆம். இப்புலன் ஐந்தாக உள்ளதாம். அவை, மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம் பொறி நிலைகளாம். இவ்வைந்தின் வாயிலாகத் துய்க்கப்படு கின்ற பரிசம், ரசம், ரூபம், கந்தம், சப்தம் ஆகிய உணர்வு அனுப வங்களே புலன் அனுபவம் என்னும் விஷயமாகக் கொள்ளப்படும். இவ் விடயானந்தம், விடய சுகம் உடல் சம்பந்தப்பட்டது. இதில் அழுந்திக் கிடக்கும்போது, உள்நின்று ஒளிர் கடவுட்பேரின்பம் சிறிதும் விளங்குவதில்லை. ஆகவே, இந்தப் புலனிச்சையும், இன்பானுபவ உணர்வும் இருக்கும்வரை அருட்சுக அனுபவம் வெளிப்படாது மறைந்தே கிடப்பதாம்.

புற அழகுத் தோற்றங்களிலே மகிழ்ந்துநின்று அந்த ரசனையிலே யாவையும் மறந்துநின்று பழகினவனுக்கு இறை ஒளிக் காட்சியும் அதனில் இன்பமும் எப்படி விளங்கும்? விளங்காது.. ஆகவே இந்த எழிற்காட்சிப் புலன் அனுபவமே ஒரு திரையாக இருந்து மறைக்கின்றது என்கின்றோம். இதுபோல் மிகுதியான சுவையுடைய பொருளிலே இச்சை வயப்பட்டுத் துய்த்துக்கொண்டிருப்பவனுக்கு, அருளமுதமும் அதன் அருட் சுவையும் எப்படி விளங்கும்? விளங்கவே விளங்காது. ஆகவே இந்தச் சுவையான புலன் அனுபவமும் ஒரு மறைப்பே எனப்படு கின்றது. இதுபோல் மற்ற புலன் உணர்வுகளும் உண்மையை மறைக்கும் திரைகளே போன்றுள்ளனவாம்.

மனிதனுக்கு இந்தப் புலனின்பத்தில் பற்றுண்டாக்கித் துன் பப்படவா இறைவன் தோற்றுவித்துள்ளார்? இந்த இன்பம் பொய்யானது, நிலையற்றது என்ற தெளிவு வந்து இவற்றை அற விடுத்து மெய்யின்ப நாட்டம் உண்டாக்கி, தயாவாழ்வு மேற் கொண்டு இறை இன்ப நிலைபெறச் செய்யவே இதனை நம் பதி ஏற்படுத்தியுள்ளார் என்பது உண்மை.

(9) தத்துவத் திரைகள்

829. தத்துவ நிலைகளைத் தனித்தனித் திரையால்
830. அத்திற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) எங்கும் தானாய் இருந்தும், தனது உண்மையை வெளிக்காட்டாது, மறைத்துக்கொண்டுள்ளதாகக் கடவுளைப்பற்றி எண்ணுகின்றனர் மக்கள். அந்தப் பரம்பொருள்தானே எல்லா மாய், எவருமாய், எங்கெங்கும், என்றென்றும் இருப்பதாகக் கேள்விப்படும் மக்கள் உண்மையில் அந்தப் பரம்பொருளை எதி லும், எங்கும் எவ்விதத்திலும் காணாதிருக்கின்றனர், பெரும் வியப்புதான்! கண்டனவெல்லாம் கடவுள் தோற்றம் என்பதை அறிந்து அடையாது, அனுபவியாது, அறியாமையில், அல்லலில் உழல்கின்றனர் மக்கள். ஒவ்வொரு பொருளிலும், உயிரிலும், ஆற்றலிலும், தோற்றத்திலும் ஒன்றான கடவுளியல் இருந்துதான் அதுவதுவாகத் தோற்றியுள்ளது என்பதை அபக்குவத்தால் அறியமுடிகின்றதில்லை. பக்குவம் உண்டாக வேண்டும், உண்மை அறிவு விளங்குதல் வேண்டும். அந்த அறிவுக்கண் கொண்டு

நோக்கினால், மறைப்புகள் எல்லாம் நீங்கிக் காண்பன யாவும் கடவுளின் புறநிலையே என்பது தெளிவாகும். அந்தப் புறத் தோற்ற நிலைகட்குக் காரணமான ஒன்றுதான், அகமிருந்து அது அதுவாக விளங்கச் செய்துகொண்டுள்ளதெனத் தெளிகின்றோம். அந்த அகப் பரம்பொருமே நமது உண்மையாய் இருந்து நாம் ஒவ்வொருவருமாய் விளங்குகின்றதாக அறிகின்றோம். இப்படிப் பலவாகிய தோற்றங் கொண்ட உலகில், அகநிலை நின்று காணும் நாமே அது அதுவாய் இருக்கின்றது உண்மையே. இந்த அக உண்மையே தத்துவம் எனப்படுகின்றது. தத்துவம் என்றாலே ''அது நீ'' என்றுதான் பொருளாம். காண்பன ஒவ்வொன்றும் நாமே யாவோம். இவ்வுண்மை அறியாதிருக்கும் ஒருவனுக்கு, உண்மை யுணர்த்தி அறிவுகொளுத்தும் வகையில் ஒவ்வொன் றையும் குறிப்பிட்டு, அது நீ, அது நீ, தத் துவம் என்று கூறுவ தாகக் குறிக்கப்புடுகின்றது. அபக்குவத்தில் தத்துவம் மறைக்கும் திரையாயிருக்கின்றது. பக்குவத்தில் உண்மையை விளக்கிக் காட்டுவதாம்.

(10)

831. திரை மறைப்பெல்லாந் தீர்த்தாங் காங்கே

832. அரசுறக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அறியாமையினால் எங்கெங்கு பார்த்தாலும், அனந்த வண்ணத் தோற்றப் பொருள்களும், உயிர்களும், ஆற்றல் களும், செயல்களும், தத்துவங்களும் அனுபவங்களுமே தோற்று கின்றன. அவை ஒன்றுக்கொன்று பொருந்தியும் பொருந்தாமலும் ஒற்றுமையும் வேற்றுமையும், கட்டுப்பட்டும் சுயேச்சையாயும் பல வாயும் எண்ணடங்காதனவாயும் இருக்கக் காண்கின்றோம். இவை எல்லாவற்றையும் ஒழுங்காகவும், மாறுபாடின்றியும், தடைபடா மலும் முறையாகப் பன்னெடுங்காலமாக விளங்கச்செய்ய வேண்டு மானால் எப்படி, எத்தனை கோடிப் பேரால் பிசகாமல் நிர்வகிக்க முடியும்? பலராலே முடியாத ஒன்று, ஒருவரால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்துகொண்டு எப்படிச் செய்ய முடியும்? முடியா தென்பதே யாவருடைய பதிலுமாம்.

ஆனால், நமது அருட்பெருஞ்ஜோதி அம்பலத்தார் ஒரே ஒருவராகத்தான் இருக்கின்றார். அந்த ஒருவரே தன் பேரருட்

பெருஞ்சக்தியால் எவ்வுயிர்க்கும், எப்பொருட்கும், மற்றெவ் வொன்றுக்கும் உள்ளீடாய் இருந்து அது அதுவாய் ஆகி விளங்கு கின்றார் என்பதைக் காணும்போது, உண்மை அறிய முடிகின்றது. எதுவும் அம்மெய்ப் பொருளை மறைக்கும் திரையாக வில்லை என் பதும், அதுவே எங்கெங்கும் நிறை ஆற்றலொடு அருளாட்சி புரிந்து கொண்டுள்ளது என்றும் அறிகின்றோம்.

199. அருளில் தெருட்டல்

(1)

833. தோற்றமா மாயைத் தொடர்பறுத் தருளின்
834. ஆற்றலைக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அருள் உண்மையாகிய கடவுள் விளக்கம் அறிவில் வெளிப்படுவதாயுள்ளது. உணர்வு, செயல், பொருள், ஆகிய மூன்றில் கடவுள் உண்மை வெளியாகும். இவற்றில் நடுவுள்ள செயலால்தான், புறத்தில் பொருளின் தோற்றமும், அகத்தில் உணர்வு் அனுபவமும் உண்டாகின்றனவாம். பொருட்சக்தியில், கிரியா சக்தியும், மேல் ஞானசக்தியும் தோன்றுகின்றன. இந்தக் கிரியாசக்தியே இங்கு மாயாசக்திச் செயலாக உள்ளதாம். இம் மாயையின் புறநிலைப் பிரபஞ்சத் தோற்றம் மகாமாயை எனவும், அகநிலை அறிவு உணர்வு அனுபவம் திரோதாயி எனவும் கூறப் படும். திருவருள் அனுபவம் உண்டாகும்போது, உணர்விலே சுத்த இன்பம், உயிரில் நித்திய ஆற்றல், தேகாதி பொருளில் அழியாநிலை விளங்கும்.

இங்கு அருளில் தெருட்டல் என்ற தலைப்பு கொடுக்கப் பட்டுள்ளது. இந்தப் பிரபஞ்சம் காரியப்பாட்டில், உலகம் தோன்றி உயிரினங்களை வளர்த்துள்ளதும், அந்த உயிரிலே அறிவு தோன்றி மனிதனில் அருளனுபவம் ஏற்படுகின்றதும் திருவருளின் தெருட்டற் செயலேயாம். தெருட்டல் என்றால் பக்குவப்படுத்தல் ஆம்.

மகாமாயை ஆகிய சூழ் பேருலகில் புலன்களைக் கவரும் தோற்றங்கள் நிறைந்துள்ளன. எனவே, மனித மனம் இயல் பாகப் புலன்களின் வழியே, மலைவீழ் அருவிபோல், குதித்தோடிப் பாய்ந்து குழியில் சேர்கின்றது. இப்படிப் புலன்நெறியில் விரைந் தோடி அழிவுறும் மக்களைச் சிறிது சிறிதாக உலகபோகத்தினிடத்

தில் நிராசையை உண்டாக்கிப் பற்றறச் செய்து, அகமுகமாகத் திருப்பி அருளின் பேராற்றலைக் காட்டி வாழ்விக்கின்றார் நம் பதி. இதுதான், அருளில் தெருட்டல் என்றதன் கருத்து. அருளில்-அருளினால்.

(2)

835. சுத்தமா மாயைத் தொடர்பறுத்(து) அருளை
836. அத்தகை காட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) மகாமாயை முன்பு தோற்ற மென்னும் அடை கொடுக்கப்பட்டது. இங்கு சுத்தம் என்னும் அடை வழங்கப்பட்டுள்ளது. தோற்றம் பக்குவப்படாத அசுத்த நிலையைச் சுட்டினதாகவும், அதில் உண்மை முற்றும் மறைந்து கிடந்திருந்த பலகாலும் உலக வாழ்வில் பட்டுப் பட்டுத் தெளிவுற்று மேனிலையுறுவதாகவும் கொள்ளப்படுவதாம். அப்படிப் பல பிறப்பு கடந்து பண்பாடுற்ற உள்ளம் அதிவிரைவில் உண்மையில் நாட்டம் கொள்கின்றது. அபக்குவ மனம்தான் அசுத்த மாயாநிலையிலுள்ளது; சுத்த மனம் பக்குவமுற்ற உள்ளம் சுத்த மாயா நிலை யுற்றதாம்.

அப்படிச் சுத்தமுற்ற மனம் இயல்பாகவே பிரபஞ்ச போகத்திடத்தில் அதிக நாட்டமின்றி அருள்நெறியை விரும்பி, அகம் திரும்பிவிடுகின்றது. அப்போது இறை அருளே அந்தப் பக்குவியை வரவேற்றுத் திருவருளாலே உண்மையைக் காட்டி (அம்மாயையின் தொடர்பறுத்து) அருளிற் கூட்டிவைக்கின்றதாம்.

(3)

837. எனைத்தா ணவமுத லெல்லாந் தவிர்த்தே
838. அனுக்கிர கம்புரி அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆன்மாவானது கடவுள் சிற்றணுவுருவாக இருக்கின்றது. கடவுள் உண்மை, ஓமென்னும் பிரணவ அருள்மயமாகும். ஆனால், இந்த அருள் அனுபவம் ஏற்படாத நிலையில் அந்தக் கடவுள் சிற்றணு ஆன்மாவாக, பிரணவமாகிய அருளனுபவமின்றி இருக்கின்றதாம். பிரணவ அருள் ஆணவ (மலமாகிய) இருள்நிலையாக உள்ளதாம். பிர + நவம் = பிரணவம், இது

போல் ஆ + நவம் = ஆணவம் ஆகத் தெரிகின்றது. இந்நிலையில் திருவருட்செயலால் அவ்வணுவினைச் சூழ உருவாகி விளங்கும் உருவும் செயலும், மாயா கன்ம மலங்களாகத் தோற்றுகின்றனவாம்.

கடவுள், மலம் என்பது சிறிதும் இல்லாத அனாதிமுத்த சித்து வடிவினர் எனவும், ஆன்மா-ஆணவமாகிய மூல மலத்தை அனாதியே கொண்டுள்ளது ஆதலின், இயற்கையில் ஓரளவு மலமுடையது எனவும், ஜீவன் அல்லது மனிதன், இயற்கை ஆணவத்தின் மேல் செயற்கையான மாயா கன்ம வடிவு கொண்டு விளங்கலின், முழுதும் மல வடிவினனே எனவும் கூறப்படும். மேற்படி ஆன்மாவுக்குப் பரிபாகம் உண்டாகித் திருவருளால் ஆணவம் ஒழிந்திடக் கடவுள் ஐக்கிய முத்தி சித்திக்கும் என்பது, சித்தாந்தம். இவை எல்லாம் இதுவரை நம்பப்பட்டன, முயலவும் பட்டன; ஆனால், முடிவோ, அனுபவ வாழ்வில் விளங்காத ஒன்றாய் மறைந்தே விட்டதாம்.

இன்று சுத்த சன்மார்க்க அருட்பெருநிலையால், நம் கடவுளான்ம உண்மை தெற்றென விளங்குகின்றது. அருட்பெருஞ் ஜோதியால் ஆணவத்தின் நிழல்கூடக் கொஞ்சமும் படாத நம் உண்மைநிலை கண்டு கொள்ளப்படுகின்றது. இத்தனை காலமாக, ஆன்மாவின் அகமிருந்து ஆண்டுவந்த ஆண்டவர், ஆக்கல், காத்தல், அழித்தல், (மறைத்தல் அல்லது) பக்குவம் வருவித்தல், அனுக்கிரகித்தல் ஆகிய செயலால், தாமே நமது உண்மையாய் நாமாய் இருக்கின்ற நிலையைக் கண்டு கொள்ளச் செய்துள்ளார். இதனால் ஆணவமாதி எல்லா மல மறைப்பும் ஒழித்துவிட்டார்; அனுக்கிரகம் புரிந்து விட்டார், அருள் பாலித்துள்ளார் என்பது உண்மையாம். எனைத்து = சிறிது, சிறிதளவு.

(4)

839. விடைய மறைப்பெல்லாம் விடுவித் துயிர்களை
840. அடைவுறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) விடைய மறைப்பு என்பதை, விடய மறைப்பு எனத் தவறாகக் கொள்ளக்கூடாது. விடைத்தல் என்ற சொல் பிரித்தல், தடுத்தல், வருத்தல் முதலிய பொருள் கொண்டதாம்.

அறியாமைதான் உண்மையில் பெரும் மறைப்பாகக் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில், வலிய இரும்புத் திரையாக இருந்து கொண்டு பிரிவு செய்து கொண்டுள்ளதாய்த் தோற்றுகின்றதாம். இஃது, மனோமயக்கத் தோற்றமே யல்லாது உண்மை அல்ல. இதனைப் புரிந்துகொள்ளாமல்தான், சமய மத மார்க்கிகள் பலரும், மனிதன் கடவுளைப் பிரிந்திருப்பதாகவும், அறிந்தும் அறியாமலும் செய்த ஏதோ குற்றத்திற்காகத், தன் புனித நிலை யினின்று தாழ்த்தப்பட்டு, இப் புவிநிலைக்குத் தள்ளிவிடப் பட்டிருப்பதாகவும், இயல்பாக இழிநிலை மனிதன், புனிதனாகும் பொருட்டே இங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளான் எனவும், ஆணவ மல சகித ஆன்மாவுக்கு, அம்மல ஒழிவுக்காக மேலும் மாயா கன்ம மலங்களையும் கூட்டி இவ்வுலகிடை வருவிக்கப்பட்டிருப்ப தாகவும், வேதமோதித்தான் தன் அகம்பிரம்ம நிலையை யறிந்து கொண்ட வேதாந்தியும், தனது உண்மை நிலையை மறந்து பிரிந்து பொய்யான மாயா தேகநிலையிற் சிக்குண்டு உலகில் உழன்றும் கொண்டிருப்பதாகவும் எண்ணமிட்டுக் கொண்டுள் ளனர் அப்பழநெறியாளர் ஒவ்வொருவரும்.

அப்படி மனிதன் கடவுணிலையிலிருந்து பிரிந்துள்ளது என்பது உண்மை அல்ல. ஆகையால் இவனை எதுவும் இறை நிலையுறத் தடுக்கின்றதுவுமில்லை. துன்ப வாழ்வில் வருந்தி யுழலச் செய்கின்றது ஒன்றுமில்லை. எல்லாம் அறியாமையால் விளைந்துள்ளனவே என்று இன்று அருளால் தெளிவாக அறி கின்றோம். இக் குறிப்பே இங்கு, விடைய மறைப்பெல்லாம் விடுவித்ததாகவும், அப்படி விடுவித்து மேனிலை அடைவுறத் தெருட்டப்பட்டுள்ளதாய் மொழிந்துள்ளார் நம் வள்ளல்.

(5)

841. சொருப மறைப்பெலாந் தொலைப்பித் துயிர்களை
842. அருளினிற் றெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆன்ம இயற்கையாகிய காரண வடிவம், சுபாவ வடிவம் எனவும், மேல்சார்ந்து விளங்கும் சூக்கும வடிவம் சொரூபம் எனவும், அதனைச் சூழ்ந்துள்ள புறவுடல் வடிவமே ரூபம் அல்லது உருவம் எனவும் கொள்ளக்கூடும்.

மனிதன் கண்ணால் காண்கின்ற வடிவங்கள் தூலமானவை. அவை ஒரு சிலவேயாம். ஆனால், அவன் மனக்கண்ணால், சாக்கிரத்திலும், சொப்பனத்திலும் காண்கின்ற பலவாகிய வடிவங்களும் சூக்குமமானவைகளேயாம். சுபாவமாகிய ஆன்ம வடிவம் எல்லோராலும் காணக்கூடியதாயில்லை; மெய்ஞ்ஞானியர்க்கே தோற்றும் காரண வடிவமாய் உள்ளதாம். இந்த மூவகை வடிவினும் உண்ணின்று விளங்கிக்கொண்டு, அவற்றை விளங்கச் செய்கின்றது கடவுள் உண்மையே ஆம். இக் கடவுள் உண்மை வடிவம்தான், மனிதனுக்குத் தோற்றாது மறைந்தே இருக்கின்றது. ஆகையால் இவ்வடிவங்களை எல்லாம் மறைப்பாகக் கருதுகின்றான். இப்படி மறைக்கும் வடிவங்களில் மிக அதிகமானவை சூக்கும சொரூபங்களேயாம். ஆதலின், அந்தக் காரணக் குறிப்பாகத்தான் ''சொரூப மறைப்பெலாந்'' தொலைப்பித்து என்று அருளியுள்ளார். அருளினால்தான், அருள் அறிவினால்தான் இந்த அறியாமை மறைப்பு தவிர்க்கப்படுகின்றது உண்மையே.

(6)

843. மறைப்பின் மறைந்தன வருவித் தாங்கே

844. அறத்தொடு தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆன்மாக்கள் உடலுள் மறைந்து இருக்கின்றன. தேக வாழ்வுக்கு இந்த ஆன்மாதான் ஆதாரமாய் இருக்கின்றது. ஆன்மா மறைந்து இருக்கின்றதால் அதன் இயல் உண்மை விளக்கம் இன்னது என்று எல்லோராலும் தெரிந்துகொள்ள முடிகின்றதில்லை. புலனறிவுக்கு விளங்காத ஆன்ம உண்மை அக ஓர்மையால் தவயோகியர்க்கு ஒருவாறு வெளிப்பட்டிருக்கின்றது. அதுவும் சுத்த சன்மார்க்க அருள் ஞானம் வெளிப்படாத காலத்தே கண்டு உரைக்கப்பட்ட ஆன்ம உண்மையும், அதன் இறை பேரியல்பும் ஏகதேச விளக்கமாகவே இருக்கின்றன. ஆகவே, அக உண்மை இதுகாறும், மறைப்பினின்று முழுதாக வெளியானதில்லை என்பது தெளிவு.

உடல்தான் ஆன்மாவைச் சூழ உருவாகி வளர்வதும் தளர்வதும் அழிவதுமாய் இருக்கின்றது. தேகப் படைப்பில் இம் முத்தொழில் செயல்படுகின்றதை எல்லோரும் அறிவர். ஆனால், இவ் உடலுள்ளிருந்தும் மறைந்து போகின்ற ஆன்மா, பின்னர்

மற்றொரு பிறவி வடிவில் எப்படி வந்து தோற்றுகின்றது என்பதெல்லாம் சாதாரணமாய் அறிந்துகொள்ள முடிகின்றதில்லை தான். மறைப்பின் மறைந்தன, அதாவது தேகத்தில் மறைந்து விளங்கிய ஆன்மா, தேகத்தைவிட்டு நீங்கும்போதும் மறைந்தே போய்விடுகின்றது. அப்படி மறைந்துபோன அவ்வான்மாவைப் பக்குவப்படுத்தி பிறிதொரு கருவில் வெளியாக்கப்பெற்றுப் புதிய உருவொடு உலகில் வருவிக்கப்படுகின்றது. ஆனால் அந்த உருவிலும் அவ்வான்மா மறைந்துதான் இருக்கின்றதாம். இப்படி எத்தனையோ உருவில் அஞ்ஞாதவாசம் (மறைந்து உறைந்த) முடிவில்தான் சுத்த அருள் ஞானம் பெற்றுத் தெளிவுறுகின்றதாம். இச்செயல் நம் பதியின் அருள் அறப்படி நிகழ்கின்றதாம்.

(7)

845. எவ்வகை யுயிர்களும் இன்புற வாங்கே
846. அவ்வகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) நாம் அறிந்தும் அறியாமலும் எத்தனையோ உயிரினங்கள் இவ்வுலகில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இதுபோல் இன்னும் எத்தனையோ உலகுகளில் எவ்வளவோ உயிரினங்கள் இருக்கின்றனவாம். அவைகளை எல்லாம் தோற்றுவித்தும், காத்தும், பக்குவம் வருவித்தும், மேனிலைக்கேற்றியும் கொண்டுள்ள கடவுளின் திருவுள்ளம் எல்லாவற்றிற்கும் இன்பம் அளிப்பதேயாகும். ஒவ்வொரு உயிரும் இன்பமே விரும்பி அடைய முயலுகின்றது. அவ்வின்பம் பொறி புலன் அளவில் இருக்கும்வரை, சிறு இன்பமாக உயிர் உணர்வில் தோற்றி விரைவில் மறைந்து விடுகின்றது. ஆகையால் உயிர்களின் இச்சைப்படி சிறிது இன்பம் வழங்கப்பட்டாலும், அது நிலையற்றுத் துன்பமாய் முடிவதாம். கடைசியாக, மனிதனில் வேண்டுதல் வேண்டாமையற்ற அருள்நாட்டம் உண்டானபோது சிறு இன்பம் பொய்யெனத் தோற்றி இறை பேரின்பத்தில் பற்று ஏற்பட்டு அதனைக் கண்டடைய முயற்சி மேற்கொள்ளப்படுகின்றதாம். கடவுளும் முடிவில் தெளிவருளி இன்பில் நிலவச் செய்கின்றார்.

(8)

847. கடவுளர் மறைப்பைக் கடிந்தவர்க் கின்பம்
848. அடையுறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) தவமகிமையால் சிலர் தேவபதவி அடைந்துள்ளனர். அவர்களையே தேவர்கள் என்றும், கடவுளர் என்றும் கூறு கின்றனர். அக்கடவுளரும் தெய்வநிலை பெற்றவர்களே அல்லாது எல்லாம் வல்ல தனித்தலைமைக் கடவுளுக்கு எந்த வகையிலும் எந்த அளவும் ஒப்பாகார். அவர் அவர்களில் உள் மறைந்து நின்று அவரவர் பக்குவநிலைக்குத்தக இன்பம் வருவித்து, வழங்கு விக்கின்றார். அக் கடவுளர்க்கு மெய்யின்பம் நிறைநிலை அருளற் பொருட்டே இம் மனிதப் பிறவிக்கு வரவழைத்து, அருள் பக்குவம் அடைவித்து அகமறைப்பை நீக்கிப் பேரின்பில் பிறங்கச் செய்கின்றார்.

மக்கள் வாழ்வு விரைவில் தோன்றித் தோன்றிப் பண்பட்டுத் தெருட்சி பெறுகின்றது. தேவர்களின் வாழ்வோ யுகயுகமாக நீண்டு இருப்பதால் அவர்களைப் பக்குவப்படுத்தித் தெருளச்செய் வதற்குப் பல பிறப்பு அடையவேண்டியதில்லை. ஒரே பிறப்பில் தொடர்ந்து பல நூறு ஆயிர ஆண்டுகள் கடக்க வேண்டியுள்ளன வாம். அந்நெடுங்காலமும் நம் பதி உடனின்று தெருட்டும் செயல் எவ்வளவு சிறப்பு உடையது ஆம்!

(9)

849. சக்திகள் மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம்
850. அத்துறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) உயிர்களிலும் பொருள்களிலும் எத்தனையோ விதமான சக்திகள் உள் மறைந்து கிடக்கின்றன. இயக்கசக்தி, ஜீவசக்தி, உணர்வுசக்தி, அறிவுசக்தி, யோகசக்தி, தத்துவசக்தி, அருட்சக்தி முதலியன ஆன்மாவினிடத்தில் மறைந்து கிடந்து கடவுள் தயவால் அம் மறைப்புகள் ஒழிக்கப்படும்போது அங்கங்கு வெளிப்பட்டு விளங்கும். பொருட் பிரபஞ்சத்திலும், அணுவக மின்காந்தசக்தி, அணுத்திரள் உருவசக்தி, சிதைவுறுமாற்று சக்தி, கலவையுறு வேற்றுசக்தி, குணசக்தி யுளவாம். ஜீவர் களிடத்தும், சுபாவகுணசக்தி, ஆக்க அழிவு சக்தி, பக்குவா பக்குவ சக்தி முதலியனவும் வெளிப்படுகின்றன. இந்த எல்லாச் சக்திகளுக்கும் காரணமாய் இருந்து செயல்படுத்துவது நம் பதி யருட்பெருஞ்ஜோதி சக்தியே ஆம். அது இத்தனை சக்தி

களுக்கும் உள்மறைந்து இருந்தே பக்குவப்படுத்தி இன்ப நிலையை அடைவிக்கின்றதாம்.

(10)

851. சத்தர்கண் மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம்
852. அத்தகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பலவாகிய முன் குறிக்கப்பட்ட சக்திகள் எல்லாம் அவைகள் வெளிப்பட்டுத் தோன்றுமுன்னர் சூக்குமமாகவே அங்கங்கு உயிர்களில், பொருள்களில், பூதமுதல் நாதம் ஈறாக வுள்ள தத்துவங்களில், இயற்கையுண்மையாம் சத்துகளில் இயற்கை விளக்கம் செய்சித்துகளில், இயற்கையின்பத்தை வெளிப்படுத்தும் உணர்வுகளில் மறைவுற்றே கிடக்கின்றனவாம். இச்சக்தி நிலையங்கள் எல்லாமும் சத்தர்களாகவே சொல்லப் படும். இச்சத்தர்கள் எல்லாம் அச்சக்திகளை மறைத்து நிற்பவை, பக்குவகாலத்தே மறைப்பு நீங்க வெளிப்பட்டு இன்பங்கொள்ளச் செய்வது திருவருளே.

(11)

853. படைக்குந் தலைவர்கள் பற்பல கோடியை
854. அடைப்புறப் படைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) படைப்புச் செயல் பிரமனால் நடைபெறுகின்றது என்பர். அகர ஆகாசவெளியும், உகர வாயுசக்தியும் கூடிய வெளியில் மகரஜோதிப் பொருள் பலவும் தோன்றுகின்றனவாம். இந்த அகர வுகர மகரமே, அயன், அரி, அரன் என்பது உருவகக் கற்பனை. இவ் அகரமே எவ்வுருவையும் படைப்பதால் பிரமன் படைக்கின்றான் எனப்படுவது. நமது பார்வைக்குற்ற பகுதிப் பிரபஞ்சம் ஒரு பிரமன் சிருஷ்டியே என்ப. இதனைப்போல் கோடிப் பிரபஞ்சம் உள என்பதையும், அதனால் கோடிப் பிரமர் கள் உண்டென்பதையும் இன்று அறிகின்றோம். இப்படிக் கோடிக்கணக்கான படைப்புத் தலைவர்களைப் படைத்துக் கொண் டிருக்கின்றவர் நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஆவர்.

(12)

855. காக்குந் தலைவர்கள் கணக்கில் பல்கோடியை
856. ஆக்குறக் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) பிரமர் கோடியைக் கொண்டு படைக்கப்பட்ட கோடிக்கணக்கான உலகங்களில், எண்ணிலி கோடி உயிர்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. அவ்வுயிர் அனந்தம் கோடியைக் காக்கக் கணக்கில்லாத திருமால்களையும் படைத்துக் காத்து, அனைத்துயிர்களையும் காக்கச்செய்கின்றார் நம் பதி. இக் காப்புச் செயலால் உயிர்கள் உலகில் வாழ்ந்து, வளர்ச்சியும், அனுபவமும் அடைந்து வருகின்றனவாம். எத்தனைமுறை தோன்றித் தோன்றி வாழ்ந்து அக அனுபவமாகிய ஆக்கம் (அறிவுச் செல்வம்) பெருக்கிக்கொள்கின்றன உயிர்கள். முடிவில் இன்பவாழ்வு அனுபவப் படுவதாயிருக்கின்றதாம்.

(13)

857. அடக்குந் தலைவர்கள் அளவிலர் தம்மையும்
858. அடர்ப்பற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அயன் புதிது புதிதாய்ப் படைத்துப் படைத்துக் குவித்துக் கொண்டேபோக, அரியும் படைக்கப்பட்ட எவ்வுயிரையும் சலிப்பின்றி வளர்த்துக்கொண்டே வந்தால், உலகம் என்ன ஆகும்? உயிர்கள் இருக்க இடமின்றி பெரு நெருக்கடி ஏற்பட்டுவிடும். மேலும் வளர்ந்த உயிர்கள் முதிர்ச்சி அடைந்து பின் தளர்ச்சி அடைந்து மிகுந்த அவத்தை யுறும். அப்படி எல்லாம் உலகிடை இட நெருக்கடி ஏற்படாமலும், உயிர்கள் அடர்த்தி ஆகிவிடாமலும், நெடுங்கால வாழ்வால் ஜீவர்கள் அளவுகடந்த துன்பத்தில் ஆழ்ந்துகிடக்காமலும் இருக்க, அளவிலா அடக்குந் தலைவர்களை, அழிக்கும் உருத்திரர்களைத் தோற்றுவித்து முறைப்படி அழிக்கவேண்டிய உயிர்களை அளவிலாது அழித்துக்கொண்டே யிருக்கச் செய்துள்ளார். இதனால் உலகம் சமநிலை யுறுகின்றதோடு உயிர்கள் பக்குவப்பட ஏதுவாகின்றதாம்.

(14)

859. மறைக்குந் தலைவர்கள் வகை பல கோடியை
860. அறத்தொடு மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்பவற்றில், திரோபவம் என்பதுதான் மறைக்குஞ் செயலாம். இத்தொழிலைப் புரிகின்றவர்கள் திரோபவ அல்லது திரோதான சக்தர்களாவர். இந்த மறைக்குந் தலைவர்கள் எண்ணற்றவர்கள் உளராம். இவர்களை எல்லாம் தோற்றுவித்தும், காத்தும், அழித்தும், மறைத்தும் பக்குவப்படுத்துகின்றவர் நமது ஆண்டவரேயாவர். இவர்களை எல்லாம் அருள் அற நியதிப்படி எவ்வளவு காலமாக மறைவில் பக்குவப்படுத்திக் கொண்டுள்ளார் நம் பதி! இவர்களின் மூலம் ஆருயிர்க் கோடிகளையும் பக்குவப்படுத்த வேண்டியுள்ளனவாம்.

(15)

861. தெருட்டுந் தலைவர்கள் சேர்பல கோடியை
862. அருட்டிறந் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) தெருட்டுதல் என்றால் பக்குவமாய்த் தெளிந்து திரட்சியுறச் செய்தல். இதனையே அருளல் அல்லது அனுக்கிரகித்தல் என்று கூறுவர். உடலைப் பிரிந்து போந்த உயிர்க்குப் பக்குவமாய் உரியதொரு கருநிலைக்குக் கொண்டு சேர்த்து அங்கு உருவேற்க ஏற்பாடு செய்தல் இந்த தெருட்டுந் தலைவர்கள் செயலாம். எந்த உயிர் எந்தப் பக்குவ நில்லயில் உள்ளது, அதற்கு ஏற்ற கரு எங்கே எந்தக் கணத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பதை எல்லாம் தெரிந்து கொண்டு, கொஞ்சமும் பிசகாது, விதிமுறைக்கும் பொருந்தத் தக்க இடத்தில் கொண்டு சேர்ப்பது எவ்வளவு நுண்ணிய ஆய்வுத் தொழிலாயிருக்கின்றது! இப்படிப்பட்ட தெருட்டுந்தலைவர்களையே தெருட்டும் தனித் தலைமைப் பெரும்பதியின் திறன் என்னே!

(16)

863. ஐந்தொழி லாதிசெய் யைவராதிகளை
864. ஐந்தொழி லாதிசெய் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந்த மா பிரபஞ்சத்தில் நமது அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் தன் தனிப்பெருங்கருணையால், ஐந்தொழிலாதி செய், ஐவராதிகளையே ஐந்தொழில் செய்துகொண்டிருக்கிறார். யாதெனில், ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் செயல் புரியும், பிரமன், திருமால், அரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய ஐவர்களையும் நம் பதியே ஆக்கியும், காத்தும், அழித்தும், மறைத்தும், அருளியும் கொண்டுள்ளார். இந்த ஐவர்களையும் அன்னார் செயலையும் புரிந்துகொண்டிருப்பது மட்டுமல்ல; இம் மாபிரபஞ்சத்தில் ஐந்தின் விரிவாக எல்லா இயல்களையும், எல்லாத் தோற்றங்களையும், எல்லா நிலைகளையும், எல்லா அனுப வங்களையும் விளங்கச்செய்து கொண்டுள்ளவர் நம் அருட்பெருங் கடவுள் ஒருவரே என்பது உண்மையாம். ஐந்தொழிலாதி, ஐவ ராதி என்றதால் ஐந்தொழிலையும் அவற்றிற்கான ஐவர்களையும் எனக் கொள்ளாது ஐந்தின் விரிவாகத் திகழும் பிரபஞ்சக் காரியம் முழுமையுமே கொள்ளலாகின்றது.

(17)

865. இறந்தவ ரெல்லா மெழுந்திட வுலகில்
866. அறந்தலை யளித்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அறமாவது தன்மை, குணம், தர்மம் என்பர். நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கு அறம், அருளேயாம். அவரைப் பிரியாதிலங்கும் அருள், அவரின் சிற்றுருவான ஆன்மா ஒவ்வொன்றிலும் பிரிவற இயல்பாகவே பொருந்தித்தான் இருக் கின்றது. ஆனால், இந்த அருள் அனுபவம் ஆன்மாவில் வெளி யாகாதவரை, ஒவ்வொரு பிறப்புருவினுள்ளும் செயலற்றுக் கிடக்கின்றதாகவே தோற்றுகின்றது. அப்படிச் சடப்பொருள் போற் கிடக்கும் ஆன்மாவுக்குத் திருவருளாணைப்படி ஜீவனும், தேகமும், போகப் பொருள்களும் இடையறாது வழங்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இந்த ஜீவ தேகப் பொருட்கள் யாவும் அநித்தியமானவை, மாறுந்தன்மை கொண்டவை. ஆனால், அவ்வான்மாவுக்குள்ளிருந்து ஆள்கின்ற அருட்பதிசக்தி, நித்திய, நிறை இன்பமயமானதாம். சடமாய்க் கிடக்கும் ஆன்மாவுக்குப் புறத்தும் அகத்தும் சடவுட்சக்தி இப்படி யிருப்பதை யுணர்கின்றோம்.

இப்போது சுத்த சன்மார்க்க நிறையருளால் நம்மை நாம் ஆன்மாவுக்குள் நித்தியானந்தபதியோடு ஒன்றி இருப்பதை அறிகின்றோம். அறிந்து அவ் அகமிருந்து அனகமாய் வாழவும் அருள் செய்யப்படுகின்றோம். இதனால், அகநின்று விரிகின்ற நித்திய இறைசக்தி ஆன்மாவுக்கு உயிர்ப்பளிக்கின்றது, நிறை இறைவாழ்வும் சேர்கின்றது. இதனால் சூழுயிருடம்பும் நித்தி யானந்தமாய் விளங்கலாகின்றதாம். சடமாய்க் கிடந்த, இறந்தது போலிருந்த ஆன்மா உண்மையில் தேஜோன்மய வடிவுடன் எழுந்துவிட்டது உண்மையாம். ஆதியில் ஆன்மாவுக்கு அறந்தலை யளித்தது, திருவருள் உண்மையைக் கூட்டி வைத்திருந்ததின் நோக்கம், அந்த இறந்தநிலை விட்டெழுந்து இறவா இன்பொடு வாழற்கேயாம். இதுவல்லால் புறவுலகில் மாண்டுபோனவர்கள் மீண்டும் உயிர்த்தெழுவதாகக் கருதப்படுவது முற்றும் பொய். அப்படி இறந்தவர்கள் எல்லாம் எழுவது பயனற்றது, வீணே யாம், உலகமும் கொள்ளாது!

(18)

867. செத்தவ ரெல்லாஞ் சிரித்தாங்கெழுதிறல்
868. அத்தகை காட்டிய அருட்பெருஞ்ஜோதி

(உ-வி) அக ஆன்மாவுள் சச்சிதானந்தபதி விளங்கிக் கொண்டேயிருந்தும், புறத்திலே உயிருடம்பில் முத்தொழிலால் வேதனையும், சோதனையும் தொடர்கின்றன. மரணவாதனையே துன்பச் சோதனையாக இருக்கின்றது. இறப்பால் வேதனை எல்லாம் தீர்ந்துவிட்டதாகத் தோற்றுகிறது. அது அப்படி யொழிவதில்லை, சற்றே ஒளிந்து இருந்து மறுபிறப்பில் தொடர்ந்து வெளியாகி வருத்துகின்றதாம். அப்படிச் செத்த அபக்குவ ஜீவர்களை ஒருவன் தான் பெற்றிருக்கும் அற்புத சக்தி யால் உயிர்த்தெழச் செய்தாலும்கூட, அப்படி எழுப்பப்பட்டவன் தன் இயல் வாதனைக் கூட்டிலிருந்து நீங்காது தோன்றுவதால் அவன் அக மகிழ்ந்து சிரித்துக்கொண்டு எழவும் முடியாது, மேல் ஆனந்தமாய் வாழவும் முடியாது.

ஆகவே ஈண்டு குறிக்கப்பட்ட செத்தவர்கள் என்பது செய லறக் கிடக்கும் கடவுளான்ம வடிவமாகும். நிறையருள் அனுபவத்

தில் மனிதன் தன்னைக் கடவுள்மய ஆனந்த வடிவினனாகக் கண்டு அகநின்று விளங்குவதாய் அறிகின்றான். அப்படி அக நின்றே ஆனந்தமயமாய் அனகமுறும்போது, வாதனையற்ற சுத்த வடிவொடு, சுகானந்த அனுபவத்தோடு வெளிப்படுகின்றான். அவ்வானந்தம் வெளிப்பட உலகிடை வாழ வருகின்றவன், உண்மை அகமகிழ்வோடு, புன்முறுவலோடு தோற்றுகின்றான். இப்படிச் செத்தவர்கள் எழுவது அருட்பெருஞ்ஜோதியின் கருணைத் திறத்தாலாம்.

(19)

869. இறந்தவ ரெழுகவென் றெண்ணியாங் கெழுப்பிட
870. அறந்துணை யெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) திருவருளை ஓரளவு விசேடமாகப் பெற்றிருந்த மகான்கள் தாம் பெற்றிருந்த அவ்வருட்சக்தித் துணையால்தான் ஒருசில இறந்தவர்களை உயிர்த்தெழுப்பியுள்ளனர். அச்செயல், அந்த மகானின் சித்துச்செயலாக மதிக்கின்றது உலகம். ஆனால் அப்படி எழுப்பின மகான்களோ, எழுப்பப்பட்ட மக்களோ அழிவில்லாது ஆனந்தமாக விளங்கினார்களில்லை! அவர்கள் எல்லாம் எப்படியோ அழிந்தே போயினர் என்று அறிகின்றோம்.

இப்போது நம் வள்ளல் அருட்பிரகாசர், அகநிலையிலிருந்து அனகமுற வாழும்படி நேர்ந்துள்ளதால், இவரே முதலில் அக எழுச்சி கொண்டு ஆனந்தமாய்த் திகழ்கின்றார் என்பது உண்மை. இந்நிலை நின்றுதான் ''இறந்தார்'' எல்லாம் எழுக'' என்று உள் ளிருந்து எண்ணும்போதே, திருவருளால் பக்குவ ஆன்மாக்கள் எழுந்தவர்களாகின்றார்கள். இதனையே இங்கு குறித்துள்ளார் நம்-வள்ளற்பெருமான். இவரே மற்றோரிடத்தில் குறிக்கும் போது, ''நீங்களும் என்னைப்போல் பெறுவீர்கள், பெறுகின்றீர் கள், பெற்றுவிட்டீர்கள்'', என்றே உறுதியாகக் கூறியுள்ளார்.

(20)

871. செத்தவ ரெழுகெனச் செப்பியாங் கெழுப்பிட
872. அத்திற லெனக் கருள் அருட்பெருஞ்ஜோதி

(உ-வி) இறத்தல், இறப்பு, சாவு, மரணம் இவையெல்லாம் உயிர்நீத்தலையே குறிக்கும் எனினும், ஒவ்வொன்றுக்கும் தனித் தனிச் சொற்பொருள் அமைந்துள்ளதாம். ஆனால், இவை யெல்லாம் புறவாழ்வும் வடிவும் பற்றிய விளக்கமாகவே அமையும். சத்து அடங்கிக்கிடக்கும் ஆன்மாவையே செத்தநிலையில் இருப்ப தாகக் கொள்ளவேண்டும். அந்நிலைநின்று எழுந்து சத்துசித்து ஆனந்தமாக வாழ்வதே உண்மையில் எழுப்பப்பட்டதாகும்.

திருநோக்கம் பெற்ற திருவாளர் உரு, இறைவண்ணமாய் அம்பலத்திலே திகழ்கின்றது. செத்தவர் எல்லாம் எழுந்திருக் கட்டும் என்றுசொல்லவும், அப்பொழுதே ஆன்மாக்கள் எல்லாம் எழுந்துவிடுகின்றனவாம். இது எவ்வளவு பெரிய ஆற்றல். இதனை சம்புபட்ச ஆற்றல் என்பர். அருள் அம்பலத்தில் இருந்து, தயவால் உருகி இரக்கத்தோடு ஒரு வாக்குக் கொடுத் தால் அதுபோதே பலித்துவிடுவதாம். எனவே இப்பொழுது ஆன்மாக்கள் அகத்தே எழுந்துவிட்டுள்ளன, அனகமுற்றுச் செயலொடு விளங்கவேண்டியுள்ளனவாம். முன் உடல்நீத்து ஆன்மவடிவமாய்க் கருதி யொடுங்கினவர் செத்தவர்களேயாவர். அது சத்தோடு வெளிவந்திடப் புறவடிவும் சாகாநிலை யுறுகின்றதாம்.

(21)

873. சித்தெலாம் வல்ல திறலளித் தெனக்கே
874. அத்தனென் றோங்கும் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அற்புத அருள் ஆற்றல் கொண்டு அருட்பெருஞ் சித்துகள் புரியக்கூடும். கடவுளாகிய அத்தன் நம்மோடு உடனாய் அகவடிவில் இருத்தலின் அவரது எல்லாஞ்செய் வல்லபம் நம் மூலமாக வெளிப்படுதல் முறைதானே. அப்படி வெளிப்பட வேண்டின் நம் மயம் தயவுமயம் ஆகவேண்டும். ஆகி நாம் செய்கின்றோம் என்பது போய், அந்தக் கடவுள் தயவுதான், இச்சிறுமா மனித வடிவினின்று செயல்படுகின்றது என்ற உணர்வு நம்மில் விளங்குதல் வேண்டும்.

இப்படி அகவடிவில் இருந்து விளங்கின நம் அருட்பிரகாச ருக்கு, அத்தன் அருட்செயலாக எத்தனையோ அற்புதச் சித்திகள் வெளியாயின. அவற்றைத் தான் செய்ததாகக் காட்டிக்

கொள்ளச் சற்றும் விரும்பவில்லை அவர். பக்தர்களின் பற்று மிகுதியாலும், பெருமைப்பாட்டாலும் ஒருசில அற்புதச் சித்திச் செயல்கள் பற்றி உலகம் அறிய வந்துள்ளதாம்.

200. தனிப்பொருள்

(1)

875. ஒன்றதி ரண்டது வொன்றினி ரண்டது
876. ஒன்றினு ளொன்றது வொன்றெனு மொன்றே

(உ-வி) இதுகாறும், மேற்போந்த 874 அடிகளில், 437 அருட்பெருஞ்ஜோதி மகுடத்தோடு, முதல்நிலை கொண்ட 3 அருட்பெருஞ்ஜோதியும் பொருந்தி, 440 ஆகி, நம் பதியின் அண்ட பிண்ட நிறைநிலையை யுணர்த்திக் கொண்டுள்ளதாம். இனி அருட்பெருஞ்ஜோதி என்னும் சொல் ஒருவாறு வெளி யிடாது பிற்பகுதியில் வழங்குகின்றார்.

இது, தனிப்பொருள் என்ற தலைப்போடு ஆரம்பமாகின்றது. ஆம், நம் பதி, தனித்தலைமைப் பெரும்பொருளாய், ஒருவரேயாக விளங்குதல் சத்தியம். ஆனால், அந்த ஒன்றே இரண்டாய்ப் பலவாய்த் தோற்றுகின்றதும் பொய்யல்ல, உண்மையே. இந்த ஒன்று, இரண்டு என்னும் இரகசியத்தை யீண்டு ஆய்ந்து கொள்ள நேருகின்றது.

ஒன்று அது, இரண்டு அது, ஒன்றின் இரண்டது, ஒன்றினுள் ஒன்று அது, ஒன்று எனும் ஒன்றே எனப் பிரிவு செய்துகொண்டு நோக்குவோம். நம்முடை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், ஒரே ஒருவர்தாம் உண்மையில் உள்ளவர் என்பது நிச்சயம். அந்த ஒன்றான பரம்பொருளினின்று இந்த அனந்த வண்ண பேத மா பிரபஞ்சம் தோன்றி விளங்கிக்கொண்டிருக்கின்றதும் உண்மைதானே! அவ்வொரு பரம்பொருளே இவ்வளவுமாய் ஆகி விளங்குகின்றார் என அறிகின்றோம். கடவுளோ காண்பரிய மறைபொருளாய் இருக்க பிரபஞ்சமோ கட்புலனாகும் ஒரு பொருளாயிருக்கின்றது. ஆகவே, ஒருவரேயான கடவுள், இப்படிக் காணாப்பொருள் ஒன்றாயும் காணும்பொருள் ஒன்றாயும் விளங்குகின்றார் என உணர்கின்றோம். இனி, ஆய்வோம்.

ஒன்று அது, அது ஒன்று. எது ஒன்று என்றால், கடவுள்தான் ஒன்று ஆம். அதுவே எல்லாமாம் ஒன்று. ஆகவே அதுவே இரண்டு என்றதைக் குறிப்பது, இரண்டது எனப்பட்டுள்ளதாம். இந்த இரண்டாம்நிலைப் பிரபஞ்சம், ஒன்றாகிய கடவுளின் விரி நிலைத் தோற்றமே, அதனுடைய சாயை அல்லது நிழல் ஆம். இதுவே, ஒன்றின் இரண்டது என்றுள்ளார். ஒன்றின் என்பதில் உள்ள இன், ஆறாம் வேற்றுமை உருபுடன், உடைய என்னும் பொருள் தருவதாம். அடுத்து, ஒன்றினுள் ஒன்று அது எனப்படு வது நாம் காண்கின்ற பிரபஞ்சக் காட்சியில் மறைந்து உறைகின்றது அந்தக் காண்பரிய கடவுளாகிய ஒன்று. ஒன்றுக் குள் ஒன்று மறைந்துள்ளதும் அறிவோம்.

எனவே, இப்படி ஆகிய தனிப்பொருள் எப்படித் தோன்றி னாலும் ஒன்றாகவேயுள்ளது சத்தியமாம். இது முடிவில் ஒன்றெனும் ஒன்றே எனச் சுட்டப்பட்டுள்ளது.

(2)

877. ஒன்றல ரண்டல வொன்றினி ரண்டல

878. ஒன்றினு ளொன்றல வொன்றெனு மொன்றே

(உ-வி) இது, முன் சொன்னதற்கு முற்றும் முரண்போல் அமைந்துள்ளது. உண்மை அப்படி இல்லை. அது உண்மையை வேறொரு கோணத்தினின்று காணும் வகையாம். நமது அருள் ஒளிக் கடவுள்விளக்கம் இப்படி விளக்கப்படுகின்றது. முதலாவது ஒன்று அல்ல எனப்படுகின்றது. கடவுளும் அவர்தம் அருளும் ஒன்றே என்று எப்படிச் சொல்ல முடியும்? (சர்க்கரையும் அதன் இனிப்பும் ஒன்று அல்லாததுபோல்) ஆகையால் அருள் ஒளிக் கடவுள் ஒன்றல என்பது உண்மையாம். பின், இரண்டல என் கின்றார். சர்க்கரையும் அதன் சுவையும் இரண்டாய் இல்லை. அதுபோல் அருள் ஒளிக் கடவுளும் இரண்டாய் இல்லை என் பதும் அமைவதே. அடுத்து, ஒன்றின் இரண்டல் என்பது, கடவுளேதான் ஒளியுமாக உளதா என்றால், இல்லை. சர்க் கரையே சுவை என்னும் ஒன்றாய் இல்லை. சர்க்கரையைக் கண்ணால் காண முடியும், சுவையை நாவினால்தான் சுவைத்து அறியக்கூடும். ஆகையால், இரண்டும் ஒன்றல்லவாம். மேல், ஒன்றினுள் ஒன்றல என்கின்றார். எப்படியெனில், கடவுள் அருள்

ஒளியில், ஒளிக்குள் அருள் மறைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. சர்க்கரைக்குள்ளே சுவை மறைந்திருப்பதாகக் கூற முடியாததுபோல. எனவேதான், இது ஒன்றினுள் ஒன்றல என்றார். முடிவாக, அருள் ஒளிக் கடவுள் ஒன்றேதான் இருந்து கொண்டு ஒன்றாகவே விளங்குகின்றது, சர்க்கரை எப்பொழுதும் சர்க்கரை என்னும் ஒன்றாகவேயுள்ளது போலாம்.

(3)

879. ஒன்றினு ளொன்றுள வொன்றினி லொன்றில
880. ஒன்றுற வொன்றிய வொன்றெனு மொன்றே

(உ-வி) இங்கு வேறொரு வகையாக ஒன்றான பரம்பொருளை விளக்குகின்றார். அகண்ட பிரபஞ்சமுற்றும் நிரம்பியுள்ள கடவுள் எங்கும் தானாய் இருந்தபோதிலும், மனிதனில் ஆன்ம அணுவில் தான் அருளொடு வெளிப்பட்டு விளங்குகின்றவராயுள்ளார். ஆகவே இந்த ஆன்மாவின் விளக்கத்தால் இங்கு உண்மை தெளிவு செய்யப்படுகின்றதாம்.

ஒன்றினுள் ஒன்றுள, அதாவது, இந்த ஆன்மசிற்றணுவாகிய ஒன்றில், கடவுள் பரிபூரணமாய் இருக்கின்றார். இப்படி இருக்கின்றதனாலேதானே, இவ்வான்மாவுக்குக் கடவுள் உண்மை அறியவும், அறிந்து அடைந்து கடவுள்மயமாய் வாழவும் கூடியதாயிருக்கின்றது. இக்கடவுள் அனுபவம் சித்திக்காதபோதும், இந்தக் குறிப்பிட்ட ஆன்ம அணு இருக்கத்தான் செய்கின்றது. இருந்தாலும்கூட அதில் கடவுள் வெளிப்படாதிருப்பதால், இருந்தும் இல்லாததுபோல் உள்ளது. அதனால் பலவிதமான அவத்தைகளும் சூழ்கின்றன, அந்த ஆன்ம அணுவை. ஆகவேதான், இந்த ஆன்ம அணுவாகிய ஒன்றில் கடவுளாகிய ஒன்று இல்லை என்றே மொழியப்படுகின்றது. இதுதான் ஒன்றினில் ஒன்றில என்றதாம். கடவுளும் ஆன்மாவும் பிரிவற்ற ஒன்றாகவே, இணையாமல் இணைந்து, இயல்பாகவே ஒன்றுபட்டு உள்ளதைத்தான் இங்கு ஒன்றுற ஒன்றிய நிலை எனக் குறிக்கப்பட்டுள்ளதாம். ஆகவே, நம் ஒன்றாகிய தனிப் பரம்பொருள் இந்த ஆன்ம சிற்றணு வடிவிலும் ஒன்றாகவேயிருந்து கொண்டுள்ளார் என்பது சத்தியமே.

201. மெய்ப் பொருள்

(1)

881. களங்கநீத் துலகங் களிப்புற மெய்ந்நெறி
882. விளங்கவென் னுள்ளே விளங்குமெய்ப் பொருளே

(உ-வி) இப்பொழுது உலகம் மாசுடைய மனத்தால் உண்மை அறிந்து அடையமுயலாது, பொய்ந்நெறிகளைப் பற்றிக் கொண்டு பேரவத்தைப்பட்டு மடிந்து கொண்டேயுள்ளது. இவற்றையெல்லாம் ஒழித்து மெய்யின்ப நெறியில் உலகத்தைச் செலுத்தவே, மெய்ந்நெறியாம் சுத்த சன்மார்க்கத்தை நம் பெருமான் மூலம் வழங்கப்படுகின்றது.

மெய்ப்பொருளாகிய கடவுள், எங்கும் என்றும் இருந்த போதிலும் அருள்ஞானமுற்ற மெய்ஞ்ஞானியர் உளத்தேதான் வெளிப்பட்டு விளங்குகின்றார். அதனால் மெய்ந்நெறியாம் சத்திய சன்மார்க்கம் இந்த மெய்ஞ்ஞானியர் ஆறாக உலகம் பெற்றுப் பெரும் பயனுறுகின்றதாகும்.

''மெய்யகத்தே நம்மை வைத்து விழித்திருக்கின் றாய்நீ,
விளங்குக சன்மார்க்கநிலை விளக்குக,''

என்று அன்பு ஆணை செய்யப்பட்டது, நம் வள்ளலுக்கு அன்றொரு நாள். அந்த அனுபவ உண்மையைத்தான் ஈண்டும் இப்படிக் ''களங்கநீத்து உலகம் களிப்புற மெய்ந்நெறி விளங்க என்னுள்ளே விளங்கு மெய்ப்பொருளே'' என்றுள்ளார்.

இவர் கண்டுள்ள மெய்ப்பொருள் அருட்பெருஞ்ஜோதியாக அகநின்று விளங்குகின்றது. அத்துடன் அதுவாய் நின்றே அருள் அல்லது சுத்த தயாவாழ்வு வாழ்வதே மெய்ந்நெறியாம் சுத்த சன்மார்க்க அருட்பெருஞ்ஜோதி நெறியாகும். மற்ற உலகியற் பழநெறிகள் எல்லாம், மக்களைப் புறநிலை நின்று அழைத்துச்சென்று ஒழியச் செய்கின்றனவேயாம். அதனால் அந்நெறிகளால் உலகுக்குத் துன்பமேயன்றி இன்பம் விளைய வில்லை.

(2)

883. மூவிரு நிலையின் முடிநடு முடிமேல்

884. ஓவற விளங்கும் ஒருமைமெய்ப் பொருளே

(உ-வி) மூவிருநிலை என்பது ஆறு ஆதாரங்கள் விளங்கும் நிலையாம். இந்த ஆறு ஆதாரங்களுக்கு மேலே ஏழாவதாக விளங்கிக்கொண்டுள்ளது நிராதார நிலையாகும். இந்த நிராதார நிலை, முடிநடு நிலையாம். அதாவது, தலைநடு, இடமாம். இச் சிரநடு பீடத்தின்மீது ஓவற, நீக்கமின்றி விளங்குகின்றதாம் அந்த ஒன்றாகிய மெய்ப்பொருள். கடவுள் எங்கும் எப்பொழுதும் விளங்குகின்றவரே என்றாலும் இம் மனித வடிவில், சிரநடுவில் வெளிப்பட்டு, கருத்தோற்ற முதல் உடலிருக்கும் வரையில் திகழ்ந்துகொண்டேதான் இருக்கின்றதாம். இந்த நிராதாரத்தி லிருந்து கீழ் ஆறாதாரங்களுக்கும், உயிருடம்பு முழுவதற்குமே வேண்டும் எல்லா ஆற்றலும் வழங்கி விளங்கச் செயல்படுகின் றனவாம்.

(3)

885. ஏழுநிலை மிசையே யின்புரு வாகி

886. வழுநிலை நீக்கி வயங்கு மெய்ப் பொருளே

(உ-வி) கடவுள், சச்சிதானந்தமாய் வெளிப்பட்டிலங்கு மிடம் ஏழாவது நிலையமேயாகும். ஆனால் இந்தக் கடவுளின் சுத்த இன்பானுபவம், அபக்குவ காலமெல்லாம் சற்றும் வெளிப் படாது, தயா பக்குவமுற்ற காலையில்தான் வெளியாகி விளங்கக் கூடியதாயுள்ளது. வழுநிலை என்றது அபக்குவமாகிய குற்றங் குறையுள்ள நிலையாகும். அவ்வழு நீக்கப்பட்ட நிலை என்பது பக்குவநிலையாம்.

ஏழாம் நிலைமேலே திகழ்கின்ற நம் இறை அருட்பெருஞ் ஜோதிக் கடவுள் தனிப்பெருங் கருணையுடன் விளங்குகின்றார் என்ப. இந்தக் கடவுளை ஒரு ஐ, என்றால் ஒன்றாகிய ஒப்பற்ற தனித் தலைவர் என்பது பொருள். இம் மெய்ப்பதியை அபக்குவ அறியாமையே மறைத்து நிற்கின்றதாம். இம் மறைப்பே ஒரு திரையாம். பக்குவம் உண்டாக்கப்பட வேண்டி அந்த இறை யொளியின் ஓரொரு கூறே கீழ் ஆதாரம் ஒவ்வொன்றிலும் உற்று ஓரொரு வண்ணத்திரையால் மறைக்கப்பட்டுள்ளதாம்.

பக்குவமுறும்போது திரை மறைப்பெல்லாம் ஒழிந்திட மேல் இறை அனுபவ இன்பநிலை சித்திப்பதாம்.

"செய்காண் வளஞ்சூழ் ஒற்றியுளீர்
திருமால் முதல்முத் தேவர்கட்கு
ஐகாண்நீர்என் றேனதன்மேல்
அணங்கே நீஏழ் அடைதியென்றார்."

என்ற இங்கிதச் செய்யுட் பகுதியால் ஒரு ஐயான தனித்தலை மைப்பதி, ஏழு+ஐ, அதாவது (ஏழை, பெண்) ஆன்மத் தலைவியாகச் சுட்டப்பெறுகின்றதாம்.

(4)

887. நவநிலை மிசையே நடுவுறு நடுவே
888. சிவமய மாகித் திகழ்ந்தமெய்ப் பொருளே

(உ-வி) நம் அருட் ஜோதிபதியைத்தான் முன்னோர்கள் தத்தம் தெய்வமாகப் புறநிலை நின்று கண்டு போற்றித் தொழுது பல பயன் அடைந்துள்ளார்கள். அவற்றில் சிவம் ஆகக்கண்டு பெறப்பட்ட சிவானந்தநிலைதான், மிகமிகத் தெளிவாகவும், நிறை விளக்கம் கொண்டதாகவும் இருக்கின்றதாம். அந்தச் சிவானந்த நிலை நின்ற நம் வள்ளல், அதினின்று சற்றும் விலகாது, அனக வாழ்வு பே ற்கொண்டார். அதனாலே, அச்சிவமாகிய இன்பநிலை சுத்த, சித்து ஆனந்தமாக சுத்த, ஞான, சுக வடிவாக ஆக்கப் பெற்று விளங்குகின்றார். இந்நிலையே அருட்பெருஞ்ஜோதி அனுபவநிலையாகும். இதினின்றுதான் முன் விளங்கிய சிவ நிலையை நினைவுபடுத்திக்கொண்டு போற்றுகின்றார். ஆகையால் தான், "சிவமயமாக்கித் திகழ்ந்த மெய்ப்பொருளே" எனச் சென்ற காலத்தினதாய்க் கூறப்பட்டுள்ளது.

ஆதார, நிராதார நிலையை ஏழாவதாகக் கொள்ளப்பட்டது. இந்த நிலையே நவநிலை என்பதும் மேல் ஏகாதசநிலை, திரயோதச நிலை என்பதும் அக அனுபவங்கள் குறித்ததாம். இந்த ஆன்ம பீடம், பிரணவ பீடம், பகரவடிவக் குழியிடம், நவகுண்டம், நவாக்கர சக்கரம், நவகோண நாற்பத்து முக்கோண வடிவம் என்று கூறப்படுதல் எல்லாம் சில காரண கற்பனையேயாம். முக்கியமாக இங்கு விளங்கும் மெய்ப்பொருள் அருவ அருட்சக்தி

யாயும், உயிர் உணர்வு வடிவ ஒளியாயும் இருப்பதால், அருவுரு வம் எனப்படுகின்றது. இந்த அருவுருவ நிலையால், புறத்தே யொளிர் உருவ ஜோதிநிலை நான்கும், அகத்தே விளங்கும் உணர்வுநிலை நான்கும், விளங்குகின்றன. இதுவே, நவநிலை மிசை என்றும், நடுவுறு நடு வென்றும் குறிக்கப்பட்டுள்ளது.

(5)

889. ஏகா தசநிலை யாததி னடுவே
890. ஏகா தனமிசை யிருந்தமெய்ப் பொருளே

(உ-வி) ஏகாதனம் அல்லது ஏகாசனம் என்பது ஓங்கார பீடமே. ஓங்காரமே ஏகாட்சரம், ஓரெழுத் தொருமொழி, மூல மந்திர பீஜம் என்பர். ஏகா என்ற சொல், செல்லா, கழியா, நிலைத்திருக்கும் என்ற பொருள் கொண்டிலங்கும். சாகாத்தலை, வேகாக்கால், போகாப் புனல் ஆகிய மூன்றும் இந்த ஏகா நிலை நின்றே பெறுகின்றான் சன்மார்க்கி.

ஏகாதசநிலை என்பது பதினொன்றாம் நிலை. இதுதான் நம் கடவுளான்ம நிலையாம். கடவுள் ஒருவராயும், ஆன்மா பத்தாய்க் கூடிப் பதினொன்றாக வுள்ளது இக் கடவுளான்ம நிலை. யகரமே ஆன்மாவாயுள்ளது. அந்த யகர எழுத்து பதினோராவது மெய்ந்நிலை வரிசையிலுள்ளதும் அறிவோம். ஆகவே, பதினோராம் நிலையாகிய ஆன்மாவில், அதன் நடுவிலே விளங்கும் அருள் உணர்வுதான் ஓங்காரத்தின் உட்பொருளாய் இருந்து, அதுவே இப்போது நம் அருட்பெருஞ்ஜோதியான மெய்ப் பொரு ளாக விளங்குகின்றது என்பது குறிப்பு.

(6)

891. திரயோ தசநிலை சிவவெளி நடுவே
892. வரையோ தருசுக வாழ்க்கை மெய்ப் பொருளே

(உ-வி) பதின்மூன்றாம் நிலையே திரயோதசநிலை என்று கூறப்படுவது. இது துவாதச நிலைக்குமேல் விளங்கும். பதினோராம் நிலையாகிய கடவுளான்மநிலையில் விசாரத்தாற் பொருந்திநின்று நோக்கும்போது பிண்டாண்ட அனுபவங்கள்

யாவும் பன்னிரு நிலையாக உணர்த்தப் பெறும். அவை; பூதநிலை, கரண நிலை, பிரகிருதி நிலை, மோகினி நிலை, அசுத்தமாயா நிலை, சுத்தமாயாநிலை, அசுத்த மகா மாயாநிலை, சுத்த மகா மாயாநிலை, சர்வ மகா மாயாநிலை, குண்டலிநிலை, பிரணவநிலை, பரிக்கிரக நிலை ஆகிய பன்னிரண்டும் அக அனுபவ ஞானத்தில் விளங்குவன. இதனையே காரணமாகக் கொண்டு கற்பனை செய்யப்பட்டுள்ள சீர்காழிக்குரிய பன் னிரண்டு பெயர்களும். அவைகள்: பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்பனவாம். இக் கற்பனா விளக்க அனுபவநிலைகள் யாவும் தயாவொழுக்கம் நிரம்பி சத் விசார வசத்தராய் இருக்கும்போது பணிவும் பக்குவ உள்ள மும் உண்டாகி அருட்சக்தி யுணர்வு ஏற்பட்டதும் விளங்கும். மேல், பதின்மூன்றாவதாகிய அருள் உண்மைநிலையும் தெரிய வரும். தென்பாண்டி மதுரையம்பதியைத் துவாதசாந்த பதியா கவே உருவாக்கி யுள்ளனர். பன்னிரண்டாவதாகிய, துவாத சாந்த சிவ வெளியின் நடுவே யுற்று ஒன்றி நின்றால் திரயோதச மாகிய அருள் அனுபவம் உண்டாகும். இதுவே, ''சிவவெளி நடுவே திரயோதசநிலை'', எனப்பட்டுள்ளது. இங்கு பெறப்படு கின்ற அருட்சுகானந்தம், ஓதவும், வரையவும் அரியதாகும். இது, ''வரை யோதரு சுகம்'' என்றதால் குறிக்கப்பட்டது. இச் சுகம் நல்கும் மெய்ப்பொருள்தான் இன்று ''அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை'' என்ற பதின்மூன்று தனிச்சீர் கொண்ட அருண்மெ ழித் தொடராக இருக்கின்றதாம். பத்தாகிய ஆன் மாவுக்கு மூன்றாகிய திரிதேகசித்தி சேர்ந்து விளங்கும் பெரு வாழ்வு நிலையே இத் திரயோதச நிலையின் மெய்ப்பொருள் அனுபவமாம்.

(7)

893. ஈரெண் ணிலையென இயம்புமே னிலையிற்

894. பூரண சுகமாய்ப் பொருந்துமெய்ப் பொருளே

(உ-வி) பதினாறு கலை, நிறைமதிக்கு உரியதாம். இது, மூன்றாம் பிறையாகத் தோற்றிய நாள் முதல், தினமும் ஓர் ஒரு கலையாக வளர்ந்து வந்து, பதின்மூன்று நாட்களில் நிறைவுறு

கின்றது. இந்நிறைமதி நாளில் அதன் ஒளி, சோடச கலா (பதினாறு கலை)ச் சந்திரப் பிரகாசமாகத் திகழ்கின்றது. இம் மதியொளி அமுதம் மாந்தினோர் அதன் மயமாகிப் போவார்கள் என்பது குறிக்கவே மார்க்கண்டன் வெற்றியும், திருஞான சம்பந்தர் மூன்றாம் ஆண்டில் ஞானப்பால் உண்டு மேல் பதின் மூன்றாண்டுகள் அருட்சித்திகள் பல புரிந்து, தன் பதினாறாம் ஆண்டில் நல்லூர்ப்பெருமணத்தில் ஜோதியிற் கலந்துபோன தாகக் கூறப்படுகின்றது.

இன்று நம் மெய்ப்பொருள் நிறைமதி ஜோதியின் காற்கூறு பொன்மையும் முக்காற்கூறு வெண்மையும் கலந்து தனிப்பெருங் கருணையோடு கூடிய மூவருட்பெருஞ்சோதியாய் முழுச்சுகானு பவம் வழங்கிட ஒளிர்கின்றதாம்.

(8)

895. எல்லா நிலைகளு மிசைந்தாங் காங்கே
896. எல்லா மாகி யிலங்குமெய்ப் பொருளே

(உ-வி) கடவுள் என்னும் நமது மெய்ப்பொருள் ஒன்றே நித்தியமாக சத்தியமாக உள்ளதாம். அக மெய்ப்பொருள் ஒன்றாகவே இருக்க, அதன் முழு உண்மையும் வெளிப்பட்டு அனுபவத்தில் விளங்கற்குப் பலவேறு பொருள்களாய்ப் பல வேறு உயிர்களாய், வேறு வேறாகிய சத்திகளாய்க் குணங் களாய், அனுபவங்களாய் வெளியாகி விளங்குகின்றதாம். நம் அகத்தில் அந்த அகப்பொருளாகவே, நிறை மெய்ப்பொருளா கவே இருந்துகொண்டுள்ளதை, அதுவாகவே இருந்து உணர் கின்றோம். பின்னர் இந்த அகமெய்ப்பொருள் ஒன்றேதான், நம்முள் கண்டு பற்றிக்கொண்டதுவாகியே நின்று சூழ நோக்கும் போது, யாவற்றிலும் உண்ணின்று, அதுவதுவாகி கடவுளின் சிறுசிறு கூறு ஆற்றலை வெளிப்படுத்திக்கொண்டே இருக் கின்றதைக் காண்போம்.

ஒன்றான மெய்ப்பொருள், நம் உள் நாமாய், சிரநடு ஒளி வடிவாய் விளங்கிக் கொண்டிருப்பதை அருளால் அறிந்து கொண்டுள்ளோம். நாமாகிய இந்த மெய்ப்பொருள் ஒன்றே எங்கெங்கும் நீக்கமற அகமிருந்து யாவுமாய் உருவேற்றுள்ளது

என்பதையும் அறிகின்றோம். நமது அகமிருக்கும் ஒன்றே மெய்ப்பொருளாய் அனுபவத்தில் திகழ்ந்துகொண்டிருப்பது. பலவாகச் சூழ்ந்துள்ள உயிர்களையும், பொருள்களையும், தோற்றங்களையும் பார்க்கின்றபோது புலனாவது முற்றும் நிலைக் காது ஒழிவனவேயாம். அழிகின்ற ஒவ்வொன்றின் அகத்திலும் தான், அழிவற்ற மெய்பொருள் இருந்தும், தோற்றுகின்றதே யில்லை. அப்படியுள்ளதை மருவிநிற்கும் நாம், அவ் ஒருமையைப் பற்றி உள்ளிருந்து கொண்டுதான், எங்கும் இறைவடிவத்தைப் பாவிக்கின்றோம். எனவே, உள்ளிருப்பது ஒன்றே மெய்ப் பொருளாகவும், அதுவே தன் அருளால், எங்கும் உள்ளீடாய்(த் தோற்றாதே) இருந்துகொண்டு, வேறு வேறான புறப்பொருள் களாய்த் தோற்றுகின்றதாம்.

(9)

897. மனாதிகள் பொருந்தா வானடு வானாய்

898. அனாதியுண் மையதாய் அமர்ந்தமெய்ப் பொருளே

(உ-வி) மெய்ப்பொருள் அனாதி யுண்மையாய் உள்ளதாம். அம் மெய்ப்பொருளுக்கு ஆதியும் அந்தமும் இல்லை. அது நித்திய மாய் உள்ளதேயாகும். அவ் அனாதி மெய்ப்பொருள், அகண்ட வெளி நிறை வானாய், பரமாகாசப் பரம்பொருளாயுள்ளதாம். அப்படியுள்ள ஆகாசம், அதன் இயல்பாம் உண்மையை மைய மாய்க் கொண்டுள்ளது. ஆகாசத்தின் நடு அல்லது மையம் என்பது என்னவெனில், அதன் ஆற்றலே, அல்லது தன்மையே யாம். அது அவ் வாகாச பூத அணுவில் மின் இயக்கமாகவும், வெளியில் சலனசக்தியாகவும், வாயுவாகவும், ஜீவர்களில் உயிர் இயக்கமாகவும், மனிதனில் ஆன்மாவாகவும் நடுநின்று இயக்கு கின்றதாம். அணு மையம் புரோடான் இருந்து அதனைச் சூழ எலக்ட்ரானைச் சுற்றச் செய்கின்றது. சூரியனை நடுவாகக் கொண்டு கோட்கள் சுற்றுகின்றன. மேருவை நடுவாகக்கொண்டு சூரியகோடிகள் சுற்றுகின்றன. ஆன்ம அணுவை நடுவிற் கொண்டு ஜீவதேகம் உருவாகி விளங்குகின்றது. இவைகளைப் போன்று மெய்ப்பொருளாகிய ஒன்றை அதன் எல்லாமான அருட்சூழலைக்கொண்டு விளங்கக் காண்கின்றோம். இக் கடவுள் உண்மையைக் காண்பது என்பது அருளனுபவத்தால் உணர்

தலே யன்றி மற்ற பொறி புலனாலோ, கருவி கரணங்களாலோ அல்லவாம். அதுதான் மனாதிகள் பொருந்தா என்று கூறப்பட் டுள்ளது. மனாதிகள் என்றால், மனம், வாக்கு, காயம் என்பர். அன்றி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், இவைபோக மற்ற கருவிகளாலோ, பொருள் ஆற்றல்களோ எதுவும் கொண்டு கடவுளாம் மெய்ப்பொருளைக் காணமுடியாதாம். பிற எதனாலும் தீண்டமுடியாத அருள்வெளியிலே, அருட்சூழலினடுவிலே நம் மெய்ப்பொருள் விளங்குகின்றதாம். அது அந்த அருளுக்கே அனுபவமாவதாம்.

(10)

899. தானொரு தானாய்த் தானே தானாய்
900. ஊனுயிர் விளக்கு மொருதனிப் பொருளே

(உ-வி) ஒப்பற்ற தனிப்பொருள் ஆகிய அருட்பெருஞ் ஜோதிபதி இருக்கின்றதே அது, தான் மட்டுமே இருந்துகொண் டுள்ளது. எங்கும் தானாய், எல்லாம் தானாய் இருக்கின்றது. அதனால், அந்த மெய்ப்பொருளுக்கு அன்னியமாய், வேறாய், அய லாய் மற்ற எதுவும் இல்லை என்றாகின்றது.

இப்பொழுது ஒரு மனிதனை எடுத்துக்கொண்டு நோக்கு வோம். முதலில் நாம் காண்பது அம் மனிதனுடைய புறத்தேக வடிவமே. அடுத்துத் தோற்றுகின்றது, அத் தேகத்தில் விளங்கும் உயிர்ப்பு இயக்கமே. இப்படி மனிதனின் தோற்றம் உயிர் உடம்பு அம்சமாய் விளங்கக் காண்கின்றோம். ஆனால், இந்த உடம்பினுடைய உண்மை என்ன? உயிரினுடைய உண்மை என்ன? என்பதை ஆழ்ந்து ஆய்ந்து பார்க்கவேண்டி யுள்ளது; அப்பொழுதுதான் மெய்ப்பொருள் காண முடியும். உடல் வேறு, உயிர் என்பது வேறு எனத்தான் தோற்று கின்றன. ஆனால் மெய்ஞ்ஞானியர் அனுபவம் அப்படி உயி ரையும் உடலையும் வேற்றுப் பொருளாய்க் காணாது அப் பரம்பொருளாகவே காண்கின்றனர். அது எப்படி என்பதை ஆராய்வோம். உள்ளது ஒரு தனிப் பரம்பொருளே. அத் தனிப் பொருள் தனிப்பெருந்தயவுடன் திகழ்கின்றது. அத் தயவுதான் பொருட்சக்தியாகவும், கிரியாசக்தியாகவும், உருவுஞ் செயலும் கொண்டு விளங்குகின்றது. இதனால் எல்லா அணுக் களும், அணுத் திரளாலான பொருளும், பொருட்கள் மாறி உரு

வாகியுள்ள இந்த மனித உடலும் அந்தப் பரம்பொருளின், பொருட்சக்தித் தோற்றமே என்பது உண்மை. ஆகவே பரம் பொருளே இந்த உடலாய் விளங்குகின்றதேயன்றி வேறு எதுவுமே அல்ல என்பது தெளிவு. இதுபோலத்தான், அப் பரம்பொருளேதான் தன் கிரியாசக்தியால் இம் மனிதனில் உயிராய்த் திகழ்கின்றார் என்பதும் மெய்யே.

எனவே, ஒன்றான தனிப் பரம்பொருள்தானே இந்த உயிரு டம்பாய் அக நின்று விளங்கிக் கொண்டுள்ளார் என்பது பேருண்மைதானே!

(11)

901. அதுவினு ளதுவா யதுவே யதுவாய்
902. பொதுவினுள் நடிக்கும் பூரணப்பொருளே

(உ-வி) பொது, சபை, ஆலயம் எல்லாம் கடவுளுக்கு உறை யுள் என்பர். நமது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கு ஆலயம் ஆன்மசிற்றணுவே என்பது உண்மையாம். இந்தக் கடவுளின் உறையுளாகிய கோயிலைப் பொது என்றது ஏன் எனில்; இது, கடவுளுக்கும், நமக்கும், பிறர்க்கும் உண்மை உறையுளாக இருக் கின்றது என்பதால் பொது வெனப்படுகின்றதாம். இந்தப் பொதுவினின்றே வெளிப்பட்டுள்ளோம் நாம் எல்லோரும். நாம் மட்டுமல்ல; மற்ற எவ்வுயிர்களும், எப்பொருள்களும் பிற யாவும் இந்தப் பொதுவினின்றே வெளியாகின்றனவாம்.

ஏதோ ஒரு பொருளை எடுத்துக்கொள்வோம். அது ஒரு கல்லாகக் கொள்ளலாம். அந்தக் கல்லின் உண்மை என்ன என்பதை ஆய்வோமாயின், அவ்வுண்மை கடவுளாகவே யுள்ளதைக் காண்போம். பொதுவாகிய ஒரு சிற்றணுவிலே ஆடுகின்ற கடவுள் தன் பொருட்சக்தியால் ஒரு குறிப்பிட்ட கல்லாக விளங்குகின்றது உண்மையாம். நாம் காணுகின்ற அக்கல்லினுள், கல்லில் இருக்கும் கடவுள்தானே அந்தக் கல்லாக உருக்கொண்டு திகழ்கின்றார் என்பது உண்மையே. இப்போது வெளியில் விளங்குகின்றது கல். இந்தக் கல் லுக்குள் உண்மையாய் இருக்கின்றது கடவுள்தான், வேறெதுவு

மல்ல. இதுதான் அதுவினுள் அதுவாய் எனப்படுகின்றது. இதில், முதலிலுள்ள அது கல் ஆகும். இரண்டாவதாயுள்ள அது கடவுள் ஆகும். இதனால் அகமிருக்கும் கடவுளே புறத்தோற்றக் கல்லாக விளங்குதல் உண்மையாம். இதற்குமேல், அதுவே அது வாய் எனப்படுகின்றது. இங்கு முதலிலுள்ள அது கடவுளாம். அந்த அகமிருக்கும் கடவுளேதான் புறத்திருக்கும் கல்லாக விளங்குதல் உண்மையே என்பது தெளிவு.

ஆகவே, அருட்பொதுவில் இருந்துகொண்டு, அருள் ஐந் தொழில் ஆகிய திருநடனம் புரிகின்ற கடவுள் தன் அருள் ஒளிக் கதிர்ப் பிரகாசத்தை விரித்துப் புறத்தில் எதுவுமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றார் என அறிகின்றோம்.

அது என்ற சொல், அ+த்+உ என விரிந்திலங்கும்போது அகரமும் உகரமும் ஆன்ம அணுவைக் குறிக்க அதில் நடுவிலிருந்து விளங்கும் தகரமெய், தகராகாசக் கடவுள் வடிவைச் சுட்டுவதாய் அறிவோம். இத் தெளிவு வழங்காத, ''தத்'' என்ற வட சொல், த்+அ+த் எனப் பிரித்து ஆயப்படும்போது அகராகாசக் கடவுள், தகராகாசத்தால் சூழப்பெற்றுப் புதையுண்டு கிடப்ப தையே சுட்டுவதாய்க் காண்கின்றோம். இதனால் கடவுள்நிலையால் ஆன்மானுபவம் இல்லாது புதையுண்டு கிடக்கச் செய்வது அந்தத் ''தத்'' ஆம்.

(12)

903. இயல்பினுள் இயல்பாய் இயல்பே பியல்பா
904. உயலுற விளங்கு மொருதனிப் பொருளே

(உ-வி) இயல்பு என்பது தன்மை, குணம், சுபாவம் எனப் படும். நம் அருட்பெருஞ்ஜோதிபதியின் இயல்பு என்ன என்றால், அது தனிப்பெருங் கருணை என்க. அருட்பெருஞ்ஜோதியில் எல்லா உருவும் அடங்கியுள்ளதுபோல, இந்தத் தனிப்பெருங் கருணையில், பிற எல்லா இயல்பும், தன்மையும் அடங்கியே உள்ளனவாம்.

புறவுலகில் ஒன்றைக் காண்கின்றோம், அதன் இயல்பையும் அறிகின்றோம். உண்மையில் அந்த ஒன்று, அருட்பெருஞ்ஜோதி

யின மாற்றத் தோற்றமே என்று தெரியப்படுவதால், அந்த ஒன்றின் எந்த இயல்பும் எப்படி விளங்கினாலும் உண்மையில் தனிப்பெருங்கருணையின் மாற்றத் தோற்றமே என்பதில் சற்றும் ஐயப்படவேண்டியதேயில்லை. ஆகவே, இயல்பினுள் இயல்பாய் இருப்பது பரம்பொருளின் இயல்பேயாம். அடுத்துக் கூறப்பட் டுள்ள இயல்பே இயல்பாக என்றதில், முதலிலுள்ள இயல்பு கடவுள் தயவு ஆம். அடுத்து வந்த இயல்பா என்பது பொது வாக ஒன்றன் இயல்பு ஆக என விளங்குவது, மனித ஜீவான்மா வில் மட்டும் தயவு ஆகவும் விளங்குகின்றதைக் குறிப்பது. கடவுள் இயல்பே இந்த மனித இயல்பாய் இருக்கின்றதா என்றால், இல்லை என்றுதான் அறிகின்றோம். அப்படித்தான் மனிதனின் இயல்பு கடவுள் இயல்பாகவே இருக்கவேண்டும் என்பது நியதி. அப்படி யில்லாதிருப்பது பக்குவக்குறைவுதான். பக்குவப்பட இவன் இயல்பு கடவுள் இயல்பாக ஆகிட வேண்டும் என்பது ஆணை. இது குறித்தே, இயல்பா என வழங்கப்பட்டுள்ளது. இயல்பாய் எனக் கொள்ளக்கூடாது. கொண்டால் கடவுள் இயல்பும் மனித இயல்பும் ஒன்றென்றே ஆம். அபக்குவத்தில் அப்படியில்லை. பக்குவத்தில்தான் அப் படிக் கடவுள் இயல்பு இவன் இயல்பாக ஆக வேண்டியுள்ளது. மேலும், இயல்பா(ய்) என வந்திருந்தால்தான் உயலுற எனக் கொள்ளக் கூடும். யகரமெய் தொக்கி நின்றதெனில், யுயலுற என்றுதான் வந்திருக்க வேண்டும். அப்படியில்லை, உயலுற என்றுதான் இருக்கின்றதால், யகரமெய் கொள்ளப்படாது, ககரமே தொக்கியுள்ளதாக அறிய வேண்டும். அன்றியும் இவனுடைய இயல்பு கடவுள் இயல்பாக ஆகினால்தான் உய்வு பெற முடியும்.

நமது ஒரு தனிப் பரம்பொருள் நம்மில், நாம் உயலுற விளங் கிக் கொண்டிருப்பது உண்மை. எனவே முன்னடியில் இயல்பு கடவுள் தயவு அல்லது கருணை எனவும் அதுவே மனித இயல் பாக ஆகிட வேண்டுமென்று அறியலாயின.

(13)

905. அருவினு ளருவா யருவரு வருவாய்
906. உருவினுள் விளங்கும் ஒருபரம் பொருளே

(உ-வி) ஒரு பரம்பொருளே, அருவினுள் அருவாய், அருஅரு அருவாய் உருவினுள் விளங்கும்: என்று உரைநடை (அன்வயம்) செய்துகொண்டு பொருள் காண வேண்டும். ஒப்பற்ற பரம் பொருளாகிய கடவுள், இந்த மனித வடிவில் வெளிப்பட்டு விளங்குகின்றார். எப்படி விளங்குகின்றார் எனின், இந்த மனித தூல உருவினுள், சூக்கும உருவாய், அச் சூக்குமத்துள்ளும் மூன்று அருவ நிலையாய் விளங்குகின்றாராம்.

புறத்தேகம் உருவாய் உள்ளது. இதற்குள்ளிருக்கும் சூக்கும உடல் கட்புலனாகாது, கனவிலும், மன நினைவிலும் தோற்றுவதாம். அதனால், அது அருவுருவ மெனப்படும். இச் சூக்குமத்திற்குக் காரணமாய் உள்ளது அருவமான ஆன்மாவே. இந்த ஆன்மாவில்தான் கடவுள் உண்மை அருவமாய் அமைந்திருக்கின்றது. சூக்கும வடிவமும் இங்கு, புறத் தோற்றமின்மையால் அருவமாகவே கொள்ளப்பட்டுள்ளதாம். அருவமாகிய ஆன்மாவுக்குள் இருக்கும் கடவுட்சக்தியே மூவகை யருவமாய் நுண்ணியதாய் இருந்து, மனிதப்பிறப்பில் தூல, சூக்கும காரண வடிவங்களாய் விளங்கிக்கொண்டுள்ளது. அபக்குவ காலமெல்லாம் இத்திரிநிலை மல வடிவங்கள் பிறவிகள் தோறும் தொடர்ந்துகொண்டேயிருக்கும். பக்குவமுற்று முத்தி அனுபவச்சித்தி பெறுகின்ற தருணம் அந்த ஆன்மாவினுள் ளிருந்து அருள்ஒளி வெளியாகிப் பரவி மும்மல உடம்பையே, சுத்த, பிரணவ, ஞான தேகமாக்கித் திரிதேக சித்தி பெற்ற வனாய் விளங்கச் செய்வதாம்.

ஆகவே, ஒரு பரம்பொருளே, நம் உருவினுள், அருவ வடி வாயும், அவ்வருவில் ஆன்ம வடிவாகியும், அதற்குள்ளே மூன்று அருவ வடிவமாயும் அமைந்து விளங்கிக் கொண்டுள்ளார் என்பது சத்தியம்.

(14)

907. அலகிலாச் சித்தா யதுநிலை யதுவாய்
908. உலகெலாம் விளங்கு மொருதனிப் பொருளே

(உ-வி) உலகமெல்லாமாய், உலகிலுள்ள எல்லாமாய் விளங்கிக்கொண்டிருப்பது, ஒரு தனிப்பொருளே ஆம். ஒரே

ஒரு பரம்பொருள்தான், அனந்தவண்ண தோற்றங் கொண்டு யாவுமாய் விளங்கிக் கொண்டுள்ளார் என்பது உண்மையே. இப்படிப் பலவாய் விளங்கு நிலையே சித்து எனப்படுவது. நித்தியமாய், எங்கும் நிறைவாய் விளங்கும் சத்தாம் இறை யொளியின் உண்மை வெளிப்படுத்தவேண்டியுள்ளது. அதற்காக அந்தச் சத்தொளியையே உலகுயிர்ப் பொருள்கள் எல்லாமாய் வெளிப்படுத்தப்பட வேண்டியுள்ளனவாம். கடவுள் உலகங்களை யாவும் தோற்றுவிக்கும் பேரற்புதப் பெருஞ்செயல் எல்லாம் சித்துச்செயலே யாகும். உலகமே சித்து எனலாம். இது அலகிலாச் சித்து அல்லது எல்லையற்ற அற்புத விளக்கமாகும். இச் சித்துக்கு ஆதார நிலை எது? அது சத்துதான். அது அருள் ஒளியே. இந்த அருட் பேரொளியே தனிப் பரம்பொரு ளாய் இருக்கின்றது.

ஒரு தனிப்பொருளாய் இருக்கும் அருட்பெருஞ்ஜோதி சத்தாய் இருந்துகொண்டு, அகில உலக தோற்றமாகிய சித் துக்கு நிலைக்களனாய் உள்ளது என்ப.

(15)

909. பொருளினுட் பொருளாய் பொருளது பொருளாய்
910. ஒருமையின் விளங்கு மொருதனிப் பொருளே

(உ-வி) உண்மையில் உள்ளது ஒரு பொருளே யல்லாது, இரண்டோ பலவோ அல்லவாம். ஆனால் மனிதன் பலவாகிய பொருள்நிறை உலகையே முதலில் காண்கின்றான். அப்படிப் பலவாகிய உலகாய்த் தோன்றியுள்ளது ஒன்றாகிய பரம் பொருளே என்று அறிவது சுத்த சத் விசாரத்தால் ஆம்.

புறத்தே தோன்றியுள்ளது எந்தப் பொருளாய் இருந்தா லும், அதற்கு உள்ளீடாய் இருக்கின்றது, மெய்ப் பொருள் ஒன்றே. இதுவே, பொருளினுட் பொருளாய் எனப்பட்டுள் ளது. அடுத்து, பொருளது பொருளாய் எனப்படுகின்றது. நாம் காண்கின்ற புறப்பொருள்கூட வேறல்லவாம்; அகத்தேயுள்ள பரம்பொருளின் விரிநிலைத் தோற்றமேயாம். ஆகவே புறப் பொருளும் அகப்பொருளும் இரண்டல்ல. ஒன்றின் இருநிலைத்

தோற்றமே ஆகும். எனவே, ஒருமையின், ஒன்றேயாக அகத்தும் புறத்தும் நிறைந்து எப்பொருளாயும் விளங்குகின்றது அத் தனிப் பரம்பொருளே ஆகும்.

(16)

911. ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு
912. கோடியும் விளங்கக் குலவுமெய்ப் பொருளே

(உ-வி) உலகமெல்லாம் அருள் ஒளியின் விளக்கம் கொண்டதாம். இம் மகா பிரபஞ்சத் தோற்ற விளக்கச் செயல் முற்றுமே கடவுட் பெருஞ் சித்தாகும். இந்தச் சித்திகள் அறுபத்து நான்கு ஏழுகோடி என்பது. (70000000 x 64 = 448,0000000) நானூற்று நாற்பத்தெட்டு கோடி சித்திகள் என்பதும், ஏழாவதாகிய நிராதாரத் தானத்தின் கோடியாம் முடிவில், அறுபத்து நான்காகிய அக்கினியின் தத்துவஜோதி அனுபவத்தால், அறுபத்து நான்கு திருவிளையாடற் சித்துகள் புரியக் கூடியவனாகின்றானாம் சுத்த சன்மார்க்கி.

சுத்த சன்மார்க்கியின் தோற்றம் உண்ணின்று விளங்கும் மெய்ப் பொருளின் தோற்றமேயாகும். அருட்பெருஞ்ஜோதியே அருட்பிரகாசராய் விளங்குவது இப்படித்தான். அக்கினியின் கலை அறுபத்து நான்கு சிவாம்சமாம். இதனால் சிவபெருமான் மதுரையிலேயே அறுபத்து நான்கு திருவிளையாடல் புரிந்ததாகச் சொல்லப்படுகின்றது. நமது மெய்ப்பொருள், ஏழாகிய கோடியின்மேல் எழுந்தருளி யிருந்துகொண்டு, அறுபத்து நான்கு ஏழு கோடி சித்திகளும் புரிகின்றதாயுள்ளதாம் அது வானவர்க்கு.

(17)

913. கூட்டுறு சித்திகள் கோடிபல் கோடியும்
914. ஆட்டுற விளங்கும் அருட்பெரும் பொருளே

(உ-வி) உலகில், இயல்பாகவே திருவருளின் பெருஞ்செயலாக நடை பெறுகின்றவை யனைத்தும், ஆடுறு சித்திகள்

அறுபத்து நான்கு ஏழு கோடி எனப்பட்டது. அந்நிலையுற்ற சன்மார்க்கிக்கு, அச்சித்திகள் எல்லாம் தன்னவைபோல் விளங்கும். அவ்வளவும் இயற்கை யனுபவ சித்திநிலையே. அவற்றிற்கு மேலே சேர்க்கப்படுகின்ற சித்திகளோ பலபல கோடியாம்.

அருட்பரம்பொருள், இயற்சித்திச் செயல்களுக்குமேல் கோடிகோடியாகச் சித்து புரியக் கூட்டிவைக்கின்றதாம் சுத்த சன்மார்க்க அருள்ஞான சித்தர்க்கு.

(18)

915. அறிவுறு சித்திகள் அனந்த கோடிகளும்

916. பிறிவற விளங்கும் பெருந்தனிப் பொருளே

(உ-வி) தனிப்பெரும் பொருளாகிய கடவுளுக்குச் சித்திபுரி சக்தி இயற்கை. அப்படியுள்ள கடவுள்தானே நம்மில் பிறிவற, வேறாய் இல்லாதபடி என்றும் ஒன்றியே இருக்கின்றார். அதாவது, கடவுளைத் தவிர அவர்க்கு அன்னியமாக, நாமோ, பிறரோ கிடையாது. அவராலே அனந்தங்கோடி உலகங்களும் அவற்றின் அனைத்து உயிர்களும் பொருள்களும் எவ்வளவோ காலமாக விளக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இன்னும் திருவருள் பெற்றோர்க்கு எவ்வளவோ சித்தி செய் ஆற்றல் வழங்கி அனந்தஞ்சித்திகள் புரிவிக்கப்படுகின்றனவாம். பேரறிவும் அருட்பெரு வாழ்வும் வழங்கவந்துள்ள கடவுட்செயல்கள் யாவும் அறிவுறு சித்திகளேயாம். சிறு சித்திகளில் நாட்டம் கொண்டு, நிற்காது, இறைநிலை யுற்று, அனந்தசித்தியும் தானாக நடைபெறக் கண்டு சூழ்நர்க்கு உதவிக்கொண்டு இருப்பது நம் கடமையாம்.

(19)

917. வீடுக ளெல்லாம் விதிநெறி விளங்க

918. ஆடல்செய் தருளும் அரும்பெரும் பொருளே

(உ-வி) மனிதர்கள் வாழ்க்கை நடத்த இல்லங்கள் அமைத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வீடுகள் இல்லாமல் சரியான

படி குடித்தனம் நடத்த முடியாது. இதுபோன்றுதான் ஆன் மாக்களுக்கும் தேகங்களாகிய வீடுகள் பக்குவநிலைக்குத் தகுந் தாற்போல சிறந்தனவாக வழங்கப்பட்டு வருகின்றன. ஓரறிவு முதல் ஆறறிவு வரை விளங்கும் ஆன்மாக்களுக்கு ஏற்றதான தேகங்கள், காலத்தே வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வான் மாக்களும் திருவருள் நியதியால் வழங்கப்படுகின்ற தேக போகப் பொருள்களையும், மற்ற சூழ்நிலைகளையும் துணையாக ஏற்று வாழ்வு நடத்தி, அனுபவம் ஈட்டிக்கொண்டு மேற் கொண்டு அடுத்து வாழ வேறு புதிய பிறவிக்குச் செல்லு கின்றன.

மேற்படித் தேகப் பிறவிகளும் வாழ்வும் அனுபவமும் தொடர்ந்து ஓங்கவே நம் பரம்பொருள் அருள்நியதிமுறை வகுத்து வழங்கியுள்ளார். அதன்படி தவறாது ஒவ்வொரு ஆன்மாவுக்கும் தேகவாழ்வு சூழ்கின்றதாம். ஏகமான பரம் பொருள்தான் ஆன்மாக்கள் தோறும் இருந்து ஐந்தொழில் நடனம் புரிகின்றார். இவ் ஆடல்தான் விதிமுறை என்பதாம். இந்த ஆடலின் முடிந்த குறிக்கோள் யாதெனில், அருள்தான் ஆம். ஆன்மாவுக்கு அருள் வாழ்வு வந்துவிட்டால் மேற்கொண்டு பிறப்பும் இறப்பும் தொடராது, அந்த அருள் ஒளி வடிவிலே இருந்துகொண்டு, தானே அந்த அருள் நடனமும் புரிந்து கொண்டிருக்கலாகின்றதாம்.

(20)

919. பற்றுக ளெல்லாம் பதிநெறி விளங்க
920. உற்றரு ளாடல்செய் ஒருதனிப் பொருளே

(உ-வி) ஆண்டவர் அருள்வெளியிலே இருந்துகொண்டு, தன் அருளாலேயே யாவையும் இயக்கிக்கொண்டுள்ளார். அந்த அருளியல் முறையே பதிநெறியாக உள்ளதாம். ஆண்டவர் விளங்கும் அருள்வெளிக்குள் பிற எவரும் புக முடியாது. அங் கிருந்து செயல்படுத்தப்படுகின்ற பதி நெறிமுறை, உலகியலில் புற விதிமுறையாக விளங்குகின்றது. உலகியல் முற்றும் பற்று மய மாயுள்ளது. அணுக்கள் யாவும் அதன் நடுவைக் கொண்டு ஈர்க்கப்பட்டும் புறத்தில் தன் இன அணுக்களால் ஈர்க்கப்பட்டும்

உருவாகித் திகழ்கின்றன. இதுபோல் அண்டபிண்டங்கள் யாவும் ஒன்றுக்கொன்று பற்றால் இயங்கியும் இலங்கியும் கொண்டுள்ளன. உயிரினங்களும் சுபாவ குணத்தாலும், இனக் கவர்ச்சியாலும் பற்றுகொண்டு பல்கிப் பெருகி வாழ்ந்து வரு கின்றன. மக்களுக்கும் இந்தப் பற்று நெறியே பதியால் நியதி செய்யப்பட்டுள்ளது உண்மையாகும்.

மேற்படி கடவுள் வகுத்துள்ள நியதிமுறையை அறிவதற் கும், அருளால் அடைந்து ஆள்வதற்கும் தோற்றுவிக்கப்பட்டது இந்த சிறந்த மனிதப் பிறவியாம். இம்மனிதனில், இவனது ஆன்மசிற்றணுவின்கண்ணே தோற்றித் தன் அருள் ஆடலால் உண்மை எல்லாம் விளங்கச் செய்கின்றார். திருவருளால் கடவுளே இப்படி அகமிருந்து விளங்குவதும், புறத்தை எல்லாம் விளங்கச்செய்வதுமாய் இருப்பதைத் தன்னில் வெளியாக்கு கின்றதும், தானே இம்மனிதனாய் இருந்து அறிந்து அனுபவத் திற்கொண்டு விளங்குவதாயும் உள்ளனவாம். ஒப்பற்ற தனித் தலைமையாகிய கடவுள் ஒருவரே ஆக இருந்துகொண்டு, அகமும் புறமும் அருள் ஒளி விளங்கத் திகழ்கின்றார் என்பது உண்மை.

202. பராபர இயல்

(1)

921. பரத்தினிற் பரமே பரத்தின்மேற் பரமே
922. பரத்தினுட் பரமே பரந்தரு பரமே

(உ-வி) பரம் என்ற சொல் உயர்ந்த நிலையையும், உயர் வையும் குறிப்பதாம். கடவுள் ஒருவரே பரமாக இருத்தலின் பரம்பொருள் என்று கூறப்படுகின்றார். இந்த பரத்தினிற் பரமாய் இருப்பது ஆன்மாவாம். இது அப்பரத்தில் இருப்பது எனினும், இதுவென்றும், அதுவென்றும் பிரித்தறியக் கூடாத நிலையில் அத்துவிதமாயுள்ளதாகும். இதனால்தான் இந்தக் கடவுளான்மாவை பரம்பரம் என்னும் பரமாக மொழியப்படும். பரம்பரம் என்பது கடவுளும் ஆன்மாவும் ஆம்.

இரண்டாம் அடியில், பரத்தினுட் பரமே எனப்படுகின்றது. ஆன்மாவாகிய பரநிலைப் பொருளில்தான் கடவுளாகிய பரம்

பொருள், அகநின்று விளங்குகின்றதும் ஆள்கின்றதுமாக உள்ள தாம். அப்படி அகமிருந்து ஆள்கின்ற ஆண்டவர் பக்குவ ஆன்மாவுக்குத் தன் பரம் ஆகிய நிலையையே தருகின்றார். தன்னையே முழுமையாகத் தந்து, இவனில் இவனாய் விளங்குகின்ற தியாகேசர் நம் கடவுள்.

(2)

923. பரம்பெறும் பரமே பரந்தரும் பரமே

924. பரம் பதம் பரமே பரஞ்சிதம் பரமே

(உ-வி) கடவுளும் ஆன்மாவும் முடிநிலையின்கண் ஒன்றாய், விளங்கினும் அந்த ஒன்றாம் அனுபவம் உண்டாக, இரு தனிநிலையெனத் தோற்றிப் பின் பக்குவமுற்ற காலத்தே கூடாதே கூடித் திகழும் அனுபவம் விளங்குவதாம். ஆதலின், பரம்பெறும் பரம் என்றது ஆன்மாவாம். பின்னர், பரம்தரும் பரம் என்றது கடவுளாம்.

அடுத்த அடியில், அதே உண்மை வேறொரு வகையால் விளக்கம் செய்யப்படுகின்றதாம். அதாவது, பரம் சிதம்பரம் என்றால், உயர் சிறப்புடைய ஞானாகாசமாம் அகம் விளங்கு கடவுட் சொரூபம். இதனால் நம் பதி பரமாகாச சொரூபி எனப் படுகின்றார். அந்தப் பரமாகாச வடிவம் வெளிப்பட்டு விளங்குமிடம், நம் சிரநடு ஆன்மபீடமாகும். இங்குதான் கடவுள் ''பதம்'' ஆகப் பொருந்தியுள்ளார்; பக்குவமாக அமைந்துள்ளார் எனவும் பொருளாம். அன்றியும் பகரபீடத்தில் அருவமாயும், அதன்மேல் தகராகாசத்தில் அருவுருவாயும், அவ்வான் நடுவில் மகரஜோதி வடிவாயும் பொருந்தியுள்ளதே பதம் ஆகக் கண்டு பெறலாம்.

(3)

925. பரம்புகழ் பரமே பரம்பகர் பரமே

926. பரஞ்சுக பரமே பரஞ்சிவ பரமே

(உ-வி) பரம்பகர் பரமே என்றதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். நம் பரமபதியாகிய கடவுள், நமக்குத் தம்

உண்மையை உண்ணின்று உரைக்கின்றார். பகர்தல் அல்லது உரைத்தல் என்பதற்குச் சொல்லுதல் எனப் பொருள் கொள்ளு வதைவிட, உணர்த்தல் விளங்கச்செய்தல் என்று பொருள் கோடல் பொருத்தமாம். ஏனெனில், நம் உள்ளத்துணர்வில் தெள்ளத் தெளிய உணர்த்தி விளங்கச்செய்கின்றதுதான் உண்மை; புறத் துற்றுப் புகன்றதாகக் கொள்ளல் அமையா. அப்படியும் புறத்தே வந்து புகலவும் கூடும். ஆனால், அப்படிப் புகல்வது குருவடி வாகத் திகழுமேயன்றி பரமாக விளங்கற்கில்லையாம்.

அப்படிப் பரம்பகர் உண்மை விளக்கம் கொண்டு, நம்மால் சிறந்து புகழப்படுகின்றார் அப்பரமபதி. இதுவே பரம்புகழ் பரமே எனக் குறிக்கப்பட்டுள்ளதாம். அப்படிப் புகழ்வதால், நமக்கு மேலான சுகவாழ்வு வழங்கப்படுகின்றது. புகழ்வது என்பது வாக்கால் மட்டுமல்ல, சித்தனையாலும், செயலாலும் சத்விசார பரோபகாரத்தோடு வாழ்வதே உண்மையில் கடவு ளைப் புகழ்வதாகும். அதனால்தான் மெய்ச் சுகவாழ்வு கிடைக்கும். இக் கடவுட் சுகவாழ்வுதான் யாதெனில், பரஞ்சிவபரம் எனப்படு கின்றது. பரஞ்சிவபரமாவது மேலான சிவம் என்னும் நிலை யாம். சிவம் என்பது இங்கு சமய மதச் சார்புடைய தெய்வ நிலையன்று, சமயமதாதீதமான சச்சிதானந்த மெய்ப்பொருள் நிலையையே குறிப்பதாம். இதுவே, பரஞ்சுகம் எனக் குறித்துக் காட்டி அடுத்துப் பரஞ்சிவம் என விளக்கம் செய்யப்பட்டுள்ள தாகும். பரம் சுகம் என்றால் மேலான ஆனந்தமாம். அம்மேலான ஆனந்தமே சச்சிதானந்தம்தான். இதனைக் குறித்திடவே அப்படிப் பரம் சிவ பரம் என்றுள்ளார்.

(4)

927. பரங்கொள்சிற் பரமே பரஞ்செய்தற் பரமே

928. தரங்கொள்பொற் பரமே தனிப்பெரும் பரமே

(உ-வி) எங்கும் நிறைந்திலங்கும் தனிப்பெரும் பரம்பொருள் ஒன்றே விளங்குகின்றது. அந்தப் பரம்பொருள்தான் எங்கும் தானாய் தற்பரமாயுள்ளதாம். இதுவே, பரஞ்செய்தற்பரம் என்று கூறப்பட்டுள்ளது. அப்படி எங்குந் தானாய்த் திகழும் பரம்பொருள், நமது ஆன்ம சிற்றணுவில் இடங் கொண்டுள்ள

தாம். ஆகவேதான், இந்த ஆன்மா, சிற்பரம் என்றும், பரம் கொள் சிற்பரம் என்றும் குறிக்கப்பட்டுள்ளதாம்.

சிற்பர வடிவு கொண்டு விளங்குகின்ற நம் ஆன்மபதியே தனைச் சூழ் பிரபஞ்சவெளி முழுவதையும் தனது பேரம்பலமாக வும் கொண்டுள்ளார். இந்த அகண்ட பெருவெளியோ மாற்ற றியா அருட்பொற்ஜோதி நிறைவாயுள்ளதாம். இதனால் இப் பேரம்பல நிலையே பொன்னம்பலமாகவும் கொள்ளப்படும். இவரும் பொன்னம்பலவராகவும் உள்ளார். தன்னையுறு வோர்க்குச் சிற்றம்பலமும் பொன்னம் பலமும் உரிமையாகத் தருகின்றார். அப்படித்தான் நம் வள்ளல் சிற்பொதுவும் பொற் பொதுவும் சொந்தமெனதாச்சு என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

(5)

929. வரம்பரா பரமே வணம்பரா பரமே
930. பரம்பரா பரமே பதம் பரா பரமே

(உ-வி) பரமாகிய கடவுள் ஒருவர் என்பது அறிவோம். அந்த ஒருவரே இரு நிலை கொண்டு, பரமாகவும், அபரமாகவும் விளங்குகின்றார் என்பது, பரம், பராபரம், அதாவது, பரம்+அப ரம்=பராபரம். பரம் மேலானது, அபரம் தாழ்ந்தது. இதுபோலக் கடவுளர் நிலையும் கூட இருபடித்தாய் உள்ளதாம். அந் நிலையே பதம், பாதம், திருவடியாம். இதிலும் பரம் அகத்திருவடியையும் அபரம் புறத் திருவடியையும் குறிக்கலால் பரபதம், அபரபதம் இரண்டும் கடவுளர் திருவடியேயாகும். இப்படிக் கடவுளும், அவர் தம் திருவடியின் நிலையும் பரமாகவும் அபரமாகவும் பேசப் படுகின்றனவாம்.

திருவருளாலே கடவுள்நிலையைப் பற்றி நின்று வரமாகிய அருட்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுவது முறையாகும். அவ்வருட் பிரசாதமாகிய வரமும்கூட இரு பிரிவுடைத்தாம். இதனால்தான், வரம்-பரம், அபரம் என இரண்டாகவுள்ளதாம். ஒன்று உடலைச் சார்ந்தது. மற்றது ஆன்மாவைச் சார்ந்ததாம். பரமாகிய நிலையும் கடவுள் அனுபவமும் பெறுவதற்கு வழியும்

இரண்டாகவேயுள்ளதாம். அது வணம் எனப்படுவது. வண மானது வண்மை, தயவு ஆம். இத்தயவும் பரம், அபரம் என இரு கூறுகளாம். அபரதயவுதான் ஜீவதயவு, பரதயவு கடவுள் தயவு ஆம். ஜீவதயவால் மனிதன் நிறைவு பெறும்போது, அத் தயவு கடவுள்தயவாக விளங்கும். ஆகவே, கடவுளும் திருவடியும் த்யவும், முடிவாகப் பெறப்படும் அருட்பிரசாதமாகிய வரமும், ஒவ்வொன்றும் பரம், அபரம் என இரண்டிரண்டாகவேயுள்ளன என்பது தெளிவு.

203. பதவியல்

(1)

931. சத்திய பதமே சத்துவ பதமே

932. நித்திய பதமே நிர்க்குண பதமே

(உ-வி) கடவுளுக்கு அவர்தம் திருவருளே திருவடி என்பது மரபு. நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடைய திருவடி, அருளே யாம். அவ்வருள், அவரது தன்மை-அது நாம் என்பது அனுப வத்தில் விளங்குவதாம். கடவுளின் அருளாம் திருவடியே நம் உண்மை ஆன்மாவாக இருக்கின்றது. கடவுளும் அவரது அருளும் நித்தியம் ஆதலின் அவ்வருளேயான நாமும் (ஆன்மாவும்) நித்தி யமேயாம்.

எங்கும் நிரம்பியுள்ள கடவுள் நம் தலைநடுவுள் ஆன்ம அணு வாய்த் திகழ்ந்து கொண்டிருப்பதைக் காணும்போது, அதில் நம்மில் பதிக்கப் பெற்ற திருவடியாக அறிகின்றோம். அடியின் அறிவு, தேக வாழ்வில் வெளிப்பட்டு முடிவில் அவர்மயமாகி விளங் கச் செய்தல் அடி, நடு, முடிவாகக் கொள்ளப்படும். இங்கு 'பதவி யல்' என்றது கடவுளின் பாதம் அல்லது பதம் பற்றிய உண்மை விளக்கக் குறிப்பு உணர்த்திடுவதாம். நமது தலை நடுவுள் 'பதம்' எப்படி எல்லாம் விளங்கி வாழ்விக்கின்றது என்பதை மீண்டு காண்போம்.

இந்த பதம், முதலில் சத்திய பதம் எனப்படுகின்றது. சத்தியம் என்ற சொல்லுக்கு மெய் என்பது பொருள். சத்திய மாய், பொய்யாகாது விளங்கிக் கொண்டிருப்பது தான் சத்திய

மாம். கடவுளின் அருட்பதம், அப்படித்தான் எப்பொழுதும் சத்தியமாய் விளங்கிக் கொண்டே யிருக்கின்றதாம். ஆனால், அந்த சத்திய பதம், மனிதனில் மெய்யறிவு விளங்கும்போதுதான் தோற்றுகின்றது, மற்றபடி மறைந்து கிடக்கின்றது. ஆன்ம அணுதான் இந்த சத்திய பதம். அது காரண ரூபமாயும், சூக்கும வடிவமாயும் இருக்கும்போது அறியப்படாது தூல தேகத்தில் விளங்கும்போதுதான் அறியப்படுகின்றது. ஆகவே சத்திய பதம் நிறைவுற்றுத் திகழுவது இந்த புறத்தேக நிலையில் தான். இதனால் இத்தேகமே மெய் ஆக இருக்கின்றது. அக ஆன் மாவின் விளக்கம் கொண்டு விளங்கும் மெய் சத்தியமே, பொய் யல்லவாம். ஆன்மானுபவிக்கு மெய் மெய்யே பொய்யல்ல. தேகநிலைநின்று காண்போனுக்குத் தேகம் பொய்யாம். இதனால் கடவுள் திருவடி நம் ஆன்மா, சத்திய பதமே.

அடுத்து சத்துவபதம் எனப்படுகின்றது, எல்லா ஆற்றலும் கொண்டது என்பது கருத்து. கடவுள் சர்வவல்லமையுடைய வரே, ஆதலின் அவரது திருவடியும் சகல ஆற்றலுடையது என்பது உண்மையே. மேல், நித்தியத்துவம் கடவுளுக்கு இயல்பே என்பதைக் கொண்டு திருவடிக்கும் அத்தன்மை குறிக் கப்பட்டது. மேல் நிர்க்குணபதம் எனப்படுகின்றது, கடவுள், இயற்கையில் சுத்தமாய், வேண்டுதல் வேண்டாமையில்லாது அருட்பெருஞ்ஜோதியாயுள்ளவர். சுத்தரேயாவர். அவருடைய அருட்சந்நிதியில் சர்வ சக்தி சித்திகளும் பிரபஞ்சக் காரியப் பாடுகள் எல்லாமும் நிகழ்கின்றனவாம். இக்காரியப்பாட்டால் எக்காலத்தும் எவ்விதத்தும் அவர் சற்றும் பாதிக்கப்படுவதே யில்லை. ஆதலின், அவரை நிர்க்குணர் என்கிறோம்.

(2)

933. தத்துவ பதமே தற்பத பதமே

934. சித்துரு பதமே சிற்சுக பதமே

(உ-வி) கடவுள் திருவடி பதம் தான் சகல தத்துவங் களுக்கும் மூலமாய், ஆனால் அவற்றிற்கு எல்லாம் அதீதத்தில் விளங்கிக் கொண்டுள்ளது. 96 ஆகிய நிறை தத்துவம் கொண்ட இம் மனிதப் பிறப்புருவில், அதீதத்தில், தீண்டப்படாத அருள் வெளியில் விளங்கும் கடவுள் திருவடியை தத்துவபதம் என்

கின்றார். இது முற்றிலும் உண்மையே. ஏனெனில், அந்தக் கடவுள் பதம் நம் ஆன்மாவே அல்லது அதுவே நாம் என்பதில் ஐயமில்லை. ஆகவேதான் ''தத்துவம்'' அதாவது, தத்-அது, துவம்—நீ, ''அது நீ'' என உணர்த்துகின்றார்.

மேலே, அத் திருவடியை தற்பதபதமே என்கின்றார். தற்பதம் என்பது கடவுளையே சுட்டுவது. உண்மையில் அது கடவுளே என உணர்த்தப்படுகின்றதாம். தற்பதம், தத்பதம், துவம்பதம், அசிபதம், ஆகிய அனுபவமும் அதில் விளங்கும். அடுத்து, அப் பதம் சித்துருபதம் எனப்படுகின்றது. சித்துரு வென்றால் ஞானமே வடிவானது என்று கருத்து. அத்திருவடி ஞானமாகிய அருள் உணர்வால் உணரப்படுவதேயன்றி பொறிபுலன்களால், கருவி கரணங்களால் புறத்திருந்து காணப்படுவதல்லவாம். முடிவில், சிற்சுக பதம் எனப்படுகின்றது. சிற்சுகம் என்பது அருள் ஞான மாகிய சித்துணர்வில் அனுபவமாவது இந்த அருள் இன்பம். சிற்சுகம், சிறு சுகம் அல்லது சிற்றின்பம் என்று கொள்ளக் கூடாது. இந்தச் சிற்சுகபதம் ஆன்மாவில் நிறைவாழ்வுக்குரிய தாம்.

''அருளாலே அருளிறை அருள்கின்ற பொழுதங்கு
அனுபவ மாவது என்னடி தாயே
தெருளாலே மருளாலே தெரியாத தெரியும்
திருவடி யின்பமென் றறியடி மகளே''.

என்ற குறிப்பால், சிற்சுக பதவாழ்வின் உண்மை தெளிவாம்.

(3)

935. தம்பரம் பதமே தனிச்சுகம் பதமே
936. அம்பரம் பதமே அருட்பரம் பதமே

(உ-வி) கடவுள் உண்மை வான்வெளி முற்றும் நிரம்பி யுள்ளது. ஆதலின் கடவுளின் வடிவம் வான்வடிவமாகவே குறிக் கப்படும். அம்பரம் என்ற சொல், வான் என்னும் பொருள் கொண்டதாய்ப் பகரப்படுகின்றது. ஏனெனில், அகரமே அகண்ட வெளிநிலை யாயும் அத்துடன் விளங்கும் மகரமெய் நிறையொளி மயமாகவும் உள்ளதால், அவ் அகண்ட வெளியே பரம் ஆகக் கொண்டு கூட்டி அம்பரம் என்பதை வான்வடிவக் கடவுளைச் சுட்டு

வதாய்க் கொள்ளலாம். அன்றியும், அம் என்பது, அ-உ-ம்=ஓம் என்னும் கட்வுளுண்மை விளக்கப் பிரணவத்தின் கூறாய் இருத்தலின், அந்தஅம்மே, பரமாகச் சுட்டப்படுதல் பொருத்தமேயாம். எனவே அம்பரம் என்பதைக கடவுள் உருவமாக ஏற்றுக்கொள்ள லாம். அப்படி அம்பரமாயுள்ள கடவுள் சக்தியாகிய பதம், மனிதனில் அருட்பரம், அருள் ஒளித் திருவடியாக விளங்குகின்றதாம்.

அருளால் அறிந்துகொள்ளப்படுகின்ற நம் ஆன்ம நிலையே ஆண்டவரின் சிறந்த, உயர்வுடைத்தாகிய திருவடியாக இருக்கின்றது என்பதைத்தான் தம்பரம் பதம் என்று தொடக்கத்தில் குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வாண்டவர் தனித் தலைமைப் பதியாக இருத்தலின் இவர் திருவடியால் பெறப்படுகின்ற இன்பம் தனிப் பெருஞ்சுகமாக இருப்பது என்பது தெளிவாம். இதுதான் தனிச் சுகம் பதமே என்றதாக உணர்த்தப் பெறுகின்றோம்.

இந்த அருட்பதி பதத்தின் உண்மையை எல்லாம் உணர்ந்து கொண்டால் அதனிடத்தே தீவிர பற்றும், பிறகு எதனிடத்தும் பற்றின்மையும் உண்டாகிப் பெரும் பயன் பெறலாகும் என்பது உண்மை.

(4)

937. தந்திர பதமே சந்திர பதமே
938. மந்திர பதமே மந்தண பதமே

(உ-வி) அகம் விளங்குகின்ற கடவுள் திருவடியே முதலில் தந்திரபதமாக சாற்றப்படுகின்றது. தந்திரமாவது, உபாயம். ஆகம மார்க்கம், பக்தி வழிபாடு செய்வதற்குச் சிற்பாலய விக்கிர காதிகளையும், யோகபக்தி முறைகளையும் கூறும் சாத்திரம் தந்திர கலை எனப்படும். இத் தந்திர கலை மார்க்கமாக கடவுள் திருவடியை அறிந்து கொள்ளுவது உபாயஞான நிலையாகும். இந்நிலை, ஒன்றும் பெருமைப்படக்கூடியதல்ல. எவரும் முயன்றால் கலையறிவால் பெற்றுக் கொள்ளலாம், இதற்குமேல் உண்மையை அறிந்திட அகவிசாரம் வேண்டும். அகவிசாரத்தால் மெய்யறிவு விளங்கும். அந்த மெய்யறிவு நிலையே சந்திரபதமாக உள்ளதாம். இதுவே உண்மை ஞான நிலையாக உரைக்கப் படுவது. அடுத்து மெய்யறிவு நிலையில் நின்று உறுதிப்பட்டு

விளங்க, உள்ளொளியில் உலைவற நிற்றல் கூடும். இதுவே மந்திர பதம் எனப்படுகின்றது. மந்திரம் என்றாலே மனம் திட மாகி வலிமைபெற்று விளங்கச்செய்வது மந்திரமென்ப. மேலும் தன்னை அடைந்தவர்களைக் காப்பது என்பதும் மந்திரப் பொருளாம்.

மேற்படி மந்திரப்பதத்தால் சித்திக்கும் உயர்நிலைதான், மந்தண பதமாம். மந்தணம் என்றால், இரகசியம், இறையோடு கலந்து ஒன்றுபடுதல். அப்படி ஒன்றுபட்டு மறைதல் முன்னெறி முடிவு. ஒன்றாகி நின்று, அபக்குவர்க்குத் தோற்றாது உறைதல் இந்நாள் சன்மார்க்க முடிவாகும்.

(5)

939. நவந்தரு பதமே நடந்தரு பதமே

940. சிவந்தரு பதமே சிவசிவ பதமே

(உ-வி) நவம் தரு பதம் என்றது பிரணவம் கொண்டு விளங்கும் திருவடியாம். அது, நாதவிந்து மயமாய், அருவாய், உருவாய், அருவுருவாய், நம் பகர வடிவ சிரநடு பீடமேல், நவ குண்ட நவாக்கரி சக்கர நிலையில் திகழும் பதமாக, என்றும் நவமாக (ப்புதுமையாக) உள்ளதாம்.

அந்நவபதம், அகமிருந்து கொண்டே, புறத்தில் வராமலே அனகமாகத் தன்னருளால் ஐந்தொழிற் செயலை இப் பிரபஞ்சத் தில் சதா புரிந்துகொண்டேயுள்ளதாம். இவ்வைந்தொழிற் செயலே ஆண்டவரின் தாண்டவத் திருநடனமாக. நவிலப்படுவது. ஆகவே, அப்பதத்தின் அக அனக விளக்கச் செயல் கண்டோர், அத்திருவடி உண்மையைக் குறிக்க, நடந்தரு பதம் என்றுள்ளார்.

இந்தத் திருநடனச் செயலால் ஆன்மாவுக்குப் பலவாகிய ஜீவ தேக போக வாழ்வு சூழ்ந்து, அறிவும் அனுபவமும் வளர்ந்து முடிவில், அவ்வான்மா-தன்னையே அறியும் பக்குவம் ஏற்படு கின்றது. அந்த தன் ஞானமே உண்மைக் கடவுளின் சிற்றுருவின் விளக்கமாக உணரப்படுகின்றதாம். இதுதான் சிவம் தரு பதம் எனப்படுகின்றது. திருநடனச்செயலால் ஏற்படுகின்றது இக் கடவுள் திருவடி அனுபவமே. இது இங்கு சிவபதமாக ஈற்றில்

குறிக்கப்பட்டுள்ளது. இச்சிவ பதத்தால் பெறப்படுவது சிவானு பவ அல்லது சிவானந்த அனுபவமேயாம். இதுவே, சிவசிவ பதம் என்றதால் சுட்டப்பெற்றுள்ளதாம், சிவானுபவம், சிவானந்தா னுபவம், எல்லாம். சச்சிதானந்த அனுபவமே அல்லாது மற்றவை எதுவும் அல்லவாம்.

திருவடி நிலை நம் ஆன்மாவாயுள்ளது. முடி நிலை (ஆன்+ அந்தம்) ஆனந்தமாய் இருக்கின்றது. இந்த அடிக்கும் முடிக்கும் இடையில்தான் ஆன்மாவுக்கு அநித்திய வடிவங்கள், உடல்கள் வந்து வந்து சிறிது சிறிது அறிவும் அனுபவமும் வளர்த்துக் கொண்டு வந்துள்ளதாம். எனவே, ஓர் ஆன்மாவின் அடி நடு முடி நிலை இவை என அறியலாகின்றனவாம். முடிவான சிவ நிலை முக்கூறு கொண்டிலங்குவது; அதுவே சிவ வடிவில் கற்பிக் கப்பட்டுள்ளதாம். நிலவுலாவிய நீர்மலி வேணியன் அலகில் ஜோதியன் என்பது ஞானதேகம், சுத்த தேகம், பிரணவ தேக மாகிய திரிதேக சித்திநிலையைக் குறிப்பதாம்.

204. சிவரகசியம்

(1)

941. பிரமமெய்க் கதியே பிரமமெய்ப் பதியே
942. பிரமநிற் குணமே பிரமசிற் குணமே

(உ-வி) பிரமம் என்ற சொல் ஒளியைக் குறிக்கின்றது. இங்கு அகண்ட வெளிநிறை இறை ஒளியையே சுட்டுவதாம். இதுவே பரம் என்றும், பரமன் என்றும் பரப்பிரம்மம் என்றும் திருமால் என்றும் சுத்தசிவம் என்றும் கூறப்படுவதாம். இவ் விடத்தில் பிரமம், சுத்த சிவத்தைக் குறிக்கவே வந்துள்ளது.

சிவரகசியம் என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரமத்தைப் பற்றி விரித்துரைத்துள்ளார் முதலீர் அடிகளில். ஏனெனில், சிவம் முதலில் வெற்று ஒளி மயமாய் (பிரமமாய்த் தான்) இருந்து, பக்குவமனிதனில்தான் சிவஜோதியாகத் தோன்றி சிவானந்த அனுபவத்தைக் கூட்டிவைக்கின்றதாம். ஆகவேதான் இங்கு பிரம்மஜோதியே சிவஜோதியாம் இரகசியத்தைக் குறிக்க வந்துள்ளதாம்.

அகண்டநிலையிலிருந்து தொடங்கிய அந்தப் பிரம்மஜோதி, பூதநிலை கடந்து, ஜீவநிலை கடந்து, ஞானநிலை கடந்து, யோக நிலையும் கடந்து அருள்நிலையுற்ற போதுதான், தன்னை அது வாகவே கண்டு கொள்ளுகின்றது. இந்த நிலைகளின் வழியே வந்து இன்று உண்மையை அடைந்துள்ளது. ஆகவே அந்த வழியைக் கதி என்றும், முடிவில் சார்ந்துள்ள நிலையைப் பதி என்றும் காண்கின்றோம். இந்த ஜோதியாம் பிரமத்திற்குக் குணம் ஏதுமில்லை முதற்கண். ஆனால், பக்குவ விசாரத்தால் தன்னையே வெளிப்படுத்திக்கொள்ளுகின்றது. அதுதான் சிற் குணம், அல்லது ஞான உணர்வாம். இதுதான் பிரம்மானுபவம் என்று உரைக்கப்படும்.

(2)

943. பிரமமே பிரமப்பெருநிலை மிசையுறும்

944. பரமமே பரம பதந்தரு சிவமே

(உ-வி) உள்ளொளியாகத் தோற்றிடும் பிரமம், அது விளங்கும் பெரு நிலையைக் காட்டிக் கொடுக்கின்றது. அது நம் தலை நடு அமைந்த ஓங்கார மூளை மேற் பெருவெளியிடமாக வுள்ள தாம். அதனையே பிரமரந்திரப் பெரு வழி என யோக நூல்கள் கூறும். அந்தச் சிறு வழிவழி யோக சக்தியால் சென்று மேலுறு வெறு வெளியை அடையும் போது, உள்ளொளிர் அமுதம் பெருகிப் பரவி மூளைப் பகுதிகளையும் உடற் கூறுகளையும் நிரப்பி சுகானந்த உணர்விலே சொக்கிடச் செய்வதாம். இது தான் அந்த மேனிலை அனுபவம். அதனையே மேலான கடவுள் நிலை எனக் கொண்டனர் யோகஞான சித்தர்கள்.

மேற்படி அமுதஜோதி பதத்தைச் சார்ந்து ஓரளவு யோக ஞான சித்திகளைப் பெற்ற சித்தர்கள், உலகியலில் வந்து அற்புத கர்ம அஷ்டசித்திகள் பல புரிந்து, கலை பலவும் தெய்வ கற்பனா சாத்திரங்களையும் அவற்றை விளக்க வேண்டி சிற்பாலய விக்கிரக மூர்த்திகளையும் ஆக்கி வழங்கியுள்ளனர். முடிவாக அவர்கள் அடைந்த சித்தியே சிவபதம் ஆகிய முத்திநிலையாம். அதனையே ஈண்டு பரமபதம் தரு சிவமே எனப்பட்டுள்ளதாம்.

(3)

945. அவனோ டவளாய் யதுவா யலதாய்

946. நவமா நிலைமிசை நண்ணிய சிவமே

(உ-வி) மனிதனில் கடவுட்ஜோதி விளங்கும் இடம் எங்கு என்றால், பலர் இருதயத்தானம் என்பர். உண்மையில் அவ் வொளி தலை நடுவுள்தான் இருக்கின்றதாம். இங்கிருந்துதானே எல்லாச் சக்தியும், உணர்வும், அறிவும் அனுபவமும் உடலின் எல்லாக் கருவி கரணங்களுக்கும் பரவுகின்றன. அப்படி இருக்க இதயத்தை கடவுட்ஜோதிக்கு இருப்பிடம் என்பது எப்படிப் பொருந்தும்? அப்படிச் சொல்லக் காரணம், உயிருணர்வும் அதனால் மன அறிவும் பாதிக்கப்படும்போது, முதலில் நெஞ்சி னிடத்தேதான், உயிர்ப்பின் வேகமும், இரத்த ஓட்டமும் தாக்கப் படுவதாய்க் காண்கின்றதாலே அந்த நெஞ்சில்தான் கடவுள் ஆன்ம சொரூபம் ஒளிமயமாய்த் திகழ்கின்றது எனக் கருதப் பட்டுள்ளது. மேலும், உருத்திர(ரம்) பீஜாக்ஷரமாகிய மந்திர ஜெபத்தால் இதயத்திலிருந்து சூடேறி உடல் முற்றும் கனல் வீசுவதாய் அறியப்படுவதால், கடவுட்ஜோதி, இந்த இதயத்தே தான் இருப்பதாய்க் கொண்டனர் பலர்.

உண்மையில் தலைநடுநிலைமேல் தான் கடவுட்ஜோதி யணு கருத் தொடக்க முதல் சுடர் பரப்பிக்கொண்டே யிருக்கின்றதும் அதிலிருந்து எல்லர்ச் சக்தியும் வெளியாகி, இதயம், புருவ மத்தி மற்ற ஆதாரங்களில் எல்லாம் ஒருசில விளக்கத்தை வழங்கிக்கொண்டுள்ளதாக அறிகின்றோம். அறிவுக்கு ஆதாரம் மூளைப் பகுதி தானே. ஆகவே உண்மையில் இந்தச் சிவஜோதி இம் மனிதப் பிறப்புருவில் பகரவடிவமாகிய நவமணிபீடமேல் திகழ்வதாகவே அறியலாகின்றது. இக்கடவுள் ஒளியின் ஆற்ற லால் மனிதனின் உருவத்தோற்றம் மட்டும் அல்லாது, பிறவுயிர் களின் வடிவங்களும், அணுமுதற் பொருள்களும் உருவாகி யுள்ளனவாய் அறியலாகும். ஆகையால், அவ்வொளியே அவன், அவள், அது என விளங்கலாகின்றதாய் அறியவேண்டும். இதனால் அந்த ஜோதி சிவத்தை ஆண், பெண், அலி ஆக்வும், அவை ஒன்றும் அல்லாததாகவும் கூறப்படுவது ஆன்றோர் மரபு.

(4)

947. எம்பொரு ளாகி யெமக்கருள் புரியுஞ்

948. செம்பொரு ளாகிய சிவமே சிவமே

(உ-வி) இயற்கையுண்மை நிறைவாகிய இறையொளியைச் சிவமாக ஏன் கற்பித்தனர் எனின், அதனைச் செந்தீ வண்ண மாகிய செம்பொருள் எனக் கொண்டதாலும், உலகுயிர்களைச் செம்மைப்படுத்தி இன்பநிலைக்கு ஏற்றுவதாலும், நாசிவழி உயிர்ப்பியக்கத்தில் உட்செல்லும் மூச்சுக்காற்று வா என வாங் கப்பட்டு அகத்தே செலுத்திச் சிரத்தே சேர்க்கப்படுவதால், வாசியே சிவகாரமாய் விளங்குகின்றதாம். இதனையே ஔவை குறளில் சிவயோகநிலை கூறுமிடத்து:

> "உண்ணாடி வாயு வதனை உடனிரப்பி
> விண்ணோடு மெள்ள விடு."

என்றதாலும் சிவ ஜோதியின் உண்மை அறியலாகும்.

ஆகவே கடவுளைச் செம்பொருள் என்றவர்கள், சிவ ரகசி யத்தை யோர்ந்தே உரைத்தனர் ஆவர். சிவமாகிய கடவுள் ஒளி யாவற்றிற்கும் அகமும் புறமும் நிரம்பியே யிருக்கின்றது. அப்படி யிருந்து பக்குவப்படுத்தி வருகின்றதும் உண்மையே. அச்சிவம் மனிதனில் அகமும் புறமும் இருந்து வந்தாலும் மனம் சுத்தநிலை பெற்று அருள்மயமாகின்றபோதுதான் அச் சிவ விளக்கம், அந்த அருள் உணர்வால் உணரப்படுகின்றது. அப்போது அந்த அருளே அச்சிவ அம்சமாய் இருந்துதான் உண்மையுணர்கின்ற தாய், அறியப்படுகின்றதாம். உள்ளிருக்கும் சிவநிலை அருளால் அறியப்பட, புறத் திருக்கும் சிவநிலை உருவப் பொருள்களாக விளங்குகின்றதாம். இவ்வுண்மையைச் சுட்டவே, செம்பொரு ளாகிய சிவமே சிவமே என இருமுறை ஓதப்பெற்றதாய் அறிய லாகும்.

இயற்கையுண்மை நிலையில் செம்பொருளாகி அகமும் புறமும் நிரம்பி நின்ற கடவுள் அல்லது சிவம், சுத்தசத் விசாரத்தாலே உள் விளங்கக்கண்டு, அதனோடு சார்ந்து நிற்கும் நமக்கு, அச் சிவம் அனுபவப் பொருளாகி விளங்குவதாம். அப்படியிருந்து தயவோடு வாழ வாழ அச்சிவம் அருள் புரிகின்றதாம். அந் நிலையே சிவமாகி விளங்கும் சிவானந்த அனுபவ நிலையாம்.

(5)

949. ஒருநிலை யிதுவே உயர்நிலை எனுமொரு
950. திருநிலை மேவிய சிவமே சிவமே

(உ-வி) திருநிலை மேவிய சிவமே சிவமே (தான்) ஒருநிலை, இதுவே ஒரு உயர்நிலை, என்பது அன்வய வாசகம். சிவத்தின் அகப்புறமாகிய இருநிலை உண்மையும் மேவி விளங்கும் இடம் எதுவெனில் அது திரு நிலை ஆம். ஆம் இத்திரு நிலையிற்றான் சிவ ரகசியம் வெளிப்படுகின்றது. திருநிலை விளக்கம்:- திருவென்ற சொல்லின் அனுபவப் பொருள், அவ்விரு எழுத்துக்களையும், த்+இ, ர்+உ என்று பிரித்துக் காணும்போது, கடவுள் ஆகிய சிவம், தகராகாச வடிவொடு, இகர அருட்பிரணவ சக்திகொண்டு விளங்குநிலையே தி ஆகும். அது துவாதசாந்த அனுபவநிலையில் அருள் ஒளியாகக் காணப்படுவதை ரு ஆகக் குறிக்கின்றோம். இதனால், ''திரு'' என்பது எங்கும் நிறை சிவஜோதி நம் துவாத சாந்த நிலையில் அருள்ஒளியாகி வெளிப்பட்டு விளங்குவதைக் குறிப்பதாம். இச் சொல்லை வேறு வேறு பொருளால் விளங்கும் போது உண்மை முற்றும் காணமுடியாது. அகத்தும் புறத்தும் சிவமே நிறைந்து விளங்கலின் சிவமே சிவமே என்று இருமுறை குறிக்கப்பெற்றதாம்.

மேற்படி, சிவநிலை விளக்கம்தான் இயற்கையுண்மைக் கடவுள் கருணையோடு வெளிப்பட்டு விளங்கும் இடமாக இருத் தலின் உயர்நிலை சிறந்தநிலையாகும் என்பதாம். இதுவே ஒரு நிலையாம். ஒரு நிலை யென்றால் ஒப்பற்ற நிலையாகும். இதற்கு ஒப்பாகவோ உயர்வாகவோ பிறிது ஒன்றுமே யில்லையாம். இந்நிலை யனுபவம் கொண்ட மனிதனின் வாழ்வு, நிறையருளின்ப இறைவாழ்வாய் நிலைத்து நிலவுவதாம்.

(6)

951. மெய்வைத் தழியா வெறுவெளி நடுவுறு
952. தெய்வப் பதியாஞ் சிவமே சிவமே

(உ-வி) நித்தியமாகிய பேரின்ப வாழ்வு என்னும் சிவா னந்த அனுபவ நிலை வெளிப்பட்டிலங்கும் இடம். ஒரு தெய்வத்

திருத்தலமாக இருக்கின்றதாம். அத்தலம் எது, எங்கே யுள்ளது என்றால், இத்தேகம் மெய்யாக விளங்கிக்கொண்டிருக் கின்றபோது, இதன் அகத்தே வெறுவெளியின் நடுவே விளங்கு வதாம். மெய்வைத்து என்றால் தேகத்தோடு இருந்துகொண்டே அழிவுறாது இருக்கின்றபோதே, மலபாச மறைப்பெல்லாம் நீங்கி வெளிநடுவே நிற்கும்போது விளங்குவது இத்தலம். வெளிநடு தெய்வப்பதியில், பதிவுற்று நிற்கும் ஒருவனுடைய உடலே அழிவுறாத மெய்யாகத் திகழுவதாம். இப்படி நித்தியமாய் விளங்க உள்ளதால்தான் இந்த தேகத்தை மெய் என்கின்றனர் உண்மை யுணர்ந்தோர். உணராதார்தான் இத்தேகமாகிய மெய்யைப் பொய் என்று புகல்கின்றனர்.

மேற்படி சிவானந்த அனுபவநிலை எப்போது வரும் எப் போது வரும் என்று பக்குவ ஆன்மாக்கள் உளநெகிழ்வோடு ஏங்கிநின்று திருவருளை வேண்டிக் கொண்டுள்ளனர்.

> "இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்(று)
> என்றுவரு மோவறியேன் எங்கோவே—துன்றுமல
> வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
> சும்மா விருக்கும் சுகம்."

சிவானுபவத்தின் உண்மை யிதுவாம்.

(7)

953. புரைதவிர்த் தெனக்கே பொன்முடி சூட்டி
954. சிரமுற நாட்டிய சிவமே சிவமே

(உ-வி) ஆன்ம பரிபாகமுறத்தான் எல்லாப் பிறப்பு வடிவும், வந்து வந்து கழிந்து போக வேண்டியுள்ளனவாம். இப்படி ஒவ்வொரு பிறவிச் சூழலிலும், ஆன்மாவினின்று உயிர்ச் சக்தி வெளிப்பட்டு, உடலுரு வேற்று வாழ்கின்ற போது அவத்தை பல நேருகின்றன, குற்றமும் குறையும் ஏற்படுகின்றன. அவற்றி லிருந்து அனுபவம் விளைகின்றதாம். அக்குற்றமும் பொய்யு மாகிய புரை, திருவருள் ஞானம் உண்டாகும்போது, பதியின் மறக்கருணைச் செயலாகவே கண்டு கொள்ளப்படுகின்றனவாம்.

பக்குவ ஆன்மாவாகிய நம் அடிகளார்க்கு அத்திருவருள் வெளிப்பட்டு, அப்புரை நிலையை முற்றும் தவிர்த்துவிட்டது.

அதுமட்டுமல்ல, சுத்த சன்மார்க்கத்திற்குரிய தலைமைப் பீடத் திருத்திப் பொன்முடியுஞ் சூட்டிவிட்டது தனக்கே என்று கண்டு அந்த அருட்பெருஞ்ஜோதிபதி ஆகிய சிவத்தைப் போற்று கின்றார்.

பொன்முடி சூட்டப்பெறுதலின் உண்மை யாதெனில், இறை யொளியைத் தன் சிரநடு கண்டு கலந்து அதுவாகி நிற்கும் ஒருவன், தன் நிலையைத் தெய்வ ஒளி மயமாய் விளங்கக் காண கின்றான். அவனது தலையைச் சூழக் கடவுள் ஒளியின் பிரபை மிளிர்கின்றது. அதுவே அத்தலை இடத்தே ஒளிசெய் வட்டப் பிரபையாகவோ, தலைமேற்சூடிய பொன்மணிக் கிரீடமாகவோ விளங்குவதாம். திருமால் அம்சமாகக் கொள்ளப்படும் மன்னர் மன்னர்க்கும் அவர்தம் காக்கும் பொறுப்பும், ஆளும் பெருமையும் காட்ட முடிசூட்டப் பெறுகின்றவராக அறியலாகும். நம் வள்ளல் திருவருளாலே, அருட்பெருஞ்ஜோதி ஆட்சிப் பொறுப் புக்குத் தலைமைப் பேறு வழங்கப்பட்டுள்ளதற்கு அடையாளமாக அருட்ஜோதி நவமணி பதித்த சுத்த பொற் கிரீடம் அணிவிக்கப்பெற்றுள்ளார் என்பது உண்மையாம். சிர முற நாட்டிய என்பது தலைமைத்தானத்தில் நிலைபெற்று விளங்கச் செய்துள்ளதைச் சுட்டுவதாம்.

(8)

955. கல்வியுஞ் சாகாக் கல்வியு மழியாச்
956. செல்வமு மளித்த சிவமே சிவமே

(உ-வி) கல்வியும், படிப்பும் உலகில் ஒன்றாகக் கருதப்படு கின்றன. உண்மை வேறாகும். இன்றைய உலகம் படிப்பிலே தான் ஒருவாறு முன்னேறியுள்ளதாகக் கூறமுடியும், உண்மையில் கல்வி கற்றவர்களைக் காண்பது அரிதாயிருக்கின்றது எனலாம். புறத்திருந்து புகட்டப்பெறுவதும், புறமிருந்து ஏற்பனவற்றை உளத்தில் பதியவைத்துக்கொள்ளுவதும், உட்படிந்துள்ள பொருளையே வெளியிட்டுப் புனைந்து கட்டி உரைப்பதும் படிப் பின் அம்சமாயுள்ளனவாம். புறப்படிப்பாலும், கேள்வி ஞானத் தாலும், கட்டுரைக்கும் திறமையாலும் பலர் இன்று புகழப்படு கின்றனர். இவர்களெல்லாம் பெரும் படிப்பாளிகளே! இவர் களது ஞானம் உபாயஞானம் எனப்படும்.

சத்விசாரத்தால் மன ஓர்மையும் உள்ளுருக்கமும் ஏற்பட்டுத் தெளியப்படுகின்ற தத்துவ விளக்கங்களும், ஆன்ம உண்மை விளக்கமும், கடவுள் விளக்கமும் உண்மை ஞானம் எனப்படும். இந்த உண்மை ஞானம், புறத்திருந்து அகம் உற்று அசைவற இருந்து, உணரப்பெற்ற கருத்துக்களாம். இந்த மெய்யறிவைப் பெற்றவர்கள், ''மெய்கண்டார்'' ஆவர். இவ்வகையைச் சேர்ந்த வர்களே தவயோக ஞானசித்தர்கள் எல்லாம். இவர்களது ஞானமே உண்மை ஞானம் என்பர்.

திருவருளாலே, அகநிலையிற் பொருந்திய மெய்ஞ்ஞானி யர்க்கு அவ்வருளே குருவாய் இருந்து, எல்லாவற்றையும் ஓதாதே யுணர உணர்த்திச் சக்தி சித்திகளையெல்லாம் வெளி யிட உதவுகின்றதாம். இவர்களையே கற்றவர்கள் என்று கூற லாகும். அக உண்மையைக் கல்லி வெளிப்படுத்திக் கொள்ளுவதே கற்றல் என்றதன் பொருளாம். இவர்கள்தான் அனுபவ ஞானியராவர்.

நமது திருவருட்பிரகாசர், அருளே மெய்ஞ்ஞான குருவாய்ப் பெற்று, யாவையும் ஓதாதே யுணர்ந்தார். திருவருட்பெருஞ் ஜோதியையே தன் ஆன்ம அகத்திருந்து வெளிப்படுத்தப் பெற்றார். அந்த அருட்ஜோதியே வகரமெய்யும் இகர வுயிரும் (வ்+இ) கூடிய பொருளாய், அகமிருந்து கல்லப்பட்டு கல்வி என்றதாய் அனுபவத்தில் கிடைக்கப்பெற்றிருந்தார் என்பது உண்மையாம். கல்வி என்பதற்கு மெய்ப்பொருளே, அருள் ஒளியைத் தன்னில் வெளிப்படுத்திக் கொள்ளல் என்பதாம். இந்த அருட்ஜோதிக் கல்வியால் நம் வள்ளல் தன் தேகத்தையே அழியாத அருள் இயல் வடிவாக்கிக்கொண்டு என்றும் விளங்க லாகிவிட்டார். ஆகவே இவர் கற்றது அகக்கல்வி மட்டுமல்ல, சாகாவாழ்வில் நித்தியமாய் நிலவச்செய்யும் சாகாக்கல்வியே யாம்.

அகமும் புறமும் நிரம்பியுள்ளசிவம், அகம் நின்று அருள் வதோடு, புறஞ்சூழ்ந்தும் வேண்டும் பொருள் யாவும் வழங்கி வாழ்விக்கின்றதாம். இப் புறப்பொருள் நிலை, குன்றாத குறை யாத செல்வமாக இருக்கின்றதாம். அருட்ஜோதிக் கல்வியின் பெரும் பயன் இதுவாகும். இக்கல்வி கல்லார், ஏனைய படிப் பாலும், அறிவாற்றல்களாலும் எவ்வளவு புகழ்பட வாழ்ந்தும்

பயனில்லை. ஒருகால் வறுமையிலே வாடி மடிந்தும் போவர் அருட்கல்விச்செல்வம் அடையாதவர்கள்.

(9)

957. அருளமு தெனக்கே அளித்தரு ணெறிவாய்த்
958. தெருளுற வளர்க்குஞ் சிவமே சிவமே

(உ-வி) அனுபவமாகிய அருள்ஞானப் பேறுதானே அருள் அமுதமாக அணியுற மொழியப்பட்டுள்ளது. எந்த அருட் பெருஞ்ஜோதிபதியைச் சிவமே சிவமே என்று போற்றி செய்யப் படுகின்றதோ அந்தத் தனித்தலைமைப் பெரும் கடவுளர் திரு வருளைப் பூரணமாகப் பாலிக்கின்றார். பாலித்து அந்த அருள் மார்க்கத்திலே வைத்து வளர்த்துத் தெருட்டி முழுமையுற்றுத் திகழச்செய்கின்றார் என்று கூறப்படுகின்றது. பகுத்தறிவுக்கு மேலானது அருள்ஞானம். இந்நிலைநின்றுதான் அருள் மார்க்கம் விரிகின்றது. இந்நெறியே சுத்த சன்மார்க்கம், அனகநெறி முதலியனவாக மொழியப்படுவது. பிற மார்க்கம் யாவும் புறத்தே தோன்றி மறைவனவே.

மேற்படி அருளமுதம் ஒன்றே மனிதனை மரணமில்லாப் பெருவாழ்வில் விளங்கச்செய்து, உலகம் எல்லாம் கண்டு தெளிந்து வந்து அடைய, சுத்த நெறியைக் காட்டிக் கூட்டி வைக்க உதவுகின்றது. மற்ற சிவராஜ யோக மார்க்கம் தலை நடுவுள் திகழ் அமுத கலசத்தைத் திறப்பித்து, அகமிருக்கும் அமுதரசத்தை உடலுள் நிரப்பிடச் செய்து, உடலைக் கல்பதேக மாக அழியாமை அடையச் செய்தாலும், உள்ளொடுங்கி மறைந்து ஒழியச்செய்வதால் வாழ்வற்று சடம்போற் கிடக்கச் செய்துவிடுகின்றதாம். அந்நிலையில் உடல் அழியாதிருப்பினும், உணர்வும் அனுபவமும் வாழ்வும் இல்லாததால் என்ன பயனோ? இதுபோல் மற்ற நெறியாலும் பயனிலையாம்.

"ஓங்கார மான கலசத் தமிர்துண்ணில்
போங்கால மில்லை புரிந்து."

என்ற ஞானக்குறள் குறிக்கும் அமுத தாரணையின் பயன், அருள் வாழ்வு அளிக்காதென அறியலாகும். இந்த அமுதகலச உண்மையை மேலெழுந்வாரியாகக் கண்டு அற்பப் பயன் விளை

வைப் பற்றியும் குறிக்கின்றது மேனாட்டு உடற்கூறு நூல்கள். இவர்களின் மொழியில் இவ்வமுதகலசம் (Cerebro Spinal Cavity) என்றும், அதிலுள்ள அமுதரசம் (Cerebro Spinal Fluid) என்றும் உரைக்கப்பட்டுள்ளன. இந்த ரசம் உயர்நிலையில் உயர் ஆற்றல் படைத்ததாயுள்ளது என்பது ஒருவாறு அறியப்படுகின்றது.

(10)

959. சத்தெலா மாகியுந் தானொரு தானாஞ்

960. சித்தெலாம் வல்லதோர் திருவருட்சிவமே

(உ-வி) திருவருட்சிவம் என்று கொள்ளப்படுகின்றது நமது அருட்பெருஞ்ஜோதியே என்று அறியப்படும். அருட் பெருஞ்ஜோதியில்தான், அருளே முன்னின்று, அளவு கடந்த அறிவரிய பெருஞ்ஜோதியின் ரகசியத்தை யுணர்ந்து கொள்ளச் செய்கின்றது. சிவத்திலோ சிகரஜோதியே முன்னின்று அருளை உட்கொண்டு இருத்தலின், ஜோதி முன்னின்று வேண் டுவோர் அவ்வொளியில் மறைந்து போகத்தான் முடிகின்றதாம். இதனால் நம் பெருமான் அருட்பெருஞ்ஜோதியையே உளம் கொண்டிருந்த காரணத்தால் அதனையே சிவமாகக் குறிக்க நேருகின்றபோது, அருள் என்ற சொல்லை முன்னிறுத்தி அருட் சிவம் என்றும் திருவருட்சிவம் என்றும் குறிக்கின்றார். இங்கு, திருவருட்சிவமே என்று உரைத்துள்ளதின் நோக்கம் இச்சிவம் சமயமதாதீத அருட்பெருஞ்ஜோதியையே சுட்டுதற்கேயாம். இதே கருத்தைத்தான் இந்த அகவலை ஆரம்பித்த நிலையிலே குறித்துள்ளார்.

"அருட்சிவ நெறிசார் அருட்பெருநிலை வாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் ஜோதி"

என்றுள்ளதில் அருளை முதலாய்க்கொண்டு சிவத்தைக் குறித் ததின் இரகசியத்தை ஓர்ந்திடுதல் வேண்டும்.

இந்த அருள் என்பது சாதாரணமானது அல்லவாம்; பெரும் பொருளைக் குறித்து நிற்பதாம். இவ்வருள் வெற்று ஈகை இரக்கம் போன்ற கருத்தைக் குறிக்க வரவில்லை. இது நம் பதியின் எல்லாம் வல்ல பேராற்றல் பேரியல்பையும் பெருஞ் செயல் வெளியீட்டையும் குறிப்பதாம். இதனால்தான் சித்

தெலாம்வல்லதோர் திருவருட்சிவமே என்றுள்ளார். இந்த ஒன்றான அருள் இயல்பிலே இருந்துதான், அதன் ஏகதேசமாகிய அருட்சக்தியும், பொருட்சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, யோக சக்தி முதலியனவும் விரிந்து பிரபஞ்சக்காரியப்பாட்டில் சதா விளங்கிக்கொண்டே யிருக்கின்றனவாம்.

எல்லாவற்றிற்கும் மூலமாய் இருக்கின்றது நம் பதியின் திருவருளே. அதுதான் சத்தாக இருக்கின்றதும், சித்தாக விளங்குவதும், ஆனந்தமாக அனுபவப்படுவதுமாம். ஒப்பற்ற ஒன்றான பதியே, சத்துப்பொருள் எல்லாமாய் இருந்து, பலவாகிய தோற்றம் கொண்டும் விளங்குகின்றார். பலகோடி மக்களாகத் தோற்றிக் கொண்டுள்ளவர் அந்த ஒன்றான பதி ஒருவரே என்பது உண்மை. இது அந்தத் திருவருட் பெருஞ் ஜோதிபதியின் பெருமையாம். இந்த அருட்பதியைக் கண்டு நிற்கும் நாம் அந்த அருள் வண்ண உணர்வாய் இருந்துகொண்டு தான், நம் அகமுடையானே நாமாய் இருக்கின்றதோடு, எவ்விடத்து எவ்வுயிர்க்கும், எப்பொருட்கும் அடிநிலையாய்ச் சத்தாய் இருந்து, அதுவதுவாய், அவரவராய் விளங்கிக் கொண்டும் உள்ளதாக அறிவோம். ஆகவே இந்த ஒன்றே எங்குந் தானாய், தானே எங்குமாய் விளங்கிக்கொண்டிருப்பது உண்மையாம்.

(11)

961. எங்கே கருணை இயற்கையி லுள்ளன
962. அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே

(உ-வி) கடவுள் எங்கும் விளங்கிக்கொண்டேதான் உள்ளார் என்பது பொய்யல்ல; இருந்தாலும் எங்காவது நாம் கடவுளை உள்ளவாறு காணமுடிகின்றதா என்றால், எங்கும் எவ்வளவு காலம் காண முயன்றும், ஏதோ எப்படியோ ஒரொரு தோற்றமாய் உளப்பண்பாட்டிற்குத்தக, உருவாய் ஒளியாய், உணர்வாய் வெளியாகி மறைந்துள்ளனவேயன்றி, கடவுள் உண்மை இதுதான் என்று விளங்கிடவில்லையாம். அப்படித் தோன்றிச் சிலரை பரவசப்படுத்தி மறைந்து போன எதுவும் கடவுளின் உண்மையான இயல் வடிவம் என்று கூறவே முடியாது.

எந்த இடத்தில் கருணை அல்லது மெய்யருள் உள்ளதோ அங்கே, எப்போதும் நம் பதியிருக்கின்றதும் உண்மையே. ஆண்டவரே இல்லாத சிற்றணு அளவு இடம்கூட இல்லையே இந்த அகண்ட பெருவெளியில்! ஆகையால், எங்கெங்கும் இயற்கையில் அருள்ஒளியாய்ச் சிவ ஜோதியாய்க் கடவுள் இருந்து கொண்டே தான் இருக்கின்றார் என்பது மெய்யே. அப்படி எங்கும் அருட்பதி இருந்தும்கூட அருளாலே அறியப்படாத வரை எங்கும் உள்ளபடி காணமுடிகின்றதில்லையாம். எனவே, எங்கே கருணை வெளிப்பட்டு விளங்குகின்றதோ அங்கேதான் அந்தக் கருணைப் பரம்பொருளும் வெளியாகி விளங்குவது உண்மையாகும். எப்படி எங்கே அக் கருணை அல்லது தயவு வெளிப்பட்டு விளங்கக்கூடியதாயிருக்கின்றது என்றால், மனிதப் பிறப்பில் சிரநடு சிற்றம்பலத்தில், சுத்த தயவுமயமாய் விளங்கும் ஆன்மாவில், உண்மைக்கடவுள் அருட்பெருஞ்ஜோதியாய் எழுந்தருளி விளங்குகின்றதாம். அந்நிலையில் விளங்கும்தானே எங்கெங்கும் இருந்து விளங்குவதாகவும் அறியப்படும். இது உண்மைக் கடவுட்காட்சி. தயவுமயமாவோர் என்றும் எங்கும் காணும் உண்மைக் கடவுட்காட்சி இதுவாகும்.

(12)

963. யாரே எனினும் இரங்குகின் றார்க்குச்
964. சீரே யளிக்குஞ் சிதம்பர சிவமே

(உ-வி) சிதம்பரசிவம், ஆன்மசிதாகாசத்திலே ஒளிசெய்து நிற்கின்ற அருட்பெருஞ்ஜோதிபதி எல்லோருடைய ஆன்ம ஆலயத்திலும் விளங்கிக்கொண்டுதான் இருக்கின்றார். இருந்தாலும், அவருடைய அருள்நியதிமுறை, அகப்பக்குவம் உண்டாகாதவரை, புறத்தே பலவாகிய தோற்றமும் மாற்றமும், அவத்தைகளும் அழிவும் ஏற்பட்டுக்கொண்டேதான் இருக்கின்றன வாய்க் காணப்படுகின்றன. இம்முறை ஆன்மபரிபாகம் உண்டாகவே அருளால் விதிக்கப்பட்டுள்ளது. எந்த ஆன்மா புலனெறி கடந்து அருணிலையுற்று தயவால் அதுவாகி நிற்கின்றதோ அதற்கு நம் பதி அருட்பெருஞ் சீர் செய்கின்றது.

ஒருவன் இரங்குதல் அல்லது தயவு செய்தல்தான் உளப் பண்பாட்டின் அறிகுறி. முதலில் ஒருவனுடைய அன்பு அல்லது

இரக்கம், தனது நெருங்கிய உறவினர் இடத்து ஏற்படுகின்றது. பின்பு சூழ்ந்த நண்பர்களிடத்தும், ஊரினரிடத்தும், தேசத்தின ரிடத்தும், உலகத்தினரிடத்தும், உலகுயிர் அனைத்திடத்தும், முடிவில் எவ்வுலகத்தின் எவ்வுயிரிடத்தும், இரக்கம் விரிந்து விரிந்து நிரம்புவதாம். இப்படித்தான் ஒருவனில் தோன்றுகின்ற ஜீவதயவு முடிவில் கடவுள் தயவாக நிறைவுறுதல் அனுபவம். இந்த அடிப்படையில்தான் சுத்த சன்மார்க்க விளைநிலமாம் வடலூரில் தர்மச்சாலையில் ஜீவகாருண்யப் பயிர் வளர்ந்து வரு கின்றது. அங்கு அப்பயிர் நாற்றாகத்தான் இருப்பது, அதனை நம் உடலூரில் ஆன்மவெளியாகிய தர்மச்சாலையில், நடவாக்கி வளர்க்கப்பட்டு முழுப்பயன் பெறவேண்டியுள்ளதாம்.

யாரே எனினும் இரங்குதல் வேண்டும் என்பது திருவருள் ஆணை. அப்படித்தான் கடவுள்தயவு இயற்கையில் எவர்பாலு மிருக்கின்றது, அவரே அத் தயவாய் இருக்கின்றார்; ஆனால் ஏக தேசமாய் வெளிப்பட்டும் படாமல் இருக்கின்றார்... ஆகையால் நாம் இரங்கித் தயவுசெய்வதால் எவரிலும் இருந்து ஏற்று நமக்கே தயா அனுபவம் தருவது கடவுட்செயலாக உள்ளதாம்.

(13)

965. பொய்ந்நெறி யனைத்தினும் புகுத்தா தெனையருட்
966. செந்நெறி செலுத்திய சிற்சபைச் சிவமே

(உ-வி) நமது சிற்சபை எனும் ஆன்மாலயத்தில் திகழ்கின்ற அருட்பெருஞ்ஜோதியே, முன்பு செம்பொருளாம் சிவமாக விளங் கினதாகும். இந்த உள்ளொளியைத்தான் நம் வள்ளலார் முதலில், தணிகை முருகன்வடிவில் கண்டார்; அதற்கும் முதலி லேயே அறியாக்குழவிப் பருவத்திலேயே, தில்லையம்பலத்தே கற்பூரஜோதியிற் கண்டு களிகொண்டது உண்மையாம். பின்னர் சமயாதீதத்துற்று, அவ்வுள்ளொளியை அருட்பெருஞ்ஜோதி யாகக் கண்டுகொண்டார். யாரும் அதற்குமுன் அறிந்து அடையாத அனுபவப்பொருளைக் கண்டு அடையலானார். இதனால் தான் தன்னை ஆட்கொண்ட சிற்சபேசனைச் செந்நெறியிற் செலுத் திய செம்பொருட்ஜோதியாக வாழ்த்தித் துதிக்கின்றார்.

ஆதியிலேயே மெய்ப்பதியால் ஆட்கொள்ளப்பட்டு, அப் பதியே அருட்பெருங் குருவாய்த் தனக்கு உடனாய் இருந்து

கொண்டு, தன்னைப் பொய்யான மார்க்கம் எதிலும் செல்லாதபடி தடுத்து அருள்பாலித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. முதலில் சைவத்திலே பற்று கொண்டிருந்தது உண்மைதான். அப்பற்று மதப்பற்றாக இருக்கவில்லை, கற்பனாதீத உண்மை யினின்று கருணைஜோதியையே அந்தச்சிவ வடிவாகக் கருதியும், அதனையே அவ்வுள்ளொளியின் சாயையாகக் கண்டும்தான், தத்துவக் கற்பனா சொற்பொருள் நயமெலாம் விளங்கப் பல ஆயிரம் பாடல்களைப் பாடினார். குமாரசிவம் ஆகிய முருகன் பேரிலும், பிற தெய்வத்தின் மீதும்கூட ஒருசில பாடல்களைப் பாடியுள்ளார். இவ்வளவுக்கும் உதவிநின்ற அவ் அக ஒளி இவர்க்கு உண்மையை உள்ளபடி காட்டிக்கொடுத்துத் தய வில்லா மூட நெறியிற் செல்லாவண்ணம் தடுத்து, தயவுடைய மெய்ந்நெறியிற் செலுத்தி வாழ்வித்து வந்ததாம்.

அருட்பெருஞ்ஜோதியையே எல்லாமாகக் கண்டு போற்றத் தொடங்கிய பின், முன் கொண்டிருந்த சைவச்சார்புடைய பற்றுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். ஆகையால் அனுபவ முதிர்ச்சியில் தோன்றிய பாடல்களில் மூடநெறிகளைக் கண்டித்தும், அவைகளைப் பற்றவேண்டாமென்று எச்சரித்தும் உள்ளார். ''பொறித்த மதம் சமயமெலாம் பொய் பொய்யே அவற்றிற் புகுதாதீர்'' என்றும், ''கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடிப்பழக்கமெல்லாம் மண்மூடிப் போக'', என்றும் வலிந்து கூறி மறுத்துள்ளார். இதனால் உண்மையை யோர்ந்து ஆறாந்திருமுறையிற்கண்ட அருட்பெருஞ் ஜோதியை உளம்கொண்டு, வேண்டுமானால் முன் ஐந்து திரு முறைப்பாடல்களை ஆய்ந்து தெளிதல் பொருந்தும். மற்றபடி மூட மாக மற்றத் துதிப்பாடல்களைப் போல அருட்பாவையும் இராக, தாள, இசையோடு பாடிக்கொண்டிருத்தல் திருவருட் சம்மத மன்றாம்.

அருட்பெருஞ்ஜோதியைச் சார்ந்துள்ளிருந்து தயவோடு வாழும் நெறியாகிய சுத்த சன்மார்க்கத்தை மேற்கொள்ள வேண்டும் ஒவ்வொருவரும். இது அருட்பெருஞ்ஜோதியின் ஆணை.

(14)

967. கொல்லா நெறியே குருவருள் நெறியெனப்
968. பல்கா லெனக்குப் பகர்ந்தமெய்ச் சிவமே

(உ-வி) தயா மார்க்கம், எவ்வுயிர்க்கும் இரங்கச்செய்து வாழ்விக்க முயல்வது. இதுவே கடவுள் மேற்கொண்டுள்ள விதி முறை. மனிதனின் தயவுக்கும், கடவுளின் தயவுக்கும் ஒரு பெரும் வித்தியாசம் இருக்கின்றது. கடவுள் பெருந்தயவு எவ் வுலகத் தெவ்வுயிர்களையும் சதா, ஜீவ, தேகபோகப் பொருள்களை எல்லாம் வேண்டிய வேண்டியாங்கு வழங்கி வழங்கி, கீழ்ப்பிறவி நிலைகளை எல்லாம் ஒவ்வொன்றாய்க் கடத்தி வந்து மனிதனில், தயாஞானத்தை வெளிப்படுத்தி, அத்தயவு கொண்டு மேனிலைக் கேற்றி, தயவுமயமான, மரணமில்லாப் பெருவாழ்வில், தயானந்த சித்திச்செயலோடு நிலவச் செய்வதாம். ஆகவே மனிதன் முதலில் ஜீவதயவைப் பெருக்கிக் கொள்ள வேண்டுவது அவசியம். தயவு வளர்ந்து வர, மனிதனும் தயாநெறியில், சுத்த சத்துவ உண்டி ஏற்று, அகத் தயா விசாரத்திலும், புறத் தயா செயலிலும் இருந்துவர வேண்டுவது அவசியம்.

கடவுள் தயவுச்செயலால் உயிரினங்கள் தோன்றி வாழ்ந்து வருகின்றது மட்டுமல்ல, அழிந்து அழிந்து, அறிவனுபவம் கூடுதற் பொருட்டு மேற்பிறவிக்குச் செலுத்தப்பட்டு வருகின்றனவாம். மனிதப்பிறவியில் அக்கடவுள் தயாநியதி அறியப்பட்டுள்ளது. மேலே இத்தயவு கொண்டு வாழ்ந்து கடவுள்மயமாக வேண்டுவது தான் மனிதனின் லட்சியமாக ஆணை செய்யப்பட்டுள்ளது. மனிதன் தயவுமயம் ஆகவேண்டும்; அதற்கு, உயிர்களினிடத்து இரங்கி அன்பு செய்தல் வழியாம். எவ்வுயிரையும் இரக்க மின்றித் துன்பு செய்தல் கூடாது.

கொலை என்பது, இரக்கமின்றித் துன்புசெய்து அழித்தல் ஆகும். தயாவொழுக்கம் பூணும் மனிதன், எவ்வுயிரினிடத்தும் இரக்கத்தோடு இருக்க வேண்டியது அவசியம்தான். ஆனால், எவ்வுயிர்க்கும் அவத்தையும் அழிவும் செய்யாது மனிதன் இவ் வுலகில் வாழ்ந்துவிட முடியாது. இவ்வாறு வாழும் மனிதன், இரக்கம் நிரம்பியவனாய், தயவு உடையவனாய், செயல் புரிகின்ற வனாய் உள்ளான். அப்போது இம்மனிதனின் செயல் முற்றும், இவனது உள்நின்று தயாபரனாகிய கடவுளால் புரியப்படுகின்ற

செயலாகவே இருக்கின்றதால், அது மனிதன் செய்த கொலைச் செயலாகாது. கடவுளின் தயவுச்செயலே ஆகும். அச்செயலால் அழிவுற்ற உயிர்கள் கடவுள் நியதிப்படி மேற்பிறவியுறுதல் நிச்சயம். அதேசமயம் மனிதன் வாழ்கின்றதோடு, 'தன்னின மக்களையும் வாழ்வித்துப் பக்குவப்படுத்தி மேனிலைக்கு ஏற்றவும் முடிகின்றதாம். ஓர் உதாரணம்: தயவுடைய ஓர் உழவன் நிலத்தை உழுது பண்படுத்திப் பயிர் செய்து உணவுப்பொருளை விளைவிக்கின்றான். இதில் எத்தனையோ சிற்றுயிர்கள் சிதைவுறலாம். மேலும் பயிரில் உண்டாம் பூச்சி முதலியவைகளை அழிக்கவேண்டியுள்ளது; அப்பூச்சிகளை அழிக்காவிடில் பயிர்களே அழிந்துபோம். அப்பயிர் அழிவால் தனக்கும் பிறர்க்கும் உணவு கிடைக்காமல் அவத்தையும் அழிவும் நேரலாம். ஆகவே தயவோடு வாழ்கின்றவன், தயவுடன் பாதுகாப்புக்காகச் சிற்றுயிர்களை அழிக்கின் அது கொலைக் குற்றமாகாது. அதற்கு மாறாக, தயவின்றியும் புலனிச்சைகாரணமாகவும் பிறவுயிர்களை மிக வருத்தியும், அவத்தைப்படுத்தியும், அழித்தும், அதுகொண்டு நுகர்ந்து இன்புறுகின்றவன், கொலைப்பாவத்திற்கு உரியவனாகின்றான். அவனுக்குத் திருவருளும் வாழ்வும் கிடைக்க மாட்டாது.

ஆகவே கொல்லா நெறியாகிய தயவு மார்க்கத்தை அருள் நெறியாக குருநெறியாகக் குருவருள்நெறியாகக் கொண்டு வாழ்வது எல்லோருக்கும் நலம் பயப்பதாம். இக்கொல்லா நெறியே, மிகச்சிறந்த குருஅருள் நெறி என்பதைப் பல விடங்களில், பலமுறை எடுத்துக்கூறப்பட்டுள்ளது திருவருட்பாவில். கொலை புலை தவிர்க்காதவர்கள், எப்படி வாழ்ந்தாலும், எவ்வளவு சிறந்து விளங்கினாலும்கூட, ஆண்டவர் திருவருளைப் பெற்று மெய்யின்ப வாழ்வை அடையமாட்டார்கள் என்பது உண்மை. இதனால்தான் ஜீவகாருண்யநெறி பற்றி வலியுறுத்திக்கூறி, ஏற்கச் செய்யாத எவரும், எந்த சாத்திரமும், கொள்கை கோட்பாடுகளும் பயனில்லை. சைவம் என்றும் மற்ற அன்பு மார்க்கங்கள் என்றும் கூறப்படுகின்ற உலகியற் சமய மத நெறிகளில் உண்மையில் சர்வ ஜீவ தயாபரதத்துவம் அகநின்று வழங்கப்படவில்லை. அதனால், அந்நெறியாளர்க்குள் தயாவுரிமை விளங்காதபோது அவர்களால் பிறர் எந்த அளவுக்கு தயாநலம் எதிர்பார்க்க முடியும்? ஆகையால், அப்பழநெறிகளைப் பற்றாது விடுத்து சுத்த சன்மார்க்கத்தைச் சார்ந்து, கொல்லா நெறியே குருவருள்

நெறி என எல்லாரும் கொண்டு பெருநலம் பெறுதல்வேண்டும் என்பது திருவருள் ஆணை

(15)

969. உயிரெலாம் பொதுவின் உளம்பட நோக்குக
970. செயிரெலாம் விடுகெனச் செப்பிய சிவமே

(உ-வி) தயவின்மையால்தான் எல்லாக் குற்றங்களும் உலகில் நிகழ்கின்றன. குற்றங்களில் பெரிது கொலைக் குற்றமே. தயவில்லாத உள்ளத்தில் விருப்பு வெறுப்புக் காரணமாக, அவாவும் சினமும் முளைத்துப் படரும்போது வெறியும் வெகுளியுமாய் வெளிப்பட்டு பிறவுயிர்க் கொலையும் தற்கொலையும் கூட ஏற்படுகின்றன. ஆகவே, கோபத்தை உண்டாகும் இடத்தே அடக்கி மாற்றிடத் தயவுதான் உதவும். கோபத்தைக் கோபித்திடச் சொல்லுகின்றனர் சிலர். அதன் கருத்து, கோபித்தலை தயா ஞானத்தால் தடுத்து, இரக்கம் கொள்ளுவதால் அமைதி பெற முடியும். மேற்கொண்டு தயவு செய்வதால் வாழ்வு சிறக்கும். இங்கு செயிர் என்ற சொல், குற்றம், கோபம் என்ற பொருளில் தான் விளங்குகின்றது. உள்ளத்தில் தயவு நிரம்பினால் இக் கோபத்திற்குச் சற்றும் இடமில்லாது போம். அத்தயா நாட்டத் தோடு, சூழ்ந்துள்ள மக்களையும், பிறவுயிர்களையும் நோக்கும் போது, எவரும், எதுவும், கடவுளர் தயவின் ஏகதேசங்களாகவே விளங்கும். இதுதான் உயிர்களைப் பொது நோக்கொடு பார்த் தலாம்.

பொது என்ற சொல் உண்மைக்கடவுள் விளங்கும் ஆலயத் தைக் குறிப்பதாயிருக்கின்றது. அந்த ஆலயம்தான் நமது ஆன்மா வாயும் உள்ளதாம். எங்கும் நிறைந்த கடவுட்சிற்றுருவே நம் ஆன்ம அணுவாம். இந்த அணுநிலைதான் நமக்கும் கடவுளுக்கும் பொது இடமாக இருக்கின்றதாம். மேலும், நம் ஆன்மக்கடவுள் ஒருவரேயாக இருந்தாலும், பிற எவருள்ளும் இருப்பதாகக் காணா விட்டாலும், உணர முடிகின்றதாம். இதனால் நமது ஆண்டவர் தாமே ஒவ்வொரு ஆன்மப் பொதுவிலும் இருந்து விளங்குகின்றார் என்பது உண்மையாம். எனவே இவ் ஆன்மானுபவம் பெறுகின்றவன்தான், இவ்வுண்மையை உளம்கொண்டு எல்லா உயிர் களும் கடவுளின் உறையுளாக அறிந்து தயவுசெய்யத் தலைப்படு வான் என்பது குறிப்பு.

(16)

971. பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல

972. உயிர்த்திர ளொன்றென வுரைத்தமெய்ச் சிவமே

(உ-வி) உயிரின வகைகள் பலப்பலவாகப் புறத்தோற்றத்தில் விளங்கிக்கொண்டிருக்க காண்கின்றோம். இந்தக் காட்சி இந்திரியக்காட்சி எனப்படுவது. கண்ணாகிய இந்திரியத்தால் காணப்படுவது என்றாலும், இதற்குத் துணையாய் இருப்பது கரணமாகிய மனமும், அம்மனத்திற்கு முழுமுதல் துணையாக வுள்ள கடவுளான்மாவுமாம்.

மக்களினத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, இதில் எவ்வளவு மாற்றலான தோற்றங்கள் விளங்குகின்றன! மேலும், பிற உயிரினங்களில், புறத்தோற்ற அளவில் அதிக வித்தியாசமில்லாமல் ஆயிரம் ஆயிரம் உயிர்களைப் பார்க்கமுடிகின்றன. அவையாவும் ஏகதேசம் ஒரே மாதிரியாகத்தான் உள்ளன. ஆனால் மக்களில் மட்டும் ஒரே தோற்றங் கொண்டவர்களை ஒரு சிலரைக் காண்பதே அரிதாயிருக்கின்றது. இது ஏன்? பிற எவ்வுயிர்க்கும் இல்லாத மனம் காரணமாகத்தான் இவ்வித மாற்ற தோற்றங்கள் மக்களிடை யுள்ளனவாம். இதனை விளக்குவதே முதலடியின் கருத்து. பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல எனப்பட்டுள்ளது. கரணம்—மனமாக அமைந்துள்ள, புத்தி, சித்தம், அகங்காரம் சேர்ந்த அறிவு உணர்வாக இருப்பதாம். பயிர்ப்புறு கரணம் என்பதே மனம் கொள்ளும் என்ற பொருள் தருவது. ஆகவேதான், பயிர்ப்புறு கரணம் என்பது, புத்தி, சித்தம், அகங்காரம் கொண்டுள்ள மனமாம். இம்மனம் ஒவ்வொருவரின் அகத்தும், பல பல எண்ணங்களும், சிந்தனைகளும் கருத்துக்களும், இயல்புகளும் கொண்டு விளங்குகின்றதாம். இதுபோல் மற்ற உயிரினங்களுக்கு மனமுதலியன இன்மையால், பலவாகிய கற்பனைகளும் எண்ணங்களும் இல்லாததால் அவ்வக நிலை தோற்றங் காட்டும் முகங்களின் தோற்றமும் ஒருபடித்தாய் இருக்கின்றனவாம். மனிதமனம் ஒவ்வொருவரிலும் வேறுபாடுடையதாக இருத்தலின், முகத்தோற்றம் வேறுபாடுடையனவாகவே காணப்படுகின்றன. இதுதான் மக்களின் வேறுபாட்டுத் தோற்றங்களுக்குக் காரணம்.

ஆகவே மனோகரணக் காட்சியைக் கடந்து, ஜீவ ஆன்மநிலையுற்றிருந்து மனிதர்களை ஒரு படித்தாய ஆன்மாக்களாகக் காண

வேண்டும். மக்கள் உயிர்த்திரள் ஒன்றெனக் காணும்படி உணர்த்துகின்றார் நம் அருள் ஒளிப் பதியாம் சிவம். இப்படி ஆன்மக்காட்சியால் ஓரின உரிமை விளங்கினால்தான், தயவுடன் எல்லோருக்கும் அன்பு செய்யவும் இன்பளிக்கவும் முடியும்.

(17)

973. உயிருள்யா மெம்மு ளுயிரிவை யுணர்ந்தே

974. உயிர்நலம் பரவுகென் றுரைத்தமெய்ச் சிவமே

(உ-வி) சிவஞான பக்குவம் அடைந்தவன், தன்னுள்ளே இருக்கும் கடவுள் ஆன்மாவைக் கண்டுகொண்டிருக்கின்றான். அக்கடவுள் இவனில் மட்டுமல்லாது அகம் புறம் எங்கணும் பூரண நிறைவாய் உள்ளார் என்பதையும் அறிந்து கொண்டுள் ளான். இவன் முதலில் அறிகின்றது, தன் அகத்திருக்கும் சிவபதியையே. இதுவே இங்கு உயிருள் யாம் எனப்பட் டுள்ளது. அடுத்து அறியப்படுகின்றது அகண்ட நிறைவாகியுள்ள பெருஞ்சிவஜோதி நடுவினிலே விளங்கும் ஓர் உயிராய்த் தன்னைக் காண்கின்றார். உயிர் என்றது காரண ஆன்மவடி வாய்க் கொள்ளப்படும். இதுவாய்த்தான். தான், என்றும் பெருஞ்ஜோதி நடுவே விளங்கிக் கொண்டிருக்கக் காண்கின்றான் ஒருவன். இந்த ஆன்ம மணியாய் சதா விளங்கிக்கொண்டிருந் தாலும்கூட, பருவுடற்சூழலில்தான் அதன் இருப்பு விளங்குவ தாயும் உருவில்லாவிடத்து, அவ்வான்மா விளங்காததாயும் உள்ளதாம். எதுபோல் எனில், விண்ணிலே மிளிருகின்ற விண் மணியாகிய நட்சத்திரம் எப்போதும் அங்கு நீக்க மற நின்று ஒளிவீசிக்கொண்டிருப்பினும் இருட்சூழலில் தானே காணப்படுகின்றது. ஒளியில், இருள் இல்லாததால் அந்த உடு ஒளிர்கின்றதை அறியவும் காணவும் முடிகின்றதில்லை போலாம்.

உண்மையில், அகண்டஜோதி நிலையும், அதிலொரு தனி அணுநிலையும், கடவுள் கொண்டுள்ள பெருவடிவும் சிறுவடி வுமேயாம். சிறிய வடிவில்தான் அப்பதியுண்மையை அறிந்து அனுபவிக்கக் கூடியதாயுள்ளதாம். இந்தச் சிற்றணுவடிவம் தான் நம்முடைய ஆன்மா என்று நாம் சொல்லிக்கொள்கின்றோம். இரண்டும் கடவுளுடையனவேயாம்.

"பாரொடு விண்ணும் படைத்தபண் பாளர்
பற்றம் பலத்தார்சொல் சிற்றம் பலத்தார்
வாரிடு கொங்கையர் மங்கைய ரோடே
மன்றகம் பாடிநான் மகிழ்கின்றபோது
ஏருடம் பொன்றென எண்ணேல்நீ பெண்ணே
எம்முடம் புன்னை யிணைந்திங் கெனக்கே
ஈருடம் பென்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா."

என்றதிலிருந்து நமதாகத் தோற்றிக் கொண்டுள்ள ஜீவான்ம சிற்றணு வடிவும் அகண்ட நிறைவடிவாகிய பரமான்மப் பதியுருவும் உண்மையில் அவருடையதே. அவர் அகவடிவி லிருந்து கொண்டு அன்பருளின்பம் வெளிப்பட வேண்டி, ஆன்மாக் களுக்குத் தேவையான ஜீவனையும், தேகங்களையும், போகப் பொருட்களையும் நியதிப்படி வழங்கி வாழ்த்தி இன்பநிலைக்கு ஏற்றிக் கொண்டேயுள்ளார் என்று அறிகின்றோம். நாமாய் இருக்கின்றதும் அவராய் உள்ளதும் ஆன்மசிற்றணுவாய் உணர்ந்து கொள்கின்றபோது சூழுயிர்கட்குத் தயவுசெய்து உயிர் விளக்கம் செய்வது நமது கடமையும், கடவுளாணையுமாகத் தெளிவோம். இதனையே, "உயிருள் யாம், எம்முள் உயிர் இவை உணர்ந்தே, உயிர் நலம் பரவுக" என்று மெய்ப்பதியாகிய சிவம் உரைக்கின்றதாகக் குறித்துள்ளார் நம் வள்ளற் பெருமான்.

(18)

975. இயலரு ளொளியோ ரேகதே சத்தினாம்
976. உயிரொளி காண்கவென் றுரைத்தமெய்ச் சிவமே

(உ-வி) இயல் அருள் ஒளியாவது, இயற்கையாக நித்திய மாக அகண்டவெளி முழுவதும் நிரம்பியுள்ள அருட்பெருஞ்ஜோதி யாம். இவ்வொளியையே இறை என்கின்றனர். அழியாது என்றும் ஒருபடித்தாய் இருக்கிறது என்ற பொருள் கொண்ட இறு என்னும் பகுதி அடியாய்ப் பிறந்தது இந்த இறை என்னும் சொல். அனாதியாயுள்ள இந்த இறையொளியினின்றே யாவும் தோன்றிச் செயல்பட்டுக் கொண்டேயுள்ளனவாம். இந்தப் பேரொளி அகண்டமாய் இருப்பது உண்மை. எந்தக் காலத்

தும், எந்த விதத்தும், எவ்வளவும் இந்த அகண்ட பரம்பொருளைக் கண்டம் துண்டமாகப் பிரித்திடவே முடியாது.

ஆனால் நாம் இப்பொழுது காண்கின்றது என்ன? அண்ட வெளியிலே பலவாகிய விண்மணிகளையும், ஞாயிறையும், திங்களையும், கோள் அண்டங்களையும், இந்நிலவுலகையும் இதன்கண் எண்ணற்ற பொருள்களையும், பிண்ட உயிர்களையும், ஆற்றல்களையும் அல்லவா கண்டுகொண்டிருக்கிறோம். இப்படிப் பலவாய்த் தோற்றுகின்றதை, அகண்டத்தின் பலவாகிய பிரிவுகளாகக் கருதுகின்றோம். உண்மை அப்படி அல்ல. நமது அகண்டமான அருட்பெருஞ்ஜோதி, என்றென்றும் அகண்டமாகவே இருந்துகொண்டிருக்கின்றது. இதனை நாம் நிறையருளால் காண்பதன்றி வேறொன்றால் சிறிதும் காணமுடியாதாம். இப்போது காணப்படுகின்றதெல்லாம் அகண்டத்தின் சிறுசிறு கூறுகளே அல்லாது வேறல்லவாம். அப்படியானால் அந்த அகண்ட ஜோதியை நாம் காணமுடியுமா அல்லது முடியாதா? நிறையருளால் முடியும். வேறொன்றால் முடியாது என்றுதான் மேலே கூறியுள்ளதை மறுபடியும் சிந்திக்கவும். சரி, நிறையருளால் காணமுடியும் என்றால் அந்த அருள் எங்கே? அதனைக்கொண்டு எப்படிக் காண்பது? இவற்றிற்குரிய விடை விளக்கமே இங்கு ஈரடிகளில் வழங்கப்பட்டுள்ளதாம்.

''இயல் அருள் ஒளியாகிய ''அருட்பெருஞ்ஜோதியே,'' இங்கு ஓர் ஏகதேசத்தினாம் உயிர் ஒளி காண்க'', என்று உரைக்கப்பட்டுள்ளது. உயிர் ஒளி என்றது ஆன்மஜோதி அணுவாம். இது, அருட்பெருஞ்ஜோதியின் சிறு வடிவம். அருட்பெருஞ்ஜோதியின் சிறு வடிவம் என்றால், அதினின்று ஒரு சிறிய பகுதிப் பிரிவு என்று பொருளல்ல. எங்கும் பரிபூரணமாய், நிறைவாயுள்ள அருட்பெருஞ்ஜோதி, இந்த ஆன்ம சிற்றணுவில் அப்படியே, முழுமையாகவே அருளால் விளங்கி, அனுபவப்பட உள்ளதாம். ஏகதேசத்தின் ஆம் உயிரொளி என்பதற்கு முன் உள்ள ''ஓர்'' என்ற அடைமொழி, உயர்வும் சிறப்பும் குறிப்பதாம். ஏகம் என்றால் ஒன்று, தேசம் என்றால் ஒளி, ஒப்பற்ற சிறப்புடைய அந்த ஒன்றாகிய ஜோதியே, இந்த உயிர் ஒளியாம் ஆன்மாவாம். சுருங்கச் சொன்னால், அந்த அகண்ட அருட்பெருஞ்ஜோதியே இந்த ஆன்ம சிற்றணுவாம்.

இந்த உண்மையைத்தான் நம் வள்ளலுக்கு அன்று அருட் பெருஞ்ஜோதியாகிய மெய்ச்சிவம் உரைத்ததாம். இதுகொண்டு ஆன்மநிலைநின்று காணும்போது தான், அதுவே விரிந்து விரிந்து அருட்பெருஞ்ஜோதியாய் நிறைந்திலங்கக் காண்போம். இக் காட்சியே அகண்டநிறைநிலையின் எந்த இடத்திலும், எந்தக் காலத்திலும், அருள் ஒளி ஆன்மஅணுவாய் விளங்கினால் அங்கி ருந்து இந்த அருட்பெருஞ்ஜோதிக் காட்சியைக் கண்டு கொள்ள லாம். இதில் ஐயமில்லை. சிவத்தை அருட்ஜோதியாகக் கண்டு அதன் ரகசியத்தை எல்லாம் உணர்ந்து உய்க உலகெல்லாம்.

205. திருவருள் வல்லபம்

977. அருளலா தணுவும் அசைந்திடா ததனால்
978. அருணலம் பரவுகென் றறைந்தமெய்ச் சிவமே

(உ-வி) இயற்கையுண்மையாய் விளங்கும் அருட்பெருஞ் ஜோதியே சிவமாகத் திகழ்ந்தது என, முன் தலைப்பில் ''சிவ ரகசியம்'' என்ற பொருளில் விரித்துக் கூறப்பட்டது. இங்கு இயற்கை விளக்கம் செய்கின்ற நம் அருட்ஜோதிபதியின் தனிப் பெருந்தன்மை, ''திருவருள் வல்லபம்'' என்ற தலைப்பில் விளக்கப்படுகின்றது. எல்லாம் வல்ல இறையருட் சக்தியே திருவருளாம். அதன் வல்லபம் அல்லது பேராற்றலும் பெருஞ் செயலும் எப்படி எப்படி எல்லாம் வெளிப்பட்டு இப்பிரபஞ்சத்தில் விளங்குகின்றன என்பதை ஒருவாறு விரிவாகக் காணலாம் இப் பகுதியில்.

மனோகரணங்களுக்கு அப்பாலாய், எல்லாம் வல்லதாய்த் திகழ்கின்ற கடவுட் பேரருள் சக்தி, சிற்றணுவின் அகத்தில் என்றும் பொருந்தி, அவ்வணுவை நிலைபெறுத்தி விளங்கச்செய் கின்றது. இந்த அருட்பெருங் கடவுட்சக்தி யொன்றில்லையானால் அணுவே உருப்பட்டு விளங்காது. அணுக்களே யில்லையாயின், உருவப் பிரபஞ்சமே இல்லையாகும். அணுவில் சிற்றசைவாய், மின்னியற்சக்தியாய் இருந்து யாவையும் உருவாக்கி, இயக்கி உலகெல்லாமாய் விளங்கச்செய்கின்றது, கடவுளருளின் இயற் செயலின் கூறேயாம். அணுவக ஆற்றல் சதா வெளிப்பட்டுக் கொண்டே யிருத்தலின் அணுமுதல் அண்டபிண்ட உயிர்ப் பொருள்கள் யாவும் செயல்பட்டுக்கொண்டே யுள்ளனவாம்.

இதனால் அடிநிலை அணுவை ஆட்டம் (Atom) எனக் குறிக்கப் படுவதும் பொருத்தமே. மேலும், அணு என்பதை ஆய்ந்து பார்க்கும்போது, அ+ண்+உ என விரிந்து விளங்கக் காண்போம். ஆனால் ஓம் என்பதை விரித்துப் பார்த்தால், அ+உ+ம் எனக் காண்போம். இவ்விரண்டிலும் அகரவுகரம் பொதுவாய் இருக்க, ணகரமெய்யும், மகரமெய்யும் வேறாயுள்ளதையும் அறிகின்றோம். மகரமெய் ஓங்காரத்தின் உள்ளொளியைக் குறிக்கின்றது; ணகர மெய்யோ ஆறாவது வரிசையில் வந்து, ஆறெழுத்து அருட்பெருஞ் ஜோதியையே உணர்த்துவதாய் இருக்கின்றதாம். ஆகவே அணுவக ஆற்றல் அருட்பெருஞ்ஜோதி சக்தியே என்பது தெளிவு.

எல்லா அணுக்களினுள்ளும் இருந்து ஆட்டிவைக்கின்றது அருட்பெருங்கடவுட் சக்தியே என்பது உண்மை. ஆதலின், நம் ஆன்ம அணுவில் கண்டுகொள்ளப்பட்ட அருட்பெருஞ்ஜோதி, நம் உள்ளிருந்து செயல்படச் செய்கின்றதும் புறஞ்சூழ்ந்து உதவு கின்றதாயும் அறிவோம். நம் பதி அகப்புறஞ் சூழ்ந்து சதா அருணலம் பரப்பிக் கொண்டேயுள்ளார். திருவருளால் விளக் கம்செய்து பண்படுத்தி உயிர்க்கு இன்பு செய்தலே அருள்நலம் பரப்பல் என்பதாம். அப்படிச் செய்துகொண்டுள்ளதை அருள்ஞானத்தால் உணர்ந்து அகம் ஒன்றிநின்ற வள்ளலுக்கு, அத் திருவருட்செயல் புரிந்து கொண்டிருக்க ஆணையிடுகின்றதாய் மௌனமொழியாகிய மெய்யுணர்வால் விளங்குகின்றதாம். அக் கருத்தையே யீண்டு, ''அருள்நலம் பரவுக என்று அறைந்த மெய்ச்சிவமே,'' என்றதாகக் குறிக்கப்பட்டுள்ளதாம்.

(2)

979. அருளுறி னெல்லாம் ஆகுமீ துண்மை
980. அருளுற முயல்கவென் றருளிய சிவமே

(உ-வி) எல்லாம் வல்லது அருள். ஆகையால் அந்த அருளை ஒருவன் பெற்றுக் கொண்டுவிட்டால் அவனுக்கு எல்லாம் ஆகும். ஆகாத காரியம் ஒன்றும் இல்லையாம். திருவருளைப் பெற்றுக் கொண்டவன், மற்ற எதனையும் அடையவும் விரும்பான், வேண்டாம் என்று வெறுக்கவும் மாட்டான். அவனுடைய உண்மைத் தேவையும், சேவையும் திருவுளம்போல் தடை படாது என்றும் நிறைவேற்றப்படும்.

திருவருள் ஏகதேசம் எல்லோருக்கும் வழங்கப்பெற்றுதான் இருக்கின்றது. அதனால் ஒவ்வொருவரும் உண்மைத் தேவை யான, ஜீவனையும், தேகத்தையும் போகப் பொருட்களையும் நியதிமுறைக் கொப்ப அடைந்து, வாழ்ந்து, பக்குவப்பட்டுக் கொண்டேயுள்ளனர். இந்த உண்மையைப் பக்குவ மனிதன் அறி கின்றான். அறிந்துவிட்டால் மேற்கொண்டு ஒருவன் தன் புல போக இச்சைக்காகவோ, வெறுப்புக்காகவோ எதனையும் வேண்டிக் கொண்டிருக்கமாட்டான். அப்படி வேண்டுவது அபக்குவ அறியா மையே. ஆகையால், வேண்டுதலும் வேண்டாமையுமற்று, அத் திருவருளுக்கே அடைக்கலமாக இருந்துவிட்டால், அது பார்த்துக் கொள்ளும் அவனுடைய தேவைகளை எல்லாம். அறியாமையால் உண்மைத் தேவையை, வேண்டாம் என வெறுத்து மறுப்ப தால் கிடைக்கவேண்டிய நன்மை கிட்டாது போவதும், தேவை யில்லாததை வருந்தி வேண்டிப் பெற்றும் நன்மைக்குப் பதில் தீமையே விளைந்தாலும் விளையலாம். ஆகையால், அருளை அடைந்து, அதன் பொறுப்பில் வாழ்வதே சாலச் சிறந்ததாம். ''அருள் உறின் எல்லாம் ஆகும் ஈது உண்மை'' என்று குறிக்கப் பட்டுள்ளது முதலடியில். ஆகலின், அருள் அடைய வேண்டுவதே மிக மிக முக்கியம் என்பதையே, ''அருளுற முயல்க'' என்று அருட்பதி திருவாய் மலர்ந்தருளியதாகக் குறிக்கப்படுகின்றது இரண்டாம் அடியில்.

அருளின் ஆற்றல் மிகப் பெருமையுடைத்தாம். ஆகையால் அவ்வருளைக் கொண்டு நாம் அடையவேண்டிய லட்சியப் பொருள் எது? அருளால் நாம் பெறவேண்டியது குறைவற்ற அருளின்பப் பெருவாழ்வேயாம். அறியாமையால் உலகியற் புலனின்ப வேட்கையோடு, சில பல சக்திசித்திகளை வேண்டிப் பெற்றுச் சிறு இன்பம் துய்த்துவிட்டு ஒழிவது முறையன்று, திருவருட் சம்மதமுமல்லவாம். ஆதலின், நிறையருளையே குறிக்கோளாய்க் கொண்டு அடைய முயலவேண்டும். அம் முயற்சி, ஜீவ தயவால், ஜீவ கருணையால்தான் நிறைவேறும். தயாவொழுக்கத்துட னிருந்து கொண்டு, உண்மை விசாரம் செய்வதோடு, உண்ணின்று தயவு செயல்பட வாழ்ந்து வருதல்தான் கடவுள் தயவை அடையும் வழியாம்.

(3)

981. அருணெறி யொன்றே தெருணெறி மற்றெலாம்
982. இருணெறி யெனவெனக் கியம்பிய சிவமே

(உ-வி) கடவுளின் உண்மைத் தன்மை அவரது திருவருளே யாம். அந்த அருள் விளக்கத்தினால், அவ்வருள் உணர்வினால், வாழ்வில் அருள் அனுபவத்தால்தான் அக்கடவுணிலையை அடைவது சாத்தியமாகும். ஆகையால் இந்த அருள்தான் உண்மைநெறி, மெய்வழி, சன்மார்க்கம் என்பதெல்லாம். இந் நெறியிற் பயின்று, தெளிந்து, தெருளும்போதுதான் உண்மை யின்பம் உள்ளோங்கும். மெய்யின்ப வாழ்வு பெறலாகும்.

இதுவரை உலகில் வழங்கிவந்த போற்றிக்கொள்ளப்பட்டி ருக்கின்ற சமயமத மார்க்கங்களும், பிற நெறிமுறைகளும் அருள் ஒளி இல்லா இருண்ட, ஏதங்கள் நிறைந்த கான்வழிகளேயாம். அவைகளில் பற்றும் பழக்கமும் காரணமாகச் சென்று சென்று உலகினர் அல்லலும், அழிவுமே பட்டனர், படுகின்றனர். ஆதலின் அவ்விருள் நெறிகள் உதவா, அருள்நெறி யொன்றே உய்வு பெற உதவும் என உணர்த்துகின்றது நம் அருட் சிவ ஜோதி.

உண்மை அருள் இதுவென அறியாமையால், இன்றைய உலகம் புலன் இச்சையோடு, பழ நெறிகளில் பற்று அதிகம் கொண்டு செல்கின்றது ஒரு புறம், அறிவியற் புதுநெறிகளில் புகுந்து இன்பத்தை நாடித் தேடிச் செல்கின்றது ஒரு புறம்; பழமையிற் பற்றில்லாதும், புதுமையில் நலம் காணாதும் மையல் நெறிகளிற் சென்று மாள்கின்றது ஒரு புறம். இப்படி அவத்தை களும், அழிவும் அடைந்து கொண்டுள்ள உலகியலாரைத் திருத்தி சீர்படுத்தி நல்வழிக்குக் கொண்டுவர வேண்டியே, நமது பதி ஒரு பெரு நெறியை நல்லோர் உள்ளத்தே தோற்றுவிக்கின்றார். இதனால் உள்ளத்திருள் நீங்குகின்றது, புறநெறிகள் எதனாலும் அகஇருள் நீங்காதிருந்தது. அக இருள்நீங்காதபோது, அகக் கண் மூடி இருக்கும்போது உண்மை சற்றும் விளங்கவேயில்லை. அதனால்தான் உலகியற் புற வாழ்விலும் உண்மை அறியப்படாது பொய்ந் நெறியே சூழ்ந்து அழிவையே உண்டுபண்ணிக் கொண் டிருக்கின்றதாம். மனிதனின் உண்மை அகமிருந்து விளங்குவதால், அவ்வகம் தெரிந்து தெளியப்பெறாதபோது எப்படி புற வாழ்வு சிறக்கமுடியும்? அருட்ஜோதிஅகத்தே உதயமாகின்ற தருண மிதுவாகும். அன்பர்கள் அகக்கண் மலர்ந்துநோக்குவார்களாக. உண்மை கண்டு, வாழ்வில் அருள்துணை கொண்டு எல்லா நலமும் பெறுவார்களாக.

(4)

983. அருள்பெறிற் றுரும்புமோ ரைந்தொழில் புரியும்
984. தெருளிது வெனவே செப்பிய சிவமே

(உ-வி) அருளின்வல்லபம் என்னென்பது! எல்லாம் புரியும் ஆற்றலை வழங்குவது நிறை அருளே யாகும். ஆகையால் அவ் வருளையே நம் குறிக்கோளாய்க் கொள்ளவேண்டும் நாம். அருள் உண்மையை அறியாது, அவ்வழி செல்லாது, அருந்தவ முயற்சி கள் பல காலம் செய்தாலும் ஓரளவு சித்திகளைப் பெற்றுக் களித்திருந்து கழிந்துபோக நேரும். தவஞ்செய்து பிரமாதி தேவப் பதவி யுற்றவர்கள் ஆக்கல் முதலிய தொழில் புரிதல் கூடும். ஆனால் அவர்கள் படைப்பு உலகியல் விதிக்குட்பட்டு, ஆன்மாக் களுக்கு உடலைத் தோற்றுவிப்பது, பிரமனுடைய சிருட்டித் தொழிலாகக் கூறப்படுவது. பக்குவ நிலைக்குத் தகுந்தபடிதான் இவர்களின் படைப்பும் விளங்கும். மற்றபடி எதையும் தம் இஷ்டம்போல் செய்யும் வல்லமை பெற்றவர்கள் அல்லர் அத் தேவர்கள் மூவர்கள் முதலியோர்.

மெய்யருளைப் பெற்றுக்கொண்டு உள்ளிருந்து விளங்கும் சன்மார்க்க சாத்தியர்கள், நியதிக்கு மாறாக, விதிக்கு விலக்காக சிருஷ்டிமுதல் ஐந்தொழிலும் புரிகின்றவர்களாகின்றனர். அரு ளால் செய்யப்படும் சிருஷ்டி ஐவகையாம். அவை, அணுபக்ஷம், பரமாணுபக்ஷம். சம்புபக்ஷம், விபு பக்ஷம், பிரகிருதிபக்ஷம் எனப் படும். இவ் வருளாளர்கள் தமது சிற்சக்தித் துணையால் ஓர் துரும்பினையே ஐந்தொழில் புரியும் வல்லவனாக ஆக்கிவிட முடியும் என்றால் வேறு என்னதான் செய்ய முடியாது இவர்களால்!

திருவருட்சக்தியால் அற்புதசித்திகள் பெற்று ஆனந்த சித்தர்களாய் விளங்குதல் பெருமையல்ல. அருள்நிறைவால் அருள் இறையோடு இரண்டற ஒன்றி இருந்து கொண்டு ஆருயிர்கட் கெல்லாம் அன்பு செய்து அருட்பெருஞ்சித்திகள் விளங்க அழியாப்பெரு வாழ்வில் என்றும் நிலவுவதுதான் பெருமையிற் பெருமையாகும். இதுவே கடவுள் ஆணை யாகவும் இருக்கின்றதாம். ஆகையால் இந்தத் திருவருளை உண்மையாக அறிந்து அடைதற்கு முயல்வதுதான் ஒவ்வொரு வரின் கடமையாகும்.

(5)

985. அருளறி வொன்றே யறிவுமற் றெல்லாம்
986. மருளறி வென்றே வகுத்தமெய்ச் சிவமே

(உ-வி) உண்மையை உள்ளபடி யுணராது புலன்மயக் கோடு கூடிய அசுத்த மனோகரணத்தால், ஒன்றைப் பிறிதொன் றாகக் காணச் செய்வதுவே மருளறிவு. ஒன்றான கடவுள் அவர் தம் அருளாலே யாவுமாய் விரிந்து காரியப்பட்டுள்ளார் என்பதைச் சுத்த விசாரத்தால் அறிந்து ஐயந்திரிபின்றித் தெளிந்து நிற்றல் வேண்டும். இத் தெள்ளிய ஞானநிலையே அருளறிவாம். மற்ற படி என்ன தெரிந்து கொண்டவராயினும், எவ்வளவு படித்தவர் களாயினும், அறிவியற்கலையில் சிறந்த அனுபவமுடையவர் களாயினும், சமய மத அறிவும், ஆன்ம அறிவும், பிரமஞான முடையவர்களாயினும்கூட, அருளறிவுடையோர்க்குச் சிறிதும் ஒப்பாகார். அறிவு என்றாலே கடவுள்உண்மை விளக்கமாகிய அருளறிவேயாகும். மற்றெந்த அறிவும் மருளறிவு என்றே குறிக்கப்படும்.

மருள் அறிவாவது, அருள் உண்மை விளக்கம் அல்லாத மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கரண விளக்க உணர்வே. இதனையே இன்றைய உலகம் அறிவாகப் பெரிதும் பேணிப் போற்றிக்கொண்டும், வாழ்வுக்குத் துணையாக ஏற்றுக் கொண்டும் இருக்கின்றது. இம் மருள் அறிவியலால் மக்கள் பெறுகின்றது இன்பம்போன்ற மயக்க அவத்தையே ஆதலின் முடிவில் துன்பமே விளைகின்றதாம். அவா மாசு அற்ற, அருள் அறிவு பெற்ற சுத்த மனமே மெய்பொருளைக் காட்டி, அதுவே யாவுமாய்த் திகழ்வதையும் உணர்த்துகின்றதாம். மருள் அறிவு உலகிடை மாட்டிவைத்து அல்லலில் ஆழ்த்துவது. மெய்யான பகுத்தறிவு, அருளையும் மருளையும் பகுத்தறிந்து மருளை அற விடுத்துவிட்டு அருளையே நன்கு பற்றிக்கொண்டு வாழ்தல்தான் உண்மைப் பகுத்தறிவாளன் செயலாக இருக்கவேண்டும்.

(9)

987. அருட்சுகம் ஒன்றே யரும்பெறற் பெருஞ்சுகம்
988. மருட்சுகம் பிறவென வகுத்தமெய்ச் சிவமே

(உ-வி) இன்பம் என்பது உண்மையில் இன்னது என்று அறிகின்றானில்லை புலனெறியாளன். தேகேந்திரியச் செயலில், புலனிச்சையுணர்வில், மனோகரண மருள் மயக்கில் சுகம் போல் தோற்றுகின்ற எதுவும் உண்மை யின்பம் அல்ல. அவை எல்லாம் மருட்சுகம், மயக்க இன்பம், பொய் மாயா சிற்றின்பம் ஆகவே யுள்ளனவாம். இவைகளை எல்லாம் பற்றற விட்டு நீங்கி ஆன்ம உண்மையினின்று அருட்பணி புரியப் புரிய அதில் விளைகின்ற ஆனந்தம்தான், சுத்த ஆனந்தம், மெய்யின்பம், அருட்சுகம் என்பதாம், இந்த அருட்சுகம் ஒன்றே பெறுதற்கரிய பெருஞ்சுகமாகும்.

மருள் செய்கின்ற, இன்பமல்லா இன்பத்தை லட்சியமாகக் கொள்ளாது விடுத்து, அருள் செய் பேரின்பத்தையே குறிக்கோளாய்க் கொண்டு உலகியலை அருளியல் வாழ்வாய் அமைத்துக்கொண்டு வாழ்ந்தால்தான் உலகம் பெருநலம் பெறும். இது மெய்ச் சிவபதி ஆணை.

எல்லோரும் சுகமே விழைகின்றனர், முயல்கின்றனர். ஆனால் பெறுகின்றது, உண்மைச் சுகமாய் இல்லாது ஒழிந்து போய்க்கொண்டே யிருக்கின்றதாம். ஏன் அப்படி என்றால் மக்கள் அறிந்ததும், விரும்புகின்றதும், மருட்சுகமேயன்றி அருட்சுகமல்ல. மருட்சுகம்தான், மேலாக அடையத் தக்கதாகத் தோற்றுகின்றது. அருட்சுகம் என்பது இன்னதென்றே புரியக் கூடாது மறைந்து கிடப்பதாகவும், ஐயப்பாட்டிற்கு உரியதாகவும் அது கிடைப்பதும் சாத்தியமற்றதாகவும் கருதப்படுவதால் உலகம் அருட்சுகத்தை விரும்பிக் கொள்ளாதிருக்கின்றது.

கடவுள் உண்மையே சுத்த சச்சிதானந்தமயம் என்பர் மெய்ஞ்ஞானியர். அக்கடவுள்தானே, மனிதனின் அகமாகிய ஆன்ம வடிவில் வெளிப்பட்டு, உயிர், உடல், உலகு யாவுமாய்த் திகழ்கின்றதாகத் திருவருளால் உணரப்படுகின்றது. அந்தக் கடவுள் சச்சிதானந்தம். அது ஆன்மாவினின்று அனகமாய் விரிந்து யாவுமாய் விளங்குகின்றதென்று அறியப்படுகின்றதால், அக அனக நிறை அனுபவத்தில் யாரும் கூடி ஆனந்தமயமாய் இருக்கின்றதாகக் காண்கின்றோம். இப்படி அனகவாழ்வு பெற்று விளங்கும் நிறை நிலையே, சச்சிதானந்த வாழ்வு ஆகும். இதுவே அருட்சுகம் ஆம். இதனைப் பெறுவதே பெரும் பேறு.

(7)

989. அருட்பே றதுவே யரும்பெறற் பெரும்பே
990. றிருட்பே றறுக்குமென் றியம்பிய சிவமே

(உ-வி) பேறு பெறுதற்குரியது, பெறுதல், சித்தி, அடைவு (Attainment), அறிவு.

இவ்வுலக வாழ்வில் அடையத்தக்க பேறு எது என்ற வினாவிற்கு, சகல செல்வ யோகமிக்க, பேரும் புகழும் விளங்கும் பெருவாழ்வு என்பது அனேகரின் விடையாகும். அப்படியே ஒருவனுக்குச் சகல செல்வயோகமும், பேரும், புகழும் கிடைத்து உலகில் வாழ்ந்து வருகின்றான் என வைத்துக் கொள்வோம். அந்நிலை வாழ்வு எவ்வளவு நாட்களுக்கு மங்காது மறையாது மடியாது விளங்கிக்கொண்டிருக்கும்? அவனுக்கு நிறை ஆயுளாயிருந்தாலும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் நீடிக்காதுபோம். அப்போது அந்த வாழ்வுக்கு ஒரு முடிவு உண்டாம். ஒளி நீங்கிப் பேரிருள் சூழ்ந்துகொள்ளும். உடல்வாழ்வு நீங்கியபின் இன்பானுபவத்திற்கு இடமில்லை. அவனைப் பற்றி உலகினர் புகழுடம்பில் வாழ்வதாகச் சொல்லிக்கொள்வது முற்றும் உபசாரமே, உண்மை அல்ல. வாழ்வு நித்தியமாய் விளங்க வேண்டுமானால், சுத்த சன்மார்க்கத்தால் அருள்ஒளி யுடம்பு பெற்று அழியாமையுற்று என்றும் விளங்கிக் கொண்டிருந்தால் தான் அந்த வாழ்வுக்கு முடிவில்லை. என்றும் ஆனந்தமாய்த் திகழலாம். ஆகையால் இந்த அருட்பேறுதான் பெறலரும் பெரும் பேறு; இந்த அருட்பேறுதானே, இருட்பேற்றினை முற்றும் ஒழிப்பதாம். ''அருட்பேறதுவே... இருட்பேறறுக்கும்'', என்று இயம்பியதாம், அருட்பெருஞ்ஜோதி சிவம். இருட்பேறு அறுக்கும் என்றது, உயிரனுபவம் நீங்கி, ஒளிவாழ்வு முடிந்து, மரணப் பேரிருள் சூழ்வதை முற்றும் ஒழித்துவிடும் என்று குறிக்கவே அப்படி இருட் பேறறுக்கும் அருட்பேறு என வழங்கியுள்ளார் நம் பெருமான்.

(8)

991. அருட்டனி வல்லப மதுவே யெலாம்செய்
992. பொருட்டனிச் சித்தெனப் புகன்றமெய்ச் சிவமே

(உ-வி) அருளினுடைய ஒப்பற்ற வல்லபம் அல்லது பேராற்றல் எது என்றால், எல்லாம்செய் சித்தாம். அச் சித்து தனிப் பொருட்சித்து எனப்பட்டுள்ளது. தனிப்பொருள் என்றது ஒப்பற்ற பரம்பொருளாகிய கடவுளைக் குறிப்பது. திரு வருளின் பெருவல்லபம் எல்லாம்செய் கடவுட்சித்தியை அடை விப்பதுவே என்று புகலப்பட்டுள்ளது. மற்று அருள் ஏகதேச சக்தியால் புரியப்படுகின்ற உலகியற் காரியங்களும், திருவருள் விசேடசக்தியால் புரியப்படும் அற்புத சித்திச் செயல்களும் பெரிதும் போற்றிக்கொள்ளற் கில்லையாம். ஆனால் உலகம் இவற்றையே அறிந்தும் கண்டும் உள்ளதால் போற்றிக் கொண் டுள்ளதாம்.

திருவருளின் தனி வல்லபம், கடவுள் மயமாய் மனிதனைச் சுத்த சுகானந்த வடிவொடு என்றும் வாழ்விப்பது என்பது உலகம் அறியாத ஒன்று. மன அறிவுக்கும் சமய மதஉணர் வுக்கும் அறிவியல் அனுபவத்திற்கும் விளங்காதது அருட்பேரின்ப வாழ்வு. இது சுத்த சன்மார்க்கத்தில் தோய்ந்த தயவாளர் உள்ளத்தில் தெளிவாக விளங்கி, அனுபவத்தில் வெளிப்பட்டு வாழ்விப்பதாயிருக்கின்றது, ஆதலின், பேரருளின் பெருவல்லபம் பேரின்ப நிறை வாழ்வேயாம்.

(9)

993. அருளறி யார்தமை யறியா ரெம்மையும்
994. பொரு ளறி யாரெனப் புகன்றமெய்ச் சிவமே

(உ-வி) அருள் இன்னது என்று புரிந்து கொள்ளாதவர் கள், நமது உண்மையை அறியமாட்டார்கள். உலகியலார், புலன் இன்ப துன்ப வாழ்வில் அவத்தைப்பட்டுக்கொண்டிருக்கின்ற வர்கள் தம்மை உடல் வடிவினராக மட்டும் கருதிக் கொண்டுள் ளனர். இவர்தம் வாழ்வில், பிணியாலும் வறுமையாலும், அறியாமையாலும், பயத்தாலும், மரணத்தாலும் துன்பம் பல அடைகின்றார்கள். அத் துன்பங்களினின்று விடுபடவும், இன்பம் பெற்று வாழவும் விரும்புகிறார்கள். அதற்காகப் பல வகை யிலும் முயன்று பார்த்து, முடியாதபோது, மகான்களின் துணையையோ, தெய்வங்களின் அருளையோ பெறுவதால் ஓரளவு நல்வாழ்வு அடைகின்றார்கள் பலர். பிற வழிகளால் பெற முடி

யாததைத் திருவருளாலே பெறமுடியும் என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

இப்படி ஒருவனுடைய கோரிக்கையை நிறைவேற்றி உலகில் ஓரளவு சுகத்தில் வாழ்விப்பதுதான் திருவருளின் வல்லபமோ? அல்ல. இதனைவிடக் கோடி கோடி பங்கு ஆற்றலுடையது அத்திருவருள். அதனால், அறிவரிய உண்மைகளை எல்லாம் ஓதாமலே யுணரவும், உடற்பிணியோடு உயிர்ப்பிணி ஆகிய திரிமல தோடத்தையும் நீக்கி மரணமில்லாப் பெருவாழ்வில் என்றும் விளங்கச் செய்வதும், தேவர்கட்கும் அரிய, எவ்வகைத் துன்பமும் கவலையும் குறைபாடும் சேராத நித்தியானந்த வாழ்வில் நிலவச் செய்வதுதான் திருவருளின் பெரு வல்லபமாகும். இப்படிப்பட்ட பெருவாழ்வருளும் திருவருளை அறியாதவர்கள் தம்மை அறியார்கள், இந்த அறியாமைப் பேரிருள்தான் ஆணவமலம் என்பது. ஆணவ அந்தகாரமாகிய பேரிருளில் உள்ளவன், தன்னைச் சூழ உள்ள எப்பொருளையும் அறியான், தன்னையே கூடக் கண்டு கொள்ளான். அருளாகிய ஒளி தோன்றினால் இருள் நீங்கும், யாவும் நன்கு விளங்கும். ஆணவ இருளைப் போக்கப் புற ஒளி எதற்கும் ஆற்றல் சிறிதும் இல்லையாம். அகவொளி தோன்ற வேண்டும். அகத்திலோ யாரும், எதுவும் புக முடியாது. அப்படி எனின், உள் ஒளி எப்படித் தோற்றுவிக்கப்படுவது? திருவருளால்தான் ஆன்மாவில் ஒளித்தோற்றமும், இருள் நீக்கமும் ஏக காலத்தில் நிகழக் கூடியதாயிருக்கின்றதாம். அந்த அருள், புறத்திருந்து உட்புகுந்து ஒளி செய்வதல்ல. அகநெகிழ் அன்பால், ஆன்ம இயற்கையாகிய தயவு ஏற்பட்டவுடன் உள்ளொளி தோன்றிவிடுகின்றது. அப்போது அவ்வான்ம உண்மையும் சூழ் பொருள்களின் விளக்கமும் அறியப்படுகின்றன. இருண்ட வீட்டில் இருக்கும் மின்சார விளக்கு ஒளிவிட்டெரியாதபோது, அவ்விளக்கும் தெரியவில்லை, சூழ் பொருள்களும் தெரியவில்லை போலவாம்.

''அருளறியார் த(ம்)மை அறியார், பொருளறியார் (முடிவில்) எம்மையுமறியார்'', எனப் புகன்றுள்ளது மெய்ச்சிவம். ஆமாம், ஆன்மாவானது, ஆணவத்தால் தன்னையும் அறிகின்றதில்லை, தன்னைச் சூழ்ந்துள்ள தேகாதி பிரபஞ்சப் பொருள்களின் இரகசியத்தையும் அறிகின்றதில்லை. தன் உண்மையும் பிரபஞ்ச உண்மையும் அறிந்து கொள்ளப்படாதவிடத்து, யாவற்றிற்கும் காரணமாக உள்ள, பரம்பொருளாம் கடவுளை எப்படி அறிந்து

கொள்ளும் ஓர் ஆன்மா! திருவருளால் ஆன்மாவில் உண்மை ஒளி விளங்கும்போது, ''தான், பிரபஞ்சம், காரணப் பரம்பொருள் எல்லாம்'', அருட்பெருஞ்ஜோதிமயமாக இருப்பது உணர்ந்து கொள்ளப்படுகின்றதாம்.

(10)

995. அருணிலை யொன்றே யனைத்தும் பெறுநிலை
996. பொருணிலை காண்கெனப் புகன்றமெய்ச் சிவமே

(உ-வி) கடவுள் தன் அருட்பெருஞ்சக்தியால்தான், யாவு மாய்த் திகழ்ந்து கொண்டும் யாவையும் புரிந்து கொண்டும் சச்சிதானந்தமயமாய் விளங்கிக் கொண்டேயிருக்கின்றார். ஆகை யால் எல்லாம் அருள்மயம் அல்லது தயவுமயம் என்னலாம். ஆனால் இதற்குமுன் சமயநெறி பயின்றோர், எல்லாம், சிவமயம், சக்திமயம், விஷ்ணுமயம், அன்புமயம் என்று கூறிப் போந்தனர். இவர்களுடைய சிவம், சக்தி, விஷ்ணு, அன்பு எல்லாம் கற்பனாதீத மெய்ப்பொருளாம் கடவுளை உள்ளபடி காட்டிக் கொடுத்தனவா? இல்லை. ஆகவே, இவற்றால் மேலான சுத்த இன்ப வாழ்வு தோன்றவே இல்லையாம்.

இப்போது வெளிப்பட்டுள்ள கடவுளின் திருவருள்நிலை கற்பனை அல்ல. பிரபஞ்சத்து முழு உண்மைக் காரிய காரணப் பெருநிலையாகும். அத்திருவருள் நிலையிலிருந்தே, எல்லாப் பொருளும், எல்லாச் செயலும், எல்லா உணர்வும், எல்லாச் சக்தியும், எல்லா அனுபவ வாழ்வும் தோன்றியுள்ளனவாய் அறிகின்றோம்.ஆகவே இந்த அருணிலையை யோர்ந்து, அதனாலே எல்லாம் விளங்குவதையும் உணர்ந்து நிற்கும்போது நம் நிலையும் அந்நிலையும் இரண்டல்லாத ஒன்றாக உள்ளதாய் உணருகின்றோம். அத் திருவருளோ எல்லாம் வல்ல பரம்பொருளின் இயற்சக்தி யாக உள்ளதாகையால், நமது உண்மையும் அதுவே என அறிகின்றபோது அதுவாக இருந்து வாழ்வதுதான் பெறலரும் பெரும்பேறு என்பது சத்தியம்.

பொருள்நிலை என்பது குறிக்கோள்நிலை அல்லது வாழ்வின் அர்த்தம், லட்சியம் குறிக்கின்றதாம். அருள் உண்மையை அறிந்து, அதனால் பெறவேண்டிய அருளின்ப வாழ்வையே பொருளெனக் கொண்டு வாழ்தலே அமையும்.

(11)

997. அருள்வடி வதுவே யழியாத் தனிவடி (வு)
998. அருள்பெற முயலுகென் றருளிய சிவமே

(உ-வி) கடவுளுக்கு, இயல்பாகக் குறிப்பிட்ட ஒரு வடிவமோ அதற்கு ஒரு பெயரோ இல்லை என்பர். ஆனால், அக்கடவுளோ எங்கும், என்றும், எவ்வடிவிலும் உள்ளார் என்பதும் ஒப்புக் கொள்ளப்படுகின்றதால், எந்த ஒரு திருவுருவத்தையும் தெய்வ வடிவாகவும், அதற்கு ஒரு பெயரும் வழங்குவதாகவ்ம் கொள்ளு வதில் தவறில்லைதான். எனவே விக்கிரகங்களில் கடவுளை உருவும் பெயரும் கொண்டு விளங்குவதாகப் பாவித்து வழிபடுதல் ஓர் உபாய நெறிமுறை யாகும். சன்மார்க்கத்தில்தான் உண்மையை உள்ளபடி அறிந்து, அன்பும், அறிவும் வெளிப் படுத்திக்கொண்டு அருளின்ப இறைவாழ்வு பெறமுடியும்.

அருள்ஞானம் விளங்காதபோது, ஆண்டவரை, அருவ மாகவோ, உருவமாகவோ, அருவுருவமாக இருப்பதாகக் கற்பனை பண்ணிக்கொண்டு பார்த்தால் உண்மைசிறிதும் அறியமுடியாது. சுத்த அருள் அறிவாலே அருட்பெருஞ்ஜோதி கடவுள் உண்மையை அறிந்தவனே, கடவுள் அருவ ஆற்றல் கொண்டு அகண்டவெளி முழுவதும் நிரம்பியுள்ளார் என்றும், உருவத் தோற்றம் கொண்ட இப் பிரபஞ்சத்து எப்பொருள் வடிவாயும், எவ்வுயிர் உருவாயும், எத்தோற்ற வண்ணமாயும் விளங்குகின்ற தால் கடவுள் உருவமாயும் உள்ளார் என்றும் சொல்லப் படுகின்றது. இதற்குமேலே முடிவாக, மெய்யுணர்வில், அருள் ஞானம் விளங்கும்போது, அவ்வருள் விளக்க அறிவாகவே இருக் கின்றது. ஆகவே உள்ளிருக்கும் கடவுள் அணுவாகிய ஆன்மா அருவுருவாகவும் அருள் வடிவானதாகவும் இருக்கின்றது உண்மையாம். இவையே கடவுளின், அருவ, உருவ, அருவுருவ மாகிய முத்தேக நிலையாம்.

ஆன்மாவாகிய அருவுருவ அருள் வடிவில் இருந்துகொண்டு தான், அக அருவநிலையின் உண்மையையும், புறப் பிரபஞ்ச நிறை வடிவ உண்மையையும் காண முடியும். கண்டதோடு நிறை அருள் அனுபவத்தால், அருவுருவத்தை அனகப் பேருருவாகக் கொண்டு நிறையின்பிலே வாழலாகும். உண்மையில் இந்த ஆன்மச் சிற்றணு வடிவமும், அதன் விரிநிலையாகிய அனக நிறை

வடிவமும்தான் கடவுளுக்கு என்றும் விளங்கிக் கொண்டுள்ள தாம். இந்த நிறை அருள் பெறும் சுத்த சன்மார்க்கியும், அக அனகமான அருவுருவுடன் என்றென்றும் வாழ வல்லவனா கின்றான்.

(12)

999. அருளே நம்மிய லருளே நம்முரு
1000. அருளே நம்வடி வாமென்ற சிவமே

(உ-வி) கடவுள், அருட்பெருஞ்ஜோதியாக உள்ளார் என்பது இன்றைய அனுபவம் இந்த உண்மையைக் காட்டிக் கொடுத்தது சிவமே. அச்சிவம் சொல்லுகின்றது, ''அருளே நம் இயல், அருளே நம் உரு, அருளே நம் வடிவம்'', ஆம் என்று உரைத்துள்ளது. கடவுளுக்கு, இயல், உரு, வடிவு ஆகிய மூன்றும், சுபாவம், ரூபம், சொரூபம் ஆம். ஓர் ஆன்மாவில் இக்கடவுள் விளக்கம் அவ்வான்ம வடிவே, உண்மை சொரூப மாகவும், அவ்வான்மாவின் அகநிலை அருள் உணர்வே சுபாவ மாகவும், புறத்தோற்றமே ரூபமாகவும் உள்ளனவாம். இந்த சுபாவம், சொரூபம், ரூபம் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒன்றே கடவுள் இறையுண்மையும், நமது இறையுண்மையும் ஆம். இந்த நிறை இறைநிலையைத்தான் அருட்பெருஞ்ஜோதியாய்க் கொண் டுள்ளோம். இந்த அருட்பெருஞ்ஜோதி ஏகமானதுதான், பிரிக்கவும் முடியாததுதான். ஆனாலும் இது தன் சொரூப, ரூப சுபாவத்துடன் ஒன்றில் மூன்றாய் விளங்குகின்றதாம். தீபத்தில் கொழுந்துவிட்டு, பட்டொளி வீசி எரிகின்ற விளக்கில், தழல் வடிவாயும், சூடு உட்சுபாவமாயும், ஒளி சூழ் பிரபையாயும் விளங்குகின்றன. மனிதனில், ஆன்மா, உயிர், உடல் மூன்றும் சுபாவம், சொரூபம், ரூபம் ஆம்.

இறையுண்மை, சுபாவ, சொரூப, ரூபம் கலந்த முழுமைத் தோற்றம் ஒன்றே ஒன்றுதான் ஆகும். அம்முழுமை நிலையை அருட்பெருஞ்ஜோதியாய்க் கொள்ளுகின்றோம். இது, அருள் ஒளி, ஒரே பொருள், இரண்டாகப் பிரிக்க முடியாதது. இப் படிப் பிரியா அருளொளிநிலை கொண்ட கடவுளின் சுபாவ சொரூப, ரூப நிலைகளில் ஒவ்வொன்றிலும் அருள் ஒளி பூரண மாகவே நிலவுகின்றதாம். ஆகையினால்தான், சுபாவமும் அருள்

ஒளி, சொரூபமும் அருள் ஒளி, ரூபமும் அருள் ஒளியே என்பது முற்றும் உண்மையே. இக்குறிப்பே ஈண்டு, ''அருளே நம் இயல், அருளே நம் உரு, அருளே நம் வடிவம்'', ஆம் என்று குறிக்கப்பட்டுள்ளதாம்.

(13)

1001. அருளே நம்மடி யருளே நம்முடி

1002. அருளே நம்நடு வாமென்ற சிவமே

(உ-வி) கடவுள், முழுமையான அருட்பேரொளியாக உள்ளார். அருளே கடவுளின் சுபாவம், சொரூபம், ரூபம் என்று முன் அடிகளில் கூறி, அதனைப் பின்னும் விரித்து விளக்கவே, அந்த ஆண்டவரின் வடிவை மட்டும் எடுத்துக் கொண்டு அந்த வடிவின் அடிமுடி நடுவும் அருளே என்பதை விரித்துக் கூறுகின்றார். பொன்னையுருக்கி வார்த்துச் செய்யப்பட்ட ஒரு விக்கிரகத்தில், அடியும் முடியும் நடுவும் பொன்னே என்பது உண்மையாம். இதுபோல் அருள் இறையின் அடிமுடி நடு அருள் என்பதில் தவறில்லை. ஆனால் இறை அருள் உண்மை அவ்வளவு எளிதில் அறிந்துகொண்டுவிடக் கூடியதாயில்லை. அந்த இறையின் வடிவும் இதுவென இலேசாய் அறிந்து கொள்ளக்கூடியதாயில்லை. ஆகவே, கடவுளின் அடிமுடி நடு மூன்றும் அருளே என்று கூறிவிட்டதில் எந்த உயர் அனுபவமும் விளங்குகின்றதில்லையாம்.

ஆகவே, கடவுளின் திருவடிமுடி நடுவை அருள் விளக்கத்தால் கண்டு, அனுபவத்தால் கொண்டு, விளங்குதல் வேண்டுமாம். அகண்டவெளிநிறை கடவுளின் அடி ஆகிய ஆரம்பநிலை புற ஆகாச வெளியாகவுள்ளதாம். அவருடைய முடி நிலை நம் ஆன்ம அணுவாக இருக்கின்றது. இந்த அடிமுடி நிலைக்கு இடையிலுள்ள பிரபஞ்சக் காரியப்பாடு முழுமையும் நடுவாகக் கொள்ளப்படும். இவ்வளவும் கடவுளர் புறநிலை விளக்கத்திற் காணும் அடிமுடி நடுவாம். இதற்குமேல், கடவுளின் அகநிலை விளக்கம், இம் மனிதப் பிறப்பின் ஆன்மநிலை நின்று கண்டடையக் கூடியதாயுள்ளதாம்.

நம் பிண்ட வடிவில், பக்குவ அருள் அறிவால் கடவுளின் அடி, முடி, நடுவைக் காணவும், கண்டு அனுபவத்திற் கொண்டு

வாழவும் வேண்டுவது திருவுளச்சம்மதம். இதில் கடவுளின் அருளடியேநம் ஆன்ம அணுவாய், சுத்த சத் விசாரத்தால் அறிகின்றோம். திருவடியே நம் ஆன்மா, அது நம் உண்மை உருவம், அனாதிகாலமாய் உள்ள ஒன்று. அருள் விளக்கத்தை அகத்தில் அறிவாயும், புறத்தில் உருவாயும் கொண்ட பல்வேறு பிறவிநிலைகளைக் கடந்து இத்தருணம் இவ்வடிவில்தான் இத்திரு வடிஞானம் பெற்றுள்ளது. இனி இதுவாய் இருந்துகொண்டு அருள்வாழ்வு வாழ்ந்து வரவேண்டியுள்ளது. இவ்வாழ்வு நிலையை நடுவாகவும், இதன் குறிக்கோள், அகமலர்ந்து அனக நிறைவு பெற்று திரிதேகசித்தியோடு விளங்குவதாம். இதுவே முடிநிலையாம். இம்முடி நிலையைச் சத் விசாரத்தால் அறிந்து கொண்டுள்ளோம். அகநின்று நிறை அருளால் வாழும்போது, இத் திரிதேக சித்தியும் கொண்டு என்றென்றும் மரணமில்லாப் பெருவாழ்வில் விளங்கலாகின்றதாம். இதனால்தான் அடிமுடிநடு என்ற முறையில், அக அனுபவ வாழ்வின் பொருட்டுக் குறிக்கப் பட்டுள்ளதாம்.

(14)

1003. அருளே நம்மறி வருளே நம்மனம்

1004. அருளே நங்குண மாமென்ற சிவமே

(உ-வி) நாம் என்றால் யார்? இதுகாறும், ஆன்ம விசாரம் செய்த வேதாந்தி, தான் தேக வடிவினன் அல்ல, இவ்வுடலுள் அழியாது விளங்கும் தெய்வீகமான ஆன்மாவே தான் என்று சொல்லிக் கொண்டான். இவன் தன்னை ஆன்ம வடிவினனாக உணர்ந்து கொண்டதுண்டு. இவனைப் போன்றவர்களே ஒவ் வொருவரும் என்று உளம்கொண்டு, எல்லோரையும் குறிக்கும் படி நாம் யாவரும் ஆன்மாக்களே என்று விளம்பரப்படுத்தினான். இது அனுபவநிலை அல்ல. தேகநிலை நின்று, யூகித்தறிந்தும், பாவித்துக்கொண்டும் சொன்னதேயாம். ஆன்மாவைத் தன் உண்மை வடிவாகக் கண்டவன், மற்ற ஜீவ தேகாதிகளை மாயை மித்தை என்றும் அவை யொன்றும் தம் அம்சமானதல்ல என்றும் கூறி, விட்டு விலகி, வாழ்வும் அனுபவமும் கெட்டு ஒழிகின்றான். ஆகையால் அம்மாதிரி ஆன்மாக்கள்தான் நாம் என்ற முடிவு சரி யல்ல என்பதைத் திருவருளாலே தெளிதல் வேண்டும்.

இதுபோல், சித்தாந்தியும் தன்னை தற்சுதந்தரமற்ற ஆன்மப் பசுவாகக் கருதிக் கொண்டு, மற்றவர்களையும் ஆன்மப்பசுக்களா கவே கொண்டான். இந்த ஆன்மாக்களுக்கு உள்ள மல பாசத்தை நீக்கிக்கொள்ளப் பதியைத் துதிப்பதுவே, பக்திசெய் வதுவே, வழி என்றும், அம்முறையில் பதியருள் பெற்று, பாச நீக்கமுற்று பதிஐக்கியம் அடைதல் முடிவெனக் கொண்டான். இவனும் தன் ஆன்மாவின் இறைஇயல் உண்மையைப் பசுவைப் பிரியாப் பதியியல் உண்மையைப் புரிந்து கொள்ளவில்லை. பதியருள் பசுபாசத்திற்கு வேறாய் இருக்கின்றதாக எண்ணம் இச் சைவப்பெருமக்களுக்கு. ஒன்றான பதியே உண்மையில் யாவுமாய் விளங்குவது என்னும்போது, பசுக்களும் பாசங்களும் பதிக்கு அயலாய் எப்படி இருக்கக்கூடும்? உண்மை அப்படி யொன்றுமில்லை.

கடவுளை எண்குணத்தான் என்றும், சகுணன் என்றும் நிர்க்குணன் என்றும், சகளனென்றும் நிஷ்களனென்றும் சொல்லு கின்றனர். மனிதனைக் கடவுள் குணத்திற்கு மாறுபட்டவனாய், கீழ்நிலையினனாய், தற்சுதந்தரமற்றவனாய் பாவியாய்க் கூறுவ தெல்லாம் ஒன்றான அருட்பெருஞ்ஜோதியின் உண்மை காணாததே காரணமாம்.

கடவுள் ஒரே ஒருவர்தான் இருக்கின்றது உண்மை; அவர் தானே தன் அருளால், அவ்வருட் சக்தியின் ஐவண்ணத் தோற்ற விரிவால். ஆன்ம, ஜீவ தேகாதிபிரபஞ்சம் எல்லாமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றார் என்பதைத் திருவருளே யுணர்த்த உணர்ந்து கொண்டுள்ளோம் நாம். கடவுள் தன் திருவருளால் உணர்த்து கின்றார். உணர்த்துகின்றதை உணர்கின்றோம் நாம். இந்த உணர்கின்ற நாம்தான் யார்? என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டியுள்ளது இத்தருணம். மேலே கடவுள் ஒருவரே மட்டும் தன் அருளால் யாவுமாய்த் திகழ்கின்றார் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளப்பட்டது. ஆகையால் அவரே தன் அருளால், ஆன்மஅணுவிலிருந்து, உயிருடம்பும், பொறி புலன் அறிவனுபவ உணர்வும் கொண்டு இந்த மனிதனாய் உலகில் உலவுகின்றார் என்பது தெளிந்துகொள்ளப்படும் உண்மையாம். இதிலிருந்து அறியப்படுகின்றது என்ன வென்றால், ஒன்றான கடவுள் தானே ஒவ்வொரு மனிதனாகவும் விளங்குகின்றார் என்பதாம். ஆகவே, ''நான்'' என்பது மனித

வடிவோடு விளங்குகின்ற கடவுளேயாம். கடவுள்தான் தன் அருளால் இந்த மனிதனாய் விளங்குகின்றதை யுணர்த்துகின்றார். அதே கடவுள்தான் மனிதனாய் இருந்துகொண்டு, தான் அக்கட வுளாக இருக்கின்றதை யுணர்கின்றான். ஆகையால், கடவுள் என்பதும், நாம் என்பதும் இருவேறு தனிப்பொருளாய் இல்லை என்பது நன்கு புலனாகும்.

இனி ''நாம்'' என்றதன் உண்மையைக் காணவேணடி யுள்ளது. ஒரு மனிதன் தன்னைக் கடவுள் வடிவினனாகத் தெளிந்து கொண்டபோது, அவனுக்கு ''நான்'' என்பது அக் கடவுளேயாக விளங்கிவிட்டது. அப்போது, இந்த உலகில் கோடி கோடி மக்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றார்களே, இவர் கள் ஒவ்வொருவரும் கடவுள் ஆன்மவடிவினர்கள் தானேயாவர். கடவுள் ஒவ்வொருவரினும் ''நான்'' என இருக்கின்றதும் அறியப் படுகின்றது. ஆகையால், இம்மக்கள் தம்மைக் கடவுள் வடிவினராக உணர்கின்றதும் இயல்பே. இதனால் இவர்கள் தம்மை, ''நாம் கடவுள்'' என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனால், கடவுளோ ஒரே ஒருவராக அல்லவா இருக்கின்றார்! அவர்தானே கோடி கோடி மக்களாகவும் விளங்குகின்றார். எனவே, உண்மையில் ஒன்றான கடவுள் நிறையருள் உடன் திகழ்ந்து கொண்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. முடிவாக நாம் என்பது அந்நிறை வான இறையருளேயாம். இதனால் ''நாம்'' என்பது பன்மை யாய்ப் பலபல கோடி உருவினராய் விளங்கிக் கொண்டிருந்த போதிலும், கடவுளுடன் அவரது திருவருளாய், அவருக்கு அய லாய்ப் பிரிந்தில்லாது ஒன்றாக ஒருவராகவே உள்ளோம் என்பது உண்மையாம். ஆகையால் கடவுணிலையில் நாம் என்பது பல வாக இல்லாது ஒன்றாய் இருத்தலின் ஒருமையாகக் கொள்ளப் பட வேண்டியுள்ளது. இது அக அனுபவநிலையிலிருந்து காணும் சன்மார்க்கியின் உண்மையே. இவன் ''நாம்'' ''நாம்'' என்று கூறிக் கொள்ளும்போதுஎல்லாம், தன் ஒருவனையே உளம் கொண்டுள்ளான், அத்தோடு தான் ஒருவனே புறத்துள்ள யாவரையும் அவரவர்களாக விளங்கச் செய்துகொண்டு இருப்ப தால், நாம் என்னும்போது யாவரையும் குறிப்பதாகவும் அறி கின்றான். இதனால், இந்த நாம் அல்லது நான் என்பது ஆணவ அகங்காரச் சொல்லாய் உள்ளதல்ல, உண்மைத்தன்மையாக, ஒருமையிற் பன்மையாக விளங்கலின் வாழ்வில் பெருமையும் நன்மையும் நிரம்பும். ஈதல்லாது சில உண்மை அறியாத

அருளியல் உணராத அகங்கார சித்தர்கள் ''நாம்'' ''நாம்'' என்று மார்தட்டிக் கொண்டு முழக்குகின்றவர்கள் சொல்லுக்குப் பொருளும் பயனும் அற்பமேயாம். சில மண்ணுலக மன்னர் கள்கூட இந்த ''நாம்'' (Royal We) என்ற பெருமிதச்சொல்லை அதிகம் பிரயோகிக்கின்றார்கள். அருள் உணர்வில்லையேல் நன்மை விளையாது.

இப்போதுதான் அகவல் அடிகளின் விளக்கத்திற்குப் பொருள் நன்கு விளங்கும். நாம் கடவுள் அருள் மயமாய் இருந்து கொண்டு அக ஆன்மநிலை நின்று அருளால் உயிர், உணர்வு, உடல் உறுப்புக்கள், தத்துவங்கள் எல்லாமாய் விளங்குகின் றோம் என்பதை அறிந்துகொண்டுள்ளோம். ஆகவே, அருள் நம் அறிவு என்பதும், அருளே நம் மனம் என்பதும், அருளே நம் குணம் என்பதும் உண்மைகளேயாம். இந்த அருள் உண்மை அறியப்படவில்லையானால் கடவுளே எல்லாமான இயல்பை அறிய முடியாது. அதனால் உண்மை அறியாமல் வேற்றுமைக் கருத்தால் வாழ்வால் உலகில் சுத்த சன்மார்க்க சுகானந்த வாழ்வு ஏற்பட முடியாதுபோம். ஆதலின், இந்தத் திருவருளின் பெரு வல்லபத் திறனை நன்கு ஆய்ந்து ஏற்று அருட்பெரு நலமுற வேண்டும் ஒவ்வொருவரும்.

(15)

1005. அருளே நம் பதி அருளே நம்பதம்
1006. அருளே நம்மிட மாமென்ற சிவமே

(உ-வி) முன் இரண்டு அடிகளில் அருள்தான் நம் அறிவு, மனம், குணம் என்ற வகையில் அகத்தத்துவத்தைக் குறித்து உரைக்கப்பட்டது. இங்கு அவ்வருள்தானே நமது பதி, பதம், இடம், ஆகிய மூன்று குறிக்கப்படுகின்றன. முன்னவை மூன்றும் உணர்வு சம்பந்தப்பட்டனவாம். இங்கு சுட்டப்படும் மூன்றும் விளங்குநிலை சம்பந்தப்பட்டனவாம்.

பதி, பதம், இடம் ஆகிய மூன்றும் அருவ அறிவால் ஆய்ந்து கொள்ள வேண்டுமேயன்றி, கலையறிவாலும் பகுத்தறிவாலும், கற்பனைத்திறத்தாலும் கண்டுகொள்ள முடியாதனவாம். இந்தப் பதி, பதம், இடம் என்பனவற்றில், பதியுண்மையைப்

பற்றி ஆய்வோம் முதலில். பதி என்பது தலைவன், கடவுள் எனக் கொள்ளப்படும். நமது பதி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராவர். இவரே நமக்குத் தலைவர், கடவுள் எல்லாம். இவர் அனாதிகால மாக விளங்குபவர். இவரே நம் அகமாய், ஆன்ம வடிவமாய் ஆதி முதலே இருந்துவந்து, இப்போதே அருள்அறிவால் கண்டு கொள்ளப்பட்டுள்ளார். இந்த பதியும் நாமும் என்றும் இரண் டற்ற ஒன்றாய் இருந்துகொண்டுள்ளது உண்மையாகும். நாம் வேண்டும்போது, பதி என்போமாயின், அவரை நம்மில் பதியும் படி வேண்டுவதாகக் கொண்டு, அப்படியே பதிவுற்றுத் திகழ் கின்றார். அப்படித் திகழ்ந்து கொண்டே அவரும், நாம் சொன்ன சொல்லையே, ''பதி'' என்று எதிர் ஒலிக்கின்றார். அதன் கருத்து நம்மைத் தம்மோடு பதியும்படி சொல்லுவது போலிருக்கின்றது. நாமும் அப்படியே, அப்பதியோடு பதிந்து பதியாகி விளங்க நேருகின்ற. இப்படி நம் அருட்பதியுண்மை நம்மையும் கொண்டு விளங்குகின்றதைத் திருவருளாலே அறிகின்றோம் இச்சமயம்.

பதம்-என்றதை அடுத்து எடுத்து ஆய்வோம். பதி நம்முள் நாமாய் ஒன்றி விளங்குகின்றதாக அறிந்துகொண்டோம். நமது உண்மையோ கடவுளான்மா என்பது, இப்பொழுது தெளிவாகி யுள்ளது. கடவுள் எவ்விடத்தும் நிரம்பியுள்ளவர். எங்கும் காணமுடிகின்றதில்லையே ஏன்? ஏனெனில், கண் முதலான இந்திரியத்தாலும், மன முதலிய கரண ஜீவ ஆற்ற லாலும், ஆன்மஞானத்தாலும் கூடக் காணமுடியாதவர். பக்குவப்படாதபோது மக்கள் எதை எதையோ கடவு ளெனக் கருதியும் பாவித்தும், வழிபட்டும், யோகு செய்தும் அடைய முயன்றும், அருள் உண்மை விளங்காததால் வீண் போயினர் பலரும். இப்போதுதான் திருவருள் கிடைக்கப் பெற் றுள்ளது, பக்குவம் ஏற்பட்டுள்ளது. நம் பதி ஆகிய கடவுளை இப் பிறப்புருவின் சிரநடுவில், பகரவடிவப் பீடமீது, தகராகாச வண்ணத் தோற்றத்தோடு மகரமெய் குறிக்கும் ஆறியல் அருட் பெருஞ்ஜோதியாகக் கூடிப் பதம் என்று விளங்கக் கண்டு கொள்ளுகின்றோம். எங்கும் இருக்கும் பதியே இங்கு பதம் ஆக வெளிப்பட்டுள்ளது பக்குவமே. இந்த பக்குவம் என்பதும் பதம் என்ற பொருளையே தருவதாம். ஒருபொருள் பதமாக ஆக்கப்பட் டுள்ளது என்றால், பக்குவமாக்கப்பட்டுள்ளது என்பதே கருத்து. இந்தப் பதநிலையில்தான் நம் பதி எழுந்தருளியுள்ளார். எழுந்

தருளிச் சும்மா இருக்கவில்லை, ஜீவனையும் தேகத்தையும், போகப் பொருட்களையும் வருவித்துக் கொடுத்து அருள்வாழ்வு வாழ வகைசெய்து கொண்டுள்ளார். அதற்குத்தக வாழவேண்டுவது தான் நம் கடமை.

அடுத்து, அருளே நம் இடம் என்கின்றார். இந்தப் பிர பஞ்சத்தில், திருவருள் அனுபவம் வெளிப்பட்டு விளங்கற்குரிய இடம் எது? அருள் அனுபவத்திற்குரிய இடம் இந்த மனிதப் பிறப்பு வடிவம்தான் முக்கியம். இத்தேகத்திற்குள் மெய்யறிவு விளங்கும் ஆன்மபீடம் முக்கியம். இந்த உடல் விளங்கற்கு இந் நிலவுலகம் முக்கியம். இந்நிலவுலகுக்கு ஞாயிறும் அதனைச் சூழ்ந்து சுற்றி வருகின்ற கோட்களும் முக்கியம். கோட்களுக்கு ஆதாரம் ஞாயிறு, ஞாயிறுக்கு ஆதாரம் வெளிநிறையொளி, அந்நிறையொளி அருளிறை வடிவாதலின், அதற்குமேல் ஒன்றில்லை. அதற்கு அதுவே ஆதாரம். ஆக இவை எல்லாம் சேர்ந்து காரியப்படுகின்ற மனித தேகத்தில் அகமிருந்து அருள் அனுபவ வாழ்வுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் இங்கு இடம் என்பது இவ்வுடலைக் குறிப்பதாகக் கொள்ளப்படும்.

இத்தேகத்திலிருந்து கொண்டு அருட்பக்குவத்தால் அகத்தே பதி பதம் பற்றி நின்று, அருட்செயலோடு வாழ்வதால், அந்த அகம் விளங்கு அருட்ஜோதியே அனகமாக விரிந்து, உயிருடம் பைத் தன்மயமாக்கிக்கொண்டு நிலவுவதாகும். இதுவே அழியா அருளின்ப வாழ்வாக அமையும்.

(16)

1007. அருளே நந்துணை யருளே நந்தொழில்
1008. அருளே நம்விருப் பாமென்ற சிவமே

(உ-வி) இந்த உலகவாழ்வுதான், மனிதனுக்கு நிறைஇன்ப அழியாப் பெருவாழ்வைப் பெற்றுத் தருவது. மற்ற மற்ற இடங் களில், பிறப்பு வடிவங்களில், நிலைகளில், அருள் உண்மை அறிவதற்கும், அருட்செயல் புரிவதற்கு வேண்டிய சூழ்நிலைகளும் வசதிகளும் அமைகின்றதில்லையாம். ஆகவே இங்கு பிறப்பிக்கப் பட்டுள்ள மனிதன் கடவுளின் திருவுளம் இதுவென உணர்ந்து அருள் வாழ்வு மேற்கொள்ள வேண்டுவது அவசியம்.

மேற்படி அருள்வாழ்வுக்குத் துணையாக வேண்டுவன எல்லாம் வரவழைத்துக் கொடுத்துக்கொண்டேயுள்ளது அத் திருவருளேயாகும். இதனையே அருட்டுணை என்கிறார். அருள் ஆணைப்படி நியதிமுறைப்படி எல்லாப் பொருள்களும் உயிர்களும் சூழ்நிலைகளும் வந்து சூழ்கின்றன. அவற்றையெல்லாம் தன் தேக போக வாழ்வுக்கே வழங்கப்படுவனவாக எண்ணிக்கொண்டு உண்டு களித்து இருந்துவிடாது, யாவும் அருட்பணிக்கே திருவருளால் வழங்கப்பட்டுள்ளனவாய் உணர்ந்து இயன்றவாறு எல்லாம் அருட்செயல் புரிந்துகொண்டிருத்தல் வேண்டும். அருளொளி பற்றி அக நின்று அனக அருள்வாழ்வு நடத்தி வந்தால் அருளே உடலையும் தாங்கிக்கொண்டு உயரின்பத்தில் விளங்கச் செய்யும். இச்செயல் அருள் தொழிலாக விளங்கும். இதில் வினை மாசு சேராது, அருள் ஒளியாகிய அருள் தேசு சேரும். செய்பணி உண்ணின்று அருளால் நிகழ்த்தப்படவில்லை யானால், எப்பணியும் வினைச்செயலாகவே விளங்கும். அதனால், மேற்பிறப்பும், இறப்பும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். இப்பிறவித் தொடர் வேண்டாம் என்றால் அருணிலை பெற வேண்டுவது இன்றியமையாதது. அருளே நம் விருப்பாக வேண்டும்.

அருள்தான் நம் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பதைத் தான் அருளே நம் விருப்பு என்கின்றார். அகத்திருந்து அனக வாழ்வு மேற்கொள்ளுவதால், அந்த அருட்குறியை நாடிச் செல்லுகின்றோம் என்பதுதான் கருத்து. அருள் நமது உண்மை யான விழைவு என்றால், அத்திருவருள்தானே அதனை எய்து விக்கவே முழுத்துணை செய்வதாம். விருப்பம் இருந்தால்தான் எந்தச் சூழலிலும் அருளோடு இருக்கவும் செயல்புரியவும் முயல முடியும். அந்த முயற்சியும் தடையுறாது திருவருளாலேயே நிறை வேற்றப்படும்.

(17)

1009. அருளே நம்பொருள் அருளே நம்மொளி

1010. அருளே நாமறி வாமென்ற சிவமே

(உ-வி) அருள் வாழ்விலே விளங்கும் நமக்கு, அகத்தில் வெளிப்பட்ட அருள்ஒளியுணர்வு, அனகமுற விரிந்து சூழ்உல

குயிர்ப் பொருள்களை எல்லாம் அருள் வண்ணமாய்க் கண்டுகொள் ளச் செய்கின்றதாம். அருளே நம் பொருள் எனப்படுகின்றது. இதனால் எந்தப் பொருளையும் அருளாக எண்ணிவிடக்கூடாது. அருள் அகவுணர்வாயிருப்பது, பொருள் புறவடிவாயிருப்பது. அக அருட்பெருஞ்ஜோதியே தன் ஆற்றலால் அல்லது திருவருளால் எப்பொருளாயும் தோற்றுகின்றது. ஆம், தோற்றுகின்றது உண்மைதான். ஆனால் அருட்பெருஞ்ஜோதியே அப்புறப் பொரு ளாக மாறிவிடவில்லை; உள்ளிருந்து அப்படித் தோற்றம் காட்டு கின்றதுவாம். ஆகையால் அருட்பற்று கொண்டு வாழும்போது சூழும் பொருள்களை வேண்டுதல் வேண்டாமை, விருப்பு வெறுப்பு இல்லாது அருட்பணிக்கு உதவுதல்தான் ஆண்டவர் ஆணை. மேலும் அருளே லட்சியப் பொருளாகக் கொண்டு வாழ்பவன் புறத்துள்ள எந்தப்பொருளையும் மதித்துப் போற்றிக்கொள்ளான், அல்லது வெறுத்துத் தள்ளான். இந்தப்பொருளின் அவா இருந் தால் சேகரித்துவைக்க நேருகின்றது; அருட்செயலுக்கு உதவு கின்றதில்லை. ஆகையால் அருள்வாழ்வுக்குத் தடையாம்: பொருளை வெறுத்தல், தீண்டாதிருக்கச் சபதம் செய்துகொள்ளல் அறியாமையே. ஏன் அந்தப் பொருள் தீண்டத்தகாத ஒன்றா? அப்பொருளில் கடவுளின் உண்மை இல்லையா? இல்லாது எப்படி உருவாகி விளங்கும்? அது நமக்காகவா, நம் புலனின்ப வாழ்வுக்காகவா திருவருள் நம்மிடத்தில் கொண்டுவந்து சேர்க் கின்றது? இல்லை இல்லை. ஆகையால், திருவுளப்படி வரும் பொருள் கொண்டு அருட்பணி புரிதல் வேண்டும். ஆகவே அருளே நம் பொருளாக உட்கொண்டு அப்பொருளை, அருளின் விளைவாகக் கண்டு அருட்பணிக்கே ஈந்து வாழல் நம் கடமை யாம்.

அருளே நம் ஒளி என்பது புறத்திற் சூழ்ந்து விளங்கும் ஒளி மட்டுமல்ல, அகத்தில் அறிவு விளக்கமாய்த் தோன்றும் ஒன்றும் ஆம். மேலும் ஒளி என்பது புகழ். கீர்த்தி எனவும் பொருளாம். ஆதலின், திருவருளை அடைவது திருவருளால் வரும் வாழ்வை, இன்பத்தை விருப்பு வெறுப்பின்றி நிரதிசயானந்தமாய்க் கண் டிருப்பது, அல்லது யாவும் திருவருளின் பெருஞ்செயலே என வியவாதிருப்பதுதான் நமக்கு உண்மை யொளியாம். ஈதல்லாது, நம் இயலும் செயலும் பெருமைபடத்தக்கதாய்க் கண்டு பிறரால் போற்றவும், புகழவும், முகமன் கூறவும் அதனால் நாம் பூரித்து எக்களிப்பில் முக்குளித்துப் போகக் கூடாது. அந்த மாதிரிப்

புகழ்ஒளி ஒருவனையே எரித்துவிடும், தீபச்சுடரில் பாய்ந்து மாயும் விட்டிலைப்போல் அழியநேரும். ஆதலின், அருளே நம் ஒளியாக இருந்து, அருள்ஒளி யுடம்பை ஆக்கித்தரல் வேண்டும்.

முடிவாக அருளே நாம் என்று குறிக்கப்படுகின்றது. கடவுள், அருள்ஒளியாய் இருக்கின்றார் எனவும், அந்த அருள் ஒளியின் தோற்றமே யாவுமாய் விளங்குகின்றது எனவும் காணும்போது, நாம் யார் என்று சொல்லாமலே அவ்வருள் ஒளி யின் தோற்றம் நாமும்தான் என்று அறிந்து கொள்ளுகின்றோம். அவ்வுண்மை அதாவது நாம் அவ்வருள் ஒளி என்பதை அறிந்து கொள்ள முடிந்திருக்கின்றது. இந்த அறிவு விசாரநிலையே, இதில் பெற்ற ஞானத்தினால் அவ்வருள்ஒளி நிலையினின்று அதன் இயல்பாய், அருள் அனுபவத்தோடு வாழவேண்டியது முக்கியம் ஆம். இங்கு, ''அருளே நாம்'' என்ற அறிவாம் உண்மையே இங்கு குறிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு வாழ வேண்டும் என்பது மறைபொருள்.

(18)

1011. அருளே நங்குலம் அருளே நம்மினம்
1012. அருளே நாமறி வாமென்ற சிவமே

(உ-வ்) உலகில் மக்கள் உருவப்பற்று காரணமாகவும், சுற்றஞ்சூழ் ;ர் தொடர்பாலும், கற்பனையால் தோற்றுவிக்கப்பட்ட சாதி, மதம், சாத்திர சம்பந்தம் கொண்டும் பலவாகிய பிரிவு களாக வகுத்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். மக்களினத் திற்கு இப்புறநிலை மோகம் பலவும் ஒழியாதவரை ஒன்றான கடவுள் உண்மை அனுபவப்படாது. அதுவரை ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற மந்திரவாசகம் போன்றவை எல்லாம் வெற்றுச் சொல்லளவில்தான் இருக்கும்.

பரந்த உலகில், பல்வேறு இடங்களில் பல்வேறு தோற்றத் தோடும் பழக்கவழக்கத்தோடும் வாழ்ந்துவருகின்ற மக்கள், தம்மை ஒரே மக்களினத்தினர் என்பதை யுணர்ந்திருந்த போதி லும், தேசம், சமய மதக் கொள்கைகள், சாதி, வகுப்பு, இனம் முதலியவைகளால் வேறு வேறான பிரிவினராக எண்ணிக் கொண்டு சிதறிக் கிடக்கின்றனர் மக்கட் சமுதாயத்தினர் பலரும்.

பழமையிலுள்ள பற்றும் உண்மையில் நாட்டமும் இல்லாக் காரணத்தால், ஒன்றான கடவுளையும், அக்கடவுளின் மேலான பேரருள் ஆற்றலையும் அறிந்து கொள்ளக் கூடாதவர்களாயிருக் கின்றனர்.

உலகம் பன்மையில் ஒருமை காணவேண்டும் என்று விரும்பு கின்றது, பன்மதங்களின் சாரங்களைக்கூட்டி ஒரு நெறி அமைக்கச் சிலர் முயலுகின்றனர். அரசியலில், பொதுவுடமை, சமதர்மம், மக்களாட்சி முதலியன புகுத்தி, மக்களை நல்லாட்சியால் திருத்த முயல்கின்றனர். மற்றும் சிலர் பழையவற்றையே புதுப்பித்து ஏற்று நலங் கண்டிட விரும்புகின்றனர். இவர்கள் எல்லோரும் முதலில் தம் உள்ளத்தில் தயவும் செயலில் தயவே புரிதலும் மேற்கொள்ள வேண்டும். தயவோடிருந்து அகவுண்மையை ஆய்ந்து பார்த்தால் ஒரு பரம்பொருளையும் அதன் ஒப்பற்ற திரு வருளையும் அறிந்துகொள்ளவும், வாழ்வில் ஏற்றுப் பயன் காணவும் முடியும்.

அருட்பெருங்கடவுள் ஒருவரே எல்லோருக்கும், எல்லா நன்மையும் தரும் அருட்பேராற்றல் கொண்டவராயுள்ளார் என்ப பதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டுவது இன்றைய நிலைக்கு அவசர அவசியமாம். இது சுத்த சன்மார்க்கத்தால் ஏற்பட உள்ளதும் வள்ளலார் மூலம் வெளியாகியுள்ளதும் உண்மையாம். உலகில் அன்போடு கூடிய அருட்பெருநெறி வெளியாக வேண்டும், அப்போது மக்களிடை வழக்கத்தில் இருந்துவருகின்ற அறியாமை நீங்கும். அவ்வறியாமை யொழிந் தால், தயவு உண்டானால் எல்லா மறைப்புகளும், பிரிவினை செய் கற்பனைக் கட்டுகளும் நீங்கி, ஒன்றே மக்கள் சமுதாயம் முழுமை யும் என்ற எண்ணம் தோன்றும். தயவால் எல்லோரும் ஒருவர்க் கொருவர் உதவிக்கொண்டு வாழ வழிவகையும் உண்டாம்.

அருளே நம் குலம், அருளே நம்மினம், அருளே நாம் ஒவ் வொருவரும், என்று திருவருளாலே உணர்த்தப்பெறுகின்றோம். புறத்தே குறிக்கப்படுகின்ற குலம், இனம், முதலியவை மக்கள் சமூகத்திற்குத் தேவையா இல்லையா? தேவை என்று சிலர் சொல்கின்றனர்; தேவையே இல்லை என்று சிலர் கூறுகின்றனர். எதைக் கொள்ளுவது, எதைத் தள்ளுவது? இவற்றிற்கெல்லாம் முதலில் அகவுண்மையை அறிந்து கொண்டு, மேல் உலகியலை

அருளியல் வாழ்வாய் அமைத்துக்கொள்ளும் முறைக்கு எவ்வழி சிறந்ததோ அவ்வழியை ஏற்றுக்கொள்ளுதல்தான் பொருத்த மானதாம். உள்ளத்தில் அருட்பெரும்பதியின் விளக்கம் கண்டு கொள்ளுகின்றபோது, மக்கள் சமுதாயம் ஒன்று என்ற உணர்வு ஏற்படுகின்றதாம். குலம், இனம் முதலியவைகள், உலகியலை தயவு அடிப்படையில், கற்பு ஒழுக்கத்திற்குத் தக நடத்த உதவு மாகில் அந்த அளவுக்கு இனப்பிரிவு இருக்கவேண்டியதே. ஆனால் தயாவொழுக்க வாழ்வுக்குத் தடையாயிருக்கும் எந்தப் பிரிவினைக் கொள்கைகளுக்கும் இடம் தரலாகாது.

அருள்ஒளிக் கடவுள் ஒருவரே தன்னருளையே நாமாக விளங் கச் செய்து கொண்டுள்ளார். அந்த அருளால், அவ்வருளாகிய நாம், கடவுளைப் பிரியாதுள்ளதை யுணர்கின்றோம்.

(19)

1013. அருளே நஞ்சுகம் அருளே நம்பெயர்
1014. அருளே நாமறி வாயென்ற சிவமே

(உ-வி) நமது உண்மை இன்பம் அருளாகிய அறத்தான் வருவதேயாம். அருள் இல்லா மருணிலையில், இந்திரியப் புலன் களாலும், மனோகரணத்தாலும் அறிந்து அனுபவிக்கின்ற சுகமெல் லாம் உண்மை இன்பமாகாது. இம் மனோ கரணேந்திரியங் கடந்து, அருணிலைநின்று அனுபவிக்கின்ற சுகம் ஒன்றே நமக்குரிய பெரிய சுகமாகும். குண ரூப வேறுபாட்டை அறிவித்தற்கு ஒவ் வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட பெயர் சூட்டி அழைக்கப்படு கின்றதாம். இந்தப் பெயர் தேகவடிவுக்கு, மக்களால் சூட்டப் படுவதாய்த் தோற்றுகின்றது. ஆனால், உண்மையில் அகப்பெரும் பதியே இத் தேக வடிவாய் விரிவுற்றுத் திகழ்வதாய் சத் விசா ரத்தால் அறியப்படுவதால், மனிதன் அகமிருந்து விரிவுற்றிலங்கும் கடவுள் சொரூபமே ஆதலின், இவனுக்கு இடப்பெறும் பெயரும், கடவுளையே சுட்டுவதாகவும் அறியலாகும். ஒரு கடவுளே தன் அருளால் அருட்சக்தியின் செயலால் பலவாகிய வடிவு கொண் டுள்ளார் எனவும், ஆகையால் எப்பெயரும் அருள்விளக்கக் காரணப் பெயரே என்றும் அறிகின்றோம். எந்த மனிதப் பெய ரும், தெய்வப்பெயரும், உயிரின் பெயரும், தத்துவங்கள்

பொருள்கள், ஆற்றல்கள், செயல்கள் எல்லாமும்கூட அருள் ஏகதேச விளக்கம் செய்வனவாய் வழங்கப்பட்டுள்ளன என்பது,

''பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை என் கணவர்திருப் பெயர்புகல்என் கின்றாய்
அருகர் புத்தர் ஆதியென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகுசதா சிவமென்பேன் சத்திசிவ மென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன்
துருவுசுத்தப் பிரமமென்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவ மென்பனிவை சித்து விளையாட்டே.''

என்றும்,

''சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்
பித்தரென்ற பெயர்படைத்தார்க் கெப்பெயரொவ் வாதோ
பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்
அச்சமயத் தேவர்மட்டோ நின்பேரென் பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின் பெயருமவர் பெயரே
சிற்சபையில் என்கணவர் செய்யுமொரு ஞானத்
திருக்கூத்து கண்டளவே தெளியுமிது தோழி.''

என்றதாலும் எவருடைய பெயரும் திருவருள் உண்மை விளக்க வந்தனவாகவே அறியலாகும். ஆகவே அருளே நம் பெயர் என்றது உண்மையாம். மேற்கொண்டு கடவுள், அருள் ஒளி யாய் இருப்பதுவும், அதன் அருளே உணர்த்த, அவ்வருளே நாமாய் இருந்து உணரவும் இருக்கின்றதால், அருளே ''நாம்'' என்று குறிக்கப்பட்டுள்ளதாம்.

(20)

1015. அருளொளி யடைந்தனை அருளமு துண்டனை
1016. அருண்மதி வாழ்கவென் றருளிய சிவமே

(உ-வி) அருள் ஒளி, நம் அகத்தில் விளங்குகின்றதைச் சத் விசாரத்தாலே அறிந்து தெளிந்து பற்றிநின்று அதுவாய் விளங்கு தலே அருள்ஒளி அடைந்ததற்குச் சான்றாகும். மற்றபடி புறத்தே தீப ஜோதியை, திருவிளக்கை வைத்துத் துதித்தல்,

தியானித்தல், உளங்கொள்ளுதல் எல்லாம் அருள் ஒளியும் அல்ல, நாம் அதனை அடைந்தவர்களும் ஆகோம். ஆகையால், நிறையருளின் உணர்வு அகத்திலே நிலவி மறக்கப்படாதிருத் தலே அருள் ஒளியின் அடைவாம்.

அருள் ஒளியை அகவடிவாய்க் கொண்டு நிற்றல், அதனை அடைந்ததற்கு அடையாளம்தான். ஆனால் அது அனகமாகச் செயல்பட வேண்டும்; இன்றேல் அதனை அடைந்தும் அடையாத வர்களாய் வீண்போக நேரும். அன்றியும் அந்த அருள்ஒளி அகவடி வாய் என்றும் இருப்பது உண்மைதான்; ஆனால் அதனை அறிந்து கொள்ளப்படாதவரை இருந்தும் இல்லாதது போல் வறிதே யொழிகின்றதாம். ஆகவே அருள் ஒளி, அகத்திலே இருப்பதை அறிவது பற்றிக் கலந்து அதுவாகி நிற்பதும் மேற்கொண்டு, தன் அருட்சக்தி, செயலில் வெளிப்பட்டு வாழ்வில் ஜீவகாருண்யம் விளங்கும் இன்பு செய்திருத்தல் வேண்டும். அப்போதுதான், அருள் ஒளியின் பயன் பெற்றவர்களாவோம். இந்த அருள் இன்பப் பேறே அருளமுதுண்டதாக மொழியப்படுகின்றதாம்.

அருளமுது உண்டால் அழியாமை பெறுவதோடு, அருட் சித்திகள் விளங்க வாழ்ந்து கொண்டிருக்கலாகும். இவ்வுண்மை குறிக்கவே, நாமாவளியில், ''அருட்பெருஞ்ஜோதியைக் கண் டேனே, ஆனந்தத் தெள்ளமுதுண்டேனே.'' எனவும் ''இருட் பெரு மாயையை விண்டேனே, எல்லாஞ்செய் சித்தியைக் கொண்டேனே,'' எனவும் குறித்துள்ளார். இந்த அருளமுது உண்டதால் இவர்க்கு அருள் வாழ்வு நித்தியமாய் விளங்கலாகி விட்டது. மதி ஒளியில் அமுத சத்துள்ளது. நிலவுக்கோளத்தில் எந்த விதமான ஒளியோ, உயிர்ச்சக்தி விளக்கமோ, உயிரினத் தோற்றமோ காற்றோ, நீரோகூட இருப்பனவாய்த் தோற்ற வில்லை. இல்லை என்றே கண்டுள்ளனர் அறிவியலார். அப்படி யுள்ள அத் துணைக்கோளின்மீது ஞாயிற்றொளி பட்டுப் பிரதி பலித்து, அப் பிரதிபலித்த ஒளி நம் நில உலகத்தை வந்தடையும் போது அமுதகிரணம் வீசும் சந்திரிகையாய் விளங்குகின்றது. அவ்வொளியின் மூலம் இங்குள்ள உயிர்களில், .பொருள்களில், அமுதசக்தி உள்விளைவு உண்டாகின்றது. மனிதனில் தத்துவ நிறைவால் உயிருணர்வில் அருளறிவு ஏற்பட்டு, வாழ்வில் அருள னுபவம் உண்டாகின்றதாம்.

அகவானில், அருள்ஒளிமதி அமுதம் வழங்க அனுபவத்திற் பெற்றுக்கொள்ளுகின்றவன், அருளின்பவாழ்வில் திகழல் சாத்தியமாம். முன்னம், அருள் அனுபவம் வெளிப்படாதபோது, யோகானுபவ சித்தியால் 16 கலை நிறை மதியமுதம் உண்டு கல்ப தேகம் ஆக்கிக்கொண்டனர் ஒருசிலர். மற்றுஞ்சிலர் பக்தி மார்க்கச் சித்தியாக என்றும் பதினாறாண்டு ஆக மார்க்கண்டன் கதையை எடுத்துக்காட்டாகக் கொண்டனர். இப்பொழுது சுத்த சன்மார்க்கத்தால் அகமதியின் நிறையருள், அனுபவப்படுகின்றதால் வாழ்வுக்குத் தேய்வில்லாத சுத்த சுகானந்த வடிவ நிலை சித்திப்பது என்று அறிகின்றோம். இதனால் நம் அருட்சிவம், நம்மை அருண்மதியாக என்றும் நிலவச் செய்கின்றார்.

(21)

1017. அருணிலை பெற்றனை அருள்வடி வுற்றனை
1018. அருளர சியற்றுகென் றருளிய சிவமே

(உ-வி) இதுதான் சுத்த சன்மார்க்கச் சித்தியோடு, உலகெலாம் உய்ய அருளாட்சி புரியும்படி அருள் ஆசி வழங்கியுள்ளதாம் நம் அருட்பிரகாசர்க்கு, அந்த அருட் சிவபதி.

அகத்தே அருணிலை அறிந்து அடைந்து நின்று அருள் ஒளியை உடலில் நிரப்பிக் கொண்டு விட்டார் அருட்செயல் புரிகின்றதாலே. அதனால் புறத்தேகமே அருள் வடிவமாக ஆகி விட்டதாம். அகத்திலே இதுகாறும் நித்தியமாய் இருந்து வந்த கடவுளான்ம வடிவம், தன் அருகிய அணுத்துவ நிலையினின்று, அருளாலே அனகமுற விரிந்து தேக வடிவைத் தன்மயமாக்கிக் கொண்டு விட்டதாம். இதனால் உடல், புற தேகமாய், அழிந்து படும் ஒன்றாய் இல்லை. அக அனுபவத்தில் விளங்குகின்ற அனக அருள் வடிவாய் ஆகிவிளங்குகின்றதாம். இப்படி அனகவடிவமாய்த் திகழ்வதை அகஅனுபவியே அறிந்துகொண்டுள்ளான். புறத்திருக்கும் ஏனைய புலனறிவாளர்கள் எல்லாம் அந்த அனக நித்த வடிவை, புற அநித்திய உடலாகவே காண்கின்றார்களாம். இந்த அருள்வடிவம்தான், பிரணவதேகம் எனவும், சுக ரூபம் எனவும், இன்புருவம் எனவும் இயம்பப்படுவது. இது அருவுருவமாகச் சிலருக்குத் தோற்றியும் தோற்றாமலும் இருக்கின்றதாம். எந்த இடத்தில் யாவருள்ளத்தில் அருள் அனுபவம் வெளிப்

படத் தொடங்குகின்றதோ அங்கு நம் அருட்பிரகாச வள்ளல் வடிவம் வெளிப்படத் தோன்றும். உலகைப் பக்குவப்படுத்து நிமித்தம், நம் வள்ளல் எந்த இடத்தும், எப்பொழுது வேண்டு மானாலும் தோற்ற உள்ளார்.

இந்நாள்வரை அக அம்பலத்திலே இருந்துகொண்டு அருவ நிலையில் இருந்தபடியே ஆண்டுவந்தார் நம் அம்பலத்தரசர். இப்போதோ, அந்த அருவக் கடவுள், வள்ளலகமிருந்து, அனக விரிவடைந்து, அருட்பிரகாச வடிவொடு அருளாட்சி புரியத் தொடங்கியுள்ளார். அருட்செங்கோலை, நம் பெருமான் கையிற் கொடுத்து, அருட்பெருஞ்ஜோதி ஆட்சி புரியும்படி அருளாணையும் செய்துவிட்டார்.

"சத்தியவான் வார்த்தையிது தானுரைத்தேன் கண்டாய்
சந்தேகம் இலையிதனிற் சந்தோடமுறுவாய்
இத்தினமே அருட்சோதி எய்துகின்ற தினமாம்
இனிவருமத் தினங்களெல்லாம் இன்பமுறு தினங்கள்
சுத்தசிவ சன்மார்க்கம் துலங்குமெலா வுலகுந்
தூய்மையுறும் நீயுரைத்த சொல்லனைத்தும் பலிக்கும்
செத்தவர்கள் எழுந்துலகில் திரிந்துமகிழ்ந் திருப்பார்
திருவருட் செங்கோலென்றுஞ் செல்லுகின்ற தாமே."

என்று சுத்த சன்மார்க்க ஆட்சிபுரிய ஆணை பெற்றுள்ளதைத் தெளிவாக்குகின்றார் நம் திருவருட்பிரகாசப் பெருமான்.

206. சிவபதி

(1)

1019. உள்ளகத் தமர்ந்தென துயிரிற் கலந்தருள்
1020. வள்ளல்சிற் றம்பலம் வளர்சிவ பதியே

(உ-வி) முன் தலைப்பில் திருவருளைப் பற்றியும் அத் திரு வருளின் வல்லபத்தைப் பற்றியும் கூறிப் போற்றிப் பின் இத் தலைப்பில், அவ்வருளைத் தனது இயல்பாகக் கொண்டிலங்கும் தனித் தலைமை கடவுளைச் சிவபதியாகக் கொண்டு புகழ்கின்றார் நம் பெருமான். அருள்அறிவால் முதலில் அறியப்படுவது சிவ ரகசியம் எனவும், அறிந்து அடைதல் திருவருள் வல்லபம் எனவும்

கூறி இங்கு, அப் பதிக் கலப்பு எய்தி விளங்கும் நிலையை சிவபதி என்றே குறிக்கப்படுகின்றதாம்.

எங்கணும், ஒவ்வொரு அணுவிலும் இயல்பாக நிரம்பி யுள்ளவர் நம் பதி. அதாவது அகண்டமாயுள்ள ஆண்டவரின் வடிவில் எந்த ஒரு சிற்றணுவிடத்தில், அருட்சோதனையிட்டுப் பார்த்தாலும் சரி, அவ்விடத்தே தன் பரிபூரணச் சச்சிதானந்த இயல்பு முற்றும் கொண்டு விளங்குவதை அருள் உணர்வால் காணலாம் என்பது சத்தியமாம். திரளாகக் குவிந்து கிடக்கும் சர்க்கரைத் திரளிலே எந்த ஒரு சிறு துணுக்கை எடுத்துச் சுவைத்துப் பார்த்தாலும் ஒரேமாதிரி சுவையாய் இருத்தல் போல், எங்கும்நிறை கடவுள் உண்மையை ஒவ்வொரு சிற்றணு நிலையிலும் இருக்கக் காணலாம் என்பது ஓர் உதாரணமே. உண்மையில் கடவுளுக்கு ஒப்புவமை கூறற்கில்லை. அக்கடவுளைப் பிறர் யாரும், எதுவும் அறியவோ அடையவோ, எவ்வுலகத்தும் எக்காலத்தும் இல்லையாம். உண்மை அப்படியிருக்க, அறியாமை யால் கடவுளைப்பற்றி ஏதேதோ கற்பனைசெய்து கொண்டும் வாதம் புரிந்துகொண்டும், இருக்கிறது என்றோ, இல்லை என்றோ வம்பு பேசிக் கொண்டும், கடவுளைக் கண்டதுண்டா, காட்ட முடியுமா? என்று கேட்டுக் கொண்டும் வீண் போகின்றனர் பலரும்.

கடவுள் உண்மையை அருள் அறிவால்தான் அறிய முடியும். அந்த அருள் அறிவு, ஜீவ தயாவொழுக்கத்தோடிருந்து சத் விசாரம் செய்து உள்நெகிழும் போதுதான் உணரமுடியும். இதில் நம்முள் நாமாய் உள்ள சிரநடு ஆன்ம அணுவிலிருந்து உணர்த்தப்படுகின்றதும், உணர்கின்றதும், அவ்வணுவே என்ற உண்மை வெளியாகின்றது. அந்த அணுதான் எங்கும் நிறைந்த கடவுளின் சிற்றுரு என்பதும், அதுவே நம் ஆன்ம சிற்றணு என் பதும் தெளிவாகும். இதனால் கடவுள் இவ் அணுவில் விளங்கு வதும், இதுபோல் ஒவ்வொரு அணுவிலும் விளங்குதலும் இயல்பே. ஆனால் எந்த ஓர் அணுவுக்கு இந்த ஆன்ம அருள் ஞான உணர்வு மனிதவடிவில் ஏற்படுகின்றதோ, அந்தக் குறிப் பிட்ட அணு மட்டும் அனுபவபூர்வமாக அறிந்தும் கண்டும், அனுபவத்திற்கொண்டு விளங்க வல்லதாகும். ஆகவேதான், அந்தக் கடவுளை அதற்கு அயலான எவரும், எதுவும் அறியலாகா

தென மொழியப்பட்டது. இந்நிலையுற்று உணராது கடவுளைப் பற்றி விவகரிப்பதெல்லாம் வீணே.

இங்கு, சிவபதி என்ற தலைப்பில் இந்தக் கடவுள் விளக்கத்தைப்பற்றி தெளிந்துகொள்ள உள்ளோம். சிற்றம்பலம், சிற் சபை என்பது நம் ஆன்மக்கடவுள் அணுத்துவநிலையே ஆம். இவ் வணுவில்தான் கடவுள் சிவபதியாயுள்ளராம். சிவபதி என்பது, இப்போது அருள் ஒளியேயாகக் கொள்ளப்படுவது பொருத்த மாம். அந்தச் சிற்றம்பலத்தில் அருள்ஒளி பதிந்துள்ளதாகக் தோற்றுகின்றது. உண்மையில் அவ்வொளி உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்து நிலைத்து விளங்குதல் அறிவோம்.

மேற்படி சிற்றம்பலத்தில் வளர் ஒளியாய் இருக்கும் ஆண்டவர், வள்ளல் தன்மை கொண்டவராவர். இக்கடவுளின் வள்ளன்மை, உலகியலார் ஏதோ சிலருக்கு சில பொருளை வாரி வழங்கிவிட்ட செயலால் ஏற்படும் குறுகிய வள்ளல்தன்மை போன்றதல்ல, எவ்வுலகத்து எந்த ஆன்மாவுக்கும் உண்மைத் தேவை யாவையோ அவற்றையெல்லாம் சிறிதும் தடைபடாது, அவை வேண்டுமென்று வேண்டாதபோதும் வழங்கிக்கொண்டே யிருக்கும் இறைபேரியல்பின் செயலைக் குறிப்பதாம். இதுதான் சிற்றம்பலத்திருக்கும் அருள் ஒளியின் அருளியல் வள்ளற்செய லாகும். இச் செயலால்தான், ஒவ்வொரு ஆன்ம அணுவுக்கும் தேவையான சூழலை உருவாகவும், உயிராகவும், உணர்வாகவும் ஆக்கி ஆக்கி வழங்கி முடிவில், அருள் உணர்வால் தன்னையே உணர்ந்து அருள் வாழ்வால் இறைமய இன்பானுபவ நிலையில் விளங்கச் செய்வதாம்.

புறத்திருந்து விசாரித்துக் கண்ட கடவுள் உண்மையை அகத்தில் உணர்ந்து நின்று, பின்னர் அகமிருந்து அனகமாக வாழவேண்டுவது சுத்த சன்மார்க்க ஏற்பாடு. ஆகவேதான், இப்போது கடவுள்நிலையை, அந்நிலையினின்றே விளக்கப்படு கிறதாம். நம் அருட்பெரும்பதி, உள்ளகத்து அமர்ந்துள்ளதாம். உள், என்பதும், அகம் என்பதும் ஒருபொருள்படுவன வெனி னும், ஈண்டு அகம் என்பதை இந்த உடலுக்குள்ளான ஆன் மாவைக் குறிப்பதாயும், இந்த ஆன்மாவுக்கு அகத்தே உள் ஆக இருப்பது கடவுள் என்றும், கொள்ளத்தக்கதாயுள்ளன வாம். எனவே, நம் பதி (கட)வுள்ளாக, அகத்து (ஆன்ம அணுவில்) அமர்ந்து, இப்பொழுது உயிரிற் கலந்து அருளியுள்

ளார் என்று உணர்த்தப்பெறுகின்றோம். இவ்வளவு காலமும் உள்ளகத்திருந்து ஆண்டுவந்த ஆண்டவர், இப்பொழுதுதான் உயிர் உணர்விற் கலந்துள்ள காரணத்தால்தான் நாம் உணர முடிகின்றது. சிவபதியுண்மையை, அருள்ஒளியுணர்வாய் அதுவாய் நின்று அறிகின்றோம் நாம்.

(2)

1021. நிகரிலா வின்ப நிலைநடு வைத்தெனைத்

1022. தகவொடு காக்கும் தனிச் சிவ பதியே

(உ-வி) தனக்கு ஒப்புவமை யில்லாத நித்தியானந்தமாகிய பேரின்பநிலை எவ்வயினும் சூழ நடுவிருந்து கொண்டு என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பதுதான் இப்பிறப்பின் சிறப்பான குறிக்கோளாகும். மற்ற உலகியற் சுகபோக புலனின்பச் சூழலில் அவத்தைப்பட்டுக்கொண்டே பிழைத்து வருவது வாழ்வெனக் கூறற்கில்லை. அவ்வின்பமெல்லாம் நீரிற்குமிழிபோல் நிலையற்றொழிவது மெய்ஞ்ஞானியர் அறிவர்.

சுத்த சன்மார்க்கத் தனித்தலைமைச் செம்பொருள் நம்மை இத்தருணம் அருணிலைக்கு ஏற்றிவைத்துள்ளார். ஆகையால், உண்மையை உள்ளபடி அறிகின்றோம். நம்மை நம் பதி தகவொடு (சிறப்பொடு) காக்கின்றான். என்றும் காத்துவரும் அருட்காவலருக்கு நிகராக யாரும் இல்லையாம்! அனாதிகாலமாக, நம் அக வடிவாகிய ஆன்மாவுக்கு உள்ளும் புறமும், மெய்யின்பச் சூழலில் வைத்துதான் தகவுடன் காத்து வருகின்றார் நம் பதி. அப்படிக் காத்து வருவதோடு, நாளும் நம்மை மேலே மேலே ஏற்றித் தன்னிலையில் வைத்துத் தனி இன்பில் அனுபவத்துடன் வாழச்செய்ய முனைந்துள்ளார்.

ஆனந்தானுபவம் அகத்திருந்து நிரம்புவது; அருளால் பெருகுவது. அகத்தில் அருள் இல்லையாயின், இருளும் மருளும் இருக்கும் காலமெல்லாம் நம் சூழ்நிலை முற்றும், அவத்தைகளே நிறைந்த பிறவிப் பெருங்கடலாகவும், துக்க சாகரமாகவும் தோற்றுகின்றதாம். இதனால் இப் பிறவிப் பெருங்கடலைக் கடந்து பிறவா நிலையாம் திருவடிக் கீழ் மறைந்து போவதே,

கரைசேர்ந்த நிலை என எண்ணிப் பேணிக்கொண்டனர் முன்னோர் பலரும். இப்போது அகத்திலே அருள் ஒளி தோற்றியுள்ளது. அத்தோடு நம்மையும் தன்னிலைக்கே ஏற்றியுள்ளது. இதனால் தான் இவ்வக நிலைநின்றே சூழ்நிலையை நோக்கும்போது நாம் இன்பஜோதிச் சூழலில் வைத்து என்றென்றும் காக்கப்பட்டு வருகின்றோம் என அறிகின்றோம். ஆகையால் பிறவியைத் துன்பக் கடலாகக் கருதுவதும், அப் பிறவியை ஒழித்துக் கிடப் பதும் தவறேயாம். இந்தப் பிறப்பும் வாழ்வும் விளங்கும்போது தான் கடவுளின்பானுபவம் விளங்குவதாயும், பிறவிநீக்கத்தால் வாழ்வற்று, அனுபவத்திற்கு இடமே இல்லாதுபோம். எனவே திருவருளாலே அகநிலைநின்று, கடவுளின்பானுபவம் பெருகப் பெருக அனகவாழ்வு வாழ்வதுதான் முறையாகும். இதனால் சூழுடலும் அருளமுதச் சேர்ப்பால் அழிவில்லாத ஒளியுடம்பாகிட நித்தியமாகக் கடவுளின்ப வாழ்வை இந்த உடலோடு கொண்டு வாழலாகின்றதாம். இந்த முறை வாழ்வு நீடித்து என்றும் விளங்கலின், இறப்பு இல்லையாகின்றது. இறப்பு இல்லை யாயின் மேற்பிறப்பு உண்டாக வழியில்லை. இறவாது வாழ்வ தோடு, அருள்நிறைவால் நிறை இன்பமும் கொண்டு விளங்க வல்லவனாகின்றான் சன்மார்க்கி.

சுத்த சன்மார்க்கிக்கு இந்தப் பிறவிச் சூழல் நித்தியானந்த சாகரமாகத் திகழ்கின்றதாம். இந்தப் பேரின்பக்கடலுக்குக் கரையுமில்லை, கங்குமில்லை, இதில் இன்பமே யன்றித் துன்பம் என்பது சிறிதும் இல்லையாம். மருளில் கண்டும், அனுபவித்தும் இருந்த அல்லற் கருங்கடல், அருளில் ஆனந்தப் பெருங்கடலாக விளங்குகின்றதாம். இந்நிலை வாழ்வில் வைத்துக் காத்துவரும் நம் அருட்ஜோதிபதி யிருக்க, அவரை அறிந்து திருவருளால் நித்திய இன்ப வாழ்வு பெற்று வாழாது, மருளில் கிடந்து உலக வாழ்வைத் துன்பமயமாய்க் கண்டு வெறுத்து, பிறவியையே ஒழித்துவிட்டுப் பேரிருளில் ஒடுங்கிக் கிடப்பது திருவருட்சம்மத மன்றே! அப்படி மடிந்து, முடிந்துபோவது திருவுள்ளமாயின், ஆன்மாவைப் பிறப்பித்தேயிருக்க வேண்டியதில்லை! பிறப் பித்துப் பலவகையில் அவத்தைகள் அடைந்து, ஆனந்தம் இதுவென முடிவில் அறியச் செய்துவிட்டுப் பின்னர் அவ்வனுப வத்தோடு விளங்க வகை செய்யாது ஒழியச்செய்தல் எப்படித் திருவருளுக்குப் பொருந்தும்? அவ்வருளின்பம் கொண்டு நித்திய மாய் நிலவும் ஆண்டவர் என்றும் விளங்கிக் கொண்டிருக்கத்

தன்னையே வழங்கித் தன்மயமாக்கிய மனிதனை நித்தியானந்தத்துடன் விளங்கச் செய்யாதிருப்பாரா? அவரே அவன் மூலமாய் என்றும் விளங்குகின்றது மருளறிவுக்குத் தோற்றவில்லை, அருளறிவுக்குத் தோற்றியுள்ளது இன்று. தோற்றியதோடு மரணமில்லாது இன்பொடு வாழவும் வகைசெய்து விட்டது நம் வள்ளலாரின் திருவருட் பிரகாசத் திருவுருவாய்.

(3)

1023. சுத்தசன் மார்க்க சுகநிலை தனிலெனைச்
1024. சத்திய னாக்கிய தனிச்சிவ பதியே

(உ-வி) உலகத்தில் கடவுள் உண்மையை அருளால் காணாது அறிவால் கண்டவர் கண்டநெறிகள் எல்லாம் மனிதனை நித்திய இன்ப வாழ்வில் என்றும் விளங்கும்படி செய்யவில்லை. மருளால் புறத்திருந்து கடவுணிலையை ஒருவாறு கண்டு அடைய முயன்று ஏதோ சிறிது அளவு திருவருள் விசேடத்தால் சில பல அற்புதங்களை நிகழ்த்திவிட்டு, உடலை நீத்துவிட்டு ஒழிந்தனர். ஆனால் இப்பொழுது வந்துள்ள சுத்த சன்மார்க்கம், அருளே அடிப்படையாகக் கொண்டது. சுத்தம் என்றாலே, மனோ விகார நினைப்பு மறப்பு கடந்து மோனத்திருந்து கடவுளை அகநெகிழ் அருள் உணர்விற் கண்டு நிற்கும் நிலையே சுத்த நிலையாம். இச் சுத்தநிலையிற் பிறழாது இருந்துகொண்டு உலகில் வாழுகின்ற முறையே சுத்த சன்மார்க்கமென்றும், அனகநெறி என்றும் கூறப் படுகின்றது. இந்நெறி முன்னர் வெளிப்பட்டதில்லை. முன்னதாகிய நெறிகள் எல்லாம் சிறுசிறு இன்பம் தந்து முடிவில் அழிந்து ஒழியச் செய்தனவேயாம்.

சுத்த சன்மார்க்கம், அகத்திருந்து அருளொடு செயல்படலால், சுத்த இன்பத்தையே உளத்தில் தழைத்திடச் செய்கின்றதாம். திருவருளாலே நம் பெருமான், இச் சுத்த சன்மார்க்க முதல்வராக ஆக்கப்பெற்றுள்ளார். இவர் உள்ளத்தில் ஓங்கிய அருள் இன்பம் இவருக்குச் சுகவடிவை வழங்கிவிட்டது. இச் சுக வடிவமாகிய பிரணவ தேகத்தில் இருந்து கொண்டு, சிற்சபையும், பொற்சபையும், தனக்கே உரிமையாக ஏற்று நிறை இன்பில் விளங்குகின்றவராகிவிட்டார். இதனையே இங்கு சுக நிலைதனில் எனைச் சத்தியனாக்கிய தனிச் சிவபதியே என்று

போற்றுகின்றார். சத்தியன் என்பதற்குப் பொருளே, திரிதேக சித்தியன் என்பதேயாம். எப்படி எனில், சத்தியம் என்ற சொற்பொருள், உண்மை, வாய்மை, மெய்மை என விளங்கி, ஞான தேகம், பிரணவ தேகம், சுத்த தேகம் மூன்றையும் சுட்டு வதாயுள்ளதாம். திருவருட்பிரகாச வடிவம், அருவுருவமானது, பிரணவ தேகம் என்றும், சுகவடிவமென்றும் கூறப்படும். இதில் தான் இருந்துகொண்டு, தன் சுத்த ஞான தேகநிலையையும் பயன்படுத்தி உலகவரைத் தத்தம் பரிபாக நிலைக்குத் தக உத விப் பக்குவப்படுத்திக் கொண்டுள்ளார். சுத்த சன்மார்க்கப் பயிரை வளர்த்து வருகின்றார் காலத்தே நற்பயன் அளிக்கச் செய்யும் அருட்பெருஞ்ஜோதி.

(4)

1025. **ஐவருங் காண்டற் கரும்பெரும் பொருளென்**
1026. **கைவரப் புரிந்த கதிசிவ பதியே**

(உ-வி) அருட்பெருஞ்ஜோதிப் பரம்பொருளே சுத்த சிவபதி யாகக் கொள்ளப்படுகின்றது. இந்த அரிய பெரிய அருட்பரம் பொருளைப் பிறர்எவரும், எக்காலத்தும், எப்படியும் காண முடியா தாம். அருள் விசேடத்தால் ஆக்கலாதி ஐந்தொழில் புரிகின்ற, அயன், அரி, அரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய ஐவர்களாலும் காண்டற்கில்லாப் பரம்பொருளைச் சாதாரண மனிதன், தவநெறி அறியா உலகியல் வாழ்வில் உழன்று கொண்டுள்ள ஒருவன், எப்படி அருட்பெருஞ்ஜோதிபதியைக் கண்டு கொள்ளமுடியும்! உண்மைதான், தேவர்களாலும், மூவர்களாலும், முத்தர்களாலும் சித்தர்களாலும் எவ்வளவோ காலம் தவமுயற்சி செய்தும் காணக் கூடாதிருந்த பரம்பொருளை நம் போன்ற ஒரு மனிதன் கண்டிட முடியுமா? சாத்தியமாகுமா? என்றால், அந்தப் பரம்பொருளை அறிய எவராலும் முடியாதுதான். அப்படியிருக்க இந்த வள்ள லார் கண்டதும், கைவரப் பெற்றுக்கொண்டதும் எப்படிச் சாத்தி யமாம்! யாவராலும் காணமுடியாதவர் கடவுள் என்பது முக்காலும் உண்மையே. அப்படியென்றால், இவரால் காண முடியாது என்பதுதானே பொருள். ஆம், இவராலும் காண முடியாதுதான். ஆனால், அந்த அருட்பெரும்பதி தானே தன் அருளையே யாவுமாய், எவருமாய் வெளியாக்கியுள்ளதால் அவ் வருளே தானாய் இருக்கக்கண்ட இவர், தான் அந்த அருளாய்,

கடவுளுக்கு அனன்னியமாய் அதாவது வேறாயில்லாது, அதுவே யாய் இருக்கக் காண்கின்றார். இதனால் கடவுளின் அருளே, கடவுள் உண்மையாயிருந்து அறிவிக்க, அவ்வருளே இவராய் இருந்து அறிந்துள்ளதாம். எனவே, கடவுள் இந்த வள்ளல் வடிவில் அருள்ஒளியாயிருந்தே இந்த வள்ளலாய் விளங்கி அறிந்து அனுபவத்திற்கொண்டும் வாழ்கின்றார் என்பது உண்மை. இதனால், கடவுள் இவரால் கண்டுகொள்ளப்படவில்லை, கண்டு கொள்ளவும் முடியாது. அந்தக் கடவுளே, இவ்வடி வேற்றுத் தன் உண்மையை வெளியாக்கியுள்ளது என்பதுதான் உண்மையாம். இந்த அனுபவம், இந்த வடிவில் ஏற்பட்டதால், இதனை நம் வள்ளலாரே கண்டு, அனுபவத்திற்கொண்டு விளங்கு வதாகப் புற உலகம் மனத்தில் கண்டுள்ளதாம். உண்மை இதுதான்: கடவுள்தான் எவருமாய் இதுகாறும் அகமறைந்து நின்று ஆண்டு வந்தார். இப்பொழுது வள்ளலின், அகப்பதியே அனகபதியாய் உள்நிறைவு பெற்றுத் தன்னையே, அருள் விளக்கத்தால் வெளிப் படுத்தி விட்டுள்ளார். இனி எவரும், தன்னை அவ்வருள் வடிவாய் உணர்ந்து உள்ளொன்றிடலால் கடவுள் உண்மையை அருள் அனுபவத்தால் உள்ளபடி உணரவல்லவராவர். இக் காட்சியும், அனுபவமும் கடவுளுக்கே, அல்லது மனிதனாய் விளங்கும் அகமுடையானுக்கே உரியதாம்.

கதி-புகலிடம், நிலை.

(5)

1027. துன்பந் தொலைத்தருட் ஜோதியால் நிறைந்த
1028. இன்ப மெனக்கருள் எழிற்சிவ பதியே

(உ-வி) உண்ணின்று மலர்ந்து விரிந்து நிறைந்து கொள்ளு கின்ற அருளாகிய ஒளியினால், இன்பானுபவம் தழைத்துப் பொங்குகின்றதாம். அந்த அருள் ஒளியே அகத்திருக்கும் நிலை யான மன்னெழில்; அதுவே அகமிருந்து பொங்கியெழுந்து அனக நிறைவெய்தும்போது பொங்கெழிலாகப் புறம் பொலி வதாம். இந்த அருள் எழிற் ஜோதியால் இன்பானுபவம் தோன்றும்போது இருள் நசிந்தொழிகின்றதாம்.

துன்பம், அறியாமை இருளில் தோன்றிய தொல்லை, மக்களை வருத்துவதாக இருக்கின்றதாம். அவ்விருள் நீங்கவேண்டுமானால்

உள்ளத்தில் அருட்ஜோதி உதயமாகவேண்டும். இதற்குத்தான் தயாவொழுக்கமும் சத் விசாரமும்கொண்டு உண்மை காணவும், அவ்வுண்மை கொண்டு தயவுச்செயல் வெளிப்பட வாழ்வதும்தான் வழியாம்.

அகத்தே இன்பநிறை இறையோடு இரண்டற இருந்தாலும் மனிதன் அவ்வகமிருந்து அனகசுத்த தயவோடு வாழவில்லை யானால், மன்னெழிற் ஜோதியாயிருந்த திருவருள் அமுத ஜோதி பொங்கெழிற் ஜோதியாய், அனகவிரிவுற்று நிறைந்து கொள்ளும் தருணம், புற வுடம்பே பொங்கெழிற் சுகவடிவாய் விளங்கு வதாம்.

(6)

1029. சித்தமும் வாக்குஞ் செல்லாப் பெருநிலை
1030. ஒத்துற வேற்றிய வொருசிவ பதியே

(உ-வி) சித்தம் என்பது ஒருமையும் தெளிவும் கொண்ட மனமாம். அப்படிப்பட்ட மன உணர்வுக்கு எட்டாத நிலையில்தான் கடவுள் ஒளி அருள்கொண்டு விளங்குகின்றது. ஆகையால் அம் மேனிலைக்குச் செல்ல மன உணர்வும் தெளிவும் போதாது. அந்த மனம் தற்போதமாகிய அகங்காரம் ஒழிந்து உள்ளுருகியபோது அருள் உணர்வாக விளங்கும். அந்த அருளுக்கு அனுபவப்படுவது தான் இறை இன்பம். இவ்வாறான இறை இன்ப அனுபவம் எப்படி மனத்தால் கருதி, வாக்கால் மொழிய முடியும்? முடியா தென்பது கருத்து.

அந்த, இறைஇன்பம் உறைகின்ற மேனிலைக்கு மனமும் வாக்கும் செல்லாதெனின், மற்ற கருவி கரணங்கள், பொருள்கள் ஏதும் செல்லமுடியாது என்பது சொல்லவும் தேவையில்லை. அம் மேனிலைக்குத் தம் சிவபதியாகிய அருட்ஜோதி வகையாகத் தம்மை ஏற்றிவைத்து விட்டுள்ளதாம். எப்படி ஏற்றி வைத்துவிட் டுள்ளது என்பதைத் திருவருளாலேதான் இன்று அறிந்துகொள்ள முடிகின்றது. அந்தக்கடவுள் அருள்தான், அதனோடு இயல்பாகவே நீங்காது இருந்து வருவது. ஞாயிறிடத்தில் ஒளிக்கதிர்கள் எப் பொழுதும் நீங்காதிருப்பது போன்றாம். அந்த அருள் உணர்வே நம் அறிவாய் உள்ளது எனத் தெரிந்து கொள்ளும்

போது, அவ்வுணர்வுக்குத் தாயகமாகிய ஆன்மாவையே கடவுள் நிலையாகவும் நம் நிலையாகவும் தெளிந்து அங்கேயே அதுவாகப் பொருந்தி விளங்குவதையும் உணர்ந்து போற்றுகின்றோம். பெருநிலை, ஒத்து, உற ஏற்றிய ஒரு தனிச் சிவபதியாகப் போற்று கின்றோம். அம்மேனிலைக்கண் இருத்திப் பொருந்தி விளங்கும் படி திருவருள் பாலித்துள்ளது அச் சிவபதி. இந்தக் கடவுள் அனுபவநிலை விளக்கம் அருளால் பெற்று வாழ்வில் ஏற்றுத் திகழ்வதன்றி சொல்கொண்டு விளக்கிடலாகா.

(7)

1031. **கையற வனைத்தும் கடிந்தெனைத் தேற்றி**
1032. **வையமேல் வைத்த மாசிவ பதியே**

(உ-வி) கையறவு என்பது சோம்பல், சோம்பிக் கிடத்தல் ஆம். இந்தக் கையறவு இருந்தால் எந்த முயற்சியும் மேற் கொண்டு முன்னேறக் கூடாதுபோம். இது தாமசக் குணக் கூறு ஆகும். முக்குணங்களில் இக்குணம் தவிர்க்கப்பட வேண் டிய ஒன்றாகும். மற்ற சத்துவ குணம் கொள்ளத்தக்கது. ரஜோகுணம் தணிக்கப்பட வேண்டியதாம்; தணிவில் சத்துவ மாக மாற்றிக் கொள்ளப்பட வேண்டும். நன் முயற்சியில், ஆனால் வீணான பெருமுயற்சியில் ஈடுபடாமல், தயவோடு கூடிய முயற்சியில், சோம்பலின்றிச் செயல்பட்டுக்கொண்டிருத்தல் வேண்டும். கையறவைத் தவிர்த்தற்கு தயவுதான் தூண்டு கோலாக, குறிக்கோளை நோக்கி விரைந்து செல்ல உதவு வதாம்.

திருவருளுக்குத் தன்னை முற்றிலும் அளித்துவிட்டிருக்கும் நம் வள்ளலுக்கு அந்த அருளே, முழுத்துணையாய்ச் சூழ்ந்து, அவர்க்குக் கையறவனைத் தினையும் நீக்கி, விரைவிலே பக்குவப் படுத்தி விட்டதாம். எவரும் தயா நன்முயற்சி மேற் கொள்ள வேண்டும் என்பது கடவுள் ஆணை. விதி வாதம் பேசிக்கொண்டு நற் செயல் புரியாது வறிதே இருத்தல் அறியாமையாம். ஆண்டவர் அருள்நியதி மனிதனை முடிவில் அருளின்பப் பெரு வாழ்வில் விளங்கச் செய்வதேயாகும். அதற்குத்தக எவன் தயாமுயற்சி மேற்கொள்ளுகின்றானோ அவனுக்கு, விதியை விலக்கி மேற்செல்ல உதவுகின்றார் நம் பதி. அப்படி முய

லாது, காலம் சரியில்லை, நற்காலம் வரவில்லை, முயற்சி செய்வதற்கு விதி வேண்டுமே என்று சொல்லிக்கொண்டு சோம்பிக் கிடந்தால், கடவுளும் விரைந்து (கடிதில்) வந்து உதவிசெய்து மேனிலைக்கு ஏற்றிவிடமாட்டார். அவத்தைப்பட்டுப்பட்டுத் தேறி வரும்படி விதியையும் அதற்குப் பொருந்தவே செயல்படச் செய்து விடுகின்றார். ஆகையால் சோம்பலைவிட்டுச் சுறுசுறுப்போடு தயவுச்செயலை மேற்கொண்டால், திருவருளால் பெருநலம் பெற்று உலகில் இனிது வாழலாம்; வாழச் செய்யவே நம்மை இப்பிறப்பில் நம் பதி வருவித்துள்ளார் என்பது உண்மையாம்.

(8)

1033. இன்புறச் சிறியே னெண்ணுதோ றெண்ணுதோ(று)
1034. அன்பொடென் கண்ணுறும் அருட்சிவ பதியே

(உ-வி) எல்லோரும் இன்பம் பெறவே விழைகின்றனர். ஆனால், யார் பொறி புலனிச்சை வழி இன்பம் நாடாது, தயவுச் செயலால், பரோபகாரத்தால் உயிர்க்கின்பம் விளைவிக்க விரும்புகின்றனரோ அவர்களுக்குக் கடவுள் உதவி உண்டாம். பசித்தவர்களுக்கு உணவு வழங்கி உண்பித்துப் பசி போக்கி உயிர் விளக்கத்தால் உண்டாம் இன்பமே அருள் இன்பமாகும். மற்றபடி வேறு வேறு பொருள்களால், வேறு வேறு செயல்களால் தோற்றுவிக்கப்படும் இன்பம் உண்மை இன்பமாகாது. தன் சுகம் பெரிதெனக் கருதி பிறர்க்குத் தயவு செய்யாது தானே துய்த்துக் களித்திருத்தல் சரியன்று. பிறர் சுகம் பேணி, துன்பம் துடைத்து இன்பம் புரிதல் வேண்டும்.

நம் வள்ளற்பெருமான் இரக்கமே வடிவானவர்; மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்பவர். தயவே நிரம்பியவர்; ஆதலின் அவர் வேண்டும் இன்பம் உலகுயிர்க்கு விளக்கம் செய்து வாழ்விக்கும் செயலாகவே யிருக்கும். ஆகவே, அவரது நவையிலா இச்சையை அருட்பெருஞ்ஜோதிபதி உடனுக்குடன் நிறைவேற்றி வைப்பது இயல்பேயாம். இவரது வேண்டுகை எல்லாம் கொஞ்சமும், காலதாமதமின்றி விரைந்து அன்போடு வழங்கி மகிழ்வு செய்கின்றதாம் அந்த இறை ஒளி. நம் பதியே அன்பருளின்ப வடிவினர்தானே, ஆதலின் அவரிடத்திலிருந்து நேரடியாகக் கிடைக்

கப்பெறுகின்ற இன்பம் எவ்வளவு சிறந்ததாக தெய்விகமானதாக இருக்கும்! அருட்சிவம் என்பது அருட்பெருஞ்ஜோதிக்கடவுளே என்று கொண்டு உலகத்திலுள்ள எல்லோரும் பெருநலம் பெற வேண்டுமென்பது வள்ளலுள்ளம்.

(9)

1035. பிழையெலாம் பொறுத்தெனுட் பிறங்கிய கருணை
1036. மழையெலாம் பொழிந்து வளர்சிவ பதியே

(உ-வி) தனிப்பெருங்கருணை ஆண்டவர் ஒருவரே யார் செய் எப்பிழையையும் பொறுத்தருளுவார்.

''செய்தாலும் தீமையெலாம் பொறுத்தருள்வான் பொதுவில் திருநடஞ்செய் திருக்கருணைத் திறத்தான்'', என்று புகழப்படும் பதியின் கருணைத்திறன் என்னென்பது! கடவுள் விதி வலிமை மிக்கது எனினும், கருணை நிரம்பியது. ஒருவனுக்கு நல்லின்ப வாழ்வு சூழும்போது அது நற்கருணையால் வருவதாகக் கொள்ளு வோம். மற்றொருவனுக்குக் கடுமையான சோதனைத் துன்பச் சூழல் ஏற்படும்போது அது கடவுளின் மறக்கருணைச் செயல் எனக் கொள்ளுகின்றோம். இத் துன்பச் சோதனை ஒருவனைப் பக்குவப்படுத்தி நல்வழியிற் செலுத்தி இன்பநிலைக்கு ஏற்று வதே திருவுள்ளம்; ஆதலின், அது கருணைச்செயலே யல்லாது, கருணையில்லாத செயல் அல்லவாம்.

பிழையே புரிகின்றவர்களின் அகத்தும் பிரியாதிருக்கின்றவர் தான் நம் பதி. ஆனால் அக வானில் தீண்டாத வெளியில் இருந்து ஆள்கின்றார் ஆதலின் நல்லது கெட்டது, எதுவும் அந்த அகநிலை சாராது, புறநிலை மனிதனைப் புடமிட்டு மாற்றேறு பொன்னாக மாற்றுகின்றது கடவுளர் மறக்கருணைச் செயலெ லாம். பிழைபுரியும் மனிதனையே கருணையால் வாழ்விக்கும் பதி; நம் வள்ளல், அன்பே நிறைந்த அருள் அண்ணலின் அகத்த ளியில் பெருங்கருணைக் கடவுள் பிறங்கிக்கொண்டிருத்தல் விளங்கிநிற்றல் பெரிதல்லவே!

உலகில் உயிர்கள் இன்புற்றுவாழ உளம்கொண்ட கடவுள், தன் கருணை இயல்பையே மழையாக வெளிப்படுத்திப் பொழிந்து வருகின்றார். இதனால் அன்றோ திருக்குறளில் கடவுள் வாழ்த்

துக்கு அடுத்து வான்சிறப்பு வழங்கப்பட்டுள்ளது. புற உலகுக்கு மழைநீரால் உயிர்வளம் ஏற்படுவதை அறிவோம். இதுபோல், கடவுளின் கருணையாகிய மழை அகவுலகில் சதா பொழிந்து கொண்டேயுள்ளதால், உயிர்கள் சதா மெய்யின்பக் குறிக் கோளை நாடிச் செலுத்தப்படுகின்றன; அவைகளும் அறியாமலே முன்னேறிச்சென்றுகொண்டே யிருக்கின்றனவாம். நம் பெரு மான் அகவானிற் பிறங்கும் கருணைமழை பொழி முகிலை யொத்த பதியை உளநெகிழ்ந்து வாழ்த்துகின்றார்.

(10)

1037. உளத்தினுங் கண்ணினு முயிரினு மெனது
1038. குளத்தினு நிரம்பிய குருசிவ பதியே

(உ-வி) பொதுவாகக் கடவுள் அல்லது பதி என்று குறிப் பிடும்போது அதற்கு, எந்தவிதமான வடிவத்தோற்றமோ பெயரோ ஒன்றும் கிடையாது. அப்படிப்பட்ட கடவுளைக் காண்பது என்பதும், காட்டுவது என்பதும் பொருளற்றதாம். மெய்ப்பொருள் அறியாதார்களே, கடவுளை ஏதோ கற்பனை செய்துகொண்டு தீவிரமாய் முயன்று, ஓர் ஒளி வடிவிலோ, உருவத் தோற்றத்திலோ, மனோகரண ஆற்றலிலோ எதை யேனும் கண்டு, கடவுட்காட்சியைப் பெற்றுவிட்டதாகச் சொல்லி விட்டு ஏமாந்துவிடக்கூடாது. உண்மைக்கடவுள் தோற்றக் கேடில்லாது, எங்கும் உள்ளதாய், எல்லாம் வல்லதாய், சச்சி தானந்தமாய் இருக்கும் கடவுளை எந்தக் காட்சியில் காண முடியும்!

அருள் ஞானக் கண்ணாலே மெய்யுணர்வு அனுபவத்திலே தான் உண்மைக் கடவுளை, அதன் உண்மை இயல்பு முழுமை யோடியங்கும் வண்ணத்தை ஐயம் திரிபின்றிக் கண்டுகொள்ள வேண்டியிருக்கின்றது. இந்த உண்மையை யுணர்த்தும் திரு வருளையே குருவாக முதலில் உணர்ந்து, ஒருமையும் தயவும் கொண்டு இக் கடவுட்காட்சியைக் காண வேண்டியுள்ளதாம். இந்த அருட்குருவைக் காண்பதே கூட சாதாரண மக்களுக்கு முடிகின்றதில்லை. அக் குருவைக் கண்டு கொள்ளவே எத் தனையோ பேர் எவ்வளவோ காலமாகத் தேடி அலைகின்றார்கள். அவர்களுக்கு ஏதோ ஒருசிலர் குருவெனத் தோன்றி சில

உண்மைகளைக் கூறி விட்டுச் சென்றுவிடுகின்றனர். இந்தப் புறக் குருக்களையே உண்மைக் குருவெனக் கொண்டுவிடக் கூடாது. இவர்கள் மூலம், நம் பதியின் அருளியல் உண்மை யையும், அது நம்மில் விளங்கும் நிலையையும் அறிந்து பற்றிக் கொண்டிட வேண்டும். உண்மைக் குருவைக் காட்டிக் கொடுக்கக் கடவுளே இப்படிப் புறக் குருக்களாய்ப் போந்து அறிவு கொளுத்திச் செல்லுகின்றார் என்பது உண்மை.

நம் வள்ளலடிகளார் அருள்ஒளியையே குருவாகக் கொண் டார். அதுவே அகத்தும் புறத்தும் குருவாய்த் தோன்றி ஆட் கொண்டது. அந்த அருள் ஒளியே இவருக்குக் குருவாய் விளங் கினது. சிவ பரம்பொருளே இந்த அருட்குருவாய்த் தோற்றி இவரது அகத்தும் புறத்தும் உதவி நிற்பதாய்க் கண்டு போற் றப்படுகின்றது. உள்ளத்தில் உணர்வு மாத்திரமாய் விளங்கியும், கண்ணில் காட்சி விளக்கமாய்த் தோற்றியும், உயிரில் ஆற்றல் அம்சமாய் செயல்பட்டும், சிரநடு பகர வடிவக் குளத்தில் எல்லா அனுபவத்திற்கும் காரணமாய் விளங்கியும் திகழ்கின்றதாம் குரு வாகிய சிவபதி. இங்கு சிவபதியின் குறிப்பு முக்கியம் வழங் கினதாய்க் கொண்டு காண்பது இதுவாகும். அடுத்து ''அருள் குரு'' என்ற தலைப்பில் குரு உண்மை நன்கு தெளிந்து கொள்ளு வோம்.

207. அருள் குரு

(1)

1039. பரமுட னபரம் பகர்நிலை யிவையெனத்
1040. திரமுற வருளிய திருவருட் குருவே

(உ-வி) அருட்பெருஞ்ஜோதியாய் எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல பரம்பொருள் எதுவோ அதுவேதான், முன்பு சிவமாகக் கண்டு போற்றிப் போற்றி அதன் திருவருளை ஓரளவு விசேடமாகப் பெற்று, பலவாகிய சக்தி சித்திகளை எல்லாம் அடைந்தனர் சிலர். இப்போது அந்த அருட்சிவமான பரம் பொருளே ஆன்மஜோதிச் சிற்றணுவாகிச் சிரநடு சிற்றம்பலத் தில் திருவருளாலே கண்டு அடையப்பெற்றுள்ளோம். இதுவே, குளத்தின் நிரம்பிய குருசிவபதியாக மேலே சுட்டப்பெற்று,

ஈண்டு திருவருட்குருவாகக் குறிக்கப் படுகின்றது. இந்த அருள் ஒளியே உண்மைக் குருவாக இருக்கின்றது. இதனைக் கண்டு கொள்ளச் செய்யவே புறத்தில் சில பெரியோர், தெய்வம், நூல், வாசகம், பொருள், தோற்றம் முதலியன குருவாகத் தோற்றிச் சார்ந்து உதவி செய்து உள்ளத்துள்ளே உண்மை அருட்குரு வைக் காட்ட, அதன் பேரருளாலே அனைத்து நலனும் பெற்றுக் கொள்ள முடிகின்றதாம்.

எங்கும் நிறை பரஞ்ஜோதிக் கடவுளே, இந்த உலகில், இந்த மனிதப் பிறப்பிற் சிரநடு ஆன்மஒளி வடிவாய்த் திகழ்ந்து நின்று, தன் உண்மையை உணர்த்த உணர்கின்றோம் இன்று. இதுவே கடவுள் குரு வடிவாய், இந்நிலமிசை வந்து, நம் தலை மிசை தாள் சூடி ஆட்கொண்டுள்ளதாக அறியப்படுகின்றது.

"யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே" -திருமந்திரம்

என்றதால், அவ் வான்வெளியில், தீண்டரிதாய் விளங்கிய பரம் பொருள், மண்ணான நம் உடலின் உயிருணர்வில் மந்திரவடிவாய் (ஓம், சிவம், தயவு) ஆகித் திகழ்கின்றார் ஆம். இந்த மந்திர வடிவை நினைந்து நினைந்து, ஓதி ஓதி உட்கலந்து நிற்றல்தான் அருட்குருவின் திருவடி சூடி விளங்கலாகும். இவ்வுண்மைக் குருவே யாவருக்கும் உரிய பெரிய குருவாம்.

மேலே, கடவுளே குருவாகி வந்துள்ள வரலாற்றை இன்று உள்ளபடி அறிகின்றோம். உண்மையைக் குரு இதுவெனத் தெளி தல் வேண்டும். இந்தக் குரு எவர்க்கும் சொந்தகுரு. இவரே, நம் முடன் எந்தக் காலத்தும், எந்த இடத்தும் இடைவிடாது உடனி ருந்துகொண்டு, அறியாமை இருளைப்போக்கிடும் அருள்ஒளியாய் விளங்குகின்றதும், வேண்டுவனவெல்லாம் வேண்டியாங்கு வழங்கி வழங்கி வாழ்வித்து மேலே, மேலே ஏற்றிக் கடவுணிலையில் ஒன்றி மரணமில்லாது இன்பொடு என்றென்றும் வாழவும் உதவுகின்றார் இந்த குரு. ஆகவே, இந்தக் குருவைக் கொண்டுதான் எவரும் கடவுளை அடையமுடியும் என்பது சத்தியம். இந்தக் குருவை அடையாது, திருவருளைப் பெறாது எவ்வளவு கற்றுத் துறை போகி மாமேதையாய் விளங்கினாலும், குருவில்லா ஞானம் பாழ்,

வாழ்வும் பாழ் என்பது உண்மையேயாம். இந்த உண்மைக் குருவை ஒரு சிறிதும் உணர்ந்துகொள்ளாது புறத்தே வரும் குருக்களையே நம்பியும். அவரை வைத்து எல்லாம் அடைந்து விடலாமென எண்ணிப் பின்பற்றிச் சென்று மோசம் போய்விடக் கூடாது மக்கள்.

உண்மைக் குருவாக உள்ளவர், உண்மையில் அகநின் றொளிரும் அருள்ஒளி வடிவாய்த் திகழ்கின்றவராய் இருக்க வேண்டும். அப்படியிருப்பவர், தம்மைத் தாமே காட்டிக்கொள் ளார், விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கமாட்டார். பெயருக்கும், புகழுக்கும், பொருளுக்குமாகப் பிறருக்கு உபதேசம் பண்ணிக் கொண்டும் இரார். ஆகவே உண்மைக் குருவிலக்கணம் இதுவென அறிந்து, இந்தக் குருவை அடைய முதலில் தயாவொழுக்கத் தோடு இருந்து சத்விசாரம் செய்தல் முறையாகும். அப்படிச் செய்து வந்தால், திருவருளால் ஞானக்கண் திறக்கும், உண்மைக் குருவைக் கண்டு அடையலாம். இக் குருவைத்தான் நம் திருவருட் ஜோதி வள்ளல் கண்டு கொண்டிருந்தார். இவர் எவரையும் நாடிச் செல்லவில்லை. மாறாகப் பலர் இவரை நாடி வந்து தத்தம் அனுபவங்களைக் கூறியும், உண்மையைத் தெரிந்துகொண்டும் சென்றனர்.

இங்கு அருட்குருவின் உண்மை குறித்தும் தோத்திரம் செய்தும் உள்ள விளக்கத்தை இந்த அகவல் அடிகளில் காண் கின்றோம். பரம் இது, அபரம் இது, சொல்லப்படுகின்ற நிலைகள் இவை என்று நன்கு உணர்த்தி, ஐயம் திரிபுகளுக்குச் சிறிதும் இடமின்றித் தெளிவுபடுத்தியுள்ளாராம் இந்தத் திருவருட்குரு. இந்த அருள்குரு என்பதின் அருள் விளக்கம் ''தயவுப் பாக்களில்'' உண்மைக் குரு என்ற தலைப்பில் 100 செய்யுள்களாக ஆக்கப் பெற்றுள்ளது.அவையும் இங்கு ஒப்பு நோக்கற்பாலது.

(2)

1041. மதிநிலை யிரவியின் வளர்நிலை யனலின்
1042. திதிநிலை யனைத்தும் தெரித்தசற் குருவே

(உ-வி) சற்குரு-சத்தாகி என்றும் நிலவுகின்ற உண்மைக் குரு என்பது பொருளாம். இக்குருதான் அகப்புற உண்மையை எல்லாம் நன்கு தெரிவித்துத் தெளிவிப்பவராகவும் உள்ளார் ஆம். தெரித்தல் என்பது, விளக்கித் தெளிவித்தல் என்று பொருள் படுவதாம். இங்கு, மதி, இரவி, அனல் மூன்றைப் பற்றிய குறிப்பு தரப்பட்டுள்ளது. மதியின்நிலை—சந்திரன் வானிலிருந்து குறை

வதும், நிறைவதும் மறைவதும், பின்னும் தோற்றுவதுமாகிய நிலைகளும் அவற்றால் இவ்வுலக உயிர்ப் பொருள்களின் தோற்ற மாற்ற மறைவுகளின் உண்மை அறியப்படுகின்றதாம். இரவியின் வளர்நிலை யாதெனின், சூரியன் என்றும் வளரொளியாய் விளங்கிக் கொண்டிருக்கும் உண்மையைக் குறிப்பது. இந்த ஞாயிறு நம் பிண்ட உடலில் உயிர்ச் சக்தியாய் இருப்பது. இவ்வுயிரின் உண்மை யாதெனில், கடவுளான்ம நிலையிலிருந்து விரிந்து செயல்படுவது இந்த உயிர் சக்தி எனவும், இச்செயல் படும்போது, உடம்பில் விளங்கிப் பல அனுபவங்களை ஏற்க உதவுகின்றதாகவும் அறியப்படும். மேல், அவ்வுயிர்ச்சக்தி மறுபடியும் உள்ளொடுங்கும் போது, உடல் பிரிந்தழிவதும் உலகறியும். அப்படி உட்சுருங்கிக் கொண்ட உயிர்ச் சக்தி மறுபடியும் வேறொரு பிண்ட தேகத்தில் விரிந்து செயல்படத் தொடங்கும்போது வெளிப்பட விளங்குவதாம். ஆகவே இந்த உயிர்ச்சக்தி நித்தியமாய் இருந்து கொண்டு, தோற்றுவதும் மறைவதுமாக உள்ளதால், இரவியின் வளர்நிலைக்கு ஒப்பிடப்படுகின்றதாம். மேல், அனலின் திதி என்பது, தீயின் நிலைத்த இயல்பாம். இது ஆன்மாவைக் குறிப்பது. ஆன்மஜோதி அணு, என்றும் அகண்ட வெளிமுற்றும் நிரம்பி நிலைத்துள்ள கடவுட் ஜோதியின் கூறாக உள்ளதாம், என்ற உண்மை எல்லாம் அருட்குருவாலே கண்டு போற்றுகின்றார் நம் வள்ளற்பிரான்.

(3)

1043. கணநிலை யவற்றின் கருநிலை யனைத்தும்
1044. குணமுறத் தெரித்துட் குலவுசற் குருவே

(உ-வி) அணுக் கூட்டங்களின் திரட்சியால்தான் பிரபஞ்சப் பொருட்கள் எல்லாம் உருவாகித் தோற்றிக் கொண்டிருக்கின்றனவாம். ஒவ்வொரு சிற்றணுவுக்கும் உள்ளிருக்கும் கருநிலைக்குக் காரணமாய் இருக்கின்ற நம் பதி அருட்பேராற்றல் கொண்டவராயிருக்கின்றார். இப்படி அகம்குலவி நிற்கும் அருட்குருவே, தனித்தனி ஒவ்வொரு அணுவின் நிலைப்புக்கும், அணுநடு புரோடான் ஆற்றலுக்கும், அதனைச் சூழ்ந்து இயங்குகின்ற எலக்ட்ரான் ஆற்றலுக்கும், இன அணுக்களைக் கூட்டிக் கொள்ளுகின்ற கூட்டு திரட்சி சக்தி (Cohesive force)க்கும் காரணமாய் இருந்து பிரபஞ்சப் பொருட்களை அமைக்கின்றதாம். இவ்வுண்மைகளை

எல்லாம் நமது சற்குரு ஏன் நமக்குத் தெரிவித்துக் கொண்டுள் ளார் எனில், நாம் கடவுளின் அருள் வல்லப சக்தி நிலையை நன்கு அறிந்து அடைந்து, சுகநிலை பெற்று மகிழ்ந்திருக்கவேயாம்.

குணமுறல் என்றால், பிறிவிப் பிணியினின்று நீங்கிச் சுக முறுதல், சுகானந்த வடிவம் அடைதலாம்.

(4)

1045. பதிநிலை பசுநிலை பாச நிலையெலாம்
1046. மதியுறத் தெரித்துள் வயங்குசற் குருவே

(உ-வி) சற்குருநாதர், உண்மையில் நம் அறிவில் அருள் உணர்வாய் இருந்து உணர்த்துகின்றது, இதுவரை அறியப் படாத மெய்ப் பொருள் விளக்கமாகும். பதிநிலை, பசுநிலை, பாச நிலை, ஆகிய முந்நிலையின் விளக்கம் ஈண்டு குறிக்கப்படுகின்றது. பதி என்பது கடவுள், பசு என்பது ஆன்மா, பாசம் என்பது மல மறைப்பு என்று முன்னோர் கண்டிருந்தனர். இப்போது அந்த முப்பொருள், ஒன்றின் அனுபவ விளக்க விரிநிலையே என்பது திருவருட்குருவால் தெளிவு செய்யப்படுகின்றது.

எல்லாம் வல்ல கடவுள், அருட்பெருஞ்ஜோதியாய் எங் கணும் நிரம்பியுள்ளார் என்பது யாவரும் அறிந்துள்ளனர். அக்கடவுள் தானே எங்கும் பூரணமாய் உள்ளதால், ஒரு குறிப் பிட்ட ஆன்ம அணுவுக்குள்ளும் புறமும் நிரம்பியிருப்பதோடு அவ் வணுவாகவும் இருக்க வேண்டும் என்பது தெளிவு. இதனால் ஆன்மப்பசு எங்கும்நிறை பதியின் மயமானதேயன்றி வேறு அல்ல என்பது நிச்சயம். எல்லாம் வல்ல பதி, பசுவாகிய ஆன்ம அணுவில் பூரணமாகவே இருக்கின்றது இயல்பே. ஏன் அப்படி பசுபதியாகக் கடவுள் விளங்கவேண்டும் என்றால், அது தன் அருள் இயல்பால் ஒளிர்வதால், அருட்செயலோடு விளங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த அருட்செயலே, ஒவ்வொரு ஆன்ம அணுவுக்கும், சூழ்ஒளி நிலையில் சதா மாற்ற தோற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றனவாம். அந்தச் சூழ்நிலைத் தோற்ற மாற்றம், சடப்பொருளாய், உயிராய், அறிவுணர்வாய், ஆன்ம ஆற்றலாய்த் தோற்றி தோற்றி முடிவில் இப்பொழுது அருள் விளக்கமாய் விளங்குகின்றது. அதாவது, பதியே ஆன்மப்பசு வடிவில் இருந்துகொண்டு தன்னைச் சூழ்ந்திருக்கும் தன்

னொளியையே இப்போது அருள் விளக்கமாய் ஆக்கிக் கொண்டு விளங்குகின்றதாம். இந்த அருள் விளக்கத்தால்தான், பதி பசுவின் உண்மையும் அருள் ஒளி வண்ணமாகத் தெளியலாயிருக் கின்றதாம். இதனால் இந்தச் சூழொளி நிலையை, உண்மையைக் காட்டிக் கொடுக்க வந்த பொருளாக அறிகின்றோம். இதனைப் புரிந்து கொள்ளாமல்தான், இது பாசமாகக் கருதப்பட்டு வந்தது முன்னம். அந்த அறியாமையில் பதி, பசு, பாசம் முத்தனிப் பொருள்களாகவும், மூன்றும் அனாதியாகவே யுள்ளனவாகவும், மனிதன் ஆன்மப்பசுவாய், பாசத்தால் பிணிக்கப்பட்டுக் கிடப்ப தாகவும், பதி அருளால் பாச நீக்கமும், அப்பதியில் ஐக்கியமும் அடைந்து ஒடுங்குவதே பசுவின் முடிவுநிலையாகவும் கருதப்பட்டு வந்தன.

இப்போது அருட்குருவால் உண்மை கண்டு உய்யலா கின்றது. ஒன்றான பதியே தன் அருள்இயல் விளக்கத்தால், ஆன்மப் பசு தோறும் தானே பூரணமாய் இருந்து, தன் அருட் சூழலையே, ஆன்மப்பசுவுக்குத் தேகாதிகள் எல்லாமாய்த் தோற்றுவித்து, அருள் உணர்வாக்கி இம்மனிதனாய் அருள் அனுபவத்தோடு விளங்குகின்றது, பதியாகவும் அதுவே நாமா கவும் உள்ளோம்.

''முப்பொருளும் ஒன்ற தென்பார் வெண்ணிலாவே—அந்த மூன்றும் ஒன்றாய் முடிந்த தென்ன வெண்ணிலாவே.'' ''எம் இறை, ஓடும் உலகு உயிர் ஆகி நின்றானே.'' என்ற மந்திர வாசகத் தாலும், பதி பசு பாசம் ஒன்றின் முந்நிலைத் தோற்றமாக அறிகின் றோம். சூரிய ஜோதியின் மூலம் ஒளியும் உலகமும் விளங்குவது போல், அருட்பெருஞ்ஜோதிபதியின் மூலம் அதன் ஒளியே ஆன் மப் பசுக்களும், தேகாதிபாசங்களும் ஆகி விளங்குவன போன் றாகும். பதி, பசு, பாசம் அனாதி என்றால் ஒன்றாகிய அந்தப் பதியே அனாதியாக இருந்துகொண்டிருக்க அவரது இயலும் செயலும் பசு பாசமாக விளங்குதலும் அனாதியே என்பது உண்மை. அப்படிக் கொள்ளாது மூன்றையும் தனித்தனிப் பொருள்களாகக் கொண்டு அனாதியாயுள்ளவை எனக் கருதுதல் அறியாமையே. மேலும், நம் பதி தனக்கு, யாரும் எதுவும் இணையாக இல்லாத தனிப்பெருஞ்சிறப்பு உடையவர் என்பது உண்மையாகும். ஆகையால், பசுவையும் பாசத்தையும் கடவுளைப் போல அனாதி வஸ்துவாக கொள்ளற்கில்லையாம். ''பதியினைப்

போல் பசு பாசம் அனாதி'' என்று திருமூலர் சொல்லியுள்ளாரே எனின் உண்மை இதுதான். ஒன்றான பதி அனாதியாயுள்ளவர், ஆகையால் அவரினும் வேறாகாத, அவரது இயலும் செயலும் அனாதியாய் இருப்பதில் என்ன ஐயம்? பதி அனாதியாய் இருக்கும்போதும் அவரது இயல், செயலான பசு பாச நிலையும் அனாதியே என்பதில் தவறொன்றுமில்லையன்றோ? இவ்வுண்மையையே அருட்குருவால் இன்று கண்டு தெளிகின்றோம். இந்த அருட்குருவைத்தான் அருள்அறிவு சுட்டும் வெண்ணிலாவாகக் கொண்டு, முப்பொருளும் ஒன்றாய்க் காட்டுகின்றார். இங்கும் மதியுறத் தெரித்ததாகவும் குறித்துள்ளார்.

(5)

1047. பிரம ரகசியம் பேசியென் னுளத்தே
1048. தரமுற விளங்குஞ் சாந்தசற் குருவே

(உ-வி) எங்கும் நிறை கடவுட்ஜோதியைப் பதி என்றார் முன்பு. அதுவே, பிரமம் ஆக எடுத்து வேறு வகையில் விளக்கம் செய்யப்படுகின்றது. பிரமம் என்றால் ஒளி என்றே பொருளாம். அதில் இயல் உண்மை அறிவின்ப வாழ்வுக்கு வழியில்லை. பரநாதநிலைமேல் தோற்றிக் காண்பானைத் தனக்குள் மறைத்துக் கொள்ளுவது இப் பிரம ஐக்கிய நிலையாகும். அதுவே உப சாந்தநிலை எனக் கொள்ளப்படும். இந்தப் பிரமஜோதியை எப்பொழுதும் நிரம்பியுள்ள இறை ஒளியாக உணர்ந்துகொள்ளப் பட்டது முன்பே.

இப்போது நம் இறையருட்பெருஞ்ஜோதிக் கடவுள் நமக்கு சாந்த சற்குருவாய் அகத்தே எழுந்தருளி மிகத் தெளிவாக பிரம ஜோதியின் உண்மையை வெளிப்படுத்தி அனுபவத்திற் கொள்ளச் செய்கின்றார். முன்பு அவ்வொளியைப் பாவனையிற் கண்டு அதுவே தாமாகக் கருதிக்கொண்டு, ''அகம் பிரமம்'' என்று கூறினாலும், உடலை மித்தை என எண்ணி விட்டொழித்து அகம்பாவத்தில் மறைந்துபோனார்கள் அந்தப் பிரமவாதிகள் பலரும். இத்தருணம் நம் சாந்த சற்குரு நம்மை உள்ளொன்றி யிருந்து கொண்டு, நம் அகண்ட பிரமஜோதியின் நிறை அனுபவமும் கொண்டு, விளங்கும் அருள் ஞான மனிதராக உணர்த்தப் பெற்று, தயவுடன் வாழ, அதனால் அவ்வனுபவத்தோடு அழிவில்லாது விளங்கவும் வகை செய்யப்படுகின்றதாம்.

(6)

1049. பரம ரகசியம் பகர்ந்தென துளத்தே

1050. வரமுற வளர்த்து வயங்குசற் குருவே

(உ-வி) பிரமம் என்றதை ஒளி எனக் கண்டோம். இங்கு பரமம் என்பது உயர்வு அல்லது மேலான தன்மையாம். பிரமஜோதியின் மேன்மை இயல்பு என்னெனின் சச்சிதானந் தமேயாம். பரப்பிரம்மம் சச்சிதானந்தமயமானது என்று அறிவிக்கப்படுகின்றது. பிரமஜோதியின் இயல்பு தெளிவருளாத ஒன்றாகும். அக்காட்சிநிலை யுற்றோர், அதிலே பரவசப்பட்டு இன்பபோதையில் ஆழ்ந்து மறைந்துபோகத்தான் முடிந்ததாம். இந்தப் பரநிலையில் வெளியான பரமஜோதி, சச்சிதானந்தமாய்த் தெளியப்பட்டதால், அந்த ஒளியை உளத்திற்கொண்டு, பற்றற வாழ்கின்றபோது, ஒருமையுற்று உள் நிலவும்போதெல்லாம் சொல்லரிய இன்பம் ஏற்பட்டு வந்தது. இன்பம் தோன்றியதும் நிலவியதும் அற்பகாலமேயாம். ஏனெனில், அவ்வகநிலை நீங்கிப் புறவாழ்வுக்கு வரும்போது அந்த இன்பானுபவமும் மறைந்து முடிவில், உடல் நீக்கத்தால் ஒழிந்தேபோய்விடுகின்றதாம். இப்படியான சச்சிதானந்த அனுபவம் என்றும் மறைவுற்றொழி யாது வயங்க அல்லது விளங்கிக்கொண்டிருக்கவே நம் அருட் சற்குரு வரம் தருகின்றார். வரம் அருளி வாழவும் வகை செய் கின்றார்.

(7)

1051. சிவரக சியமெலாந் தெரிவித் தெனக்கே

1052. நவநிலை காட்டிய ஞானசற் குருவே

(உ-வி) பரப்பிரம ரகசியம் மனிதனுக்கு சச்சிதானந்த உண்மையைத் தெரிவித்தது. அந்த இன்பானுபவம் ஏகதேசம் விளங்கி மறைவதாகவும் உணர்ந்தோம். அது நீடித்தற்கு சற்குரு வின் துணை வேண்டியுள்ளதை அறிந்தோம். அந்த சற்குருவாறாகத் தான் இந்த சிவ ரகசியம் தெரிவிக்கப்படுகின்றது.

முன் கண்ட சச்சிதானந்த ஜோதியை, நாம் அதுவென்ற பொய்ப் பாவனையாலே அடைந்துவிட முடியாது. அப்படி

பாவித்த வேதாந்தி அவ்வனுபவத்தில் விளங்காது, மருள் மயக்கோடு ஒழிந்தான். அந்த ஜோதியை இப்போது சச்சிதானந்த சிவமாய்க் காண்கின்றவன், அதன் அருளால்தான் அதுவாக முடியும் என்று அறிந்து அருள் அடையுமாறு பலவகையிலும் போற்றி வழிபட்டு வந்தான். அந்த வழிபாட்டில் ஆழ்ந்தவன் புறவுலக வாழ்க்கைப்பாட்டை ஏற்காது உள்ளொளியில் இன்ப உணர்வோடு ஆழ்ந்து அப்படியே அடங்கி இரண்டறக் கலந்து போனான். இதுவே சைவ பதியாம் சிவம் அருளிய முடிவு ஆம்.

மேற்படி சிவானந்த ரகசியத்தை நம் வள்ளலாருக்கு வெளிப்படுத்திய ஞானசற்குரு, அக ஞான சபையில் ஒளிர் அருட்பெருஞ் ஜோதிபதியே ஆவர். இந்த அருட்பெரும்பதி இவர்க்குக் கடவுட் ஜோதியின் நவநிலையுண்மையை, பிரணவமாகிய அருள்நிலை விளக்கத்தை எல்லாம் காட்டிக்கொடுக்கின்றார். இந்த ஞான குரு இவரை அந்தச் சச்சிதானந்த சிவத்தில் கலந்துபோகச் செய்துவிடவில்லை; மாறாக, அச் சச்சிதானந்த சிவத்தையே நிறை அருளின்ப வடிவொடு இவரிற் கலந்து என்றும் விளங்கச்செய்து விட்டுள்ளார். இதனால் இந்த ஞான சற்குருவின் உயர்வும் சிறப்பும் நன்கு விளங்குகின்றதாம்.

(8)

1053. சத்திய லனைத்துஞ் சித்தியன் முழுதும்
1054. அத்தகை தெரித்த அருட்சிவ குருவே

(உ-வி) இப்போது உண்மைக் குரு, அருட்சிவ குருவாகத் திகழ்கின்றார் இக்குரு, இங்கு, சத்தின் இயல்பையும், சித்தின் இயல்பையும் முழுமையாக, மிகத் தெளிவாக விளங்கச்செய்து அருள்கின்றாராம். அந்த அருட்குருவாலேதான் அந்த விளக்கத்தை நாமும் சிறிது கண்டுகொள்ள முடிகின்றது. அந்தச் சத்து, சித்து இயல்களை சற்று அருட்ஜோதியில் காண்பாம்.

சத்து என்பது அழிவற்று என்றென்றும் உள்ள இறை உண்மை நிலையாம். அது, அகண்டமாகப் பெருவெளி நிலை முற்றும் சற்றும் இடையீடின்றி நிரம்பியுள்ளதாம். இது அனாதி உண்மை நிலையாகும். இதிலிருந்தே யாவும் தோன்றுவதும், அடங்குவதுமாயுள்ளனவாம். ''சத்து'' என்ற சொல்லில் இந்த

உண்மைநிலை முற்றும் அடங்கி விரியும் தன்மை எல்லாம் கொண்டுள்ள கருத்தையும் காண்கின்றோம். சத்து=ச்+அ, த், த்+உ என விரிந்து, (ச்அத்=) ''சத்'' ஆகி தகராகாச வெளி முழுவதும் நிரம்பிய ஒளியைச் சுட்டுகின்றதாம். அப்படியுள்ள திலிருந்து தகரமெய்ப்பொருளே உகர ஐந்தியற் சக்தியால் பிர பஞ்சம் முழுவதுமாகி விளங்கும் நிலையையும் உணர்த்துகின்ற தாம். இதனால் சத்தே சித்தாக விரியலாகின்றதைக் காண் கின்றோம். சத்தாயுள்ள இறையொளியின் இயல்பு சித்து விளக்கக் காரணமாயும் உள்ளதாம்.

இனி, சித்து என்பதைத் தெளிவாம். இதனை இயற்கை விளக்கம் என்கின்றனர். வெற்று ஒளிமயமாய் இருந்தால், அதன் இயலும் செயலும், விளைவும், பயனும் வெளிப்படுமாறு இல்லையாம். அப்படி வெளியாதற்பொருட்டே அச் சத்துப் பொருள் ஐந்தியற்பிரபஞ்சம் அனைத்துமாகத் தோற்றியுள்ள தாம். இத் தோற்றி விளங்கும் நிலையே சித்து எனப்படுகின்ற தாம். இச்சித்தின் விளக்கம் முழுவதும் தெரிந்துகொள்ள வேண் டின் திருவருள் உண்மையைக் கொண்டுதான் அறியமுடியும். பிரபஞ்சம் முழுமையும் சித்தின் விளக்கமேயாம். தோற்றிய வற்றில் பொருளும், செயலும், அறிவும், அனுபவமும் முடிவில் அருளையே வெளிப்படுத்தியுமுள்ளதாம். ஆகையால் அருள் விளக்க அனுபவமே சித்தின் முடிவாக இருக்கின்றதாம். அருட் சித்தின் அனுபவம்தான் ஆனந்தம் அல்லது இன்பம். அந்த அருட்சித்து விளக்கப் பொருளே, அருட்சிவகுருவாகத் தோன்றி அருளின்ப வாழ்வைக் கூட்டிவைக்க உள்ளதாம்.

(9)

1055. அறிபவை யெல்லாம் அறிவித்தென் னுள்ளே
1056. பிறிவற விளங்கும் பெரியசற் குருவே

(உ-வி) சத்தாகிய குருதான், சத்குரு எனவும், சற்குரு வெனவும் விளங்குவது. பெரிய சற்குரு, சிறப்பும் பெருமையும், எவ்வுலகத்து எவ்வெவர்க்கும் உண்மைக்குருவாய் என்றென்றும் விளங்கிக்கொண்டுள்ள சச்சிதானந்தபரமே இந்தக் குருமகாசந் நிதானமாகப் போற்றிக்கொள்ளப்படுவதாம். இக்குரு நமது அறியாப் பருவத்தில் இருந்தே நமக்குத் தேவையான விளக்

கத்தை அப்போதப்போது தெரிவித்துத் தெளிவுபடுத்தி மேனிலைக்கண் ஏற்றிக்கொண்டு வருகின்றார். அனுபவநிலையே மேனிலையாம்.

பேரருட்பெருங்குரு ஒருவரே யாவருக்கும் உரியராக உள ளிருந்து விளங்கிக்கொண்டுள்ளார். இவர் பிறிவற விளங்கு கின்றதாகக் குறிக்கப்படுகின்றது. பிறிவற என்றதை, பிரிவு இல்லாதிருத்தல் என்று பொருளாக்கிக் கொள்ளக்கூடாது. ஏனெனில் உண்மையில் உள்ள கடவுள் ஒருவரே யாவுமாய் விளங்குகின்றதினால், அவரென்றும் குருவென்றும், நாமென்றும் வேறுவேறான நிலைகள் பிரித்தறிதற்கில்லை என்பது நிச்சயம். இதனால் நமது பெருங்குருநாதர், நமக்கு வேறாக இல்லாதும், நாமென்றும், அவரென்றும் இரண்டும் கூடி, உடனாய் இல்லா தும், இரண்டற்ற ஒரு பொருளே அவராய், நாமாய் உள்ளதை யுணர்த்தவே இந்தப் பிறிவற என்ற சொற்றொடர் பிரயோகப் பட்டுள்ளதாம். பிறிதாகிய வேறு ஒன்று இல்லாத நிலையைச் சுட்டுவதாய்க் கொள்ளல் வேண்டும் என்பது குறிப்பு.

(10)

1057. கேட்பவை எல்லாம் கேட்பித் தென்னுள்ளே
1058. வேட்கையின் விளங்கும் விமலசற் குருவே

(உ-வி) வேதாந்தம் ஓதியும் வேட்கை விட்டிலார்க்கு உண்மையான, மெய்ஞ்ஞான குரு கிடைப்பது அருமையாகும். உள்ளத்தில் தயவும், பரோபகாரச் செயல்புரிதல் விளங்காதும் சற்குருவைத் தேடிக்கொண்டு, சகமீது பலவிடத்தும், பலகாலும் அலைந்து அலைந்து சோருகின்றவர்கள் பலர். இவர்களுக்குக் குரு வாய் வாய்ப்பவர்களும் தம் உள்ளொளியில் நிலைத்து அதுவாக விளங்காத வேட்கையாளராகவே யிருக்கின்றார்கள்.

நம் உள்ளொளிர் குரு, விமல சற்குருவாவர். விமலம், நிமலம், அமலம் என்ற முச்சொற்களின் பொருள்: அருளால் விளங்கும் நிலை விமலமாம். இது அருட்குருவுக்காம் நிலை. நிமலம்—மலமிருந்து நீக்கப்பெற்ற நிலை—இது பக்குவ மனித நிலை. அமலம்—மலமென்பது ஒருபோதுமில்லாத பரம் பொருள் நிலை. கடவுள் அருள்ஒளியுருவோடு நம்மில் எழுந்

தருளும்போது அருட்குருவென விளங்குகின்றார். இந்தக் குரு, நம் பெருமானின் உள்ளத்தில் வேட்கையின் (அதாவது வேட்கை அல்லது இச்சை இல்லாது) விளங்குகின்றாராம். அயலான குருக்கள் பலரும் அவா ாசுடைய மலசகிதராவர், அவர்கள் வெளியிடுவனவெல்லாம் உண்மையாகாது. குரு அருள் ஒளி வடிவாய் இருத்தலின், அவரது விளக்கமும் சுத்த அருள்மய மாய்த்தான் இருப்பதாம். இந்த அருட்குரு உள்ளிருந்து அறிந் தும் அறியாத கேள்விகளைக் கேட்கச்செய்து, பிறரிடத்தில் கேளாமலே, அக் கேள்விகளுக்கு விடையை உள்ளத்தில்தானே தெளிவாய்த் தெரிந்துகொள்ளச்செய்கின்றார். ஓதாதுணரச் செய் ததும் இவ்வக நின்றொளிர் அருட்குருவே என்பதும் உண்மை யாம்.

(11)

1059. காண்பவை யெல்லாம் காட்டுவித் தெனக்கே
1060. மாண்பத மளித்து வயங்குசற் குருவே

(உ-வி) மாண்புடைய பெருநிலையில் சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கும்படி அருள் பாலித்துள்ளார், அகம்வளர் அருட்சற் குரு. இந்த உயர்நிலைக்கு ஏற்றி வைக்கும் முன்பு எவ்வளவோ காலம் நம்முடனிருந்து, மெய்யனுபவத்தின் பொருட்டுப் புறத்தும் அகத்தும் காணத்தக்கவைகளை எல்லாம் காலத்தே காட்டிக் காட்டித் தெளிவுசெய்து விட்டுள்ளார்; நேரடியாகக் காணாது சில வற்றை எவ்வளவுதான் சொன்னாலும், சிந்தித்தாலும் உள்ளபடி அறிந்துகொள்ள முடியாதாம். அப்படிப்பட்டதைக் காட்டித் தான் விளக்கம் செய்தல் வேண்டும். சிலவற்றைப் புறநிலைக் காட்சியால் கண்டாலும் உண்மை விளக்கத்தைத் தெரிந்து கொள்ள முடியாதாம். அப்படிப்பட்டதையும் மெய்யறிவுக் கண் ணாற் கண்டு கொள்ளச் செய்கின்றார் மெய்ஞ்ஞான குரு. இப்படி யாகக் கண்டு தெளியத்தக்கனவெல்லாம், சிறிது சிறிதாக புலக் கண்ணுக்குக் காட்டியும், மனக் கண்ணுக்குத் தோற்றுவித்தும், அருள்ஞானக் கண்ணிற்கு உணர்த்தியும் அனுபவமுறச் செய் கின்றார் நம் சற்குரு மணி. இவ்வனுபவத்தால் ஏற்படுகின்ற வாழ்வுதான் மிகச்சிறந்தது, உயர்பத நிலையாக உரைக்கப்படுவது. இப்பதவிக் கேற்றி வாழ்விக்கின்றார் நம் உண்மைக் குரு. உல கியற் பதவிகள் எவையும் இதற்குச் சிறிதும் ஈடாகா.

(12)

1061. செய்பவை யெல்லாஞ் செய்வித் தெனக்கே
1062. உய்பவை யளித்தெனுள் ஓங்குசற் குருவே

(உ-வி) உள்ளத்திலே எப்போதும் விளங்கிக்கொண்டே இருக்கும் சற்குரு மிக மேலான நிலைக்கு ஏற்றிக்கொண்டுள்ளார். செயலோடு திகழ்கின்றதை யுணர்த்தவே குருவை, ஓங்கு சற்குரு என்றார். இவர் ஒரு கணமும் ஓய்ந்திருப்பதே யில்லை. சதா, அருட்செயலால் நம்மை விழிப்போடும் செயலொடும் விளங்கச் செய்து செய்து நித்தியானந்த வாழ்வில் நிலைபெறச் செய்கின் றாராம் அந்த ஓங்கு சற்குரு.

நம் வள்ளலார் எப்பொழுதும் வீண்போது போக்குவதே இல்லை, பயனில்லாச் செயலில் ஈடுபட்டிருப்பதும் இல்லை, ஏதேனும் ஜீவ தயா செயலில்தான் இருப்பார். திருவருளே இவர்க்கு உதவி இங்ஙனம் கையறவில்லாது கருணைச் செயலொடு விளங்கச் செய்துள்ளது. இதுவே இவரை உய்யச் செய்துள் ளதாம். இதனால் இவரைக் காணவும் அருள் பெற்றுய்யவும் விழைவோர், ஒருமையும் தயவும் நீங்காது பணிமேற்கொண்டு வாழ்வதுதான் வழி. தயவுச்செயல் புரியாது வெற்று நினைப் பாலும், வேண்டுகையாலும், அழுகையாலும், தொழுகையாலும், இவரைக்கண்டடைய முடியாது. இவரே இன்று நம் உள்ளோங்கு சற்குருவாக இருந்து உய்விக்க உள்ளார் என அறிய வேண்டும்.

(13)

1063. உண்பவை எல்லாம் உண்ணுவித் தென்னுள்
1064. பண்பினில் விளங்கும் பரமசற் குருவே

(உ-வி) இங்கு சில அடிகளுக்கு வள்ளலாரின் நேர்முகக் கூற்றாக உரை விளக்கம் தரப்பெறுகின்றது.

''பண்படுத்தி நண்பளிக்கும் பரம சற்குருநாதர் எனது அகத் திலே உறைகிறார். அகத்திருந்தே எல்லாம் செய்விக்கின்றார். அவர் உண்பித்தாலன்றி என்னாலே எதுவும் உண்ணமுடியாது. இப் புற உடல் நிலைத்திருக்க, வாழ, உணவு அவசியமாகின்றது. ஆனால் அந்த உணவு நல்லதா கெட்டதா, தேவையா தேவை

யில்லாததா என்று எங்ஙனம் அறிவேன். அன்றியும், எந்தவித மான ஆகாரம், எந்த அளவு, எக்காலத்தில் ஏற்கவேண்டும் என்பன ஒன்றும் அறியேன். இச்சையால் ஒன்றைத் தேடித்தேடி அலையவும், பிறிதொன்றை வெறுப்பால் ஒதுக்கித் தள்ளவும் இசை யேன். உமது திருவுள்ளம் எப்படி, அப்படி ஆகட்டும். எந்நாள் அருளமுதை உண்பித்து, பிற உண்டியை ஏற்காதிருக்கச் செய்து ஆனந்த வாழ்வில் விளங்கவைப்பீரோ என எதிர்பார்த்துக் கொண்டுளேன்.''

தயாவாழ்வு வாழும் சன்மார்க்கி சுத்த சத்துவ உணவு மட்டும் கொள்ளவேண்டும். அதுவும் இச்சையின்றி நுகர்தல் வேண்டும். அப்போதுதான் அகத்தே அருளமுதம் பெருகப் பெருக, அதுவே உடலைக் காக்கும்; புற வுணவின் தேவை குறை கின்றதாம். அகஅமுதம் நிரம்பினால் புற உணவே தேவையில்லாது போம். அருள் அமுதால்தான் அழியாத வாழ்வு பெறமுடியும். அக அருணிலையைப் பெறாது, புற வுண்டியை நாவின் சுவைக் காகவும், உடலுக்கு வலிமை வழங்குவதாகவும் கருதி இச்சை யோடு உண்டு களித்திருந்தால், அக அருள் உண்மை சற்றும் விளங்காது; அருளமுதம் பற்றிய செய்தியொன்றும் அறியவும், அறிந்து அடைந்து ஆனந்தமாய் விளங்கிக் கொண்டிருக்கவும் வாழவுமாகாது. சுத்த ஆகாரத்தில் ஆரம்பித்து அருள்அமுதம் அடையப்பெறுதல் திருவுள்ளமாக இருக்க, புற உண்டியிலேயே பழகிக்கொண்டிருந்தால் அருள்வாழ்வு கிட்டாது. அதினும், அசுத்த புலையுணவைக் கொண்டு, புலன் வாழ்வில் ஆழ்ந்திருப் பார்க்குத் திருவருள் உண்மை இன்னதென்றே விளங்காது; அதனால் அவர்களுக்கு உய்வும் இல்லையாகும்.

(14)

1065. சாகாக் கல்வியின் றரமெல்லாங் கற்பித்


1066. தேகாக் கரப்பொரு ளீந்தசற் குருவே

(உ-வி) கல்வி என்றால் ஒருவனில் உள்விளங்கும் அருள் ஆற்றலைக் கல்வி வெளிப்படுத்திக் கொள்ளுவதேயாம். இதனால் ஒருவன் அறிவும், ஆற்றலும் செயல்திறனும் கொண்டு உலகிடை இன்பவாழ்வு பெறலாகும். கலைக்கூடங்களில் பயின்று பெற்ற கல்வித்திறனால் ஒருவன் உலகியல் வாழ்வில் பொருளும், புகழும்.


புற இன்பமும் நிறையப் பெற்று விளங்கக்கூடும். இது உண்மைக் கல்வியின் நோக்கமல்ல. ஒருவன் தன் அகமாகிய கடவுளான்ம உண்மையை யோர்ந்து கற்று வெளிப்படுத்திக்கொண்டு இறை இன்பமுற வேண்டுவது ஆன்றோர் விழைவு. ''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்'' என்பதால் அறியலாம், கல்வியின் பயன் கடவுளடி சார்தல் என்று. இது, அகக்கல்வி என்பர். புற உலகியற் கல்வியைப் படிப்பு என்று சொல்லலாம். இது புறத்திருந்து விஷய ஞானக்கருத்துக் களை உள்ளத்தில் மேலும் மேலும் படியச் செய்து சேமித்துக் கொண்டு, அதனை வாழ்வில் பயன்படுத்திக்கொள்ளல் தான் உலகக் கல்வியின் பயன்; பொருளால் புலனின்பம் விளையும்.

அருளால் அகக்கல்வியின் பயனாகிய கடவளான்ம நிலையுற்று இருப்பது, அழியாத ஆன்மவடிவில் ஆழ்ந்துவிடுவது முன்னோர் கண்ட சாகாக்கல்வியின் முடிவு. இதனையே அகஞானியர் பலரும் விரும்பிக்கொண்டனர். ஆனால் அதில் கடவுள் ஐக்கியத்தில் மறைவு ஏற்பட்டு மனிதனுக்குத் தனிவாழ்வு இல்லாமல் போய் விடுகின்றது. ஆகையால் இந்த ஆன்மநிலை வழங்கும் சாகாக் கல்வியை மதித்துக்கொள்ளான் சன்மார்க்கி. இம் மார்க்கி, அருட்குருவாலே, அருட்ஜோதிபதியோடு அகமிருந்தே அனகமாக வாழும் முறையைக் கற்றுக் கொடுக்கப்படுகின்றான். ஆதலால் இவன் கற்கின்ற சாகாக்கல்வி, அழியா அகவடிவையே அனக நிறைவு படுத்தி, புறத்தேகத்தை அனக வடிவாக்கி நிலைத்து விளங்கச் செய்து விடுகின்றதாம். இதுவே உண்மையான சாகாக் கல்வியாக இருக்கின்றது.

உலகியற் கல்வியால், எவ்வளவு காலம், எந்த வகையால் முயற்சித்தும் பெற்றுக்கொள்ளற்கரியது இச் சாகாக்கல்வியின் அனுபவம். இஃது யோக ஞான சித்திகளாலும். காயகற்ப முறை களாலும், தந்திர மந்திர சக்திகளாலும் தேக வாழ்வை நீடிக்கச் செய்துகொள்ளுவது அல்லவாம். ஏகாக்கரமாகிய ஓமென்னும் பிரணவப் பொருளாம் அருளைக்கொண்டு கடவுள்மயமாக, கழிவி லாது என்றென்றும் வாழ்தலாகும். இந்த ஏகா (=நீங்காத) கரப் பொருளை (அனுபவப் பொருளை) யீந்து அதன் ஆற்றலையும், உண்மையையும் எல்லாம் கற்பித்து வாழ்விக்கின்றார் நம் அருட் குருநாதர்.



சித்திவளாகத் திருமாளிகையில் வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட அறையின் ஜன்னல்



சித்திவளாகத் திருமாளிகை வாசலுக்கு எதிரில் இருக்கும்
ஜோதித் தம்பம்

(15)

1067. சத்திய மாஞ்சிவ சித்திக ளனைத்தையும்

1068. மெய்த்தகை யளித்தெனுள் விளங்குசற் குருவே

(உ-வி) நமது அருட்பெருஞ் சற்குரு மெய்யகத்திருந்தே நமக்கு மேலான சிவசித்திகள் அனைத்தையும் வழங்குகின்றார். சிவசித்திகள் ஆன்மாவின் கண்ணின்று வெளிப்படுகின்ற கடவுள் அருளின் அற்புத ஆற்றலால் விளையும் சித்திகளாம். இச்சத்தி களுக்கு ஆயிரம் ஆயிரம் பங்கு கீழ் தரத்திலுள்ளவைகளே பிற யோகசித்தி, ஞானசித்தி, தந்திரசித்தி, மந்திரசித்தி, மகேந்திர சால சித்தி, எச்சணிசித்தி முதலியவைகள் யாவும். இவையாவும் சத்தியமாயும், நித்தியமாயும், சதானந்தத்தோடும் விளங்குவன வல்ல. சுத்த சிவானுபவப் பெருஞ்சித்தியிலே எல்லா உயர் சித்திகளும் அடங்கிவிடுகின்றன. அந்தச் சுத்த சிவ சித்திகளை எல்லாம் வழங்கி, உடலில் நிலை பெற்று விளங்கச்செய்து விடுகின்றார் அருட் சற்குரு.

வள்ளலார் பெற்றவை அருட்சிவபதியின் அருள் இன்ப வாழ் வுடன் கூடிய உயர்ந்த சித்திகளாம். இவர் சித்திகளைப் பெற்றது தன்னை எல்லோரும் மதித்துப் போற்றவேண்டும் என்பதற்காக அல்ல. மன்பதை முழுவதையும் தயாவொழுக்க நெறிக்குத் திருப்பி, உலகில் நல்லின்ப வாழ்வே எங்கும் தழைக்கச் செய்தற் பொருட்டுத் தன்னைக் காட்டிக்கொள்ளாது புரிகின்ற அற்புதச் செயல், ஆண்டவரின் அருட்பெருஞ்செயலாகவே விளங்குவதாம். திருவருள் தான் கடவுட் பெருஞ்சக்தி, அதுவே எல்லாம் வல்ல சித்தியாக, வள்ளல் வடிவிற் பொருந்தித் திகழ்கின்றது. அவரே அருட் சற்குருவாய் நம்மில் விளங்குகின்றார்.

(16)

1069. எல்லா நிலைகளு மேற்றிச் சித்தெலாம்

1070. வல்லா னெனவெனை வைத்தசற் குருவே

(உ-வி) சித்தெலாம் வல்ல அருட்பெருஞ்ஜோதிபதி ஒருவரே, யாவுமாகியுள்ளதை, எவருமாய்த் திகழ்கின்றதைத் திருவருளாலே உணர்த்தப் பெறுகின்றோம். இக்கடவுள்

உண்மையை வெளிப்படுத்தவே, தன் அருளையும் ஒளியையும் இந்த உலகுயிர்ப் பொருள்களில் உள்ளும் புறமும் வைத்துச் சித்செய லாக யாவையும் விளங்கச் செய்து வந்தார். இப்பொழுது அச் செயலின் ஓர் உச்ச கட்டமாக, நம் வள்ளற்பெருமான் திருவருட் பிரகாச வடிவொடு, நித்தியமாய் விளங்கும் ஞானசித்தராய் ஆக்கப்பெற்றுள்ளார்.

ஆன்மாவுக்கு அருட் பேரனுபவம் உண்டாக, சடமூட நிலை நின்று உயர்நிலைக்கு ஏற்றிப் பின் ஒவ்வொரு படியாக அறிவு விளக் கம் சேர எல்லா வகைப் பிறப்பு வடிவங்களில் பலகாலம் வாழ்ந்து வாழ்ந்து வர விடுத்து, இம் மனிதனில் மெய்யறிவு வழங்கி அது கொண்டு, அருட்பெருங்கடவுள் உண்மையைக் கண்டடையச் செய்து அம் மேனிலையில், தான் வேறு அது வேறு என்னாத ஒரு வடிவிற் கண்டு விளங்கச்செய்ததுதான் உயர்வற உயர்ந்த பெரு நிலையாகும். இந்நிலையில் அருட்பெருஞ்சோதிபதியே சற்குரு வாகி வள்ளல் உள்ளத்திருந்து கொண்டு சர்வ சித்தியும் புரிகின் றவராய்த் திகழ்கின்றார். இப்போது உலகம் அருட்பிரகாச வள்ளலைத்தான் அறிந்துள்ளது. உண்மையில்; நித்தியமாய் உள்ள அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே, இவருள் சற்குருவென விளங்கி சித்தெலாம் புரியச் செய்கின்றதாம். ஆன்ம சிற்றணு வாய் இருக்கின்றது கடவுள் சிற்றுரு; அதிலிருந்து வெளிப்பட் டுள்ள, அருள் ஒளிதான் சற்குரு; இக்குருவோடு பிரிவற இருந்து, உடலில் அருள் ஒளியால் நிறைந்து அனகமாய் விளங்கிக்கொண் டுள்ளது திருவருட்பிரகாச வள்ளல் வடிவம். இந்த வள்ளலைக் குருவாய்க் கொண்டு விளங்குகின்றோம் நாம் ஒவ்வொருவரும். இவரால் நமக்குப் பேரின்பவாழ்வு சித்திப்பது திருவுளத்தின் விழைவு ஆம்.

208. உயிர்த் தாய்

(1)

1071. சீருற வருளாந் தேசுற வழியாப்
1072. பேருற வென்னைப் பெற்றநற் றாயே

(உ-வி) உயிர்த்தாய் என்பது, நமது உண்மை வடிவாகிய ஆன்மாவுக்குரிய தாய், என்று பொருளாம். இந்த உலகில்,

உண்மையை அறியாத நிலையில் உழன்றுகொண்டிருக்கின்ற நாம், தேகத்தையே நம் மெய்யுருவெனக் கருதிக்கொண்டு, அவ்வுணர்வோடுதான் தேகபோக வாழ்வில் பிழைத்துக்கொண்டும் இருக்கின்றோம். இதனால் இங்கு நம்மைப் புற வடிவினராய் எண்ணிக் கொண்டுள்ள நமக்குத் தாய் யார் என்றால், புறவுடலை ஈன்றவளையே குறிக்கின்றோம். இந்த அன்னையை ''உடற் றாய்'' என உணர வேண்டும். அருளியற் பெருவாழ்வு பெற்று விளங்கும் நாம், அதற்குரிய முறையில் நம் ஆன்ம இயலைப் பற்றியே கருதிட வேண்டுவது நம் கடமையாகும். ஆகவே, இங்கு உயிர்த்தாய் என்ற தலைப்பைக் கொண்டு நம் அக வரலாற்றை ஆய்கின்றோம் கீழுறும் அடிகளில்.

பெற்றவளை நற்றாய் என்பது உலகியல் மரபு. பெற்ற தாய் என்றாலும், நற்றாய் என்றாலும் ஈன்றவளையே குறிக்கும். இங்கு இரு சொல்லையும் கையாண்டிருக்கும் கருத்து யாதெனின், பெற்றவள் ஒருநல்ல தாய் என்பதை யுணர்த்துவது குறித்தே. உலகில் பெற்றவள் நல்ல ஒரு தாயாயில்லாது தீயவளாய் இருத்தலும் கூடும். ஆனால் இங்கு பேசப்படுகின்ற நற்றாய், அக உண்மை ஆன்மவடிவை ஈன்ற திருவருளே என்பது குறித்து, அந்த அருளின் பெருநலப் பெருமையை யுணர்த்தவே, இவ்வான்மாவை யீன்ற அருளாம் அன்னையை நற்றாய், பெற்ற நற்றாய் என்றுள்ளார். அகண்டஜோதியாய் விளங்கும் அன்னை, அணு வடிவ ஆன்மாக் களைப் பெற்றுள்ளாளாம். எதற்காக இந்த ஆன்மப் பிள்ளைகளைப் பெற்றுள்ளாளெனில், சீருற, அருளாம் தேசுற, அழியாப் பேர் உற எனப்படுகிறது. அகண்டத்தில் ஒரு சிறு கூறு ஆன்ம சிற்றுருவாம். பெரு வடிவிலிருந்து இச்சிறு வடிவம் பிள்ளப் பட்டது. (துண்டித்துக்கொள்ளப்பட்டது) என்ற கருத்தில்தான் பிள்ளை என ஆன்மா குறிக்கப்படுகின்றதாம். இவ் ஆன்மாவுக்கு முடிவில் ஆணை செய்யப்பட்டுள்ள குறிக்கோள், திரிதேகசித்தி பெற்று அழியாப் பேரின்போடு திகழுகின்ற ஆனந்த வாழ்வாம். இதுவே ஈண்டு, சீருற, அருளாம் தேசுற, அழியாப் பேருற எனக் கூறப்பட்டுள்ளதாம். இதில், சீர்—ஞான தேகத்தையும், அருளாம் தேசு—பிரணவ தேகத்தையும், அழியாப்பேர்—ஒரு பெயருடன் அழியாது விளங்கும் சுத்த வடிவையும் சுட்டு வனவாம்.

(2)

1073. பொருந்திய வருட்பெரும் போகமே யுறுகெனப்
1074. பெருந்தய வாலெனைப் பெற்றநற் றாயே

(உ-வி) திருவருளாகிய அன்னை நன்மையே புரிபவள். அவளுடைய எச்செயலும் தன் சேய்க்கு நல்ல இன்பத்தையே என்றும் கூட்டிவைப்பதாம். உலகியல் தாய்க்கு, உண்மை தெரியாமல், ஆவல் மிகுதியாலும், மறதியாலும், பராக்காலும், சோம்பலாலும், துயிலாலும், சலிப்பாலும், சினத்தாலும், பயத்தாலும் ஏதேதோ தீங்கு விளையும் செயல்புரிந்து விடுவதால், குழவிக்குத் துன்பமும் கேடும் உண்டாகின்றனவாம். அருளன்னையால் ஆன்மக் குழவிக்கு எவ்விதத் துன்பமும், கேடும், அழிவும் உண்டாகின்றதே யில்லை. ஒவ்வொரு பிறவி வாழ்விலும் சிறிது சிறிது அக விளக்க முண்டாகி இன்பம் கொஞ்சம் கொஞ்சமாக விளைந்து வருகின்றது.

தெய்வத் தாயின் பெருந்தயவு ஆன்மச்சேயை யீன்று, அருளின்பக் குறிக்கோளை நோக்கிச் செலுத்திக் கொண்டேயிருக்கின்றது. நமது தயா பெருந்தாய் நம்மையும் தன்வண்ணத் தயவுச் சேயாகவே ஈன்றுள்ளாள். தேகப் பற்றுநிலை கடந்து, நம் இயல் ஆன்ம வடிவத்தைக் கண்டு கொண்டபோது, அவ்வான்ம இயற்கையான அருள் வாழ்வை மேற்கொள்ளுகின்றோம். அந்த அருளாலே யுறுகின்ற பேரின்பம், தயவுச் செயலாலே மலர்வதாயுள்ளது. அருளின்பப் பெரும் போகமே பெறுக என்று ஆசித்து அருளியுள்ளாள் அவ்வன்னை. இவ்வருளின்பில் பற்று கொண்டபோது, புறச் சிறு இன்பங்களில் ஆவலுண்டாகுமா? பொறி வாயில் சென்று துய்க்கத்தான் மனம் செல்லுமா? ஒருகாலும் இசையாது. ஆகவே அருளின்ப வாழ்வில் ஓங்குவோமாக.

(3)

1075. ஆன்றசன் மார்க்கம் அணிபெற வெனைத்தான்
1076. ஈன்றமு தளித்த இனியநற் றாயே

(உ-வி) ''பலவாகிய் உலகியல் நெறிகளை இதுகாறும், பிறர் வாயிலாகத் தோற்றுவித்தாய். அந்த அரு நெறியாளர்களை எல்லாம் நீயே இவ்வுலகில் ஈன்றளித்தாய். அவர்களும் நின்

அருள்நியதிப்படி வாழ்ந்து தத்தமக்கு வழங்கப் பெற்ற அகவிளக்கத்திற்குத்தக, புற நெறிகள் பலவற்றைச் செய்து வழங்கி விட்டுச் சென்றனர். அவர்களும், அவர்கள் அளித்த நெறிமுறைகளும், அன்னையே நின் 'அருளமுத சக்தி கொண்டு விளங்காததினால் நிலைக்கவில்லையே! ஆனால் இன்று, நன்கு பொருத்தமான நிலைத்திலங்கும் சுத்த சன்மார்க்கத்தைத் தோற்றுவித்து, என்றென்றும் நிலவற்கென்றே அடியேனை யீன்றுள்ளாய். எனை யீன்ற அருளானந்தியே, எனக்கு நின் அருளமுதை நிறையவே அளித்து, அடியேனையும், அருட்பெரு நெறியையும் வளர்க்கின்றாய். வாழ்க நினது பேரருட்பெருஞ்ஜோதி'' என்று வாழ்த்துகின்றார் அருட்பிரகாச அடிகளார்.

முன்னர், சைவம் தழைக்கத், திருநெறியத் தமிழ் ஓங்க தேவாரத் திருமுறை வழங்கத் திருஞான சம்பந்தப் பிள்ளையை ஈன்று ஞானப்பால் ஊட்டி வாழ்வித்தாய். அவர் மூலம் சைவப் பக்தி வளர்ந்தது எனினும், அது ஆன்ற பெருநெறியாக உலகெங்கும் தழைத்தோங்கவில்லையே! அவரை ஜோதியிற் கொண்டாய், அவர் மறைந்தார். அவரது நெறி மறையாதிருக்கின்றது. இதுபோல் எத்தனையோ தோன்றி மறைந்து போயின. இன்றோ அழியா இன்ப வாழ்வருள அருட்ஜோதி வள்ளலை யீன்று, சுத்த சன்மார்க்கத்தையும் தோற்றுவித்துள்ளாய். இனி வள்ளலும் அவர் தம் அருட்பெருஞ்ஜோதி நெறியும் உலகுக்கெல்லாம் பொதுச் சொத்தாக விளங்கி எல்லோரையும் இனிது வாழ்விக்கும். இது அருட்பெருஞ்ஜோதி அன்னையின் அருள் ஆணை.

(4)

1077. பசித்திடு தோறுமென் பாலணைந் தருளால்
1078. வசித்தமு தருள்புரி வாய்மைநற் றாயே

(உ-வி) ஜீவர்கட்குப் பசியே முக்கிய காரணமாய் இருந்து, அது தணிக்கப்படற்கு ஒவ்வொரு உயிரும் உணவை நாடவேண்டியுள்ளது. அப்படி உண்டியை நாடச்செய்து, ஏற்பித்து வளர்ப்பதும், மேற்பிறவிகளிற் கூட்டிவைப்பதும் திருவருள் நியதியாக இருக்கின்றன. பக்குவ ஜீவனிடத்து நமது அருளன்னை தயவோடுற்று பசித்திடும்தோறும், பசித்திடும்தோறும், அருள் அமுதை வழங்கிக் கொண்டுள்ளார்.

திருவருட்பிரகாச ஆன்மாவுக்கு அருள் அன்னையின் அரவணைப்பு எவ்வளவு நன்மையைப் புரிந்திருக்கின்றது என்பதை அவரது வாழ்விற் பற்பல நிகழ்ச்சிகளைக் கொண்டு நன்கு காண்கின்றோம். இவரது பசியைப் போக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் எந்த வேளையிலும், எந்த இடத்திலும், எந்த உருவொடும் வந்து உதவியுள்ளதை அகச்சான்றுகளாலே நன்கு அறிகின்றோம், இவருடைய உள்ளத்துணர்வில் அருள் உணர்வு வடிவாய், அருவுருவாய் இருக்கும் அன்னை, சமயத்தில், பசித் திடும் தோறும், புறத்தில் ஏதோ ஒரு உருவாய் வந்து பசி ஆற்றிச் செல்கின்றது. புறத்துற்ற வடிவம் சென்று மறைந்து விட்டதாகத் தோன்றினும், உண்மையில் அது அருள்ஒளி உருவாகி அகத்தே சார்ந்து அருளால் வசிக்கின்றதாம். அப்படி விளங்கும் அன்னையை வாய்மை நற்றாய் (சத்திய வாக்கீசுவரி) என்கின்றார். அவருடைய அருள்வாக்கே அமுதமாய் இருந்து அகப்பசியையும் நீக்கி ஆனந்தானுபவத்தை வழங்குகின்றதாம். இந்த இடத்தில் அனுபவ மாலைப் பாடல் ஒன்றை நினைவுபடுத்திக் கொள் ளலாம்.

"நான்பசித்த போதெல்லாந் தான்பசித் தாராகி
நல்லதிரு வமுதளித்தே யல்லல்பசி தவிர்த்தே
ஊன்பதித்த என்னுடைய உளத்தேதம் முடைய
உபயபதம் பதித்தருளி அபயமெனக் களித்தார்
வான்பதிக்கும் கிடைப்பரியார் சிற்சபையில் நடிக்கும்
மணவாளர் எனைப்புணர்ந்த புறப்புணர்ச்சித் தருணம்
தான்பசித்த பொன்வடிவம் தனையடைந்து களித்தேன்
சாற்றுமகப் புணர்ச்சியினாம் ஏற்றமுரைப் பதுவே."

என்றது போன்ற இன்னும் எத்தனையோ பாக்களின் மூலம் அருட்ஜோதியின் ஆதரவு இவர்க்கு எப்படி எல்லாம் விளங் கினது என்பதை அறிகின்றோம்.

(5)

1079. தளர்ந்ததோ றடியேன் சார்பணைந் தென்னை
1080. உளந்தெளி வித்த ஒருமைநற் றாயே

(உ-வி) பசியால் வரும் உடற்சோர்வை உணவால் போக்கிக் கொண்டு விடலாம். ஆனால் உள்ளத் துண்டாகின்ற மனச்

சோர்வை நீக்கிட அருள் உணர்வுதான் அருமருந்தாய் இருக்கின்ற தாம். நமது அருள் அன்னை ஒருமை நற்றாயாக உண்மை விளங்க உரைக்கப்படுகின்றார்; வெற்று அணிந்துரையாகக் கொள்ளப் படாது. ஒருமை என்றால், ஒன்றாய் இருக்கின்ற இயல்பு, ஒப்பற்ற உயர்சிறப்புத் தன்மை ஆம். ஒன்றான அருட்பெருஞ்ஜோதியே இந்த ஒருமைத் தாயாக இருக்கின்றதாம். அருள்ஒளி பதி ஒன்றே ஒன்றுதான் இருக்கின்றது. ஆனால், அந்த ஒன்றோ, ஆன்மா ஒவ்வொன்றிலும் பரிபூரணமாகவே விளங்கி, அவ்வான் மாவுக்கு உள்ளும் புறமும் உதவிநின்று தளர்வும் சோகமும் போக்கி தெளிவும் விளக்கமும்கொண்டு வாழச் செய்கின்றதாம். இவ்வருள் அன்னையைப் போல வேறு ஒருவரை எவ்வுலகத்தும், எக்காலத்தும் காணமுடியாதாம். இவ்வன்னை அருள் உடையார் உள்ளத்து நிலைத்து இருந்துகொண்டு, மன நிறைவு உண்டு பண்ணி மகிழ்ச்சியை வழங்கிடுவதோடு, புறத்தேயும். தன்னரு ளையே, வேண்டத்தக்க பொருள்களாயும், மனிதர்களாயும், மற்ற சூழ்நிலைகளாயும் வருவித்துக் கொடுத்து அருட்செயல்புரிய உதவுகின்றார். இந்த அருட்செயலால்தான் மெய்யின்பம் வருவது.

(6)

1081. அருளமு தேமுத லைவகை யமுதமும்

1082. தெருளுற வெனக்கருள் செல்வநற் றாயே

(உ-வி) உலகில் அமுதம் எனப் பலவற்றைக் கூறுகின் றனர். அவற்றால், தேகேந்திரியங்களுக்கும், கருவி கரணங் களுக்கும், விளக்கமும், தெளிவும், வளமும், வாழ்வும் உண்டாவன வாம். மழைதரு நீரும், மருத்துவப்பொருள்களும், சுவையுடை யுண்டிகளும், மற்றும் சில பொருள்களும், அக அனுபவத்தில் கிடைக்கப்பெறும் சத்துக்களும், ஆற்றல்களும், தெளிநிலைகளும் அமுதமாகக் குறிக்கப்படும். இவற்றிற்கெல்லாம்மேலாகத் திருவரு ளால் அடையப்பெறுகின்ற அகஅனுபவ சச்சிதானந்தப்பொருளே அருளமுதமாக, பெருவாழ்வருளுவதாக இருக்கின்றதாம்.

அருள் அமுதே முதல் தன்மையான சிறந்த அமுதமாகும். பிற அமுதங்கள் அண்டத்தும் பிண்டத்தும் பலவாக உள்ளன

வாம். சிறந்த யோக சக்தியால் ஆன்மநிலை நின்று பொங்கி எழும் அமுதம், உடலை, உயிரை, உள்ளத்தை, தெளிவுறத் திகழச் செய்கின்றனவாம். இப்பிண்ட தேகத்தின் அண்டமாகிய சிரோபாகத்தில் நாவின் நுனி, நடு, அடி, முடி ஆகிய நான்கிடங் களிலும், அந்நாவின் மேலிடமாகிய தலைநடு ஆன்மபீடத்தும் அமுதம் விளைந்து நலம் தர உள்ளதாம். பசுவினிடத்துக் கிடைக் கின்ற பஞ்சகவ்யத்தும் அமுதசக்தி யுண்டாம். கனிவர்க்கம் தேன் முதலான சுவைப் பொருட்களால் ஆக்கப்படுவதைப் பஞ்சாமிர்தம் என்று உலகியலார் உண்டு களித்திருக்கின்றனர். தெருள் அளிக்கும் அருளமுதுக்கு பிற எந்த அமுதமும் நிகராகா.

ஆன்மாவாகிய ஓங்கார கலசத்துள்ளிருக்கும் அருள் அமுது என்னும் அருட்ஜோதி ஒன்றே மிகச் சிறப்புற்றதாகும். இந்த அருளமுதம், அன்னை அருட்சக்தியால்தான், அருட்செல்வனான ஆன்மாவுக்கு அருளப்படுகின்றது. பிறர் இதனைக் கனவிலும் அறியார், எந்தவிதத்தும் அடையார். நம் வள்ளற்பெருமான் அருட்செல்வர் ஆதலின், அன்னையின் அருள்அமுதம் நிரம்பப் பெற்றார். அதற்குமுன்பே யோகியர் விழையும் பஞ்சநல்லமுதும் பெற்று மகிழ்ந்தார்.

(7)

1083. இயலமு தேமுத லெழுவகை யமுதமும்
1084. உயலுற வெனக்கரு ளுரியநற் றாயே

(உ-வி) ஆன்மாவே இயற்கை உண்மை வடிவாக இருக் கின்றது. அதற்குள் கடவுள் அருள் நிறைவுற்றிருக்கின்றது. ஆன்மாவுக்குப் புறத்தே உயிரும், உடம்பும் திகழ்கின்றன. ஐம்பூத தேகநிலை முதலாகக் கொண்டு எண்ணும்போது, தேகம்—1, உயிர்—2, அறிவு—3, ஆன்மாவும் அருட்பதியும்—4 ஆக வுள்ளனவாம். இந்நான்கின்கண்ணும் அமுதம் ஓர் ஒரு வகை யில் தோன்றி விளக்கம் தருகின்றன. முதல்நிலையான பூத தேக வடிவம், ஐந்தின் கூறாகப் புறத்துணை கொண்டு விளங்குகின்றது. இவ் வடிவிற்கு ஐவகை அமுதம் வழங்கி அருட்பக்குவமுறச் செய் கின்றது அன்னையின் அருளேயாம். இவ்வுண்மை குறிக்கத்தான் ஐவகையமுதம் என முன்னுற்ற அடியில் வழங்கப்பட்டன. அடுத்து இங்கு எழுவகையமுதம் எனப்படுகின்றது.

இரண்டவதாகிய உயிர்நிலை சப்த தாது வடிவுக்குள்ளீடாய், ஆறாதார நிராதாரத்திருந்து உயிர்நிலையை இயக்கி வருவது. இது ஏழ்நிலை கொண்டிலங்குவது. இந்த எழுநிலைகளில் விளையும் அமுதம் பலவாகிய அற்புத சித்திகளைத் தரும். அழியா ஆன்ம வடிவிலிருந்து எழுகின்ற அமுதம் உய்வளிப்பதாம். இந்த அமுதம் அருட்பிள்ளைக்குத்தான் உரிமையோடு அருள் அன்னை வழங்கு கின்றாள்.

(8)

1085. நண்புறு மெண்வகை நவவகை யமுதமும்
1086. பண்புற வெனக்கருள் பண்புடைத் தாயே

(உ-வி) முன்பு, தேகத்தினிடத்துண்டாம் பூதப்பொருள் விளக்க அமுதசக்தி ஐந்தெனவும், ஏழ்நிலையுயிர்க்கின்பு செய்யும் உயிர் விளக்க அமுதம், எழுவகைத்தெனவும் குறிக்கப்பட்டன. இங்கு அவ்வுடலுறு உயிருக்குள் உணர் அறிவு விளங்குவதால், அவ்வறிவு விளக்கம் செய்யும் அமுதம், ஆன்ம ஞானத்தால் விளை வதாம். அவ்வமுதம் எண்வகை எனப்படுவது. அது அட்டயோக சித்திகளை வழங்கும் தன்மையதாம். இந்த ஆன்மாவுக்குள்தான் அருட்பதியுண்மை விளங்குவது. அது நவநிலை சித்தியைத் தருவதாம். அருள்தான் பிரணவத்தின் பொருளாக இருக்கின்றது. இந்த அருளமுதம் சித்திக்கவேண்டின் அறிவும் அன்பும் இணைந்து செயல்படவேண்டும். உண்மையான அன்பறிவால் நட்புரிமை உண்டாகிட அன்புச்செயலொடு வாழலாகும். இந்த அன்புடைய வாழ்வுமுறையே நற்பண்பு எனப்படும். அருட்பேரன்னை இந்த அருட்பண்பு உடையவள். தன் பிள்ளையையும் அந்த அருட் பண்புடன் பயிற்றி, ஆன்மநிலையினும் அதன் கடவுள்நிலையினும் விளையும் அருட்சக்தியின் எண்வகை அமுதும், நவவகை யமுதும் புகட்டி நாளும் இன்புடன் வாழ வைக்கின்றாள் அருள் நற்றாய்.

(9)

1087. மற்றுள வமுத வகையெலா மெனக்கே
1088. உற்றுண வளித்தரு ளோங்குநற் றாயே

(உ-வி) முன்கூறப்பட்ட அமுத வகைகளே அல்லாது, இன்னும் பலவாகிய அமுதங்கள், இம்மகா பிரபஞ்சத்தின் பொருள்களிலும், சக்திகளிலும், இயக்கங்களிலும், நிலைகளிலும், பொதிந்திருந்து வெளிப்பட்டு நீடித்தோங்கச் செய்கின்றனவாம். இது, புறநிலை யனுபவம்; இதற்குமேல் அகநிலையின்கண் விளைவுகொண்டு நிறைந்து வழியும் அருள் ஒளியாகிய அமுதம் உள்ளது. இதனை யுண்டால்தான், அருட்பெருஞ்சித்தியொடு என்றும் தழைத்தோங்க முடியும். அப்படி விளங்கச்செய்தற் பொருட்டே நம் அருள் நற்றாய் இந்த அருட்பிரகாசனாம் அருட் செல்வன்பால் உற்று உ(ண்)ண அருளியுள்ளாளாம்.

எல்லா அமுதங்களையும், அருட்பேரன்னையே நேரடியாக வந்து ஊட்டியதோடு உள்ளும்புறமும் அருளால் உற்று நின்று அருட்சித்திகள் விளங்கி வாழும்படி பேருதவி புரிந்துகொண்டுள் ளாளாம். இதனால், இவருடைய வாழ்வு என்றும் விளங்கிக் கொண்டேயிருப்பதல்லாமல், இவருக்கும் இவரைச் சார்ந்து கொண்ட எல்லோருக்கும் அழியா இன்ப வாழ்வு சித்திக் கின்றதாம்.

(10)

1089. கலக்கமு மச்சமுங் கடிந்தென துளத்தே
1090. அலக்கணுந் தவிர்த்தரு ளன்புடைத் தாயே

(உ-வி) நமது உழுவல் அன்னை, ஏழேழு பிறப்பும் இடை யறாது உடனிருந்து உதவிக்கொண்டுள்ள அன்புடைய அன்னை, தனது உள்ளத்திருந்து கொஞ்சமும் கவலைப்படாமலும், கலக்க மும் பயமும் கொள்ளாமலும், அப்படி அவை நேர்ந்தாலும் உட னுக்குடன் விரட்டியடித்து அமைதியும், இன்பமும் கொள்ளச் செய்துவிடுகின்றாளாம்; இது வள்ளல் அனுபவம்.

இவ் அகவல் அடிகளில் பொதுவாகப் போற்றி செய்கின றதையே எங்கணும் காண்கின்றோம். சிற்சில இடங்களில் வேண்டுகையாகவும் விளக்கங்களாகவும் அமையும். சில இடங் களில் வேண்டுகையும் வேண்டிப் பெற்று நன்றி கூறுமுகத்தான் போற்றியுள்ளதாயும் காணப்படுகின்றன. அப்படித்தான் ஈண்டு வேண்டிக்கொள்ளலும், வேண்டினதைப் பெற்று நன்றி பாராட் டலுமாக அமைந்துள்ளதைக் காண்கின்றோம்.

அருள் அன்னையை இப்படி வேண்டுகிறார்: அன்புடைத் தாயே, கலக்கமும் அச்சமும் கடிந்து, எனது உளத்தே அலக் கணும் (துன்பமும்) தவிர்த்தருள் என்பதுதான் வேண்டுத லாகும்.

கலக்கமும் அச்சமும் கடந்து எனது உளத்தே அலக்கணும் தவிர்த்து, அருள் அன்புடைத் தாயே, என்பது போற்றுதலாகும்.

இவர் தமது உள்ளத்தில், அருள் ஒளிக்கு நித்தியமாய்க் குடியிருக்க இடம் கொடுத்துவிட்ட பின், கவலைக்கும் பயத்திற் கும் இடமேது? துன்பம்தான் எப்படி உண்டாகும்?

(11)

1091. துய்ப்பினி லனைத்துஞ் சுகம்பெற வளித்தெனக்

1092. கெய்ப்பெலாந் தவிர்த்த இன்புடைத் தாயே

(உ-வி) புறவுலக வாழ்வில் துய்க்கின்ற அல்லது அனுபவிக் கின்ற புலன் இன்பங்கள் எல்லாம் நிலையற்றனவேயாம். ஆனால் இந்த உலக வாழ்வு அகமிருந்து அனகமாய் புலன்வழி வெளி யுறும்போது, துய்க்கின்ற யாவும் சுகமாக விளங்குமாம். எப்படி எனில், ஒருவன் நல்ல உணவு கிடைக்கப் பெற்றுச் சுவைத்து உண்டு களித்திருக்கின்றான் என்றால், அது துய்க்கப்பட்ட பொறி புலன் இன்பம், நிலையற்றுக் கெடுவதேயாம். மற்ற ஒருவன், அகமிருந்து அனகவாழ்வு வாழ்கின்றவன், அவன் தான் பெற்ற நல்லுணவைத் தானே யுண்டு களித்திருக்கக் கருதாது பசியுடைய வேறு ஒருவனுக்கு வழங்கி, உண்ணச் செய்து உயிர் விளக்கம் செய்கின்றபோது, அந்தத் தயவாளன் உளத்தில் அருள்சக்தி தோன்றி சுத்த இன்பத்தைத் தோற்றுவித்து விளங்கச் செய்வ தாம். இப்படித்தான் நம் வள்ளலாரின் அன்புச் செயலால் அவரது உள்ளத்தில் எய்ப்பெலாம் தவிர்க்கப்பட்டனவாம். எய்ப்பு என்றால், இளைப்பு, சோர்வு, குறைவு ஆம். அருள் இன்பம் இடம் கொண்ட உளத்தில், இந்த எய்ப்புக்கு இடமேது!

நம் நற்றாய் நல்லின்பமே உருவான ஆனந்தரூபியாம். அவள் ஆதரவில் அருள்வாழ்வு மேற்கொண்ட அடிகளார்க்கு ஆனந்த வாழ்வு தானே நிலைத்து விளங்கும்!

(12)

1093. சித்திக ளெல்லாந் தெளிந்திட வெனக்கே
1094. சத்தியை யளித்த தயவுடைத் தாயே

(உ-வி) அற்ப சித்திகளை, அறியாமையினால், அற்புதச் சித்திகளென எண்ணி, அவற்றைப் பெற, எவ்வளவோ காலம் முயற்சித்து, ஒரு சிறிது பெற்ற மாத்திரத்தில், களிப்பும் கர்வமும் அடைந்துபோகின்றார்கள் பலர். பல நாள் முயன்று ஒரு சில சித்தி பெற்றும் பின்னும் வேறொரு சித்திக்காக முயற்சி செய்தாக வேண்டியுள்ளதாம். இப்படிப் பல சித்திக்காக எவ்வளவு காலம் முயன்றுகொண்டிருக்க முடியும்? மனிதனுக்கு ஆற்றலும் ஆயுளும் சிற்றளவினதேயாதலின், பலவாகிய சித்திகளை எல்லாம் பெற்றுப் பலகாலம் வாழ்ந்துகொண்டிருக்கக் கூடுகின்றதில்லை.

நம் தயவுடைய நற்றாய், நமக்கு, அழிவற்ற ஆன்ம வடிவிலே இருத்தி, அழியாதிருந்து வாழவும் அருட்பேராற்றலைக் கொடுத்துள்ளாள். ஆகையால், நாமும் தயவுடையவர்களாகி அகமிருந்து வாழற்கிசைந்தபோது, கடவுள் தயவு நம்மில் வெளியாகி என்றும் வாழச் சக்தி கொடுக்கின்றதாம். அப்படி நம் வள்ளலுக்குத் தயவு செய்தது உண்மையாம். அப்பெருஞ் சக்தியால், சித்தி வகைகளை எல்லாம் அறியவும், தெளியவும், அடையவும், அடைந்து என்றென்றும், அருட்பெருஞ்சித்தியோடு வாழவும் தயவு செய்யப்பட்டுள்ளார் நம் பெருமான்.

(13)

1095. சத்திநி பாதந் தனையளித் தெனைமேல்
1096. வைத்தமு தளித்த மரபுடைத் தாயே

(உ-வி) நமது அருள் அன்னை எல்லாம் ஆனவள், எல்லாம் வல்லவள். உலகவர்களில் இந்த அன்னைக்கு ஒப்பாக எவரையும் எக்காலத்தும் காண முடியாதாம். உலகன்னை குழந்தையை ஈன்றுவிட்டால் கடமை தீர்ந்ததாகக் கருதுவள்; சான்றோனாக்குதல் தந்தைக்கு கடன் என்பர். ஆனால், நமது அருளன்னையே, அம்மையாயும் அப்பனாயும், மற்று குருவாயும், தெய்வமாயும், பிறவாயும் இருக்கின்றாள். ஆதலின், இவள், இவ்வருட்சேயை

யின்று செல்வமுற வளர்த்து அன்பும் அறிவும் பெறச் செய்து பக்குவப்படுத்தியுள்ளாள்.

அருள் அன்னையின் மரபு அனாதிகாலமாக உயிர்களைப் பெற்று உயர் நிலைக்கேற்றி இன்பு செய்திருப்பதேயாம். அதன் படிதான் நம் வள்ளற்பெருமானுக்கு அருள் செய்துள்ளாள் என் பதை இங்கு காண்கின்றோம். சத்திநி பாதம் அளித்தாள் எனப்படுகின்றது முதலில். சத்திநி பாதம் என்றால், திருவரு ளாம் திருவடி சிரத்தில் பதியப் பெறுதல் என்ப. அதாவது, ஒருவன் அன்பும் அறிவும் கொண்டு பக்குவமுற்று, இருவினை யொப்பு—நல்வினை, தீவினையால் உறும் சுகம் துக்கம் இரண்டை யும் சமமாகக் கருதி மனநிறைவோடு இருக்கும் நிரதிசய நிலை யாம். இந்நிலை நிற்போனுக்கு அருள் உண்மை விளங்குகின் றது. இது மலபரிபாகம் எனப்படும். கடவுளின் திருவருளே எப்பொருளாயும், எச்செயலாயும் எவ்வறிவாயும் உள்ளதை யுணரும்போது, மாயை, கன்மம் ஆணவம், என்ற மலம் வெற்றுக் கற்பனையாக அறியாமையாற் கருதிக்கொண்டிருந்த நிலை நீங்கி னதாய்க்கொள்ளப்படுகின்றது. இந்த மலநீக்க நிலையில், ஆன்மா வானது தன்னைப் பதியாகவே யுணர்ந்து, தான் என்ற தற் போதம் கெட்டு, அதுவாகி விளங்குகின்றதாம். அந்தப் பதியும் அதன் அருளைப் பிரிவறக் கொண்டு விளங்கு நிலையும் அறியப்படு கின்றதாம். இதுதான் ஒரு பக்குவ ஆன்மாவின் சத்திநிபாத நிலையாக அறியப்படும். இந்நிலையுண்மையைச் சத் விசாரத் தால் அறியும்படி அருள் அன்னையே செய்துள்ளாள்.

சத்திநிபாத நிலை பெற்ற வள்ளல், அந்த மேனிலையில் தலை நடுவிடத்தே, உளம்பதித்து, அருள் ஒளியாகிப் பதிந்து இருக் கின்றார். இதுவே திருவடியைத் தலைமீது கொண்டிருப்பதாக மொழியப்படுவது. திருவடிதீட்சையின் உண்மையுமிதுவாம். இந்நிலையில் நம் பெருமானைக் கூட்டிவைத்த அருளன்னை, மேலும், அருளமுதை நிறையப் புகட்டி விட்டாளாம். இதனால் அருட் பேரின்ப வாழ்வு இவர்க்கு உரித்தாயிற்றாம்.

(14)

1097. சத்திசத்தர் களெலாஞ் சார்ந்தென தேவல்செய்
1098. சித்தியை யளித்த தெய்வநற் றாயே

(உ-வி) அருள் அமுதத்தின் மாண்பு என்னென்பது! உல கியல் அமுதங்களும், தேவாமிர்தமும் ஒருவர்க்குப் பிணி யொழித்து நீண்ட நாளைக்கு வாழ்ந்திருக்கத்தான் செய்யுமே அல்லாது அவர்க்கு அகமும் புறமும் சூழ்ந்து இருந்து கொண்டு அருள் இன்ப வாழ்வில் என்றும் அருட்சித்திகளோடு விளங்கச் செய்வதாயில்லையாம். அப்படிச் செய்யவல்லது தெய்வ நற்றாய் வழங்கின அருளமுதம் ஒன்றேயாம். அருட்சித்தியால், உல கியற் பெருஞ்சக்திகள் பலவும், பலவாகிய சக்தியைப் பெற்று ஆற்றல் மிகுதியோடு விளங்கும் சத்தர்கள் பலரும், நம் பெரு மானின் ஏவலை நிறைவேற்ற வருகின்றார்களாம். இந்தப் பெருமை அருட்சித்திக்கே அமையும். மேலும் இச்சித்திக்கு முடிவேயில்லாது என்றும் செயல்பட்டுக் கொண்டே யிருப்பதாம். மற்ற எச் சித்தியும், அச் சித்திசெய் சித்தரைத் தேய்த்து அழித்தேவிடும். ஒரு கால எல்லைக்குமேல் அச்சித்திகளும் விளங்கா; அது புரிந்த சித்தர்களும் நிலவார். ஆகவே, தெய்வ நற்றாயின் தயவது கொண்டு நிலவுவோமாக.

(15)

1099. தன்னிக ரில்லாத் தலைவனைக் காட்டியே
1100. என்னைமே லேற்றிய வினியநற் றாயே

(உ-வி) அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஒருவரே தனக்கு, எவ்வகையிலும், எக்காலத்தும் ஒப்பான ஒருவரையோ, ஒன் றையோ இல்லாதவராய், என்றென்றும் தனித்தலைமைப் பெரும் பதியாய் விளங்கிக்கொண்டே யிருக்கின்றாராம். இவரது உண்மையை முற்றும் அறிந்திலர் முன்னோர் பலரும். கடவுள் உண்மையை அறிய வேண்டிப் பொறி புலன் களை அடக்கி, அகமுக தியானத்தில், சமாதியில் ஆழ்ந்திருந்த வர்க்கு, அக்கடவுள் விளக்கம் வெளிப்படாமற் போகவில்லை, கடவுளும் வெளிப்படுத்தாமலில்லை. ஆனாலும் உண்மை காண முனைந்த முன்னோர் அருள்நிறை உளப்பக்குவம் அடையா திருந்த காரணத்தால், தாம் கண்டிருந்த கடவுட்காட்சியின் அருள்நிறை விளக்கம் அறியாராய் இருந்தனர். அவர்கள் கடவுளுக்கு வேறாய் இருந்து கண்டுபெற்ற அனுபவம், அவர்களை ஒழியவே செய்ததாம்.

இப்போது நம் அருள் வள்ளலை ஏறாநிலைமிசை ஏற்றி விட்டது, இனிய நற்றாயின் நல்லருள். இதனால், இவர் இவரரிய (ஏறுதற்கு முடியாத) மேனிலைமேல் உள்ள இறையொளி யோடதுவாய் `இருந்துகொண்டிருக்கும் இயல் உண்மையை அறிந்து அங்ஙனமே அப்பதியோடொன்றி அதுவாகி விளங்கும் நிலையைப் பெற்றுள்ளார் என்பது உண்மையாம். இந்தத் தன்னிகரில்லாத் தனிப்பெரும் பதிநிலையில், தன்னைக் கண்டு கொள்ளச் செய்துள்ளது அருளன்னையின் பெருஞ்செயலாகும். இதன் விளைவு பேரின்ப வாழ்வே. இது இனிய நற்றாயின் இயல்பாம்.

(16)

1101. வெளிப்பட விரும்பிய விளைவெலா மெனக்கே
1102. அளித்தளித் தின்புசெய் யன்புடைத் தாயே

(உ-வி) தீண்டரிய பெருநிலையில் திகழ்கின்றவர் நமது தனித்தலைமைப் பெரும்பதி. அவருக்கு அயலாய் இருந்து அறிய முற்படுந்தோறும், உண்மையைக் கண்டு அடையப்பெறுகின்ற தில்லையாம். நிறை அருள் அன்னையால் காட்டிக் கொடுக்கப் பட்டு, அருள் அனுபவத்தில் நிலவும்போதுதான், அந்த இறை நிலையிற் பிரிவற இருக்கின்ற இயல் உண்மையை உணர் கின்றோம்.

இயல்பாகவே, அனாதிகாலமாய் இருந்துவருகின்ற இறை யோடிரண்டற இருக்கின்ற நாம், இதுகாறும் இந்த நம் உண்மையை அறியாது அறிந்துகொள்ளற்கான தக்க ஒரு சூழ் நிலையை யடையப் பெறாது இருந்து வந்தோம். இத்தருணம்தான் இந்த அருள்ஞானம் விளங்கும் இம் மனித தேகச் சூழலிலிருந்து, இந்த நமது இறையியல் உண்மையை யுணர்ந்து கொண்டுள் ளோம். இது அந்த அருள் இறையின் பெருஞ்செயலேயாம். அகவடிவில் அந்நாள்தொட்டு இருந்துவரும் நமக்கு, நம் அகமுடை யானின் திருவுளப்படி சூழ்நிலையை விளைவுசெய்து விளைவு செய்து வழங்கப்பெற்று வந்துள்ளதாம். ''வெளிப்பட விரும்பிய விளைவு'' கடவுள் உண்மை அகத்தில் இருந்து, புறத் தோற் றத்தில் எதை எதையோ வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதுவரை வெளிப்பட்டவை யாருடைய விருப்பத்தின் விளைவு

என்றால், கடவுளின் திருவுளத்திச்சை எனலாம். கடவுளுக்கு இச்சை என்று ஒன்று உண்டா எனக் கேட்கலாம். கடவுள் அருளின் இயல்பே அவர்தம் இச்சையாகப் புனைந்து கூறப்படுவ தாம். கடவுளின் அருள் ஒளி இயல்பாகவே விளங்கிக் கொண் டிருப்பது. அச் செயலால் உண்மை கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படத் தொடங்குகின்றது. அவ் வெளியீடுகள், சடமூட நிலை யிலிருந்து, உயிர்நிலை, அறிவுநிலை, யோகநிலை ஏற்பட்டு முடிவில் அருள்ஞான நிலை விளங்குகின்றது. இந்த அருள்ஞானம் வெளிப் படும் நிலையிலிருந்துதான் கடவுள் உண்மையை அறியவேண்டும். ஆகவே இவைகள் எல்லாம் கடவுளின் விருப்பப்படிதான் விளைந்துள்ளனவாய்க் காண்கின்றோம்.

இப்போது நாமும் நம் பதியும் ஒன்றியுள்ளதை யுணர்ந்து, அகநிலையிற் பிறழாதிருந்து, வாழ்ந்து வருகின்றோம். இந்த நிலையில் நம் உள்ளத்தில் அருளே நிரம்பியுள்ளது. அதன் நியதி முறை உத்தரவு செயல்பட்டு விளங்குவதைத்தான், நம் மைச் சூழ்கின்ற உயிர்களாகப் பொருள்களாகக் கண்டு கண்டு அகத்தே இறைஅருளின் உண்மையை அறிந்து கொண்டு வருகின் றோம். இதிலும் கடவுள் விருப்பம்தான் தூண்டிவிடுகின்றதை அறிவோம். அத்தோடு மனிதனின் விருப்பமும் சன்மார்க்க நெறிக்குத்தக இருக்கின்றதால் நிறைவேற்றப்படுகின்றனவாம். நம் பெருமானின் விருப்பம், அருள் விளைவுக்கு உரியதாகலின், அருள் அன்னை அவ் விருப்பத்தை மிக விரைவில் முடித்துவைக் கின்றாள். இதனால் இவர் இன்பிலே ஓங்குகின்றார். முடிவில் கடவுளிச்சையும், இவரது விழைவும் வேறல்லாததாகிய ஒன்றாய், அது ஆன்மாவுக்குரிய பேரின்பமாய், கடவுளுக்குரிய தன் உண்மையாய் விளங்கித் திகழ்கின்றதாம். அது, இறை யருட்ஜோதியே திருவருட்பிரகாசராய் விளங்குகின்ற பெரு நிலையாம்.

(17)

1103. எண்ணகத் தொடுபுறத் தென்னையெஞ் ஞான்றுங்

1104. கண்ணெனக் காக்கும் கருணைநற் றாயே

(உ-வி) தேக உறுப்புக்களில் தலையாயது தலையே. அத் தலையின் கண் அமைந்த கண்ணே சிறப்பிற் சிறப்புற் றிலங்குகின்

றதாம். இவ்வுயர்வும் சிறப்பும் மென்மையும் உடைய கண்ணினை எப்பொழுதும் காத்துப் பாதுகாப்பளிக்கின்றது இமை. இது போலும், இதற்குமேலும் எனது கருணாம்பிகையாகிய நற்றாய், எனக்கு எப்பொழுதும் காப்பளித்துக்கொண்டுள்ளாள்.

அகத்தில் இருக்கும் இறைவியையே திருவருளால் முதலில் உள்ளபடி அறிந்துகொள்ள முடிகின்றதாம். அப்படி அகத்தில் உள்ளதைக் கண்டால்தான் பிற எவ்விடத்தும், எப்பொருளிலும், எவ்வுயிரிலும் இருந்து அருளாட்சி புரிந்து கொண்டிருக்கின்ற அருள் அன்னையையும், அவளது ஆட்சிச்செயலையும் உள்ளபடி யுணர முடியும். ஆகவேதான், அகத்தொடு புறத்தும் என்று குறித்துள்ளார். அதுவும் எண் அகம் என்றதால் மெய்யுணர்வுக்குரிய அந்தக் கடவுளான்ம நிலையை முதலாகக்கொண்டு அறியப்படும் உண்மை சுட்டப்பட்டுள்ளதாம்!

இப்படி அகத்திருந்தும், புற மெங்கும் இருந்தும் காப்பாற்றிப் பக்குவப்படுத்தி மேலான இன்பநிலைக்கு ஏற்றி வைக்கும் கருணாகரியின் பெருமை என்னென்பது!

(18)

1105. இன்னரு ளமுதளித் திறவாத் திறல்புரிந்
1106. தென்னை வளர்த்திடு மின்புடைத் தாயே

(உ-வி) இறவாநிலை பெறுவது பெருஞ்சித்தித் திறலாகும். இதற்காக மக்களினம் எவ்வளவு பாடுபட்டுள்ளது? மணி மந்திர மருந்துகளால் இறவாமை பெற முயன்று ஓரளவு ஆயுளை நீட்டித்துக்கொள்ளத்தான் முடிந்துள்ளதே யல்லாது, என்ஞான்றும் மரணமுறாதிருக்கச் செய்துகொள்ள முடியவில்லையாம். யோக சமாதியால், அகத்தே ஒடுங்கிப்போனவர்களும், குண்டலி சக்தியை மேலேற்றி பிரமரந்திரப் பெருவெளியைத் திறந்து அமுதரசத்தை உடலெங்கும் நிரப்பப்பெற்று, கல்பதேக்த்தோடு புதைந்துகிடக்கும் ஒரு நிலையும் பெற்றார் சிலர். இவர்கள் அடைந்த இந்த அழியாநிலையை மிகப் போற்றிக்கொண்டனர் பலர். ஆனால் இந்நிலையை எப்படி மரணமில்லாப் பெருவாழ்வு என்று சொல்ல முடியும்? இது மரணமில்லாப் பெருவாழ்வு ஆகாது. இந்நிலையில் உடல் அழியவில்லைதான்; என்றாலும்,

உயிர் உணர்வும் அனுபவமும் செயல் ஆக்கமும் முற்றும் ஒடுங்கிப் போய்விடுவதால் இது வாழ்வுநிலை ஆகாது. எனவே, இந்நிலை பெற்றோர் மரணமில்லா வாழ்வு அடைந்தவர்கள் அல்லர் என்பது உண்மையாம்.

இப்பொழுது நம் அருள்ஒளி வள்ளல், அருளொடு மலர்ந்த சுத்த சன்மார்க்க, அனகமுறையால், திருவருளமுதை அகவடிவி லிருந்து புறவுடல் முழுதும் நிரம்பிடப் பெற்றார். இவ்வனுபவநிலை அருள்விளங்கு ஜீவதயவினால் அல்லாது, பிற எந்த நெறிமுறை யாலும், கடுந்தவத்தாலும் கைகூடாது என்பது சத்தியமாம். தயாவண்ணமாகி அகமெய்ப் பொருணிலையிலிருந்தே அனகவாழ்வு மேற்கொள்ளுவதால், அகத்தேயிருந்த அமுதரசம், சப்த தாதுக் களாலாகிய இந்த உடலை முற்றும் சுத்த வடிவாக்கிக்கொண்டு, உலக வாழ்வில் ஒழிவின்றி வாழ்ந்துகொண்டிருக்கவும், அருட் பெருஞ்சித்தால், சூழ்நர்க்கும் தான் பெற்ற வாழ்வை அடையச் செய்யவும் நித்தியமாய் விளங்குகின்றார். இவர் பெற்றது அருள் அமுதம். அதன் பேராற்றல் இதுவாம். வேற்றமுதம் அழியாமை நல்கினும் வாழ்வுக்கு உதவாது போவதாம். சச்சிதானந்தியாகிய அருள் அன்னை இவர்க்கு, இன்னருள் அமுதளித்து, இறவாத் திறல் புரிந்து, வளர்த்திடுகின்றதாகக் குறிக்கின்றார்.

(19)

1107. எனனுட லென்னுயி ரென்னறி வெல்லாம்
1108. தன்னவென் றாக்கிய தயவுடைத் தாயே

(உ-வி) மனிதன் தனது உண்மையை அறியாதிருக்கின்றான். உடலையே ''தான்'' எனக் கருதியிருந்தும், பின்னர் அகவிசார ஞானத்தால், தன்னை ஆன்ம வடிவினனாகப் பாவித்துக்கொண் டிருந்தபோதும் உண்மையை அறியவில்லை. இப்போது மெய் யான அருளறிவாலே, சுத்த தயவாலே உணர்த்தப்படும் உண்மை இதுவாக இருக்கின்றது. அருட்பெருஞ்ஜோதியாக உள்ள ஒன்றே தான், தயவுத்தாயாக இருக்கின்றதாய் உணரப்படு கின்றது. அந்த ஒன்றே எங்கும் நிறைவாகியுள்ளதும், தனித்தனி ஒவ்வொரு ஆன்மஅணுவாய் இருக்கின்றதும் அறியப்படுகின்றது. ஆகையால், தயா அன்னையே உண்மையில் கடவுளாய் இருக் கின்றதும், நாமாகிய ஆன்மாவாய் இருக்கின்றதும் தெரிந்து கொள்கின்றோம்.

தயவுத்தாய், அத்தயா ஞானத்தாலே, அதுவே நாமான உண்மையை யுணர்த்துகின்றது. நாமே அவளாய், அதுவாய் இருப்பதை யுணர்ந்தபின், நம் உடலும், உயிரும், அறிவும் உண் மையில் தயா அன்னையின் உடையனவே என்பது தெளிவாம். இதுதான், இங்கு, ''என்னுடல், என்னுயிர், என் அறிவு எல் லாம், தன்ன என்றாக்கிய தயவுடைத் தாயே,'' என்று குறிக்கப் பட்டதாம்.

(20)

1109. தெரியா வகையாற் சிறியேன் றளர்ந்திடத்
1110. தரியா தணைத்த தயவுடைத் தாயே

(உ-வி) அறியாமையினால் அடியேன் அலக்கண் (துன்பம்) உற்றேன் பலகாலும். அப்படி அல்லல்பட்ட தருணத்தே எனது அருளன்னை உடனுக்குடன் இரக்கம் கொண்டு, என்பால் அணைந்து, ''மகனே, அவலமுறாதே, கலங்காதே, இது ஒன்றும் நிலையாது, உன்னைப் பக்குவப்படுத்தி மேனிலைக்கேற்றவே இச் சிறு சோதனை எல்லாம். ஆதலின், சிறிதே பொறுத்திரு,'' என்று தேறுதல் கூறி, ஆறுதல் அளிக்கின்றாள். யானும் மன அமைதி பெற்று, உள்ளத்தளியில் ஒளிவிடுகின்ற அருள் அன்னை யைக் கண்டு கண்டு ஆனந்தமுறுகின்றேன்.

உலகம், அருட்பெருங்கடவுள் உண்மையையும், அவரது ஆட்சி முறையையும் உள்ளவாறு உணராது, மாசுடைய மன இச்சை வழியிற் சென்று அறியாமையால் சிறிய இன்பத்தாலும், பெரிய துன்பத்தாலும் உழன்று திரிந்து கொண்டிருக்கின்றதாம். இப்படி அறியாமையாற் கலங்கித் துன்புறுகின்றவர்களுக்கு, அறிவும் ஆறுதலும், அரவணைப்பும் அளித்துத். தெளிவும், அமை தியும் இன்பமும் வழங்கும் மெய்ப்பொருளனுபவம் ஒவ்வொரு வருக்கும் மிக இன்றியமையாததாக உள்ளதாம். அந்த மெய்ப் பொருள்தான் இன்று நம் ஆருயிர்த் தாயாக தயவு அன்னை யாகப் பெற்றுள்ளோம். அவ்வன்னை நம்மையும் பெற்றுள்ளாள்!

(21)

1111. சினமுத லனைத்தையுந் தீர்த்தெனை நனவினுங்
1112. கனவினும் பிரியாக் கருணைநற் றாயே

(உ-வி) கருணைமிக்குடைய உயிர் அன்னையின் செயலனைத்தும் நமக்கு நன்மையையே வழங்கி வாழ்விப்பதாயிருக்கின்றது. உள்ளும் புறமும் அருவாயும் உருவாயும் இருந்து தயவாலே, நமக்கு என்னென்ன வேண்டுமோ அவற்றைத் தடையுறாது ஈந்து கொண்டுள்ளதோடு, என்னென்ன தவிர்க்கப்பட வேண்டுமோ அவற்றை எல்லாம் காலத்தே எவ்வகையிலும் நீக்கியொழித்துக் கொண்டேயுள்ளாள் நம் அன்னை. இதனால் வேண்டப்படாத சினம் முதலான தீய குணங்களை யொழிப்பது அவளது திருவுள்ளமாக இருக்கின்றதால், நாம் எதற்கும் அச்சமும் கவலையும் கொள்ள வேண்டியதில்லை.

இக்கருணை அன்னையை நாம் எப்போதும் உளத்திற் கொண்டு, செயலில் ஜீவகருணையே விளங்க வாழ்தல் வேண்டும். ஒருவன் தன் விழிப்புநிலையில் அருள் ஒளியை மறவாது இருந்து பழகிவந்தால், அதுவே கனவிலும் தொடர்ந்து சிந்தனையில் நிலவும் நிலையும் ஏற்பட்டுவிடும். அப்போதுதான் கடவுளின் அருள் நம் சாக்கிரத்தும், சொப்பனத்தும் உதவிக் கொண்டிருத்தலை யுணர்வோம்.

(22)

1113. தூக்கமுஞ் சோம்புமென் றுன்பமு மச்சமும்
1114. ஏக்கமு நீக்கிய என்றனித் தாயே

(உ-வி) அகவாழ்வில் மேன்மையுறுதல், புறவுலக வாழ்வுக்கும் நன்மையை விளைவிப்பதாம். அகத்தில் நற்பண்புகளைப் பெருக்கிக் கொண்டு புறத்தில் நற் செயல்களில் ஈடுபடுதல் வேண்டும். வேண்டத்தகாத குணங்களையும், செயல்களையும், பழக்கங்களையும், வழக்கங்களையும் ஒழித்திடல் வேண்டும். அவற்றை யொழித்தல் அவ்வளவு எளிதில் ஆகக் கூடியதல்ல. எனினும், திருவருள் துணைகொண்டு முயன்றால், அவ்வருளாலே வெற்றி கொள்ளலாம்.

துயில், சோம்பல், துன்பம், அச்சம், ஏக்கம் ஆகிய இவ்வைந்தும், அபக்குவ ஜீவர்களை அடிக்கடி அடுத்து அல்லல் படுத்துகின்றனவாம். இவைகளை முற்றும் களைதல் சாதாரண மக்களாலோ, பிற ஜீவர்களாலோ முடியாது. உளத்தில் இடை

யறாத சத்விசாரமும், உடலில் சதா பரோபகார நன்முயற்சியும் விளங்கும்படி பழக்க மேற்கொள்ள வேண்டும். அப்போது பேரருட்சக்தியாம் அன்னையே உதவுவாள். அந்த அருள் உதவி கொண்டுதான், வேண்டாதவற்றைச் சிறிது சிறிதாக விலக்கி விட்டு வெற்றி காணலாகும்.

ஆன்ம பிள்ளைக்கு அருள்தான் ஈன்ற நற்றாயாம். அத்தாய், தன் சேயிடத்தில் வைத்துள்ள மெய்யன்பு காரணமாக இடை யறாது வேண்டும் நலம் யாவும் புரிந்து புரிந்து வளர்த்து சர்வ சக்தியும் சித்தியும் கொண்டு விளங்கச் செய்து விடுகின்ற உண்மையையெல்லாம் சென்று இருபத்திரண்டு இணையடிகளில் விரித்துரைக்கப் பெற்றுள்ளன கண்டோம். மேல் உயிர்த் தந்தை என்ற தலைப்புடன் சில அக விளக்கங்களைக் கண்டு கொள்ளலாம்.

209. உயிர்த் தந்தை

(1)

1115. துன்பெலாந் தவிர்த்துளே யன்பெலா நிரம்ப
1116. இன்பெலா மளித்த என்றனித் தந்தையே

(உ-வி) உடல் பெண்கூறு என்றும், உயிராகிய ஆன்மா ஆண் அம்சம் என்றும் அறிந்துள்ளோம். இதில் ஆன்மா நித்திய மானது. கடவுள் அருள் நிலையமாக இருக்கின்றது. இந்த அக நிலை நின்றே உலகியல் வாழ்வில் சுக நிலைபெற வேண்டியிருக் கின்றது. புறவுடற் சுகம் புலன் உணர்வில் தோற்றி மறையும். ஆன்ம சுகமொன்றே அழியாது ஓங்கும்.

ஆன்மாவுக்கு அருளே அன்னை, பெற்ற தாய் ஆம். இந்த ஆன்மாவுக்கு உள்ளும் புறமும் உண்டென்று அறிவோம். பிண்ட தேகமாகிய உருவுக்குள் ஆன்மா விளங்குவது போன்று, ஆன்ம வடிவுக்குள் கடவுள் அருள் உண்மை விளங்குகின்றது. ஆன்ம வடிவமும், அதன் உள்ளொளியும் பெண்ணும் ஆணுமாக, அக அனுபவத்தில் விளங்கும். இங்கு உயிர்த் தந்தையாகக் கொள் ளப்படுவது, அகத் திருவருளேயாம்.

அகத்திலே அன்பு நிரம்பிட நிரம்பிடத் துன்பமாகிய இருள் நீங்குகின்றது, இன்பமாகிய ஒளி ஓங்குகின்றதாம். இது உயிர்த் தந்தையின் அருட்செயலாக உள்ளதாம். உலகியற்றந்தைகள் தம் தனயர்க்கு எந்த அளவுக்கு அன்பும் இன்பமும் செய்துவிட முடியும்! அந்த அற்ப அன்பும் இன்பமும் கூடப் புலன் அளவில்

தோன்றி மறைவனவேயாம். இந்த அருட்ஜோதிப் பெருந் தந்தை வழங்குகின்ற அன்பும் இன்பமும் நிறைநிலையில் அன்பு வடிவம் (சுத்த தேகம்) இன்ப வடிவம் (ஞான தேகம்) ஆகிய இரண்டும், அருள் வடிவில் (பிரணவ தேகத்தில்) இருந்து அனுப விக்கும்படி செய்வதாம். இதுதான் உயிர்த் தந்தையின் உயர் செயலாம்.

(2)

1117. எல்லா நன்மையு மென்றனக் களித்த

1118. எல்லாம் வல்லசித் தென்றனித் தந்தையே

(உ-வி) பெருமையுடைய அற்புதச் செயல்கள் சித்தெனப் படும். அச் சித்துகளெல்லாம் திரண்டு ஓர் உருவாகி விளங்கு கின்றவர்தான் எனது ஒப்பற்ற உயிர்த் தந்தையாவர். அவரே அருள் அம்பலத்தே திகழ்கின்ற எல்லாம் வல்ல சித்தராக உள்ளார். அப்படி இருந்துகொண்டு, எனக்குப் பேரின்பம் உண்டாக எல்லா நன்மைகளும் புரிகின்றார்.

தீயையும் தண்மையுற்றிலங்கிடச் செய்யும் அற்புதத்தினும் அற்புதம், தீமையெலாம் நன்மையென மாற்றிக்கொண்டு இன்புற் றிருக்கச் செய்யும் அருட்சித்தின் வல்லபம் என்னே! இந்நலம் கனிந்த அருட்பெருஞ்ஜோதித் தந்தையைப் போற்றிப் புகழ்ந் திருந்து பொய்கெட்டு மெய்யாவோம்.

எல்லாம் வல்ல சித்தன் என்று புகழப்படும் ஆண்டவர், மக்களுக்குத் தன் அருட்பெரும் வல்லபத்தால் இன்பமே செய்து என்றும் வாழ்வித்திடலாகாதா? அல்லது மக்களையே தோற்று விக்காது, அல்லல்பட்டழியாதிருக்கவாவது செய்திருக்கலாமே! ஏன் கோடிக்கணக்கான மக்களையும் படைத்து, அறியாமை, பிணி, துன்பம், வறுமை முதலியவற்றால் அல்லலிற் கிடந்து அழிவுறச் செய்வது! இச்செயல் கருணாகரனாகிய கடவுள் புரிவது ஏன்? மக்கள் துன்பிலே துடித்து அழியும் போது, அன்பர் உள்ளம் என்ன பாடு படுகிறது? கடவுள் அன்பேவடிவானவர் எனப்படுகின் றார். ஆனால் உலகில் மக்களின் பரிதாபநிலைகண்டும் நன்கு அறிந்தும் ஒன்றும் தெரியாதவர் போல், சிறிதும் உதவிபுரிந்து உய்வளித்து, உவகைக் கொள்ளச் செய்யாது இருப்பதாகத் தோன்றுகின்றது. இந்நிகழ்ச்சிகளை எல்லாம் பார்க்கும்போது, நம் தியாகேசரின் உண்மை என்னவென்று புரியவில்லையே!

கடவுளின் அருட்செயலின் உண்மை, புலன் உணர்வுக்கும் மனோ அறிவுக்கும் விளங்குவதாயில்லை. மெய்யான அருள்ஞானத் திற்கே வெளியாவதாய் இருக்கின்றதாம். நம் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் யாரும் அண்டமுடியாத அருள் அம்பலத்திலே யிருந்து கொண்டு, அருட்பெருஞ்ஜோதியை என்றென்றும் பரப் பிக்கொண்டே இருக்கின்றார். அவ்வொளிக் கதிரின் ஒவ்வொரு சிற்றணுவிலும் கூட அருட்பெருங் கடவுளின் நிறையியல்பு அதாவது பேரருள் எப்பொழுதும் நிரம்பிய வண்ணம் இருந்து வருகின்றது. அந்த ஜோதி அணுவின் அகமிருக்கும் அருள் வெளிப்படவே, அதன் புறச் சூழ்நிலை இடையறாது மாற்ற தோற்றம் அடைந்து கொண்டே யுள்ளது. அந்த மாற்ற தோற்றம் முதலில் சடபூத நிலையாய் இருக்கின்றது. அடுத்து அவ்வணுவைச் சூழ்ந்த உயிர் உடல் வடிவாய் அமைகின்றது. பின்னர் அவ்வுயிரிலிருந்து அறிவு உணர்வு வெளியாகிச் சூழ் கின்றது. அதன்பின் ஆன்ம அனுபவ யோகசக்திச் சூழலில் விளங்குகின்றது. முடிவில் அச்சூழ்நிலை அருள் அனுபவத்தோடு விளங்குகின்றதாம். இதில்தான் அகமிருந்த அருளும், புறம் சூழ்ந்த ஒளியும் ஒன்றான அருட்பெருஞ்ஜோதியாகித் திகழ்வது. இதுவே சுத்த ஞானியின் இன்பவாழ்வு நிலையாம்.

சுத்த மனிதன் இன்புருவோடு நிலவுவனாகின்றான். இந்நிலை யனுபவம் பெறப்படுமுன், மனிதன் கரணேந்திரியப் புல போக வாழ்வில் பிழைத்துகொண்டிருக்கின்றான். இதினின்று மேனிலை யனுபவமுண்டாக வேண்டியே, மக்கட் பிறவியில் அருள் நியதிச் சட்டம் ஒன்று திருவருளால் விதிக்கப்பெற்றுள்ளது. புலன் வாழ்வில் இச்சையறாதவரை அறத்தாலும், பாவத்தாலும் மேலும் மேலும் இன்ப, துன்பப் பிறவிகள் தொடர்ந்து வந்துகொண்டே தான் இருக்கும். அறம் ஓங்கப் பாவம் தேயும், இன்பம் வளரும். ஜீவதயவின்மையால் பாவம் ஓங்குகின்றது, அறம் தேய்கின்றது, அதனால் துன்பமே வளர்கின்றது: இதுதான் இன்றையநிலை.

கடவுள் அருள் உண்மை அகமிருந்துதான் ஆள்கின்றது. புற நிலையால் சிறிதும் தாக்கப்படாதது அருளகம். மனிதன் அருள்ஞானத்தால் இந்த அக நிலையை அறிந்து கொள்வதோடு அங்கிருந்து அன்புச் செயல் புரிந்து வருவதால் இன்பமே சூழும். புறத்திருந்து புலன்வாழ்வு நடத்தும்போது உண்டாம் புலன் மயக்க இன்பமும், துன்பமும் தான் அறம் பாவத்திற்குத் தக வந்துபோம். இந்த இன்ப துன்ப நிலையைக் கடந்து அருளக நிலைக்கு ஏறவேண்டியதுதான் அருட்பதியின் ஆணையாம். மற்ற படி மனிதன் துன்பில் வருந்தி மடிய வேண்டுமென்பது திருவுள

மன்று. அருட்சித்தால் உலகில் துன்பத்தையே தோன்றா திருக்கச் செய்ய முடியாதென்பதல்ல, செய்ய முடியும். ஆனால் அருள் உண்மை வெளிப்பட, பொறிபுலன் இச்சை யொழிய, புறத்தே நல்லது, கெட்டதை அனுபவபூர்வமாகக் கண்டு கடைத் தேற வேண்டியே, அறம், பாவச்செயலும், இன்ப, துன்ப விளைவும் விதி செய்துள்ளார் நம் பதி. இப்பதியருள் அடைந்து அகமுறும் போது உலகியலில் பட்ட துன்பமெல்லாம் பொய்மாயை நெடுங் கனவுபோல் ஒழிந்து போகின்றதாம்.

ஆகவே, கடவுள் நியதி மனிதன்ன அருளின்பநிலையிற் சேர்ப் பதுதான். அறியாமையால் புறவாழ்வில் பாவநெறியே மிகுதி யாக எங்கும் பெருகியுள்ளதால் அளவு கடந்த துன்பமும், அழிவும் எப்பக்கமும் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. கடவுள் இத்துன்பச் சூழலை யொழிக்கத்தான் காத்திருக்கின்றார். மக்கள் எந்த நாள் அருளற நெறியால் அகநிலை யுற்று, அனக வாழ்வு மேற்கொள்கின்றனரோ, அந்த நாளே சுகாரம்ப தின மாகும். உலகில் சூழ்ந்துள்ள துன்ப இருள் எல்லாம் தொலைந்து போம். இன்ப ஒளியே எங்கும், என்றும் நிரம்பி விளங்கும். மேலும் இதன் விளக்கம் ''சிறந்தநாள்'' என்னும் நூலில் காண்க.

''சுத்ததயா சன்மார்க்க ஜோதி வருகின்ற
சுகாரம்ப தினம்இதுவாம் சூழ்ந்துவம்மின் இங்கே
இத்தரணி எங்கும்இனி என்பதியின் எழிலே
இயல் பெறவே ஓங்கிடும் நீர் மயலறவே காண்பீர்
சித்தசிகா மணி என்று வித்தகர்கள் செப்பும்
செல்வப்பேர் ஒடுதெய்வத் திருநாமம் எல்லாம்
உத்தமனார் ஒருவருக்கு கற்பித்த உண்மை
ஒருமையினாற் கண்டென்றும் பெருமையில் வாழ்வீரே.''

(சுத்த சன்மார்க்கப்பதி வருகை: தயவுப்பாக்கள்)

(3)

1119. நாயிற் கடையே னலம்பெறக் காட்டிய
1120. தாயிற் பெ[illegible]தும் தயவுடைத் தந்தையே

(உ-வி) நற்குண நல்லொழுக்கம் பூண்ட நல்லோருக்கு அருள்புரிதல் முறையாகும். அப்படியல்லாது பலவாகிய தீய குணங்களுக்கும் செயல்களுக்கும் இடமாய, நாயைவிடத் தாழ்ந்த சிறுமையுடையோனாகிய என்னையும் ஒரு பொருட்படுத்தி, ஆட்

கொண்டு, நலம் பெற்றோங்கச் செய்கின்ற தந்தையே நும் தயவின் பெருமை என்னே! என்னே!! உலகில் தாய் அன்பைத் தான் பெரிதாகச் சொல்வார்கள். ஆனால், அது மிக அற்ப மாய்த் தோன்றி, மாறுபட்டும், தடைபட்டும் ஒழியக் காண்பதால், நும் தயவோடு ஒப்பிட்டு நோக்கச் சிறிதும் பொருந்தாதிருக்கக் காண்கின்றோம். ஆதலின், பெருந்தயாநிதியான நும்மை அடைந்து போற்றுகின்றேன். போற்றி அடைகின்றேன்.

நாயிற் கடையேன் என்றதன் கருத்து: ஒருவன் தான் என்ற அகங்கார போதம் ஒழித்து, ஆருயிர்க்குத் தாழ்ந்தன்பு செய்யும் பணிவுடையவனாய் ஆக வேண்டும். அப்போதுதான் கடவுளின் திருவருள் பெற்று எல்லா நலனும் அடைய முடியும். எவ் வுயிர்க்கும் எப்பொழுதும் அன்புசெய்து இன்பளிப்பது இறைவன் செயல். மனிதன், இறைவனை அடையவேண்டுமானால், இறை யருளைப் பெறவேண்டுமானால் ஆருயிர்க்கன்பு செய்தலே வழியாம். எல்லா உயிர்க்கும் அன்பு செய்ய முடியா விட்டாலும், தன் இன மாகிய மக்களுக்காவது அன்பு செய்து இன்பளித்தல் வேண்டும். அதுவும் எல்லா மக்களுக்கும் அன்பு செய்யாவிடினும் தனக்கு அன்பு செய்கின்றவர்களுக்கு அவசியம் மறவாது அன்பு செய்தல் ஒருவன் தன் கடமையாகக் கொள்ளவேண்டும். நாய் தன் எச மானிடத்தில் எவ்வளவு நன்றியறிதலோடு இருக்கின்றது. அந்த அளவுக்குக் கூட மனிதன் நன்றியுணர்வோடு, செய்நன்றி மறவாது அன்பு புரிதல் வேண்டாமா? அப்படிச் செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை என்பர். இவர்களே நாயினும் கடை யராகக் கூறப்படுவர்.

உலகில் மக்கள் கோடிக் கணக்கில் இருக்கின்றார்கள். இவர் களின் அகத்திருந்து விளங்குகின்ற ஆன்மா, ஒரு தன்மையா யிருக்கின்றது. ஒரு தன்மையாய் என்றால், ஒரே இயல்புடைய பலவாய்க் கருதக்கூடும்; புறத்தோற்றத்தில் அப்படித்தான் பல ஆன்மாக்களாய் விளங்குதல் புற அனுபவமே. ஆனால், உண்மையில், அக அனுபவத்தில் விளங்குகின்ற ஆன்மா ஒன்றே ஒன்றுதான் எங்கும் தானாய் இருந்து வெவ்வேறு, உயிர், உடல், இயல், செயல்களோடு விளங்கிக் கொண்டிருப்பதாய் உணர் கின்றான் மெய்யறிவுடைய ஒருவன். இந்நிலை பெற்ற மெய்ஞ் ஞானியே, தன்னை நாயினும் கடையேன் எனத் தாழ்த்திக் கொண்டும், கடவுள் தயவைப் பெற்றதாக உணர்த்துகின்றார்.

கீழ் மக்களும் திருவருள் பெறற்குரியவர்களே என்பது கருத்து.

இன்னும் ஒரு கருத்து: நம் தூல உடல் ''நமசிவய'' வாய் இருப்பது. அபக்குவத்தில் இது(நமசிவய=ந...ய=ந+அ+ய்=) நாய் ஆகக்குறிக்கப்படும். அத்தூல தேகப்பற்று கொண்டுள்ள மனிதன், தன்னை நாயேன் என்று கூறிக்கொள்ளுதல் பொருத்தமே. இவன் தேகப்பற்று மிகுதியாய்க்கொண்டு, (நாய்அகன்) நாயகனைச் சார்ந்து உய்யாது, உழன்று கொண்டிருத்தலை யுணர்த்தவே, நாயேன், கடைநாயேன், நாயிற்கடையேன் என்றெல்லாம் தன்னைத் தாழ்த்திக் கூறிக்கொள்ளுதலில் உண்மையில்லாமலில்லையாம்.

உலகில் தாயன்பு சிறந்ததாகக் கூறப்படும். ஆனால் கடவுளன்போடு ஒப்புநோக்கும் போது, இத்தாயன்பு எவ்வளவு அற்பமானது, என்று நன்கு விளங்கும். இதனால் கடவுள் தயவின் உயர்வை உணர்த்தவந்த அடிகளார், தாயிற் (தாயை விட) பெரிதும் தயவுடையவர் நம் இறைவராம் அருள் தந்தை என்று குறித்துள்ளதாக அறிகின்றோம். ''தாயிற் சிறந்த தயா வான தத்துவனே'' என்பது மணிவாசகம்.

(4)

1121. அறிவிலாப் பருவத் தறிவெனக் களித்தே
1122. பிறிவிலா தமர்ந்த பேரருட் டந்தையே

(உ-வி) நம் அருள் தந்தை நமக்கு எக்காலும் உடனிருந்து அறிவிக்க வேண்டியவற்றை யெல்லாம் அறிவித்தும் தெளிவித்தும் வருகின்றார். அறிவிலாப் பருவத்தும், கீழான பிறவிகளில் இருந்த காலத்தும் அதற்கதற்கு வேண்டிய புலனறிவையும், இயல்குண விளக்கத்தையும், செயல்திறனையும் வழங்கி வந்துள்ளவர் நமது ஆருயிர்த்தந்தையார் என்பதை இப்பொழுது தான் அறிகின்றோம். அனாதியே நம் ஆன்மாவில் பிரிவற்ற ஒன்றாய் இருந்துகொண்டுள்ள அருள்ஒளிக் கடவுளே நமது அருள்தந்தையாய் இருக்கின்றதும் மற்ற எவருமாய் இருக்கின்றதும் உண்மையே.

இந்த அருள் ஒளித் தந்தையை உள்ளபடி அறிந்து போற்றிக் கொள்ளத் தெரிந்துவிட்டால், பிற, புற வடிவினராய

மக்களையோ, தெய்வங்களையோ பெரிதென மதித்துப் போற்ற எங்ஙனம் இசைவோம்? அதே சமயம், எவர் வடிவாயும் நம்முன் தோன்றுகின்றது, அருட்ஜோதியே என்பதை யுணர்ந்து கொள்ளுவதால், புறவுருவைக் கண்டு மதியாததுபோல், அவமதி யாமலும் தயவொடு நோக்கி தயவு செய்திருத்தல் நம் கடமை யாம். நம் உள்ளகத்தமர்ந்துள்ள தந்தையேதான் தன் அருள் அனுபவத்தை நமக்கு வழங்கி வாழ்விக்க வேண்டி, அருளாலே, பலவேறு தோற்றத்தோடு நம்மைச் சூழ்கின்றார். இவ்வுண் மையை நன்கு அறிந்து அன்பு செய்து இன்புற்றிருத்தல் நம் கடமையாம்.

(5)

1123. புன்னிக ரில்லேன் பொருட்டிவ ணடைந்த
1124. தன்னிக ரில்லாத் தனிப்பெருந் தந்தையே

(உ-வி) தகுதி நலன் அறிந்து, ஒருவர்க்குத் தயவு செய்தல் உலக மக்களின் இயல்பாம். ஆனால் தனிப்பெருந் தயவுடைய தந்தையின் திருமுன், ஆன்ம ரூபிகள் எல்லாம் ஒருதன்மையாய் விளங்குகின்றனர். அகநிலையில் உயர்வு, தாழ்வு, தகுதி, தகுதி யின்மை என்று வித்தியாசம் இல்லை; அருட்பக்குவம் ஒன்றே புறச்சூழலின் வேறுபாட்டிற்குக் காரணமாய் அமைகின்றதாம். அந்தப் புறச் சூழலும், எப்படியிருந்தாலும், பக்குவானுபவம் விளைத்தற்கே வருகின்றனவாய் அறியலாகின்றதாம்.

புன்னிகரில்லேன் என்கிறார்: புல் மிகக் கீழ்பிறவியாக எண்ணப்படுகின்றது. புன்மை என்றாலே, அற்பமாகிய தன்மையாம். அப்படிப் புன்மையான, ஓரறிவே அரும்பியுள்ள ஓர் தாவரத்தை ''புல்'' என்ற பெயரைப் பண்புக் காரணப் பெயராக ஆக்கி வழங்கியுள்ளனர் ஆன்றோர். இந்தப் புல்லை விடத் தாழ்ந்து இருக்கமுடியுமா மனிதன், என்றால்; அப்படியும் இருக்கக்கூடும். எப்படி யெனில், புல்லோ யாருக்கும் துன்பம் விளைவிக்காது, கேடு செய்யாது வளர்ந்து, தன்னையே பிறவுயிர் களுக்கு இரையாக வழங்கிவிடுகின்றது. இதற்கு மாறான உயர்பிறவியாகக் கருதப்படும் மனிதன், அன்பின்மையாலும், அவா வெகுளி மயக்கத்தாலும், பிறர்க்கு எவ்வளவு தீமை புரி கின்றான்! பிறரையும் பிற பொருள்களையும் தன் வாழ்வுக்கே

வழங்கப் பட்டனவாய்க் கருதி அவற்றை யெல்லாம் தனக்கே பயன் படுத்திக் கொள்கின்றான். இவன் தன்னையே முற்றும் வழங்காவிட்டாலும், தன்னால் இயன்ற அளவு நன்மை செய்ய லாமே பிறர்க்கு! நம் அருள் அம்பலவர் ஒருவர்தான் யாவையும் உயிர்களின் மேலான இன்ப வாழ்வுக்கே தன்னை முற்றும் தந்து கொண்டும், நித்தியமாய் இருந்துகொண்டும் உள்ளார். இவரே தியாகேசர் எனப்படுகின்றார். இவர் தன்னிகரில்லாத் தனித் தலைமைப் பெரும்பதி என்பது உண்மையே. இவர் இச் சிறியே மாகிய நம்பால் அணுகித் தயவு செய்கின்றார்.

(6)

1125. அகத்தினும் புறத்தினு மமர்ந்தருட் ஜோதி
1126. சகத்தினி லெனக்கே தந்தமெய்த் தந்தையே

(உ-வி) நமது மெய்த்தந்தை அல்லது உயிர்த்தந்தை, நம் உண்மை வடிவாகிய ஆன்மாவில், அகத்தில் அருளாயும், புறத்தில் ஒளியாயும் அனாதிகாலமாக அமர்ந்திருந்து கொண்டு, தன் அருளை அனுபவப்படுத்தற்கென்றே, புறத்தில் ஒளியைப் பலபல பொருள்களாகவும், உருவங்களாகவும், ஆற்றல்களாகவும், அறிவு விளக்கங்களாகவும், அனுபவப்பயன்களாகவும் தோற்று வித்துக் கொண்டுள்ளார். இப்படி உதவிக்கொண்டு வந்தவர், இப்பொழுது புறத்தையே அருட்ஜோதியாய்க் காட்டிக் கொடுத்ததோடு, அதனை அகத்தின் அருட்சார்பால், இவ் வுடலையும் அழியாமையுறச் செய்து விடுகின்றார்.

இந்த அருட்ஜோதியுடம்பை இச் சகத்தில், இகத்தே இப் பிறப்பிலேயே பெறச்செய்கின்றதுதான் பெருமையுடைத்தாம். இந்த உலக வாழ்விலேயே திருவருளால் சுகானந்த வாழ்வு பெறாது உடலைவிட்டு எங்கோ சென்று பரமானந்த வாழ்வில் விளங்கப்போவதாகக் கூறுவது உண்மையல்ல. உயிருடம்பில்லாத தனி ஆன்மாவுக்கு எந்த அனுபவமும் விளங்காது, அது பாழான சூனிய நிலையேயாம்.

(7)

1127. இணையிலாக் களிப்புற் றிருந்திட வெனக்கே
1128. துணையடி சென்னியிற் சூட்டிய தந்தையே

(உ-வி) நமக்குத் துணையாகிய கடவுளர் துணையடிகளை, நம் ஆன்ம வடிவிற் பிரிவறக் கூடாதே கூடி விளங்கவைத்திருக் கின்றார். அத்திருவடியை ஆன்மாவின் அகத்தும், புறத்தும் செயல்படுத்திக் கொண்டுள்ளார் நம் பதி. இதனால் புறத்தில் தேக சம்பந்தப்பட்ட ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத் தொழிலும், அகஉயிர் நிலையில், மறைத்தல் அருளல் ஆகிய இரு தொழிலும் கூடிய அருளைந்தொழில் நடந்து கொண்டேயுள்ள னவாம். கடவுளும் அவரது அருள் ஐந்தொழிலும் பிரபஞ்சத்தில் என்றும் நிகழ்ந்து கொண்டே யிருக்கின்றன என்பது அறிவோம். அதனைக் கற்பனையால் மறைத்திருந்தனர், ஆதலின் உண்மை புரியாதிருந்தது. சுத்த அருள் ஞானத்தால், நம் ஆன்மா, தலை நடுப்பீடத்து கண்டுகொள்ளப்பட்டதோடு, அதன்பால் நிகழு கின்ற ஐந்தொழில் நடனத்தின் உண்மை கண்டு, அந்த ஆன்ம அனுபவநிலையில் இருக்கின்றோம். இதுவே, இரு திருவடிகளை நம்தலைமிசை சூடியுள்ளதாகக் கற்பிக்கப்பட்டதாம். ''சேய மாமலர் சேவடிகள் நம் சென்னிமன்னித் திகழுமே'', எனவும், ''தன் ஈரடிக்கு என்னிரண்டு கரங்கள் தந்தான்'', எனவும் மாணிக்க வாசகரின் உரையால் திருவடியின் உண்மை சிரத்திற்கண்டு அனுபவத்திற் கொண்டு விளங்குவதை அறிகின்றோம்.

அக உண்மையை அறிந்து கொள்ளாமல், திருவடியைத் தலை மேல் வைத்து ஒருமையால் ஒளி விளங்க உபதேசித்துத் திருவடி தீட்சை செய்வதும், தெய்வத்திருவடி தலைமேலிருப்பதாகப் பாவித்துக் கொள்ளுவதும், திருவடி அடையாளத்தைக் கொண்ட சடகோபத்தைத் தலையில் வைத்துத் திருவடி சூடியதாகப் பாவிப் பதும் அக அனுபவமில்லாப் புறக்கிரியைகளேயாம். சுத்த சன் மார்க்கத்தால் அக ஆன்ம உண்மையை அறிந்து, அத்தோடு திருவடிச் செயலுண்மையும் உணர்ந்து அவ்வக நிலையிற் பொருந்தி அனகவாழ்வு வாழ்வதே மெய்ப்பயன் வழங்கும்.

(8)

1129. ஆதியீ றறியா வருளர சாட்சியிற்
1130. ஜோதிமா மகுடஞ் சூட்டிய தந்தையே

(உ-வி) இந்த உலகத்தில் வரலாற்றுக் குறிப்புக்கு எட்டிய மட்டில் எத்தனைப் பேரரசுகளும், சிற்றரசுகளும் தோன்றித்

தோன்றி அழிந்து போயிருக்கின்றன. வரலாற்றுக் காலத்திற்கு முந்தின அரசுகளின் தோற்றக்கேடுகள் கூட ஒரு சில, புதை பொருள் ஆராய்ச்சிகள் மூலம் இப்பொழுது அறியலாகியுள்ளன வாம். எந்த அரசும் நீடித்ததேயில்லை என்று காண்கின்றோம். எத்தனையோ அரசர்கள், மாமன்னர்கள் சிலகாலம் மணிமுடி சூடி அரசுக்கட்டிலிலிருந்து செங்கோலோச்சி விட்டுச் சென்று மறைந்துபோய் உள்ளதை எல்லாம் அறிகின்றோம். இந்த அரசுகள் எல்லாம் அற்பமென்று காண்கின்றோம், ஆண்டவரின் அருள ரசுடன் ஒப்புநோக்கும் போது.

நமது அருட்பெருஞ்ஜோதி அம்பலத்தரசின் உயர் சிறப்பை இன்று திருவருளாலே அறிகின்றோம். நமது தியாகராஜர், நித்தியர், இவருடைய அருள் அரசாட்சியும் நித்தியமே. இவரோ ஒருவராகவே இருந்தும், தானே எவ்வெவ்வுயிரின் உள்ளும் புற மும் நிலவி நின்று, தன் தனிப்பெருங் கருணையால், யாவருக்கும் உண்மைத் தேவைகளைச் சிறிதும் தடைபடாது வழங்கி வழங்கி வாழ்வித்து, நால்வகை யோனி, ஏழ்வகைப் பிறவிநிலைகளையும் கடத்திவந்து, முடிவில் தன்னேர் நிலையில் அமர்த்தியுள்ளார். இது அவரது அருளரசாட்சியில் ஒருவன் அடையும் பேறு ஆகும். இப்பேறு பெற்று விளங்கும் வள்ளலார், அந்த அருட்பெருஞ் ஜோதி அரசால், ஜோதிமா மகுடமாகிய பேரொளித்திரு முடியும் சூட்டப்பெற்றுள்ளாராம். இதன் பொருளென்ன? ஆதியும் அந்தமும் இல்லாத் தன் அருள் அரசாட்சியை இப் பொழுது நம் வள்ளற் பெருமானிடம் வழங்கி, அதற்கு அடையாள மாக இப்பேரொளித் திருமாமணி முடியும் சூட்டிவிட்டார் என்பது உண்மையாம். அருட்பேரரசின், பட்டத்துரிமை முதற் பிள்ளை இவராக உள்ளதை அறிகின்றோம். இவரே அம் மணி முடி சூடி அருட்பெருஞ்ஜோதி செங்கோலை ஒச்சுகின்றார் இக் காலமுதல் இனிவரும் அளவுகடந்த நெடுங்காலமும்.

உண்மை விளக்கம்: ஆதியும் அந்தமுமில்லாக் கடவுள் இந்த வள்ளலுக்குத் தன் ஜோதிமகுடம் சூட்டி, ஆட்சிப் பொறுப்பையும் வழங்கிவிட்டார் என்றால், அந்தக் கடவுள் தன் போன்று விளங் கும்படி இவரை அரசுக்கட்டிலில் வீற்றிருக்கச் செய்து விட்டுத் தாம் விலகிச் சென்று விட்டதாக எண்ணிவிடக் கூடாது. ஆன்ம அணுவில் இருந்து இதுவரை அருளாட் சியால் ஆண்டுவந்த கடவுள், இப்போது அந்நிலையிலிருந்து கொண்டே தன் திருவருளை ஓர் ஆன்மாவில் அனக நிறைவு

பெறச் செய்து, அருட்பிரகாச சுத்தவடிவொடு தன் நித்திய அருளாட்சியையே உலகமெல்லாம் கண்டு, பெருநலம் பெற் றோங்கச் செய்யவே இப்படி வெளிப்படத் திகழ்கின்றார் என அறியலாகும். புறவுலகம் கடவுளைக் காண்பது முடியாத செயலாக இருந்தது, இருக்கின்றது. ஆனால் இந்தக் கடவுள் இப்போது, தன் அருளாட்சியை உலகமெல்லாம் கண்டானந்திக் கும்படி திருவருட்பிரகாசரின் வடிவிலிருந்து ஆளத் தொடங்கி விட்டுள்ளார். உலகம் இந்த. வள்ளலின் உண்மையைக் கண்டு கடவுளின் உண்மையைக் காண்பது எளிதாகிவிட்டிருக்கின்ற தாம்.

வள்ளலாரின் உண்மை வடிவம், மனித உருவில் மிக எளிய தோற்றத்தில் விளங்கினும், அது அருட்பிரகாசமான அழியாத் திருவுருவாக அகமிருந்து அனகமாய் நிறைந்து விளங்கிக் கொண் டிருப்பதாகும். இவர் தானே ஒவ்வொருவரின் அகவடிவாய் இருந்து அவரவர்களாய்த் திகழ்ந்து கொண்டிருப்பதாயும் அறி யப்படும். ஆகையால் அவரது புறவடிவத்தை மட்டும் கண்டு, அது தான் வள்ளலார் திருவுரு என மயங்கி நிற்கக் கூடாது. அருட் கண்ணால் அக அனகநிறை அருட்பிரகாச வடிவைக் கண்டு கொள்ள வேண்டும். இவரது அக் வடிவம் நம் ஒவ்வொருவரின் ஆன்ம அணுவடிவம்தான். அகத்தில் அருள் ஒளி நிறைந்த அனுபவம் ஏற்பட்டால், அது தலைக்கோர் அருளியற் ஜோதிமுடி சூடியதாக விளங்கும். இச் ஜோதி மகுடம் இயற்கையில் ஆன்மக்கடவுள் விளங்கும் சிரநடுவில் திகழும் ஒளியின் வெளி யீடே ஆகும். இக் காரணத்தால் தெய்வ வடிவங்களின் திரு முடியைச் சூழ, அல்லது அவர்களின் தலையைச் சூழ பிரபையைக் காட்டி வைத்துள்ளனர். இதுபோல் தெய்விகப் பெரியார் களின் தலையைச் சூழவும் வட்டப் பிரகாசம் விளங்குவதாய் உரு வாக்கிக் காட்டுகின்றனர். ஒருமையோடிருந்து காண்பார்க்கு இவ்வுள்ளொளியின் விரி பிரபைக் காட்சி சில சமயங்களில் காணப்படுவது முண்டு.

ஆகவே, அருட்பிரகாச வள்ளலார் இப்பொழுது அகவடிவி லிருந்து அனக நிறை வடிவில் விளங்கிக்கொண்டு அருள் அரசாட் சியை உலகெல்லாம் செலுத்துகின்றார். இது இறைவரின் புதிய நிலைத் தோற்றமே யன்றி இந்த அருட்பிரகாச வடிவம் வேறு எதுவுமல்லவாம். இவரது உண்மை அருட்ஜோதி அரசின்

விளக்கமாக அறிகின்றோம். அகத்தில், நவமணி பீடத்தில் அருட் ஜோதிப் பிரபைச் சூழலோடு, அருள் ஒளிச் செங்கோலைக் கொண்டு உலகுயிர்ப் பொருள்களை எல்லாம் சுத்த சன்மார்க்க இன்பவாழ்வுக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறதாகத் திருவருளால் உணர்கின்றோம். புறவுலகம் இன்னும் உண்மை யைத் தெரிந்துகொள்ளாது பழைய இருள்நெறிகளிற் சென்று சென்று இடர்பட்டுக் கொண்டிருக்கின்றது. மிக விரைவில் அருள் ஜோதி உதயம் உலகுக்கு வெளியாகப் போகின்றது; அப்போது, இருளெல்லாம் ஒழிந்து போம். அருளொளியும் இன்பவாழ்வும் எங்கும் தங்கும்.

(9)

1131. எட்டிரண் டறிவித் தெனைத்தனி யேற்றிப்
1132. பட்டிமண் டபத்திற் பதித்தமெய்த் தந்தையே

(உ-வி) உலகில், பிள்ளையை யீன்று புறந்தருதல் தாயின் கடனாகவும், சான்றோனாக்குதல் தந்தையின் கடனாகவும் சொல் லப்படும். அருளாகிய, உயிர் அன்னை பெற்ற ஆன்மச் சேயை, அருட்ஜோதித் தந்தை, உலகெல்லாம் போற்றும்படி அருட்பிள்ளை யெனச் சான்றோனாக்கி விளங்கச் செய்வது முறைதானே.

முதலில், எட்டும், இரண்டும் உணர்த்தப்படுகின்றது, இது கொண்டுதான் தன் இறையியல் உண்மையைக் கண்டுகொள்ள வல்லவனாகின்றான் ஆன்மபாலன். எட்டும் இரண்டும் அகர உகரமாகக் குறிக்கப்படுகின்றன. இது எண்ணாகவும், எழுத்தாக வும் இருக்கின்றது. எழுத்தெல்லாம் அகரமுதலைக் கொண்டது. எண்ணெல்லாம் உகரஈறு கொண்டு ஆயிரமாம்போது மகரமெய் யாய் விளங்கும். ஆகையால் இந்த எழுத்தும் எண்ணும் (அ-உ-ம்=) ஓம் ஆகியுள்ளதாம். அகரத்தைக் கடவுள் ஆன்மா காச வடிவாக அறிந்து, அதனையே எண்ணி எண்ணி ''உம்'' என்றாகிக் கூடி ஓமென நிலவுவதுதான் எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணுதல் ஏற்படும்.

சுத்த சத் விசாரத்தாலே சிரநடு சிற்ஜோதியைக் கடவுள் சிற்றுருவாக உணர்ந்து உணர்ந்து ஒன்றி அதுவாகித் திகழலே, எட்டுடன் இரண்டு சேர்த்து எண்ணிக் காணும் பயனாம். அங்கு, அ-உ-ம் கூடிய ஓமாகித் திகழ்கின்றது கடவுளான்மநிலை. இதனை

எண்ணும் எழுத்துமாகிய கண்ணென்றும் உபநயனம் என்றும் கூறப்படும்.

''எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகிரே.''

என்கின்றார் நம் பெருமான். ''எட்டும் இரண்டும் அறியாத என்னை, எட்டும் இரண்டும் அறிவித்தான் என்நந்தி'', என்றும், ''எட்டும் இரண்டும் லிங்கமதாமே'' என்றும் ''எட்டும் இரண்டும் அறியாத என்னைப் பட்டிமண்டபம் சேர்த்தனை,'' என்று மணி வாசகரும் கூறியுள்ளனர். இங்கு, ''எட்டிரண்டறிவித்து எனைத் தனியேற்றினை, பட்டிமண்டபத்திற் பதித்தனை'' என்ற கருத்தைக் காண்கின்றோம். எட்டிரண்டை அறிவித்ததோடு, எனைத் தனி ஏற்றிப் பட்டி மண்டபத்திற் பதித்தாய் என்றதன் கருத்து, அந்தக் கடவுளான்ம பீடத்திலே தனித்திருக்கச் செய்தாய், எங்கும் தன்னையே கண்டிருக்கவும், தன்னை அல்லாது பிறர் எவரும் அயலாராய் இல்லாதிருக்கக் காணவும் செய்தார் என்பது குறிப்பு. பகரவடிவ ஆன்மாலயமே உண்மைப் பட்டி மண்டபமாம். இது நமக்குத் தெய்வப் பொதுவாக இருக்கின்றது. இக்கருத்தை வெளியிடாது உலகில், பட்டிமண்டபம், பட்டி மன்றம், ஊர்ப்பொது வித்தியாபீடம், தர்பார் கூடம், திரு வோலக்கம், கல்வி சதஸ் கூடுமிடம் எனவும், இக்கால (Literary debating Hall, Auditorium) அரங்கங்களாகவும் கொள்ளலாம்.

நமது ஆன்மத் தந்தை நம்மைப் பக்குவப்படுத்தி, புறத்தே உழன்று கொண்டிருந்ததை மறுத்து, அகநாடச் செய்து, அறிவரிய உண்மைகளை எல்லாம் அறிவித்து, மேலான இறை நிலைக் கேற்றிவைத்து, கீழிறங்காது அவணின்றே தயவாலே உலகுக்கு அன்புசெய்யும் சுத்த சன்மார்க்கத்தையும் வழங்கியுள் ளார். இனி நம் வள்ளற்பெருமானோடு நாமும் ஒன்றி அருளின் பானுபவத்தோடு என்றும் விளங்கலாகும்.

(10)

1133. தம்கோ லளவது தந்தருட் ஜோதிச்
1134. செங்கோல் செலுத்தெனச் செப்பிய தந்தையே

(உ-வி) செங்கோல், அரசுக்குரிய ஆட்சி செலுத்துவதற் கான ஓர் அடையாளக் கருவியாகும். இது பொன்னாலும் மணி யாலும் செய்யப்பட்ட, தன் அளவு நீளமுள்ள கோல் வடிவிலிருப் பதாம். அரசன் சிங்காதனத்தமர்ந்து செங்கோலை வலக்கையிற் பிடித்துத் தானே உலகை, தன் அரசைச் செங்கோலால் இயக்கு வதாகக் காட்டிக் கொள்ளுவது இதன் கருத்தாம். உண்மையில், பொற்ஜோதிக் கதிரவன் கதிரே நெடுஞ்செங்கோலாயிருந்து உலகை ஆட்டி வைக்கின்றது யாவரும் அறிவர். இச்செங் கோலின் நீளம், ஜோதி ஞாயிற்றுக்கதிரின் நீளமேயாம். இது நீண்டுள்ளதுதான், ஓர் குறிப்பிட்ட எல்லைவரைதான் இதன் ஒளி பரவும்; அதுவும் செல்லச் செல்லக் குறைவுபட்டு முடிவில் மறைவு பட்டுவிடும். ஆனால் நமது அருட்பெருஞ்ஜோதிபதியின் ஒளி, அகண்டவெளி முழுவதும் ஒருபடித்தாய் விளங்குவதோடு, எண்ணிலிகோடி அண்டங்களையும், அவற்றில் விளங்கும் எண்ணி அறியாதமுடியாத கோடி கோடி பிண்டங்களையும், உயிர் வடிவங் களையும், பொருளையும் சற்றும் தவறாது ஆக்கியும், காத்தும், அழித்தும், பக்குவப்படுத்தியும். அருள்புரிந்தும் வருகின்றதாம். இந்த அருளம்பலத்தரசின் கோல் எப்படிப்பட்டது, எவ்வளவு நீளமுள்ளது, உலகுயிர்ப் பொருள்களை எல்லாம் எப்படி ஆள் கின்றது என்ற ஒன்றும் உலகர் அறியார். இவர்களின் கற்பனை யில் விளைந்த அரசும், செங்கோலும் என்ன உண்மையைக் காட் டிக் கொடுக்கும்?

(11)

1135. தன்பொரு ளனைத்தையும் தன்னர சாட்சியில்
1136. என்பொரு ளாக்கிய என்றனித் தந்தையே

(உ-வி) முன் அடிகளில் செங்கோலைத் தனக்குத் தந்ததாகக் கூறப்பட்டது. அக்கோலைக் கரங்கொடுத்து ஆள ஆணை செய்யப் பட்டது. நீள் நெடுஞ்செங்கோலைத் தன் கரம் கொண்டதாய்க் குறிக்கப்பட்டது யாதெனின், அருளனுபவத்தைக் கைவரப்பெற்று எவ்வுலகத்தையும் அருளால் ஆளும் இயல்பு கொண்டதாம். இந்த இரண்டடிகளில் அம்பலத்தரசர் தமக்குரிய, அரசியற் பொருள்கள் யாவையும் இவர்க்கே உரிமையாக்கி வைத்துவிட்டா ராம். இவரடைந்த அருட்பேறு என்னென்பது!

உலகியல் அரசன் தன் பட்டத்து உரிமை மகனுக்கு இளவர சனாக்கி எல்லாப் பயிற்சியும் கொடுத்துப் பக்குவமடைந்தபின் தன் அரசுரிமையை முற்றும் வழங்கி, முழுப் பொறுப்பையும் ஏற்கச்செய்து முடியும் சூட்டிவிடுகின்றான். பின்னர் அந்தப் பேரரசன் மறைந்து ஒழிந்து போகின்றான். ஆனால் நம் அருட் பேரம்பலத்தரசர் நித்தியமானவர். அவரது ஆட்சி மாற்றமில் லாதது; அப்படியுள்ளவர், மற்றொருவர்க்குத் தன் ஆட்சியை வழங்கி வாழ்த்தி ஆள, ஆணை செய்தார் என்பது பொருந்துமா? உண்மை இதுதான், அவர் ஒருவரேதான் யாவருக்குள்ளும் இருந்து, திருவருளால் பலராகத் தோற்றிக்கொண்டும். செயல் புரிந்து கொண்டும் உள்ளார் என்பது உண்மையாதலின் அவரே அந்தத் திருவருட்பிரகாச வடிவில், பூரணசக்தியோடு வெளிப் பட்டுப் புதுவகையில் தன் ஆட்சியை சுத்த சன்மார்க்க முறையில் நடத்தத் தொடங்கியுள்ளதும் உண்மையாகும். ஆகையால் அவரும் அவரது ஆட்சியும் முடியவில்லை என்பதும் தொடர்ந்து புது முறையில் புதுவடிவில், கண்டுகொள்ளப்படுகின்றது தெளி வாம். இதுவரை கடவுள் அகத்தே அருவமாய் இருந்து தன் அருளால் ஆண்டுவந்தார். இப்பொழுது அகநின்றே அனகமாய் விரிந்து, புற வடிவையும் தன்மயமாக்கிக்கொண்டு, ஆளத் தொடங்குகிறார் என்பது உண்மையாம். இந்த உண்மையை அறியாத மக்கள், இச் சன்மார்க்கம், வள்ளல் ஆட்சிமுறை யாவும் கடவுள் இயல் விளக்கத்திற்கு வேறானது என்று கருது கின்றார்கள். அது சரியன்று, கடவுள் தானே இப்படியொரு புதுமையைத் தன் தனிப்பெருந் தயவால் வெளிப்படுத்திக் கொண்டுள்ளார் என்பது திருவருளால் தெளியப்படுகின்றது.

(12)

1137. தன்வடி வனைத்தையுந் தன்னர சாட்சியில்
1138. என்வடி வாக்கிய என்றனித் தந்தையே

(உ-வி) கடவுள் உருவுடையவரா, உருவில்லாதவரா என்று பலர் தெளிவாகத் தெரிந்துகொள்ளாது, முன்னோர் அனுபவத்தில் கண்டதையே ஒத்துக்கொண்டு பின்பற்றி வருகின்றனர். சுத்த நெறியில் இருந்து நோக்கினால், மறைபொருள் உண்மை வெளி யுறும், ஐயம் திரிபுக்கு இடமின்றி யாவும் அறியலாகும்.

அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் ஒருவரே உண்மையில் எங்கும் நிரம்பியும், யாவுமாய்த் தோற்றிக்கொண்டும் உள்ளார்

எனத் திருவருளால் அறிகின்றோம். அப்படி எங்கும் நிறைந்த, யாவுமாய்த் தோற்றுகின்றது எது? அது அருட்பெருஞ்ஜோதி தான் என்பது நிச்சயம். அந்த அருட்பெருஞ்ஜோதி, உருவா, அருவா, என்றால், உருவாகப் புறத்தில் யாவுமாய் இருக்கின்றது அருவாக அகத்திலிருந்து யாவையும் விளங்கச்செய்து கொண் டுள்ளது. இதனால்தான் கடவுள் அருவமாய் அகத்தில் உள்ளார் என்றும், அவரே உருவெல்லாமாகிப் புறத்தில் விளங்குகின்றார் என்றும், பக்குவ மனிதனின், ஞானியர் உள்ளத்துணர்வில் உணரப்படுகின்ற அருள், அல்லது தயவுதான், அகஅருவசக்தியும் புறஉருவுணர்வும் ஒன்றியதாய் அறியப்படுகின்றது. அதாவது இந்த அருள் உணர்வே கடவுளின் அருவுருவமாக இருக்கின்றது ஆம். இப்போதுதான் கடவுளின், அருவம், உருவம், அருவுருவம் என்பவை யாவை என உள்ளபடி விளங்கும்.

ஒன்றான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், அருவசக்தி வடி வாய் அகத்தில் இருந்துவருகின்றதும், உருவப் பிரபஞ்சத் தோற்ற வடிவாய் புறத்திலிருந்தும், மெய்யருள் வண்ண அருவுருவ வடிவாய் அருள் அறிவில் அல்லது தயா ஞானத்தில் விளங்குகின்றவராயும் இருக்கின்றார் என்பது இப்போது நன்கு தெளியப்பட்டுள்ளதாம். இந்த மூவடிவமும் கடவுளுக்கு இயல் பாகவே இருந்து வருகின்றனவாம். இம்மூவடிவையுமே தனது அருள் ஆட்சியின் மூலம் சுத்தசன்மார்க்க மனிதனுக்கு அப்படியே வழங்கிவிடுகின்றார். உண்மையில் இம்மூவுருவுடைய கடவுள் தானே அருளனுபவம் வெளிப்படக்கொண்டு சுத்த மனிதனாய்த் திகழ்கின்றார் ஆம்.

மேற்படித் திரிதேக சித்தியும் கொண்டு விளங்கும் ஒருவனே உண்மையில் கடவுணிலை அடைந்தவனாவான். இதுவல்லாது, அருளனுபவத்தோடு இறவா வாழ்வில் நிலவாமல் இறந்துபட்ட பின், ஒருவன் அருவ சித்தி அடைந்து விட்டதாகவோ, முத்தி யெய்தியதாகவோ, ஜோதியில் மறைந்துவிட்டதாகவோ கூறப் படுவதெல்லாம் உண்மையல்ல. இதுபோல் யோகசித்தியால் ஒருவன் கல்பதேகியாகி சமாதியில் அடங்கிவிட்டதை உருவ சித்தி என்று கூறுவதும் நிசமல்ல. மற்றும் ஒருவன் தனது புற வுடலை உதறிவிட்டு ஆவியுருவில் அல்லது சூக்கும தேகத்தில் விளங்குவதை அருவுருவசித்தி நிலை என்று கூறுவதும் பொருந்தா தாம். இம் முத்தேக சித்தியும் ஒன்றிய நிலையே உண்மைக்

கடவுளனுபவ நிலையாம். இதுவன்றி இம் மூன்றில் ஒன்றிரண்டு பெற்று விளங்குவதாகச் சொல்லப்படுவதும் கற்பனையே.

ஆகவேதான், நம் வள்ளல், கடவுளின் எல்லா வடிவும் தன் வடிவாக, திருவருளால் ஆக்கப்பெற்றுக் கொண்டுள்ளார் என்று அறியலாகும். இவ்வுண்மையைத் தெரிந்துகொண்டால், நம் பெருமான் மறைந்துவிட்டார் என்றோ, தன் உருவை அணுவணுவாகப் பிரித்து எங்கும் நிரப்பிக்கொண்டுவிட்டார் என்றோ, பிறரால் அழிக்கப்பட்டுவிட்டார் என்றோ கூறுவன வெல்லாம் மெய்யல்லவாம். அவர் திரிதேக சித்தியுடன் இருப்பது உண்மை. அருளாலேதான் அவரைக் காணலாம். அவரைக் காண் கின்றபோது நம்மையே அறிகின்றோம். அதுவே கடவுள் உண்மை யாயும் உள்ளதை யுணர்கின்றோம். கண்டு, நிறையருளால் நித்திய வாழ்வு பெற்று விளங்குதல்தான் திருவருட் சம்மதம். மற்றபடி வள்ளலாரைக் கண்டும், நினைவிற்கொண்டும், வர எதிர் பார்த்து பார்த்துக் காத்தும் நாம் பெறவேண்டியதைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆகையால் அருள் உண்மை கொண்டு வாழ்விற்கொண்டு உய்வோம்.

(13)

1139. தன்சித் தனைத்தையுந் தன்சமூ கத்தினில்
1140. என்சித் தாக்கிய என்றனித் தந்தையே

(உ-வி) சூரியனுடைய சந்நிதியில் நமது உலகுயிர்ப் பொருள்கள் எல்லாம் தோற்றி விளங்கி மறைந்து கொண்டுள்ளன. இது இயற்கை நிகழ்ச்சி என்பர். இதுபோல், தெய்வ சாந்நித் தியம் விளங்கும் திருமுன்னரும், தயா விசேஷம் விளங்கும் மகான் களின் சமூகத்திலும் அற்புத சித்திகள் விளைதல் கண்கூடு. இவை களுக்கெல்லாம் ஆதாரமாகியும், அர்த்தமாகியும் நிலவுகின்றது. எனது தனிப் பெருந் தந்தையார் திருச் சமூகத்தில். இந்த மா பிரபஞ்சத்தின் இயற்பெருஞ் செயல்களும், அனந்த சித்தி அற்புதங்களும் எக்காலத்தும் நிகழ்கின்றனவாம். இந்த அருட் பெரும்பதி எனையாட்கொண்டு தன்மயமாய் விளங்கச் செய்து விடுகின்றதால், அவரது சித்திச் செயல்கள், அருளியற் செயல்கள் யாவும் அடியேன் மூலமாக வெளியாகி விளங்கச்

செய்து கொண்டுள்ளார் என்பது உண்மை. இதுதான் எனது ஒப்பற்ற அருள் தந்தையின் பெருஞ் செயலாகும்.

(14)

1141. தன்வச மாகிய தத்துவ மனைத்தையும்
1142. என்வச மாக்கிய வென்னுயிர்த் தந்தையே

(உ-வி) எல்லாமாய் எல்லாம் வல்லதாய் உள்ளது எதுவோ அதுவே கடவுள். இதனால் காண்பனவெல்லாம், அறிவனவெல்லாம் அகமிருக்கும் பதியின் புறநிலைத் தோற்றங்களே அல்லாது வேறு அல்லவாம். இந்த அகம் ஒளிர் பதியுணர்வோடு எதைப் பார்த்தாலும், எதை எண்ணினாலும் அது கடவுள் மயமாய்க் காட்சியளிக்கும். இக்காட்சிகாணும் பக்குவமான பக்தன் ஒருவன் தன் முன்னுள்ள ஒவ்வொன்றையும் கடவுளாகக் கண்டு துதிக்கக் கூடும். அவன் ''மண்ணும் நீ, விண்ணும் நீ......மற்றுள்ள எதுவும் நீயே,'' என்கின்றான். அப்போது குறிப்பிட்ட ஒன்றைச் சுட்ட, ''அது நீ'' என்று சொல்லுவான். இந்த அது என்பதுதான், ''தத்துவம்'' என்பதற்குப் பொருளாம். இத் தத்துவம் என்பதற்கு உலக வழக்கிற் பொருள் உண்மை, இயல்பு என்று வழங்கப்படும். ஈதல்லாது, ஜீவ தேகாதி பிரபஞ்சத்தில் உள்ள பொருள்கள், அவற்றின் சொரூப, ரூப, சுபாவ விளக்கங்கள் நிலைகள், அனுபவங்கள் எல்லாம் தத்துவப் பேருலகங்களாய்ப் பேசப்படும். இந்த மனிதப் பிறப்புருவமே தத்துவ நிறைவுடையதாம். இவனே இந்தத் தத்துவ ரகசியங்களை எல்லாம் அறியவும், மேல் திருவருளால் தத்துவாதீதத்தில் விளங்கும் மெய்ப்பொருளுண்மையை அறியவும் அடையவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளான்.

தனது உயிர்த் தந்தை ஆகிய கடவுள் எல்லாத் தத்துவங்களுக்கும் மூல காரணமாய் இருக்கின்றார். அவரே, அத் தத்துவங்களனைத்தையும் தோற்றுவித்துத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு பிரபஞ்சக் காரியப்பாடுகளை எல்லாம் இடையறாது புரிந்துகொண்டுள்ளார். இப்படியுள்ள அவர் தானே நம் வள்ளல் மூலம் வெளிப்பட்டு, அவரது பொருட்களும் செயல்களும் இவர் வழியாக நடக்க விதித்துள்ளார். ஆதலின், இவரே தத்துவங்களை

எல்லாம் தன் உளவிருப்புக்கு ஒப்ப, யாவையும் தன் வசம் கொண்டு, தயவோடு தயவுச் செயலோடு விளங்குகின்றார்.

(15)

1143. தன்கையிற் பிடித்த தனிஅருட் ஜோதியை
1144. என்கையிற் கொடுத்த என்தனித் தந்தையே

(உ-வி) ஒப்பற்ற அருட்பெருஞ் ஜோதியைத் தனது கையிற் பிடித்துக் கொண்டுள்ளாராம், நம் ஒப்பற்ற உயிர்த் தந்தை. இதன் கருத்து: அருட்பெருஞ் ஜோதியோ அகண்ட நிறை வான ஒன்றாம். அதனை எப்படிக் கையிற் பிடிக்க முடியும்? உண் மையில் கடவுளும் கடவுள் அருட்பெருஞ் ஜோதியும் ஒன்றே ஆம். இது எங்கும் பரிபூரணமாய் இருந்து எல்லாம் புரிந்து கொண்டுள்ளதாம். இந்தக் கடவுளுக்கு அருளே துணையாக இருந்து எல்லாம் செய்ய வல்ல ஆற்றலோடிலங்குவதாம். ஆகையால், கடவுளுக்கு மனிதனைப் போல் கை கால் முதலியன இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளக் கூடாது. மேலும் அருட்பெருஞ் ஜோதியை ஒரு பேரொளிப் பொருளாகவும் எண்ணிக்கொள்ளக்கூடாது. எப்பொருட்கும் எவ் உயிர்க்கும் அகமாயிருப்பது அருட்பெருஞ் சக்தி, அதனைச் சூழ வுள்ளது எதுவும் ஜோதி வடிவமே. அகத்திலிருக்கும் அருளே புற வடிவைத் தன்னிச்சைப்படி, ஆள்கின்றதாம். இதுவே கடவுள் தன் கையில் அருட்பெருஞ் ஜோதியைப் பிடித்திருப்பதாய்க் கூறப்பட்டுள்ளது.

இப்போது நம் வள்ளலார் திருவருளாலே கடவுள் உண்மை யைக் கண்டடைந்துள்ள காரணத்தால், அக்கடவுளின் கரத்தில் அடங்கிச் செயல்பட்டுக் கொண்டிருந்த அருட்பெருஞ் ஜோதியை, இவரே தனது கரத்தில் பெற்றுவிட்டிருப்ப தாகக் குறிக்கப்பட்டது.. இதுவே ஒருவன் கடவுள் நிலை அடைந்த தற்கு அடையாளமாம். இது தயவும் ஒருமையும் கொண்ட அனக வாழ்வால் பெறக்கூடியதே அல்லாமல், கடவுளை மற்ற மற்ற வகையில் கருதிக்கொண்டும், பக்தி செய்துகொண்டும், துதித்துக் கொண்டும், யோகபாவனை புரிந்துகொண்டும் இருந்தாலெல்லாம் அடைந்துவிட முடியாதாம். இதனால்தான் பழைய நெறிமுறைகள் எதுகொண்டும் கடவுள் அனுபவம், வாழ்வு எய்திட முடியா திருந்ததாம். இப்போதுதான் அக்கடவுளே சுத்த சன்மார்க்க

அனக முறையால் மனிதனில் வெளியாகி இவனைத் தன்மயமாய் வாழச்செய்து விட்டுள்ளாராம்.

(16)

1145. தன்னையுந் தன்னருட் சத்தியின் வடிவையும்
1146. என்னையு மொன்றென வியற்றிய தந்தையே

(உ-வி) நமது கடவுள் உண்மையை இப்படிக் கண்டு கொள்ளச் செய்கின்றது, அவர் தம் திருவருளின் செயலேயாம். கடவுளும் அவர்தம் சக்தியும். வேறுவேறாகக் கருதிக்கொள்ளப் படினும், உண்மையில் பிரிவற்ற ஒன்றாய் இருக்கின்றதாம். அருட் பெருஞ் ஜோதியைக் கடவுளாகக் கொள்ளும்போது ஜோதியை வடிவாகவும் அருளை அதன் சக்தியாகவும் கருதலாகும். இந்த ஒளியும் சக்தியும் பிரிவற்றது என்பது எப்படி எனில், கற்கண்டும் அதன் சுவையும் போலாம். கற்கண்டைக் கண்ணால் கண்டுகொள்ள முடிகின்றது. அதனோடு பிரிக்கமுடியாத அதன் இன்சுவையைக் காணமுடியாது; நாவினால் சுவைத்துத்தான் அறிய வேண்டியுள் ளது. ஜோதியைக்காண்கின்றோம். அருளைக் காணமுடிகின்ற தில்லை; அது நாவினாலும் மற்ற புலன்களினாலும்கூட அறியமுடி கின்றதில்லை; மனோபகுத்தறிவாலும்கூட அறியமுடியாதது அருள். இதனை எதனைக்கொண்டு அறிவது என்றால், மெய்யறிவைக் கொண்டுதான் அறியமுடியும் என்கின்றனர். அந்த மெய்யறிவு எது? மனோ உணர்வை புருவ நடுவுக்கு ஈர்த்து ஒருமைப்படுத்தி உள்ளொளியில் நிலை பெறுத்திப் பழகினால், அக உணர்வு உதிக் கும். தயாநெகிழ்ச்சியும் கூடும்போது அந்த உள்ளுணர்வு மெய்யறி வாக விளங்கும். இது அருள் அறிவு எனவும் கூறப்படும். இந்த அருள் அறிவே, அருள் ஒளி, அருட்ஜோதி எனப்படுவது. உட் ஜோதியின் அருள்தான், அதனை அறிகின்றதாம். இது இந்த மனி தப் பிறப்பு வடிவில் சிர நடு சிற்சபையில் இருந்து தன்னையே தான் அறிவித்தும் அறிந்தும் கொண்டுள்ளதாம். கற்கண்டும் அதன் சுவையும் பிரிக்க முடியாது உள்ளதுபோல், அருளும் ஒளி யும் அல்லது ஒளியும்அருளும் பிரிவற்று உள்ளது என்று உணர் கின்றோம்.

கற்கண்டு இயற்கையாய் இன்சுவை உடையதுபோல், கட வுட் ஜோதியும் இயல்பாய் அருளோடு இருக்கின்றது என்பது

விளங்குகின்றது. அக்கற்கண்டின் சுவையை அனுபவித்து, இனிக் கின்றது என்று வெளியிடுவதற்கு ஒரு மனிதன் அல்லவா வேண்டி யிருக்கின்றது. இப்படிப் புலன் இன்ப அனுபவத்திற்கே ஒரு மனிதன் தேவையென்றால், அருளால் காணவும் அடையவும் இருக்கும் கடவுள் அருட் ஜோதியின் உண்மையைக் கண்டு அனு பவிக்கவும் வெளியிடவும் இந்த மனிதன் எவ்வளவு முக்கியம் என்று சொல்லவும் வேண்டுமோ! ஆகவே, நம் பதி அந்த ஜோதி யையும் அதன் அருளையும் பிரிவற விளங்க வைத்துள்ளதோடு இந்த மனிதனையும், மனிதன் உண்மையையும், கூட்டித்தான் அருட்ஜோதியாக ஆக்கி அந்த உருவில் அமைத்துவிட்டிருக்கின் றார். இந்த உண்மையே, ''தன்னையும் தன்னருட்சக்தியின் வடிவை யும் என்னையும் ஒன்றென இயற்றிய தந்தையே'', என வியந்து கொண்டுள்ளார் நம் வள்ளற்பிரான். இப்படி அமைக்கப்பட்டுள்ள நமது இறையருள் ஒளியின் அனுபவம் நமக்கு ஏன் விளங்கவில்லை என்றால், நாம் அருளால் அகநிலை நின்று வாழாது, உடற்பற்றால் மருள் உணர்வோடு, இருள் உலகில் இன்னலில் இன்பங் காண வீணில் உழன்று கொண்டிருப்பதால்தான் நம் இயல் உண்மை இறைநிலை அறியாது கிடக்கின்றோம். அனக நெறியால் அக மிருந்து வாழ்வோம். ஆனந்தமுறுவோம்.

(17)

1147. தன்னியல் என்னியல் தன்செய லென் செயல்

1148. என்ன வியற்றிய வென்றனித் தந்தையே

(உ-வி) கடவுளின் இயல் என்ன, செயல் என்ன, எல்லாம் அருளே என்பது இன்று காண்கின்றோம், அந்த அருளைத் தய வாகக் கொண்டு தெளிகின்றோம். ஆண்டவர் தம் அருளையும் நம் மையும் ஒன்றென இயற்றியுள்ளதாக முன் அடியிற் கண்டோம். அக்கருத்தை இன்னும் சற்று தெளிவாகத் தெரிவிக்கவே, ''தன் னியல் என்னியல், தன் செயல் என் செயல்'' என்ற அடியால் நம் பெருமான், அருட்ஜோதியின் அருளாகிய அதன் இயலே நாம் என்பதையுணர்த்துகின்றார். இந்த அருளாகிய இயல்பே நாம் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழ் இலக் கணத்தில் நாம் என்பதும் நான் என்பதும் தன்மையாகக் கூறப் பட்டுள்ளனவாம்.

கடவுளின் இயல், அவரைப் பிரிந்திருப்பதில்லை. அதுபோல் அவரது தன்மையாகிய நாமும் பிரிந்திருக்கவே முடியாது. இது அக இயல் உண்மை; உயிர்த் தந்தையின் செயல், புறவுடற் பற்றால், நம் அருளியல் உண்மை யுணராது, தேகமே நாம் என்று இருக்கும்போது, கடவுளைப் பிரிந்துள்ளதாகத் தோன்றுகின்றது. இந்தப் பற்று நீங்கி அருள் ஞானம் வந்தால் நமது இறை இயல் உண்மை தெற்றென விளங்கும். நம் பதியே திருவருளால் எவரு மாய் உள்ளதும், தானே இருந்து எச்செயலும் புரிந்து கொண் டுள்ளதும் அறிகின்ற தருணம், நாம் என்பதும், நம் செயல் என் பதும், உண்மையாக, அவரும் அவர் செயலுமே எனப் புரிந்து கொள்ளுகின்றோம். அக அனுபவத்திலிருந்து வாழ்வது கடவு ளின்பப் பெருஞ் செயலாகும்.

(18)

1149. **தன்னுரு வென்னுரு தன்னுரை யென்னுரை**
1150. **என்ன வியற்றிய வென்றனித் தந்தையே**

(உ-வி) இருப்பது கடவுள் ஒருவரே. அக் கடவுள் பேரருள் ஆற்றலோடு விளங்கிக்கொண்டிருக்கின்றார். அவர்தானே தன் னருளால், நம் ஒவ்வொருவருமாய் உள்ளிருந்து விளங்கிக் கொண்டும், உரைசெய்துகொண்டும் உள்ளார். இது அருட்தந்தை யின் விளங்கு முறையாம்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், எவருள்ளும் இருந்து கொண்டு, உயிரும், உணர்வும், சொல்லும் செயலும் கொண்டு விளங்குதல் உண்மையே. எனினும், அவர் அகமிருந்து தன் நித்திய உருவைக் காட்டாது, தன் அநித்தியப் புற வடிவில் இருந்துகொண்டு, தன் அக உண்மை விளக்க அருள் உரையை வெளியிடாது, புறப்புலன் அனுபவ புனையுரையைத் தந்து கொண்டுள்ளாராம். இதனால், அகத்தே மெய்யின்ப நிலையில் விளங்கிக்கொண்டேயுள்ள அவர் புறத்தில் பொறி புலன் வாழ் வில் சுக துக்கச் சூழலில் உழன்றுகொண்டிருப்பதாகத் தோன்று கின்றது; இந்தப் புறநிலை யனுபவம் அவரைச் சார்வதேயில்லை. ஏனெனில் அவருள்ள அந்த சுக நிலை எதனாலும், எவராலும் பாதிக்கப்படாததாம். இந்தப் புற அனுபவம் எல்லாம் உயிரள வில் நின்று ஒழிவனவே. அருட்பக்குவம் அடைந்த மனிதன் இந்த

உயிர் நிலைக்கு அப்பாலுள்ள அருள் நிலையுற்று, இயல்பாகவே தான் அந்த அருணிலையில் இருப்பதாக உணர்ந்து அங்கிருந்தே வாழ்கின்றான். இந்நிலையனுபவமே நம் அருட்பிரகாசர்க்கு உரிய தாயுள்ளதாம். இதனால் அகம் வளர் பதியின் உருவும் உரையும் இவர்க்குரியதாக விளங்கும்.

அருட்பொதுவில் விளங்கும் அழியாப் பதியுருவே தன்னுரு வாகவும், அவரது அருள் உரையே தன்னுரையாகவும் கொண்டு அகமிருந்த வண்ணம் அனக விரியுருவும், விரிவுரையும் கொண்டு விளங்குகின்றார் இவர். இதனால் இவர் இப்பொழுது அழிவில்லா அருட்பிரகாச வடிவொடு, அருளுரையோடு விளங்கிக்கொண்டுள் ளார் என அறியலாகும்.

(19)

1151. சதுரப் பேரருட் டனிப்பெருந் தலைவனென்
1152. றெதிரற் றோங்கிய வென்னுடைத் தந்தையே

(உ-வி) பேரருள் என்ற ஒன்றில் மற்றெல்லா ஆற்றலும் செயலும் அடங்கும். ஆதலின் பேரருள் கொண்டிலங்கும் நமது தனித் தலைமைப் பெருந் தந்தையார் எல்லா ஆற்றலும் படைத்த பெருமைப்பாடுடையவர் ஆவர். இவ்வுண்மையை விளக்கவே சது ரப் பேரருள் என ஓதப்படுகின்றது. வெளிப்பட்டுப் பரவி விளங் கும் ஆற்றலைச் சதுரப்பாடு எனக் குறிப்பிடல் தமிழ் மரபு. இப் படிப் பேராற்றல் கொண்டிலங்கும் நமது அருள் தந்தையார்க்கு வேறு எவரும் எதுவும் ஈடு சோடு இல்லை என்பது உலகு கண்ட உண்மையாகும். இவ்வொப்பற்ற நமது தந்தையார் ஒருவரே எவ் வுலகத் தெவ்வுயிர்க்கும் தனிப்பெருந் தலைவராக உள்ளார். இப் பெருமை கண்டு, உரிமை கொண்டு அவரையே போற்றிக் கொள்ளுவோம் நாம்.

(20)

1153. மனவாக் கறியா வரைப்பினி லெனக்கே
1154. இனவாக் கருளிய என்னுயிர்த் தந்தையே

(உ-வி) கடவுள் உண்மை, மனதிற்கு விளங்குவதாயில்லை யாம். மனதிற்கு விளங்காத ஒன்றை எண்ணவும் கருதிக்கொள்

ளவும் முடியாது. அப்படிப்பட்டதை வுரைக்கவும் வரைந்து காட்டவும் முடியாதுதானே. ஆகையினால்தான் மனோ பகுத்தறி வாளர்கள் எவ்வளவு முயன்றும் கடவுளுண்மையை அறியாது போவதால், கடவுளைப் பற்றி ஐயமும் நம்பிக்கையின்மையும் கொண்டு மறுப்பு கூறுகின்றனர். ஆத்திகர் என்று சொல்லிக் கொள்கின்றவர்களும் உண்மையை அறியாமலே கடவுளை நம்பிக் கொண்டும் அருள் அடையாது வீண் போகின்றார்கள். உண் மையை அறிந்து அடைவதற்கே மனமும் வாக்கும் செல்லாத மேனிலையில் அருளால் விளங்கவைத்திடுகின்றார் நம் பதி.

சிந்தையும் சொல்லும் செல்லாச் சிற்றம்பல அருள் வெளி யிலே விளங்கும் நம் அருட்பெரும்பதி, நம்மையும் அருளாலே அவ ருடன் கொண்டுள்ளார் என்று அறிகின்றோம். அவரது அருளே நாமாய் இருக்கின்றதினால், அருள்வாக்கு நமக்கு அனுபவ மாகின்றதாம். இவ்வனுபவம் பெறற்குத் தான் மனமும் மொழியும் அடங்கிய மோன நிலையில், அந்த எல்லையில் இருந்து உள் விழிப்பும், உள்ளத்துணர்வில் தயவும், புலன் அனுபவத்தில் அவா இன்மையும் விளங்கவேண்டியுள்ளன. இவை எல்லாம் பக்குவ நிலைக்கு ஏற்பச் சிறிது சிறிதாகத்தான் பயன் விளைவிக் கும். தீவிரமான முயற்சியுடையோர் விரைவில் அருள் உண்மை கண்டு அடைந்து இன்ப நிலை பெறமுடியும். எல்லோரும் அக அனுபவம் பெற்று விளங்கற்குரியவர்களே. ஆகையால், தளர்வு மனப்பான்மை யடையாது முயன்றால் திருவருளே கூட்டி வைப்பது திண்ணம்.

(21)

1155. உணர்ந்துணர்ந் துணரினு முணராப் பெருநிலை
1156. யணைந்திட வெனக்கே யருளிய தந்தையே

(உ-வி) கடவுள் விளங்கும் நிலை பெரு நிலையாம். அந்தப் பெருநிலையைப் பற்றிய உண்மையைப் புரிந்து கொள்ளுவது மனோ சக்திக்கு அப்பாற்பட்டதாம். ஒருவன் மலைமேல் ஏறிச் செல்லச் செல்லக் கீழுள்ள சூழ்நிலையை விரிவாகக் காணமுடி யும். அப்படி ஏறி மலையுச்சியை அடைந்துவிட்டால், அதற்கு மேல் வான்வெளிதான் அகண்டமாய் விரிந்து கிடக்கின்றது. அவ் வெளியில் சாதாரணமாய் செல்லமுடியாது. பொறியியற் சாதனை

யால் வான் வெளியிலும் செல்லமுடிகின்றதாம். இதுபோலத் தான் மனம் புலனறிவு நிலையைத் தாண்டிப் பகுத்தறிவின் உச்சியில் நிற்கும்போதும் மேல் தோன்றுவது அகண்ட வெளியின் நிலையாம். அப்பெரு வெளியைப் பற்றி ஆய்ந்து அறியத்தான் தன் உணர்ச்சியாம் பொறியிற் சென்று பார்க்கின்றான். எவ்வளவு காலம் எப்படி முயன்றாலும் அப்பெரு வெளியின் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குமேல் அறிந்துகொள்ள முடியாதிருக்கின்றதாம். இம் மாதிரியுள்ள நிலையைத்தான், உணர்ந்துணர்ந்துணரினும் உணராப் பெருநிலை என்கின்றார்.

அகண்ட வான் வெளியின் எல்லை மனவாக்குக்கு எட்டாதது. எத்தனை ஆண்டுகாலம் ஒருவன், ஒளி வேகத்தில் (ஒரு வினாடிக்கு 186000 மைல் அல்லது 300000 கிலோ மீட்டர்) சென்றாலும் அவனுடைய ஆயுள் காலத்தில், நூறு ஆண்டுகளில் செல்லும் தூரம் மிக அற்பம்தானாம். இதுபோல் நூறு நூறு பிறவிகளில் தொடர்ந்து சென்றாலும் வான்வெளியின் எல்லை காணமுடியா தென்றால், அது எவ்வளவு விரிவுடையது என்று சிந்தியுங்கள்! இதுபோல்தான் மன மோன நிலைக்கு மேல் விரிந்து கிடக்கும் கடவுள் வெளியின் விரிவுமாம்.

உணர்ந்துகொள்ள முடியாத பெருவெளியின் நிலையை ஆய்வதைவிட்டு, அருள் பெறற்கான ஒருமையும் தயவும்கொண்டு உளமுருகி நின்றால், அகத்தில் அருள்வெளியில் கடவுள் மயமாய் இருக்கமுடியும். அப்படி யிருந்துகொண்டு அக்கடவுள் வெளியின் உண்மையை அனுபவிக்கும்போது அதன் ரகசியம் முற்றும் அறியப்படுவதாம். (அனுபவப்படுவதாம்). அதாவது, அக்கடவுள் வெளியின் வடிவின், இயலின், செயலின் உண்மை எல்லாம் அனுபவமாம்; அது எல்லையற்ற, முடிவற்ற வடிவினதாய், இயவினதாய்ச் செயலினதாய் உள்ளதெனவும், அதனால் அவ்வனுபவ நிலையுறுவோனும் அப்படியே நிறையுற்று என்ஞான்றும் திகழ வல்லவனாகின்றான். ஆம், இதுதான் அருளாலே கடவுட் பெரு வெளியைச் சார்ந்து நின்று அனுபவிக்கப்படும் நிலையாகவிளங்குவது. இதனைத்தான், ''பெரு நிலையணைந்திட எனக்கே அருளிய தந்தையே,'' என்று குறிக்கப்பெற்றுள்ளது.

(22)

1157. துரியவாழ் வுடனே சுகபூ ரணமெனும்
1158. பெரியவாழ் வளித்த பெருந்தனித் தந்தையே

(உ-வி) மேற்குறித்த அகப்பெரு வெளிநிலையுற்ற ஒருவன் அங்கு அருள் உணர்வு கெடாது, மறதி வந்துவிடாது, உலக விடயாதிகள், வாசனைகள் ஏற்படாது அக விழிப்போடு இருத்தல் துரியானுபவ நிலையாம்.இது சாதாரண மக்களுக்கு தெரிவதில்லையாம். பொதுமக்கள் பொறிபுலன் வாழ்வில் உழன்றிருத்தலின் அவர்களுக்குச் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, அல்லது விழிப்பு கனவு, உறக்கம், ஆகிய முந்நிலை அனுபவமே விளங்கும். இந்நிலைகளைக் கடந்து அருணிலை பெற்று அனக வாழ்வு வாழ வழங்கப் பெறுகின்றான். அதுவே சுகபூரணப் பெருவாழ்வு என்று கூறப் படுவது.

முன்னர் யோகானுபவ சித்தி பெற்றவர்கள் இந்தத் துரிய நிலைவரை சென்றும் திருவருள் நியதிப்படி குறிப்பிட்ட காலம் வரை வாழ்ந்துவிட்டு, மறைந்துபோய்விட்டனராம். ஆனால் நம் வள்ளற்பெருமான், இத்திருவருள் விளக்கத் துரிய நிலையில் குரு துரியம் கடந்து சுத்த சிவ துரியானுபவம் வரை சென்று, தான் அதுவாகி நின்று, சுகபூரணப் பெருவாழ்வில் விளங்குகின்றவராகி விட்டார். இதுவே, இவர் தம் நித்தியானந்த சிவதுரியாதீத வாழ்வு நிலையாகும். இந்நிலை அனுபவம் திருவருளைப் பூரணமாகப் பெற்றவர்கள்தாம் அறியவும் அடையவும் முடிகின்றதாம். ஆகையால் சாதாரணமாய் விளக்கிக் காட்டித் தெளிவு செய்திடல் முடியாது.

(23)

1159. ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
1160. பேறளித் தாண்ட பெருந்தகைத் தந்தையே

(உ-வி) உயர் அறிவு படைத்த மக்கள் தம் பெரும் முயற்சியால், தவ ஆற்றலால் பல பல சித்திகளை அடைந்து விளங்குகின்றார்கள். அச்சித்தி நிலைகள் பலவாகிய பதவிகளாகப் புகலப் படும். அவையெல்லாம் சாதாரண உலகியற் பதவிகளுக்கு மேற்பட்டவைகளாம். இந்திராதி தேவப் பதவிகளும், சித்தர் முத்

தர் பதவிகளும் பிரமாதிகர்த்தர் பதவிகளும், இன்னும் எத்தனையோ பதவிகளும் உள்ளனவாம். இப்பதவிகள் இத்தனைதான் என்று கூறற்கரிதாதலின், இவை ஈறிலாப் பதங்கள் என ஓதப் பட்டுள்ளனவாம். ஈறிலாப் பதங்கள் என்றால், எண்ணிக்கையற்ற பதவிகள் என்றும், முடிவு பெறாமல் குறைவு பட்டுள்ள பதவிகள் என்றும் பொருளாம். இப்படிப்பட்ட பலவாகிய அரைகுறையான பதவிகளை யெல்லாம் கடந்த நிலையில் உள்ளது, பெறலரும் பேறு எனப்படும் அருட்பெருஞ்ஜோதிப் பதவியாம். இந்தப் பெரும் பேற்றினை வழங்கி வாழ்விக்கும் 'பெருந்தகையாம் நம் அருள் தந்தையை உளங் கொண்டு போற்றுவோம்.

நம் பெருமானின் அருட் பெருஞ்ஜோதிப் பதவி முன்னர் எவரும் அடையாத ஒன்றாம். ஆனால் அது, இப்போது எவர்க்கும் பெற்றுக் கொண்டு வாழ உதவி இருக்கின்றார் நம் அருள் தந்தையார். அருட்பெருஞ்ஜோதிப் பதவியில் விளங்குகின்றது திரி தேக சித்தி நிலையாம். அருள்+பெரும்+ஜோதியே, ஜோதி பெரும், அருள் என்னும் முறையில் சுத்த, பிரணவ, ஞான தேக நிலையைச் சுட்டுகின்றனவாம்.

(24)

1161. எவ்வகைத் திறத்தினு மெய்துதற் கரிதாம்

1162. அவ்வகை நிலையெனக் களித்தநற் றந்தையே

(உ-வி) அருட்பெருஞ்ஜோதியின் அனுபவ நிலையானது, நம் அருட்பெருந் தந்தையாரின் இயற்கையுண்மை நிறை வண்ணமாகும். ஆதலின் அந்நிலைப் பேற்றை அடைவது என்பது, அவ்வருள் மயமாவதேயன்றி வேறல்ல. மற்ற எவ்வகைத் திறத்தினும் எய்துதற்கரிதாம். அதாவது, மனோசக்தி, தேகேந்திரிய சக்தி, யோக சக்தி. ஞான சக்தி, மந்திர சக்தி, தந்திர சக்தி, பொருட் சக்தி, கிரியா சக்தி, இச்சா சக்தி, மாயா சக்தி முதலிய எவ்வகைச் சக்தியைக் கொண்டும் நம் பதிநிலையை அடைதல் கூடாதாம். எனவே, அந்த எவ்வகைத் திறத்தினிடத்தும் பற்று வைத்து முயன்று, அடைந்து மேனிலைக்கு ஏறாது, தடைபட்டு போகாது அருள்பாலித்து ஆண்டு கொண்டுள்ள அருள் தந்தையை அனவரதமும் போற்றுவோம்.

முன்னிருந்த மக்களிற் சிறந்தோர் எவ்வளவோ காலமாக எப்படியெல்லாமோ தவமுயற்சிகள் செய்து அடைந்த அற்புத சித்திகளும், அரிய பதவிகளும், பெரிய அனுபவங்களும் குறை வும் நிலையாமையும் உள்ளனவாய், அருட்பெருஞ்ஜோதியால் இன்று கண்டு அடையப் பெற்றுள்ளதாம். வேறுவகையாகக் கூறின், எவராலும், எவ்வாற்றலாலும், எவ்வகையிலும் அடை தற்கு முடியாத அருட்பெருஞ்ஜோதி நிலையை, அதுவே வள்ளல் வடிவில் நிறைநிலை பெற்று, அவராய் விளங்குவதாய், அருட்பிர காசமாய்த் திகழ்வதாய் உணர்கின்றோம். இப்படிக் கடவுளே அருட்பிரகாசராய்த் திகழ்கின்ற உண்மை அருளாற் காண்கின் றோர்களே, நித்திய பரம்பொருளை வள்ளல் வடிவில் காணக் கூடும். ஏனையோர் அது வேறு, இவர் வேறு என்று கருதியும் வெளியிட்டும் புறம் போந்து ஒழிகின்றார்கள். அது தவறு. வள்ளல் வடிவில் விளங்கிக் கொண்டுள்ளது ஒவ்வொருவரின் உண்மைக் கடவுளாய்க் கண்டு உலகவர்க்கு அன்பு செய்திடல் வேண்டும்.

(25)

1163. **இனிப்பிற வாநெறி யெனக் களித்தருளிய**

1164. **தனிப்பெருந் தலைமைத் தந்தையே தந்தையே**

(உ-வி) அகக் கடவுளான்ம வடிவம் பிறப்பும் இறப்பும் இல்லாதது. இந்த ஆன்மாவைச் சூழ, ஓர் ஒரு தேகம் தோன்றி விளங்கிப் பின் மறைவதுமாய் இருக்கின்றதாம். ஆன்மாவைச் சூழ உடல் ஆக்கப் பெற்று விளங்குவதுதான் பிறப்பு எனவும், அவ்வுடல் நீக்கப்பெற்று விடுவதுதான் இறப்பு என்றும் கூறப் படுகின்றன. ஆன்மாவுக்கு இந்தப் பிறப்பும் இறப்பும் ஏன் வந்து கொண்டே யிருக்கின்றன? உண்மையை யுள்ளபடி அறியா தவர்கள், இப்பிறப்புகளுக்குக் காரணம் ஏதேதோ சொல்லுவர்; அவை எல்லாம் மாயா தோற்ற மனோகற்பனா கூற்றுகளேயாம். திருவருளாலே உண்மையைக் காண முடியும்; அது இதுவாம்.

கடவுள் அருட்பெருஞ்ஜோதியாய் எங்கணும் நிரம்பி என்றும் இருந்து கொண்டுள்ளார். அந்தக் கடவுளின் அருளே உள்ளீடாய் இருந்து புறஜோதி நிலையைப் பலபல பொருள் களாக, ஆற்றல்களாக, உணர்ச்சிகளாக, அறிவு விளக்கங்களாக

அருள் அனுபவங்களாக உருவாகிச் சூழ்வதும் மறைவதுமாய் இருக்கின்றனவாம். இப்படி விளங்கிக் கொண்டிருக்கிறது அந்த அருட்பெருஞ்ஜோதி கடவுளின் இயல்பாம். இந்த இயல்புப்படி ஒவ்வொரு அணுவுக்கும் உள்ளீடாய் அருள் இருந்து கொண்டு சூழ் அருள் ஒளியைப் பலவேறு தோற்றங் கொள்ளச் செய்து கொண்டுள்ளதாம்.

இப்பொழுது ஓர் ஆன்ம அணுவை எடுத்துக்கொள்ளுவோம். இதன் உள்ளும் புறமும் அருளும் பெருஞ்ஜோதியும் இருந்து கொண்டுள்ளன. அவ்வக அருள், புற ஒளியைப் பலவேறு தோற்றங் கொள்ளச் செய்து வருகின்றதாம். புற வடிவம் இம் மனித தேகமாக ஆகின்றபோது, பகுத்தறிவுக்கு அப்பால், அருள் உணர்வு வெளியாகி, அது கொண்டு அக அருளின் பெருந்திறனை அறியவல்லானாகித் தோற்றி சூழ்ந்து விளங்கிக் கொண்டுள்ள தாம். அவ்வருட்பெருஞ்ஜோதி இப்பொழுது அகமும் புறமும் என்ற இருநிலை போய்ப் பிறிவற்ற ஒன்றாய் விளங்குகின்றது. இதுவே கடவுள் வடிவே மனிதவடிவாய் அனுபவப்பட்டு விளங்கு நிலை. இந்த மனிதன், கடவுள் வடிவுற்றிலங்குவதாகும். இது, மேற் கொண்டு அழிவதில்லை, மாறுவதில்லை. ஆகவே, இந்த அருள் ஒளி மனிதன் தன்னுருவைப் பிரியாது அப்படியே நிலவுகின்ற வனாகி விட்டதால், இறப்பும் பிறப்பும் தொடருவதில்லையாம்.

மாற்றமுற்றுக்கொண்டேயிருக்கின்ற ஜோதியாலான தேகம் அகஅருளின் சேர்ப்பால், அருட்ஜோதி தேகமாகி விட்டதால், அப்போது முதல் அந்த தேகம் மாற்றமில்லா நிலை அடைந்து விடுகின்றதாம். இது, இனிப் பிறவா நெறி ஆம். இப்படி மாற்ற மில்லா அருட்ஜோதி தேகம் அடையாதவரை அந்த ஆன்மாவுக்கு அகமும் புறமுமான இருநிலை இருக்கும்; புறவடிவப் பிறப்பும் இறப்பும் இருக்கும். பிறவித் தொல்லை வேண்டாம், பிறவியே வேண்டாமென்று கடுந்தவ முயற்சியாலோ, தீவிர பக்தியாலோ, திடசித்த சமாதியாலோ உள்ளொடுங்கிப் போனாலும், அந்த ஆன்ம அணுவை சூழ இருக்கும் ஜோதி, மனித 'வடிவோ,' பிற உயிரின வடிவோ ஆகாது சூனியமாய் இருந்து கொண்டுதான் இருக்கும். ஆன்மாவுக்கு இச்சூன்யச் சூழலால் எந்த விதமான வாழ்வும் பயனுமில்லை; அது திருவருட்சம்மதமுமல்ல. ஆகை யால், அந்த ஆன்மா எவ்வளவு காலம், என்ன வரம் பெற்று பிறவா நிலையிற் கிடந்தாலும், மறுபடியும் திருவருளால், அருளனு

பவ வாழ்வு வழங்கப்படற்கு மனிதப் பிறவி அருளப்படுவதாம். ஆகவே, ஆன்மா கடவுள் ஐக்கியத்தில் மறைந்து கிடப்பது முடிவல்ல. அது இனிப் பிறவா நெறி ஆகாது. அவசியம் பிறக்க வேண்டியதே கடவுள் ஆணை.

இனிப் பிறவாதிருக்க வேண்டின், இப்போது உள்ள இந்தப் பிறப்புருவத்தை எவ்வகையிலும் இழந்துவிடக் கூடாது. இதன் அசுத்த அநித்தியத் தன்மையை அருள் ஒளி நிறைவால் சுத்த வுடம்பாக்கிக் கொண்டு நித்தியமாய் விளங்கிடச் செய்திடல் வேண்டும். மற்ற விதத்தில் தேகம் நித்தியத்துவம் அடையாது. நித்திய நிலை ஏற்பட்டுவிட்டால் மரணமில்லை, இறப்பில்லை. எனவே, இனிப் பிறவாதிருக்க வேண்டின், இப்பிறப்பே இறவா மையுற்றிடுதல்தான் முறை. இதனையே நம் வள்ளல் அருட் பெருஞ்ஜோதித் தந்தையாரால் வழங்கப் பெற்றுள்ளது உண்மை! உண்மை!!

210. உயிர்த் துணை

(1)

1165. பற்றயர்ந் தஞ்சிய பரிவுகண் டணைந்தெனைச்
1166. சற்றுமஞ் சேலெனத் தாங்கிய துணையே

(உ-வி) ஒருவராய் உள்ள அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், தன் அருள் உண்மை எல்லாம் வெளிப்பட்டு, ஆனந்த வாழ்வு எங்கெங்கும் விளங்கச் செய்தற் பொருட்டே இந்த மா பிரபஞ்ச செயற்பாட்டை அளவு கடந்த நெடுங்காலமாக மேற்கொண்டுள் ளார். அந்தக் கடவுள் ஒருவராய் இருந்த போதிலும் தன் பேரருட் பெருஞ்சக்தித் திறத்தால் எங்கும் பூரணமாய், ஆன்ம அணுக்கள் தோறும் நித்தியானந்த அனுபவம் வெளியாக்கி விளங்கச் செய்ய உள்ளார். இதனால், அந்த ஆன்ம அணுவை உள்ளும் புறமும் சூழ்ந்து நின்று வாழ்விப்பதற்கு எல்லா வகை யிலும் உதவிக் கொண்டுள்ளார். தந்தையாயும், தாயாயும் தன்னை ஒரு சேயாயும் தோற்றுவித்ததோடு, உயிர்த்துணையாயிருந்தும் அகத்தும், புறத்தும் உதவிக் கொண்டுள்ளாராம்.

நம் வள்ளற் பெருமான் கடவுளிடத்தில் வைத்திருக்கும் பற்று அளவு கடந்தது. அப்படியிருந்தும், ஓர் ஒரு சமயம் புறச்

சூழலாலும், மன மறதியாலும் அக்கடவுட்பற்று தளர்கின்ற போது இவர்க்குச் சற்று பயம் உண்டாகி விடுகின்றதாம். ஏனென்றால், ''கடவுளை மறந்து இந்த உலக விஷயத்தில், கவனக் குறைவாக இருந்துவிட்டோமே, இதனால் என்ன கேடு நேருமோ, யாது வருமோ,'' என்று அஞ்சி விதிர் விதிர்க்கின்றார். இந்தப் பரிதவிப்பைக் கண்டு எப்படிச் சும்மா இருப்பார் அகமும் புறமும் துணையாய் விளங்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்! மெய்த் தொண்டர்க்குத் தொண்டு செய்யும் மெய்த்தொண்டரல்லவா நம் அருட்பெரும்பதி. ஆகையால், நம் வள்ளலடிகளின் உள்ளத் தவிப்பையுணர்ந்த நொடியிலே, ஒரு துணைவனாகத் தோற்றிப் பக்கத்தில் வந்து சார்ந்து மிகப்பரிவோடு, ''சற்றும் அஞ்ச வேண்டாம், நீ மறந்தாலும் உன்னோடு இடையறாதிருந்து வரும் யான், உன்னைக் கவனித்துக் கொண்டுதானே இருக்கின் றேன். உனக்கு எதனாலும் தீங்கு நேராத வண்ணம் காத்துவரு வதுதானே என் கொள்கை. ஆகையால், எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. உனக்கு எல்லா நன்மையும் விளையும்,'' என்று தேறுதல் கூறித் தெளிவு படுத்தி ஆறுதல் அடையச் செய்கின் றார் அந்த அருள் துணைவர்.

(2)

1167. தளர்ந்தவத் தருணமென் றளர்வெலாந் தவிர்த்துட்
1168. கிளர்ந்திட வெனக்குக் கிடைத்தமெய்த் துணையே

(உ-வி) உடலிலே, உயிரிலே உணர்விலே நலிவு ஏற்பட்டுத் தளர்ச்சியுறுகின்ற சமயத்தில் உதவி புரிந்து நலமுறச் செய் கின்ற உண்மைத் துணைவர் யார் உளர் இவ்வுலகில்? அப்படிக் கிடைக்கின்ற புற உதவிகள் எல்லாம் மிகச் சிறுமையுடையனவே யாம். அவைகள் யாவும் ஓர் எல்லை வரைதான் பயன்படும். உள்நிலை சரியாயிருந்து, புற உதவியை ஏற்கும்வரைதான் உபயோகப்படும்; அதற்குமேல் இல்லை.

நமது உண்மைத் துணையாகிய அருட்பெருஞ்ஜோதியோ சதா உள்ளிருந்து தாங்கியும், புறத்திருந்து அணைந்தும் தளர் வெலாம் போக்கி ஒளிபெற்றிலங்கிடச் செய்கின்றார். ஆதலின் இவ்வருள் ஒளியையே மெய்த்துணையாய்க் கொள்ளல் வேண்

டும். இவ்வொளிதான் நம் பெருமானுக்குச் சோர்வைக் களைந்து ஒளிபெறச் செய்ததும், அதுவே இவர்தம் உள்ளத்தில் கிள ரொளி வீசிக்கொண்டு வளரொளி மணிமயமாய்த் திகழ்கின்ற தாகவும் உள்ளதாம். இவ்வொளியே நம் ஒவ்வொருவருக்கும் உள் விளங்கி நின்று உதவி செய்து உவகை கொள்ளச் செய்து விடும் என்பது நிச்சயம். ஆதலின், இவ்வுட்டுணையை ஒருமை யோடு பற்றிக் கொள்ளுவோம், பற்றிக் கொண்டு, மறவாது சொல்லிலும் செயலிலும் துதித்தும், தயவுச் செயல் புரிந்து கொண்டும் இருப்போம். இந்த நற்றுணை நம்மைக் காக்கும்.

(3)

1169. துறையிது வழியிது துணிவிது நீசெயும்
1170. முறையிது வெனவே மொழிந்தமெய்த் துணையே

(உ-வி) மெய்ப்பொருளை அடைவதற்கு உதவ வந்துறும் துணைவன், உண்மையானவனாக, எல்லாம் நன்கு அறிந்து தெளிந் தவனாக, மெய்ப்பொருளை அனுபவத்திற்கொண்டு உள்ளவனாக, நாடிவந்து அடைந்தோரை உவகையோடேற்று அருள் புரிபவ னாகவும் இருத்தல் வேண்டும். அவ்வண்ணமான அருட்பெருஞ் ஜோதியையே நமக்குத் துணையாகப் பெற்றுள்ளோம். அது நம் குறிக்கோளாகிய அருட்பெருஞ்ஜோதிநிலையை எய்துவதற்குரிய (துறை) இடம் இதுவென்றும், அதற்குச் செல்லும் மார்க்கமிது என்றும், பற்று கொள்ளவேண்டிய லட்சியப் பொருள் இது வென்றும், நாம் நடந்துகொள்ளவேண்டிய புரியத்தகுந்த வகை யிது என்றும், இடையறாது ஊக்கிக்கொண்டேயுள்ளது அந்த நற்றுணை. இதுபோன்ற ஒரு நற்றுணை நாயகனை அல்லது நண்பனைப் புறத்தில் எங்கு தேடினும் காண்டற்கில்லையாம்.

உலகில் தயவும், ஒருமையுரிமையும் இருந்தால் ஒருவர்க் கொருவர் நல்ல துணையாக இருந்து உதவிபுரிந்து வாழ்வில் நலம் காணச் செய்தல் கூடும். இப்போது தயவின்மையாலும், புலன் இச்சை மிகுதியாலும் மக்கள் வாழ்வில் உண்மைத் துணைநலம் காண்பது அரிதாயுள்ளதாம். அப்படிப் பிறர் ஒருவர்க்குத் துணை புரிந்தாலும் கைமாறு கருதாது புரிகின்றதில்லை. உதவி பெறு நரும் செய்ந்நன்றி மறவாது சமயத்தில் உதவுவதுமில்லை. உண்மையான அருட்குருவினையடுத்து உபதேசம் பெற்று உய்ய

லாம் எனக் கருதி மெய்த்துணையை நாடிச்சென்று எங்கு தேடி னும் அப்படிப்பட்ட உயிர்த்துணைவனைக் காண்பது முயற்கொம் பாயிருக்கின்றது இவ்வுலகில். ஆகவே மெய்த்துணைப்பொருள் மெய்ப்பொருளான கடவுளே என ஓர்ந்து தெளிந்து சுத்த சத் விசாரத்தால் அகத்தில் அப் பொருளைக் கண்டு ஒன்றிவிட்டால், அன்பு பெருகப் பெருக அகத்துணை விளக்கமும், புறத்துணை அனுபவங்களும் பெறலாம்.

(4)

1171. எங்குறு தீமையு மெனைத் தொடராவகை
1172. கங்குலும் பகலுமெய்க் காவல்செய் துணையே

(உ-வி) ஒருவனுக்கு எவ்வளவு தீமைகள், எப்படி எப்படி எல்லாம் வந்து வந்து சார்கின்றன. அண்டம், பிண்டம் ஆகிய இடங்களில் அகம் முதலான நான்கு இடத்திருந்தும், தன் செய லாலும், பிறர் செயலாலும், முன்வினை விளைவாலும், நிகழ் வினைச் சூழலாலும், எண்ணற்ற தீமைகள் வந்து வந்து சார்கின்றனவாகக் கூறப்படுகின்றன. அப்படித் தீமைகள் வருதலை அறிவது அருமையே. அப்படியே அறிந்தாலும்கூட அவற்றை வருமுன் தடுப்பதோ, வாராது தவிர்ப்பதோ வந்தபின் சாராது விலக்கு வதோ திருவருளாலன்றி பிறிதெதனாலும் முற்றிலும் கூடாதாம். அருள் அடைந்து, பெருநலம் பெறவேண்டுமென்ற திருவுள்ளத் தின் ஆணைப்படியேதான் எல்லா நன்மைகளும் தீமைகளும் வந்து சூழ்கின்றனவாம். ஆனால், அருள் பெறவேண்டியே, இச்சூழ் நிலைகள் வருவிக்கப்படுகின்றன என்ற உண்மையை அறியாமலும் அதற்குத்தக நடக்காமலும், அல் வழியிற் சென்று அல்லலுறுகின்ற னர் மக்கள்.

நன்மைகள் வரும்போது புலனின்பத்தில் மூழ்கி, மருளில் மயங்கி வீண் போகின்றனர் பலரும். ஆனால் தீமைகள் அடர்ந்து வரும் சமயம் அதிக அவத்தைப்பட்டும், பலவித தந்திர உபாய சாந்தி பரிகாரமுறைகளைக் கொண்டும், அத்தீமைகளை விலக்கிக் கொள்ளவே முயலுகின்றனர். இந்த நெறியல்லா நெறிகளைவிட்டு மெய்யருள்நெறிக்கு வந்தால், எந்தவகை நன்மையாலும், தீமை யாலும், மேலான இன்பவாழ்வு பெற முடியும். இது நம் நற்றுணை நாதரின் ஆணையாம்.

நம் வள்ளல் அடிகளார் அருட்பெருஞ்ஜோதித் துணையை அடைந்துவிட்டுள்ளதால், அதுவே அவர்க்கு அல்லும் பகலும் மெய்க்காவலாக இருந்து எத் தீமையும் அவரைச் சிறிதும் தாக்காமல், நெருங்காமல், பின்தொடராமல், துணைபுரிந்து வருகின்ற தாம். இவ்வுண்மையை யுணர்ந்து இவ்வகத்துணையை உளம் கொண்டு தயவோடு வாழ்ந்தால் என்றும் இன்போடு தழைத் தோங்கலாம்.

(5)

1173. வேண்டிய வேண்டிய விருப்பெலா மெனக்கே
1174. யீண்டிருந் தருள்புரி யென்னுயிர்த் துணையே

(உ-வி) அகத்துணையாய், நமது ஆருயிர்க்கு ஓர் உறவாய் நம்மோடு உடனாய் இருந்துகொண்டு, திருவருள் பாலிக்கின்றார் நம் பதி. அருள் அனுபவம் விளங்கும் இடம் அக ஆன்ம சிற்சபை யாக இருக்கின்றது. இது நம் தலைநடு நிலையில் நிலவுவது. ஆகை யால், தயவோடு கூடிய மன ஓர்மையால் அந்த ஆன்ம சிற்சபை யில் தங்கியிருந்துகொண்டு யாவையும் பரநலம் கருதிப் புரிந்து வந்தால், அவ்விடத்தில் அறிவறியா அருள் இன்பம் தோன்றும், அனுபவிக்கலாகும்.

அருள் அம்பலத்தில் விளங்கும் நம்மோடு ஒன்றியுள்ள நம் பதி, நமக்கு எவை எவை தேவையோ அவற்றையே வேண்டச் செய்கின்றார்; அப்படி வேண்டச் செய்ததோடு, வேண்டியாங்கு உடனுக்குடன் அவற்றைத் தருவித்துக் கொடுகின்றார். நாம், அவர்க்கே, அடைக்கலமாகி அகவடிவிலிருக்கின்றதால், அவ ருடைய திருவுளத்திச்சைப்படிதான் எதையும் வேண்டுவோம், மற் றெதையும் வேண்டோம், வேண்டச் செய்யவும் மாட்டார். ஆகை யால், வேண்டச் செய்ததைத் திருவருளால், எங்கிருப்பினும் இமைப் பொழுதில் வரவழைத்து, வழங்குவித்து அகமகிழச் செய்கின்றார். சிலர் மந்திர சக்தியாலே கருணை எட்சினிசித்தி பெற்று அதனை உலகிற்குக் காட்டிட வேண்டி எதையேனும் அச்சித்தியால் வரவழைத்துப் பிறர்க்கு வழங்குகின்றார்கள். இது அருட்செயலால் பெறப்படுவதல்ல. பிறரை மயக்கும் மாயாசாலச் செயலேயாம். உலகம் வியக்கும்படி இவர்கள் சில காலம்

இருந்து முடிவில் அச்சக்தி சித்திகளும் மறைந்து தாமும் ஒழிந்து போகின்றார்கள். இது திருவருட் சம்மதமல்ல.

நமது அருள் வள்ளலார் முதலில் அருள் அம்பலத்தில் கடவுளோடு ஒன்றியிருக்கும் அருள் வாழ்வு ஏற்றார். அங்கிருந்து கடவுட் சம்மதமாக, தயவாலே எவையும் பெற்றுத் தன் செயல் எனக் காட்டிக்கொள்ளாது அருட்செயல் அதுவென அடக்கத்துடன் கூறிவந்தார். ஆகையால் அவர் என்றும் அவ்வருட் சித்துடன் விளங்கும் பெற்றி பெற்றுள்ளார் என அறிகின்றோம்.

(6)

1175. இகத்தினும் பரத்தினு மெனக்கிடர் சாரா
1176. தகத்தினும் புறத்தினு மமர்ந்த மெய்த்துணையே

(உ-வி) ''எனது மெய்த் துணை நாதர் என் அகத்திலேயிருந்து ஆணைசெய்கின்றவராயும், அதே சமயம் புறத்தெங்கும் இருந்து தேவையான எவையும் வழங்குவிப்பவராயும் உள்ளார். நித்தியமாகிய அழிவில்லாத ஆன்மாவின்கண்ணே, சத்திய ஞானானந்தராய் அமர்ந்து ஆட்சிபுரிகின்ற நமது உயிர்த்துணைவர், அவ் ஆன்மாவிலும் உயிரிலும், கரணத்திலும், இந்திரிய தேகத்திலும் எனக்குத் தடையொன்றும் நேராது காவற் பெருந்துணையாய் நிலவுகின்றார். இது இந்த இகவாழ்வில் மட்டுமல்ல, மேல் பரத்தினும் தொடர்ந்து அவரது காவல்துணையிருந்து வருவதாம். இதனால் இகத்தும் பரத்தும் இடர் ஏதும் எனைச் சார்கின்றதில்லை. இவ்விக பரமாம் இருநிலை கடந்த பேரின்ப நிலையில் என்பதியே தன் முழுவல்லமையோடு அற்புதானந்த சித்தி வாழ்வில் உடன் துணையாய் விளங்கி வருகின்றார். ஆகையால் மரணமே இல்லாது என்றென்றும் விளங்கலாகின்றது'' என நம் பெருமான் உண்மையை உணர்த்துகின்றார்.

இந்த அருட்பெருந் துணைவர்க்கு நிகராக எவ்வுலகத்தும், எக்காலத்தும், எந்தவிதத்தும் வேறொருவர் இருக்கவே முடியாது என்பதைத் திருவருளால் அறிவிக்கப்படுகின்றோம். ஆதலின் இந்த அருட்டுணை ஆண்டவரை அணுகி அருள் நலம் எல்லாம் கொண்டு வாழ்வோமாக.

211. உயிர் நட்பு

(1)

1177. அயர்வற வெனக்கே யருட்டுணையாகியென்
1178. உயிரினுஞ் சிறந்த வொருமைஎன் நட்பே

(உ-வி) துணைக்கு மேற்பட்டது நட்பு, இவ்வுலகில் கடவுளின் திருவருள் எல்லோருக்கும் பொதுவாக வழங்கப்பட்டு வாழ்ந்து வருகின்றதை அறிவோம். நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் கடவுள் துணையாய் இருந்துவருவது உண்மையே. நல்லவர்கள் அருளில் ஓங்கி நலம் பெற்று மகிழ்ந்திருக்கின்றனர். தீயவர்கள் பக்குவமுற மறக்கருணையால் சோதனைக்குள்ளாக்கப் பட்டு மேலேற்றப்படுகின்றனர்.

நல்லவர்களுக்குத் துணையான பதி, நட்பொடு நெருங்கிப் பேருதவி எல்லாம் புரிகின்றார். நல்லோரே நட்புக்குரியோ ராகின்றனர்; ஏனையோர்க்கு அவ்வுரிமை கிடையாது. இரக்கமேயுருவான பெருமானுக்குக் கடவுள் நட்பு என்றும் உண்டாம். இதனால் இவர்க்கு சோகம் அல்லது சோர்வு ஏற்படா வண்ணம், அகத்திலே அருட்டுணையாகி நின்று என்றும் உதவுகின்றதாம். இந்த அரிய அருள்நட்பு உயிரினும் மேம்பட்டதாம். ஏனெனில் இந்த நட்பாலே உயிருக்கு நிறை வாழ்வு ஏற்படுகின்றதாம். உயிர்ச்சக்தி எல்லோருக்கும்தான் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நட்போ சிறப்பாக நல் லோர்க்கே வழங்கப்படுவதாய், பெருமை மிக்குடையதாய் இருக் கின்றதாம்.

(2)

1179. அன்பினிற் கலந்தென தறிவினிற் பயின்றே
1180. இன்பினி லளைந்தவென் னின்னுயிர் நட்பே

(உ-வி) நமக்கு நம் உயிர்தான் அருமையாயும், மிக நெருங்கிய தொடர்பு கொண்டதாயும், கடவுள் அனுபவத்திற் குரிய கருவியாயுமுள்ளதாம். இந்த உயிர் என்பது சாதாரண் ஜீவசக்தி அல்ல, ஆன்மாவேயாம். இதனால்தான் இவ்வான்மா வாம் ஆருயிரையே அடைமொழியாக்கி, உயிர்த்தாய், உயிர்த் தந்தை, உயிர்த்துணை, உயிர்த்தோழன், உயிர் நட்பு, உயிர். உறவு முதலியனவாக மொழியப்படுகின்றன.

இந்த உயர் உயிர் நட்பை நம் பெருமான் எவ்வளவு தூரம் ஏற்றிருந்தார், எப்படித் தன்பால் வழங்கப்பெற்றிருந்தார் என் பதை இவ்விரண்டடிகளில் நன்கு காண்கின்றோம். ஒருவன் பெற் றிருக்கும், உடல், உயிர், உள்ளமாம் ஆன்மா ஆகிய மூன்றும் கொண்டு விளங்குகின்றான். இதனைத் தூல, சூக்கும, காரண தேகங்களாகக் கூறுவர். இம்மூன்றினிடத்தும் திருவருள் வெளிப்பட்டு விளங்கும் போது ஏற்படும் அனுபவம் இதுவாகும்: உடலில் அன்பு கலந்து பணிவும் பண்பும், நிறை நற்செயலாய் வெளிப்படும்; அறிவில் உண்மைவிளக்கத் தெளிவு ஏற்பட்டு நலம் பயக்கும் உரையாக வெளிப்படும்: உள்ளத்தில் மெய்யின்ப உணர்வாக அனுபவப்படும். வேறாய், உடனாய், ஒன்றாய் இந்த நட்பு வெளிப்பட்டுத் திகழ்தலை ஈண்டு குறிக்கின்றார் நம் வள்ள லார். அது அன்பினிற் கலந்து எனவும், அறிவினிற் பயின்று என வும், இன்பினில் அளைந்து எனவும் குறிக்கப்பட்டுள்ளது. அருட் பெரும் நட்பானது, தூல தேகத்தில் கலந்தால் புறவுடல் அன்பு ருவம் அல்லது சுத்ததேகம் ஆகின்றது. அந்நட்பு அறிவினில் பயில லால் சூக்கும உயிருடம்பு அருவுருவப் பிரணவ தேகமாக விளங்கு கின்றதாம். மேலும் அந்த நட்பு ஆன்மாவில் அளைதலால் பேரின்பமாகிய ஞானதேகமாகத் திகழ்கின்றதாம். ஆகவே இந்த உயிர்நட்பாலே ஒருவனுக்கு சுத்த பிரணவ ஞான தேக சித்தி ஏற்பட்டு என்றும் விளங்கவல்லதாகும் என்பது உண்மையாம்.

(3)

1181. **நான்புரி வனவெலாந் தான்புரிந் தெனக்கே**
1182. **வான்பத மளிக்க வாய்த்தநன் நட்பே**

(உ-வி) நண்பர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு அன் போடு பழகுகின்றார்கள்! ஒருவன் பணிபுரிவதைக் கண்டு சும்மா இருப்பவன் உண்மை நண்பன் ஆகான்; தானும் சும்மாவிருக்க மனமின்றிப் பணி மேற்கொள்பவன் சாதாரண நண்பன் ஆவான். தான் மதித்துப் போற்றும் ஒருவனைப் பணிசெய்ய விடாது சும்மா விருக்கச் செய்து தானே அவனது பணியையும் செய்கின்றவன் சிறந்த நண்பன் ஆவான். இவர்களே, கடை, இடை, முதல் நட்புக்கு உதாரணமாவார்கள். கடவுள் நட்புக்கு ஒப்பாக வேறு எவரதுநட்பும் இருக்கமுடியாது. முதல் நட்பினும் ஆயிரம் ஆயிரம் பங்கு சிறந்தது இந்தப் பதிநட்பு.

இந்தஇறையருள் நட்பைத்தான் நம் பெருமானார் பெற்றிருக் கின்றார். அதன் உண்மையும் பயனும் விளக்கவே இந்த இரண் டடிகளை வழங்கியுள்ளார். ''என்பால் ஆருயிர் நட்பு பூண்ட அருட்ஜோதியின் சேர்க்கையால் அடைதற்கரிய பெரியநிலை கிடைக்கப் பெற்றுள்ளேன். நான் ஏதேனும் ஒரு பெரிய செயல் புரிய முனையும்போது, அவர்தானே முன்வந்து அவரது அரு ளாலே மிக லேசாக முடித்து விடுகின்றார். எனக்கு ஒரு சிரமமும், பாரமும், கவலையும் உண்டாகாவண்ணம், அவர் தம் காரியமாக யாவையும் ஏற்று முடிக்குந்திறமை என்னென்பது! ஆனால், அவரோ எனது அகங்கலந்து, தனை மறைத்துக் கொண்டு, இச்செயலைப் புரிகின்றார் ஆதலின், அவர் செயலை என்செயலாக உலகம் கண்டு என்னை மதித்துப் பேசுகின்றது. உலகினர் அறியாமையைக் கண்டு இரங்குகின்றேன். அவர் தம் அருட் செயலுக்கு நான் எங்ஙனம் உரித்தாவேன்: இருந்தும் உலகம் போற்ற உதவியும் புரிந்து, என்னைத் தன் உயர் பதவிக்கே ஏற்றிவைக்கின்றார் என்றால், அவரது நட்பின் உயர் சிறப்பை எப்படிப் புகழ்வது'' என்று உளம் உருகுகின்றார்!

(4)

1183. உள்ளமு முணர்ச்சியு முயிருங் கலந்துகொண்
1184. டெள்ளூறு நெய்யிலென் னுள்ளூறு நட்பே

(உ-வி) கடவுள் எள்ளில் எங்கும் எண்ணெய் இருப்பது போல், எங்கும் நிரம்பியுள்ளார் என்பர். கடவுள், எண்ணெய் போல் இருக்கின்றார் என்பதே கருத்து, எள் போல் இருக்கின்றார் என்பதல்ல. எள் எண்ணெய் விளங்கற்கு இடமாய் இருப்பது போல நம் தேகாதி பிரபஞ்சம் கடவுள் விளங்கற்கு இடமாம். எள்ளின் உட்பொருள்தான், எள்+நெய் =எண்ணெய் ஆம்.

நமது அக வடிவமாகிய ஆன்மாவையே எள் எனக்கொள்ள லாம். இந்த ஆன்மாவின் உட்பொருளாய்க் கடவுள் அருள் இருக்கின்றது. திருவருள்தானே உயிர் நட்பாகவும் இருக்கின்ற தாம். இந்நட்பு நேயம் அல்லது நெய் என்றும் கூறப்படும். இந்த நெய்யாம் உயிர் நட்பு, ஏழாம் நிலையில் நிராதாரத்தில் பூரண ஞானப் பிரகாசத்தோடு விளங்குவதாம். இதனால் இந்த ஆன்மாவை, ஏழாம் உயிர் எழுத்தும், பதினாறு கலை நிறைமதி

அல்லது பூரண ஞான வடிவைச் சுட்டப் பதினாறாவது மெய் எழுத்து ''ள்'' என்பதையும் சேர்த்து எள் எனக் கொள்ளப்படு கின்றது. ஆகவேதான் எள்ளை ஆன்மாவாகவும், (எள்+நெய்=) எண்ணெய்யை, ஆன்மாவிற் கலந்து விளங்கும் உயிர் நட்பாக வும் அறியலாகின்றன.

அப்படி ஆன்மாவின்கண் என்றும் நிரம்பியிருக்கும் திருவரு ளாம் உயிர்நட்பு, ஜீவதயவால், தயவுச்செயலால் வெளியாகின்ற தாம். நம் பெருமான் உயிரிரக்கம், அல்லது ஜீவதயவு மிக உடையவர். ஆதலின், அவருள்ளிருந்த அக்கடவுள் நட்பே, வெளியுறும்போது, உள்ளம், உணர்ச்சி. உயிர் எல்லாம் கலந்து செயல்படுகின்றதாம். ஆன்மாவிலிருந்த கடவுட்சக்தியே உள் ளத்தில் உறைந்து கிடந்த நட்பாக இருந்து வெளியாம்போது முதலில் அறிவு உணர்ச்சியால் உணரப்படும்; அடுத்து உயிரிற் கலந்திடும்போது அவ்வுயிரிலே ஆற்றலும் இன்பானுபவமும் வெளியாம். இவைகளை எல்லாம் உணர்த்துமுகத்தான் இங்கு இப்படி, ''உள்ளமும் உணர்ச்சியும், .உயிருங் கலந்துகொண்டு, எள்ளுறு நெய்யிலென் உள்ளுறு நட்பே'' என்று போற்றுகின்றார்.

(5)

1185. செற்றமுந் தீமையுந் தீர்த்துநான் செய்த

1186. குற்றமுங் குணமாக் கொண்டவென் நட்பே

(உ-வி) பக்குவப்படாத காலத்தே மனம் பிறர் குற்றத்தைக் கண்டு வெறுப்பும் கோபமும் கொள்ளுகின்றது. அதனால் தனக்கே யுண்டாம் பெருந்தீமையை அறிந்துகொள்ளுகின்ற தில்லை. புறத்தீயின் தன்மையைவிட இத்தீமை உயிர்க்குப் பெருந்தீங்கை விளைவிப்பதாம். இத் தணியாக் கோபமும், வெறுப்பும் குறிக்கவே செற்றம் என்ற சொல் குறிக்கப்பட்டுள்ள தாம்.

செற்றமாகிய தணியாக் கோபம், வெறுப்பு முதலியவை குற்றம் என்பதை அறிவோம். இதனால் விளைவது பெருந்தீமை என்பதையும் உணர்ந்துள்ளோம். ஆனால் பக்குவக்குறைவால் மனிதன் இச்செற்றமும் தீமையும் உடையவனாய் உலகில் அவத் தைப்படுகின்றான்; போக்கிக் கொள்ளமுடியாதவனாயும் தட்டழி

கின்றான். இதனைக் களையப்பெற்று நல்வாழ்வில் தழைத்தற்குத் திருவருள்தான் துணையாம். அந்தத் திருவருளைத்தான் நம் வள்ளலார் உயிர்நட்பாகப் பெற்றுக்கொண்டுள்ளார். ஆகையால் இவர் செய்த குற்றம் எல்லாவற்றையும் குணமாகக் கொண்டு செற்றமும் தீமையும் தீர்த்துவிட்டதாம் அந்தக் கடவுள் நட்பு. இவர் இந்த வடிவில் எந்தக் குற்றமும் புரிந்திடாதிருப்பினும், எங்கும் தானாய், எவரும் தானாய் உள்ளிருந்துணர்கின்றதினாலே, எவரது குற்றத்தையும் தன்னதாய்க்கொண்டு குறித்ததில் உண்மையில்லாமல் இல்லை. குற்றத்தையெல்லாம் குணமாய்க் கொள்ளும் பேரியல்பு அருட்பெரும்பதிக்கே உரித்தாம். இதன் ரகசியம் யாதெனில், கடவுள்தானே எவருமாய் இருந்து, எதனையும் புரிந்து கொண்டுள்ளார். ஆகையால், குற்றம் புரிந்தது புரிகின்றது யார்? எந்த மனிதன்? ஏன் குற்றம் புரிகின்றான்? என்ற கேள்விகளுக்குச் சரியான பதில் திருவருளால் கிடைக்கப் பெறுவது இதுவாம்; கடவுள்தான் தன் அருள் உண்மையை வெளியாக்கிக் கொண்டு ஆனந்தமாய் இவ்வுலகிடை விளங்கவே யாவுமாய் எவருமாய்க் காரியப்படுகின்றார். இந்த இன்பானுபவ வாழ்வு, அருட்பக்குவகாலத்தேதான் வெளியாம். அதற்குமுன், அபக்குவத்தில் எல்லாவிதமான குற்றமும் குறையும் கொண்டு உலகில் பிழைத்துத்தான் திருந்தியாக வேண்டியுள்ளதாம். ஆகையால், குற்றமும் குறையும்கூட கடவுட்கருணையின் ஒரு கூறேயாம். எனவே, கடவுள் எல்லாக் குற்றமும் குணமும் தன் செயலாகவே கொண்டு விளங்குதல் உண்மையே. ஆனால் புறத் தோற்றத்தில், மனிதவாழ்வில் நடைபெறுகின்ற செயல் எல்லாம் மனிதனே புரிகின்றதாகவும், அதன் விளைவை, வினைப்பயனை அவனே அனுபவிக்கின்றதாகவும் தோற்றுகின்றன.

கடவுளின் அருட்செயல் வழி யாவும் தோற்றி, அருள் இன்பநிலை அடைய செலுத்தப்படுகின்றனவாம். ஈது அறியா விதிவாதிகள், யாதும் வினைவழி வந்துறுவனவாய்க் கூறி, வினையின் நீங்கி விளங்கிடு அறிவின் ஒன்றிவிடுதலே பிறவித்தொல்லையின் விடுதலைநிலை என விளம்புவர். இதனால் பயன் இன்றாம். அருள் உண்மையை யோர்ந்து, அருட்பதியோடு ஒருமையுற்றிருந்து தயாவாழ்வு நடத்தும் போது, பதியின் நட்பால், எவ்வினையும் அருளாய் விளங்கிடக்கொண்டு அருளின்ப வாழ்வு தழைத்திட விளங்கலாகின்றதாம்.

(6)

1187. குணங்குறி முதலிய குறித்திடா தெனையே

1188. அணங்கறக் கலந்த அன்புடை நட்பே

(உ-வி) அன்போடுகூடிய நட்பு பாராட்டப்படும் ஒருவரிடத்து நல்லனவே கண்டு மதிப்பதும் புகழ்வதும் உலகியல்பாம். அன்னோரிடத்து வெளிப்படுகின்ற குற்றம்கூட ஒரு குறையாகத் தோற்றுவதில்லை. அக் குற்றத்தையும் குணமாகக் கொண்டு போற்றுகின்றனர் அன்புடையோர். அன்பே உருவாய் அருளே உயிராய்ப் பேரின்பே இயலாய்க் கொண்டிலங்குகின்ற நம் அருட் பெருஞ்ஜோதியாம் நண்பர் நம்மைக் கலந்திருக்கின்ற தாலே நம் குணம் குற்றம் ஒன்றையும் துருவிப் பார்ப்பதில்லை. நலமே புரிந்து மேனிலைக்கு ஏற்றுகின்றார்.

நம் வள்ளலார் இந்த அருட்ஜோதியின் நிறைஅன்பு கூடிய நட்பைப் பெற்றுள்ளார் ஆதலின், அவர்தம் அகக்குணத் தன்மை களையும், புறத்து அணியும் அடையாளச் சின்னங்களையும் பொருட் படுத்தாமல் பெருநட்பு பாராட்டி அவருடைய (அணங்கு) அச்சம், நோய் முதலியவற்றை அறநின்று காத்து, அன்பு செய்து இன்பே விளைவிக்கின்றார். அகத்திலே, அருகி அருவாகி இருந்த இந்த அருள் நட்பு அவ்வகநிலை நின்று வெளிப்பட்டு, இவரது உயிரிலே உணர்விலே உடலிலே கலந்து கொண்டுவிட்டதாம். ஆதலினால் இவருக்கு பயம் அல்லது அச்சம் உளத்திருந்து விலகிவிட்டது. உடலில் எந்தவித நோயும் சேராத சுத்தநிலை பெற்றுவிடடாராம். இப்படி உள்ளமும் உடலும் தெளி வும் தூய்மையும் பெற்றவர் புறவுடல் தோற்றத்திலே என்ன கோலம் கொண்டிருந்தாலும் என்ன. தூய்மையே அவசியம் இருக்க வேண்டுவதாம். இதனால்தான், இங்கு, ''குணம் குறி முதலியகுறித்திடாது எனையே அணங்கறக் கலந்த அன்புடை நட்பே'' என்கின்றார்.

ஆகவே சன்மார்க்க அன்பர்கள் மக்கள் சமுதாயத்தில் புறக் கோலங்களையும் நடையுடை பாவனைகளையும், அடையாளச் சின் னங்களையும் பெரிதாகப் பொருட்படுத்தக்கூடாது. அதுபோல் இவர்களே தம் புறத்தோற்றங்களில், கோலங்களில் அதிகப் பற்றுதலோ வெறுப்படைதலோ கூடாது. ஒருவன் எதற்காகப் புறத்தோற்றத்தில் பொலிவு செய்து கொள்ள வேண்டும்?

தூய்மையும் ஒழுங்கும், அமைதியும் கொண்டு விளங்கினால், மற்றவர்களை அடுத்து அடுத்து அன்பு செய்யவும், பிறர் விரும்பி வந்து தயவோடு பழகவும் வசதியாக இருக்கும் என்பதே கருத்து. மற்றபடி புறநிலைத் தோற்றத்தில் அதிகம் கருத்தைச் செலுத்தி விருப்பு வெறுப்பு கொண்டால் சுத்த சன்மார்க்க தயா வாழ்வுக்குத் தடையாகிவிடும். ஆகையால், எதையும் தயவு வாழ்வுக்குத் துணையாகக் கொண்டு, ஒத்துப் பழகி இன்பில் தழைத்திடல் வேண்டும்.

(7)

1189. பிணக்கும் பேதமும் பேயுல கோர்புகல்
1190. கணக்குந் தீர்த்தெனைக் கலந்தநன் னட்பே

(உ-வி) இவ்வுலகில் மக்கள், அவா, வெகுளி, மயக்கம் முதலியவற்றால் துன்பவாழ்விலே காலத்தைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் உண்டாகின்ற மனோவேற்றுமையால் தோன்றுகின்ற பிணக்கு அல்லது சண்டைகளும் மாறுபட்ட முறைகளும், கொள்கைகளும் மேலும் மேலும் துன்பப் பிறவியே பெருக்கத் துணையாயுள்ளனவாம். இவ்வளவும் தயாநட்பு இன்மையால் விளைகின்றனவேயாம். இந்த உண்மைக்காரணத்தை அறியாமல்தான், இப்பிறவிகட்குக் காரணம் வினை என்றும், கர்மம் என்றும், கோட்களின் செயல்விளைவு என்றும், விதி என்றும், எல்லாம் இயற்கையின் செயலே என்றும், ஆண்டவர் திருவிளையாடல் என்றும் லீலை என்றும், கடவுள் திருவுள்ளம் என்றும் பலப்பலவாகக் கூறிக்கொண்டிருக்கின்றனர் பலர்.

திருவருளின் சேர்ப்பாலே இப்பொழுது உண்மையை அறிகின்றோம். மக்களை, மக்கள் உள்ளத்தை தயா பக்குவம் உண்டாக்கவே இம்மாதிரியான வாழ்வில் செலுத்துகின்ற கடவுளின் அருட்பெருஞ்செயலேயாம் இது. எப்போது இவ்வுண்மையை அறிந்து மனிதன் தயவுமயமான வாழ்வு ஏற்கின்றானோ, அப்பொழுதே இப்பிறவித் தொடரின் முடிவு உண்டாம். இந்த உடலே அருள் ஒளியாலே சுத்த பிரணவ ஞான சித்தி பெற்று, அழியாது, மேற்கொண்டு பிறக்க வேண்டியில்லாது, என்றும் வாழ்ந்து கொண்டிருப்பதாம்.

ஆன்மா, எப்பொழுதும் தயா பெருஞ்ஜோதிச் சூழலில் இருந்து வருகின்றது. தயா ஞானம் அகமாயிருக்க, சூழ்பெரும் ஜோதியே பலவாகிய தோற்றமும், இயலும், செயலும், நிலையும் கொண்டு விளங்குகின்றதாம். தயா ஆன்மாவுக்கு இச்சூழ் நிலைகள் பல வடிவங்களாய், உயிரின வடிவங்களாய், மனித தேகங்களாய்த் தோற்றியும் வளர்ந்தும், மாறியும் மறைந்தும் கொண்டேயுள்ளனவாம், இத் தேகத் தோற்றமும் மறைவுமே ஒருவனுடைய பிறப்பு இறப்பு என்று கருதப்படுகின்றன. மனிதனோ நித்திய ஆன்மசொரூபியாய் இருந்துகொண்டேயிருக் கின்றான். இந்த ஆன்மாவை உடல் சூழ்ந்திருந்தாலும் சரி, உடற் சூழல் நீங்கிவிட்டாலும் சரி, ஆன்மா அழியாமல் இருந்துகொண் டிருப்பது உண்மை. ஆன்மா பிறந்தது என்றும், இறந்தது என்றும் தேகத்தைக்கொண்டு கணக்கிடுவது சரியன்று. இதுபோல் ஒருவன் எண்ணற்ற பிறவிகள் எடுத்துக் கொண்டிருப்பதாகவும், அப்பிறவிகளின் கணக்கு, கடற்கரை மணலைவிட அதிகம் என்று கற்பனை செய்கின்றதும், நற்சரியையாளர்க்கு ஓராயிரம் பிறப்பு என்றும் கிரியையாளர்க்கு வன்பிறப்பு நூறு என்றும், யோகி யர்க்கு அடுத்துவரும் ஓர் பிறப்பில் என்றும், ஞானியர்க்கு அப் பிறப்பிலே முத்தி கிடைத்துவிடுவதாகவும் கணக்கிட்டுச் சொல் லுகின்றதெல்லாமும் கற்பனையன்றிப் பிறிதொன்றல்லவாம். உண்மையில் அகமிருக்கின்ற நித்தியக்கடவுள் இயல் இன்ப வாழ்வு வெளிப்பட்டிலங்கற்கே, அத்திருவருளின் ஆணைப்படி, அகநிலை கொஞ்சம் கொஞ்சமாய்ப் புறத்தே வர வர, அப் புற நிலைத் தோற்றம் விரிந்தும் சுருங்கியும் மாற்றமும் மறைவும் பின் மறுபடியும் தோற்றமடைந்துகொண்டே இருக்கின்றதாம். அகமே அனகநிறைவு கொள்ளும்போது, சூழ்நிலைத்தோற்றம் சுத்ததேக மாகி நிலை கொள்ளுவதாம். ஆகையால், கடவுளே, அனாதிகால மாய் ஆன்மாவாம் மனிதனின் உண்மை வடிவாய் இருந்து வந்து, அனகநிறைவுற்று அனுபவம் விளங்க மனிதனாய்த் தோற்று கின்றார் என்பதுதான் நிச்சயம். எனவே, அந்த ஆன்மக்கரு, பத்தென்னும் யகரமாய், தசமதி நிறைகருநிலை கொண்டு, அடுத்து உலகிடை பிறக்கத் தயாராய் இருப்பதை யுணர்த்து கின்றது. இவ்வான்மக் கருநிலை, இங்கு வெளிப்படும் இந்த ஆன்மக்குழவியாய்த் தென்பட, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கழிந்து விட்டுள்ளனவாம்.

ஆகவே, உலகினர் கூறும் பிறப்புகளும், இறப்புகளும் உண்மை ஆன்மாவுக்குப் புறம்பானவையே. நிறை அருள் அனுபவம் உண்டாகி, கடவுளான்மாவே, அருட் பிரகாச வடி வொடு வெளிப்படும் தருணம்தான், ஆன்மக் குழவியின் உண்மைப் பிறப்பாகும். அது பிறந்துவிட்டால், அது என்றும் நிலைத் திருக்கும், ஒழிவே இல்லை ஆம். இவ்வனுபவங்கொண்டு விளங் கற்கே அருள்ஒளியின் நிறைநட்பு, நம் வள்ளல் ஆன்மாவுக்கு வழங்கப்பெற்றதாம். பெற்றதனால், இவர்க்கும் பிறப்பு இறப்பு என்ற உலகவர் கூறும் கணக்கு வழக்கு எல்லாம் தீர்ந்துவிட்ட தாம். இதனால் இவர் நன்னட்போடு இவ்வுலகில் பிறருடன் மனத்தாபம், வீண் சண்டை, வேற்றுமைப்பாடு கொள்ளாமல் வாழற்கிசைந்துள்ளார். இக் கருத்துக்களையே யீண்டு: ''பிணக்கும் பேதமும் பேயுலகோர்புகல், கணக்கும் தீர்த்தெனைக் கலந்த நன்னட்பே,'' என்றுள்ளார். அபக்குவ ஆவிவடிவே பேயாம்; இவற்றின் பற்றுடையோரே பேயுலகோர் எனப்படு வார்கள்.

(8)

1191. சவலைநெஞ் சகத்தின் றளர்ச்சியு மச்சமும்

119z. கவலையுந் தவிர்த்தெனைக் கலந்தநன் னட்பே

(உ-வி) கடவுளின் உண்மை நட்பு கிடைக்கப்பெறின், வேறு குறைபாடு ஒன்றுக்கும் இடமேயில்லையாம். அப்படிப்பட்ட நன் னட்பைத்தான் நம் வள்ளலார் ஜீவ தயாநெறி வழி சென்று, திரு வருட்பெருநிலை யெய்தி நின்று, அன்பின்பில் தழைக்கின்றார். ஆகையால், இவர்க்கு மனக்கவலையும் உடற்பிணியும், சோர் வும் பயமும் அழிந்து ஒழிந்து போயினவாம்.

உண்மை நிலையுற்று உறுதிப்படாத அலைமனம் சவலை நெஞ் சமாகச் சாற்றப்படுகின்றது. உயிர்த்தாயின் அருட்பால் இல்லாது மெலிவுறும் மனமாகிய குழந்தை சவலை பாய்ந்த மக வாக உருவகம் செய்தது மிகப் பொருத்தமேயாம். ''எனைக் கலந்த என் அருட்பதியின் உயர்நட்புதானே என் மெலிவுறு மனத்தின் தளர்வெல்லாம் தவிர்க்கின்றது. அம் மனத்தளர் வொடு குழம்பி நடுங்கச்செய்யும் பயமும், வாடி ஏங்கச் செய்யும் கவலையும் ஒருங்கே யொழித் தருளுகின்றது என் பதியின் நல்ல நட்புறவு. தனக்குவமையில்லாதான் தாள் சேர்ந் தால் மனக்கவலை மாறும் என்பர். என் தனித்தலைமைப் பெரும்

பதியின் சேர்க்கையை முழுமையாகப் பெற்ற எனக்கு இனியேது கவலையும், அச்சமும், தளர்ச்சியும்!'' என உள்ளுவகையும் உறுதியும் கொண்டு குறிக்கின்றார். இதனால், நாமும் உண்மையைத் தெளிந்து உளம் கொண்டு, அருள் நட்பாலே ஆனந்த வாழ்வில் திகழ்வோம்.

212. உயிர் உறவு

(1)

1193. களைப்பறிந் தெடுத்துக் கலக்கந் தவிர்த்தெனக்
1194. கிளைப்பறிந் துதவிய என்னுயி ருறவே

(உ-வி) துணையும் நட்பும் அன்பின் வழி எவர்பாலும் சென்று செயல்படுவன. ஆனால் உறவு அகவுரிமைக் காரணமாக குறிப்பிட்ட சிலர் பால் தழைப்பதாம். இந்த உயிர்உறவு அல்லது ஆன்மநேயம், மிக நெருங்கிய அகவுரிமைபற்றி எழுகின்ற பெருங் குணப் பெருஞ்செயலாகக் கொள்ளப்படும். உயிர் உறவு ஆன்ம நேயம்தான் மக்கள் சமுதாயம் முழுவதையும் ஒன்றுபடுத்தும். ஆன்மாக்கள் எல்லாம் ஒரு தன்மை என்பதைவிட, ஒருமையாகிய தன்மை கொண்டது என்பது உண்மை. யாதென்றால் ஒன்றான கடவுள்தானே தன் பேரருட் செயலால் அனைத்து ஆன்மாக் களாக இருந்துகொண்டு புறத்தே இயலும், தோற்றமும், வேறு வேறாய் விளங்கிக் கொண்டேயிருக்கின்றார் என்பது தெளிவாம். ஓரான்மா தன்னைப் பக்குவ மனித வடிவில் அனுபவபூர்வமாய் அறிந்துகொண்டிருக்கின்றது என்றால், கடவுளே தன் அகண்ட உண்மை நிறை வடிவை, அந்த மனிதவடிவில் அனுபவத்திற் கொண்டு விளங்குகின்றது என்று பொருள். அதாவது ஒன்றான கடவுள் அந்தக் குறிப்பிட்ட ஆன்மாவில் வெளிப்பட்டிருக்கின்றது என்பதும்; இனி ஒவ்வொரு மனித வடிவிலும் அக்கடவுளே வெளியாகிடவும், வெளியாகியும் உள்ளது அறியலாகும். ஆகவே பலவாகிய ஜீவான்மாக்களும், ஒன்றான பரமான்மாவின் தோற்றங் களே. மனிதனின் உண்மை ஆன்மாவே, அது பரமான்மாவின் வெளியீடே. ஆகவேதான் ஆன்மாக்கள் ஓரினம் என்றும், ஆன்ம நேய உறவுமுறை இயற்கை இயலே என்றும் அறிவோம்.

நமது ஆன்மாவினிடத்து இந்த அகவுரிமையுறவு இருக்கின்ற தாலே உலகியல் சிறக்க வாழ முடியும். கடவுளே தன் அருள்

உரிமை யுறவுமுறையால் நமக்கு அகத்தும் புறத்தும் வேண்டிய எல்லாம்கொடுத்தும் பெறச் செய்தும் வாழ்விக்கின்றார்; பெரு மகிழ்வில் ஓங்கச் செய்கின்றார். இதனால் எந்தவிதமான அவத் தையும் உள்ளும்புறமும் தோன்றுகின்றதே யில்லையாம். அகவுயிர் உணர்விலே உண்டாகின்ற சோர்வுதான் களைப்பு எனப்படுவது; அச்சோர்வினைத் தவிர்த்து, சுகானந்த விளக்கத் தெளிவை யுண்டு பண்ணுவது எதுவெனில், அகங் கலந்த அருள் உறவேயாம். அத்தோடு புறவுடலிடத்தும் அவ்வருட்சக்தியின் உறவால் இளைப்பு என்பது சிறிதும் இல்லாது, நல்விளக்கமாம் களை அல்லது பிரகாசத்தோடு விளங்கலாகின்றதாம். இதனையே, ''களைப்பறிந்து எடுத்துக் கலக்கந் தவிர்த்து எனக்கு இளைப் பறிந்து உதவிய என்னுயிர் உறவே'' என்று ஓதியுள்ளார் நம் பெருமானார்.

(2)

1195. தன்னைத் தழுவுறு தரஞ்சிறி தறியா

1196. வென்னைத் தழுவிய வென்னுயி ருறவே

(உ-வி) சுற்றந் தழுவல் மக்களினத்திற்கே உரிய வாழ்க்கை முறையாகும். மற்ற உயிரினங்களில் சில கூடிவாழும் முறை யிருப்பினும் அகவுரிமையான உறவு முறை அறிந்துகொள்ளப் படாததினால் விளங்கற்கும் முடிகின்றதில்லை. மாக்களாகிய விலங்குகளில் புலையுணவேற்கும் புலி சிங்கம் முதலியன கூட்ட மாகக் கூடிவாழா. அதற்கு மாறாக, ஆடு, மாடு, மான் முதலியன, புல்லாதியுண்டு வாழ்பவை, மந்தை மந்தைகளாகக் கூடி வசிக் கின்றன. மக்களினத்தில் ஆன்மநேய அகவுரிமை உறவு பற்றி வாழ்பவர்களே சிறந்தவர்களாகக் கொள்ளப்படுவர். கொல் லாமை மேற்கொண்டவர்கட்கே அகிலமாம் அன்புநெறியும் உறவு முறையும் விளங்கும்.

கடவுள், பெருந்தயவோடு நமக்கு எல்லாம் உதவிக் கொண்டும், இன்னும் தேவையை யாவும் நிறைவேற்றவும் இருக் கின்ற உண்மையை ஒரு சிறிதும் அறிந்து கொள்ளாமல் பிழைத் துக்கொண்டிருக்கும் நம்மை, உயிர் உறவு காரணமாக விட்டு விடாமல், தழுவிக்கொண்டு, நலமே புரிந்து வருகின்றார். இது கடவுட் பேருறவின் சிறப்பாகும். நம் வள்ளல் எவ்வளவு

நெருங்கிய உறவால் பெறலரும் பேறு பெற்றார் என்பதை இந்த ஈரடிகள் சுட்டுகின்றன. ''தன்னைத் தழுவுறு தரம்சிறிதும் அறியா என்னைத் தழுவிய என்னுயிர் உறவே,'' என்றுள்ளார்.

(3)

1197. மனக்குறை நீக்கி நல் வாழ்வளித் தென்றும்
1198. எனக்குற வாகிய என்னுயிர் உறவே

(உ-வி) உலகவாழ்வில் கவலையில்லாது, இன்பமும் அமைதியும் கொண்டு வாழ வேண்டுமானால், மனக்குறை நீங்கவேண்டும்; மனநிறைவு உண்டாக வேண்டும். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பர். நிராசையுண்டானால் மனோநிம்மதி வந்தெய்தும். அவா வளர்ந்துகொண்டே யிருக்கும் வரையில் எவ்வளவு பொருளும், சுகபோகங்களும் கிடைத்தாலும்கூட மனம் அமைதி பெற்று நிலைப்பதில்லை. மேலும் மேலும் இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்றே குறைபட்டுக் கொண்டேதானிருக்கும்.

உலகில் உறவுமுறை எந்த அளவுக்கு ஒருவர்க்கு நலம் அளிக்கின்றது என்று பார்த்தால் அது மிக அற்பமாய்த்தான் இருக்கக் காண்போம். மனக் குறையை நீக்கி நல்வாழ்வு அளிக்கும் உறவுக்காரர்கள் யார் உளர்? இது உலகியற்பொறி புலன் வாழ்வில் ஏதோ ஓர் அளவுக்கு மனச்சாந்தியைக் கொடுக்கலாம். நிறை மனோநிம்மதியைக் கொடுக்கக்கூடிய உறவு நம் அருட்ஜோதிபதி ஒருவரே ஆவர். இதனைத்தான் பெற்றுக்கொண்டார் நம் வள்ளல். ஆகையால், அப்படி அருள் உறவால் அனைத்து மனக் குறையும் நீங்கியவராகி நல்லின்ப வாழ்வும் பெற்று நனி மகிழலானார். ஆனதால், இப்படி, ''மனக்குறை நீக்கிநல் வாழ்வளித்து என்றும் எனக்கு உறவாகிய என் உயிர் உறவே'' எனப் போற்றுகின்றார்.

(4)

1199. துன்னு மனாதியே சூழ்ந்தெனைப் பிரியா
1200. தென்னுற வாகிய என்னுயிர் உறவே

(உ-வி) தனு, கரண, புவன, போகங்களைப் பெறாது, ஆன்ம சிற்றணுவாய் அருகிக் கிடந்த காலம், மனிதனின் அனாதிநிலை யாகும். எண்ணி அறிதற்கரிய அந்நாள்தொட்டு இந்த ஆன்ம வடிவில் இருந்து வருகின்றவன் ஆன்மரூபி. அந்த அனாதிகாலம் தொட்டே அகமும் புறமும் சூழ்ந்து உள்ளது அருட்பெருஞ் ஜோதியாம். துன்னும் அனாதி என்றது, அனாதி (காலத்தே பிரிவறப்) பொருந்திநின்ற நிலையாம். அதாவது நித்தியமாயுள்ள அகண்ட பரஞ்ஜோதியின் நிலை அனாதியானது என்றும், அதில் பிரித்தறிய முடியாது அதுவாகவே ஒன்றி இருந்த அணு ஒவ் வொன்றுமே ஓர் ஒரு தனி ஆன்மாவாகப் பின்னர் விளங்கு கின்றது என்றும் கூறுகின்றனர். அதனால் அப்போது தொட்டே ஆன்மாவுக்குத் துணையாய் மெய்யுறவாய்க் கடவுள் சூழ் ஒளி யாய் விளங்கிவருகின்றார் என்றும் தெரிந்துகொள்ளுகின்றோம். உலகியல் உறவு முறைகள் யாவும் புற உடல் உருவை வைத்துத் தான் காணப்படுகின்றனவாம். அந்த உறவு, உடல் நீங்கில், நீங்கி மறைந்துபோம். ஆனால், கடவுள் உறவு நித்திய ஆன்மா வுக்குரியதாய் அனாதியே விளங்குவதாம்.

அனாதியில் கடவுட்பெருஞ்ஜோதி ஒன்றே இருந்தது. அதற்குத் திருவருள், நிறை இயல்பாய் இருந்து வந்தது. அந்த அருள் உண்மை அனுபவப்படும்படிதான், அருள் ஒளியின் ஐந் தொழிற் செயற்பாடு அன்றே தொடங்கினதாம். அப்போது முதல், அவ் அண்டவெளிநிறை அகண்டஜோதியின் ஒவ்வோர் அணுவிலும், அருள் உணர்வு அகத்தே அருவமாய் நிலவிடவும், புறத்தே சூழ்ஒளியே ஐந்தொழிற் செயற்பாட்டால், தூலப் பொருள் வடிவங்களாயும், இயக்க ஆற்றல்களாயும், அறிவு உணர்வுகளாயும் ஆன்ம சக்தி சித்திகளாயும், முடிவில் அருள் அனுபவமாயும் விளங்கத் தொடங்கினதாம். இவ்வருள் அனுபவத்தால்தான் இந்த உண்மையை உள்ளபடி கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றது இன்று.

நேற்றுவரை திருவருளின் உண்மை வெளிப்பட்டதில்லை. ஆன்மாவுக்குத் தன் ஞானம் ஏற்பட்டு, யோகானுபவ சித்திகள் பலவே வெளியாகியிருந்தனவாம். அதனால்தான், சித்தர்களும் முத்தர்களும், தேவர்களும், மூவர்களும், மகான்களும், ஞானி களும், அவதார புருஷர்கள் என்போரும் தம்மைக் கடவுளின் ஏக தேசங்களாகக் கண்டு, அப்பதியின்பால் வேண்டிப் பெற்ற சக்தி சித்திகளைக் கொண்டு, உலகம் போற்ற வாழ்ந்திருந்து, முடிவில்

அக் கடவுளில் ஐக்கியமாகி மறைந்து போயினராம். இப்படி விளங்கிய ஆன்மா ஒவ்வொன்றும், தன்னைக் கடவுளின் ஏகதேச வடிவமாய், சிற்றணுவாய்த்தான் அறிந்திருந்தது. நிறை பரம் பொருளே அவ்வான்மாவாய் இருந்துகொண்டு, தன் அருள் ஐந்தொழிலால் இம் மனிதப் பிறப்பில் வெளிப்படுத்திக் கொண் டிருப்பதைச் சற்றும் அறியாமல் இருந்தது அவ்வான்மா. இந் நிலைதான் அவ்வான்மாவுக்கு மறைப்பு, திரோபவம், பக்குவம் வருவித்தல் ஆக இதுவரை இருந்துவந்துள்ளதாம். மேலும் இம்மறைப்பு நிலையே அவ்வான்மாவின் ஆணவமலமாகவும் அறியப்படுகின்றது.

இன்றே அருட்பக்குவம் ஏற்பட்டுள்ளது. ஆன்மா, தன்னை எங்கும் நிறை கடவுளின் உண்மை வடிவ.ாகவே அருளால் உணர் கின்றது. அகண்டவெளிநிறை பதியே தன் அருளனுபவ வெளி யீட்டிற்காக இந்த ஆன்ம சிற்றுருக் கொண்டு விளங்குகின்றதாக அறியப்படுகின்றது. இதனால் மனிதன் தன்னை அனாதியே அக் கடவுள் வண்ணமாய் இருப்பதை அறிகின்றான். இக் கடவுள் நிலையில் இருந்துவரும் தன்னைச் சூழ அருட்பெருஞ்ஜோதியே இருந்து ஐந்தொழிற் செயலால் பலவாய்த் தோற்றி வந்துள் ளது என்றும் அறிகின்றான். இதனால், ஆன்மாவுக்கு ஆணவ மலம் இயற்கையிலே இருந்துள்ளது என்பது, கடவுளே அருள் உண்மை கொண்டு விளங்கும் நிலையே ஆம். இதிலிருந்து நோக்கும்போது மாயை என்பதும், கன்மம் என்பதுகூட அருளின் தோற்றமும் செயலுமே எனத் தெளியலாகின்றன. இதுதான் சுத்த சன்மார்க்க அருள் அனுபவ உண்மை நிலை ஆகும். அந்தத் திருவருள் இப்பொழுதுதான் தனது ஐந்தாம் சக்தியின் நிறை அனுபவத்தை வள்ளலார் மூலமாக வெளியாக்கி யுள்ளது என்று அறியப்படுவதாம். அருள் ஏகதேசமே முன் பெல்லாம் வெளியாகி இருந்ததால் எவரும் கடவுள்நிலை வாழ்வு பெறவில்லை என்பது சத்தியம். இதனால் நம் பெருமானே இச் சுத்த நெறிக்கு முதல்வராவார் என்பது உண்மையாம். இந்த அருள் உண்மை அனுபவத்தை எவ்வளவு தெளிவாய் இந்த அடிகள் எடுத்துக் காட்டுகின்றன என்பதை நிறுத்தி ஓதி யுணரவும்,

"துன்னும் அனாதியே சூழ்ந்தெனைப் பிரியா(து)
என்னுற (வு) ஆகிய என்உயிர் உறவே"

என்பதின் கருத்தை உளம்கொண்டு உய்வோமாக.

213. இயற்கை உண்மை (சத்து)

(1)

1201. என்றுமோர் நிலையாய் என்றுமோ ரியலாய்
1202. என்றுமுள் ளதுவா மென்றனிச் சத்தே

(உ-வி) கடவுளின் சொருப, ரூப, சுபாவத்தை விளக்கிக் கூறிப் போற்றுமுகத்தான் இங்கு குறிப்பிட்டுத் தெளிவு செய்யப் படுகின்றனவாம். முதலில் சத்தென்னும் இயற்கையுண்மை பற்றிய தெளிவு விளக்கப்படுகின்றது. சத்து என்றால் அடிப் படைத் தத்துவமாய், புறநிலைத் தோற்றங்களுக்கு ஆதாரமாய், கெடுதலற்ற நிலைப்பொருளாய் இருப்பது என்று அறியலாகும். இதனையே, ''என்றும் ஓர் நிலையாய், என்றும் ஓர் இயலாய், என்றும் உள்ளதுவாய்,'' இருக்கின்றது எதுவோ அதுவே சத்து எனப்படுகின்றது. இந்தப் பிரபஞ்சத்தின் காரணப்பொருளாய், இயற்கையுண்மைப் பொருளாய் இருப்பதுதான் கடவுள் என்றும், இறைவன் என்றும் கூறப்படுவது. அக் காரண சத்துப்பொருள், எப்படியிருக்கின்றது என்பதைச் சத் விசாரத்தால் அகம் ஒன்றி நின்று உணர்த்தப்பெறுதல் வேண்டும்.

சத்து உண்மை: அகண்டவெளி முற்றும் நிரம்பி ஒருநிலையாய் ஒரு தன்மையாய் ஒரு பொருளாய் உள்ளது எதுவெனில், அது தான் நிறை இறையொளியாம் அருட்ஜோதி. இதனைப் பரநாத நிலைமேற் சென்றோர் பெருஞ்ஜோதி மலையாய்க் காண்கின்றனர். இந்த வான்வெளி நிறையொளி எதனாலும் தாக்கப்படாது எக் காலும் நிலைத்து நிற்பதாம். அப்படியுள்ள இறையொளி எங்கே, அதன் தோற்றத்தை எப்படிக் காண்பது என்று வினாவுவர். பூதாணுக்களைத் தகர்க்கும்போது வெளியாகின்றது பேரொளியும் பெருஞ்சூடுமாம். அகல் வான்வெளியில் பிரபஞ்ச பூதப்பொருட்கள் தோன்றுமுன் இருப்பது அகண்டவொளிமயமேயாம். அதுதான் சத்தொளியாம். திருவருள் செயல்படத் தொடங்கிய காலத்தே அவ்வொளியில் ஐஞ்சக்திச் செயல் வெளியாகிவிடுகின்றது. உடனே அவ்வொளியிலிருந்து பூத அணுக்களும், அணுத்திரட் பொருட்களும் தோன்றி விளங்கலாகின்றனவாம். ஆகையால் பெருஞ்ஜோதி நிலையைப் புறத்தில் நிலையாகக் காண முடிகின்ற தில்லையாம். அவ்வொளி மாறிய பொருள்களையே காண முடிகின்ற தாம். அணு குண்டுகள் வெடிக்கச் செய்யும்போதும் இப்படித்

தான் பேரொளி தோன்றிச் சற்று நேரத்திற்கெல்லாம், அதுவே பலவாகிய அணுக்களாய் பொருள்களாய், ஆற்றல்களாய், உயிர் களாய்க்கூட மாறி விளங்கத் தொடங்கிவிடுகின்றனவாம். உண்மையில் அவ்வொளி மாறுகின்றதில்லை, அதன் புறத்தோற் றம் சூடு குறைந்தபோது அப்படிப் பலவாய் விளங்குகின்றது. அதேசமயம் அதன் அணுவகத்தில் அவ்வொளி பூரணநிலையில் மறைந்து கிடக்கின்றதாம். இதுவே புறத்திலங்கும் சத்தியல் உண்மை.

இந்தச் சத்தியல் உண்மையைத்தான் நம் பெருமான் அருள் உணர்வோடு அகமிருந்து காண்கின்றபோது, சூழ்ந்துள்ள உயிர் உடம்பையும் பொருள் உலகம் முழுவதையும் பேரொளி வெள் ளத்தில் கரைந்துவிட்டது போல் உணர்கின்றார். ''காற்றறியாத் தீபம் போல் இருந்திடும் அத் தருணம் கண்ட பரிசு என் புகல் வேன், அண்ட பகிரண்டம் தோற்றறியாப் பெருஞ்ஜோதி மலைபர நாதத்தே தோன்றியது, ''என்றதால், அந்த மலைபோல் நிலைத்த ஒளிநிலையே சத்தாக என்றும் இருந்து வருகின்றது என்பது தெளிவாம். இதுவே சத்தின் நிலையியல் உண்மை எனலானது.

(2)

1203. அனைத்துல கவைகளும் ஆங்காங் குணரினும
1204. இனைத்தென வறியா வென்றனிச் சத்தே

(உ-வி) ஒப்பற்ற தனிப்பெருஞ் சத்துப் பொருளாய் உள்ளது நம் அருட்பெருஞ்ஜோதியே ஆம். இது ஒன்றே இவ் அகண்ட பிரபஞ்சத்து தோற்றியுள்ள எவ்வுலகத் தெவ்வுயிர்க்கும் மகா காரணமாய் இருந்து தோற்றுவித்து ஆண்டு அருள் புரிந்து கொண்டேயுள்ளதாம். இந்த சத்தாம் அருட்பெருஞ்ஜோதியை, அதுவே தானாகிநின்று அறிந்து அனுபவிப்பதன்றி, பிறிது எவரா லும், எவ்விதத்தும் அறிந்துகொள்ளமுடியாதாம்.

அனைத்துலகவைகள் அதாவது உலகத்தில் விளங்குகின்ற எவையும், எல்லா உலகங்களில் விளங்கும் எவையும், இங்கு எவ்வுலகத்து எவ்வுயிரும் ஆங்காங்குணரினும், எவ்வளவுதான் முயன்று உணரத் தொடங்கினாலும் உணரவே முடியாதாம் அந்த அருட்ஜோதியாம் சத்துப்பொருளை. உலகெங்கும் உள்ள எல்லாப்

பொருள்களும், உயிர்களும், மற்றெல்லாமும் சத்தை அறிந்து கொள்ள முடியாது. ஆனால் அந்தச் சத்தேதான் அவை எல்லா மாக இருக்கின்றதும் உண்மையே. அந்தத் தனிச் சத்துப் பொருளை ஏன் அறியமுடியாது என்றால், அது எவருடைய மனோகற்பனை அறிவுக்கும் எட்டாத சுத்த அருட்பெரு வெளியில் அருட்பெருஞ்ஜோதியாக இருக்கின்றதாம். அதனால் நிறையரு ளால் அகம் பொருந்தி நின்றால், ஒருவன் அந்த அருள் ஒளியே தானாகி இருக்கக் காண்கின்றான். அப்போது அதுவே இவனாய் இருந்து தன்னைத்தான் கண்டுகொள்கின்றதாம். கடவுளே மனித வடிவேற்றுத் தன்னை வெளிப்படுத்திக்கொள்கின்றதும், தானே இவனாய் நின்று அறிந்து அனுபவிக்கின்றதும் உண்மையாம். இதனால் உயர்தனிச் சத்துப்பொருளைப் பிறர் எவராலும், எக் காலும் உள்ளபடி கண்டு பெற முடியாதாம்.

அப்படியுள்ள பிறர் அறிவரிய சத்துப்பொருளை நம் வள்ளலார் மட்டும் எப்படி அறிந்துகொண்டார் என்றால், இவரும் சத்துண் மையை பிறரைப்போல், அதற்குப் புறம்பாய் இருந்து ஆராய்ந்து கொண்டிருந்தால் கண்டு கொண்டிருக்கவே மாட்டார். ஆனால், இவரோ தன்னை வேறாகக் காணாது, அந்த அருட்சத்தே தானாகி யுள்ளதெனக் கண்டு, தன்னை மறந்து அருள்வசப்பட்டு நின்றார். அப்போதுதான் இந்தச் சத்தின் உண்மை அறியப்பட்டது. கடவுளே சத்தாய் இருந்து அறிவித்ததும், அக்கடவுளே இவராய் இருந்து அறிகின்றதுமாம். இதுகாறும் சத்து என்றால், நிலைத் துள்ள மெய்ப்பொருள் என்று புறமன உணர்வால் அறிந்து சொல்லிக் கொண்டிருந்ததேயல்லாமல், அச்சத்து இன்னது என்று கண்டு கொண்டதுமில்லை, அடைந்ததுமில்லை எவரும். நம்பெருமான், அருளால் சத்தாகிய நிலை சேர்ந்து விளங்கு கின்றார் ஆதலின், அதன் பொருளைக் கண்டதோடு, அனுபவத்திற் பெற்றும் கொண்டார் என்பது உண்மை.

(3)

1205. பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்
1206. இதுவெனற் கரிதாம் என்றனிச் சத்தே

(உ-வி) மறைகள் அல்லது வேதங்கள் கடவுள் உண்மை குறித்து என்ன கூறுகின்றன? மறை, தற்போத அகங்காரத்தை

யொழித்துக் கடவுள் அருள் அடைந்து, இரண்டறக் கலந்துவிட வேண்டும் என்கின்றது. இதுவே எல்லாப் பொதுமறை நூல் களின்முடிவு. வேதங்கள், கடவுள் பற்றற்ற நிலையிலிருந்து கொண்டு தன் சுத்த மன சங்கற்பத்தால் உலகுயிர்களை எல்லாம் தோன்றி விளங்கச் செய்கின்றார் ஆதலின், மனிதனும் உலகைப் பற்றாது பிரமமாகிய கடவுளையே பற்றி அசைவற நின்றடங்கிடல் வேண்டுமெனக் கூறியுள்ளன. இந்த மறைமுடிகளை அடைவதற்குச் சில ஆகமமுறைகள் வகுத்து வழங்கப்பட்டுள்ளனவாம். அதில் தெய்வ, தெய்வாலய விதிமுறைகள், பக்தி வழிபாட்டுத் துதி முறைகள், கொள்கை கோட்பாட்டு சட்ட திட்டங்கள் கூறப்பட் டுள்ளன. அவற்றின்படி நடந்தால் அடைவதுதான் கடவுள்நிலையா என்றால், அது உண்மைக்கடவுள் அனுபவ நிலை அல்ல என இப் பொழுது திருவருளால் அறிகின்றோம். ஆகவே மறைமுடிகளும், ஆகமமுடிகளும், அருட்பெருங்கடவுள் நிலையை அறியக் கூடா திருக்கின்றதாம். வேதத்திற்கு முடிவு வேதாந்தம். இதுவே உபநிடதமாம்.

அருட்சத்து ஆம் பரம்பொருள் மனிதனின் மனோ அறிவுக்கும் பொறி புலன் உணர்வுக்கும் எட்டாததாய் இருக்கின்றது. இப்படிக் கரணேந்திரியத்திற்கு அறியப்படாத கடவுள் உண்மை யாம் சத்துப் பொருளை, நாவினாற் சொல்லவோ, மொழியினால் எழுதிக் காட்டவோ முடியாதுதானே! ஆகவே மறையாகம சாத்திரங்களில் எப்படி அந்தச் சத்தாம் பரம்பொருளை விளக்கிட முடியும்.

நமது வள்ளல், திருவருளால் கண்டது அருட்பெருஞ்ஜோதி தானே. அதுதானே சத்துப்பொருளாயிருக்கின்றது, அவர் வெளியிட்டிருக்கின்றது உண்மைச் சத்தே என்றால் அது அவர் மனதினால் எண்ணிக் கண்டறிந்ததுதானே. உரைத்ததும், எழுத்தில் வழங்கினதும் சத்துப் பொருள் விளக்கம்தானே என்றால், அவர் அருணிலை யுற்று அருளால் அனுபவப்பட நின்று கண்டபோதுதான் சத்தின் உண்மை விளங்கினது. அதனையே தான் புறமொழி வடிவில் குறித்து வைத்தார். அம்மொழித் துணை யால் அருள் விளக்கம் இதுவெனக் கண்டு அகத்தேநின்று அருள் உணர்வை வளர்த்துக் கொண்டால்தான், கடவுளின் சத்து உண்மை உள்ளபடி புரிந்துகொள்ள முடியுமேயன்றி, அவர் அருட் பெருஞ்ஜோதியைச் சத்துப்பொருள் என்று கூறினதால், சத்து

என்பதற்குப் பொருள் தெரிந்துவிட்டதாக மனமகிழ்வடைதல் வெற்று மயக்க உணர்வேயாம். அருட்பெருஞ்ஜோதிக்குப் பொருள் புறக்கல்வியறிவாலும், சாத்திர ஞானத்தாலும் பிறர் சொல்லக் கேட்டும், மனோ கற்பனையாற் சிந்தித்தும் தெரிந்து கொள்ளற்காகா. அருள் ஒழுக்கம்பூண்டு, உள்ள நெகிழ்ச்சியோடு ஆழ்ந்து சிந்தித்தால் திருவருளால் உண்மைச்சத்தின் விளக்கமே அருட்பெருஞ்ஜோதியாய் எங்கணும் இருக்கின்றதைக் காண முடியும்.

(4)

1207. ஆகம முடிகளு மவைபுகல் முடிகளும்

1208. ஏகுதற் கரிதா மென்றனிச் சத்தே

(உ-வி) முன் அடிகளில் மறைமுடிகளை விளக்கவந்தவற்றையே ஆகமமுடிவு என்றும் கொள் ப்பட்டது. அதனை அங்கு உபநிடதம் என்ற பொருளிலும் கொண்டு, அவ்வுபநிடத்திற்கும் அறியலாகாதது என்றனிச் சத்து என்றதாகக் கொள்ளலாம். இங்கு நம் திருநான்மறையின் முடி எதுவோ அதுவே ஆகமம் எனப்பட்டுள்ளது. ஆணவம், கன்மம், மாயையின் காரியப் பாட்டை விளக்கும் முறையும், அம்மல நிவர்த்திக்குப் புரியும் செயல் முறையும்தான் இந்த ஆகம முடிவாய் உள்ளனவாம். இந்த ஆகம விதியாலும், அவ்விதிப்படி புரியப்படும் செயல்முறைகளாலும் சத்துண்மையை அறிந்து அடைவதற்கு இயலாது என்பது குறிப்பு.

வேதத்தின் முடிவு வேதாந்தம் அல்லது உபநிடதம்; அது கடவுளையும் மனிதனையும் அத்துவித நிலையிற் கண்டு கொள்ளச் சொல்லுகின்றது. அதனை மறுக்கும் சித்தாந்தம்தான் ஆகம வழியைப் புகட்டித் திருவருளால் பசுவுக்கு உள்ள பாசக்கட்டை அவிழ்த்துக் கொண்டு பதி ஐக்கியம் பெறவேண்டும் என்று வற்புறுத்துகின்றது இதனால், வேதாந்தத்தின் முடிவு சிந்தாந்தத்தினால்தான் சித்திக்கும் என்று முழக்கினர். இந்த சித்தாந்த முடிவும், நம் கடவுச்சத்தின் உண்மையைக் காட்டிக்கொடுக்காதிருக்கின்றதே என அறிகின்றோம். சத்துதான் இறையுண்மை, அதுவே பதி பசு பாசமும் பரவுலகுயிர்களும் ஆக உள்ளது

என்பது மெய்யருள் ஞானம் கொண்டு நோக்கினால்தான் உணரப் படும். சாத்திரம் ஓதியதால் சத்து உண்மை விளங்காது.

(5)

1209. சத்தியஞ் சத்தியஞ் சத்திய மெனவே
1210. இத்தகை வழுத்து மென்றனிச் சத்தே

(உ-வி) தனிச் சத்தாகிய பரம்பொருள் ஒன்றே எங்கும் நிரம்பி என்றும் உள்ளதுவாம். அது நம் அருட்பெருஞ்ஜோதி யாக இன்று அருளாலே காண்கின்றோம். சத்தாம் ஒரு பொருளே காரண, சூக்கும, தூல வடிவங்களாகியும், ஆன்மக் கடவுள் உயிர், உடலாகியும் உள்ளதாம். இந்த மனித வடிவில் இச் சத்தியப் பொருள் அகத்தில் உண்மையாயும், அகப்புறமாகிய உயிரில் வாய்மையாயும், புறமாகிய உடலில் மெய்ம்மையாயும் விளங்குகின் றதாம். இதனால் இந்தச் சத்தியத்திற்கு நம் தமிழ் மொழியில், உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற முப்பொருள் விளக்கம் வழங்கப்பட்டுள்ளதாம்.

சுத்த அருள் ஞானத்தால், சத்துப்பொருளின் அனுபவப் பொருள் கண்ட வள்ளலார், இச் சத்தியப் பொருளின் முந்நிலை யுணர்த்தவே மீண்டு மும்முறை சத்தியம், சத்தியம், சத்தியம் என்று குறித்துள்ளார். பிறிதொரு இடத்தில் "ஜோதியுட் ஜோதியுட் ஜோதி" என்றுள்ளார். சத்தியம் என்பதற்கு, சத்து+இயம் எனப் பிரித்து நோக்கின் ஒரு பெரு உண்மையைக் காணலாம். இயம் என்பது ஒலியாம். முன் உள்ள சத்து, எங்கும் நிறைந்து நிலைத்துள்ள ஒளியைக் குறிப்பதாம். ஆகவே, சத்தியம் ஒளியொலிமயமாய் நிரம்பியுள்ள அகண்டாகாச வெளி யுண்மையை யுணர்த்துகின்றது எனலாம். ஓமொலியின் நிறை நிலையை நாம் எளிதில் அறிந்துகொண்டுள்ளோம். பிரணவ ஜோதி யின் தோற்ற உண்மையைச் சற்று ஆழ்ந்து ஆயின் அறியலாகும். உலகமெலாம் உதிக்கின்ற ஒளிநிலை வடிவம் ஓங்கார வண்ணமே என அகமுணர்ந்தோர் அனுபவமேயாம். எவ்வுயிரின் வடிவும், எப்பொருளின் வடிவும் ஆரம்ப நிலையில் அல்லது கரு வளர்ச்சி யில் முதலில் நம் தமிழ் ஓங்கார வடிவாகத் தோற்றியே பின்னர் வளர்ச்சியில் வேறு வேறு வடிவாய் விளைவு கொள்ளுகின்றன.

ஆகவே ஓங்கார நாதஜோதிமயமே உலகுயிர்ப் பொருள்கள் பலவுமாம்.

மேற்படி பிரணவநாத ஜோதியேதான் அருட்ஜோதி அல்லது அருட்பெருஞ்ஜோதி எனக் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. இப்போது சத்தியம் என்பதற்குப் பொருள் அருட்பெருஞ்ஜோதியே எனத் தெளிகின்றோம். இதுவே, தூல, சூக்கும, காரண வடிவாய் இருந்து அருட்சித்தி வெளியாம்போது, சுத்த பிரணவ ஞான தேகமென அனுபவப்படுகின்றதாம். இக் குறிப்பு நம் வள்ளல் வழங்கியுள்ள மகாமந்திர விளக்கத் தொடரில் மூன்று அருட்பெருஞ்ஜோதியாய்க் காண்கின்றோம்.

அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ் ஜோதி

ஆக குறிக்கப்பட்டுள்ளது. இதில் ஒன்றான தனிப்பெருங்கருணை ஆண்டவர், முந்நிலை அருட்பெருஞ்ஜோதியாய் விரிந்து விளங்கும் உண்மையைக் காண்கின்றோம். இந்த உண்மையை ஈண்டும் தெளிவு செய்யவே, மும்முறை அருட்பெருஞ்ஜோதிக்குப் பதில் மூன்று சத்தியம் என்ற சொற்களை வழங்கியுள்ளார். இவ்வுண்மை எல்லாம் அறிந்து சத்து இதுவெனத் தெளிந்துகொண்டு சத்திய மாம் அருட்ஜோதி வாழ்வில் தழைத்திடல் வேண்டும் உலக மெல்லாம்.

ஓங்கார வடிவமான நம் நாடு, உலகுக்கெல்லாம் அருட் பேரொளியாம் சத்தியஜோதியை மேவச்செய்து மேலான இன்பவாழ்வுக்கு வழிகாட்ட உள்ளது. இவ்வுண்மையின் காரண மாகத் திருவருளால் இந்நாட்டுக் கொடியிலும், "சத்திய மேவ ஜயதே" சத்தியமே வெல்லும் என்ற வாசகம் பொறிக்கப் பெற்றுள்ளது. இக்கொடியிலும் பச்சை, வெள்ளை, பொன்மை, வண்ணங்கள் "ஜெக, ஜீவ, பரத்"தையும், பாசம், பசு, பதியையும், நமது, தூல, சூக்கும, காரண, தேகத்தையும் சுட்டுவனவாய் அறியலாகும். மேலும், நடுநிற்கும் உயிராகிய ஆன்மப்பகுதியில், ஆன்ம தத்துவ விளக்கமாக இருபத்து நான்கு ஆரக் கால்ுடைய அறவாழி அல்லது தர்மச் சக்கரம் சுழலும் நிலையில் காட்டப் பெற்றுள்ளது. அருள்ஒளி நெறியாம் சுத்த சன்மார்க்கத்தில் வெண்மையும் பொன்மையுமே அருளாகவும் ஒளியாகவும் உள்ள

தைக் காண்கின்றோம். நாட்டுக்கொடியில் அந்தப் பொன்மைக்கும் வெண்மைக்குங்கீழே பசுமை விளங்குகின்றது. இந்தப் பசுமை யின் மாயப் புரட்சிகள் ஒழிந்து, பசுவாகிய ஆன்மநேயம் என்னும் அருட்புரட்சியாகத் தழைத்திட்டால் செழுமையும் வளமும் சீரும் சிறப்பும் எங்கும் விளையும். அதுவே உண்மையில் சத்தியத்தின் வெற்றி. நம் வள்ளல் கண்ட சத்தியத்தின் அனுபவம் இதுவாம். இந்தக் கொடி விளக்கம் 'தயவுப்பாக்கள்' பக்கம் *346,348* மூவர்ணக்கொடி என்பதிலும் காணலாம்.

(6)

1211. துரியமுங் கடந்ததோர் பெரியவான் பொருளென
1212. உரைசெய் வேதங்க ளுன்னுமெய்ச் சத்தே

(உ-வி) சத்தாம் பரம்பொருள், பெரிய வான்பொருளாக வேதங்களால் மதித்துத் துதிக்கப்படுகின்றதாம். ஆனால் அவ் வேதங்கள், அம்மெய்ப்பொருளை அறிகின்றதில்லை. அறியவும் முடியாதாம். அருமறைக்கும் எட்டாத பரம்பொருள் எனவும், வேதங்கள், ''ஐயா, என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே,'' எனவும் இன்னும் பலவாறாகக் கூறுகின்றன. அந்த அருட்பரம் பொருள் மனவாக்குக்கு அப்பாலானது. மனம், விழிப்பும், கனவும், உறக்கமுமாகிய முந்நிலைகளைக் கடந்து, அகவுணர்நிலை யுற்று அருளால் நெகிழும்போது அங்கு தோற்றுகின்றது அகண்டவெளியின் பெருநிலை. இதுவே துரிய வெளியாம் பெரிய வெளி. இப்பெரு வெளி நிலை வரைதான் பல மோனஞான சித்தர்கள் சென்று, ஓரளவு அரிய சத்தி சித்திகளும் பெற்று மீண்டு வந்து இவ்வுலகிடை சித்தாடி மகிழ்ந்து சென்றுள்ளனர். அந்தத் துரியநிலையில் பெற்ற அருள்வாக்கு, பரவைந்துவத்துரிய வாக்குதான் மெய்ம்மொழியைப் பெற்றுள்ளது. இம்மெய்ம்மொழி யின் மெய்ப்பொருள்தான் பிறரால் அடையப்பெறாத பரம்பொரு ளாக இருக்கின்றதாம். அதுவே, ''துரியமும் கடந்த ஓர் பெரிய வான்பொருளாக'' குறிக்கப்பட்டுள்ளது. வேதங்களும் ஆகமங் களும் அந்தப் பரம்பொருளைத்தான் புறத்திருந்து எவ்வளவோ காலமாகப் போற்றிக் கொண்டிருக்கின்றனவாம்.

துரியநிலைக்கு அப்பாலாம் பெருவெளிநிறை இறையொளி யின் உண்மை சுத்த அருள் வண்ணமாய் இருக்கின்றதாம். தம்மை இவ்வருள் வண்ணமாக ஆக்கிக்கொண்டவர்க்கே இந்த

அருள்நிலை யுண்மை விளங்கும். இதுவே, கடவுள் மயமான துரியாதீத நிலை எனப்படுவது. இது புறத்திருந்து அறியப் படுவதல்ல். அந்நிலையில் அத்துவிதமாய் இருந்து அருளனுப வத்தால் விளங்குவதாம்.

''துரியமலை மேலுளதோர் சோதிவள நாடு
தோன்றுமதில் ஐயர்நடஞ் செய்யுமணி வீடு
தெரியுமது கண்டவர்கள் காணில் உயிரோடு
செத்தவர்(கள்) எழுவார் என்று கைத்தாளம்போடு.''

என்ற பாவால், துரியமலைமீது ஒளிர் நிலையைக் கண்டு போற்றிக் கொண்டு உய்யலாம் என்பது கருத்தாம்.

(7)

1213. அன்றத னப்பால் அதன்பரத் ததுதான்
1214. என்றிட நிறைந்த வென்றனிச் சத்தே

(உ-வி) ஆதி என்று ஒரு காலத்தைக் குறிப்பிட்டு, அன்றி லிருந்து இருப்பது ''அது'' எனக் குறிக்கவொண்ணாதது, அதற்கும் அப்பாலாய் அனாதியாயுள்ளது ''அது'' வாகும். அது, அது என்று கூறப்படுகின்றது, அருட்பெருஞ்ஜோதியாம் சத்துப் பொருளேயாம். அது இந்த நிலவுலகு தோன்றிய காலந் தொட்டோ, இவ்வுலகுக்கும் பிற கோட்களுக்கும் ஆதாரமான ஞாயிறு தோன்றிய காலந்தொட்டோ தோன்றிய ஒன்றல்லவாம். பிரபஞ்சவெளி நித்தியமாயுள்ளது. அதிலே, அதுவாகிய அருட் பெருஞ்ஜோதியாம் சத்துப்பொருளும் அனாதியாகவே இருந்து வருவதாம். ஆகவே அதன் தோற்ற காலம் குறித்தற்கில்லையாம். அதுபோல் அதற்கு முடிவுக்காலமும் குறித்தற்கில்லையாம். உலகமே அழிந்தால், பிரபஞ்சத்தில் எல்லாமே அழிந்து ஒழிந்து போய் விட்டாலும் அதற்குமேலும் அழிவில்லாதிருப்பது அது வாம், அந்த அருட்பெருஞ்ஜோதியாம். அதன் பரத்து அப்பால், ஒரு குறிப்பிடப்படும் காலத்திற்கு மேலும் அதன்மேலும் உள்ள தாம் சத்துப்பொருள். ஆகையால் இந்த நம் சத்து ஆம் அருட்பெருஞ்ஜோதி யானது நித்தியமாகவே என்றென்றும் இருந்துவருவது என்பது உண்மையாம்.

சத்து என்பதற்கு இயற்கையாய் என்றும் உள்ளது என்று பொருள் குறிப்பார்கள். அதனையே இறைவன் என்று கூறு

கின்றனர். இறைவன் என்ற சொல் இறு என்ற பகுதியின் வழி தோன்றியதாம். இறு என்றால், எப்பொழுதும் நித்திய மாய்த் தங்கி இருப்பது என்று பொருளாம். இப்படியுள்ள அழியாப் பொருளையே நித்தியவஸ்து, சத்தியப் பொருள், கடவுள் அல்லது ''அது'' என்றும் பொதுவாகக் கூறப்படுகின்ற தாம். இந்த ''அது'' தான் சத்(ஸத்) என்று கூறப்படுகின்ற தாம். இந்த அதுவே, வடமொழியில் ''தத்'' (தது) என்கின் றனர். அது மெய்ப்பொருள் என்ற கருத்தைச் சுட்ட, ''தத்சத்'' ''தத் பரம்'' என்ற சொற்களைக் குறிக்கின்றனர். உபநிடதத்தில் ''தத்துவமசி'' என்ற மகாவாக்கியம் உபதேசிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள், ''அது நீ'' என்பதாம். வாய்மொழியால் ''அது நீ'' என்று சொல்லுதல் எளிது. ஆனால், அந்த ''அது'' எது என்றும், ''நீ'' என்பது எதைச் சுட்டுகின்றது என்றும் எவ்வளவு விளக்கிச் சொன்னாலும், சிந்தித்துப் பார்த் தாலும், அருள் ஒளி அனுபவம் உண்டாகாதவரை இந்த மகா வாக்கியப் பொருள் அறிந்திடப் பெற்றதாகாது. வேதாந்திகள், தங்களின் மனோ பகுத்தறிவு கொண்டும், ஐதிக நம்பிக்கை கொண்டும் இந்தத் ''தத்துவமசி''யின் கருத்தை யுணர ம்யலு கின்றனர். அவர்களுக்குத் தத் பதப்பொருள் இன்னதென்றே புரிந்துகொள்ள முடிகின்றதில்லை. அதனால் சத்துண்மையும் விளங்கிக் கொள்ள முடிகின்றதில்லையாம். ஏதோ இந்த உடலில் விளங்கும் கடவுளான்மாவாம் நித்தியப்பொருளே ''தாம்'' என்று எண்ணியும் பாவித்தும் இருந்து, புலனின்பப் புற வாழ்விலேயே இச்சையில்லாதவர்கள்போல், பற்றற்றவர்கள்போல் காட்டிக் கொண்டு பிழைத்துக் கொண்டிருந்து முடிவில் மடிந்து போய் விடுகின்றனர். ஆகையால், அந்த சத்து உண்மை இவர்களால் அறியப்படவும், அனுபவிக்கப்படவும் இல்லை என்பது மெய்யாம்.

கடவுள், மன அறிவுக்கும், கருவி கரணங்களுக்கும், புலன் உணர்வுக்கும் அப்பாலாய், மன மோனநிலைக்கு மேலாய் உள் ளுணர்வுக்கு ஏகதேசம் தோன்றி, மனிதனை அந்நிலையில் நிறுத் தித் தன்னை மறக்கச் செய்து விடுகின்றதாம். அதனால்தான் அதன் உண்மையைக் கண்டுவந்து உரைக்க முடியாதிருக்கின்ற தாம். அந்த அறிவறியாக் கடவுணிலை சுத்த தயவு அல்லது அருள் மயமாய் இருக்கின்றதால், அப்படித் தயாவண்ணமானவர் களே அக அனுபவத்தில், அந்தச் சத்துப் பொருளை அருட் பெருஞ்ஜோதியாகக் கண்டு கொள்ளமுடியும். அந்தச் சத்துப்

பொருள் தயா வண்ணமாய் இருக்கின்றது என்று யார், எப்படி அறிந்து வெளியிட்டனர் என்று கேட்பின், ஒருவன் தன் உணர்வும் செயலும் ஜீவதயவு நிரம்பியதாய் ஆக்கிக்கொள்ளும்போது தான் கடவள் அருளே அத்தயா அனுபவமாக, கடவுள் சத்தின்உண்மை விள்க்கமாக உணரலாகின்றதாம். அந்தச் சத்தே, சத்தை அறிவதன்றிப் பிறிதெதனாலும் அறியப்பட மாட்டாதாம். இதனால் கடவுளாம் சத்துப்பொருளை வேறு யாரும் எவ்வளவு முயன்றும் அறிந்தடைய முடியாதென உணர்த்தப்படுகின்றது.

சத்தின் இயல்பு அல்லது இலக்கணம், அது தானாய், சுயமாய், எந்த ஆதாரமுமின்றி, இயற்கையுண்மைப் பொருளாய் எப்பொழுதும் இருந்துகொண்டே யிருப்பது. அது எக்காலும், எதனாலும், எந்த அளவுக்கும் மாற்றமும் மறைவும் அடையாது, போக்கும் வரவும் இல்லாது நிறைநிலையிற் பொருந்தியுள்ளது தான் சத்தாம். அதுவே திருவருள் வழங்க புறத்தோற்றம் பலவாய்த் திகழ்கின்றது. அத்தோற்றம் சதா மாறும். அதனால், அருளால் அகமுற்று வாழ்தலே சத்து வாழ்வு சுத்த சன்மார்க்க வழியாம்.

214. இயற்கை விளக்கம்-சித்து

(1)

1215. என்றுமுள் ளதுவாய் எங்குமோர் நிறைவாய்
1216. என்றும் விளங்கிடு மென்றனிச் சித்தே

(உ-வி) இயற்கை உண்மையைச் சத்தென்றும், இயற்கை விளக்கத்தைச் சித்தென்றும் குறிக்கப்படுகின்றது. உள்ளதும் விளங்குவதும் ஒன்றாம் பரம்பொருளின் ஈரியல்பே ஆகும். இறையுண்மைதான், என்றும் நீக்கமில்லாது எங்கும் நிரம்பி, எல்லாத் தோற்றங்களுக்கும் தாயகமாய், ஒருபடித்தாய் இருக்கின்றதாம். இதுதான் ஒன்றான மெய்ப்பொருள், பரம்பொருள் இறைவன், கடவுள் என்று மெய்யுணர்ந்த ஞானியர் யாவரும் அறிந்துள்ளனர். இப்படியுள்ள சத்துப்பொருள், ஒருநிலையாய், ஆவதும் அழிவதுமின்றி, எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கின்றது எனினும், வெளிப்படையாய்த் தோற்றாது அருவமாய்

உள்ளதாம். இவ்வாறு சத்து மாத்திரமாய் இருந்தால் அது எவ்வளவு காலம் இருந்தும் ஒரு பயனும் ஏற்படாது. ஆகையால், இருப்பதும் இல்லாததும் ஒன்றென்றாகிவிடும். உண்மையில் இந்தச் சத்துப்பொருள் இருந்துவருகின்றதை, அதன் இயல்பாகிய புறவிளக்க நிலையால், பலவாய் விளங்கிக் கொண்டேயிருக்கின்றதாம். இந்தச் சத்தின் விளக்கமே சித்து எனப்படுகின்றது. சத்தின் இயல்பே சித்து என்பதுமாம்.

இந்தச் சித் விளக்கம், என்றும் உள்ள சத்தின் தன்மையாய் உள்ளதால் இதுவும், இந்தச் சித் விளக்கமும் என்றும் உள்ளதே என்பது தெளிவு. இதுதான் இங்கு, ''என்றும் உள்ளதுவாய்'' விளங்குவதாக முதற்கண் குறிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்து, சத்துப்பொருள் எங்கும் ஒருநிறைவாய், அகண்டமாய் இருக்கின்ற காரணத்தால் அதன் விளக்கமும் எங்கும் நிறைந்தே விளங்குதல் இயல்பே. சத்துப்பொருள் அருவமாய், உள்ளீடாய், மறைந்து இருப்பது. ஆனால், அதன் சித் விளக்கமோ உருவாய் வெளிப்படையாய்ப் பலவாய் விளங்கிக் கொண்டேயுள்ளதாம். ஆகையால், இந்தப் பிரபஞ்சமும், இதன் அனந்த வண்ண பேதத் தோற்றங்களும் சித்விளக்கமாகவே யுள்ளனவாம். எனவே, புறத்தே காணப்படுகின்ற, அறியப்படுகின்ற ஒவ்வொன்றும் சத்சித் விளக்கத்தோற்றமேயாம். இதிலே சத்து அருவாயும் சித்து உருவாயும் இருக்கின்றன. இதனால், எப்பொருளும், எவ்வடிவும் கடவுளின், சத்சித்மயமான அருவுருவத் தோற்றங்களே என்பது உண்மையாம். இதனால்தான் நமது இறைவர், என்றும் எங்கும் உள்ளவர் என்றும், எல்லாமனவர் என்றும் குறிக்கப்படுகின்றது.

இப்படிக் கடவுள் எல்லாமாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற உண்மை உள்ளபடி அறியப்படாமல், கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்றும், கல்லிலும் செம்பிலுமோ இருப்பார் எங்கள் இறைவர் என்றும், மனவாக்குக்கு எட்டாது அகத்தே இருக்கும் ஒன்றுதான் உண்மைக் கடவுளே தவிர, புறத்தோற்றங்கள் யாவும் மாயை, மித்தை என்றும் பதி ஆகிய கடவுள், பசு, பாசங்களுக்கு அதீதமாய் இருந்து ஆண்டுகொண்டுள்ளார் என்றும், மனிதன் கடவுளைப் பிரிந்து, உலகில் வந்து பிறந்துபாவ புண்ணியங்களால் அவத்தைகள் அடைந்து, பின்னர் திருவருளை வேண்டி, இவ்வுலக வாழ்வை நீத்து மறுபடியும்

கடவுளை அடைவான் என்றும், உலகில் பாவம் நிறைகின்றபோது கடவுளே, மேனிலை நின்று இங்கு வந்து அவதாரம் செய்து மக்களைக் காப்பாற்றி அவதார காரியம் நிறைவேறியபின் முன் னிருந்த தன்னிலைக்கே கடவுள் சென்றுவிடுகின்றார் என்றும் பலர் பலவாக, முன்னுக்குப் பின் முரணாக உண்மை அறியாது சொல்லிக்கொண்டிருக்கின்றனர். அந்தக் கற்பனைக் கூற்றுகளும், அறியா நம்பிக்கைகளும் ஒழிந்து, உள்ளது உள்ளபடி விளங்கச் செய்யவும், எல்லோரும் சத்தாம் சுத்த சன்மார்க்கத்தை ஏற்று அன்பினால் கூடிவாழ்ந்து இன்பம் காணவும் இதுசமயம் நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தானே எல்லோர் உளத்தும் உதயமாகியுள்ளார். அதனை அறிந்து அடைந்து பெருநலம் பெற இந்த விளக்கம் ஈண்டு இப்போது வெளியாகின்றது.

(2)

1217. சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்

1218. இத்தகை விளங்கு மென்றனிச் சித்தே

(உ-வி) இந்தப் பிரபஞ்சம், அனந்தவண்ணப் பொருள்மய மாய் விளங்குவதைப் புறத்தே காண்கின்றோம். எல்லாப் பொருள்களும் உருவாகி விளங்குவதை அறிகின்றோம். இவ் வுருவ நிலை எய்து முன் அப்பொருள்கள் சூக்கும அருவநிலையி லிருந்துதான் வெளிப்பட்டுள்ளனவாம். அந்த அருவ நிலையைப் பொருளாக உறைந்து உருவுறச் செய்வதும், பொருள் களை அணு அணுவாகப் பிரித்து அருவமாகச் செய்வதும் சித்துச் செயலேயாம்.

சத்துப்பொருள்கள், சக்தியாக மாறுவதும், சக்தியைப் பொருளாக மாற்றுவதும் இந்த உலகம் அறிந்துகொண்டுள்ள ளதேயாம். சக்திகள் பலவாக இவ்வுலகிடை இருந்து விளங்கு கின்றதையும், செயல்பட்டுக்கொண்டிருப்பதையும் காண்கின்றோம். ஆற்றலைச் சக்தி என்றும், அவ்வாற்றலைக் கொண்டு விளங்கும் பொருள்கள், உயிர்கள், நிலைகள் எல்லாம் சத்தர்கள் என்றும் கொள்ளப்படும். இதனால், ஒப்பற்ற சத்துப்பொருள், எத்தனை யோவித சக்திகளாய், அணுமுதல் அண்டகோடிகள் வரையு மான பொருள்களை இயக்குகின்ற கிரியாசக்தியாயும், உயிர்களில் ஜீவசக்தியாயும், புலன்களில் உணர்வாயும், மனத்தில் அறிவு ஆற்றலாயும், கடவுள் ஆன்மாவில் யோகானுபவ சித்தியாயும்

மேல் கடவுள் நிலையில் பேரருள் அனுபவமாயும் விளங்குகின்ற தாம்.

சத்திலிருந்து வெளியாகின்ற அதன் ஆற்றல் சித்தாக இருக்கின்றது எனக் காண்கின்றோம். அந்த் ஆற்றல் சித் வடிவங்களாக உள்ளதெனவும் அறிந்தோம். அத்தோடு அந்த சித்தே பலவாகிய ஆற்றல்களாக அல்லது சக்திகளாக விளங்குகின்றது என்பதையும் உணர்கின்றோம். இயற்கையில் அருவாயுள்ளது எங்கும் நிறை நித்திய சத்து என்றும், அந்நிறை சத்தினின்று உருவவடிவங்களாய் விளங்குகின்றனவும், தோற்ற ஆற்றல்களாய் விளங்குகின்றனவும் சித்தின் அம்சமே என்பது உண்மையாம். சித் விளக்க ஆற்றல்களைத்தான் உலகில் பலவாகிய சக்திகளாக அறிவிக்கப்படுகின்றோம். அந்தச் சக்திகளைக் கொண்டு விளங்குகின்ற பொருள்களும், இயக்கங்களும், உயிரின வடிவங்களும், ஆன்மாக்களும், சக்தி சித்திகளைப் பெற்றவர்களும் சக்தர்கள் எனப்படுகின்றனர். இந்த சத்தர்கள் எல்லாம் மொத்தத்தில் சித்தின் விளக்கங்களேயாம். சத்து அருவநிறைவாய் இருக்கின்றது; சித்தோ தோற்ற ஏகதேசங்களாய் விளங்குகின்றதாம்.

(3)

1219. தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
1220. இத்தகை விளங்கு மென்றனிச் சித்தே

(உ-வி) ஒப்பற்ற சித்தின் விளக்கம், பொருள்களாயும், ஆற்றல்களாயும் உள்ளதாய்க் கண்டோம். இப்போது அச் சித்தே பலவாகிய தத்துவங்களாயும், அத்தத்துவங்களை ஏற்று விளங்கும் தத்துவிகளாயும் உள்ளதாய் ஈண்டு குறிக்கப்படுகின்றது. தத்துவம் என்பது ஒன்றன் உண்மை இயல்பு ஆம். இத் தத்துவங்கள், தூல, சூக்கும, காரண வடிவங்களாகவும், பூத பௌதிக அண்ட பிண்டங்களாகவும், சட சித்துப்பொருள்களாகவும், பூமி முதல் நாதமீறாகிய 36 தத்துவங்களாகவும், சிவசக்தி தத்துவம், பரதத்துவம் முதலான 96 தத்துவங்களாகவும், இத் தத்துவங்களைக் கொண்டு விளங்கும் ஆதார தத்துவிகளாகவும் விளங்கிக்கொண்டு நித்தியமாய் நிலவுகின்ற ஒன்றுதான் நமது அருட்பெருஞ்ஜோதி சித் விளக்கப் பொருளாகும்.

தத், என்றால் அது எனக் கூறப்பட்டது. அது,எது? அது என்பது, சத்தாகிய உண்மை விளக்கப் பரம்பொருளைச் சுட்டு வதாம். எப்படி என்பதைச் சற்று ஆய்வாம். அது, என்பதை, அ+த்+உ எனப் பிரித்தறியும்போது, தகரமெய்ப்பொருள், ஆறு ஆதாரங்களுக்கு மேற்பட்ட ஏழாவதாகிய நிராதாரத்திலங்கும் சத்தாம் பரம்பொருளைச் சுட்டுவதாய் அறிகின்றோம். இதனால் ''அது'' என்பது கடவுளே என்று அறியலாகின்றது. இந்த, அது என்னும் பரம்பொருள், சத்தாகி இருப்பதோடுச் சித்தாக வும் விளங்கிக் கொண்டுள்ளதே அப்பரத்தின் இயல்பாம். இச் சத்தின் தன்மையே சித்தென முன்னம் ·அறியப்படாததால், அந்தத் தத்தின் சுபாவமாகிய சித் விளக்கம் சரியாய் விளங்க வில்லை. அத் ''தத்'' தினுடைய இயல்பு சித் விளக்கமாய், அது நம் மெய்யுணர்வாம் அருளறிவாய் விளங்குகின்றதைப் புரிந்துகொள்ளும்போது, அதன் சித்தாம் அருளே நாமாக இருப் பதை அறிகின்றோம். அதுவாக இருக்கும் கடவுளின் தன்மை யாம் அருளே நாம் என்பது தெளிவாம்.

மனிதன் உண்மையறியாத மன அறிவு கொண்டுள்ள வரையும், தன்னைத் தேக வடிவினனாகவே கருதிக்கொண்டிருக்கின்றான். இந்த மனோ அறிவுக்கு அப்பாற்சென்று, மெய்யறிவு பெற்று உள் விளங்கும் கடவுளான்மாவைத் தன் உண்மை வடிவாகக் கண்ட வன், தேகவுருவினன் தான் அல்ல, ஆன்ம ஞான அறிவு சொரூ பியே ''தான்'' என்ற முடிவுக்கு வருகின்றான். இது வேதாந்தியின் ஆன்ம பாவனா நிலையாம். இந்நிலையை யோர்ந்து கொண்ட டவனே, தன்னை அண்டி வந்து தெளிவுபெற முயல்கின்றவனுக்கு, கடவுளும் அதன் தன்மையும் கூடிய உண்மையை ஒருவாறு விளக் கிக் கூறி ''நீ தேக வடிவினன் அல்ல, உண்மையில் விளங்கும் கடவுள் ஆன்மாவான ஒன்றே நீ,'' அல்லது ''அதுவே ''நீ'' என்று உபதேசிக்கின்றான். இந்த ''அது நீ'' என்பதுவே ''தத்துவம்'' என்கின்றனர். துவம் என்றால் நீ, யாம்.

''தவமான சத்திய ஞானப் பொதுவில்
துவமார் துரியம் சொரூப தாமே.''

இது திருமந்திர உபதேசம். தவத்திருவாளர் சத்தியஞான சபையாம் பொதுவில், தம்மைத் தாம் மெய்ஞ்ஞானப் பொரு ளாம் துரிய வடிவில் கண்டு நிற்கின்றனர். சத்து அதுவாகிய கடவுள் என்னும்போது, அதன் சித்து விளக்கமாய்த் திகழ்கின்ற

அருள்ஞானமே, நீ என்று பிறர்க்குக் கூறுவதும், அதுவே நாம் என்று அனுபவத்திற்கொண்டு விளங்குவதும் உண்மையாம். ஆகவே நம் உண்மையும் இறையுண்மையும் ஒன்றேயாய், சத் சித் வண்ணமாய் இருக்கின்றதாம். இயற்கையில் உள்ளது சத்சித் இறைவனே, அதுவே எல்லாமாயும் நாமாயும் விளங்கு கின்றோம்.

(4)

1221. படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய்
1222. இடிவற விளங்கிடு மென்றனிச் சித்தே

(உ-வி) படி என்ற சொல் நம் நிலவுலகைக் குறிப்பது. இதுபோன்ற பலவாகிய நிலவுலகங்கள் உளவாம். இந்தப் படி எப்படி உண்டானது என்றால், எங்கும்நிறை சத்திற்குரிய சித் சக்தியின் அசைவால் பூத அணுக்கள் அனந்தம் தோன்றி, ஜோதி கோளங்கள் உண்டாகி, அவற்றினின்று ஐம்பூதப் பொருள்களும் ஆற்றல்களும் வெளிப்பட்டு கோட்களும், நிலவுலகும் தோன்றி யுள்ளனவாம். இந்த நிலவுலகில்தான் எல்லாச் சக்திகளும், பொருள்களும், தத்துவங்களும் வந்து வந்து படிந்து படிந்து இவ் வுலகை நிறைத்து மனிதவாழ்வுக்குகந்ததாய் யாவையும் தோற்று வித்துள்ளனவாம். இப்படி யாவும் படிந்து படிந்து விளைவு கொண்டுள்ளதால்தான் இதற்குப் படி என்ற பெயரே வந் துள்ளது. ஆகவே இந்த பூமியும் இதுபோன்ற பூமிகளுமே மனித வாழ்வுக்கு ஏற்றதாய் அமைந்துள்ளன என்பதும், பிறக் கோட் களிலும் ஒளிக்கோளங்களிலும் மக்கள் வாழ, சுத்தநெறி பற்றிச் சுகவாழ்வு பெற முடியாவாம்.

ஒவ்வொரு விண்மீனும் நம் ஞாயிறு போன்றும், அதற்கு மேல் பன்மடங்கு பெரிதாகவும் உள்ள ஜோதி கோளங்களேயாம். ஞாயிற்றினைச் சூழ மனிதன் வாழ் பூமியும் பிற கோட்களும் சுற்றிக்கொண்டிருக்கின்றனபோல ஒவ்வொரு நட்சத்திர ஜோதி யைச் சூழ நிலவுலகும் மற்ற கிரகங்களும் இயங்கிக் கொண் டுள்ளனவாம். இதனால், நமது நிலவுலகம்போல் இன்னும் எத்தனையோ கோடியுள்ளனவாம். இதுவே, ''படிநிலை பலவாய்'' என்று பகரப்பட்டுள்ளது. இந்தப் படிகளில் மக்கள் எவ்வளவோ காலமாக வாழ்ந்து மடிந்து, வாழ்ந்து வருகின்றனர். இவர்கள்

அறிவாலும், பிற ஆற்றல்களாலும் மேனிலையுற்று விளங்கக் கருதிப் பெருமுயற்சி செய்துகொண்டுள்ளனர். அந்த முயற்சி களால் தக்க பயனும் பக்குவநிலையும் அடைந்தே வருகின்றனர். அந்தப் பதவிநிலையும் பலபல படித்தரங்களாய் அமைந்துள்ளன வாம். இவ்வளவும் இடிவற (சிதைந்து, ஒழிந்து, மறைந்துவிடா மல்) நிகழ்ந்து நிறைவு பெற ஓங்கிக் கொண்டுள்ளனவாம். இது தான் நம் சித்தின் வளர்ச்சிமுறையாம்.

(5)

1223. மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
1224. ஏற்பட விளக்கிடு மென்றனிச் சித்தே

(உ-வி) மூர்த்திகள் - புறப் படிவங்கள், விக்கிரகங்கள், தேக ரூபங்கள் முதலியனவாம். மூர்த்தர்கள் என்பவை மூர்த்தி யாம் வடிவங்களுக்குக் காரணமாய் இருக்கும் தெய்வங்கள், தேவ தைகள் அல்லது ஆன்மாக்கள் ஆம். ஒரு தெய்வத்திற்குப் பல விக்கிரக வடிவங்கள் அமைக்கப்படுகின்றனபோல், ஓர் ஆன்மா வுக்குப் பல தேகங்கள் வந்து வந்து செல்கின்றனவாம். அப்படிச் சென்ற, இருக்கின்ற பலவாகிய தேக வடிவங்கள் யாவும் மூர்த்தி களாகவே கொள்ளப்படும்.

சத்தாக இருக்கும் இறைபரம்பொருள், தன் சித்தை வெளிப்படுத்தும் போது, அருவமான சதான்மாக்கள் (சத்து+ ஆன்+மா=சதான்மா) எங்கும் நிரம்பி இருக்க அவற்றைச் சூழ முதலில் மூர்த்தர்களின் வடிவங்கள் பல தோன்றி அச்சுகள் போல் அமையவும், பின்னர் அவ் அச்சுகளில் செய்யப்படும் பலப்பலவாகிய மூர்த்திகள் எண்ணற்றவை ஆக்கப்பெற்றுள்ளன வாம். ஆன்மவிளக்கப் பக்குவ நிலைக்கொப்பவும், மனோகரண வேறுபாட்டிற்கு இணங்கவும் மக்களின் புறத்தோற்றம் ஒன்று போலில்லாது வித்தியாசமாய் விளங்கிக்கொண்டேயுள்ளன வாம். அகத்திலுள்ள சத்தம்சம் அருவமாய் இருந்தாலும், அது சித்விளக்கத் தோற்றமாய் உருவாகி விளங்கவரும்போது, ஒவ் வொன்றிலும் மிகமிக அற்பக் கூறே வெளிப்பட்டு அனுபவத்தில் சிறிது சிறிதாக விளைவுகொள்ள வேண்டியிருப்பதால் பலப்பல வடிவில் பலப்பல காலம் தோன்றித் தோன்றி வாழ்ந்து வாழ்ந்தும் பட்டுப் பட்டும் தேற வேண்டியுள்ளதாம். ஆகவே ஒன்றான

சத்தின் நிறைவிளக்கம் அனுபவப்பட எத்தனையோ சித்விளக்க தேகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து வந்து கொண்டுள்ளன. இப்போது அச்சித்தே நிறைஅருளாய், அருட்பெருஞ்ஜோதியாய் அனுபவப்பட வெளியாகியுள்ளதாம். இதனால் அந்த அருட்பெருஞ்ஜோதியாம் சித்தைப் போற்றிக் கொள்ளுகின்றோம்.

(6)

1225. உயிர்வகை பலவா யுடல்வகை பலவாய்

1226. இயலுற விளங்கிடு மென்றனிச் சித்தே

(உ-வி) ஆன்மாக்களின் பக்குவ, அபக்குவ நிலைகளுக்குத் தக்கபடி நால்வகை யோனி, ஏழ்வகைப் பிறப்பு, எண்பத்து நான்கு நூறாயிர ஜீவபேத முற்ற உயிர்களுக்குப் பொருத்தமான தேக வடிவங்கள் யாவும் இயற்கை நியதிப்படி வந்துகொண்டே யுள்ளனவாம். பொதுவாக உயிரினவகை எண்பத்து நான்கு லட்சம் எனக் கணக்கிடப்படுகின்றது. அதிலும், ஒவ்வொரு வர்க்கத்திலும் சேர்க்கைமுறையாலும், பிரிவு வகையாலும் கலப்புச்செயலாலும் எத்தனையோவித ஜீவர்கள் விருத்தியாகிக் கொண்டும், அழிந்துகொண்டும் உள்ளனவாம். அத்தனை உயிர் களுக்கும் பருவுடல் அமைவனபோல் நுண்ணுடல்களும் சூழ் கின்றனவாம். இவை யாவும் சித்தின் செயல்களேயாம்.

உயிர் என்பது பொதுவாய் ஜீவனைக் குறிக்கும். அன்றியும் ஜீவனோடு கூடிய உயிரினத்தையும் குறிக்கும். மேலும் இந்த உயிர்த் தோற்ற காரணமாகிய ஆன்மாவையும் குறிப்பதாம். இதனால் உயிர்வகை பலவாய் என்பதற்கு இம் மூன்றினும் விளங்கும், ஜீவ, தேக, ஆன்ம பரிபாக நிலைகளில் தோன்றும் பலப் பலவாகிய வேறுபாட்டுத் தோற்றங்களாகக் கொள்ளப் படும். இதுபோல் உடல் வகை என்பதும் புறத்தோற்ற வடிவ பேதங்களே யல்லாது, சூக்கும ஆவி வடிவங்களும், நுண்ணிய காரணநிலை வடிவங்களும் கொள்ளப்படும். இவைகள் யாவும் சித்துவிளக்கத் தோற்றங்களே என்பது தெளிவு. இவைகள் விதிமுறைப்படி, இயல்பாகத் தோற்றுகின்றனவாம். மனிதனில் ஆன்ம பரிபாகநிலை ஏற்படும்போது, அருள்ஒளி உண்மை அறியலாகின்றதாம். இந்நிலையில் ஒருவன் தன்னைச் சத்தாகிய

ஆன்மாவிலிருந்து அனகமுற விரிந்து விளங்கும் கடவுட்ஜோதி வடிவினனாகவே காண்கின்றான். இதுவே ஆன்மாவுக்குரிய இயல் உண்மை வடிவாக விளங்கும். முடிவில் இவ்வியற்கை நித்திய வடிவம் பெறப்படுவதற்கே மற்றெல்லா வடிவங்களும், அனுபவங்களும் வந்து வந்து சென்று கொண்டுள்ளனவாம்.

(7)

1227. அறிவவை பலவா யறிவன பலவாய்

1228. எறிவற விளக்கிடு மென்றனிச் சித்தே

(உ-வி) அறிவவை அல்லது அறிகின்றவை பலவாம். அறிவு அனுபவம் ஆன்மாவுக்கே உரியது, என்றாலும் அவ்வான்மாவின் நித்தியானந்த அறிவரிய அருள்நிலை யனுபவம் வேறு, அதற்கு மாறான அநித்திய ஜீவ உணர்வில் அறிந்து அனுபவிக்கப்படு கின்ற நிலை வேறு. இந்த அநித்திய உயிர் அனுபவத்திற்குத் தான் தேக, கரணங்களும், இந்திரிய புலன்களும் துணையாய் இருக்கின்றனவாம். இதனால் இவைகளை எல்லாம் அறிவவை அல்லது அறிகின்றவை என்று சொல்கின்றோம். இப்படி அறிகின்றவை ஒவ்வொரு ஜீவர்க்கும் பலவாகப் புறத்தில், அதாவது ஆன்மாவுக்குப் புறமாகிய உடலுட் கருவி கரணங் களின் மூலம் விளக்கம் ஏற்படுகின்றதாம்.

இனி அறிவன பலவாய் என்பது, அறியத்தக்கன, அறியப் படுகின்றவை பலவாக இருக்கின்றதாம். பொறி புலன்களால், மனோகரணத்தால் அறிந்து கொள்ளப்படுகின்றவை சிலவேயாம். இவற்றிற்கு எட்டாது, அறிந்துகொள்ள முடியாது அகமிருந்து ஆளும் அகநிலைச் சத்துப் பொருளைக் கொஞ்சமும் அறியார் புலனெறியாளர் பலரும். அதனை அறிந்து அடைந்து தக வாழ்வது அறிவுடைமையாகும். அதனை அடைவித்தற்பொருட்டே நம் சத்பதி நமக்கு பண்டே தொட்டு வேண்டத்தக்கனவெல்லாம், எறிவற (விலக்குதலில்லாது அல்லது நீக்கமின்றி) வழங்கி வழங்கி வாழ்வித்துக் கொண்டேயுள்ளார் என்பது, இன்றைய சித் விளக்கமாம்.

அக உண்மை அனுபவப்படும் வகையில்தான் சித்து விளக் கச் செயல்கள் நிகழ்த்தப்படுகின்றனவாம். இதனால் உண்மையை

அறியவே, அந்த உண்மைச்சத்தின் உண்மைச்சித்து, அறியப் படுவன யாவுமாய்த் தோற்றியும், சத்தாய் அகநின்று ஏற்று அனுபவிக்கின்றவனாயும் செய்து, இரண்டற நிற்கின்றதாம்.

(8)

1229. நினைவவை பலவாய் நினைவன பலவாய்

1230. இனைவற விளக்கிடு மென்றனிச் சித்தே

(உ-வி) ஜீவர்கள் புலனுணர்வு கொண்டும், கரண உணர்வு கொண்டும் உலக விஷயங்களைப் பற்றி சதா நினைத்துக் கொண்டேயுள்ளனர். இந்த நினைவு ஆற்றல் மனிதன் அல்லாத உயிரினங்களில் அதிகம் செயல்படுகின்றதில்லை. மனிதமனமே இவ்வுணர்ச்சிச் சக்தியில் அதிக உயர்நிலையில் உள்ளதாம். இந்த மனத்தின் இயல்பு ஒரு பொருளையோ, தோற்றத்தையோ, சிந்தனையையோ பற்றி நிலைத்திருப்பதில்லை. சதா நினைப்பதும் மறப்பதும் வேறு எதையாவது நினைப்பதுமாய் இருக்கின்றதாம். தயவோடுகூடிய ஒருமை மனம்தான் கடவுள் திருவடியில் ஒன்றி நிற்க வல்லதாம்.

உலகில், நினைவவை பலவாம். அதாவது நினைக்கின்ற உயிர் இனங்கள் அநேகம். அதில் எண்ணமிட்டுக்கொண்டே யிருக் கின்ற மனமுடைய மனிதர்கள் எண்ணிலாதவர்கள் ஆவர். அப்படி எண்ணமிடுகின்ற மக்களின் ஒவ்வொருவரின் மனமும் எண்ணுகின்ற எண்ணங்களும் எண்ணிலவாம். நினைவன, அல்லது நினைக்கப்படுவன பல என்பது குறிப்பு. இப்படியுள்ள மனிதர்களும், அவர்களின் மனங்களும் நிரம்பியுள்ளனர் இவ்வுல கில். இதன் காரணமும், விளைவும் என்னவாக இருக்கும்? எல்லாம் கடவுளின் சித்துவிளக்கச் செயல்களே எனப் புரிந்து கொள்ளலாகின்றனவாம். மனித மனமே சத்தாகிய பரம் பொருளின் சித்துவிளக்கத் தத்துவக் கருவியேயாம். சத்துப் பொருளினின்று சதா சித்துவிளக்கம் புறப்பட்டுப் பரவிக் கொண்டே யிருக்கின்றது. அந்த சித்துவிளக்கம்தான், மனிதனின் உடலாய், உயிராய், உணர்வாய் (அதுவே மனமாய்)த் தோன்றி தயவுமயமாகின்றபோது, தனது சத்தின் உண்மையும் சித்தின் விளக்கமும் இரண்டறக் கலந்த இயல்பை அறிந்துகொள்கின்ற தாம். சுத்த சத்தின் சித் விளக்கமே இப்பொழுது அருள் உணர்

வாகி விளங்குகின்றதால், அதுவே மனத்தின், நினைப்பு மறப்பு அற்ற சுத்தநிலையாக அறியப்படுகின்றதாம்.

(9)

1231. காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய்

1232. ஏட்சியின் விளக்கிடும் என்றனிச் சித்தே

(உ-வி) உலகில் எத்தனையோவகைப் பொருள்களும், உயிர்களும் சக்திகளும், தத்துவங்களும் உள்ளனவாம். இவைகள் யாவும் காட்சிப்பொருளாக விளங்குகின்றன இப்பெரிய பிரபஞ்சப் பொருட்காட்சிச்சாலையில். இக்காட்சிகள் எல்லாம் ஏன் தோற்றுவிக்கப்பட்டுள்ளன? ஏன் கண்டு கொள்ளப்படுகின்றன? என்று அறிய முற்படும்போது, அருள் உணர்ச்சி உள்ளத்தில் உண்டாம் சமயம் உண்மை சிறிது சிறிதாக வெளியாகின்றனவாம்.

இந்தப் பேருலகில் அனந்தங்கோடிப் பொருள்களும், உயிர்களும், தோற்றங்களும், செயல்களும், அனுபவங்களும் நிரம்பியிருக்கின்றன. இப்படி இருக்கும் இக்காட்சிகளைக் காண்கின்ற உயிரினங்கள் பலவாம். ஆனால் அவ்வுயிரினங்களுக்கு இப் பிரபஞ்சக் காட்சியால், காரண, காரிய அனுபவம் ஏதும் அறியப்படுகின்றதேயில்லை; மாறாக, மனித இனத்திற்கு மட்டும் இப் பிரபஞ்சக் காட்சியால் அறிவரிய உண்மைகளும், கடவுள் தத்துவ விளக்கங்களும், செயல்களும், பயன்களும் அறிந்து ஏற்கப்படுகின்றனவாம். அகத்திலே பொதிந்துள்ள அருட் சக்தியின் அனுபவம் வெளிப்படற்கு இந்தப் பெரும் பிரபஞ்சக் காரியப்பாடு அவசியம் வேண்டியிருக்கின்றது. இப் பிரபஞ்சக் காரியப்பாடே இதற்குக் காரண சத்தின் உண்மையை எல்லாம் அறிந்து அடையத் துணையாயிருக்கின்றதாம். ஏட்சியின் என்றால் ஏமாற்றமில்லாது உண்மையாக எனப் பொருள்படும். அதாவது புறத்தோற்றங்களும், அனுபவங்களும் அக உண்மையைக் கண்டு அருளாற்கொண்டு, ஏமாற்றமடையாது மெய்யின்ப வாழ்வில் விளங்கற்கு ஏதுவாம்.

கடவுட்சித்தின் இயல்பு சதா வெளிப்படுவதே. அப்படி வெளியாகின்ற சித்விளக்கம், இரு கூறுகளாய்ப் பிரிந்து

உணர்த்துகின்றதும், உணர்கின்றதுமாய் வெளிப்படுகின்றது. கடவுள் சத்தாகி அகநின்று அருள் செய்வதால், அது சித்தின் விளக்கமாய் புறஞ்சூழ்ந்து, கண்டு அனுபவத்திற்கொண்டு விளங்குகின்றதாம்.

(10)

1233. செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்
1234. எய்வற விளக்கிடு மென்றனிச் சித்தே

(உ-வி) இவ்வுலகிடைத் தோன்றியுள்ள உயிர்கள், முக்கிய மாக மக்கள் சதா ஏதேனும் செய்துகொண்டேதான் இருக் கின்றார்கள். அந்த வினையினால், சூழ்பிறவி வடிவங்களும் சதா வருவதும் சிலகாலம் இருந்து போவதுமாய் இருக்கின்றன. வினை வளர, உடல் (பிறவி) வளரும், உடல் வளர வினை வளரும். இது சங்கிலித் தொடர்போல் வந்துகொண்டேயிருக்கும். மக்கள் அல்லாத பிறவுயிர்கள் என்ன வினை புரிகின்றன? என்றால், அவற்றின் வாழ்வே வினைச்செயலாக இருக்கின்றது. அதுவும் அவைகள் அறியாமலே, கடவுள் நியதியாக சித்விளக்கச் செய லாக வெளியாகி மேற்பிறவிகளுக்கு ஏற உதவுகின்றன அவற்றின் செயல்கள் அல்லது வினைகள்.

ஆன்மாவில் கடவுள் அருள் இயல்பாக இருந்துதான் அதனை வெளிப்பட்டு விளங்கச் செய்கின்றது. அதுவே, ஓர் ஆன்மாவுக்கு சூழ் வடிவங்கள் தோற்றுவிக்கக் காரணமாய் உள்ள தாம். அருளுண்மை அறியப்படாதபோது, ஆன்மாவுக்கு இயல் பாயுள்ளது ஆணவமலம் என்றும்; அதுவே பிறவிக்குக் காரண மாய், மேல் மாயா கன்ம உடல்களை ஏற்று அவத்தையுறுகின்றன என்கின்றனர். பக்குவ ஆன்மாவுக்குக் கடவுட் சித்தாம் அருளே வெளிப்பட்டு உருபல கொள்ளச் செய்து, முடிவில் மனித வடிவில் அருள் உண்மையைத் தூண்டிவிட்டு, தன்னைத்தானே கண்டு கொண்டு அருள்வாழ்வு பெறச்செய்து விடுகின்றதாம்.

ஆன்மாவானது அருள் அனுபவம் பெற்றுக்கொள்ளாது, உயிர் அனுபவத்தோடு உலகில் பிழைத்துக்கொண்டிருக்கும் வரை எத்தனையோ துன்பங்களையும், அவத்தைகளையும் ஒவ் வொரு பிறவியிலும் அனுபவித்துக்கொண்டே யிருக்கின்றதாம்.

இந்தச் சுகமல்லாச் சுகமெல்லாம் துன்பங்களாகவே ஆன்மாவுக்கு அனுபவமாகின்றதாம். இத் துன்பானுபவம் எல்லாம் ஆன்மா வுக்கே ஏற்படுவதன்றி; ஆன்மா ஏதும் அனுபவிக்கின்றதில்லை, எல்லாம் தேகேந்திரியங்களே அனுபவிக்கின்றன என்பது உண்மையே அல்ல, தவறேயாம். எல்லாப் பிறப்புத் துன்பங் களும் ஆன்மாவாகிய உண்மை மனிதனுக்கே என்றதால்தான், ''செல்லாநின்ற எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்,'' என மணிவாசகம் குறிக்கின்றது. இந்த ஆன்மாவுக்கு ஏற்பட்ட துன்பங்கள் எல்லாம் ஒழிந்துபோக, எய்வற (உள்வருத்தம் நீங்கும்படி) கடவுளே சித்விளக்கம் புரிகின்றார் இத்தருணம்.

உயிரினங்கள் பலவுள; அவை புரியும் வினையாம் செயல்கள் எண்ணிலவாம். இதற்கு லட்சியம் என்ன? இவைகள் எல்லாம் சத்தாம் கடவுளின் வடிவங்களாம் ஆன்மாவாயிருத்தல் உண்மை. இந்த ஆன்மாக்கள் இரட்டை வாழ்வில் வைக்கப்பட்டிருக் கின்றவாம். முதலாகிய கடவுள்நிலையில் ஆன்மா, கடவுள் மய சுத்தானந்த நிலையில் இருக்கின்றது. இது நித்தியமானது. இரண்டாம்நிலையில் ஆன்மாவானது உயிர்ச்சக்தி கொண்டு, தேகேந்திரியத் தொடர்புடன் உலகியலில் வாழ்கின்றதாம். இதில் ஏற்படுகின்ற இன்ப துன்ப அனுபவமெல்லாம் தான் உயிர் வழி ஆன்மாவே அனுபவிக்கின்றது. உயிர் ஒடுங்கிவிட்டால் உயிர் வழி ஆன்மாவே அனுபவமும் அடியோடு ஒழிந்துபோம். ஆனால் வினைவழி ஆன்மாவுக்கு மறு பிறவித் தேகம் வரும்போது துன்பானுபவம் வருத்துகின்றதாம். இதை ஒழித்து மறுபடியும் பிறப்பு வராதிருக்கச் செய்ய வேண்டுமானால், ஆன்மாவின் வாழ்வு சுத்தானந்த நிலையை யோர்ந்து, பொருந்திநின்று, சுத்த சன்மார்க்க வாழ்வு வாழ்வதால் நிலைத்த இன்பவாழ்வே சூழ்ந்து கொள்ளும், மேற்கொண்டு இறப்பும் பிறப்பும் தொடரா.

(11)

1235. அண்ட சராசர மனைத்தையும் பிறவையும்
1236. எண்டர விளக்கு மென்றனிச் சித்தே

(உ-வி) அகண்ட பிரபஞ்சத்திலே எத்தனையோ கோடி அண்டங்கள் விளங்கிக்கொண்டிருக்கின்றன. அவ்வண்டம் ஒவ்

வொன்றிலும், அளவிறந்த அசரமாகிய (நிலையியல்) உயிர்களும், (சரமாகிய) (இயங்கியல்) உயிர்களும் விளங்குகின்றனவாம். இவைகளே யல்லாது இந்தப் பெரும் பிரபஞ்ச வெளியில் அனந்த மாகிய பூதசக்திப் பொருள்களும், மின்காந்த ஆற்றல்களும், கணித்தற்கரிய சக்திச் செயல்களும் விளங்கிக்கொண்டுள்ளன வாம். வான்வெளி ஆராய்ச்சியில் புதிது புதிதாக எத்தனையோ பொருள்களையும், ஆற்றல்களையும், அண்ட விளக்கங்களையும், அவற்றின் வரலாறுகளையும் கொஞ்சங் கொஞ்சமாகக் கண்டு கொண்டுள்ளனர். இக்காட்சியும் அனுபவமும் அகமெய்ப் பொருளின் இயல்பறிந்து அனகவாழ்வு ஏற்று இன்பநிலையுறு வதற்கே ஆகும். அப்படியல்லாது வெற்று ஆராய்ச்சியால், புறப் பொருள்கள் கண்டுபிடிக்கப்படுவதால், புலனின்பம் உறுவதால் பெருநன்மை உண்டாகாது, மனிதன் இப் பிறப்பில் அறிந்து அடைய வேண்டிய பயனை அடையாமற் போய்விடுகின்றான்.

இம் மனிதப் பிறப்பின் பயனாகிய பேரின்பவாழ்வை அடை விக்கவே இந்தப் பெரிய பிரபஞ்சம் திருவருளால் தோற்றுவிக் கப்பட்டுள்ளது. தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்தப் பிரபஞ்சத் தில் பலப்பலவாகிய உயிர்களும், பொருள்களும் வருவிக்கப்பட் டுள்ளனவாம். இவையெல்லாம் எதற்காக இப்படி விளங்கச் செய்யப்பட்டுள்ளன என்றால், உள் விளக்கமாம் அகத்தெளிவும் அனுபவமும் பெற்று மனிதன் புனிதனாகி மன்னிய இன்பத்தில் வாழ்வதற்கேயாம். இதுவே யீண்டு எண்டர எனக் குறிக்கப் பட்டுள்ளதாம். எண்தர என்றால், எண்ணியது எண்ணியாங்கு பெற, எண்ணம் நிறைவேற, கடவுட்சித்தி அனுபவம் உண்டாக என்று பொருளாம். அந்தக் கடவுளின் சித்துச் செயலே, அக அனுபவ சித்திக்குக் காரணமாய் புற உலகுயிராற்றல்கள் எல்லா மாய் வெளிப்பட்டு விளங்கிக்கொண்டிருக்கின்றனவாம். இந்த மா பிரபஞ்ச தோற்றத்தையே ஒப்பற்ற பெருஞ்சித்துச் செயலாக இருக்கின்றதாய்க் காண்கின்றோம். எந்தச் சித்தரால் இந்தச் சித்து விளக்கம்போல் செய்யவும், அளவிறந்த நெடுங்காலம் பாவையும் விளங்கிக்கொண்டே உயரனுபவம் விளைவித்துவரச் செய்யவும் கூடும்! இதுவே சத்சித் பதியின் சிறப்புச் செயலாம்

(12)

1237. எல்லாம் வல்லசித் தெனமறை புகன்றிட

1238. எல்லாம் விளக்கிடு மென்றனிச் சித்தே

(உ-வி) கடவுளை, எல்லாம் வல்ல சித்தன் என்கின்றனர். சர்வ வல்லமையுள்ள ஆண்டவரை "Omnipotent Almighty God" என்று குறிப்பிடுகின்றனர்.

"எல்லாஞ் செயல்கூடும் என்னாணை யம்பலத்தே
எல்லாம்வல் லான்றனையே யேத்து."

என்கின்றார் நம் பெருமான். மறை யாகமங்கள் யாவும் கடவுளின் இந்த எல்லாம் வல்ல பெருஞ்செயல் தன்மையைக் குறிக்கின்றன. பக்தர்கள் யாவரும் வியந்து துதிக்கும் கடவுட் பெருங்குணப் பெருஞ்செயல் இந்த எல்லாம்வல்ல தன்மையாகும்.

சத்தாம் பரம்பொருளின் இந்தச் சித்தியல் விளக்கச் செயலால்தான் இந்தப் பிரபஞ்சம் என்றும் விளங்கிக்கொண்டிருக்கின்றது. இயற்கையுண்மையாய் இருப்பது சத்து, இயற்கை விளக்கமாய் விளங்குவது சித்து. சத்து இல்லாமல் சித் விளக்கம் உண்டாகாது. சித்து இல்லையாயின், சத்து இருப்பதை யுணரவும் அனுபவிக்கவும் முடியாது. சூரியனுக்கு ஒளி இயல்பாய் இருந்து விளங்குகின்றதும்,விளக்குகின்றதுமாய் உள்ளது போன்று, சத்தாம் பரம்பொருளுக்கு இந்த சித்தும் இயல்பாய் இருந்து விளங்கவும் விளக்கவும் உதவுகின்றதாம். இந்த இயற்கை விளக்கமாகிய சித்தால் என்ன பயன்? அல்லது இந்தப் பெரும் பிரபஞ்சம் ஏன் தோன்றி, எதற்காக விளங்கிக் கொண்டு, மக்கள் முதலான உயிர்களைத் தோற்றுவித்துப் பல விதங்களிலும் இன்ப துன்ப அவத்தைகள்பட்டு அழிவுறச் செய்கின்றது? இப்படிப்பட்டசித்துச்செயலால் யாருக்கு என்ன நன்மை? இதில் கடவுளின் சித்தியல் விளங்கலாம், ஆனால் உயிர்களின் துன்பாவத்தைகளைக் கண்டு மிக வருந்தநேருகின்றதே! என் செய்வது? கருணையே வடிவான கடவுட் செயலின் உண்மை விளங்காமல் கலக்கமடைகின்றனர் நல்லோர். தயாநிதியாகிய எல்லாம்வல்ல கடவுள், இப்படி ஏன் தயவே சிறிதும் விளங்காத இந்த அவத்தைகளையும் அழிவுச்செயல்களையும் ஏன் புரிகின்றாரோ? என்றெல்லாம் கேட்கவும், கருதவும் செய்கின்றன இவ்வுலக நிகழ்ச்சிகள் எல்லாம்.

இப்பொழுதுதான், திருவருளே இந்தச் சித்தாகி நின்று உண்மையை எல்லாம் சிறிதும் ஐயமும் திரிபும் இல்லாதபடி விளக்கமாக உணர்த்திவிடுகின்றதாம். நமது கடவுள், அருட்பெருஞ்ஜோதியாக இப்போது வெளியாகியுள்ளார். இதன்

அகண்ட பெருஞ்ஜோதியே சத்துப்பொருளாகவும், அருள் ஆற்றலே சித்துத்தன்மையாகவும் உள்ளனவாம். மற்றொரு வகையில் அருள் ஆற்றலே அகப் பொருளாகவும், பேரொளியே புறத்திலங்கும் யாவுமாக விளங்குகின்றதெனவும் அறிகின்றோம். உண்மையில் இந்த சத்சித் பரம்பொருள், அத்துவிதமான, இரண்டற்ற ஒன்றான அருள்ஒளியாகவே உள்ளதாம். ஆகை யால், சித்தென விளங்கும் எப்பொருட்கும், செயலுக்கும், தோற றத்திற்கும், குணத்திற்கும் அனுபவத்திற்கும் உள்ளீடாய் அக நிலையிற் பொருந்தியதாய் இருக்கின்றது, எல்லாம்வல்ல அருள் என்பது தெளிவாம். இவ் அருள் நிலையே, அக அனுபவத்தில், சத்தாகிச் சித்தாகி இன்பமாகிச் சதாநிலையாய் விளங்க வல்ல தாம். அப்படித்தான் அது (அந்த அருள் தான்) சச்சிதானந்த மாய் என்றும் நிலவுகின்றது. இந்நிலை அனுபவம் வெளிப்படத் தான், புறஞ்சூழ் ஜோதியைப் பலப்பலவாக சதா விளங்கச் செய்துகொண்டே யுள்ளது அந்த அகம் வளர் சச்சிதானந்தம்.

அகநிறை இன்பநிலை எப்போதும் பரிபூரணமாய் இருந்தும், அது வெளியாக; பல பொருளாய், உயிராய் ஆக்கிக்கொண்டு உயிரனுபவத்திற்குமேல் அருள்ஞான அனுபவமுறவே இந்த மனிதப் பிறப்பு வடிவு கொண்டு உலகிடை தோன்றியுள்ளதாம். இப்பிறவியில் புலன் உணர்வும், மன அறிவும்தான் முற்பட்டு இச்சை வழியிற் படர்ந்து அறம்பாவத்தால் புற வாழ்வில் இன்ப துன்பங்களைப் பெருக்கிக்கொண்டிருக்கின்றனவாம். மக்கள் இந்தப் புற வாழ்வில், அவா, வெகுளி, மயக்கத்தால் தீயவழியிற் சென்றுகொண்டிருப்பதே, அவத்தைகள் பலவற்றிற்கும், துன்பங் களின் பெருக்கிற்கும் காரணமாம். பக்குவமுற்றால், அன்புவழி மேற்கொண்டால் மக்கள் எல்லா நன்மையும் பெற்று இன்பவாழ் வில் தழைப்பார்கள். ஆகையால் இன்றைய உலகநிலையில் துன்பியல் வாழ்வுக்குக் காரணம், மக்களின் அறியாமைச் செயலேயாம். கடவுள் தயவுசெய்யாதிருக்கின்றதாகக் கருது வதோ, அவரைத் தயவு இல்லாதவர் என்று எண்ணுவதோ பெருந்தவறேயாம். மனிதனைப் பக்குப்படுத்தவே இந்தச் சோதனைச் சூழலில் விட்டு, மீண்டும் வரவேற்கத் தயாராக இருக் கின்றார். அன்றியும் கடவுணிலை நிறை இன்பமாய் அதீதத்தில் என்றும் இருந்துவருவதும் பக்குவமுற்ற மனிதனை அவ்விறையின்ப நிலையுற்று என்றும் பேரின்பில் விளங்கச் செய்யவும் உள்ளது என்பது உண்மையாம். ஆகவே, இப்போதுள்ள உலகநிலையைக்

கண்டு, மக்கள் படும் துன்பங்களுக்காக நெஞ்சம் உருகிப் பரிதாபப் படுவதன்றி எவர்மீதும் குறை காணார் மெய்யுணர்ந்தோர். மக்கள் உளத்தில் மெய்யன்பு பெருக வேண்டும், வாழ்வில் அன்புச்செயலே படர வேண்டும். அப்போது இன்பமே எங்கும் சூழக் காண்போம். சத்சித் பொருளின் அனுபவமே ஆனந்தமாம். மனிதன் இந்த சத்சித் உண்மையை உளம்கொண்டு மேனின்று வாழும்போது மெய்யின்பம் உண்ணின்று பொங்கிப் புற வாழ்விலும் நிறைவுற்றுத் திகழும். இதனால், இதுகாறும் சச்சிதானந்தம் அகநிலையில் மறைந்து கிடந்தது, அணுவுள் பேராற்றல் மறைந்துகிடந்ததுபோல. ஆன்மஞானிகளும் பிறரும் அந்த ஆனந்தபதியைப் புறத்திருந்து ஏகதேசம் உணர்ந்தும் உணராமல், பொய்ப் பாவனையில் தாம் அந்நிலையை அறிவாற் பற்றிக்கொண்டுவிட்டதாக எண்ணிப் புற வாழ்விலே அழிந்து போய் விட்டனர். இப்போது சுத்த அருளால் அந்த ஒன்றான சத்சித் பதியை உட்சார்ந்து நின்று, ஆனந்தமாய்ப் புற வாழ்வில் விளங்கலாகிவிடுகின்றான். நன்று நன்றென்று அகமகிழ்ந்து சால அருளாதிருப்பாரோ, சற்சிற் சுகத்தைச் சார்ந்தோரே என சத்சித்தின் விளைவு சதானந்த வாழ்வே என அறியவரும்.

215. இயற்கை இன்பம் (ஆனந்தம்)

(1)

1239. ஒன்றதி லொன்றென் றுரைக்கவும் படாததாய்
1240. என்றுமோர் படித்தாம் என்றனி இன்பே

(உ-வி) இன்பம், எல்லோரும் விரும்பும் ஒன்றுதான். யாரும் உண்மையில் மனதார இன்பத்தை வெறுத்துத் துன்பத்தை விரும்பமாட்டார்கள். இன்பம் பெறுவதற்காகத் தான் மக்கள் எப்படி எல்லாம் பெருமுயற்சிகள் செய்தும், தந்திர வழிகளைப் பின்பற்றியும், செய்யத்தகாதன புரிந்தும் உலகியல் இன்பத்தைத் தேடுகின்றனர். அந்த இன்பம் புலன் இன்பமாய் மனோமயக்கின் அனுபவமாய்த் தோன்றி மறைவதாய் இருக்கின்றது. உலக இன்பம் எதுவும் உண்மையானதாக நிலைத்து விளங்குவதாக இல்லை என்பது நல்லோர் கண்ட அனுபவம். இன்பங்கள் எல்லாம் செயற்கை இன்பமேயாம். எதுவும் இயற்கை யின்பமாகாது. இயற்கையின்பம் என்பது என்ன? உண்மையான இன்பம் எது? என்பது பற்றி புலன்வாழ்வில்

அழுந்தியுள்ள உலகினர்க்குச் சற்றும் புரிகின்றதேயில்லை. அப்படி மெய்யின்பத்தை அறிந்துகொள்ள வேண்டுமானால், ஐம்புலன் இச்சையை விடுத்துத் தயவோடும் ஒருமையோடும் மனதை அகமுகமாய் நிறுத்தி நின்றால், உள்ளுணர்வில் அருள்ஞான விளக்கம் ஏற்படும். அதுகொண்டு அருள்வாழ்வு வாழும்போது உண்மையின்பம் இன்னது வென்று அறியப்படுவதோடு அனுப வத்திலும் விளங்குவதாம்.

அகநிறை இயற்கையின்பம் இயல்பாகவே உள்ளிருக் கின்றது. அவ்வின்பம் எப்போதும் நிறைநிலையில்தான் இருப்பது; கூடுவதுமில்லை, குறைவதுமில்லை. இது என்று மோர் படித்தாம் தனி இன்பமாகச் சாற்றப்படுகின்றதாம். இதனையே சச்சிதானந்தம் என்றும் கூறுவர். உலகர் இவ் வின்பத்தை உள்ளபடி அறிந்துகொள்ளவில்லை. அந்த அக இன்பம் இயற்கையானது எனவும், சச்சிதானந்தமானது எனவும் எப்படி, யார் கண்டு வெளிப்படுத்தினர் என்று சற்று ஆராய்ந்து பார்க்கலாம். பொறிபுலன் இன்பத்தை வெறுத்து, பொறிவாயில் ஐந்தை அவித்து அகமொன்றி நிஷ்டை கூடியும், சமாதிநிலையுற்றும் இருந்த பெரியோர் சிலர், அந்த அகநிலையில் அனுபவித்த சுக உணர்வும், அற்புதசித்திப் பேறும் பெற்று, மீண்டும் புறவுலகிற்கு வந்து, ஆனந்தசித்தர்களாய்க் களித்தும் சித்தாடி இருந்து முடிவில் அகத்திலே சென்று ஆழ்ந்து மறைந்து விட்டார்கள். அவர்கள் கண்டு கூறினதே அந்த அகநிறை இயற்கையின்பம் சச்சிதானந்தமே என்று! உலகினர் இவ்வகை யில்தான் இந்த இன்பத்தைப் பற்றி ஏதும் உணராமல்தான் சொல்லளவில் கூறிக்கொண்டிருக்கின்றனர். இவ்வின்பத்திற்கு ஒப்பாகவோ உவமையாகவோ வேறு உலக இன்பம் எதுவுமே இல்லை என்பது உண்மை. இது குறித்தே, ''ஒன்றதில் ஒன் றென்று உரைக்கவும் படாததாய்'' என்றுள்ளார். உலகில் பலப் பலவற்றை இன்பம் என்று கூறுகின்றனர். அப்படிப்பட்ட இன்பங்களில் சிறந்த ஒன்று என்று எதையாவது கொண்டு, அந்த ஒன்றைப் போன்றது இந்த ஒன்றாகிய இயற்கை இன்பம் என்று சொல்ல முடியாததாம். பொறி புலன் இன்பத்தையே அனுபவித்தாலன்றி சொல்லி விளக்கக்கூடாததாயிருக்கும்போது, இந்தப் பேரின்பத்தை எப்படிச் சொல்லில் வடித்துக் காட்டக் கூடும்!

யோக ஞானத்தமிழறி சித்தர்கள் ஆன்மானுபவத்தைக் கொண்டு புரிந்த சித்திச் செயல்களில் தமிழ் மொழி செய்து வழங்கினது ஓர் அரிய அற்புதசித்திச் செயலே எனலாம். அவர்கள்தம் அகஅனுபவத்தை வைத்துத் தமிழ் மொழியை ஆக்கினதோடு அக இன்பம் விளக்கவேண்டி அகப்பொருள் துறையையும் வகுத்து வழங்கியுள்ளனர். அந்த அக இன்பம் யோகசித்தியைத்தான் குறிப்பதாயுள்ளது. அதுவும் புறப் புலனெறி வழக்கொடு புனைந்துரை செய்து விட்டுள்ளனர். ஆனால், அகமே உணராத புலவர்கள் அகப்பொருள் இலக்கணத் திற்குக் காணும் பொருள் புலன் அனுபவ அளவே வெளியாவது அன்றி மேனிலை யுண்மை வெளியாகின்றதில்லை. அந்த இன் பானுபவமும் அருளில் பெறப்படும் இயற்கை யின்பத்திற்கு எந்த வகையிலும் ஈடாகாது.

இந்த இயற்கையின்பம், சச்சிதானந்தம் சுத்த யோகியர் ஏகதேச அனுபவத்திற்கண்டு வெளியாக்கி இருந்தனர். இப் போதோ நம் சுத்த சன்மார்க்கத் தலைவர் அருட்பிரகாச வள்ள லார், திருவருள்நிறை அனுபவத்தால் அகநிலையில், சத் சித் மயமான அருள்வடிவில் இருந்துகொண்டு, சுத்த ஆனந்த வாழ்வு வாழத் தலைப்பட்டதால், அந்த சத் சித் நிலையோடு ஆனந்தமும் பிரிவறக்கூடி சச்சிதானந்தமாய், அகமிருந்த வண்ணம் அனகப் பட்டு விளங்கலாகி விட்டுள்ளதாம். ஆகவே, இந்த ஒப்பற்ற தனிப் பேரின்பத்தைத் தானே பெற்று அந்நிலை நின்றே, அதனைப் போற்றுகின்றார் இப்படி.

(2)

1241. இதுவது வென்னா வியலுடை யதுவாய்
1242. எதிரற நிறைந்த வென்றனி இன்பே

(உ-வி) அருட்பெருஞ்ஜோதியின் அனுபவமே உண்மை ஆனந்தமாக இருக்கின்றது. சத்தும் சித்தும், அருவாயும் உரு வாயும் உள்ள உண்மையை, சத் விசாரத்தால்தான் காண முடி கின்றது. மற்றபடி, கரண இந்திரியத்தால் காண்பது நிலையற்ற புற வடிவத் தோற்றமே ஆம். சத் விசாரமே, புறத்தோற்ற நிலையைக் கடந்து, உள்ளழுந்தி, சத்தாகிய அருவ அருள் ஒளியைக் கண்டு கொள்ளுவதாம். இதனைக் குறிக்க,

"அறிவாலே அறிவினை அறிகின்றபொழுதங்கு
அனுபவமாவது என்னடி தாயே
செறிவாலே பிரிவாலே தெரியாது தெரியும்
திருவருள் உருவமென் றறியடி மகளே."

விசார ஞானத்தால் அறியப்படுவது மட்டுமல்ல, அறிந்து, சார்ந்து, அதுவாகி நிலைப்பது, இந்த அருள் வடிவமாகும். இதுதான் சத் சித் சொரூப உண்மை. இவ்வடிவிலே கலந்து அத்துவிதமாகி நின்று உலகியலை அருளியலாகக்கொண்டு வாழும்போது அந்த அருளின் இயல்பாகிய இன்பம் அகத்தே வெளியாகின்றதாம். அந்த இன்பமே அருளின்பம், அருள்வழி தோன்றுகின்ற இன்பம். அதுவே சத்சித்தின் விளைபயனாம் சச்சிதானந்தம். இப்படிப்பட்ட அருளின்பம், அக அருள் அனுபவம் அடையாதவர்களுக்குக் கொஞ்சமும் புரியாது. எவ்வளவு சொன்னாலும் புரிந்துகொள்ளவும் முடியாதாம். "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்", என்று கூறும் இன்பம் இவ்வருளின்பமே அல்லாது மற்றெந்த இன்பமுமல்லவாம். திரு மந்திரம் குறித்த அந்த இன்பம், இன்னது என்று சொல்லக் கூடாததுதான். ஆனால், அவ்வின்பம் இன்னதென்று உணர்ந்தும் கண்டும் அனுபவிக்க வழி சொல்கின்றார். அவ்வழியில் தீவிரமாய்ப் பயின்றால், அவ்வின்பத்தை அக அனுபவத்தில் பெறலாகும். அந்தத் திருமந்திரம் இது.

"நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான் பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே."

இதில், வான்பற்றி நின்ற மறைபொருள் என்பது, ஓம் என்னும் வான்வெளி நிறைபொருளாம். அந்த ஓமே இந்த மனித ஜீவ தேகத்தில் அறிவுக்கறிவாகிய அருள்ஒளிவள் ஆன்மாவாய் இருக்கின்றதாம். இந்த அருள் ஒளியினைச் சத் விசாரத்தால் பற்றப்பற்ற, உளத்திலே அந்த அருளின் இன்பம் அனுபவமாகும். இதனையே நம் வள்ளலார்:

"அருளாலே அருளிறை அருள்கின்ற பொழுதங்கு
அனுபவ மாவது என்னடி தாயே?
தெருளாலே மருளாலே தெரியாத தெரியும்
திருவடி இன்பமென் றறியடி மகளே."

என்றதால் இந்த இன்பத்தை அருள்அனுபவத்தால்தான் அடையமுடியும் என்பது தெளிவு.

உலகியல் இன்பத்திற்கும், இந்த அருளியல் இன்பத்திற்கும் உள்ள வேறுபாடு உலகர் சிறிதும் அறியார். அப்படியுள்ளவர்களுக்கு, அந்த இன்பம், இது போன்றது, அது போன்றது என உவமித்துக் கூறமுடியாது என்பது உண்மை. அந்த இன்பத்திற்கு ஒத்தது, நேரானது, எதிரானது வேறு எதுவும் இல்லை என்பது அறிவோம். இந்த அருட் பேரின்பே இயற்கை இன்பம் என்று கொள்ளப்படுகின்றது. இதனையே தனி இன்பமாகப் போற்றிக்கொள்கின்றார்.

(3)

1243. ஆக்குறு மவத்தைகள் அனைத்தையுங் கடந்துமேல்
1244. ஏக்கற நிறைந்த வென்றனி இன்பே

(உ-வி) அவத்தைகள் என்றால் துன்பங்கள், துன்பானுபவ நிலைகள். இத்துன்பாவத்தைகள் புறத்தோற்றத்தில் தயவின்மையால் நிகழுகின்ற கொடுஞ்செயல்கள் போல் காணப்படும். உண்மையில் இது கடவுளரின் மறக் கருணைச் செயலே. இதனால், உயிர்கள், அறிவனுபவத்தில் மேலே மேலே ஏறி, உயர் ஞான நிலையுறவும், அருள் நிலை பெறவும் ஆனந்தானுபவம் அடையவும் கூடியதாயிருக்கின்றதாம். அதனால் இந்த அவத்தைகள், ஆக்குறும் அவத்தைகள் என்று குறிக்கப்பட்டுள்ளது

மனிதப் பிறப்பில்தான், அறிவு, புலன் உணர்வு நிலை கடந்து மனோ பகுத்தறிவு நிலையை அடைந்துள்ளது. இதனால் உயிர் உணர்விலே உண்டாகின்ற அவத்தைகள் மக்களால்தான் அதிகம் துய்க்கப்படும். மற்ற உயிரினங்களுக்குத் துன்பாவத்தைகள் அவ்வளவு அதிகம் பாதிக்கின்றனவல்லவாம். இதனால், உயிர்களின் வாழ்வுக்குத் தாவரங்களையே உணவாக அமைக்கப்பட்டுள்ளது என்று அறியலாகும். மனிதன் இத்தாவர உணவு ஏற்பதும், அவ்வுணவு விளைத்தலில் ஏற்படுகின்ற விஷ ஜந்துக்கள், எலி பாம்பு முதலிய பிராணிகள் அழிக்கப்படுவதும், ஜீவ காருண்யச் செயலேயன்றி, ஜீவ ஹிம்சைச் செயலென்று நினைந்து கலக்கமடையவேண்டியதில்லையாம். கடவுளே எவ்வுயிரையும் மேனிலைக்கேற்றத்தான் எவ்வுயிரையும் இந்த அவத்தை நிலைகளைக் கடந்திடச் செய்கின்றார். ஆகையால் மனிதன் உள்ளத்தில் உண்மை தயா நெகிழ்ச்சியோடு வாழவேண்டும். அருளனுபவ

இன்ப லட்சியத்தோடு, உயிர் வாழ்வு மேற்கொண்டால், புலனின் பத்திற்கு ஆளாகிடான். புலையுணா முதலியன ஏற்பதை அடியோடு விட்டுவிடுவான். அப்போதுதான் சுத்த இன்பம் வளர் உயர் நிலை யுற்று வாழற்கு உரியவனாவான். அந்த மேனிலையில்தான் சுத்த சுகானந்தம் பரிபூரணமாய் இருந்து கொண்டிருக்கின்றதாம். இந் நிலைபேறு எய்திடுமுன் மேற்கூறிய ஆக்குறும் அவத்தைகள் அனைத்தையும் கடந்திடவேண்டும். இந்த அவத்தையின் அனுபவம் மனிதனில்தான் உச்ச கட்டத்திற்குச் சென்று, திருவருள் பெற்றவுடன், ஏக்கமெலாம், உளச்சோர்வெலாம் நீங்கிடப் பெற்று அவன் நிறைதனி இன்ப அனுபவம் ஏற்கிறான்.

மேற்படி சுத்த இன்பம், அருள் ஒளி நிலையுற்று அகமிருந்த வண்ணம் விரிந்து, அனக வாழ்வு மேற்கொள்ளுவதால்தான் ஒருவனுக்கு, இவ்வின்பம் இன்னதெனவும் விளங்கும். இதனால் அவன் இந்த இன்பத்துடன் மரணமில்லாது வாழ்ந்துகொண் டிருக்கும் நிலையும் எய்துவான்.

(4)

1245. அறிவுக் கறிவினி லதுவது வதுவாய்
1246. எறிவற் றோங்கிய வென்றனி யின்பே

(உ-வி) உயிரினங்களை, இனம் பிரித்தறிவதற்கு அந்த அறிவு விளக்க நிலையே படித்தரமாய் அமைந்துள்ளது. ஓரறிவு டைய தாவரம் முதல் ஆறறிவுடைய மக்கள் வரை குறிக்கப் பட்டுள்ளன. இந்த மனிதப் பிறவியில் வெளியாகியுள்ள பகுத் தறிவே உண்மையைத் திருவருளால் உணரவல்லதாயிருக் கின்றதாம். அவ்வறிவு திருவருணிலை சேராதபோது பொறிபுலன் உணர்வோடு சேர்ந்து உலகிடை யுழன்று கொண்டும் அவத் தைகள் பல பட்டுப்பட்டு, இன்பம் ஈதென அறியாது, இருளிலே பிறந்து, மருளிலே வளர்ந்து, மருளிலேயே மடிந்தும் போய்க் கொண்டிருக்கின்றதாம்.

பக்குவ மனிதன், திருவருள் ஞானம் அடைந்து, தன் அறி வுக்கு அறிவான அருளையே இன்று அறிகின்றான். அந்த அருளேதான் இதுகாறும் அகமிருந்து உயிரையும், உணர்வை யும், உடலையும் வழங்கி வந்ததை இப்போதே நன்கு தெளிவாக அறிந்துகொள்ளுகின்றான். அந்த அருளேதான், அருவ சத்தாக

ஆதிமுதல் இருந்துகொண்டும், சித்விளக்க உருவாகப் புறத்தே தோன்றித் தோன்றி மறைந்துகொண்டும், இப்போது இந்த சத் சித்திடையே உயிருணர்விலே அருவுருவ அருளின்பமாக வெளிப் பட்டுள்ளதாம். இதுவே ஈண்டு, அறிவுக்கு அறிவினில், அது அதுவாய்க் · குறிக்கப் பட்டுள்ளதாகும். அருளால் விளங்குவது தான் இந்தச் சத்து, சித்து, ஆனந்தம் என்ற குறிப்பு இந்த அடி யில் காட்டப்பெற்றுள்ளது. அது அது அது என்பன, சத்து, சித்து ஆனந்தமேயாம்.

இந்த ஆனந்தம், இயற்கை இன்பமாக அன்றுதொட்டே ஆன்மாவில் மறைந்து கிடந்துள்ளது. அவ்வின்ப வெளியீட்டின் பொருட்டே சூழ் ஒளிநிலை பலப்பலவாகத் தோன்றி,. பரிணமித் துக்கொண்டே வந்துள்ளதாம். பொருள்நிலைத் தோற்றங்கள், கிரியாசக்தி இயக்கங்கள், ஞானசக்தி விளக்கங்கள், யோகசக்தி சித்திகள், அருட்சக்தி அனுபவங்கள் எல்லாமும் அச்சூழொளி யின் பரிணாமங்களேயாம். ஈற்றிலுண்டாகிய இந்த அருட்சக்தி அனுபவத்தில்தான், இறை இயற்கைநிறை இன்பம் வெளியா கின்றதாம். இதுகாறும் அவ்வின்பம் அந்த அகமிருந்தே அனக மாக விரிவுற்றுள்ளதையே, எறிவற்று (நீங்குதலின்றி) ஓங்கியது என்கின்றார்.

(5)

1247. விடய மெவற்றினு மேன்மேல் விளைந்தவை
1248. இடையிடை யோங்கிய வென்றனி யின்பே

(உ-வி) விடயம் என்றது, விஷயம் என்ற சொல்லின் தமிழ் முறை வார்த்தையாம். இதற்குப் பொருள் பொறிபுலனாம். இந்தப் பொறிபுலன் உணர்வு, உயிரினங்களில் படிப்படியாக விளைவுற்று வந்திருக்கின்றது. இது புற விளைவுத் தோற்றமே. எல்லா வற்றிற்கும் அகத்தில் இருக்கின்றது கடவுளான்ம அணுவாம். அந்த அகநிலைக்கும், சூழவுள்ள பொறியுடம்பின் புறநிலைக்கும் இடையே தோற்றுகின்ற உயிர் உணர்விலே, இன்ப ஆற்றல் கொஞ்சம் கொஞ்சமாக விளைவாகிக் கொண்டே வருகின்றதாம். ஒவ்வொரு உயிரினப் பிறப்பிலும், அதன் அதன் சுபாவ ஆற்ற லாய் விளைந்து வந்து, மனிதனில் ஆன்ம ஆற்றலாய், ஆன்ம இன்ப சுகமாய் வெளியாகி உள்ளதாம்.

ஆன்மாவுக்குள் ஆனந்தம் இயற்கையின்பமாய் இருக்கின்றது. அந்த ஆன்மாவோ, அணுத்துவமாய்ச் சத்துப் பொருளாய் உள்ளது. உலகிலுள்ள எப்பொருள் வடிவும் சத்தான அழிவற்ற அணுக்களின் கூட்டால், திரண்டு விளங்குகின்றவையேயாம். சாதாரணமாய் அணுக்கள் அழிவதும் ஆவதும் இல்லை. ஆனால் அணுத்திரளால். தோற்றுகின்ற வடிவங்களே, ஆவதும், வளர்வதும், தேய்வதும் அழிவதும், மறுபடியும் அப்படியே தொடர்ந்து ஆவதும் அழிவதுமாய் இருக்கின்றனவாம். இதனால் நம் ஆன்மஅணுவே அழிவற்ற சத்துப்பொருள் எனக் கொள்ளுகின்றோம். இந்தச் சத்தாகிய ஆன்மாவைச் சூழத்தான் சித்தாகிய பொறிபுலன் ஆவதும் அழிவதுமாய் இருக்கின்றனவாம். சத்தாம் ஆன்மாவிலிருந்து உயிர்ச்சக்தி வெளிப்பட்டு, சித்தாம் பொறியுருவில் புலன் அனுபவம் கொண்டு விளங்குகின்றது ஒவ்வொரு உயிரினமும். இது மனிதனில் சிறப்புற்று விளங்குகின்றதாம். இவனுடைய உயிர் உணர்விலே மனம் அரிய உணர்வாய், அருள் அனுபவமாய் விளைவுகொண்டு விளங்குவதுதான் இந்த மேலான மெய் இன்பமாகும்.

(6)

1249. இம்மையு மறுமையு மியம்பிடு மொருமையும்
1250. எம்மையு நிரம்பிடு மென்றனி இன்பே

(உ-வி) இம்மை, இப்பிறப்பு, இப்பொழுதுள்ள தேக வாழ்வுநிலை, மறுமை, வருகின்ற ஒரு பிறவி நிலை. இந்த இரு நிலைகளில் அனுபவிக்கின்ற இன்பம் அறவழியால் வருவதே. இம்மையில், அறஞ்செய்து பொருளும் இன்பமும் பெறுகின்றவன், அந்நல்லூழால் வருபிறப்பிலும் தொடர்ந்து அறம்பொருளின்பம் பெறுவது நியதியாக இருக்கின்றது. இப்படிப் பெறப்படுகின்ற இன்பம், இம்மை இன்பம் என்றும், மறுமை இன்பம் என்றும் கூறப்படும். இந்த இரு நிலைக்கு அடுத்து எம்மை என்பதை எடுத்துக்கொண்டு ஆய்ந்துகொள்ள வேண்டும். எம்மை என்பது எல்லாப் பிறப்புமாம். அதாவது முன் சென்றனவும் இனி வருவனவும் ஆகிய பிறவிகளிலும் இப்போதுள்ள பிறப்பிலும் நிரம்பியதாய் இருக்கின்றது நம் பதியின் இன்பநிறைநிலையே. ஆனாலும் அவ்வின்பம் பொதுவாக உள்ளிருந்து ஏகதேசம் உயிர் அனுபவத்தில் வெளியாவதும்

மறைவதுமாய் இருக்கின்றதாம். அந்த இன்பம் முழுமையாக வெளிப்படுவதும் வெளிப்பட்டு நிலைத்து விளங்குவதும் எப்படியோ எவ்விடமோ என்று வினவின், ஒருமையில் என்று விடையிறுத்தப்படுகின்றது. அவ் ஒருமை என்பது யாதெனின், சுத்த சத் விசாரத்தால், அக ஆன்மக் கடவுள் உண்மை கண் டொன்றி, அதுவாகி நிற்கும்போதுதான் என்றும் நிரம்பியுள்ள இயற்கை இன்பத்தின் ரகசியம் அறியப்படுகின்றது. அந்த ஒருமைமட்டும் உளம்கொண்டு வாழ்ந்த கருமசித்தர்கள் எண் பெருஞ்சித்திகள் (அஷ்டமாசித்திகள்) பெற்று இன்பில் மிதந் திருந்தனர். இவர்கள் அடைந்த இன்பம் இறைபேரின்பத்தின் அற்பக்கூறே. ஆதலின், அது அழிவற்றதாய் விளங்கச் செய்து வாழ்விக்க வில்லையாம். அப்படி நித்தியானந்த வாழ்வில் நிலவச் செய்வதற்கே இப்போது சுத்த தயா சன்மார்க்கம் வெளிப்பட்டிருக்கின்றது. இத் தயாவொருமை கொண்டு அகத்தே நின்று தயவுச்செயலோடு வாழும்போது அந்த நிறை இன்பம் நமக்குச் சொந்தமாவதாம். இந்தத் தயாவொருமையி லன்றி, இம்மை, மறுமை, எம்மை எதிலும் மெய்யின்பத்தின் உண்மைகள் கண்டுகொள்ள முடியாது என்பது தெளிவு.

(7)

1251. முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
1252. எத்திறத் தவர்க்குமா மென்றனி யின்பே

(உ-வி) ஒவ்வொரு நிலையினர்க்கும் அவரவர்களின் லட்சிய சித்தியே இன்பப்பேறாகக் கருதப்படுகின்றதாம். இங்கு உலகிய லாரைக் குறிக்கவில்லை. ஏனெனில், சாதாரண மனிதனின் வாழ்க் கையின் குறிக்கோளாகும், புலபோக இன்பத்தின் தரமும் மிக அற்பமேயாம் என்பதை அறிவோம். ஆதலின் அவற்றைப் பற்றிச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. ஆகையால், அவைகளை விட்டுவிட்டு, மேற்பட்ட சிறப்பியல் பினரின் லட்சிய சித்திகளால் வரும் இன்பத்தைப் பற்றியே குறிப்பிடுகின்றார்.

முத்தர்கள், ஜீவன் முக்தநிலையிலிருந்து, மேல் விதேக பர முக்தியை லட்சியமாய்க்கொண்டு முயன்று அடைவதே பேரின்ப

மாகக் கருதுகின்றனர். சித்தர்கள் அற்புத சித்து வல்லப திறம் பெற்று ஆனந்த சித்தாடி அடங்குவதே பேரின்பமாக எண்ணு கின்றனர். இவைபோன்று எப்படிப்பட்டவர்களும் விரும்புகின்ற இன்பமும் ஏகதேசமேயன்றி இயற்கை இறையின்பமாகாது. இந்த எல்லோருடைய இன்பமும் அந்த அருட்பேரின்பத்தின் அணுச் சிதறல்களே ஆகும் என இன்று அறிந்துகொள்ளு கின்றோம்.

இயற்கையின்பத்தின் உண்மையும் சிறப்பும் இப்படி விளங் கும்போது, புலனெறியாளர் வருந்திப் பெற்று, விரைவில் இழக் கின்ற சிறு இன்பங்கள் குறித்து என்ன சொல்வது! ஆகையால், அருட்பேரின்பத்தையே ஒவ்வொருவரும் தத்தம் குறிக்கோளாய்க் கொண்டு தயா நன் முயற்சி செய்து அடைவது சாலச் சிறந்த தாம். தயா நெறி யொழுக்கம்பூண்டு, சூழ்நர்க்கு ஜீவதயை புரிந்தும், ஆன்ம விளக்கம் வழங்கியும் வாழ்வித்தல் உள்ளொளி கொண்டு இன்புறு முறையாகும். தயாவொழுக்கத்தோடு ஒருமையால் தயா சத் விசாரமும் செய்தால் மெய்யின்ப விளக்கம் உள்ளபடி அறிந்து அடையமுடியும். சுத்த இன்பம் எங்கும் தழைத்தோங்குவதாக.

(8)

1253. எல்லா நிலைகளி னெல்லா வுயிருறும்
1254. எல்லா வின்புமா மென்றனி யின்பே

(உ-வி) உலகில் உள்ள உயிர்கள் பொதுவாக இயங்கியல் (சரம்) நிலையியல் (அசரம்) என இருவகையாகப் பிரிக்கப்படும். இவைபோக அறிவதற்கரிய அற்ப ஜீவர்களும், ஆவி வடிவங் களும் தேவ நிலையினரும், நரகவாசிகளும், சித்தர் முத்தர்களும், கணங்களும், வேறு வேறு உலகவாசிகளும் பிரபஞ்சத்தில் உள்ளனராக அறிவிக்கப்படுகின்றோம். இப்படிப் பலவாகிய உயிர்களும், அவைகளின் ஒவ்வொரு நிலையினும் ஏதோ ஓர் ஒரு வகை இன்பத்தை அறிந்தும் அறியாமலும் அடைந்துகொண்டே யிருக்கின்றனவாம். முக்கியமாக இம் மனிதப் பிறப்பில் வெளிப் படுகின்ற இன்பானுபவத்தைப் பற்றி ஆய்ந்து உண்மை கண்டு கொள்ளலாம்.

மனிதன் கரு வடிவிலிருந்து வரும் காலமுதல், தன் அகத்தே இருக்கும் இறை இயல் இயற்கை இன்பின் சிறு சிறு கூறுகளை ஓர் ஒரு நிலையில் அனுபவித்துக்கொண்டு வருகின்றான். உலகவாழ்வில் பொறிபுலன் இன்பத்தைப் பெரிதென எண்ணி முயன்று அடைந்து களிப்புற்றிருந்தது ஒரு நிலை; அறவழியில் நின்று, பிறர்க்கு அன்புசெய்து இன்புற்றிருந்தது ஒருநிலை; தவ யோக மார்க்கத்தில் பெருஞ்சாதனை புரிந்து அடைந்த யோக ஞான சித்திகளால் பெற்றிருந்த இன்பநிலை பெரியதாகக் கொண் டாடப்பட்டது. இந்த வகையின்பங்கள் எல்லாம் நம் இறை யருட் பேரின்பத்தின் அற்பக் கூறுகளே என்று இன்று அறி கின்றோம்.

இப்போது மனிதன், திருவருளாலே ஏறாநிலைமிசை, இயல் பாய் அமைந்திருப்பதை அறிந்துகொள்ளுகின்றான். அந்நிலையில் தானும் இறைவனும் இரண்டற்ற ஒன்றாய் இருப்பதையும் உணர் கின்றான். அவ்விறை யியல்தானே இயற்கையின்ப நிறை வுடையது என்பதையும் அறிவிக்கப்பட்டுள்ளான். இதனால், இதுகாறும் பொறிபுலன் இன்பைத் துய்த்துக்கொண்டிருந்தது எவ்வளவு அறியாநிலை என்பதை ஓர்ந்து மேனிலையிலிருந்து அருளின்பம் கொள்ள முனைகின்றான். அந்த இன்பம் நிறைவு பெற இந்த உலகில் சுத்த சன்மார்க்க நெறியில் வாழவேண்டும் என்ற உண்மையைக் கண்டு ஏற்கின்றான். இதனால் இவ்வுலக வாழ்வில் தயவும் ஒருமையும் கொண்டு, பரோபகாரச் செயல் புரிந்து கொண்டு வாழ்கின்றான். இந்த வாழ்வால் அகமன்னிய இறை இன்பம் சிறிது சிறிதாக அரும்பி, மலர்ந்து பூத்து, காய்த்து, பழுத்துக் கனிந்து விளங்குவதை அனுபவத்தில் பெற்றுத் திகழ்வது உண்மையே. இது வள்ளல் பெற்றுள்ள இயற்கை யின்பப் பெருநிலையாகும். இதனையே இந்த அடி களில் "எல்லா நிலைகளின் எல்லா வுயிர் உறும், எல்லா இன்பு மாம் என் தனி இன்பே," என்று போற்றித் துதித்துள்ளார்.

216. அருள் அமுதம்

(1)

1255. கரும்புறு சாறுங் கனிந்தமுக் கனியின்
1256. விரும்புறு மிரதமு மிக்கதீம் பாலும்

(உ-வி) நமது அருட்பெருஞ்ஜோதிபதி சக்தியை சச்சிதானந்த நிலையிற் கண்டு போற்றிக்கொள்ளப்பட்டது முன் முத்தலைப்பின் கீழ். இப்பொழுது அருட்பெருஞ்ஜோதியையே அருள் அமுதமாகக் கொண்டு விளக்கம் செய்யப்படுகின்றது இத் தலைப்பின் கீழ். இவ்வமுதம் எவ்வகையானது என்பதும் இதன் இயல் உண்மைக் குணநலத்திற்கு உலகியலில் காணும் இன்ன முதப் பொருட்கள் எல்லாம் எவ்வளவு அற்பமானவை என்பதும் தொடர்ந்து பல அடிகளில் விரித்துரைக்கப்படுகின்றனவாம்.

அகத்தே எங்கும் பரிபூரணமாய் என்றென்றும் நிரம்பியுள் ளது இறையருள் ஒன்றேயாம். அந்த ஒன்றாம் அருள்தான், உல கில் பல்வேறு தோற்றங்கொண்டு வெளியாகிப் பொருள்களாய், செயல்களாய், அனுபவங்களாய் விளங்கி விளங்கி முடிவில்தான், அவ்வருளே அருளாகிய மெய்யுணர்வால் அறிந்துகொள்ளப் பட்டு நிறைஇன்ப வாழ்வாகவும் சித்தித்து விடுகின்றதாம். இந் நிலையே சுத்த சன்மார்க்கியின் திரிதேகசித்தி அனுபவ வாழ்வாகத் திகழ்வதாகும். இந்த அனுபவம் வெளிப்படுத்தப் படவேதான் அந்த அருள்—மரணம் ஒழித்து வாழ வைக்கும் அருளமுதமாக வழங்கப்படுகின்றது. இந்த அருளமுதத்துக்கு நிகர் வேறு எதுவும், இவ்வுலகத்தும், பிற எவ்வுலகத்தும் காண் டற்கில்லையாம். அப்படிப்பட்ட அருளமுதத்தைப் பற்றி இந்த உலக மக்களுக்கு எப்படி விளக்கிச் சொல்லுவது? அவ்வமுதத்தை உள்ளபடி விளக்கிச்சொல்ல முடியாதுதான். என்றாலும், இவர் கள் அறிந்தும் விரும்பிச் சுவைத்தும், உண்டு களித்தும், சிறந்த தாய்க் கருதியும், பிணி மூப்பு சாக்காட்டை நீக்கவல்ல ஒருபொரு ளாய்ப் பாவிக்கப் பட்டதையே எடுத்துக்கூறி இவற்றிற்கெல்லாம் மிகமிகச் சிறந்தது இந்த அருளமுதம் என்றுதான் சொல்லி விளக்க வேண்டியிருக்கின்றதாம். ஒவ்வொன்றில் அமைந்த நல்ல சுவையான சத்து அம்சத்தைச் சுத்தமாக எடுத்து அவைகளை ஒன்றாக்கிப் பக்குவப்படுத்தும்போது என்ன மேலான சுவை யுடைய பண்டங்கள் கிடைக்குமோ அப்பண்டங்களிலும் மிகமிக மேம்பட்டதாய்க் கற்பனை செய்து பார்க்கத்தான் சொல்லி விளக்கமுடியும் ஆம். அப்படித்தான் இங்கு உலகம் அறிந்த அமுதரசப் பொருள்களைக் கொண்டு செய்யப்படும் அருஞ்சுவைப் பண்டத்தால் ஒப்பிடற்கில்லாத, ஏதும் கலப்பற்ற சுத்த அருட் சுவை அமுதத்தைக் குறிக்க இயலாது எனக் குறிப்பிடுகின்றார்.

ஆகவே இவண் சொல்லியுள்ள சுவைமிகு பொருட்களையே விரும்பிச் சேகரித்துப் பக்குவப்படுத்தி நாப்புலனால் சுவைத்திட்டு அகமகிழ்ந்து போய்விடக் கூடாது. அல்லது இதனையுட்கொண்டு இதன் சுவையினம் பன்மடங்கு அதிகமானதாய் இருக்கலாம் அந்த அருள் அமுதம் என்று எண்ணிக்கொண்டு விட்டால் போதாது. இம்மாதிரி ஏதேனும் சுவைப்பொருளை தெய்வீகமானதாகச் சொல்லிப் பிரசாதம் என வழங்கிடப்பெற்று உட்கொண்டு களித்திருத்தல் மருள்மயக்கே ஆகும். அருள் அனுபவம் சிறிதும் இதனாலெல்லாம் அடையமுடியாதாம். ஆகையால் அருளமுதத்தைப் பற்றி லட்சியம் உண்டாகவும், வேறு எச்சுவை அமுதிலும் பற்றுதல் ஏற்படாமல் இருப்பதற்கும் இங்கு இவ்வமுதக் குறிப்பு வழங்கியுள்ளார் நம் அடிகள்.

இனி அந்த அமுதத்தின் விளக்கத்தைப் பார்ப்போம்:

1. கருப்பஞ்சாறு இது இனிய சுவைப்பொருளில் ஒன்றாம்.

2. முக்கனி ரசம் — பக்குவமாய்க் கனிந்த, வாழை, மா, பலா இவற்றின் நற்பிழிவாகிய சாறு.

3. பால்—மிக்க தீம்பால் அதாவது மிகச் சுவையுடைய பால். ஆகிய இம்மூன்றும் தனித்தனி ஒவ்வொரு நற்சுவை கொண்ட பொருள்களாம். இவைகளைத் தனித்தனியே சுத்தமாக எடுத்துக்கொண்டு, இன்னும் அடுத்துக்கூறப்படுவனவற்றையும் சேகரித்திட வேண்டுமாம்.

(2)

1257. குணங்கொள் கோற்றேனுங் கூட்டியொன் றாக்கி
1258. மணங்கொளப் பதஞ்செய் வகையுற வியற்றிய

(உ-வி) முன்குறித்த முப்பொருட்களோடு இதில் கூறப்பட்டுள்ள ஒன்று நல்ல தேன் ஆம். இது குணங்கொள் கோற்றேன் எனப்படுகின்றது. சுத்தமான உயர் சிறப்புடைய கொம்புத்தேன் இதுவாகும். ஆகவே இதனையும் தனியாகச் சுத்தமாய் எடுத்துக்கொண்டு, ஒரு நல்ல பாண்டத்தில் ஒன்று சேர்க்க வேண்டுமாம். கலக்கும் பாத்திரமும், சட்டுவமும், தூய்மையும் தீங்கு விளைக்காததாய், தீயின்மீது, ஏற்றுவதற்கும், பக்குவ

மாய்க் காய்ச்சுவதற்கும் ஏற்றதாய், பக்குவப்படுத்தற்குப் பொருத் தமானதாய் இருக்க வேண்டுமாம். இப்படிப்பட்ட பாத்திரத் தில் மேற்குறித்த நாற்சுவைப் பொருட்களையும் கலந்து, சிறு தீ எரியும் அடுப்பின்மீது ஏற்றி, மெதுவாய்க் கலக்கிக்கொண்டே யிருக்க வேண்டும். அப்படிக் கலக்கிக்கொண்டு வர வர திரவ நிலை மாறி சற்று குழம்பி வரும். அப்போது நறுமணமும் பாகு பதமும் ஏற்படும். இதனை ஒரு நற்சுவை அமுதென மதித்துக் கொள்ளுவர் உலகினர்.

(மேற்படி இன்சுவை அமுதொடு இந்நாள் மக்கள் இன்னும் பலவாகிய சுவைமிக்க சாறுகளையும், பாதம், பிஸ்தா, முந்திரி முதலான பருப்புத் தூள்களையும், ஏலம், பசுங்கற்பூரம் முதலிய வாசனைப் பொருள்களையும் சுத்தமான பசு நெய்யும் அளவாகச் சேர்த்துப் பக்குவமாக அடி பிடிக்காது கிளறி இலேகியபதமாகச் செய்துவிடுகின்றனர். இம்முறையில் இயற்றப்படுவதுதான் வடலூர்ப் பஞ்சாமிர்தம் என்று வழங்கப்படுகின்றது.)

இங்கு நாம் அருள் அமுதத்தைத் தெரிந்து அடையவும், அடைந்து அருட்பயன் பெறவும் வேண்டுமேயல்லாது, புறச் சுவையில் மனம் கொண்டும், அதனையே அரிய அமுதம் என ஏற்றும் அகமகிழ்ந்து, பெறலரும் அருட்பிரசாதம் பெற்றுவிட்ட தாக எண்ணி ஏமாந்துவிடக் கூடாது. ஆகவே, மேற்கொண்டு ஆகவேண்டியதைக் கவனிப்போம்.

(3)

1259. உணவெனப் பல்கா லுரைக்கினு நிகரா
1260. வணமுறு மின்ப மயமே யதுவாய்

(உ-வி) மேற்குறித்த சுவை அமுதம் இயற்றி, அதனைப் பெறலரும் பொருளாக மதித்துப் போற்றிக் கொண்டிருப்பது நல்லதா? இதனை அமுதமாகக் கருதிக்கொண்டும், மதித்துக் கொண்டும் இருப்பதிலேயே இன்புறுகின்றனர் சிலர். அச் சுவையை எண்ணி எண்ணி நாவூற மகிழ்ந்து கொண்டாடிக் களித்திருப்பது என்ன பெருமை? அந்த அமுதால் வரும் இன்பம் இந்த அருளமுதுக்குச் சிறிதும் நிகராகாது.

பலவாகிய சேர்க்கை அமுதமும், இயற்கைதரு அமுதரசக் கனி முதலான பொருள்களும் உலகம் அறிந்துள்ளது; விரும்பி ஏற்கின்றது. இவற்றால் வருவது எப்படிப்பட்ட இன்பம்? அது உண்மையான இன்பம் அல்ல. நாப்புலனுக்கு இன்பமாய்த் தோற்றி, உணர்விலே இன்பமயக்கை உண்டுபண்ணிவிட்டு ஒழிந்துபோவதாய் இருக்கின்றனவாம். ஆகவே இந்த உலக அமுதால் வரும் இன்பம் எந்த வகையிலும், அருளமுதால் அடையப்பெறும் இன்பத்திற்குச் சற்றும் ஒப்பாகாது.

நமது அகம்வளர் அருளமுதம், இயற்கையானது. அது, சத்துப்பொருளாய் என்றும் இருப்பதுதான். அப்படிச் சத்தாய் இருந்துகொண்டு, தன்னில் சித்து விளக்கச் செயலால், பல வாகிய பொருள்களாய், சுவைதரு பண்டங்களாய், அச்சுவையை யுணர் மனிதனின் நாப்புலனுக்கு ஆதாரமான ஆன்ம விளக்க மாய் இருக்கின்றதாம். எனவே, இந்த சத்சித் மயமானது இறை இயல் அமுதமாம். இச்சத்து சித்துப் பொருளின் தன்மையேதான் ஆனந்தமாக இருக்கின்றது. ஆகவே, இவ் வமுதமே ஆனந்தமாய் உள்ளது என்று அறியலாகும். இதனால் இது சச்சிதானந்தம் எனப்படும். இச் சச்சிதானந்தமே அருள் அமுதம் ஆம். ஆகையால் இந்த ஆனந்த வண்ணமான அருள் அமுதுக்கு ஒப்பாக மற்ற எந்த அமுதம் இருக்க முடியும்? இந் நிகரற்ற அமுதை, அருள்மயமான சுத்த அருள்ஞானியரேயன்றி, பிற எந்த மக்களும், தேவரும், முத்தரும் சித்தரும், மற்றவரும், எவ் விதத்தும் கனவினில்கூட அறியார்கள். எனவே இந்த அருளமு தின் இன்பம் எப்படி வருணிப்பதோ!

(4)

1261. கலந்தறி வுருவாய்க் கருதுதற் கரிதாய்
1262. நலந்தரு விளக்கமும் நவிலருந் தண்மையும்

(உ-வி) இந்த அருள் அமுதம் இருக்கிறதே, இது கட்புல னுக்கு விளங்காததாம். அதாவது கண்ணுக்குத் தெரியாதாம். கண்ணுக்கே தெரியாது என்று விட்டால், இது என்ன மாயப் பொருளோ? அல்லது, வெற்று மனோகற்பனைப் பொருள்தானோ? என்றெல்லாம் ஐயப்படுவர் சிலர்; அறியாமலே நம்பிக் கொள் ளுவர் சிலர். இப்படிப்பட்ட சொற்களிலே பற்று கொள்ளாமல்,

நம்பியும் நம்பாமலும் அலட்சியமாய் இருப்பர் பலர். எவரும் நிதானித்து விசாரித்து, ஒருமையோடு உள்நின்று மெய்யறிவு கொண்டு நோக்கின் உண்மை உள்ளபடி வெளியாம்.

இந்த அருள் அமுதம், மற்ற பொருள் போன்று, புறவுரு உடையதல்லவாம். அருள் அறிவுதான் இதன் உருவாம். இவ்வ முதம் அருள் அறிவினால்தான் உணரப்படுவதாம். மற்றபடி, மருள றிவாலும், மனோபகுத்தறிவாலும், பிற புலனறிவாலும், சாத்திர அறிவாலும், கலையறிவாலும், அறிந்து அடையமுடியாதது இந்த அமுதம். இவ்வுண்மை, கருதுதற்கு அரியதாய் என்ற குறிப்பால் உணர்த்தப் பெற்றுள்ளது. மேலும், அந்த அமுதம் எப்படியுள்ளது என்றால், நலம் தரும் விளக்கம் உடையதாம். அதன் உண்மை விளக்கம் அறிந்துகொள்ளப்பட்டாலே போதும்; நன்மைகள் தாமே வந்து சூழுமாம். இந்த நலம் தரும் ஆற்றல், அருளமுதின் விளக்கத்தாலேயே அதன் விளக்கமாத்திரத்தாலே கிடைக்கக் கூடியதாயிருக்கின்றதாம். இதுபோன்ற நலம் தரும் ஆற்றல் மற்ற எவ்வகை அமுதிற்கும் எப்படி இருக்க முடியும்? இந்த நல் விளக்கம் தருகின்றதோடு, அந்த அமுதத்திற்கு, ஓர் அரிய தண்மைத் தன்மையும் இருக்கின்றதாம். அது நவிலருந் தண்மை என்று நவிலப்பட்டுள்ளது. சொல்லற்கரிய குளிர்ச்சித்தன்மை என்று சொல்லப்படுவது, எது? ஏன்? எப்படி? என்றால், அருள் அமுதின் இயல்பு அருளுடன்கூடிய தண்மை அல்லது குளிர்ச்சியாம். மனிதனுக்கு உடல் உயிர் விளக்கத்தையும், உள்ளும் புறமும் சுகானுபவத்தையும், உலைவற்ற உவகையையும் உண்டுபண்ணும் தண்ணிய குளிர்ந்த தன்மையே நவிலருந்தண்மை எனப்பட்டதாய் அறிகின்றோம். மனிதன் பொதுவாய் ஓரளவு குளிர்ச்சியையோ வெப்பத்தையோதான் சுகமான தாகக்கொண்டு அனுபவிக்க முடியும். அளவுகடந்த அதிகமான குளிர்ச்சியையோ அல்லது அளவுக்குமீறிய கொடுஞ்சூட்டையோ பொறுக்க மாட் டான். சூடுதான், இயல்ஜோதியின் குணமாக இருக்கின்றது. அச் சூடு குறைந்து குறைந்து தண்மையுறுகின்றது. ஆகையால் தண்மை என்பதும் குறைந்த சூடுதான். நீரானது மிகக் சூடாகக் கொதிநிலையிலிருக்கும்போது 100° C (100 டிகிரி சென்டிகிரேடு) என்றும், அது குளிர்ந்து 4° C நிலை அடைந்து விளங்கும்போதுதான் தண்ணீரின் இயற்கைச் சுடுகை என்றும், 0° C தன்மை, தண்ணீரின் உறைநிலை, பனிக்கட்டியாகும் நிலை என்றும் கூறுவர். மனிதன் சாதாரணமாக 15° C க்கு மேல்

35° C வரை பொறுத்துச் சுகமாக வாழமுடியும். இந்த அள வுக்குக் கீழே போனாலும் மேலேபோனாலும் அவத்தையுற நேரும். ஆனால், அருள் அமுதநிலை கொண்டோர் இந்த சூட்டாலும், குளிராலும் பாதிக்கப்படார். எந்த அளவுச் சூட்டையும் தண்மை யையும் அடக்கியாளும் ஆற்றல் பெற்றிருப்பர் இந்த அருளாளர் கள். இதனால் இந்த அருளமுதின் தண்மை, நவிலருந்தண்மை எனப்பட்டுள்ளதாம்.

(5)

1263. உள்ளதா யென்று முள்ளதா யென்னுள்
1264. உள்ளதா யென்ற னுயிருள முடம்புடன்

(உ-வி) இந்த அருள்அமுதம் காண்டற்கரியதாய் அறிவிற் கலந்து இருப்பது என்று உணர்த்தப்பெற்றோம். ஆகையால், அது புறத்திலே தோற்றாது அகத்தில், உள்ளீடாய் இருக் கின்றது என அறிய வேண்டும். இதைத்தான் இங்கு, ''உள்ள தாய் (அகத்தினிடமாக) என்றும் உள்ளதாய்,'' என்று குறிக்கப் பட்டுள்ளது. அகத்தில் உள்ளது என்று கூறியவுடன், எதாவது ஒன்றின் அகத்திலே தேடினால், அங்கு காணப்படுகின்றதா யில்லை. அது புறப் பொருளிலோ, உயிரிலோ, தோற்றங்களிலோ அகத்தும் காணப்படுகின்றதேயில்லை. அருவாய், அறிவே யுருவாய், இருக்கும் அருள் அமுத மருந்து அறிவினால்தானே அறியப்படும். அந்த அறிவோ மனிதனின் புறத்திருப்பதல்லவே! அகத்தில்தான் இருப்பது உண்மையாம். ஆகையால்தான், அது என் உள் உள்ளதாய் என்று உரைத்திட்டுள்ளார். அறிவுரு வாக இருக்கும் அருள் அமுதம் நம் ஆன்மாவாகிய அகம் என்னும் உள்ளத்தில்தான் இருந்துவருகின்றது. இப்படி, இன்று நேற்று அல்ல ஆதிமுதலே இந்த அருள் அமுதம் நம் அகமாகிய ஆன்மாவுக்குள் இருந்துகொண்டுதான் இருக்கின்ற தாம். இப்படி இருக்கின்றதைத்தான், திருவருளால் இன்று உணர்த்தப்பெற்று உணர்கின்றோம்.

அகமிருக்கும் இவ்வமுதம், நம்முள் அருள் அறிவைத் தூண்டிவிட்டு, அருள் அறிவாலேதான், அதனையே (அருள் அமுதையே) உணர்ந்துகொள்ளச் செய்திருக்கின்றதாம். இப்படி உணர்த்தியதோடு நின்றுவிடவில்லை அந்த அக நிலை

யினின்றே அந்த அருள் அமுதை அனகமாகவே பொங்கி வழியச் செய்து உயிர், உள்ளம், உடம்பு எவற்றினும் நிரம்பிடச் .செய் கின்றதாம். இது நம் வள்ளல் அனுபவத்திற் கொண்டு வெளி யிட்டிருக்கும் உண்மையாகும். இவ்வுண்மை எல்லோருக்கும் பொதுவானதே. ஆதையால்தான் நாமும் இந்த அருள் அமுதை நம் அகத்தில், திருவருளால் கண்டு அனகமுறக் கொண்டு அதன் பயனை இந்த உயிருடம்பில் ஏற்க உள்ளோம்.

(6)

1265. எல்லா மினிப்ப வியலுறு சுவையளித்

1266. தெல்லாம் வல்லசித் தியற்கையதாகிச்

(உ-வி) அகமிருந்த அருளமுதம், அவ் வகமிருந்தே அனக முறப் பாய்ந்து, உயிரிலும், உள்ளத்திலும், உடம்பிலும் நிறைந்து கொண்டு விட்டதாம். அப்படி நிறைந்துகொண்டுவிட்டதால் என்ன ஆயிற்று என்றால், இம் மூவிடத்தும் அருளமுதின் சுவை இயற்கையின்ப உணர்ச்சியாக உணரப்பெற்றதாம். பொது வாகப் புலன்தரு இன்சுவை அறியப்படுவது நாவினால்தான். இன்பானுபவ உணர்ச்சியால், உயிரிலும், உளத்திலும், உடம் பிலும் அச்சுவை அனுபவிக்கப்படுவதாம்.

> **"வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை**
> **நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
> **தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்**
> **ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே."**

என்பதால், அக இன்பானுபவம் இந்த உயிரிலும், உடலிலும் கருவி, கரணங்களிலும் இன்ப உணர்ச்சியை விளங்கச்செய்வது அருளின் திருச்செயலே.

மேற்படி அருளமுதின் அனகநிறைவால், இந்த உயிரும் உள்ளமும், உடம்பும் எல்லாம்வல்ல சக்தி சித்தியைக் கொண்ட தாகி விளங்குகின்றதாம். இதுவரை ஆன்ம அணுவின் உள்ளிருந்து வந்த, அந்த சச்சிதானந்த அருளமுதம் வெளிப் படாமலே, அகமிருந்து அருளாலே யாவையும் ஆண்டுவந்

துள்ளது. இப்போதுதான் அந்த அருள் அமுதம் அவ்வகத்திருந்தே அனகமாக விரிந்து நிறைந்துள்ளது. இதுவும் புறத்தில் தோன்றுவதல்ல. பக்குவிகளின் உளத்திலிருந்து வெளிப்படாமலே அனகமாய் நிறைந்து நின்று ஆள்கின்றதாக அருளால் அறியப்படுகின்றதாம். இப்படி, எல்லாம்வல்ல அருள்அமுத சக்தியே தன் உடலுயிரோடு உளமும் நிரம்பிவிட்டதால், அந்த அருள் அமுதத்திற்குரிய அற்புத சித்தித்திறன் இவருக்கும் தானாகவே வந்துவிட்டதாம். இதனால்தான், ''எல்லாம் வல்ல சித்து இயற்கையதாகி,'' என்று குறித்துள்ளார். இப்படி இயற்கையான சித்தித்திறன்தான் என்றும் அழியாது விளங்குவதும் விளங்கச்செய்வதுமாம். மற்றபடி வருந்திப்பெறும் கர்மசித்தித் திறன் அற்பமானதே, செயற்கையாய்ப் பெறப்படுவது, அது சில காலமிருந்து மறையவும் மறைந்துபோகவும்தான் செய்யும். நம் பெருமான்பெற்றுள்ளது நிறைநிலை வாழ்வருள் அமுதமேயாம்.

(7)

1267. சாகா வரமும் தனித்தபே ரறிவும்

1268. மாகா தலிற்சிவ வல்லப சத்தியும்

(உ-வி) அந்த அருள் அமுதால் தான் பெற்றுள்ளவை யாவை என்பதை யீண்டு குறிக்கின்றார். முதலாவது தான் பெற்றுள்ள சாகாவரம்.இது எல்லாம் வல்ல அருள் அமுதால் பெறப்பட்ட சாகாவரம். இதனால் வருவது என்றென்றும் விளங்கும் பேரின்ப சித்திப் பெருவாழ்வு ஆகும். பிற வகையால் பிறரிடத்தில் இந்தச் சாகாவரம் பெற்றிருந்தால், அங்கு அருள் விளக்க மில்லாததால், வாழ்வு, சுத்த அன்பு, அறிவு, இன்ப நிறைவுடையதாக எக்காலும் விளங்கமுடியாது: வாழ்வில் தொல்லையும், சலிப்பும், துன்பமும் பொறுக்கமுடியாதுபோய், அவ்வாழ்வின்பேரில் வெறுப்பே அதிகரித்தும் அவத்தையுற்று அழிந்து ஒழியவே நேரும். அழிவு வேண்டினும் கிடைக்காவிடில் எவ்வளவு வருந்தித் தவங்கிடந்து இறக்கவும், இறந்தபின் பிறவாமல் இருக்கவும் வரம் பெற்றாக வேண்டிய கட்டாயம் ஏற்படும். அப்படி யாதும் கேடும் மாற்றமும் உண்டாகா வண்ணம், இந்த அருள் அமுதால், பெறப்படும் இறவா வரம் இறைமய இயற்கையின்ப வாழ்வில் என்றென்றும் விளங்கவைப்பதாம்.

ஆகவே இவ்வமுதால் பெற்றது சாகாவரம் மட்டுமல்ல. தனித்த பேரறிவும் பெற்றுவிட்டாராம். இத்தனித்த பேரறிவு யாதெனில், கல்லாதே யுணர்கின்ற எல்லாம் அறிந்துகொள்ளும் நிறையறிவு நிலையாகும். இவ்வறிவால் எவ்வுலகத்தெவ்வெவர்க்கும், தேவையான உண்மை நெறியைச் சுத்த சன்மார்க்கமாக அறிவித்து அடைவித்து ஆனந்தமுறச் செய்யமுடியும். இது குறித்தே,

"எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான்சென்றே
எந்தைநின(து) அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்"

என்று வேண்டிக்கொண்டார். இந்த வேண்டுகையை நிறைவேற்றி வைத்ததும், நமது அருளமுதமேயாம். மேலும் யாது அருளியதாம் அந்த அருளமுதம்? அது, வல்லப சக்தியையும் கொடுத்துள்ளதாம். அவ்வல்லப சக்தி சிவ வல்லப சக்தியாம். சிவம் என்பதே எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதியே ஆகும். ஆதலின், சிவ வல்லப சக்தி என்பது எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதிசக்தியே என்பது குறிப்பு. இச் சக்தியை அந்த அருளமுதமே இவர்க்குப் பேரன்போடு வழங்கியுள்ளதாம். மாகாதல் என்பது இங்கு பேரன்பு என்றே பொருளாம்.

(8)

1269. செயற்கரு மனந்த சித்தியு மின்பமும்
1270. மயக்கறத் தருந்திறல் வண்மைய தாகிப்

(உ-வி) மேற்குறித்த சிவ வல்லப இறைச் சக்தியைக் கொடுத்து விட்டதும், இவர் அதனைப் பெற்றுக்கொண்டதும் உண்மையோ கற்பனையோ என்ற ஐயப்பாடு உண்டாகாது தெளிவுபடுத்தும் வகையில், மேற்கொண்டு விளக்கம் தருகின்றார். அந்த அருளமுத சக்தியைப் பெற்றுக்கொண்டதற்குச் சான்றாக, செயற்கு அரும் அனந்த சித்தியும், அதனால் வரும் சுத்த இன்பமும் பெற்றிருந்ததோடு, பிறர்க்கும் தெளிவுபடுத்தி மயக்கறச் செய்து, ஏற்பித்து இன்புறச்செய்யும் ஆற்றலும் வழங்கி விட்டிருந்ததாம். இதுவே அவ்வமுதின் வண்மையாக, வள இயல் என்னும் வள்ளல்தன்மையாக அறியப்படுவது.

எனவே, இவர் இந்த அருள் அமுதத்தால், அருள் ஒளி யுடம்பும், அனந்த சித்தி வல்லபமும், அகில உலகுயிர்களையும் பக்குவப்படுத்தி இன்பநிலைக்கு ஏற்றிவிடும் ஆற்றலும் பெற்று விட்டார் என்று அறியலாகும். இதனால் திருவருட் பிரகாச வள்ளல் என்ற பெயருக்கும் உரியராகி விட்டார் என அறி கின்றோம். இப்படி உயர்சக்தி சித்திகளைப் பெற்றுச் சுத்த சன்மார்க்கத்தைப் பரப்ப வந்த இவரைச் சிறிதும் புரிந்து கொள்ளாது, பலர் சூழ்ந்திருந்தும், அற்புத சித்தி சில கண்டு வியந்து, அவரது புறத் தோற்றத்தைக் கண்டும், பெரும் புல மையும், அறிவாற்றலும் அருள்மொழி வாக்கும் அருட்பாடல் நயமும் உணர்ந்து உணர்ந்து போற்றிக்கொண்டிருந்தனரே தவிர அவர் வழங்கின சுத்த சன்மார்க்கத்தை ஏற்றுப் பெரும்பயன் கொள்ளாது போயினர். அவரும், அச் சூழ்நரைக் கண்டு இரக்கமும் பரிதாபமும் பட்டுத் தன் புறக் கடையைக்கட்டிவிட்டு ஒவ்வொருவரின் அகக்கடைக்குச் சென்று சிறிது சிறிதாகப் பக்குவப்படுத்தும் அருட்சித்திச்செயலை புரிந்து கொண்டுள்ளார். பக்குவமுற்ற உலகில் அவர் வெளியாகித் தலைமை தாங்கிச் சுத்த சன்மார்க்கச் செங்கோலை உலகமெங்கும் செலுத்துவார் என்பது உண்மை!

(9)

1271. பூரண வடிவாய்ப் பொங்கிமேற் றதும்பி

1272. ஆரண முடியுட னாகம முடியுங்

(உ-வி) ஆன்மாவாம் ஓங்கார கலசத்தில் நிரம்பியிருக்கும் அருள்அமுதம் இவர்க்கு எவ்வகை சித்தியும் வாழ்வும் தந்துள்ளது என்பதை முன்னடிகளில் கண்டோம். மேலும் அவ்வருளமுதம் அருளாலே பொங்கி வழிந்து வெளிப்படும் போது ஏற்படும் ஒரு சில விசேட அனுபவங்களைக் குறிக்கின்றார். முன்னம், இந்த ஓங்கார கலசத்து அமுதம், யோக ஞானியர் உளத்தே, அவர் களின் தவயோக வெம்மையால் பொங்கி வழிந்ததைத்தான், மறை ஆகமங்களாக உருவாக்கி வழங்கியுள்ளனர். அந்த வேதாகமங் களின் முடிவை எல்லாம் இன்று கடந்து, மேற்சென்று உண் மையைக் கண்டு, உயரின்ப சித்தி பெறச் செய்கின்றதாம் இந்த அருள் அமுதம்.

வேதங்கள்—கடவுள் உண்மைபற்றி வெளியிட வந்தும், அவ்வுண்மையை உள்ளபடி யுணர்த்தி, வாழச் செய்யாமல், புறத்தே யுழலவும் அகத்தே யொளிந்து ஒழிந்துபோகவும்தான் செய்வனவாம். வடவர் வேதங்களுக்கு மாறான தென்னர் நான்மறைகள், மக்களை, அகங்காரபோதம் ஒழித்து, நான் என்ற அகங்காரத்தை விட்டு, அருளால் உட்கூடி மறைந்துபோகத்தான் செய்தனவாம். ஆகமங்கள் கடவுளை அடைவதற்கு புற நெறிமுறைகள் பலவற்றை, வந்தனை வழிபாட்டு, கொள்கை கோட்பாட்டு விடயங்களைத்தான் விவரித்துள்ளனவாம். அவை கொண்டு மக்கள் உலைவுற்றனரேயன்றி அமைதியும் ஆனந்தமும் பெற்றிலராம். அவர்கள் உளத்தெழுந்த அறிவமுத எழுச்சி அந்த அளவுக்குத்தான் உதவி அம் மறையாகமங்களைச் செய்வித்திருந்தனவையாய் உணர்கின்றோம்.

இப்பொழுது அருளால் பொங்கி எழுந்த மெய்யறிவுக்கு, அந்த மறை ஆகமங்களுக்கு அதீதமான, பதியின் பேரருள் உண்மையை வெளிப்படுத்துகின்றதாக அறிகின்றோம். அகமிருந்து அருளாற் பொங்கி எழுந்த அமுதம், அனகநிறைவு வழங்கியதால் வேதாகமங்களின் முடி பொருளை நன்கு உணர்கின்றோம். நம் பெருமானின் உள்ளத்தில் பொங்கிய அருள் அமுதம், அந்தப் பழைய வேதாகமங்களின் முடிவை எல்லாம் கடந்து மேலோங்கியவிடத்திலே மெய்ப்பொருள் அனுபவம் வெளிப்பட்டு விளங்குவதைக் காட்டிக் கொடுக்கின்றதாம். இக்கருத்தினைத்தான் அடுத்து வருமிரு அடிகளில் குறிக்கின்றார்.

(10)

1273. கடந்தென தறிவாங் கன(ல்) மேற் சபைநடு
1274. நடந்திகழ் கின்றமெய்ஞ் ஞானவா ரமுதே

(உ-வி) அருள் அமுதம், அருள்அறிவு நிலையில்தான் காட்சி அளிக்கின்றதாயிருக்கின்றது. வேதாகமம் விளைந்த நிலம், அருள் அறிவுத் தலம் அல்ல. மருள் அறிவு நிலையே ஆகும். ஆகையால், அந்நிலை கடந்துதான் மேல்வர வேண்டியுள்ளதாம். வேதாகமமுடிநிலைக்கு அப்பால் சுத்த அறிவு, அருட்சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டுள்ளதாம். அந்த அருட்பிரகாசமே திருச்

சபையாகக் கொண்டு அதன் நடுவிலே திருநடனம் புரிகின்றதாம் அந்த மெய்ஞ்ஞானமயமான அருள்அமுதப் பொருள்.

இப்பொழுது கனல்மேற்சபை எது, அதிலே திருநடனம் புரிந்துகொண்டுள்ள நடனசபேசர் யார் என்பது ஒருவாறு யூகிக்க முடியும். சுத்த அருள் விளக்க ஞானசபையே உண்மைக் கோயிலாக அறியப்படும். அந்த ஞானாலயத்தில் சுடர் விட்டி லங்குகின்ற அருள் ஒளியே, அருட்பெருஞ்ஜோதி அமுத நடராச பதியாகும். இக்காட்சியும் அனுபவமும் பிற ஆலயங்களில் கொஞ் சமும் கண்டு கொள்ள முடியாதாம். ஆலயங்களில் நடராஜ விக் கிரக வடிவத்தைத்தான் காணமுடியும். அதன் அற்புத சிற்ப வடிவழகிலே அகமகிழ்ந்து போகின்றனர் பலர். மேலான தத் துவஞானம் உடையோர் அந்த திருவுருவத்தைக் கொண்டு, இப் பிரபஞ்சத்திற்கு ஆதாரமான கடவுள் உண்மையைக் கற்பனை செய்து பார்த்துப் பார்த்துக் களிப்படைகின்றார்கள். கற்பனை கடந்தநிலையில், உள்ளுணர்விலே வெளியாம் கடவுள் உண் மையை, அறிவரியது எனக் கூறி, சிதம்பர ரகசியம் என வெற்று வெளியைச் சுட்டிக் காட்டுகின்றனர். அருள் விளக்கம் உள்ள படி அறியப்படும் போதுதான், சமயமதாதீத, சுத்த சன்மார்க்க அருட்பெருஞ்ஜோதியைக் கண்டுகொள்ள முடியும். ஆகவே, அருள்அமுதம் என்பதும் அருட்பெருஞ்ஜோதி நடனபதி என் பதும் ஒன்றாகவே அகத்தில் கண்டுகொள்ளப்படும். குறுகிய பொருள் கண்டு, புற வடிவத்தில் பற்று கொண்டு, கோயில் வழி பாட்டில் எவ்வளவுதான் தீவிரமாகப் பாடுபட்டாலும் உண்மை விளங்காது. திருவருளால்தான் இந்த அருளமுதமே, அந்தக் கடவுள் வடிவாய் இருக்கின்றது என்பதைப் புதிதாய் அறிந்து கொள்ளுகின்றோம்.

(11)

1275. சத்திய வமுதே தனித்திரு வமுதே

1276. நித்திய வமுதே நிறைசிவ அமுதே

(உ-வி) என்றும் உள்ள அருள் அமுதம், சச்சிதானந்த மயமானதாம். அதுவே சச்சிதானந்தமானது என்றும் கண்டுள் ளோம். இது மற்ற சடப்பொருளாகிய எதற்கும் மிகமிக மேம்

பட்டது என்று சொல்லவும் வேண்டுமோ? மேலும் இதனைத் தனித்திரு அமுதம் என்கின்றார். ஒப்பற்ற பெருமைமிக்கத்திருவின் உண்மை கொண்டிலங்கும் அமுதமாம். மேலும், இது ''தனித்திரு'' தனித்திருக்கின்ற, தனித்திருக்கச் செய்கின்ற, எங்கெங்கும் தானே இருந்துகொண்டு, பலவாகிய புறநிலை கொண்டு விளங்கும் கடவுள் அமுதம் ஆம். இது நித்திய அமுதம் என்றும் குறிக்கப்படுகின்றது. நித்தம் என்றால் எப்போதும், என்றும் எனப் பொருளாக்கிக் கொள்வதைவிட, நித்தியத்தை வழங்கி, என்றும் ஒருபடித்தாய் விளங்கச்செய்யும்அமுதம் என்று கொள் ளலாம். முன் அடியிற் சத்தியம் என்பதும், என்றும் எனக் கொள்ளுவதைவிட உண்மையாக இருந்து, வாய்மையாகவும், மெய்ம்மையாகவும் வெளிப்பட்டு விளங்குவது எனவும் பொருளாம். இதற்குமேல் நிறைசிவ அமுதே என்கின்றார். சிவம் என்பது எங்கும் ஒளிமயமாய், நித்தியமங்கள ஜோதிமயமாய், சமயமதா தீதத்தில் அருட்பெருஞ்ஜோதியாய் விளங்குவதாம். இந்த சிவ ஜோதியாம் இறையொளி அகண்ட வெளி முற்றிலும் என்றும் நிரம்பியே இருப்பதும், என்றும் சிறிதும் குறைதலோ கூடுதலோ இன்றி ஒருபடித்தாய் இருக்கின்றதுமாம். இறைஒளியையே இச்சிவமாகக் கொள்ளப்படுகின்றது.

பத்தொன்பது அடிகளில் இயல் உண்மை விளக்கத்தை எல் லாம் குறித்துவிட்டு இருபதாம் அடியில்தான் மெய்ஞ்ஞான ஆர முதே என்று விளித்துள்ளார். எனவே இந்தப் பத்தொன்பது தொடர் அடிகளும் மிக நீண்ட அடைமொழித் தொடராக அமு துக்கு முன் வந்துள்ளதாய் அறிகின்றோம். அதற்குமேல் இந்த அமுதத்திற்குத் தனிச்சிறப்பு அடைமொழி ஒவ்வொன்று கூடி வருவதைக் காண்கின்றோம். முதலில் மெய்ஞ்ஞான ஆரமுது என வந்தது. அடுத்து, ஈண்டு இரண்டாவதாகச் சத்திய அமுது என்றும், 3. தனித்திருவமுது என்றும் 4. நித்திய அமுது, 5. நிறைசிவ அமுது என்றும் கூறித் தொடர்கின்றார். அடுத்து:

(12)

1277. சச்சிதா னந்தத் தனிமுத லமுதே

1278. மெய்ச்சிதா காச விளைவரு ளமுதே

(உ-வி) இங்கு அவ்வமுதம், 6-வது ஆகச் சச்சித்தானந்தத் தனி முதல் அமுது எனப்படுகின்றது. அந்த அமுதம் சச்சி

தானந்தம் என்பதை எடுத்துச் சிறப்பித்துக் குறித்துள்ளார். தனிமுதல் என்ற குறிப்பால், மிக உயர்வுடைய சிறப்புத்தன்மையும், யாவற்றுக்கும் ஆதாரமுதலாய் ஆதியாய் இருக்கும் இயல்பையும் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார் இங்கு. 7-வது மெய்ச்சிதாகாச விளைவு அருளமுதே என்கின்றார். இதில், சிதாகாசம் நம் சத்தியஞான நிலையை யுணர்த்த வந்துள்ளதாகும். மெய் என்பதுவே சத்தியமாக மொழியப்படுவது. சித்து என்னும் சொல் ஞானத்தைக் குறிப்பது. புற வான்வெளியில் நிறைந்துள்ளது பூதாகாசம் எனப்படுவது. அகத்தே ஆறாதாரம் கடந்த ஏழாவதாகிய நிராதாரத்தே விளங்கு ஆகாசநிலையே, சிதாகாசம், ஞானாகாசம், பரமாகாசம், தகராகாசம் என்றெல்லாம் மொழியப்படும். சித்து+அம்பரம்=சிதம்பரம் என்பதும் இதுவேயாம்.

ஞானாகாசமாகிய சிதம்பரத்திலே திருநடனம் புரிந்துகொண்டுள்ள கடவுள், சிற்சொருபியாக, ஞானாகாச வடிவினராகத்தான் விளங்கிக்கொண்டுள்ளார். இந்தப் பதி உண்மையை அகமொன்றிய ஞானத்தால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே பக்குவமனிதன் கண்டுவிட்டிருந்தான். அவன் கண்டிருந்தது அறிவு கொண்டுதான். அறிவினால் கண்ட கடவுள் நிலையை அனுபவத்தால் ஏற்று வாழற்கு அன்புநிறை அருள் வேண்டியிருந்தது. அந்த அன்பு கொஞ்சம் கொஞ்சமாக விளைய இத்தனை ஆயிரம் ஆண்டுகாலம் தேவைப்பட்டதுபோலும்! அது இப்போதுதான் பூரணவளர்ச்சி அடைந்து, அறிவு, அருள் ஞானமாக விளைவு கொண்டுள்ளதால், அந்தக் கடவுள் அருளம்பலத்தரசராகக் கண்டுகொள்ளப்பட்டுள்ளது. ஆதி சிதம்பரநிலையை பூர்வஞான சிதம்பரம் என்றும், இப்போது அருட்பெருஞ்ஜோதியோடு தோன்றியுள்ள நிலையை உத்தரஞான சிதம்பரம் என்றும் கொள்ளப்படுகின்றதாம். இதுதான் ஈண்டு மெய்ச்சிதாகாச விளைவு எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதுவே அருள் அமுதம் என்பதுமாம். மேலும் அந்த அமுதைக் குறிக்க:

(13)

1279. ஆனந்த வமுதே அருள்ஒளி யமுதே
1280. தானந்த மில்லாத் தத்துவ வமுதே

(உ-வி) 8-வது ஆக, ஆனந்த அமுதே என்கின்றார். ஆனந்தம் என்றால் பொதுவாக இன்பம் என்று பொருளாக்கு கின்றனர். இந்த ஆனந்தம் சுட்டும் இன்பம், கரணேந்திரிய, ஜீவான்ம நிலைகளில் இதவரை ஏற்றுத் துய்த்த இன்பநிலை யல்லவாம். இது ஆன்மாவின் அந்தத்தில் ஏற்படுகின்ற ஆன்+ அந்த=ஆனந்தநிலை யாகும். ஓர் ஆன்மாவுக்கு அந்தமாகிய முடிவுநிலை எது? என்றால், எங்கும் நிறைந்த கடவுட்பெரு நிலையே ஆன்மாவின் முடிவுநிலையாம். உண்மையில் ஆன்மா என்பது எங்கும் நிறைந்த அக்கடவுட்பெருநிலையின் சிறு கூறே யாம். இந்தச் சிற்றுருவிலேதான், அந்த இறை பேரியல் முழு வதும் அனுபவப்படுகின்றதாம். ஆகையால், ஓர் ஆன்மா முதற் படைப்புக்காலமுதலே அணுத்துவமாய் அருகிக் கிடந்து, அகத்தே அருளும், புறத்தே ஒளியும் கொண்டு, பன்னெடுங் காலம் அறியக்கூடாதநிலையிற் செறிந்து இருந்ததாம்.

ஆன்மாவில் அருள் அனுபவம் தோற்றுவிப்பதற்காகத்தான் அக அருளின் செயலால் புறச்சூழல் பல பொருள் வடிவாயும், பல உயிர்த்தோற்றமாயும், பல உணர்வுச் சக்தியாயும், பல புலன் அறிவாயும், மனோபகுத்தறிவாயும் வந்து வந்து சென்று, அந்தப் பகுத்தறிவு நிலைக்குமேல் மெய்யறிவு ஆன்மஞானமாய்த் தோற் றிடத் தன்னைத்தான் அறிந்துகொண்டதாம் அந்தக் குறிப்பிட்ட ஆன்மா. இந்தத் தன் ஞானம் இவனை ஓர் ஆன்ம அணு வடி வினனாகத்தான் கண்டுகொள்ளச் செய்திருந்தது. இதற்கு மேல், தன் சர்வ சுதந்தரத்தால் ஆண்டுவரும் கடவுளை அடைய முயன்று, விசேட சக்தி, சித்திகளையும் முடிவில் முத்தி யையும் பெற்றுக் கடவுள் நிலையிற் கலந்து மறைந்து போய்க் கொண்டு இருந்தான் மனிதன், இந்தமறைவுறு முடிவு ஓர் ஆன் மாவுக்கு முடிவல்ல என்பதும், அவ்வான்மாவே நிறையிறை அனு பவத்துடன் அதுவாகி என்றென்றும் வாழ்வதே முடிவென்றும் நிறையருளால் இப்பொழுது அறிவிக்கப்படுகின்றோம்.

இந்த இறைநிலை யனுபவத்தில், மனிதன் ஆன்ம சிற்றுரு வினன் என்பது போய்த் தானே நிறைஇறை மயமாய் வாழ்வ தாய் உணர்கின்றான். அருளனுபவத்தில் கடவுணிலையில் வாழ் கின்றான். இந்நிலைதான் ஆன்மா கடவுள் நிலை பெற்றுவிட்ட தாய், தனக்கு அந்நிலையே முடிவானதாய் அறிந்துகொள்ளப் படுகின்றதாம். ஆகவே, ஆனந்தம் என்பது ஓரான்மா கடவுள்

மயமாய் ஆகி, அக்கடவுளின் சச்சிதானந்த இயல்போடு என்றும் திகழ்ந்துகொண்டிருப்பதாம். இந்தக் கருத்தைக்கொண்டுதான், ஆன்மக்கடவுள் அனுபவநிலையே ஆனந்தமாக அறியப்படுகின்றது. இதுவே ஆனந்தஅமுதம் என்பதாகக் கொள்ளப்படுகின்றது.

மேலும் இது 9-வது அருள் ஒளி அமுது என்று குறிக்கப்படு கின்றது. கடவுள் உண்மை நிலையே இந்த அருள் ஒளி அல்லது அருட்பெருஞ்ஜோதியாக இருக்கின்றது. இந்த அருள்ஒளி அமுதால் ஏற்படுவதுதான் அருட்பிரகாச வடிவம். கடவுளே தான் இப்படி அருள்ஒளி அமுதமாக இருக்கின்றார். கடவுள் அல்லாத வேறு எதுவும் அருள் ஒளியாக இருக்கின்றதில்லை. இந்த இறை அமுதம் எங்கும் உள்ளீடாய் நிரம்பியிருந்தும், அருள் அனுபவம் உண்டாகாதவரை, அந்த அருளமுதின் செயல் வெளிப்படுவதே யில்லையாம். அன்பு ஒழுக்கத்தால், அருள் விசாரத்தால், அருள்விளக்கச்செயலால் அகமிருந்து அருளமுதம் அனகநிறைவு அடைகின்றது. அதுவே அருளனுபவமாக சுத்த சன்மார்க்கி ஏற்று வாழ்கின்றான்.

10-வது ஆகத் தானந்தமில்லாத தத்துவ அமுதே எனப்படு கின்றது. தத்துவ அமுது என்றால். "அது நீ" என்ற அனுபவம் கொண்டு விளங்கச் செய்யும் அமுதமாக உள்ளதைக் குறிப்பதாம். இந்தத் தத்துவ அமுதம் தான் அந்தம் இல்லாததாம். இதற்கு ஒரு முடிவு என்பது கிடையாது என்று பொருள். இவ்வமுதம் கடவுளையே குறிப்பதால் அக்கடவுளுக்கு ஆதியும் அந்தமும் இல்லை என்ற உண்மையால், அதுவான இந்த அருள் அமுதுக்கும் ஆதியும் அந்தமும் இல்லை என்பது குறிப்பு.

(14)

1281. நவநிலை தருமோர் நல்லதெள் ளமுதே

1282. சிவநிலை தனிலே திரண்டவுள் ளமுதே

(உ-வி) 11-வது நல்ல தெள் அமுது என்று குறிக்கப்படு கின்றது. அந்த நல்ல தெள் அமுது, நவநிலை தரும் ஒரு ஒப்பற்ற தாம். நவநிலை என்பது, புறத்தில் நான்கிடத்து ஒளியாகியும், அகத்தில் நான்கிடங்களில் உணர்வுமயமாயும், அகமும் புறமும் கலந்த ஆன்மாவிடத்துண்டாம் மெய்யருளில் இன்பமயமாயும்

கடவுள் வெளிப்பட்டு விளங்குகின்றார். புற நான்கு நிலையில் உருவாயும், அக நான்கில் அருவாயும், அருள்நிலையில் அருவுரு வாயும் ஆக ஒன்பது இடங்களில் விளங்குவது கடவுளின் இயல் பாகும். இந் நவநிலையிலும் அருளமுதமயமாய்த்தான் இருந் தாலும், ஆன்மாவிலிருந்துதான் கண்டு அனுபவத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அந்த ஆன்மாவே ஓமென்னும் பிரணவ இயல் கொண்டு விளங்கலால், அதன் உட்பொருளாக அருள் அனுபவம் பெறலாகின்றதாம். ஆகவே நவநிலை தருமோர் நல்ல தெள்ளமுதே என்பது பிரணவதேக சித்தி நிலையில், பெருஞ்சுக வாழ்வு பெற்று விளங்கச்செய்வது இந்த அமுதம் என்று அறியலாகும்.

12-திரண்டவுள்ளமுதமாகச் சொல்லப்படுகின்றதாம். அந்த உள்நிலையானது, சிவநிலை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சிவநிலை என்றது, கடவுளின் புறவண்ண ஜோதிமயமான உரு வமும், அகவுணர்வாகிய அருவநிலையும் கூடிய ஒரு நிலையாம். இது தான் அருவாயும் உருவாயும் உள்ள கடவுள் வடிவமாகும். உரு வம் காணக்கூடியதாயுள்ளது. அந்த உருவுள் இருக்கும் அருவ சக்தி நிலை அனுபவத்தால் தெளியப்பட வேண்டியுள்ளதாம். அகத்தில் அருள் உண்மை வெளியாகி அனுபவத்தில் நிறைவதே உள்ளே திரளும் அமுதமாக உரைக்கப்படுவது. சிவநிலையை சிவ பஞ்சாட்சரநிலையாகக் கொண்டு, அந்நிலை பெறுவதே குறிக் கோளாகக் கொண்டவர்கள் புறநிலை விட்டு வாழ்வற்றுப் போயினர். இப்பொழுது சிவநிலையை அகம் புறம் சூழ்ந்த அருள் ஒளி நிலையாகக் கண்டு, உள்ளிருந்து, அருள் அமுதம் ஏற் பதால் புறநிலையையும் சிவமயமாய் ஆக்கிக் கொண்டு வாழ முடி கின்றதாம். ஆகையால் நம் அருளமுதம் தரும் இந்தச் சிவநிலை, மரணமில்லாச் சிவானந்த வாழ்வில் விளங்கச்செய்வதாய் அறியலாகும்.

(15)

1283. பொய்படாக் கருணைப் புண்ணிய வமுதே
1284. கைபடாப் பெருஞ்சீர்க் கடவுள்வா னமுதே

(உ-வி) 13-வது கருணைப்புண்ணிய அமுதமாகக் கூறப்படு கின்றது. அது பொய் படாததாம். அதாவது இவ்வமுது எப்

போதும் தன் இயல்பு கெட்டு அழிந்துபோகாமல், மாற்றமடைந்து கெட்டுப்போகாமல், விரயமாக்கப்படாமல் ஒரேமாதிரியாக விளங்கிக் கொண்டுள்ளதாகும். இந்த அமுதம் கருணை நற்செயலால் விளைகின்ற புண்ணிய இயல்பு கொண்டதாம்.

அறமும் பாவமும் சூழ்ந்து, ஆன்மாக்களைப் பக்குவப்படுத்து கின்றன. அறத்தின் கூறு அகத்தில் அருள்மயமாக வளர் கின்றது; பாவத்தின் பகுதியோ புறவாழ்க்கையில் தேய்ந்து தேய்ந்து ஒழிகின்றதாம். அகத்தில் ஞானம் அருள் உணர்வாய்த் தோன்றி வளர்ந்து முதிரும்போது, அது அருள் அமுதமாய் அனுபவப்படுவதாம். இதுவே கருணைப்புண்ணிய அமுதமாக மொழியப்பட்டுள்ளது. இந்த கருணை அமுதம்தான் என்றென்றும் பொய்த்துப்போகாது சதா விளங்கிக் கொண்டு இருக்கின்றதாம். 14-வதாக இவ்வமுதம் கைபடாப் பெருஞ்சீர்க் கடவுள் வான் அமுது என்கின்றார். இந்த அமுதம், கடவுள் வான்அமுதம் என்று வழங்கப்பட்டுள்ளது. இது கடலீன்ற தேவாமிர்தம் அல்ல என்று குறிக்கப்படவே கடவுள் வான்அமுதம் என்றுள்ளார். நமது அருளமுதம், அருள்வெளியாம், தீண்டரிய அகஅம்ப லத்திலே பெருஞ்சிறப்புடன் என்றும் விளங்கிக்கொண்டே யிருக்கின்றது. இதனால் இது கைபடாதது, கையினால் செய்யப் பட்டதுமல்ல, கையில் எடுத்து வழங்கப்படக்கூடியதுமல்ல வாம். கைபடாதது என்றதால், செயற்கையானது அல்ல, இயற்கையாயுள்ளது என்பது குறிப்பு.

பிற எந்த அமுதமும் கையினால் செய்யப்படுவது, அல்லது இயல்பாயிருக்கும் நிலையிலிருந்து கையால் எடுத்து வழங்கப்படு வதாய் இருக்கும். அப்படிக் கைபடும் அமுதம் எல்லாம் கைத் துப்போகும் அல்லது கெட்டுப்போகும், நித்தியமாகவும் இருக்க முடியாது. புராணம் கூறும் தேவாமிர்தம், திருப்பாற் கடலைக் கடைந்து எடுக்கப்பட்டதாகும். அப்படி எடுத்தும் வழங்கியும் பெற்றும் கொணடது கைகளால் என்று அறியலாகும். அத் தேவாமிர்தம் உண்ட தேவர்கள் அமரத்துவம் அடைந்தும் அமை தியின்றி அவத்தைப்பட்டு அழியத்தான் முடிகின்றதாம். அருள முதம் தேவர்க்கும் இடைப்பதரிதாம். கடவுள் வான்அமுது என்ற கருத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். கடவுள், அக மெய்ஞ்ஞானத்திற்கே அனுபவப்படவிருக்கும் பெயரும் வடிவும் கடந்து, மனோ வாக்கு காயங்களுக்கும் எட்டாது என்றும் ஒரு

படித்தாய் எல்லாம்வல்ல அருளொடு விளங்கிக் கொண் டிருப்பது. தெய்வமோ, கடவுளின் ஏகதேச விளக்கத்தை வெளிப் படுத்தப் புறத்தே பலவாகிய நாம ரூபங்களோடு விளங்கும். ஆகையால், இத் தெய்வ வடிவங்கள் கரண இந்திரியங்களுக்குப் புலனாகும், அற்ப சித்திகளை வழங்கக்கூடும், குறிப்பிட்ட காலம் வரை யிருந்து ஒழியும். ஆகவே, அருட்பெருஞ்சிறப்பு மிக்கது கடவுள் வானமுதம் என்று அறியலாகும்.

(16)

1285. ***அகம்புற மகப்புற மாகிய புறப்புறம்***

1286. ***உகந்தநான் கிடத்து மோங்கிய வமுதே***

(உ-வி) இது 15-வது அமுத விளக்கம். இது, அகம், புறம், அகப்புறம், புறப்புறம் ஆகிய சிறந்த நான்கு இடங்களிலும் ஓங்கிய அமுதம் எனப்படுகின்றது. இந்த நான்கிடம் என்ப தற்கு, மூன்று நிலை விளக்கம் அறியலாகும். யாதெனில், ஒன்று, அகண்ட வெளியிடத்து நான்கு. அவை, அக்கினி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிய உருவநிலை நான்காம். இரண்டு, பிண்ட தேகத்தில், ஆன்மா, ஜீவன், கரணம், இந்திரியம் ஆகிய நான்கிடத்தில் அருவமாய் உணர்வாய் இருப்பது. இதற்கு மேல் மெய்ஞ்ஞான அருள் அறிவால் தன்னைத் தான் ''நான்'' என உணர்ந்துநிற்கும் அருவுருவநிலையாம். ஆகவே உகந்த நான்கிடத்து என்பதற்கு இப்படி அகம், புறம், இடைநிலை ஆகப் பொருள்கொள்ளப்படும். இவ்விடங்களில் எல்லாம் நம் அருளமுதம்நிரம்பியே இருக்கின்றது என்று அறியலாகும்.

கடவுள் சர்வ வியாபகி, எங்கும் நிறைந்தவர் என்று உரைக் கப்படுவார். அதுபோல், அதுவே ஆகிய அருள் அமுதம் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது உண்மையேயாம். எங்கும் பரிபூரண மாய் நிரம்பியிருந்தாலும், இக்கடவுளும், கடவுள் அமுதமும், கரண இந்திரியங்களுக்கு என்றும் தோற்றுகின்றதில்லை. ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வோரிடத்தும் வேறு வேறு வண்ண மாய்ப் புறத்தோற்றங்கொண்டு விளங்குகின்றதாம். புற நான் கிடங்களில் ஒளிமயமாகவும், அக நான்கிடங்களில் உணர்வு மயமாகவும், மெய்ஞ்ஞான நிலையில் அருள் அறிவு வண்ணமாகவும்

விளங்குகின்றதாம் இந்த அருள் அமுதம். ஈற்றில் குறிக்கப்பட்ட அருள் அறிவுநிலையில்தான் அருள் அமுத உண்மை விளங்குவதாய் இருக்கின்றது. இங்கு இந்த அருள்அமுதம் அனுபவத்தால் அறியப்படுகின்ற போதுதான், அதனுடைய எங்கும் நிறைந்த உண்மையும், ஒவ்வொன்றில் வெளிப்பட்டிலங்கும் அதன் ஏகதேசத்தன்மை விளக்கமும் கண்டு கொள்ளப்படும்.

(17)

1287. பனிமுத வீக்கிய பரம்பர வமுதே

1288. தனிமுத லாய சிதம்பர வமுதே

(உ-வி) சிறப்பிற்சிறப்பாய அருள் தன்மை நிறைந்த கடவுள் அமுதம் பரம்பர அமுதம் என 16-வதாகக் குறிக்கப்படுகின்றது. பரம் என்றாலே மேலானது சிறந்தது என்று பொருளாம். அந்த, எந்த ஒரு மேலானதற்கும் மேலானதுதான் பரம்பரம் என்பதாகும். அப்படிப் பரம்பரமாயுள்ளது அருட்பெருங்கடவுள் ஒருவரேயாவர். அக்கடவுளே இப்பரம்பர அமுதாக உள்ளதாம். இவ்வமுதம் ஒருவனுக்குப் பனிமுதலானவைகளை ஒழிப்பதுவாம். பனியாவது, குளிர், அச்சம், நடுக்கம், துன்பம் முதலியன உண்டாக்கும், குளிர்ச்சி, பயவுணர்வு, பலவீனம், நோய் முதலியனவாம். இவைகளைப் போக்கிச் சலித்தலின்றி நிலவச்செய்வதுதான் பரம்பர அமுதின் தரமாகும்.

17-வது. சிதம்பர அமுது எனப்பட்டுள்ளது. இது தனி முதல் ஆய சிதம்பர அமுதம் என்று குறிக்கப்படுகின்றது. சிதம்பரம் என்பது ஞானாகாசமாம். இயற்கை விளக்க ஞானாகாச வடிவாய் இருப்பது நம் ஆன்மாவே. இவ்வான்மா கடவுள் வண்ணமானதாய், அனாதியே இருந்து வருகின்றது. இதிலிருந்தே இந்த அகண்ட பிரபஞ்சத்து அகிலசராசரமும் தோன்றி விளங்குகின்றனவாம். இதனால் இது ஒப்பற்ற முதற்பொருளாக உரைக்கப்படுவது. இச் சிதம்பர அமுதம் யாவற்றுக்கும் முதலாயிருந்து, எவற்றையும் தோற்றுவித்து, விளங்கச்செய்து வந்துள்ளது. அப்படிச் செய்து வந்துதான், இன்று சிறப்புடைய மனிததேகத்தில் மெய்ஞ்ஞானத்தை விளங்கச்செய்து, அதுகொண்டு, அதனையே (அச் சிதம்பர அமுதையே) கண்டுகொள்ளச் செய்கின்றதாம்.

(18)

1289. உலகெலாங் கொள்ளினு முலப்பிலா வமுதே

1290. அலகிலாப் பெருந்திற லற்புத வமுதே

(உ-வி) அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டியது என்பது திருக்குறளுக்கோர் உவமை. ஏழு கடலும் ஓர் உலகில் அடங்கும். அப்படி எத்தனையோ கோடி உலகங்களைக் கொண்ட அளவிடற்கரிய அகண்டாகாரப் பிரபஞ்சவெளி முற்றும் நிறைந்துள்ளது அருட்பெருஞ்ஜோதி. இதனை அப் படியே முழுமையாக ஆன்ம அணு, தன் அகத்திற்கொண்டு விளங்குகின்றதாம். இதனால் இந்த ஆன்ம அணு நிலையில் பிர பஞ்சம் முற்றுமே அடங்கியுள்ளதாம். ஆகையால், இதனை அருளால் அடையப்பெற்றவன், அந்த அருள் அமுதத்தை உலகுக் கெல்லாம் எவ்வளவு காலம் வழங்கினும், சற்றும் குறைவு படா தாம். இதுதான், ''உலகெலாம் கொள்ளினும் உலப்பிலா அமுதே'' எனப்பட்டுள்ளது. இங்கு, 18-வது இயல் விளக்க மாகக் கொண்டு அவ்வமுதம் குறிக்கப்பட்டுள்ளதாம். உலப்பிலா என்றால், எடுக்க எடுக்கக் குறைவு படாத என்று பொருள் படு வதாம். இதனைப் பௌராணிக மார்க்கத்தில் அட்சய பாத் திரத்தின் இயல்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். ஈற்றில், 19-வது குறிப்பாக ''அலகிலாப் பெருந்திறல் அற்புத அமுதம்'' என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அருள் அமுதின் உடைய் ஆற்றல் எவ்விதத்தும் கணக்கிட்டுச் சொல்லக்கூடியதாயில்லையாம். இவ் வளவு தன்மைகளும் கொண்டு விளங்குதல் அற்புதமாகக் குறிக் கப்பட்டுள்ளது.

இந்த அருள் அமுதம் என்றதலைப்பில் முன் பத்தொன்பது அடிகளில் அவ்வமுதின் சிறப்பு விளக்கமும் இயல்பும் பற்றி ஒரே தொடர் அடைமொழியாகக் குறித்துவிட்டு மேலே, தனித்தனி ஓர் விசேட அடையுடன் அமுதத்தை பத்தொன்பது வகையிலே தான் விரித்துக் கூறியுள்ளார் என்பதைக் காண்கின்றோம். அவையாவன:

1. மெய்ஞ்ஞான ஆரமுது
2. சத்திய அமுது
3. தனித்திரு அமுது
4. நித்திய அமுது

5. நிறைசிவ அமுது
6. சச்சிதானந்தத் தனிமுதல் அமுது
7. மெய்ச்சிதாகாச விளைவருளமுது
8. ஆனந்த அமுது
9. அருள் ஒளி அமுது
10. தானந்தமில்லாத் தத்துவ அமுது
11. நல்ல தெள்ளமுது
12. திரண்ட வுள்ளமுது
13. கருணைப் புண்ணிய அமுது
14. கைபடாப் பெருஞ்சீர் கடவுள் வான் அமுது
15. நான்கிடத்து ஓங்கிய அமுது
16. பனிமுதல் நீக்கப் பரம்பர அமுது
17. சிதம்பர அமுது
18. உலப்பிலா அமுது
19. பெருந்திறல் அமுது

இப்படிப் பத்தொன்பது வகையில் அந்த அருட்பெருஞ்ஜோதி அமுதைப் போற்றிக்கொண்டுள்ளார். ஏன் இப்படி 19 அடிகளில் அருளமுதின் விளக்கத்தை முதலில் கூறிவிட்டுப் பின் 19 வகை யில் அவ்வமுதின் அனுபவப்பயன் ஏற்படத் தனித்தனி சிறப் பித்து வழங்கியுள்ளார். இந்தப் பத்தொன்பது ஒரு விசேட எண்ணாக இருக்கின்றது. இது கடவுளான்மா அனுபவத்தைக் குறிப்பதாய் உள்ளதாம்.

> "ஓங்கார மான கலசத் தமுதுண்ணில்
> போங்கால மில்லை புரிந்து"
>
> —ஔவை குறள்

இந்த ஓங்கார வண்ணமானது, நம் கடவுளான்மநிலை. ஓங்கார ஆன்மா, ஒன்பதாகிய நவ, அல்லது பிரணவமாய் இருக்க அதன் உட்பொருளாக உள்ள அருளமுதம் பத்தாக அனுபவப்படுகின்றது. இதனால் இந்த அருளமுத நிலையை விளக்கித்தர பத்தும் ஒன்பதுமாகிய பத்தொன்பது வகையில் போற்றிப் பணிந்து பயன் கொண்டுள்ளார் என்று அறிதல் கூடும். இது இறையருளின் பெருஞ்செயலே யன்றி வேறு யாதோ! தற்செயலாய் இந்த அடிகள் இப்படி அமைந்து விட்டுள்ளது என்று சிலர் சொல்லக்கூடும். சரி, அந்தத் தற் செயல் என்பதும் என்ன? "தத்" என்ற கடவுளைக் குறிக்கும்

வடசொல் தானே தமிழ் வழக்கில் இப்படி ''தற்'' என வந்துள்ள தால் எல்லாம் கடவுட்செயலே என்பதுதான் பொருந்துவதாம்.

ஒன்றான பதியின் உண்மைதான், யாவுமாய் உலகில் வெளிப்பட்டு இருத்தலின், நாமறிந்த சிறந்த பொருள்கள், ஆற்றல்கள், செயல்கள், தோற்றங்கள் மற்று விசேடமான எதையும் எடுத்துக்கொண்டு அதன் அதன் இயல் செயல் பயன் களோடு கடவுட்பண்பை ஏற்றிக் கண்டு களித்து அனுபவம் விளைக்க உதவியாக இப்படி, பலப்பலவாக புனைந்து அருள்நலம் விளங்க விவரித்து வருகின்றார் நம் வள்ளற்பெருமான் என நன்கு அறிகின்றோம். இதுவரை அருள் அமுதம் எனக் கடவுளைப் போற்றிவிட்டு மேல் அருட்ஜோதியை மணியென வாழ்த்தி வாழ்வுபெறச் செய்கின்றார்.

217. மணி

(1)

1291. அண்டமு மதன்மே லண்டமு மவற்றுள

1292. பண்டமுங் காட்டிய பரம்பர மணியே

(உ-வி) நமது அருட்பெருஞ்ஜோதியை ஈண்டு மணியாகக் கொண்டு போற்றிக் கொள்ளப்படுகின்றது. உலகில் விளங்கும் நவரத்தினங்களையும், பொன் முதலான உயர்தாதுப் பொருள் களையும், பாதரசக்கட்டையும் மணியாகப் போற்றிக்கொள்ளுவர் சிலர். அன்றியும், நவதானியங்களையும், தாமரை முதலியவற்றின் வித்துகளையும் சாதாரண மக்கள் மணியாகக் கூறுவர். ஆன்மா வும் அது உவமிக்கப்படும் கருநெல்லியும் மணியாகக் கொள்ளுவர் சித்த கணத்தார். அருளென்னும் பொருள்தரும் ஒமென்னும் பிரணவமே நவமணியாகத் திருவருளாலே கண்டு அடைந்தால், நவநவமான சித்திகளும், சுகானந்தப் பெரு வாழ்வும் சித்திக்கும். ஆதலின் நம் அருட்பெருஞ்ஜோதியையே லட்சியமணியாய்க் கொண்டு போற்றுவோம்.

நமது அருட்பேரொளி மணிக்கு இயல்பாகவே ஒளியுண்டு. அது அருளாலே விளங்கும் அருள் ஒளியாகும். புற வான்வெளி யில் ஒளிவிடுகின்ற ஜோதி ஞாயிறும் ஒளியுடையதுதான். அதன்

ஒளி, அருள் ஒளி அல்ல, பூத ஒளியேயாம். அவ்வின்மணி யொளியால் இவ்வண்ட உலகப்பொருள்களை ஒருவாறு காணமுடி கின்றது. இந்த உலகத்தைப் பூராவுமோ, இதன் பொருள்களை அனைத்தையுமோ இந்த ஞாயிற்று ஜோதியால் முழுமையாகக் கண்டுகொள்ள முடிகின்றதில்லையாம். ஆனால் நமது அருட்ஜோதி மணியோ பர அம்பர அல்லது பரமாகாசத் திலங்குகின்ற ஒன்றாக இருக்கின்றது. இந்த அருண்மணி ஒளிதான் இந்த பூமி ஆகிய அண்டம் முழுவதையும், இதுபோல் அகல்வான் வெளியில் உள்ள அண்டங்கள் யாவையும், இதிலும், அவற்றிலும் உள்ள பொருள் கள் எல்லாவற்றையும் கண்டு கொள்ளச் செய்கின்றதாம் இந்த நம் அருள் ஒளி மணி. இது பரம்பர மணி ஆம்.

(2)

1293. பிண்டமு மதிலுறு பிண்டமு மவற்றுள

1294. பண்டமுங் காட்டிய பராபர மணியே

(உ-வி) மேலே, பரம்பரம் என்றது பர+அம்பரம் அதாவது பரமாகாசம் எனவும், அது பரமாகாசக் கடவுள் வடிவாகவும் கண்டு கொண்டோம். அதனால் அண்டக்காட்சி அதற்கு உரிய தாய்க் கண்டு கொண்டோம். இப்போது இங்கு குறிக்கப்படுவது: பராபர மணியாம். இது, பரம்+அபரம் எனப் பிரித்தறியப்படும் போது, பரம்-கடவுளாகவும், அபரம்-ஆன்மாவாகவும் இருப் பதால், பராபரம் என்பது கடவுளான்மாவாகவே கொள்ளலா கின்றது. நமது ஆன்மாவே இந்தப் பராபரமணியாக உள்ளதாம். அகண்டநிறை கடவுள் ஒளியிலிருந்து பிள்ளப்பட்டது பிண்ட ஆன்மாவாகும்.

அண்டத்திலுள்ளவாறு இந்த மனிதனிலும் (பிண்டத்திலும்) உண்டு என்பர். இப் பிண்டாதார ஒளியே நம் கடவுளான்மா வாக இருக்கின்றது. நாம் ஆன்மாவாகிய பராபர மணி நிலையில் இருந்து நோக்கும்போது, இந்த தேகமாகிய பிண்டத்தின் இரக சியம் எல்லாம் கண்டு கொள்ளப்படுகின்றதாம். இவ்வுடலின் தலைப்பாகம் அண்டமென்றும், தலைக்குக் கீழ்ப்பாகம் பிண்ட மென்றும் கூறுவர். இந்தப் பிண்டத்தில் பிண்டமாகிய பகுதி யில் உட்கருவி கரணங்கள், ஆறாதாரங்கள் ஆகியவை யுளவாம். இவைகளையே பண்டங்கள் என்கின்றார் இங்கு. இவற்றை

எல்லாம் விளக்கமாக, இரகசியமெல்லாம் வெளியுறக் காட்டி, அவற்றின் பெறலரும் பயன்களை எல்லாம் மேலான பராபரமணி நிலையிலிருந்து பெற்று ஆனந்திக்கும்படி செய்துவிடுகின்றதாம். சுத்த சன்மார்க்க அனுபவமெல்லாம் கழுத்துக்கு மேல் என்பதை மறக்கக்கூடாது. அருளாலே பராபர மணிமயமாய் நின்று பூரண மான பிண்டாதார சித்திகளையெல்லாம் பூரணமாய்ப் பெற்றுக் கொள்ளலாகும். இப்படிப் பெறாது, யோக ஞானியர் கீழ் ஆதாரங்க்ளில் ஒவ்வொன்றிலும் பல பல நாட்கள் சாதனை புரிந்து, ஏகதேச சித்திகளைப் பெற்று மேலேறிக் கொண்டிருப்பர்; முடிவில் மேனிலையில் ஒடுங்கி மடிந்துபோய் விடுவர். ஆதலின் அந்த யோகநெறி தவறேயாம். ஹடயோக சாதகர் கள் பெரும்பாடு பட்டுக் குண்டலியைக் கீழிருந்து எழுப்பி மேற்செலுத்திச் சித்திகள் பல புரிந்தும், முடிவில் நிராதார நிலை யுறும்போது, தன் உணர்வு முற்றும் அழிந்து, உள்ளொளியில் உறைந்து பரவசத்தே மறைந்துபோகின்றனர். சன்மார்க்கியோ அருள் விசாரத்தால் நேரடியாகப் பதிமயமாய் இருந்து அருள் வாழ்வு வாழும்போது, சூரியன் உதயமானால் தாமரைகள் மலர்ந்து விளங்குவனபோல் அருட்ஜோதி அகத்தில் அனுபவப் படும்போது, ஆறாதார நிராதார கமலங்கள் எல்லாம் தாமே மலர்ந்து, அவற்றின் நிறை அனுபவத்தையும் வழங்கி வாழ்விப்ப தாம். இப்படி இயற்கையில் மலர்ந்து சக்தி வழங்கப் பெறுதலை விட்டு, அங்கங்கு மன ஒளியை ஏற்றித் தவ அனலை மூட்டினால், ஆதார கமலங்கள் இயற்கையாக மலருமா? அவற்றின் நற்பயன் தான் கிடைக்கப்பெறுமா? அருளுடையார் இந்த யோகநெறி செல்லார் என்று அறிய வேண்டும்.

நம் பெருமான் இந்த அருள் ஒளி மணியை அகத்தில் கண்டு அதன் மயமாய் இருந்துகொண்டு, அருட்பெருஞ்சித்திகள் எல் லாம் தனக்குரியதாய்க் கொண்டு திகழ்கின்றார்.

இங்கு குறிக்கப்படுகின்ற அருட்பெருஞ்ஜோதிமணி ஒன்றே தான் உண்மையில் இருப்பது. இந்தமணியின் இயலும் செய லும் பயனும் பலவாய் அனுபவப் படுவதாயுள்ளன. அப்படிக் கண்டு கொள்ளப்படும் அனுபவத்தால், ஓர் ஒரு காரண கற்பனைப் பெயர் வழங்கியுள்ளனர். முதலில், பரம்பர மணி எனக் குறித்து அதுகொண்டு அண்டவெளியில் கறங்குகின்ற அண்டங்களின் இரகசியத்தையும் அவ்வண்டங்கள் தோறும் உள்ள பண்டங்

களையும் கண்டுகொள்ள முடிகின்றது எனறார். இந்த அடிகளில் அதே அருள் மணியைத்தான், பராபர மணியாகக் காண்கிறார். இது ஆன்ம வண்ணமாய்க் கண்டுகொள்ளப்படுவதோடு, இதுவே எங்கெங்கும் இருக்கின்ற ஆன்மாக்களின் பிண்ட தேக இரக சியங்களையும் அவ்வுடலில் அகமிருக்கும் கருவி கரணாதிகளையும், ஆதார விளக்க அனுபவ உண்மையும் வழங்குவதாய் அறியப் பட்டதாம். ஆகவே, இது இரண்டாவதாகக் குறிக்கப் பெற்ற பராபரமணியாக வுள்ளதாம்.

(3)

1295. நினைத்தவை நினைத்தவை நினைத்தாங் கெய்துற
1296. அனைத்தையும் தருமோ ரரும்பெறன் மணியே

(உ-வி) மூன்றாவதாக நம் அருள் மணியே இங்கு, அரும் பெறன் மணியாக அணிந்து கூறப்பெற்றுள்ளதாம். என்ன கார ணத்தால் நம்பதி அரும் பெறன் மணியாகப் புனைந்து கூறப் படுகின்றார் என்பதைச் சற்று ஆராய்வோம். ஒருவன் சுத்த சன்மார்க்க முறையில் அகநிலையில் அருள் ஒளிப் பதியோடு அத்துவிதமாய் இருத்தலை சத் விசாரத்தால் உணர்ந்து அதுவாகி நிற்கின்றான். அப்போது அவன் தன்னை முற்றிலும் பதிமயமாக்கிக் கொண்டு அப்பதியின் செயலே தன் மூலம் வெளிப்படக் கண்டு கொள்ளுகின்றான். கடவுளே எதையம் நினைக்கவோ வேண்டவோ செய்யும்போது, அதையே, அந்நிலை நிற்கும் இவன், நினைக்கின்றான்; வேண்டு கின்றான். இப்படி நினைக்கப்பட்ட உடன், திருவருளால் அதனை ஒரு நொடியில் வரவழைத்து வழங்கப்பெற்று விடுகின்றான். எல் லாம் செய்யும் ஆற்றலுடைய ஆண்டவர், வேண்டிய எதையும் உடனுக்குடன் வருவித்துக் கொடுக்கும் செயல், அவர்க்கு இயல்பு தானே; இவ்வுண்மை கொண்ட நம் அருள் ஒளிமணியைத்தான் இங்கு, "நினைத்தவை நினைத்தவை நினைத்தாங்கு எய்துற அனைத்தையும் தருமோர் அரும் பெறன் மணியே," என்றுள்ளார்.

ஆன்ம அறிவாம் பாற்கடலில் கடைந்து எடுக்கப்பெற்ற தேவாமிர்தத்திற்குப் பின் வெளிப்பட்டதாம் சிந்தாமணி. இதுவும் ஒருவர்க்கு சிந்தித்ததை வேண்டினதை எல்லாம் கொடுப்பதாகக் கூறியுள்ளனர். இது, ஆன்ம சக்தி விளக்கக் கற்பனையே அன்றி வேறல்லவாம். கடவுளுக்கும் இவ்வருஞ் செயல் தன்மை உண்மை யால், "வேண்டுவோர் வேண்டுவதை யீவான் கண்டாய்," என்

கின்றனர். மெய்யருள் அறிவால், நம் அரும்பெறன் மணியை அடையப் பெறாமல், மருள் விளக்கம் கொண்ட மாந்தர் சிலர், மந்திர தந்திர உபாசனா முறையால், சிறிதளவு தெய்வ சக்தி துணையைக் கொண்டு, உண்மையை அறியா உலகவர் பலரும் வியக்கும்படி ஏதேதோ பண்டங்களை வருவித்துக் கொடுக்கின் றனர். இவர்களின் இச்செயலைக் கண்டு, மிக மதித்துக் கொண் டாடுகின்றனர் சிலர். இவர்களும் தம்மை ஏதோ கடவுள் அரு ளால் பெரிய சக்தியைப் பெற்றுவிட்டுள்ளதாகத் தற்பெருமை பட்டுக்கொண்டு, அகங்கரித்து அழிவுறுகின்றனர். அகங்காரம் ஒழித்து அருள்மயமானால், தம்மைக் காட்டிக் கொள்ளாரே அவ் வருளாளர்! விளம்பரப்படுத்தச் சற்றும் இசையார். திருவருள் தானே இவர்களில் பூரணமாய் வெளிப்பட்டுப் பேரின்ப சித்திச் செயலோடு என்றென்றும் விளங்க வைப்பது சத்தியம்.

ஆகவே கடவுள் மனிதனுக்குக் கொடுத்துள்ள அன்பும் அறிவும் ஆற்றலும் கொண்டு காலமுள்ளபோதே திருவருளின் உண்மையைக் கண்டு அடைந்திடல் வேண்டும். காலதாமதம் செய்துகொண்டிருந்தால், வாய்ப்பு ஏற்படாமல் போகும். மெய் யன்பு நிறையாத அறிவாற்றலால் பெறப்படுகின்ற அற்ப சக்தி சித்திகளினால் அகங்களித்தும் அகங்கரித்தும் வீண்போய்விடக் கூடாது. அன்பறிவைப் பெருக்கி, அகங்கரிப்பை யொழித்து அகநெகிழும் சமயம் அருள் ஒளியுள்ளிருந்து பெருகும். அது கொண்டு அருள் அனுபவம் ஓங்க வாழ்தல் வேண்டும். அருள்நிலை பெற்றுவிட்டால், அருளின்பச் செயல் புரிந்துகொண்டு ஆனந்த மாய் என்றும் வாழலாம்.

(4)

1297. விண்பத மனைத்து மேற்பத முழுதும்
1298. கண்பெற நடத்துங் ககனமா மணியே

(உ-வி) இதில் குறிக்கப்பட்டுள்ளது, ககனமாமணியாம். ககனம், வான், விண், ஆகாசம், அம்பரம், மாகம் என்பன வெல் லாம் ஒருபொருட் சொற்களேயாம். ஒவ்வொன்றும் வெவ்வேறு கருத்தைக்கொண்டு வான்பொருளையே சுட்டுவதாம். விண்மணி என்றால் சூரிய ஜோதியாம். இதுவே ககனமணி என்றும் கூறப் படுவது. இந்த ஞாயிறு வான்நின்று ஒளி செய்து இவ்வுலகுயிர்ப்

பொருள்களை யெல்லாம் தோற்றுவித்தும், வளர்த்தும், அழித்துப் புத்துரு கொள்ள உதவியும் வருகின்றதாம். இவை எல்லாம் இந்த நிலவுலகில் நிகழும் செய்கைகளும் அனுபவங்களுமாம். இப்படி அகண்ட பெரும் பிரபஞ்சத்தில் எவ்வளவோ உலகங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு விண்மணி இருந்து பக்குவப்படுத்தி வருகின்றதாம். இப்படிப்பட்ட கோடி சூரியர் களையும் தோற்றுவித்து விளங்கச்செய்து, வான் பதத்திருக்கும் முழு உயிர்த் திரள்களையும், கண்ணாரக் கண்டு, அவைகள் மெய் யறிவுக் கண் பெற, அதாவது அவைகளுக்கு மெய்ஞ்ஞானானுபவம் அருள்செய்து நிலவுவது. இந்த அகஞானக் ககனமணி புற விண் மணி பலவற்றின் முழு ஆற்றலையுங் கொண்டு விளங்குவதாம். இதன் பேரருளாற்றல் பிற எதற்கும் இல்லையாகும். இந்த அருட் பேராற்றலால், எவ்வுலகத் தெவ்வுயிர்களையும் கண்டு, அவை களைக் கண்காணித்து வந்து முடிவில் தன்னையே அவர்களுக்கு வழங்கிச் சுத்த சன்மார்க்க வழிக்குத் திருப்புதல் முறையாக இருக்கின்றதாம். ஆகையால் இந்த நம் அகமொளிர் ஜோதி மணியின் பெருமை எல்லாம் குறித்திடும் வண்ணம் ககனமாமணி என்று விசேடித்துரைக்கப்பட்டுள்ளதாம். இதுதான் முழுமை யான விண்பதத்தையும், அவைகளுக்கு எல்லாம் மேலான பதங்கள் முழுவதையும், கண் பெற நேர்முகமாகத்தானே பொருந்தி நின்று செயல்படுத்துகின்றதாம். இக்காரணத்தால்தான் நம் அரு ளொளிமணி, ககனமா மணி என்று குறிக்கப்பட்டுள்ளதாம்.

இந்நாள்வரை, ஆன்மாக்கள் ஒவ்வொரு உயிரிலும் குடி கொண்டிருந்தும் செயலற்றதாய் அனுபவத்தில் வெளிப்படாத தாய்ப் புதையுண்டிருந்தனவாம். இந்நிலையிற் கிடக்கும் ஆன் மாக்கள் சாகாதே செத்துக் கிடந்தனவாய்க் கொள்ளப்படும். அப்படிப்பட்ட ஆன்மாக்களை எழுப்பி, விண்பதமும், மேற் பதமும் முழுமையாகக் காணக்கூடிய அருட்கண்ணைப் பெறச் செய்து விட்டுள்ளதாம். இந்தக் கண்ணைக் கொண்டு இருந்த இடத் திருந்தே உலகங்களை எல்லாம் ஆளும் ஆற்றல் சுத்த சன்மார்க்கி அடைந்துவிடுகின்றானாம். விண்பதம் என்பதைத் தேவர்களின் பதவி என்றும், மேற்பதம் என்பதை அத் தேவப் பதவிக்கு மேற்பட்ட மக்களிற் சிறந்த அருளாளர்களின் பக்குவநிலை அனுப வங்களைக் குறிப்பதாயும் கொள்ளலாம்.

(5)

1299. பார்பத மனைத்தும் பகரடி முழுவதுஞ்
1300. சார்புற நடத்துஞ் சரவொளி மணியே

(உ-வி) விண்ணின்று விரிந்து விளைந்துள்ளது இம் மண்ணுலகம். ஆகாசம் முடிநிலையாகக் கொள்ளும்போது, இந்தப் பூமி அடிநிலையாக உள்ளதாம். இந்த நிலவுலகில்தான், எத்தனை எத்தனை உயிர்கள், எத்தனை எத்தனை பொருள்கள், எத்தனை எத்தனை ஆற்றல்களும் செயல்களும் தோன்றி விளங்கி மறைந்து கொண்டேயுள்ளன. இவைகள் எல்லாவற்றிற்கும் துணைக் காரணமாகி உண்ணின்று இயக்குகின்றதுதான் அருட்பெருஞ்ஜோதியாகும். இந்த உலக நிலைகளையும், இவற்றின் ஆதார நிலைகளையும் இடையறாது இயக்கி இயக்கிப்பக்குவப்படுத்தி, மேனிலை அடையச்செய்கின்ற நம் அருண்மணியைச் சரவொளிமணி என்கின்றார்.

சரவொளி என்பது இடையறாது வரிசையாக வந்துகொண்டேயிருக்கும் ஒளிக்கதிர்களைக் குறிப்பதாம். சூரியனிடத்திருந்து வெளிப்படுகின்ற ஒளிக்கதிர்களில், உயிர்கள் சதா தோன்றுவதும், வளர்வதும், அழிந்து மறுபடி தோன்றுவதுமாய் இருந்து கொண்டே இருக்கின்றனவாம். இதனால் இம்மண்ணுலகுயிர்களும் பொருள்களும், முடிவிலாத இந்த ஒளிமாலையால் இயக்கப்பட்டு மேனிலைக்குச் செலுத்தப்படுகின்றனவாய் அறிவோம்.

மின்சார அலைகள் எங்கும் நிரம்பிப் பாய்ந்துகொண்டேயிருக்கின்றன. அதனைக் கம்பிக்ள் மூலம் கட்டுப்படுத்திக் குமிழ்கள் பொருத்தி எரியச் செய்வதை இன்று யாவரும் அறிவர். கம்பியின் உதவி இல்லாமலே, மின்சாரத்தை ஈர்த்துக்கொண்டு ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மின் விளக்குகள், விரைவில் வெளியாக்கப்படும். இதற்கு ஆதாரம் நம் அருள்ஒளியின், இந்தச் சரவொளி சக்திச்செயலே யாம். நம் சரவொளி உண்மையில் அருட்பெருஞ்ஜோதியின் வெளிநிறை நிலையை யுணர்த்துவதேயாகும். இவ்வொளிதான் எல்லா ஆன்ம அணுக்களிலும் இருந்து கொண்டு, பல வேறு வடிவேற்று ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து விளங்கிக்கொண்டே யுள்ளதாம். இடையறா விளங்கும் ஆன்மத்தீப வரிசையைக் குறிப்பதுதான், தீபாவளி ஆகும். தீப+ஆவளி=தீபாவளி=தீப வரிசை ஆகும். நம் ஆன்ம தீபம் தொடர்ந்து வந்து எரிந்துகொண்டே யிருப்பது அருள்வாழ்வில் மரணமில்லா நிலையில்தான் அனுபவமாம்.

தீபாவளியின் தத்துவ விளக்கம்:

புரட்டாசி மாதம் வரும் அமாவாசை, மாளய அமாவாசை எனப்படும். இது அகநிலையில் (தை முதல்) ஒன்பதாவது மாதம் (உதயமுதல்) பதினெட்டாவது மணியில் அதாவது இரவு பன்னிரண்டு மணி அளவில் உண்டாகும் மன ஓர்மைநிலையைக் குறிப்பது. இவ்வோர்மையினின்று நவசக்திகளை நவராத்திரி களில் வழிபட்டு விஜயதசமி நாளில் பெறப்படுவது அக ஆன்ம நிலையாம். அதிலிருந்து அருள்செயல் வெளிப்பட வாழ்ந்து முழுநிலவு நாளில் ஆன்மானுபவத்தில் நிற்றல் வேண்டும். அந் நிலை அனுபவம் பெருகப்பெருக, தேகப்பற்று படிப்படியாகக் குறைந்து அமரபட்சம் போல் கழிந்து கொண்டே வருகின்றதாம். அமாவாசை வரும் நாள், தேகப் பற்றுநிலை முற்றும் ஒழிந்து விடுகின்றதும், அக ஞான ஜோதி வடிவம் சித்திக்கின்றதுமாம். இதுதான் தீபாவளி நாளாம். இது அந்த அமாவாசைக்குமுன் உள்ள சதுர்தசியின் கடைக்கூறு ஆன பிராதகாலம் அல்லது அமுதகால நேரத்தில் அனுபவப்படுவதாம். இத் தீபஒளி அனு பவம் ஏற்படும்போது இன்பம் நிலை கொள்ளுவதாம். தீப ஒளி கண்டவுடன் சேர்ந்தது சந்தோடம் என்று குறித்துள்ளார் நம் வள்ளலார். இந்த அருள் ஒளித் தீபத்தை அகத்தே கண்டு நிற்கும் ஒருவன் எங்கும் எவரையும் தீபவரிசையாகக் காண் கின்றான்.

ஆகவே, நம் அருட்பெருஞ்ஜோதியையே அருளாலே கண்டு நின்று உலக நிலைகளையும், உயிர்களின் செயல்முறைகளையும் உயரின்பநிலைக்கு ஏற்றும் பணி மேற்கொள்ளுவது இச்சரவொளி மணியின் செயலாகக் கொள்ளலாகும்.

(6)

1301. அண்டகோடி களெலா மரைக்கணத் தேகிக்

1302. கண்டுகொண் டிடவொளிர் கலைநிறை மணியே

(உ-வி) உலகில், தீ, ஞாயிறு, திங்கள், உடு, இவைகளின் கலைகள் முறையே, 64, 12, 16, 4 ஆகக்கூடி 96 கலைகள் ஆம். இப்படி ஒவ்வொரு பிரம்மாண்டத்திலும் ஒளிநிலை உண்டாம். இது பெரும் பிரபஞ்சத்தின் சிறுகூறேயாம். இதுபோல பல பகுதி கள் கூடியதே இந்த மா பிரபஞ்சமாகும். இந்தப் பலவாகிய

பிரபஞ்சக்கூறுகளையும். அதன்கண் விளங்கும் பலவாகிய அண்டங்களையும் காண்பது கண்ணால் மட்டும் ஆகாது. கருவிகளாலும் கூடாது. ஒளிவேகத்தில் பரவும். மின்காந்த அலைகளால் புலனாக்கப்படவே பலநூறு ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிடும். அதுவும் ஓரளவுக்குத்தான் அண்டநிலையை அறிய முடியுமாம். ஆகையால், இப்படி அறியக் கன பாடு பட்டும் பயன்படாது போவதால், யாவையும் முழுமையாகக் காண வல்லதும், அரைக் கணத்தில் கண்டுவந்து விளக்கவல்லதுமான அருள்ஒளியைத் துணை கொள்ளுதலே அறிவுடைமையாம்.

நமது அருட்பெருஞ்ஜோதி மணியோ கோடிசூரிய, சந்திர, நட்சத்திர ஜோதி ஒளிக்கு மேம்பட்டதாயுள்ளதாம். இதற்குக் கலை இவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாதாம். இதனால், இங்கு, இம்மணியைக் கலைநிறைமணி என்று கூறுகின்றார். இந்த நிறைகலைமணி நிலை பெற்றவன் அதுவாகி விளங்குகின்றான் நிறையருளாலே. இதன் ஒளியின் வேகம் உலகம் அறியாத ஒன்றாம். உலகம் இன்று ஒளி வேகத்தைத் தான், அதிகமான வேகம் என சோதித்து அறிந்து தெளிந்து கொண்டுள்ளதாம். அவ்வொளி வேகம் ஒரு (விநாடிக்கு) செக்கண்டிற்கு *1,86,000* மைல் அல்லது *300,000* கிலோமீட்டராகும். ஒரு விநாடிக்கு *1,86,000* மைல் செல்லக் கூடிய ஒளி, ஓராண்டில் செல்லும் தூரம், 186000 x 60 x 60·x 24 x 365 மைல்களாம். இதுவே ஒளிவருடம் எனப்படுவது. இப்படிப் பல நூறு, ஆயிரம் ஒளி வருடங்களுக்கு அப்பால் எத்தனையோ ஜோதி அண்டங்கள் உள்ளனவாம். இதனால் மனிதனின் முயற்சியால் எந்த அளவுக்கு அண்டங்களைக் கண்டுகொள்ள முடியும் என்று சிந்தித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். ஆனால் நிறையருளாலே நிறைகலைமணிநிலை யுற்று உணர்ந்தால் காண்பரிய அண்டகோடிகளை அறிதல் எளிதாம். அதுவும் அரைக்கண நேரத்தில் கண்டுகொள்ள முடியும் என்றால், இந்த ஒளியின் வேகம் யாதென்பது! இந்த உண்மையைத்தான் நம்பெருமான் மெய்யருள் வியப்பில் இங்ஙனம் கூறுகின்றார்.

"அண்டகோடி முழுதுங் காணும் கண்கள் எய்தியே
அங்கை கனிபோல அறிந்தேன் அவற்றின் உள்ள செய்தியே
பிண்டகோடி முழுதுங் காணப் பெற்று நின்னையே
பேசிப்பேசி வியக்கின்றேனிப் பிறவி தன்னையே."

என்றதால் உண்மை அறியலாகும்.

உலகிலுள்ள ஒளிக்கதிர்கள் புறப்பட்ட இடத்திலிருந்து நெடுந்தூரம் செல்லச்செல்ல, விரிந்து சிதறிப்போவதால், ஒளியும் சூடும் குறைந்து மறைந்து விடுவதால் நெடுந்தொலைவில் ஒளிரும் விண்மீன்கள் புலனாகாதுள்ளனவாம். இப்பொழுது அறிவியல் கண்டுள்ள "லாசர்" (LASER) ஒளிக்கதிர், சிதறுறாது நெடுந் தொலைவு பாய்கின்றது. இதனால் இவ்வொளி கொண்டு தொலை தூரத்திலுள்ளவைகளை ஒருவாறு சுத்தமாகப் படம் பிடித்துக் காட்ட முடிகின்றதாம். ஆனால், இதன் வேகம் முன் கண்ட 1,86000 மைலேதான். ஆகையால் ஆயிரக்கணக்கான ஒளி வருடத் தூரத்துள்ளவற்றைக் கண்டுகொள்ள முடியாதது முடியா ததுதான்.

(7)

1303. சராசர வுயிர்தொறுஞ் சாற்றிய பொருடொறும்
1304. விராவியுள் விளங்கும் வித்தக மணியே.

(உ-வி) உயிர் வர்க்கம் இருவகைப்படும். அவை, இயங்கிய லுயிர், (சரம்) நிலையியலுயிர் (அசரம்) என்னும் இரண்டு வகை யாம். இவ்வுயிரினங்களும், மற்ற பலவாகிய சடப்பொருள்களும் இப்பிரபஞ்சத்தில் எங்கும் தோன்றி விளங்குகின்றனவாம். எல்லா உயிரினவடிவங்களும் சரி, உயிரற்ற சடப்பொருள்களும் சரி, அகம், புறம் என்னும் இருநிலை கொண்டு விளங்குகின்றன வாம். நம் அருட்ஜோதியே, எல்லாம் ஆனது. அதாவது, எல்லா உயிர் வடிவங்களும், பொருள் வடிவங்களும் அருட்ஜோதியே ஆம். இதில் அகத்தே அருளும், புறத்தே ஒளியும் இருந்து, எத்தோற் றத்தையும் விளங்கச்செய்து கொண்டுள்ளனவாம். அகத்திருக்கும் அருட்சக்தியின் ஆற்றலால் ஆணையால் சூழ் ஒளியே எந்த வடிவமும் ஆவதாம். அகமிருக்கும் அருட்சக்தியின் ஆற்ற லால் அணுமுதற்பொருள்கள் யாவும் தோற்றுகின்றன. ஆனால் சடபூத அணு நிலையில், அகமிருப்பது, அருட் சத்தியாக விளங்குகின்றதில்லை. அவ்வருளில் விளைந்த கிரியா சக்திச் செயலாக ஒவ்வொரு சிற்றணுவகத்தும் இருக்கும் ஆற்றல் அவ்வணு வடிவத்தை நிலைக்கச்செய்யவும், பல பல அணுக்கள் சேர்ந்து வேறுவேறு பொருள்களாக உருப்பெற்று விளங்கவும், அப் பொருள்களின் சத்துக்கள் பல வித மாற்றத்தால் உயிரினங் களின் புறவடிவங்களாகத் தோற்றித் திகழ்கின்றனவாம். இதனால்தான் அருள் ஒளியே எல்லா வடிவமுமாய் விளங்கு கின்றது என அறிகின்றோம்.

எவ்வுயிர் வடிவும், எப்பொருள் வடிவும் அருள்ஒளியே எனக் கண்டோம். இவ்வடிவங்கள் மட்டுமல்ல, இவற்றின் அகத்தும், ஊடும், புறத்தும் அருள் ஒளியே நிரம்பி, அகண்ட வெளி முழுதும் அருட்பெருஞ்ஜோதியாய் விளங்குகின்றது உண்மையாம். இக் குறிப்பே, ''சராசர வுயிர்தொறும், சாற்றிய பொருள் தொறும் விராவியுள் விளங்கும்'', நிலை சுட்டப்பட்டுள்ளதாம். இந்த நிறை அருள் ஒளியை, அருட்பெருஞ்ஜோதி மணியின் விளக்கமாக அறிகிறோம். ஆனால், அது ஈண்டு வித்தகமணி விளக்கமாக விளம்பப்படுகின்றது. வித்தகம் என்றால், தெளிந்த ஞானமாகும்.

வித்தகமணி எனக் குறிக்கப்பட்டதன் உண்மை யாதென உள்ளுன்றி விசாரித்துணர்வாம். நம் அருள் ஒளியைத்தான் யாவுமாய் விளங்கக் காண்கின்றபோது, அகத்திருக்கும் அருள், புறம் சூழ்ந்த ஒளியையே பல்வேறு உயிரின வடிவங்களாகத் தோற்றுவித்து விளங்கச் செய்கின்றதாய் அறிந்தோம். உயிரற்ற பொருள் வடிவில், அருளேதான் கிரியாசக்தியாய் இருந்து இயக்குகின்றதாயும், உயிரின வடிவங்களில் அவ்வருளே உயிருணர்வாய் உணரப்படுகின்றதாயும்,. அவ்வுயிருணர்வு மனிதனில் மன அறிவாய் விளங்கி, ஆன்ம உண்மை அறியப்படும்போது அந்த அருளே ஆன்மஞானமாய்த் திகழ்கின்றதாம். மேலும் அந்த அருள்தானே ஆன்மசக்தியாய் வெளியுற்று அற்புத சித்திகள் செய்யவல்ல ஆற்றலாயும் விளங்குகின்றதாம். கடைசியாக அவ் வருள், அருளனுபவமாகவே வெளிப்பட்டு நித்தியானந்த வாழ்வு கொண்டு நிறைமனித சுத்த சன்மார்க்கியாய் நிலவுவதாம். முடிவான இந்நிலை அனுபவம் வெளியாக்கப்படவே, அந்த அகமன்னிய அருள் தன் நிறைஞானத்தால் உள்விளக்கம் அதிகரிக்க அதிகரிக்க புறவடிவத் தோற்றத்தைச் சடநிலையிலிருந்து, ஓரறிவுயிர் வடிவங்களாயும் அதிற் பல மாற்ற தோற்ற வடிவங்கள் கடந்து ஈரறி வடிவங்கள் பலவும், பின் படிப்படியாக உயர் பிறப்பு வடிவங்கள் பலவும், அவ்வக அருளின் நிறைஞான ஏற்பாட்டின் படியே வந்து வந்து சூழ்ந்து அனுபவங்கொள்ளச் செய்கின்றனவாம். இந்த ஞானத்தின் செயல், எவ்வளவு நுணுக்கமாகத் திறமையாக ஒவ்வொரு ஆன்மாவுக்கும் தேவையான உயிர் உடம்பு தடையுறாது வழங்கப்பட்டு வருகிறது என உணர்த்துகின்றதாம். இந்த ஞானச் செயல்முறைகண்டே நம் அருள் ஒளியை, வித்தகம்ணி யொளியாகக் குறித்துள்ளார் என உள்ளுணர்ந்து தெளிவாம்.

(8)

1305. மூவரு முனிவரு முத்தருஞ் சித்தருந்
1306. தேவரு மதிக்குஞ் சித்திசெய் மணியே

(உ-வி) அயன், அரி, அரன், ஆகியமூவர், ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் புரிதல் அவரவர்களின் இயல்பாக இருக்கின்றனவாம். முனிவர்களும், முக்த ஆன்மாக்களும், சித்த கணங்களும், விரித்துக் கூறப்படும் முப்பத்து முக்கோடி தேவர் களும் தத்தம் அருந்தவ முயற்சிகளால் ஓரளவு விசேட சக்தி பெற்று சித்தியோடு விளங்கிவிட்டு மறைகின்றனர். இவர்களுக் கெல்லாம் இவர்கள் இச்சித்த சித்திகளை அளித்தது நம் அருட் பெருஞ்ஜோதிமணியே.

வேண்டினர்க்கு, இச்சித்து வேண்டினர்க்கு, வேண்டியதை மட்டும் கொடுக்கும் இந்த மணி, ஏதும் வேண்டாது அருள்மய மானார்க்குத் தன்னையே தந்து, தன் மயமாக்கிவிடுகின்றதாம். இப்படி அருள் நிலையைச் சார்ந்து கொண்டு, அருள் ஒளி மணி யாகித் திகழ்கின்றவரே நம் திருவருட்பிரகாச வள்ளல் ஆவர். இதனால் இவர் எவ்வெவர் சித்தியும் தன்னகம் கொண்டு திகழ்கின்றார். இவர் போற்றிக் கொண்டுள்ள அருட்பெருஞ் ஜோதியே, இன்று அனைத்து சித்தியும் புரியவல்ல சித்திசெய் மணியாகத் திகழ்கின்றதாம்.

(9)

1307. தாழ்வெலாந் தவிர்த்துச் சகமிசை அழியா
1308. வாழ்வெனக் களித்த வளரொளி மணியே

(உ-வி) ஒன்பதாவதாக நம் அருட்பெருஞ்ஜோதியே வளர் ஒளி மணியென வழுத்தப்படுகின்றது. வளரொளி மணியாவது, நித்திய நிறைவோடு குன்றாது ஒளிரும் தீபச்சுடர் போன்ற தெய்வமணியாகும். இறையருள் ஒளியே, இப்படித்தான் அகண்டவெளி முற்றும் நிரம்பி, மங்குதலும் மறைதலும் இல்லாது தன் ஒளிக்கதிர்களைச் சதா பரப்பிக் கொண்டேயிருக்கின்றதாம். அவ்வொளிக்கதிர் வீச்சே ஐந்தியற் பிரபஞ்சம் எல்லாமாய்க் காரியப்பட்டுக்கொண்டே யிருக்கின்றதாம். இவ்வொளிப்பரவ

லால், ஆன்மாவைச் சூழ தேகங்கள் உருவாகி வளர்வதும், நீங்கி அழிந்து போவதுமாய் இருக்கின்றனவாம்.

ஒருவன் இவ்வுலகில் தேகப்பற்று நீங்காது, கீழான புல னிச்சை வாழ்வில் உழன்றுகொண்டிருக்கும் வரையும், பலவேறு அவத்தைகள் அடைந்தும், மேலும் மேலும் பிறவிகள் வருவதும் போவதுமாய் இருக்கும். இப்படி சகமிசை தோன்றுவதும் அழிவதுமாய் இருக்கும் தொல்லையைத் தவிர்த்துக் கொள்ளு வதற்கு உள் விளங்குகின்ற அருள்சேர் வாழ்வு பெறப்பட வேண்டும்.

அருள் உணர்விலே வருவதுதான் உண்மையான இன்பமாம். அக அருள் ஒளி என்றும் ஒளிவீசிக் கொண்டே யிருத்தலான், இந்நிலையை அனுபவபூர்வமாகப் பெற்றுக் கொள்ளுகின்றவன் கூட எப்போதும் விளங்கிக் கொண்டேயிருப்பது இயற்கையாம். இத்தோடு இவ்வனுபவி, சகல நன்மைகளும் பெற்று, என்றும் எவ்வகையிலும் தாழ்வுறாமலும், அழிந்து படாமலும் விளங்கிக் கொண்டேயிருப்பவனாகின்றான். இப்படியான உயர் சிறப் புடைய வாழ்வு நம் வள்ளலுக்கு அருளிய அருட்பெருஞ் ஜோதியை வளர் ஒளி மணியே என்கின்றார். ''தாழ்வு எலாம் தவிர்த்துச் சகமிசை அழியா வாழ்வு எனக்கு அளித்தது'' என் கின்றார்.

(10)

1309. நவமணி முதலிய நலமெலாந் தருமொரு
1310. சிவமணி யெனுமருட் செல்வமா மணியே

(உ-வி) மேலே கூறப்பட்ட பரம்பர மணிமுதல், வளரொளி மணி வரையுமான நவமணி இயல்கொண்டு விளங்குவது நம் அருட்பெருஞ்ஜோதிமணியே ஆம். இதுவே, நமக்கு எல்லா நன்மையும் தருகின்ற ஒப்பற்ற சிவமணி என்று கூறப்படும் அருட் செல்வமாமணியும் ஆகும். இந்த நவமணி உண்மை கொண்ட செம்பொருளை (கடவுளை)த்தான் செந்தமிழ் கண்ட சித்தர்கள் சிவமணி என கற்பித்தனர் முன்பு. இவ்வருட் செல்வமணிக்கு ஒப்பாக எவ்விடத்தும் எக்காலத்தும் வேறொரு நன்மணி இல்லை யாம். சங்கநிதி, பதுமநிதி முதலிய நவநிதிகளும், கற்பக

தருவும், காமதேனுவும், சிந்தாமணியும், தேவாமிர்தமும் நம் அருட்பெருஞ் ஜோதிமணிக்கு நிகராகாவாம். இன்னும் உல கறிந்த நவரத்தினக்கற்களையும் நவமணி என்பர். இது விண்ணின் றொளிரும் நவக்கிரகங்களின் சாரத்தால் வரும் வாழ்வில் விசார தோஷங்களை எல்லாம் போக்கி நலம் தரும் என்பது சோதிட நூலார் கூற்று. இக்கூற்றினை நம்பி, நவரத்தின மோதிரமும், நவகண்டி மாலையும் பொருளுடையோர் செய்தணிந்து பார்க்கின் றனர். இவ்வகை நவக்கிரக அனுக்கிரகம் பெறுவோர் நவ நிதியம் பெற்று நவகண்டம் ஆள்வார்கள் என்று புனைந்து கூறி யுள்ளனர். பொருள் உடையார்க்கே இந்த நலம் கிடைக்கும் போலும்! ஏழையர்க்கு இந்நலம் எப்படிக் கிடைக்கும்? கிடைக் காது போலும்! ஆனால் நம் இறைவன் ஏழைபங்காளனாய் இருத் தலின், இந்த ஏழையர்க்குத்தான் அருட்செல்வ நலம் எல்லாம் தருவானேயன்றி, மருட்பொருட்செல்வர்க்கு அருள்நலம் அரு ளான் என்பது உண்மையாகும்.

நமது கடவுள் சிற்றுருவம்தான், ஆன்மாவாகிப் பிரணவா் கார சிற்சபையாய் விளங்குகின்றது. இங்குதான் கடவுள் அனு பவமெல்லாம் பெறப்படுவதாம். ஓங்காரத்தின் உட்பொருளாய் விளங்கும் அருள் தானே இந் நவமணி யுண்மை கொண்டு விளங்கி அதற்கதற்குரிய சித்தி நலங்களை எல்லாம் வழங்குகின்ற தாம். இவ்வுண்மை விளக்கமே இதற்கு முன்னுள்ள ஒன்பது இணை அடிகளில் வைத்து ஓதப்பட்டுள்ளதாம். இப்பத்தாம் இணையடியில் முழுக்கருத்தையும் தொகுத்து வழங்கிவிட்டுள் ளார்.

அருட்பெருஞ்ஜோதியே அருட்செல்வ மாமணியாகக் கொள்ளப்படும். ஒருவனுக்கு எல்லா நன்மையும் இன்ப வாழ்வும் உண்டாக வேண்டுமானால், அருளும் பொருளும் வேண்டும் என்கின்றனர். அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதும் உண்மைதான். ஆனால், இன்றைய உலகம், உலகில் உள்ள மந்த மதி உடைய மாந்தர்கள் மருளறிவால் உண்மையைச் சிறிதும் அறியாது, எது மெய்யான அருள், எது மெய்யான பொருள், என்பதைச் சிறிதும் புரிந்து கொள்ளாமல்தான், ஆவல் மயக்கோடு, புலனிச்சைப் பெருக்கோடு எந்த வகையிலும் பெரும் பொருள்தேடி அழிவுறுகின்றனர். அந்த அழிபொருளைக்

கொண்டுதான் அருளல்லாத அருளைப் பெறவும், அந்தப் பொருளை அள்ளி வீசுகின்றனர். அதனால் கிடைப்பது அருள் இன்பமல்ல, மருள் மயக்கமேயாம். ஆனால் நம் சுத்த சன்மார்க்க ஒளியில் அருட்பெருஞ்ஜோதி வெளிப்பட்டிருக்கின்றது. இது ஒன்றே அருளும் பொருளும் நிரம்பிய ஒன்றாக இருக்கின்றதாம். இதனை அருள் விசாரத்தால் அறியவும், அறிந்து அகநின்று வாழத் தொடங்குங்கால், அவ்வருளின் இயல் உரிமையாக வேண்டும் எல்லாப் பொருளும் வந்து உதவிக்கொண்டே யிருக்கும். ஆகவே, அருட்பெருஞ்ஜோதியே மெய்யருளாயும், பொருளாயும் சன்மார்க்கிக்குக் கிடைக்கப்பெற்று அவ்வுலகிலும், இவ்வுலகிலும் மற்ற எவ்வுலகிலும் எக்காலும் பெருஞ்சுக வாழ்வில் விளங்குவான் என்பது உண்மையாம். அருட்செல்வம் என்பதும், அருட்பெருஞ் ஜோதி என்பதும் ஒன்றே என இன்று தெளியலாகின்றது.

218. மந்திரம்

(1)

1311. வான்பெறற் கரிய வகையெலாம் விரைந்து
1312. நான்பெற வளித்த நாதமந் திரமே

(உ-வி) அனாதி நித்தியமாய் உள்ளது அகண்டவெளி. அவ் வெளியில் நிரம்பியுள்ளது ஆகாசம். அந்த ஆகாசம் தன்னில் பிரியாது இரண்டறக் கொண்டுள்ளது மின் இயக்க சக்தியாம். ஆகவே, அகண்டவெளி முற்றும், மின்காந்த அலைகளினால், நிரம்பியிருந்துகொண்டு, இந்த மா பிரபஞ்சத்தின் எல்லாப் பொருள்களையும், உயிரினங்களையும் தோற்றுவித்து, விளங்கச்செய்து கொண்டிருக்கின்றதாம். இதில், ஆகாசநிலை, அகரமாகவும் இயக்க ஆற்றல் உகரமாகவும், மின்காந்த ஒளிநிலை மகரமாகவும் கூடி (அ+உ+ம்=) ஓம் ஓம்....என ஒலி ஒளி மயமாய் நிறைந்துள்ளதாம். இது தான் பரநாதநிலைமேல் திகழ் பெருஞ்ஜோதி மலையாக விருக்கின்றது. இது அக அனுபவத்தில் கண்டு கொள்ளப்படுவதாம் இந்த ஓம் என்னும் இயற்கை ஒலியே மந்திரமாக, மூல மந்திரமாக உள்ளதாம். இதுவே, பிரணவம், முளை எழுத்து எனவும், பீஜமந்திரம் எனவும் கூறப்படும். இந்தப் பிரணவமாகிய ஓங்காரத்திற்கு அடிப்படை ஆதாரமாயுள்ளது ஆகாசத்தை யுணர்த்

தும் அகர எழுத்து-மூலாங்க பிரணவம் என்று மொழியப்படு கின்றது. ஆகாசமாகிய வானம், மாதிரம் என்றும், இதில் உரு வாகி நிறைந்து நிலைத்து விளங்கிக்கொண்டுள்ள ஓம்-மந்திரம் என்றும் கூறப்படுகின்றன. அகண்ட வான்பெரு நிலை கடவுட் பேரம்பலமாகவும், ஓம் மந்திர ஆன்ம சிற்றணுநிலை கடவுட்சிற்றம் பலமாகவும் விளங்குகின்றனவாம். ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப'' இது மந்திரத்தின் தொல் இலக்கண விளக்கம்.

வான்வெளியிலே, மேறபடி ஓங்கார நாதஜோதியாம் மின் காந்த இயக்கம் இயற்கையில் விளங்கிக்கொண்டேயிருந்து வரு கின்றது. இதனால்தான் இந்தப் பிரபஞ்சத் தோற்றமும் இதன் கண் அனைத்து உயிர்ப்பொருள்களின் தோற்றமும் வெளியாகிச் செயல்பட்டு வருகின்றனவாம். இந்த இயற்கைச் செயலால் இந்த உலகம் உதித்து, இதில் உயிர்களில் மேம்பட்ட மக்களினம் தோன்றி, இம் மக்களிலே ஆன்மக் கடவுள் ஞானம் தோன்றிட எத்தனை கோடி ஆண்டுகள் ஆகியுள்ளனவோ யாரே அறிவர்! இந்த ஆன்மஞானம் பெறப்பட்டபோதுதான் மறை பொருள் உண்மையும், ஓங்கார ரகசியமும் ஆற்றலும் தவமுயற்சிகளால் பெற்ற ஆன்றோர் மந்திர சாத்திரங்களையும், மறையாகமங்களை யும், தந்திர கலைகளையும் ஆக்கி வழங்கினர். இவைகளைக் கொண்டு மக்கள் சமுதாயம் சமய மதங்களாலும், கொள்கை கோட்பாடுகளாலும், பிற பல சாதனைகளாலும் சில நன்மைகளை அடைந்துள்ளது என்றாலும், எல்லாவற்றிற்கும் மேலான, மூல மான தனித் தலைமைப் பெரும்பதி ஆகிய ஒன்றான எல்லாம் வல்ல அருட்கடவுளை அறிந்து ஏற்காததினால், பல கேடுகளும், துன்பங்களும் அழிவுகளும் அதிகம் விளைந்துள்ளனவாம். மக்கள் எல்லோரும் அருள் ஒளியில் ஒத்துவாழற்கான சுத்த சன் மார்க்கம் தோன்ற வேண்டியிருந்தது. இப்பொழுதுதான் அது வெளியாகியுள்ளதாம்.

உலகிற்குப் புத்தருள் மார்க்கத்தைக் கொண்டுவந்துள்ளவர் நம் திருவருட்பிரகாச வள்ளலாரே. முன்னெறி எதனாலும், எவ் வகையினாலும் அறிந்து அடைதற்கரிய அழிவில்லாப் பேரின்ப சித்திப் பெருவாழ்வை, இவர்மூலமாக உலகமெல்லாம் பெற உள்ள தாம். இவர் சுத்த சத் விசாரத்தால் தம் உளத்தே கண்டு கொண்டது, அருட்பெருஞ்ஜோதியாம் உண்மைக்கடவுளை. இந்தக்

கடவுட் ஜோதியைத்தான், பிரணவநாத ஜோதியாகவும், வான் நிறைந்த இயற்கை மின்னொளிச்செறிவாகவும், அருந்திறல் சக்தி தரும் ஆன்ம சிற்ஜோதியாகவும் கண்டும் ஒருவாறு அடைந்தும், சித்திகள் பல புரிந்து களித்திருந்தும் மறைந்துவிட்டனர் முன் னோர். இவை எல்லாம் வான் அருளிய பேறுகளாம். இன்று திருவருளால் உள்ளொளி நிலையிலே, தான் அவ்வொளிமயமாகி நின்று நிறையருளாலே சர்வசித்தி வல்லபத்தோடு வாழும்நிலை அடைந்துள்ளார் நம் பெருமான். அருட் பெருஞ்ஜோதியை நாத மந்திரமாகக் குறிக்கின்றார்.

நாதமந்திரமாவது, உள்விளங்கும் கடவுட்ஜோதியின் உண் மையை விளக்கும் சொற்பெருக்காம். உள்ளொளியினை ஊமை எழுத்து என்றும், மௌன மந்திரம் என்றும் கூறுவர். அவ் வொளியை விளக்க வரும் ஒலிமொழியைப் பேசும் மந்திரம் என்பர். வள்ளல் அனுபவத்திற்கண்ட உள்ளொளியைத்தான் ஒளி மந்திர வடிவாகப் பெற்று, அதனையே புறத்தில் அருட் பெருஞ் ஜோதியெனத் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார். பன் னெடுங்காலமாக வான்இயலால் பெறற்கு அரிதான அழியாப் பெருவாழ்வும் அனந்தானந்த சித்திஅனுபவமும் வழங்கிவிட்டுள்ள தாம் இந்த அருட்பெருஞ்ஜோதி நாதமந்திரம்.

பிரணவமே மந்திரங்கட்கு மூலமாக இயற்கை வான்வெளியில் ஒலித்துக்கொண்டுள்ளதால், புற உலகத்தில், அழகு, பெருமை சிறப்பு, நலம் ஆகியவற்றிற்குக் காரணமாம் மழை முதலான யாவையும், பிரபஞ்சம் நிறைந்த இம் மந்திர சக்தியால் உண்டா கின்றனவாம். இதனால் வான் என்பதற்கு இந்த அழகு, பெருமை, சிறப்பு, நலம், மழை, முதலிய பொருள் குறிக்கப்பட்டுள்ளன. இவைகளை முழுவதும், இவற்றிற்கு மேலேயுள்ள நிறையருள் அனுபவத்தை மிக விரைவில் கொடுப்பது இந்த நாத மந்திரமாம் அருட்பெருஞ்ஜோதி. அருட்பெருஞ்ஜோதியை உளம் கொண்டு, அருட்செயலோடு வாழ்ந்தால் எல்லா நலமும் இன்பமும் பெற லாம். மற்றபடி அருள்நிலை பெறாது உலகநலம் கோரிப் புற வேள்வி பல புரிந்தும் பெறப்படுவது அற்பப் பயனாகும். உள் ளொளி விளக்கம் செய்வதற்கான முறையில் வாழ்தலே சாலச் சிறந்ததாம். நாதமந்திரத்திற்கு அடிப்படையான ஜோதிமந்தி ரத்தை விந்து விளக்கத்தைக் கண்டு கொள்ளவேண்டும்.

அருள் ஒளியே, அக ஆன்ம உண்மைக் கோயிலாம். இது ஓங்காரமாய் இருத்தலின், மந்திரம் என்ற சொல்லுக்கும் கோயில் என்ற பொருள் குறிக்கப்படும். முடிவில் கடவுணிலையில் முழுதும் தோய்ந்தொன்றி சாயுச்சியானுபவம் கொண்டிலங்கும் சுத்த சன்மார்க்கி மந்திரவடிவில் விளங்குவதாய்க் கூறப்படும். இதுவே சுகானந்த வடிவமுமாம். இந்த மந்திர வடிவப்பேரின்ப வாழ்வைக் குறிக்கோளாய்க் கொண்டு அடைவதுதான் ஆண்டவர் ஆணையா கும். மற்ற அருள்நிலை சேரா, அரும்பெரும் மந்திரசித்தி பெற்று மந்திரேசுவரர் என்ற பட்டம் ஏற்றோரும் நிலை இன்ப வாழ்வு பெறாது வீண்போயினர் என்பது உண்மையே.

(2)

1313. கற்பம் பலபல கழியினு மழியாப்

1314. பொற்புற வளித்த புனிதமந் திரமே

(உ-வி) மந்திரங்கள் பலவாகக் கற்பிக்கப்பட்டுள்ளன. ஓம் என்னும் மூல மந்திரத்தைப் பிற மந்திரங்களுடன் கூட்டிச் சொல்லுவர் பலர். மந்திரங்களால் பல சக்தி சித்திகளை அடைவதுவே லட்சியமாம். மனதைச் சிதறவிடாது ஓர்மைப்படுத்துவதால் சக்தி அதிகரித்துப் பெருஞ்செயல்களை எளிதில் புரிந்து விட முடிகின்றதாம். இதனால் மனதைத் திடப்படுத்துவது மந்திரம் என்பர் சிலர். இந்த அக ஓர்மையில் நிலைத்துக்கொண்டிருப்பவனை பிற சக்திகள் எதுவும் தாக்கவோ, தாக்கி வெற்றிகொள்ளவோ மாட்டா. ஆகையால், மந்திரம், செபிப்போரைக் காப்பது என்றும் பொருளுரைப்பர். என்றும் எதனாலும் அழிவுறாது மன்னி (நிலைபெற்று) திரமாக சக்தி சித்தியோடு விளங்கச்செய்வது மந்திரம் எனச் சுத்த நெறியிற் கண்டுகொள்ளலாம். இதனையே நம் வள்ளலார் இங்கு விரித்து விளக்கிக் கூறுகின்றார். கற்பம் என்பது பல வருடங்களாம். அப்படிப் பல பல கற்பம் என்றால் எத்தனை ஆண்டுகள் என்று கணக்கிட்டுக் கூறுதல் கூடாதாம். இப்படி அளவுகடந்த நெடுங்காலம், அழியாப் பொற்பு(அழகு)கொண்டு விளங்கும்படி அருள்பாலித்து உள்ளதாம் இந்தப் புனித மந்திரம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி. புனிதம் என்ற சொல்லே, பகர மெய்யும் உகர வுயிரும் சேர்ந்து ''பு'' என்றாகி, அழகிய வடிவும், அருள் ஐந்தியல் ஆற்றலுங் கொண்ட

தாய், நிதமும் என்றென்றும் விளங்கும் உண்மையைச் சுட்டுவ தாம். பகரம் என்றாலே அழகு என்று பொருள்படும். ஆகை யால், பகரமெய் எழில் தேகத்தையும் குறிப்பதாம். உள்வளர் ஒளியே நமக்குப் புனித மந்திரமாக என்றும் புகட்டப்பெற்றுள் ளோம். ஆனால், அதனைப் புரிந்துகொள்ளாமல்தான், பிற மந்தி ரங்களை நாடிச் செல்லுகின்றனர் உலகியலார். அவற்றால் பெறப் படுவதெல்லாம் விரைவில் அழிவுறுவனவேயாம். அருட்பெருஞ் ஜோதியாம் புனித மந்திரம் ஒன்றே அவனை நித்தியானந்த வாழ்வில் என்றும் விளங்கச்செய்ய வல்லதாம்.

இந்த அகவல் அடிகள் இரண்டும், அழியா இன்ப அனுபவ சித்தியைக் குறிக்கின்றதாகக் கொள்ளலாம். இதற்கு ஆதார மாகிய கருத்து என்னும் வித்து முன் 89, 90-வது அடிகளில் ஊன்றப் பெற்றுள்ளதாம். அது,

> "கற்பம் பல பல கழியினு மழிவுறா
> அற்புதந் தருஞ்சபை அருட்பெருஞ் ஜோதி"

என்று ஓதப்பெற்றுள்ளதாம். இதில் கற்பம் பல சென்றாலும் அழிந்துபடாது விளங்கும் அற்புதத்தை அருட்பெருஞ்ஜோதி ஆகிய சபை வழங்க வல்லது என்ற குறிப்பை யுணர்த்தினார். இங்கோ, அந்த அருட்பெருஞ்ஜோதி ஞான சபையே புனித மந்திரமாகி விளங்கி என்றும் அழியாத் திருவுருவை வழங்கி விட்டது என்று அனுபவ சித்தையே வெளிப்படையாகக் குறித் துள்ளார் என அறியலாகும். ஆகவே, இந்த அருட்பெருஞ் ஜோதியை மகா மந்திரமாகக் கொண்டு எவ்வுலகத்தவரும் உய்வார்களாக.

(3)

1315. அகரமு முகரமு மழியாச் சிகரமும்
1316. வகரமு மாகிய வாய்மைமந் திரமே

(உ-வி) இங்கு மந்திரம், வாய்மை மந்திரம் எனக் கூறப் படுகின்றது. மறைமொழிவாசகம்தான், மந்திரச் சொல்லாக வெளியாகின்றது. இப்படி வாய்மை மந்திரம் வெளியாகின்ற போது, அகத்தே உள்ள ஒளிநிலை உண்மை மந்திரமாகவும் புறஞ்

சூழ்ந்த உடல், மெய் மந்திர வடிவாகவும் விளங்கும். இது சுத்த சன்மார்க்க அனுபவம்.

அகரமும் உகரமும் புறவான்நிலையில் இயற்கையில் விளங்குவன. இதே புற உண்மை, நம் புற ஜீவ தேகத்திலும் விளங்குகின்றதாம். இதில், அகரம்-எட்டாய், எண்சாண் உடலாய் இருப்பதையும், உகரம்-இரண்டாய் அநித்திய நித்திய உயிர் ஆற்றலாய் உள்ளனவாயும் அறிகின்றோம். ஓம் என்பதில் அகரமும் உகரமும், மகர மெய்யும் உள்ளன. இந்த மகரமெய்யே இந்த உயிர் உடம்புக்குள்ளிருக்கும் கடவுளான்ம அணுவைச் சுட்டுவதாம். மனிதனின் புற உயிருடம்பு அக ஆன்மாவின் விரி நிலைத் தோற்றமேயாம். ஆகையால், காயம் என்பது ஆகாயம் என்றே அறிய வேண்டும். ஆன்ம வடிவமாய், ஓங்காரமயமாய் உள்ளது அழியாத மனித சொரூபமாம். இந்த ஆன்ம ஆகாய வடிவம் இயற்கையிலே அழியாது இருந்துவந்த போதிலும், மகர மெய்யுணர்வால் அவ்வுள் நிலையைச் சிதாகாசமாய்க் கண்டு நின்று வகரமாகிய அருட்பணி புரிந்துகொண்டேயிருத்தல் வேண்டும். இங்கு ஏற்படுகின்ற இன்பமே சிவானுபவமாகக் கண்டிருந்தனர் முன்னோர். அந்தச் சிவானுபவம், ஒருவனுக்கு உள்ளொன்றியநிலையில் வெளிப்பட்டு விளங்கினது உண்மை தான். ஆனால், அவ்வனுபவத்திலே ஆழ்ந்து மூழ்கினவன், அனு பவம் கெட்டு வாழ்வற்றுப் போனான்.

சிவானுபவம் மனிதனைத் தன்னில் ஐக்கியப்படுத்தி மறைந திடச் செய்துவிட்டது. அந்தச் சிவமே இன்று அருட்பெருஞ் ஜோதியாக, அருளின் துணையால், சிவமயமாய், நாம் இருப் பதை யுணர்ந்து அந்நிலைநின்றே அருளாலே வாழும்போது, தான் மறைந்திடாது, தான் சிவஜோதியிற் கரைந்து மறைந்து போகாது, தன்னில் அச்சிவமே பூரணமாய்க் கலந்து கொண்டு வாழ்வே அழியாத சிவானந்தப் பேரின்பமாக என்றும் விளங்கச் செய்து விடுகின்றதாம். இதுதான் அருட்பெருஞ்ஜோதி என்னும் வாய்மை மந்திரத்தால் சித்திக்கப்பெற்றுள்ள நித்தி யானந்த நிலையாகும்.

(4)

1317. ஐந்தென எட்டென ஆறென நான்கென

1318. முந்துறு மறைமுறை மொழியுமந் திரமே

(உ-வி) அகவுண்மையை அறிவால் உள்ளொன்றிக் கண்டவர்கள் தாம் உலகுயிர்க்காரண இறையொளியையும், அதன் இயலும் செயலும், பயனும் ஓரளவு யூகித்தும், அருள் ஏகதேசத்தால் ஒருவாறு உணர்த்தப்பெற்றும் அறிந்தவைகளை எல்லாம் அக அனுபவத்திற்குத்தக ஒலிதரு மொழியால் வெளிப்படுத்த முனைந்தார்கள். அவர்களின் அரிய முயற்சியே கடவுள் உண்மையை அடிப்படையாய்க் கொண்ட தமிழ் மொழி யாகும். தமிழின் எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்னும் ஐந்திலக்கணங்களும் கடவுளை யுணர்த்தவே ஆக்கப்பட்டன. இலக்கணம், இலக்கியம், இறையுண்மையை விளக்கவும், அதனைக் குறிக்கோளாய்க்கொண்டு அடையவும் என்றே இயற்றப்பட்டனவாம். இதற்குமேல் உள்ளொளியின் நேரடித் தொடர்பு ஏற்படவும், அதனால் அரிய ஆற்றல்கள் பெறவும், அதுகொண்டு அற்புத சித்திகளை அடைந்து ஆனந்திக்கவும் என்றே மந்திரங்களையும் துதிமுறைகளையும் ஆக்கிக் கொடுத்தனர். இம்மந்திர சித்திகளைத் தீவிர முயற்சியால் அறிவைக்கொண்டு அடைந்திட முடிந்தன. எனவே, பணிவும் அன்பும் இல்லாத அகங்கார சித்தமுடையோர்கள் பலர் இம் மந்திரசித்திகளைப் பெற்று, மக்கள் சமுதாயத்தை மயக்கி அருள்நெறியை ஏற்கச் செய்யாது அழிவுறவே செய்து விட்டனராம். அருள் ஒளியால் மந்திரங்களின் ரகசியத்தையும், அவற்றின் மூலம் பெறப்படும் அற்ப சித்திகளின் உண்மையையும் அறிந்து, பற்றாது விடுத்து, மேற் செல்ல வேண்டும் ஒவ்வொருவரும்.

மந்திரங்கள், திருவைந்தெழுத்து (பஞ்சாட்சரம்), எட்டெழுத்து (அஷ்டாச்சரம்) ஆறெழுத்து (ஷடாட்சரம்) நான்காகிய (ஐயுங், கிலியும், சௌவும், ரீம்) பீஜமந்திர ஒலியும் முக்கியமென்ப. இவை போக பலர் பல எழுத்துக்களைக் கூட்டி, அக அனுபவத்தைக் காணப் பல மந்திரங்களை ஆக்கித் தந்துள்ளனர். இம் மந்திரங்களின் உண்மை விளக்கமும், அனுபவ அடைவும் உலகியலில் சிறு சிறு சித்திகளைப் பெற உதவுவனவாம். பழைய மறைமொழிகளின் உண்மை அறிவது கடினம். அறிந்தாலும் அவற்றால் அடையப் பெறும் பெருஞ்சித்திகளும் பொதுச் சமுதாய வாழ்வுக்கு நலம் பயப்பதாய் இல்லையாம். ஆதலின், அவைகளை அதிகம் துருவிப்பார்த்து ஆகவேண்டியது ஏதுமில்லை. அருள் உண்மை அறிந்து ஏற்று வாழ்ந்தால் எல்லா நன்மையும் பெறலாம்.

(5)

1319. வேதமு மாகம விரிவுக ளனைத்தும்
1320. ஓதநின் றுலவா தோங்குமந் திரமே

(உ-வி) அருள்ஒளி நிறைவே எல்லாம் வல்ல கடவுள் உண்மையாக இருக்கின்றது. இந்த இறையுண்மை அருளால் தான் வெளியாக்கப்படவும், அனுபவத்தில் ஏற்கப்படவும் இருக்கின்றது. அப்படி இருக்க, அறிவாலும், பிற செயல்முறைகளாலும் அந்த மெய்ப்பொருள் அனுபவம் எப்படிப் பெறமுடியும்!

கடவுளை, வேதமந்திர சொரூபியாகத் துதிக்கின்றார்கள். ''வேதமந்த்ர சொருபா நமோ நமோ'', என்று சொல்லிவிடுவதால் கடவுள் உண்மையைக் கண்டு கொள்ள முடியுமா? அதன் பொருள் என்ன எனப் பார்ப்போம். ஓங்கார உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான், அகர, உகர, மகரத்திற்காக ரிக், யசுர், சாமம் என்னும் மூவேதங்களையும், ஓங்காரமந்திர நாதவிந்து விளக்கப் பகுதியாக அதர்வணத்தையும் ஆக்கினர் என்ப. இவ்வேத முடிவை வைத்து வேதாந்தம் என்னும் உபநிடதங்களைக் கூறியுள்ளனர். வேதமெய்ப் பொருளை அனுபவத்திற்குக் கொண்டுவர உரை நூலாக ஆகமங்கள் பல இயற்றியுள்ளனராம். வேதங்கள் நான்கு எனவும், ஆகமங்கள் (சைவ ஆகமங்கள்) இருபத்தெட்டு எனவும், அவற்றை மேலும் விரித்து விளக்கவே புராணங்கள், இதிகாசங்கள், பல பல இயற்றியுள்ளனர். இவைகளாலெல்லாம் கடவுள் மந்திரத்தைக் கண்டுரைக்க முடியாது என்பது உண்மை. அவைகளை ஓதினதால் அருட்பெருங்கடவுள் விளக்கம் அறிந்திட ஒருகாலும் சாத்தியப்படாது. எவ்வளவு காலம் வேதாகமங்களையும், பிற கலைகளையும் ஓதினாலும் காண்டற்கரிதாய், எட்டாத பொருளாய் விளங்குவது நம் அருட்பெருஞ்ஜோதி மந்திர சொரூபம். ஆகையால், அருளடையமுயன்று உள்ளத்தில் தயவு பெருகினால், அக அனுபவத்தில் விளங்கும் அம்மந்திரத்தின் அனுபவப்பொருள்.

இம் மந்திர உண்மையை விரித்து விளக்கம் தருவது, வள்ளலார் மகா உபதேசத்தில் காணப்படுகின்றது. அது,

அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி''

என்பதாம். இதில் அருட்பெருங்கடவுள் உண்மை எப்படி விளங்குகிறது; அதனை எப்படி அடைவது? அதனால் அடையப்பெறும் பேரனுபவ நிலை யாது என்பனவெல்லாம் இம்மந்திர வாசகத்தில் வெளியாக்கப்பட்டுள்ளது. எனினும், இதனை எவ்வளவு முறை ஓதினாலும், ஆய்ந்தாலும் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. சுத்த சத் விசாரத்தால் ஒருவாறு உண்மையுணர முடியும். அவ்வுண்மை கொண்டு அக நின்று வாழ்ந்தால்தான், இம் மகாமந்திரத்தின் அனுபவப் பொருள் கண்டடைய முடியும். சத் விசாரத்தாற் கண்ட மெய்ப்பொருளை ஈண்டு கூறமுடியும். யாதெனில் நம் அருட்பெருஞ்ஜோதியின் உண்மை நமது உள்ளத்தும், உயிரினும், உடலினும் நிரம்பியுள்ளதாம். இம்மூவிடத்தும் நிரம்பியுள்ளது அருட்பெருஞ்ஜோதிதான், என்றாலும் உள்ளத்தில் அருளாக மறைந்தும், உடலில் ஒளிசெய் வடிவாக நிறைந்தும் உயிருணர்வில் அருளும் ஒளியும் கூடிய ஒன்றாய்த் திகழ்வதாக உணரப்படுவ்தாயும் இருக்கின்றதாம். இக் கருத்தே, முன்னும் பின்னும் உள்ள அருட்பெருஞ்ஜோதி என்பதில், முன்னுள்ளது அருளாயும், பின்னுள்ளது ஒளியாயும் இருக்க நடுவுள்ள அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்பதுவே, அனுபவத்தில் விளங்கும் அருள் ஒளியின் நிலையாயும் உள்ளனவாம். இவை விசாரத்தால் தெளியப்படும். மேற்கொண்டு அருளனுபவ வாழ்வில் விளங்கும்போதுதான் இறைநிலை வாழ்வு சித்தித்ததாகும். ஆகவே இந்த மந்திரம் அருளனுபவத்தால் மட்டும் சித்திக்கின்ற ஒன்று என்று தெளிந்துகொள்ளலாகும்.

219. மருந்து

(1)

1321. உடற்பிணி யனைத்தையு முயிர்ப்பிணி யனைத்தையும்
1322. அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே

(உ-வி) மணி, மந்திரம், மருந்து, இவை மூன்றும் மனித வாழ்வில் உண்டாம், பலவாகிய கேடுகளையும், குறைபாடுகளையும், தடைகளையும் தவிர்த்துக் கொண்டு மேலான இன்பநிலை எய்த உதவுவனவாம். இந்த மருந்தும், தூல, சூக்கும, காரண தேகங்களின் கேட்டை விலக்கும் பொருளாய் இருக்கவேண்டும். புறவுடற் பிணி தீர சுத்த (அருள்) சத்துவ உணவு மருந்தாம், சூக்கும

உடற்கு அருள் உணர்வு மருந்தாம். காரண தேகத்திற்கு அருள் உறவு மருந்தாம். மருந்து என்ற சொல், ம்+அருந்து என விரிந்து விளக்கும்போது அறியப்படுவது மகரமெய் ஜோதியே அருட்ஜோதியாய் எங்கும் யாவுமாய் இருத்தலை யுணர்த்துவ தாகும். அதனை உட்கொள்ளுதலே அருந்தலாகும். இதனால் தான், உடல் உணவிலும், உயிர் உணர்விலும், ஆன்ம உறவிலும் அருள் விளங்குவதால் எல்லாப்பிணியும் நீங்கி இணையில்லா இன்ப வாழ்வு பெறலாம் என்பது கருத்து.

உடற்பிணிக்குக் காரணம், திரி தோஷம் என்னும் முக்குற்ற மாகிய, வாத, பித்த, சிலேத்தும அக்கிரம, அதிக்கிரமங்களால் ஏற்படும் நிலையே நோய்களுக்குக் காரணமாம். இவ்வுடற் பிணி களைப் போக்கிக்கொள்ள திரிதோஷ சமனப் படுத்தும் சுத்த உண்டியே மருந்தாக அமைகின்றன. தாவர மூலிகைப் பொருள் களும், உலோக சத்துப்பொருள்களும், உப்பு வகைகளும் முறை யோடு பக்குவப்படுத்தி ஏற்றபடி உண்பதால் பிணிகளை நீக்கிக் கொள்ள முடியும். இதனால் இம்மருந்து அருந்தி சுகம்பெறுதல் இயற்கையுணவு முறையிலேயே அமைந்திருத்தலின், பிணியே ஏற்படாது, அப்போதப்போது காத்துக்கொள்ளக்கூடும். இயற் கைக்கு மாறுபாடான உண்டிப்பழக்கத்தால் புதிய புதிய நோய்கள் தோன்றவும் வேறுவேறான மருந்துகளைக் கண்டு பிடித்தும், பலவேறு வகையான மருத்துவமுறை உலகில் பரவி வளர்ந்துகொண்டு விருத்தியாகி வருகின்றனவாம். சித்த மருத் துவம், இயற்கையும், எளிமையும், சிறப்பும், திருவருள் அடை வதற்கு ஏற்றதுமாய் அமைந்திருக்கின்றது. மற்ற மருத்துவ முறைகளில் சில நல்ல பயன் ஏற்படுவதாயினும், அருள்நெறிக்குப் பொருத்தமாக இருக்கின்றனவல்லவாம்.

உடற்பிணிக்கு மேற்படி முக்குற்றம் காரணம் எனினும், அத் தோடு மனோகரணக் குற்றம் அதிகமாகப் பாதிக்கின்றதாகும். இம்மன நோய் புற மருந்தருந்துவதால் தீராது. வேண்டாத, கோபம், பகை, பொறாமை, பேராசை, தயவின்மை, தீயகுணம் (குற்றங்)களை யொழித்துவிட்டுச் சுத்த தயாவுணர்வையே பெருக்கிக்கொண்டால் இந்த மனப்பிணி தானே நீங்கி, உடற் பிணியையும் யொழித்துவிடுவதும் கூடும்.

இதற்குமேல், ஆன்மாவிடத்து மும்மலப்பிணி இயல்பாகவே இருந்துவருகின்றது. இது மருந்தாலோ, மன உணர்வாலோ,

மற்ற புறச் செயல் முறைகளாலோ நீக்கப்பட முடியாதாம். திருவருளின் சேர்க்கையால்தான் சுகவாழ்வு உள்ளிருந்து உயிருடம்பிலும் நிரம்புகின்றது. ஆகவே இந்த அருள்தானே எல்லாவற்றிற்கும் மேலான மருந்தாய் இருக்கின்றதென்று அறியலாகும். இதனால் மூவுடற்பிணிகளும் அறநீங்குவதோடு, அம்மூன்றுமே அழியாத சுத்த, பிரணவ, ஞான தேகமாய் மாறிப் பேரின்பவாழ்வோடு விளங்கவல்லதாகும். இந்த அருள் மருந்தைத்தான் நம் வள்ளல் ஏற்றுக்கொண்டார். இதனால் உடற்பிணிகளையும், உயிர்ப்பிணிகளையும் அடர்ப்பற (சற்றும் நெருங்காதபடி) முற்றும் நீக்கிக்கொண்டு விட்டார். இவர் ஏற்ற அருட்பெருஞ்ஜோதி மருந்துதான் இங்கு அருட்சிவமருந்து என்று போற்றப்படுகின்றது.

(2)

1323. சித்திக்கு மூலமாஞ் சிவமருந் தெனவுளந்
1324. தித்திக்கு ஞானத் திருவருள் மருந்தே

(உ-வி) சிவம் என்பதை, சச்சிதானந்தமான அருள் ஒளியாகவே இருக்கின்றது என அறிய வேண்டும். மற்றபடி, உலகறி சமயத் தெய்வமாக, மதச்சார்புடையதாகக் கொள்ளக் கூடாது. இந்த அருட்சிவ மருந்துதான் நம் உண்மைக் கடவுளான்ம வடிவமாக இருக்கின்றது. இதனால் இவ்வுள்ளொளி வடிவம், அருள்மருந்தின் உருவம் என்றால், உண்மையேயாம். இக்காரணத்தாலே நம் உண்மைக்கடவுள் தத்துவத்தை உருவாக்கி வழங்கவந்த ஞானசித்தர்கள் தெய்வ விக்கிரகத் திருவுருவத்தை மருந்துச் சரக்குகளாலும், நவ பாஷாண, நவரத்தின உருக்குகளாலும், பாதரசக் கட்டுகளாலும் அமைத்து மந்திரசக்தியைக் கூட்டி, மணி, மந்திர, மருந்து எல்லாமே கூடிய ஒன்றாய்ச் செய்துவைத்துள்ளனர். இதனால் நம் திருக்கோயில்கள், உடற்பிணி, உயிர்ப்பிணி யாவையும் தீர்த்து சுகநல்கும் மருத்துவத்தத்துவ இல்லங்களாகவும் கலைஞானக் கோவில்களாகவும் விளங்குகின்றனவாம்.

ஞானத்திருவருள் மருந்து, புறத்திலிருந்து வாய் மூலமாகவோ, ஊசியால் உட்செலுத்தப்படுவதாகவோ, ஒளிக்கதிர்களால் பரப்பப்படுவதாகவோ, தொடுவருமம், படுவருமம் (With Contact

or without Contact) ஆகிய முறைகளாலோ, மற்ற வகைகளாலோ பெற முடியாதது இந்த அருட் பெரு மருந்து. இது எப்பொழுதும் உள்ளிருப்பதுதான். ஆனால், உயிரிலோ, உணர்விலோ, உடலிலோ, சாராது உள் அந்தரத்திலே, எதனாலும் தீண்டப்படாது விளங்கிக் கொண்டுதான் 'யாவையும் புரிந்துகொண்டேயுள்ளதாம். இப்படியுள்ளதை அருள்விசாரத்தால் உணர்ந்துகொள்ளவும், அடைந்து அதுவாகி விளங்கவும் முடிவதாம். இப்படி அகமிருந்து விளங்கும் மருந்துருவாய் அருட்பெருஞ்ஜோதியை அனுபவத்திற் கொண்டு வாழ்வது என்பது, ஒருமையினால் அந்நிலை பொருந்திய எண்ணத்தோடு, புலனிச்சையில்லாது அன்புப்பணி புரிந்துகொண்டிருப்பதுதான் வழியாகும். இப்படிச் செய்துகொண்டிருந்தால் அகமிருந்த மருந்து அனகமாகி உயிரிலும், உடம்பிலும் கலந்து கொண்டு சுகம் அளிப்பதாம். இது உள்ளிருந்து சதா தன் ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டேயிருப்பதால், அதன் இன் சுவையும் சத்தும் பயனும் சதா அனுபவிக்கப்பட்டுக்கொண்டேயிருக்கும். சர்வசித்திகளுக்கும் இம் மருந்து காரணமாய் இருக்கின்றதாம். மற்றெந்தக் கற்ப மூலிகை மருந்தும் இத்திருவருள் மருந்துக்குச் சற்றும் ஒப்பாகாது.

(3)

1325. இறந்தவ ரெல்லா மெழுந்திடப் புரியுஞ்
1326. சிறந்தவல் லபமுறு திருவருள் மருந்தே

(உ-வி) உலக மருந்துகள் சாதாரணமான பிணிகளைத் தீர்த்து ஓரளவு வாழ்வளிக்கும் வல்லபமுடையனவாம். மூர்ச்சை மயக்கம், உயிர்த்தடை, இதயநிறுத்தம் முதலிய மரணத்திற்கு அடுத்த நோய்களை யொழித்து உயிர் விளக்கம் தரும் உயர் ரசு மருந்துகளும், சஞ்சிவிகளும், அமிர்தங்களும், உண்டெனக் கேள்விப்படுகின்றோம். இவைகள் எல்லாம் எந்த அளவுக்கு உண்மை என்பதும் பயன்படுவது என்பதும் உலகம் அறிந்துள்ளதே. நம் அருட்பெருஞ்ஜோதி மருந்து இறந்தாரை எல்லாம் எழுந்திடப்புரியும் பெருஞ்சக்தி வாய்ந்ததாம்.

இறந்தவரை எழுப்புதல் என்பது ஓர் அற்புத சித்தியாகக் கருதப்படுகின்றது. மணி மந்திர மருந்துகளால் அல்லது தீவிர பக்தி சக்தியால் மாண்டு போன ஒருவனை மீண்டும் உயிர்த்தெழச் செய்தல் ஓர் அற்புதமான செயல்தான். ஒருவனை

உயிர்த்தெழச் செய்வதால் யாருக்கு என்ன நன்மை? அது கடவுள் விதிச் சட்டத்திற்கு மீறின செயலாகுமா? இதுபோன்ற வினாக்களுக்கு விடைகாணும் போது, திருவருளுக்கு எதுவும் செய்தல் கூடும் எனவும், அந்த அருளின் ஆற்றலை உலகம் அறிய இச்செயல் ஒரு சான்றாம் எனவும், ஆகையால், அவ்வருளைப் பெற முயல்வதற்கு இது உதவலாம். மற்றபடி ஒருவன் இறப் பதற்குக் காரணம், அவன் கடவுள் நிலையை அடையாததே யாகும். அந்தப் பிறப்பில் அப்படி அடைய வேண்டியதை அடையாததால்தான் இறக்க நேர்கின்றது எனவும், கடவுணிலை பெறும் வரையும் பிறவித் தொடர் அருளப்படும் என்பதும் உண்மையாம். ஆகையால் விதி முறைப்படி இறந்தவனை எழுப்புதல் அவ்வளவு சிறப்பு வாய்ந்த செயலாகக் கொள்ள முடியாது. பலவித பிணியாலும், தொல்லைகளாலும், வேதனைப் பட்டு மாண்டவர்களை எழுப்பினால், அவர்கள் முன்னிலும் அதிக வேதனைக்குள்ளாவார்களேயன்றி நல்வாழ்வுக்கு ஏற்ற வர்களாகார். ஆகவே கடவுளே அவர்களுக்குப் புதுமுறை வாழ்வு தரவே, இறப்பைக் கொடுத்தார் என்று அறியலாகும்

ஒருவர் இருவரை உயிர்த்தெழச் செய்தால் உலகம் அதி சயிக்கும், போற்றிக் கொள்ளவும் கூடும். இறந்தவர்களை எல்லாம் எழுப்பி விடுவதாயின் பெருந் தொல்லையும் தீராத பிரச்சினையும் ஆகிவிடும். ஆதலின் இறந்தவர்களையெல்லாம் எழுப்புதல் திருவருட் சம்மதமல்ல. உலகமே கொள்ளாது போம். உயிர்த்தெழுப்பப்படும் கொள்கையும், எழுப்பி நியாயத்தீர்ப்பு கூறப்படும் என்ற கொள்கையும் எவ்வளவு உண்மை என்று அருளறிவால் அறியலாகும்.

இங்கு குறிக்கப்படுகின்ற திருவருள் மருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பும் வல்லமை உடையது என்று உணர்த்தப் பெறுகின்றோம். உலகில் இதுகாறும் தோன்றி மறைந்த ஆன்மாக்கள் எத்தனையோ அவ்வளவும் இறந்தவர்களே. அவர்கள் பிறந்து பிறந்து இறந்துகொண்டேதான் இருக்கின் றார்கள். புறத்தேகம்தான் தோன்றுவதும் மறைவதும் ஆக இருக்கின்றதை அறிவோம். உண்மையில் ஆன்மாதான் வாழ் கின்றது, அனுபவிக்கின்றது, அடங்குகின்றது, மீண்டும் வேறு தோற்றங்கொண்டு வருகின்றது. ஆகையால் உடலையே மனிதனாகக் கருதுதலும், பிறப்பு இறப்பு அடைந்ததாக நினைத்

தலும் அபக்குவ ஞான நிலையே. பக்குவமடைந்து ஆன்ம உண்மையைப் புரிந்து கொண்டு அதுவாக இவ்வுலகிடை வாழ்தலே, உண்மைப் பிறப்பும் வாழ்வுமாகும். இந்நிலை பெறாதவரை அவ்வான்மா உயிரொடு செத்த நிலையிலிருப்பதேயாம். ஆகவே, ஆன்மாவே உண்மை மனிதனாய், இறந்தநிலையில் இருப்பதாகக் கொள்ளப்படுகின்றது. இப்படி இறந்துள்ள ஆன்மாவைத்தான் திருவருளால் எழுப்பப்படுகின்றது. வள்ளல் பெற்ற இந்தத் திருவருள் மருந்தால் செத்தவர்கள் (ஆன்மாக்கள்) எல்லாம் எழுப்பப்பட்டுவிட்டுள்ளனர். இனி மனிதன், அகவாழ்வில் அருள்உண்மை கொண்டு விளங்கவல்லவனாகியுள்ளான். இதுதான் அருள் மருந்தின் பேராற்றலாகும்.

அருட்பெருஞ்ஜோதி மருந்தால் மனிதன் தன் அக எழுச்சி பெற்று ஆனந்தவாழ்வில் வாழச் செய்வது சுத்த சன்மார்க்க முறை. மற்ற மார்க்கங்களில் உண்மை அறியாது வீண்போவது திருவருட் சம்மதமல்லவாம். இம்மருந்தால் மக்கள் இனம் முழுமையும் பெருநலம் பெறுவது திண்ணம்.

(4)

1327. மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
1328. கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே

(உ-வி) பிணி, ஒருவனைக் கட்டிப் போடுவது, அதனால் செயல்பட முடியாமல் போகும். அப்படிப் பட்டுச் செயல் முற்றும் கெட்டு உயிரும் கெட்டுப்போவதே மரணம் என்கின்றனர். மரணம் என்ற சொல், உயிர் உணர்வு மரத்து, உடலும் மரத்து மரம்போல் ஆகி விடும் நிலையாம். மற்ற பிணிகள் எல்லாம்கூட இலேசான மருந்துகளால் தீர்த்துவிட முடியும். அல்லது தந்திர உபாயங்களால் அப்பிணிகளை விலக்கிவிட முடியும். ஆனால், மரணம் உயிரை உடலினின்று பிரித்துவிடுகின்றதால், அம்மரணத்தைச் சாதாரணமான மனித முயற்சிகளால் தவிர்த்துக் கொள்ள முடியாததால் அதனைப் பெரும்பிணி என்கின்றனர். அம்மரணப் பெரும்பிணியை ஒழிக்கவல்லது அருட்ஜோதி மருந்து ஒன்றேயாகும். இம்மரணமாகிய பிணியின் முடிவு, உடலையே அழித்து விடுவதாம். அவ்வழிவேதான் மரணம். இந்த இறப்பு ஏற்பட்டபின், உயிர்த்து எழுப்புவது, பேராற்றல் கொண்ட அருள் மருந்து ஆம். மரணம்

வந்தபின், உயிர்த்தெழுப்புதல் யாரால் முடியும்? ஒரு சில மகான்கள் எப்போதோ ஒரு சில இறந்தவர்களை எழுப்பிவிட்டிருக்கலம். அப்படி எழுப்பப்பட்டிருந்தாலும்கூட, எழுந்தவர்கள் பின்னர் மடிந்தே போய்விடுகின்றனர். மேலும், அப்படி ஏதோ ஒரு சக்தி கொண்டு, பிறரை யெழுப்பி இருந்த போதிலும், அங்ஙனம், முன் பிறரை எழுப்பிய அவர்களே எப்படியோ அழிந்துபடுகின்றனர். அப்போது, தம்மை அவர்களும் எழச் செய்ய முடியாதவர்களாகின்ற தோடு, பிறர் துணையும் உதவாமல் போய்விடுகின்றதாம்.

இப்போது நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள அருட்ஜோதி மருந்து, மரணப்பெரும்பிணியை வருமுன் தடுத்து வராமலே செய்து விடுகின்றதாம். இந்தப்பிணி ஒருவனில் பிறவிலேயே உடலில் வளரத்தொடங்கியிருப்பதாம். ஆனால் இது சாதாரணமாய்த் தெரிகின்றதில்லை, முதிர்ந்து, உறுத்தி, வருத்திடும்போது தெரிகின்றது. முடிவில் வெளிப்படுகின்றது அதாவது மரணம் சம்பவிக்கின்றதாம். ஆகவே, இந்த மரணம் என்னும் பிணி, ''உடன் பிறந்தே கொல்லும் வியாதி, உடன்பிறவா மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும், அம்மருந்து போல்வாரும் உண்டு,'' என்று கூறப்பட்டுள்ளது. தோன்றுகின்ற உடலோடு தோன்றுகின்றது பிணி. அப்படித் தோன்றியுள்ள பிணியை யொழிக்க வல்லது, தோற்றக்கேடில்லாத, நித்தியமான நம் கடவுளான்ம வடிவாகிய அருட்ஜோதிமலை தரும்மருந்து ஒன்றேயாம்.

அருட்ஜோதிமாமலை மருந்தை ஏற்றவர் நம் அடிகளார். அது அவருக்குப் பேராற்றலை வழங்கினது. அந்த ஆற்றல்தான் கரணப் பெருந்திறல் என்று கூறப்பட்டுள்ளது. கரணமாவது, அகம், புறம் என்னும் இருவகைப்படும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் நான்கும் அகக்கரணமாம். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் புறக் கரணமாம். இவ்விரு கரணங்களும் பொருந்திய ஒன்றே, இரண்டிற்கும் பொதுவான மனமாம். இம் மனத்திற்குத்தான் அம் மருந்து அருள் ஒளியை முதலில் தந்து விட்டதாம். உண்மையில் மனமே திருவருள் வண்ணமானதே. இப்படி அருள்ஒளிமயமான மனம்தான் பேராற்றல் கொண்டதாய் விளங்கலாயிற்று. அதுவே, மரணப் பெரும்பிணி வாரா வகை, செய்துவிட்டதாம். இதனையே இந்த அடிகளில் ''மரணப் பெரும் பிணி வாரா வகை, கரண மிகு பெருந்திறலைக் காட்டி வாழ்வித்த

தாகக்,'' குறித்துள்ளார். எனவே, இந்த அருட்பெருஞ்ஜோதி மருந்தே மரணநோயைச் சமூலத்தோடு அழித்து, சகமீதென்றும் அழியாது வாழவைப்பதாம்.

(5)

1329. நரைதிரை மூப்பவை நண்ணா வகைதரும்

1330. உரைதரு பெருஞ்சீ ருடையநன் மருந்தே

(உ-வி) மனிதப்பிறப்பு வடிவில் இயல்பாய், மும்மலப்பிணியோடு முக்குற்றமாகிய, வாத, பித்த, சிலேத்துமக் கேட்டால், மலம், சிறுநீர், இரத்தம், சுக்கிலம் இவைகளில் கேடுகள் உண்டாம்போது, பலவாகிய பிணிகள் தோன்றுகின்றனவாம். இப்பிணிகளின் விளைவால் உடலில் நரையும், திரையும், மூப்பும் தோன்றுகின்றனவாம். இப்பிணிகளையும் இவற்றால் வரும் கேடுகளையும் ஒழித்தற்பொருட்டு, பலவேறு மருந்துகள் கையாளப்பட்டு வருகின்றனவாம். மனிதன், அறியாமை இருளிலும் பொறி கரணச் சிற்றறிவு கொண்ட மருளிலும் சென்று கொண்டிருக்கும் வரை, நாளும் பிணிகள் பெருகுகின்றன, மருத்துவர்களும் பெருகின்றனர், அவர்களால் மருந்துகளும் பெருகுகின்றனவாம். என்று மனிதன் அருள் ஒளி நெறியில் பயின்று அன்பறிவோடு வாழத் தொடங்குகின்றானோ அன்று முதல் தான், பிணிகள் குன்றியொழியும்; சுகவாழ்வு நின்று வளர்ந்தோங்கும்.

பெருமையும் மிகு சிறப்பும் உடையது நல்ல அருள் மருந்து. உரைதரு பெருஞ்சீர் என்றது, பெருஞ்சிறப்புடையதாய்ச் சொல்லப்படுகின்றது என உரைப்பதைக் காட்டிலும், அந்த அருட் பெருஞ் சிறப்பைச் சொல் மூலமாக வெளிப்படுத்திப் பிறரும் அதனை ஏற்றுப் பெரும்பயன் அடைவார்கள் என்பது பொருத்தமான பொருளாகக் கொள்ளலாம். இந்த அருள் மருந்து, அகப் பிணியை முதலில் தீர்த்து விடுவதால், உள்ளத்தும் உயிரினும், உடலினும் நல்லின்பநிலை தோற்றுவது சகசம். இதனால், தத்துவங்களின் கேட்டால், உடலில் ஏற்படுகின்ற, ஏற்பட்டுள்ள நரையும், சுருக்கங்களும், தளர்ச்சி முதலியனவும் தவிர்க்கப்படவும், தடுத்து ஒழிக்கப்படவும் கூடும். வருமுன் காப்பாக சிறுபோதே அருள்நெறி பயின்று நல் வாழ்வில் தழைப்பது திருவருள் ஆணையாம்.

(6)

1331. என்றே யெனினு மிளமையோ டிருக்க

1332. நன்றே தருமொரு ஞானமா மருந்தே

(உ-வி) அருள் ஞானத்தால் விளைகின்ற நம் அருட்ஜோதி மருந்து பிற விடங்களில் காணப்படாத ஒன்றாம். மற்ற மருந்துகள், கற்பங்கள், அமிழ்தங்கள், யோகசித்தியால் அடையப் பெறும் ஜீவரசமாகிய சந்திரகலா அமிர்தம், சரீரசித்தி உபாய முறைகள், தத்துவசித்திக் கற்பனா முறைகள், பக்திசித்தி மார்க் கண்ட மார்க்கம் எல்லாம் அருள் இன்பப் பெருஞ்சித்தியோடு வாழ வகைசெய்வனவல்ல என்பது உண்மையாம். ஆகையால், அவைகளை அறிய விரும்பியும், அடைய முயன்றும் ஏதோ ஏக தேசம் பெற்றும் பெறாமலும் வீண் போய்விடுதல் கூடாதாம். நமது ஞான மாமருந்து, மெய்யறிவின்ப அருட்ஜோதிப் பெரு மருந்து ஒன்றே என்றென்றும் மூப்புறாது, இளமையோடிருக் கவும், நலமெலாம்கொண்டு நன்கு மகிழ்ந்து வாழவும் உதவுவதாம். கடவுள் உண்மையை ஒருமையிற் கண்ட யோக ஞான சித்தர்கள் தாம், அக்கடவுள் உண்மையை நித்திய இளமையோடிருக்கும் வாலை என்றும், பால முருகன் என்றும், கன்னி குமரி என்றும், நித்திய கல்யாணி என்றும், இளம்பூரணன் என்றும் இன்னும் பலவாகவும் பெயரிட்டுச் சுட்டியதோடு, அமிர்தம் என்றும் மூவா மருந்தென்றும், சாவாநிலை என்றும் குறித்துள்ளனர். அதனைப் பெற்று வாழ்வில் சிறப்புற வேண்டி, எத்தனையோ தந்திர முறை வகுத்து, வழங்கியுள்ளனர் அந்த அகமுணர்ந்த பெரியோர். அம்முறைகளின்படி அறியாமலும், அறிந்தும் மிக முயன்றும் சிலர் ஓரளவு சித்தியும் பெற முடிந்தது. ஆனால், அவை எத னாலும் எவரும் சந்ததமும் இளமையாய் இருந்துகொண்டு சதானந்த வாழ்வில் திகழமுடியாதவர்களாய்ப் போயினர். ஆகவே, அந்நெறிமுறைகளுக்கு அப்பாலான அருட்பெருநெறி யான சுத்த சன்மார்க்கத்தால், சுத்த சுகானந்த வாழ்வு பெற வள்ளலார் மூலம் இந்த ஒரு ஒப்பற்ற ஞானமாமருந்து கிடைக்கப் பெற்றுள்ளோம்.

இவ் அருட்பெருஞ்ஜோதி மருந்து, நம் உள் என்றும் ஒரு படித்தாய், எல்லாம் வல்லதாய், இருந்து அருளனுபவத்தில் வெளிப்பட்டு அழியாமையோடு, வாழச் செய்வதாம். தியான மயமானால் பொசிப்பு மாறும் என்றபடி அகத்தே அவ்வொளியை

நினைந்து நினைந்து முடிவில் அதுவாகி நின்றால் உணர்வும், உயிரும், உடலும் அவ்வருள் ஒளிமயமாகி நித்தமாய் விளங்கத் தொடங்குவதாம். ஆகையால் இச் சுத்த சன்மார்க்க நெறி யொன்றே மனிதனை என்றும் இளமையோடும், சர்வ சக்தி சித்தகளோடும் விளங்கச் செய்யவல்லதாம். ஆதலின், இந்த அருள் மருந்தை யாவரும் அறிந்து, அருள் வாழ்வு பெற, அகம் கொண்டு திருவருளால் உய்வோமாக.

(7)

1333. மலப்பிணி தவிர்த்தருள் வலந்தரு கின்றதோர்

1334. நலத்தகை யதுவென நாட்டிய மருந்தே

(உ-வி) அருள் வலம் அல்லது அருளின் வெற்றி ஆற்றல் தான், எல்லா நன்மையும் நல்கும். மலப்பிணியைத் தவிர்த்துக் கொண்டால்தான் சுகமாக வாழ முடியும். உடல் வாழ்வில் உணவு முக்கியமாக ஆற்றலைத் தருகின்றது. ஆனால் அவ் வுணவின் சத்து அம்சமே நல்லாற்றலுக் குரியதாகும். சக்கை யாகிய அசத்துப் பொருள் மலமாகக் கழிக்கப்பட்டு விடுகின்றது. அந்த மலம் ஒழுங்காகக் கழிக்கப்பட வில்லையானால் அதுவே சகல நோய்க்கும் காரணமாம். ஆதலின், மலப்பிணி அல்லது மலச்சிக்கல், பல சிக்கல்களுக்கும் பிணிகளுக்கும் காரணம் எனப் படுவது உண்மையே. உடற்சுகம் இருந்தால்தான், மனம் சாந்தியாக இருந்து உள் நிலைத்து உயிரிரக்கப் பணி புரிதல் கூடும். மனப் பிணிக்கு அவா வெகுளி மயக்கமே காரணம். மேல் அக ஆன்ம வடிவிற்கு ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மூன்றுமே மலப்பிணிகளாக உள்ளனவாம். இவற்றையொழிக்க அருள் விளக்க உண்மையே அருள் உணர்வாகத் தோன்றி நின்று உதவுகின்றதாம்.

மனிதன் உண்மையில் யார்? கடவுட்சிற்றணுவாகிய ஆன்ம நித்திய வடிவினனாய் இருக்கின்றான். பூத இருள், ஒருவ னுடைய இருப்பை உணர்த்துவது இயல்பு. ஆனால் ஆணவமல இருள் ஒருவனின் இருப்பைக் கூட உணர முடியாதபடி செய் துள்ளதாம். ஆன்மாவோ உண்மையில் கடவுட் சிற்றுருவே ஆம். இது கடவுள் வடிவமே என்பதுதான் விளங்குகின்ற தில்லை அந்த ஆன்மாவுக்கு. தான் வேறு, தனக்கு வேறாகக்

கடவுள் இருந்து வருகின்றார் என்று கருதிடச் செய்வதுதான் ஆணவ மலப்பிணியால் ஏற்பட்டுள்ள நிலை. இம்மலப்பிணி வேறு எதனாலும் நீங்குவதே யில்லையாம்; திருவருள் ஒன்றினால் தான், இந்த ஆணவமலம் அடியோடு ஒழியும். அதாவது, கடவுள்தானே தனது திருவருளால், இந்த ஆன்ம அணுவாய்த் திகழ்ந்து நின்று விளங்குகின்றார். இப்படி எண்ணிலி கோடி ஆன்மாவாயும் இருப்பது ஒன்றான கடவுளேயாவர். இந்தக் கடவுள் சிற்றணுவின் இருப்பு, எப்பொழுது வெளியாகின்றது என்றால், இவ்வான்மா தன்னைத்தானே அறிகின்ற மனிதப் பிறப்பு வடிவாய் மலர்ந்து விளங்கும்போதுதான். இப்படித் தன்னைத்தானே அறிகின்ற ஆன்மா, தான் கடவுள்தான், என உணர்ந்துகொண்டுள்ளது. இதுவே அருள் அறிவால், மனிதன் கடவுளாய் இருப்பதை உணர்ந்துகொண்டுள்ள நிலையுமாம். இந் நிலையில், பக்குவமனித வடிவில் வெளிப்பட்டு விளங்கும் கடவுள் ஆன்மா ஒன்று, தன்னைக் கடவுள் வடிவாகத்தான் உணர் கின்றது. அதாவது அந்த மனிதனே தன்னை அக்கடவுள் ஆன்மா வாக அறிகின்றான். அந்தக் குறிப்பிட்ட மனிதவடிவிலிருந்து, தான் அக்கடவுள் ஆன்ம வடிவினன் என்பதை உணர்கின்றதோடு, அக்கடவுள் எங்கும் ஒவ்வொரு ஆன்மாவும் தானாய் இருப்பதை யுணரும் அம்மனிதனும் எங்கும் தானாய் இருப்பதை, தன்னை யன்றி, அயலாய் பிறர் என்பதே இல்லாததாகவும் அறிகின்றான். தானே அருள் வாழ்வு நடத்த அப்படி வேறு வேறு மக்கள் வடிவிலும், உயிர்களின் வடிவிலும், பொருள்களின் வடிவிலும், உள்ளிருந்து அவர்களாய், அவைகளாய்த் திகழ்ந்து செயல்பட்டுக் கொண் டிருப்பதாகவும் அறிகின்றான், இது மலப்பிணியற்ற அருள்வாழ்வு நிலையாம். இவ்வாழ்வுதான் நிறை இன்பமும் ஆற்றலும் கொண்டு விளங்குவது.

(8)

1335. சிற்சபை நடுவே திருநடம் புரியும்

1336. அற்புத மருந்தெனும் ஆனந்த மருந்தே

(உ-வி) சிற்சபை என்பது கடவுள் ஆன்ம வடிவமே. இதில் தான் கடவுள் நிறையுண்மையும் வெளியாகி அனுபவப்பட உள்ள தாம். ஓர் ஆன்மாவில்தான், கடவுள் எழுந்தருளி, ஆனந்தத் திருநடனம் என்னும் ஐந்தொழிற்செயல் புரிந்து கொண்டிருப்

தாகவும் அந்த ஆன்மாவே அருளால் அனுபவத்தால் உணர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த சிற்சபையில் ஏற்பட்டுள்ள அனுப வத்தைக் கொண்டுதான், இப்படியே ஒவ்வொரு சிற்சபையாம் ஆன்மாவினும் இருந்து ஐந்தொழில் விளங்க ஆடிக் கொண்டிருப் பதாக உணரப்படுகின்றது. ஆம் அப்படி உணரப்படுவதேயன்றி உடம்பால் அனுபவிக்கப்படுகின்றதல்லவாம்.

ஆகவே, ஆன்மாவயமாகிய சிற்சபையில், நம் அருட்பெருஞ் ஜோதிபதி, அற்புதானந்த மருந்துவடிவாய், இருந்துகொண்டு திருநடனமாம் ஐந்தொழிற்செயல் புரிந்து கொண்டிருக்கின்றார். இதனால் ஒவ்வொரு ஆன்மாவும் இந்த அருள் அனுபவம் அடை கின்றபோது ஆனந்த வாழ்வில் விளங்குவதாக அறியப்படுகின்ற தாம். நாம் இந்தச் சிற்சபையில், அருட்ஜோதிவடிவில் இருந்து கொண்டு, இந்த உலகில் தயாசித்திச் செயல் புரிந்து கொண்டு வாழ்வதுதான் இந்த அற்புதானந்த மருந்தின் விளைந்த நிறை இன்ப வாழ்வு நிலையாகும். கடவுளே இச் சிற்றம்பலத்திலிருந்துதான் பண்டே தொட்டு அருள் ஆடல் புரிந்து கொண்டிருக்கின்றார். இன்று அருளாலே இவ்வுண்மை கண்டு, அதுவாகி நின்று, அருள் வாழ்வு வாழும் போது அதுதானாகிய அனுபவம் ஏற்பட்டு என்றும் நிலவுவதாம்.

220. மாற்றறியாப் பொன்

(1)

1337. இடையுறப் படாத வியற்கை விளக்கமாய்த்
1338. தடையொன்று மில்லாத் தகவுடை யதுவாய்

(உ-வி) பொன்னின் உயர்வும் தாழ்வும் அதன் மாற்றால் அளவிட்டு உரைக்கப்படும். மாற்று அதிகமுள்ள பொன் மிகச் சிறப்புடையதாம். புடமிடப் புடமிடப் பொன் எடை குறையும். மாற்று உயரும். அழுக்கும் கலப்பும் நீங்கிய பொன்தான் சொக்கத் தங்கமாய் விளங்குவது. உலகம் அறிந்த நல்ல தங்கத்தைப் பத்தரை (10 1/2) மாற்றுத் தங்கம் என்கின்றனர். இந்தப் பத்தரை மாற்று என்ற கணக்கு தத்துவப் பொருள் கொண்ட தாகும்.

சிற்றம்பலத்திருந்து, பொன்னம்பலவன் திருநடனத்தைக் கண்ட அருட் செல்வர்கள், அந்தப் பொன்வண்ணத்தின் மாற்று

அளந்தறிய மாட்டாதவர்களாய் வியந்து நின்றார்கள். ''மாற்றறி யாத செழும் பசும்பொன்னே,'' என்றும், ''மாற்றை அளந்தறிந் திலமென்று அருமறையாகமங்கள் வழுத்துவனவாகவும்,'' குறிக் கின்றார்கள். பின்னர் ஒருவாறு நிறையறிவால் உள்ளொளிர் மோனஞான நிலையை, சிதாகாசநிலையாய், ஆயிரமும் எட்டும் கூடிய 1008 கலையெனக் கற்பனை செய்துகொண்டு, தம்மைத் தொண்ணூற்றாறு தத்துவ வடிவினராய் வைத்து ஆய்ந்தபோது, 1008/96 = 10 1/2 எனக் கண்டார்கள். மனிதன் உள்ளொளி கண்டு, உளத்தாற் பற்றி நின்றால், அதுவாக மாற்றப்பட்டு விடுவான் என்ற கருத்தால், அந்தக் கடவுள் தத்துவப் பொன்னுக்கு பத்தரை பக்தரை அல்லது பற்றினோரைத் தன்மயமாய் மாற்றும் செயல் கொண்டது என்ற பொருளில் வழங்கியுள்ளனர். இது 10 1/2 மாற்றுத் தங்கம் என்பதற்குரிய தத்துவப் பொருள்.

உலகிலுள்ள பொன்னுக்கு மாற்றளவும், இடை என்னும் நிறையளவும் உண்டு, இயற்கை விளக்கமாகிய சுயம்பிரகாசம் இல்லை. ஆனால், நமது அருட்பெருஞ்ஜோதி ஆகிய அற்புதப் பொன்னுக்கோ, மாற்றும் அளவும் இல்லை, இடை நிறையளவு மில்லை, சுயஞ்ஜோதி யுண்டு. மேலும் இது எவ்விடத்தும், எக்காலத்தும், எதனாலும்; தடைசெய்யப்படாது வியாபித்து விளங்குவதாயுள்ளதாம்.

(2)

1339. மாற்றிவை யென்ன மதித்தளப் பரிதாய்

1340. ஊற்றமும் வண்ணமும் ஒருங்குடை யதுவாய்

(உ-வி) முற்கூறப்பட்ட இயற்கை விளக்கம்தானே நம் அருட்ஜோதிப் பொன்னுக்கு மாற்றாக உள்ளதாம், இப்படியுள்ள இயற்கை விளக்கம் என்னும் மாற்று இவ்வளவு என்று எவரா லும் அளந்துகூறிவிட முடியாதாம். இந்த இயற்கை விளக்கம், உலகமெல்லாம் நிறைந்து அருள் ஐந்தொழில் சிறக்க விளங்குவ தாம். இந்த நிறைவிளக்க நிலை எப்படிக் கண்டு மொழியப்படாத தாயுள்ளதோ அதுபோன்றுதான் நம்பதியின் மாற்றறியாச்செழும் பசும்பொன்னின் தன்மையுமாம். மேலும் இப்பொன் எதனாலும் சிதைக்கப்படாதது. ஊற்றம் என்ற சொல் மிக வலிமையைச்

சுட்டுவது. நம் அருட்பொன் நிறைவெளி உற்றும் எதனாலும் தாக்கற்று மலை என விளங்கிக்கொண்டுள்ளதாம்.

> "தோற்றியாப் பெருஞ்ஜோதி மலைபரநாதத்தே
> தோன்றியதாங்(கு) அதனடுவே தோன்றியதொன் றதுதான்
> மாற்றறியாப் பொன்னொளியோ."

என்றதனால், எங்கும்நிறை பெருஞ்ஜோதி மலை கட்புலனாகாது என்று அறியலாகும். அந்தச் சோதிமலை மீது ஒளிர் பதியுருவம் மாற்றறியாப் பொன்னொளி என்பதும் உணர்த்தப்படுகின்றது. இந்த மலையென நிலைத்த இறையொளியின் மற்றொரு இயல்பு பலவாகிய தோற்றங்கொண்டு விளங்குவதும், மறைவதும் ஆக உள்ள தன்மையாம். இதனால் நாம் உலகில் அனந்தவண்ண பேதத் தோற்றங்களைக் காண்கின்றோமே அல்லது, நிலையான மலைபோன்ற ஜோதியைக் காண்கின்றோமில்லையாம்.

வெள்ளிடை மலைபோல் விளங்கும் பொருள் எனப் பரம் பொருளைக் குறிக்கின்றனர் மெய்ஞ்ஞானக் கண் பெற்றோர். ஆனால் இக்கண்பெறா மாந்தர்க்கு இந்த வெள்ளிடைமலை எப்படி விளங்கும்! வெள்ளிடை என்பதே அருள்வெளியைத்தான் குறிக்கின்றது. அருள் வெளியில்தான் நம் அருட்ஜோதிபதி மலை என விளங்குகின்றார். இவ்வுண்மையை உலகர் அறியார். ஆதலின், வெள்ளிடைமலை என்பதற்கு வெட்டவெளியில் விளங்கும் மலை என்றே சாதாரணப் பொருள் ஆக்குகின்றனர். பட்டப்பகலில், வெட்டவெளியில் ஒரு மலை இருப்பது எவ்வளவு தெளிவாகக் காணப்படுகின்றது, அவ்வளவு விளக்கமாக ஒன்றைக் கண்டு கொள்ளுவது குறித்து இப்பழமொழி உரைக்கப்பட்டுள்ளது என்பர். கடவுட் பொன்மலையைக் காணவேண்டும்.

(3)

1341. காட்சிக் கினியநற் கலையுடை யதுவாய்

1342. ஆட்சிக் குரியபன் மாட்சியு முடையதாய்

(உ-வி) இந்த அருட்ஜோதிப்பொன் அகத்தே மன்னெழில் வண்ணமாய் மறைந்து கிடப்பது. அதன் ஏகதேசத் தோற்றமே இயல்பாகப் பொங்கெழிலாகப் பொங்கிவழிந்து, எங்கெங்கும் இயற்கைக் கவின் காட்சிகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றது

வாம். அந்த அக எழிலின் விசேட தோற்றத்தை வெளியிற் கொண்டுவந்து அமைத்துக்காட்டும் செயலே கலை எனப்படுவ தாம். அன்றியும் அவ்விளக்கமேகூட கலை (ஒளி இரேகை)யாக விளங்குகின்றதாம்.

நமது அருள்ஒளி வீசும் பொன் இனிய நற்கலையுடையதாகும். அதாவது இப்பொன்னைக் கண்டாலே உயரின்பத்தைப் பயப்ப தாம். (சாதாரண மக்கள், பொன்னாசை மிகவுடையோர், பொன் பொருள்களை வைத்துப் பார்த்து மகிழ்ந்து பூரித்தும் பூஜித்தும் கொண்டிருக்கின்றதை உலகம் அறியும். இது எவ்வளவு அறியாச் செயல்.) நம் அருட்பொன்னைப் பெற்றவர்களுக்குண் டாம் இன்பம் சொல்லுந்தரமன்று. உலகப்பொன் படைத்தார்க்கு இன்பம் உண்டாகலாம். ஆனால், நமது பொன்னோ இன்பமே, சச்சிதானந்தமே தன் இயல்பாய்க்கொண்டு விளங்குவதாம். மேலும் இப்பொன் அருட்பெருஞ்சக்தி காரணமாக அகிலமெல் லாம் கட்டி ஆளும் ஆற்றலும் உடையதாம். இப்படி அருளாட்சி புரியும் வல்லமையால், பலவாகிய சிறப்புகளும், கீர்த்திகளும் உள்ளனவாம் இவ்வற்புதப் பொன்னுக்கு.

பன்மாட்சியும் உடையதாய் என்று குறிக்கப்பட்டுள்ளதன் கருத்து, பலவாகிய உயர்சிறப்பும், மாண்பும் கொண்டு விளங்கு வது என்பது பொருளாய்க் கூறப்படும். இன்னுமோர் அரிய விளக்கம் யாதெனில், இந்த உயர் ஆற்றலும், தோற்றமும், ஆட்சிச் செயலும் வெளிப்பட்டு அனுபவத்திற்கொண்டு விளங்கும் சிறப்பான இடம் நமது பல் நிலையாம். யாதெனில் நம் சிரநடுப் பகரபீடத்தின் மீது ஒளிர் லகரமெய் சுட்டும் பதின்மூன்றாம் அருள் அனுபவ நிலையைக் குறிப்பதாம். இங்குதான் இந்த பொன்னின் காட்சியும், ஆட்சியும், மாட்சியும் அனுபவப்படுவது என்பது மெய்ப்பொருள் விளக்கம்.

(4) & (5)

1343. கைதவர் கனவினுங் காண்டற் கரிதாய்ச்
1344. செய்தவப் பயனாந் திருவருள் வலத்தால்
1345. உளம்பெறு மிடமெலாம் உதவுக வெனவே
1346. வளம்பட வாய்த்து மன்னிய பொன்னே

(உ-வி) இப்பொன் அருளுடையார்க்கன்றிப் பிறர்க்கு எவ் விதத்தும், எக்காலத்தும், கிடைத்தற்கரியதாம். கைதவர், அதாவது கபடம், பொய், சூது முதலிய சிறுமைக் குணம் உடையவர். இவர்களிடம் உலகப்பொன் எவ்வளவோ குவியலாம், ''பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள,'' என்பர் பொய்யாமொழியார். இப்பூரியார் என்னும் கயவர் அல்லது கீழ்மக்கள் ஒரு போதும் நம் அருட்பொன்னை அறியார்கள். இவர்களால் மனதாலேகூட நினைத்துத் தெரிந்துகொள்ளவும் முடியாது. இவர்களுக்கு இப்பொன்னிடத்து நம்பிக்கையுமுண்டாகாது. ஆகவே, கனவிலும்கூட இதனை அறியார்கள். அருளாளர்களே முன்விளை பண்பாட்டால் இவ்வருட்பொன்னை அருளாலே உண்மையாக அறிந்து, பூரண நம்பிக்கை கொண்டு முயன்று அடைவார்கள்.

அன்றியும், மனிதன் உள்ளம் திருவருணிலை அடைவதற்காகவே, ஒவ்வொரு பிறப்பிலும் சிறிது சிறிதாக அறிவு வளர்ச்சி பெற்று வந்து பக்குவநிலை ஏற்றுள்ளதாம். இதுவே பல பிறப்பிற் செய்த தவப்பயனாகத் திரண்ட திருவருள் எனப்பட்டது. அத்திருவருட் சத்தியால்தான் நமது அருட்பொன்னை அடைகின்றோம். இப்படிக் கிடைக்கப் பெறுகின்ற பொன் நிறைவு பெற்று மன்னியுள்ளதாகும். அப்படி இருந்துகொண்டு, ''எந்த விடத்தும் எந்தச் சமயத்தும் உனது விருப்பப்படியே தாராளமாக எடுத்தெடுத்து வழங்குவாயாக,'' எனக்கூறி அகத்திருந்து ஆதரவளிக்கின்றதாம் நம் வள்ளலார்க்கு. மேலும் கூறுகின்றார்: ''ஈ என்று நான் ஒருவர் இடம் நின்று கேளாத இயல்பும், என்னிடம் ஒருவர் ஈது இடு என்று கேட்டபோது அவர்க்கு இல்லை என்னாது அளிக்கும் திடமும்,'' வழங்குகின்றதாம் இந்த அருட்பொன்.

நம் அருள் வள்ளல், உலகப்பொன்னைச் சிறிதும் மதித்தவரும் அல்ல, தீண்டப்படாதது என, வெறுத்தவருமல்ல. சித்துச் செயலால் பிறர் போற்றத் தன் ஆற்றலைக் காட்டிக் கொண்டவருமல்ல. இவர் தனக்கு என எதையும் சேகரித்து வைத்துக் கொள்ளவுமில்லை. இப்படியுள்ள இவர் பிறர்க்கு ஏற்படும் உண்மைக் கஷ்டங்களை விலக்க உளம் உருகி உதவ முயன்றபோது, அருட்பொன்னின் பேருதவி தடைபடாது கிடைத்து வழங்கி அமைதி பெற்றிருந்தார். சிலர், ஏதோ அற்பசித்தி பெற்றவர்கள் ஏதேதோ (பிறர்க்குத் தேவையோ, தேவை

யில்லையோ) வரவழைத்து வழங்கி வியப்புறச் செய்து மக்களை மயக்குகின்றார்கள். இது திருவருட் சம்மதமாகுமா? வேறுசிலர் மூவாசையை விட்ட முற்றுந் துறந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு, வீட்டில் தங்காராய், பெண் டிரைப் பாராராய், பொன்னைத் தீண்டாராய், எப்படியோ அலைந்து கொண்டும், தனித்து இருந்தும், பிறர் கொடுப் பதை ஏற்றும் வாழாமல் வாழ்ந்துவிட்டு மறைகின்றனர். இவர் களின் செயல்முறை திருவருட்கு சம்மதமாகுமா? கடவுள், அரு ளாலே யாவையும் உண்டுபண்ணி, அருள் வாழ்வுக்கு ஆன முறை யில் வேண்டியவைகளை இடையறாது உதவிக் கொண்டிருக்கின் றார். அக்கடவுள் உண்மையையும் தன்னையும் ஒன்றெனக் கண்ட மனிதன் இவ்வுலகில் பற்றுதல் துறத்தலும் இன்றித் திருவருள் கூட்டி வைக்கும் வண்ணம் தயவுப் பணியைப் புரிந்துகொண்டு, கடவுள் மயமாய் வாழ்வதுதான் திருவுள்ளச் சம்மதமாகும். கடவுள் ஒருவரே அருட்பெரும் வள்ளலாக இருந்து, எவர்க்கும் எக்காலத்தும் உண்மைத் தேவைகளை எல்லாம் சிறிதும் தடை படாது வழங்கி வாழ்வித்து வருகின்றார். இதனால் இக் கடவுள் மயமான நம் வள்ளலும், ஓடாது, மாயையை நாடாது, நன்னெறி ஊடாது, உலகோடு கூடாது குலவிநின்று அருட்செயல் புரிந்து கொண்டு, வாடாது வயங்கிக் கொண்டு வாழ்கின்றதை உள்ளபடி யுணர்ந்து அப்படியே நாமும் வாழவேண்டுவதுதான் நம் கடமை யாகும்.

(6)

1347. புடம்படாத் தரமும் விடம்படாத் திறமும்
1348. வடம்படா நலமும் வாய்த்தசெம் பொன்னே

(உ-வி) நமது அருட்ஜோதிப் பொன்னுக்கு இயற்கையில் அமைந்துள்ள உயர் மாற்றுப் பிரகாசம் புடத்தினால் ஏற்பட்ட ஒன்று அல்லவாம். அகண்டவெளிநிறை இறை ஒளி, இயல் பாகவே நிறை மாற்றுடையதாம். இந்தப் பொன் மாற்று, என்றும் மாற்றமில்லாத மாற்று ஆகும். அதனை மாசுபடுத்தி மாற்றைக் குறைக்கவும் முடியாது. புடம் வைத்து மாற்றைக் கூட்டவும் முடியாதாம். அன்றியும் உலகப் பொன்னை மருத்துவ முறையால் பாஷாணக் கலப்பால் விஷமிக்கச் செய்திடல் போன்று இவ்

வருட் பொன்னைச் சிறிதும் கெடுத்துவிடவே முடியாதாம். இவ் வுண்மையைச் சுட்டவே ''புடம்படாத் தரமும் விடம்படாத் திறமும்'' என்று கூறப்பட்டதாம்.

அன்றியும் இப்பொன்னுக்கு அதிசூட்டுத் தன்மையும், பெரு நலந்தரும் தன்மையும் உண்டாம். வடம்படா நலம் என்பது, உலகம் அறியாத பெருஞ் சூட்டுத் தன்மை, இது வடவைத் தீ அல்லது அதிசூடான வடவாமுக அக்கினியினும் கொடிது என்பர். உலகப் பொன் தீ போன்ற நிறமும் குளிர்ந்த தன்மையும் உண் டாம். ஆனால், கடவுட் பொன்னோ தீயினுமிக்க சூடும் தயவுத் தன் மையும் கொண்டு விளங்குகின்றதாம். பூகருப்பத்தின் விளங்கும் பெருந்தீ, மேல் நோக்கிச் சுடர்விட்டெரிவது என்ற கருத்தில் அது வடக்குத் திசையில் வெளிப்படுவதாய்க் கொள்ளப்படுங் காரணத்தால் வடவைத் தீ, வடவாக்கினி, என்றும் கூறப்படுவ தாம். அநலம் என்பது நெருப்பாம். வடம்படா அநலம் என்றால், வடவை அறியாத தீ என்றும், அத் தீயினால் உண்டாவதைவிடப் பெருநலம் பயப்பது என்றும் பொருளாம். இப்படியுள்ள செம் பொருளாம் கடவுட்பொன்னைக் கிடைக்கப்பெற்ற நம் வள்ளல் தாமே அதன் ஆற்றலும், தன்மையும் கொண்டு விளங்குகின்றவ ராகிவிட்டார் என்று அறியலாகும்.

(7)

1349. மும்மையுந் தருமொரு செம்மையை யுடைத்தாய்
1350. இம்மையே கிடைத்திங் கிலங்கிய பொன்னே

(உ-வி) அழிவற்ற நம் செம்பொன்னின் பெருமையும் சிறப் பும் இங்கு எடுத்தியம்பப்படுகின்றதாம். இம்மையே கிடைத்து இப்போது விளங்குகின்ற பொன்னானது, மும்மையும் தருமொரு செம்மையை யுடையதாம். மும்மை என்பதற்குப் பொருள், இம்மை, மறுமை, அம்மை என்பர். அன்றியும் சென்ற, நிகழ்கின்ற வரும் காலம் மூன்று எனவும் கொள்ளுவர். பிராரப்தம், ஆகா மியம், சஞ்சிதம் என்னும் முக்கால வினைத் தொடர்பையும் குறிப்பர். முன் சென்றவை எல்லாம் தேய்ந்து மறைந்து ஒழிந்த வையாம். அது எப்படி யிருந்திருப்பினும் அதுபற்றி அறிந்து கொள்ளுவதால் பெருநன்மை ஏதும் அடைந்துவிட முடியாது.

மறுமையாகிய வரும் பிறப்பில் உண்டாகக்கூடிய பெருமை சிறுமை களைப் பற்றி எண்ணிக்கொண்டும், கற்பனை பண்ணிக்கொண்டும் இருக்கக்கூடாது. அவை எல்லாம் கடவுட்சட்டமாகிய விதி முறைப்படி நியதிப்படி நடந்தேறிவருதல் உண்மையேயாம். ஆகவே அவற்றை ஆய்வதைவிட்டு இப்போதுள்ளதை யுள்ளபடி யோர்ந்து, உளம்கொண்டு வாழும்போது, திருவருள் அடைவால் அம்மை வாழ்வு அல்லது அருள் வாழ்வு (அ+(உ)+ம் =ஓம் என்னும்) பிரணவ தேக சுகப் பெருவாழ்வு பெற்று விளங்குதலே குறிக்கோளாய்க் கொண்டு வாழ்ந்திடல் வேண்டும். இந்த இம்மை யில் அம்மை அருள்வாழ்வைப் பெற்றுக் கொண்டால், புதிதாக ஒரு மும்மை நிறைவாழ்வைப் பெறுவோம். இந்த மும்மை என்பது முத்திவடிவான திரிதேகசித்திநிலைப் பெருவாழ்வாகும். இதனைத் தரும் செம்மைச் செம்பொருள் நம் அருட்ஜோதிச் செம்பொன் என்பது உண்மையாம்.

(8)

1351. எடுத்தெடுத் துதவினு மென்றுங் குறையா
1352. அடுத்தடுத் தோங்குமெய் யருளுடைப் பொன்னே

(உ-வி) இந்தப் பொன் மெய்யருள் விளங்கும் பொன்னாய் இருக்கின்றது. மெய் அருள் விளங்கும் பொன்னென்பதற்கு, மெய்யர் உள் விளங்கும் பொன்னெனவும் கொள்ளலாகும். அதாவது, மெய்ப்பொருளான உள்ளொளியாய் விளங்குகின்ற சத்திய ஞானியர்கள்தாம் உண்மையில் மெய்யராவர். இவர் களது உள்ளத்தில்தான் அந்த அருள் மெய்ப்பொருள் வெளிப்பட் டிலங்குவதாம். இந்த அருள் மெய்ப்பொருளை எவ்வளவு காலம், எவ்வளவு பேருக்கு எடுத்தெடுத்து வழங்கிக்கொண்டே யிருந்தா லும் சற்றும் குறைவுபடாதாம். எடுக்க எடுக்கத் தன் நிறைவு பெற்றே விளங்கிக்கொண்டிருத்தல் இப் பொன்னின் அருள் இயல்பாம்.

உலகில் பொருட்செல்வம் எவ்வளவு இருந்தாலும் எடுக்க வெடுக்கக் குறைவுபட்டு ஒழிந்துபோம். கல்விச்செல்வம், அறிவுச் செல்வம், இவற்றைவிட மிகச் சிறப்புடையது அருட்செல்வம். இவைகள் எடுக்கவெடுக்க வளர்ந்து கொண்டிருக்கும்.

''தியாகேசன் தாள்படுமித் தென்னிந்தியாவே
தயாமூல பண்டாரம் தான்'' — தயவுக்குறள்

அருட்பெருங்கடவுளைத் தயாமூல பண்டாரம் என்று கூறுவர். பண்டாரம் என்றால் கருவூலம் அல்லது பொக்கிஷமாம். தயா மூலம் என்பது தயவு அடிப்படையான பொருள். நம் பரம் பொருள், தன்னை முற்றிலும், தயவின் பெருஞ்செயற்பாடாகிய தியாகம் புரிந்து உயிர்க்கின்பம் வழங்கிக்கொண்டே யிருக்கின் றார். ஆதலின் தியாகேசர் என்ற பெயர் பெற்றுள்ளார் நமது ஆண்டவர். அவர் தியாகமூர்த்தியாக, தயாமூல பண்டாரமாக இருத்தலின், யாவையும் வழங்கிக்கொண்டேயிருப்பது இயல் பாய் இருக்கின்றது. இப்போது அப்பதியே, அருளுடைப் பொன்னாய் நம் வள்ளலார்க்குக் கிடைக்கப்பெற்றுள்ளதால், அவரே அருட்பிரகாச வள்ளல் உருக்கொண்டு அருட்பெருஞ் ஜோதிப் பொன்னையே பிறர் வேண்டியபடி யெல்லாம் ஆக்கி ஆக்கிச் சதா வழங்கிக்கொண்டே யிருக்கின்றார்.

(9)

1353. தளர்ந்திடே லெடுக்கின் வளர்ந்திடு வேமெனக்
1354. கிளர்ந்திட வுரைத்துக் கிடைத்த செம் பொன்னே

(உ-வி) அருட்பெரும்பதி, நித்த நிறைவோடு விளங்குகின்ற வராக இருக்கின்றார். அவரே செம்பொற்பொருளாகவும் விளங்கு கின்றார். அகத்தே அந்தரான்மப் பதியாய் நின்று உரையாது மௌனமொழியாக உள்ளத்தே யுணர்த்துகின்ற சத்திய வாக்கு இதுவாகும்: ''தளர்ந்திடேல், எடுக்கின் வளர்ந்திடுவேம் எனக் கிளர்ந்திட வுரைத்துக் கிடைத்திடச்'' செய்துள்ளதாம். இந்தச் செம்பொன்னை எடுத்துக் கொடுக்க கொடுக்கக் குறைவுபடாது வளர்ந்து நிறைவாகவே இருக்கின்றதாம். இது கடவுட் பொன் னின் உயர் சிறப்பாகும். ஒருவன் ஒரு பையில் ஓரளவு பொருள் வைத்திருக்கின்றான். அப்பொருளை எடுத்துச் செலவு செய்து கொண்டே யிருக்கின்றான். அப்போது அவனுக்குப் பொருள் குறைவுபடுவதை உணர்ந்து மனந்தளர்வான். பொருளெல்லாம் தீர்ந்துவிடுமே என்ற கவலை அவனுக்கு. அம்மாதிரி நம் வள்ள லுக்குப் பொருள் எடுக்க எடுக்கக் குறைந்துவிடுமோ என்ற கவலை ஏற்படாதிருக்க அந்தப் பொருள் வடிவான பரம்பொருளேதான். ''தளர்ந்திடேல் எடுக்கின் வளர்ந்திடுவேம்'', என்று உள்ளத்தில் ஊக்கமும் தைரியமும் உண்டாக உரைத்து உதவுகின்றதாம்.

(10)

1355. எண்ணிய தோறு மியற்றுக வென்றெனை
1356. யண்ணியென் கரத்தி லமர்ந்தபைம் பொன்னே

(உ-வி) ஒருவன் பெரும்பொருளுடையவனாக இருக்கலாம். இருப்பினும், அவன் அப்பொருளைப் பாதுகாப்பின் பொருட்டுப் பிற இடங்களில் சேமித்து வைத்திருக்கக்கூடும். எல்லா வற்றையும் பையிலும் கையிலும் சுமந்து கொண்டலைய மாட்டான். அப்படிப்பட்டவன் நினைத்தபோதெல்லாம்உடனுக்குடன் பிறர்க்கு அப்பொருளைக் கொடுக்கவும், உதவி அவர்களின் குறையைத் தவிர்க்கவும் கூடாதவனாயிருக்கின்றான். ஆனால் நம் அருட் ஜோதிப் பொன்னைப் பெற்ற அருட்பெருமான் அப்பொன்னை முழுமையாகவே கரத்தில் (அனுபவத்தில்) கொண்டுள்ளார். அதனால் அவர் எண்ணியவுடன் பிறர்க்கு வேண்டிய அளவு கொடுத்து உதவ முடிகின்றதாம். அந்த அருட்பொன்னை, நினைத்த போதெல்லாம் தானே, ''எண்ணியதோறும் இயற்றுக'' என்று வரங்கொடுத்துக் கரங்கொடுத்து உதவிக் கொண்டுள் ளதாம்.

ஆனால் இவரை அடுத்தவர்கள், இவரையும் அறியாது, இவர் பெற்றிருந்த அருட்பெருஞ் செல்வத்தையும் உணராது பக்குவப்படாதவர்களாய்ச் சூழ்ந்திருந்து வீண்போயினர். சுத்த சன்மார்க்கத்தைத் தெரிந்துகொள்ளும் ஆவலோடு யார் அவரை அண்டினார்கள்? அப்படிப்பட்டவர்களுக்கு, அந்நிலையில் உண்மை யைச் சொல்லியும் புரிந்துகொள்ளத்தான் இல்லை என்பது கண்டுதான், அவர் சிறிது காலத்திற்குப் பக்குவப்படும் வரை, எதனையும் வெளியிடாது கடையைக் கட்டிவிட்டார். எவர் என்று அருட்பக்குவம் அடைந்து உள்ளுருகி அவரை வேண்டுகின்ற னரோ, அப்பேர்ப்பட்டவர்களுக்கு, உண்மையை உளத்திலே உரைத்து உய்விக்க ஞானதேக வடிவில் எங்கும் நிரம்பியும், சுத்த சன்மார்க்கத்தில் தீவிர நாட்டங்கொண்டு முயல்வோர்க்கு, சுத்த சுகானந்த வடிவொடு தோற்றி உதவிடவும் உள்ளார். திரு வருள் இவை யாவும் இயற்ற அருள் பாலித்திருக்கின்றதாம்.

(11)

1357. நீகேண் மறக்கினு நின்னையாம் விட்டுப்
1358. போகே மெனவெனைப் பொருந்திய பொன்னே

(உ-வி) உயிர்கள், மக்கள் தமக்கு உரியவர்களிடத்து நட்புறவு கொண்டு, உதவுதல் இயற்கை. இது கடவுள் நியதிப்படி நடக்கின்றதாம். இக்கேண்மை குற்றமற்ற ஒன்றாக நெடுநாள் இடையறாது விளங்குதல் மிகச் சிறந்ததாம். அது உயர்ந்தோர் மாட்டே நின்று நிலவும். பிறரிடத்து, அவா, வெகுளி, மயக்கம் காரணமாக உண்மை நட்பு நீடிப்பதில்லை. அதனால் உதவியும் கிடைப்பதில்லையாம்.

நம் பெருமான் அருட்பெருஞ்ஜோதிப் பொன்னின் பெரும் நட்புறவை நன்கு பெற்றுக் கொண்டுள்ளார். அந்த உறவு எக்காலும் பிரிவற்று விளங்குவதாம். தாம் ஓர் ஒரு கால் மறந்து விட்டாலும், அது அவரைக் கொஞ்சமும் விட்டு விலகுவதேயில்லையாம். இத் தெய்வக் கேண்மை பண்டே தொட்டு,அறியமுடியாத நிலையிற்கிடந்த காலந்தொட்டே அகவுறவாக, அத்துவிதமாக இருந்து வருவதாம். மனிதன் அறியாதிருந்தபோதும், அறிந்தும் அடுக்காதிருந்தபோதும், அடுத்தும் மறதியால் விடுத்தலைந்த போதும்கூட இவனை விட்டு நீங்காது நிழல் போலிருந்து, விரும்பிய வண்ணம் எல்லாம் விட்டுப்பிடித்து உதவிக்கொண்டு வந்து இப்போது தன்னை முற்றும் இவர்க்கே வழங்கிவிட்டு, இவரில் இவராக இருந்து தன் கேண்மையின் மேன்மையை விளங்கச்செய்து கொண்டுள்ளார். இதனைத்தான்,

> "நீகேண் மறக்கினும் நின்னையாம் விட்டுப், போகேம்
> எனஎனைப் பொருந்திய பொன்னே,"

என்று குறித்துள்ளதைக் காண்கிறோம்.

(12)

1359. எண்ணிய வெண்ணியாங் கெய்திட வெனக்குப்
1360. பண்ணிய தவத்தாற் பழுத்தசெம் பொன்னே

(உ-வி) முன்பு, எண்ணியதோறும் இயற்றுக என்ற அருள் ஆணை பெற்று அதன்படி உதவலானார். இங்கு எண்ணிய எண்ணி

யாங்கு, நினைத்தது நினைத்தபடி அப்போதே அடைந்திட அருளாணை பெறுகின்றார். ஒருவன், எண்ணிய எண்ணியாங் கெய்திடுதல் வேண்டுமெனில், அவனது மனத்திண்மை எவ்வளவு மேன்மை யுடையதாயிருக்கவேண்டும்! நம் பெருமான் அருள் ஆற்றல் பெற்றவர் என்பது உண்மை. இந்த அருள் வலிமை இவர்க்கு எப்படியுண்டானது என்றால், முன் இயற்றிய தவத் தால் வந்தது என்கின்றார். ஓர் ஆன்மா அருட்பக்குவம் அடை தற்குப் பல்வேறு பிறவிகளில் ஏற்கும் பேரவத்தா அனுபவமே பெருந்தவமாக இருக்கின்றதாம். கண்மூடி நிஷ்டைகூடித் தவஞ் செய்தல் மட்டும் தவமல்ல, வாழ்வில் அவத்தைகள் பட்டுப்பட்டுத் தேறுதலே பெருந்தவமாகும். அத்தவமுயற்சியோடு திருவருள் இன்று கூடியதால், திருவருள் பழுத்து விட்டுள்ளதாம். பக்குவத் தால் அருள்ஒளியைத் திருச்சிற்றம்பலத்தில் கண்டு கொள்ளப் படுகின்றதாம். இதனையே சிற்சபையிற் கனிந்த நறுங்கனியே என்கின்றார் பிறவிடத்தில்.

கடவுளைத் தெய்வ உலகத்துப் பொற் கற்பகமரமாகவும் கற்பகக்கனியாகவும் கற்பனைசெய்து வழங்கியுள்ளனர் முன்னோர். அக்கனியும் பொன்மயமானதாம். இன்னும் கன்னற் கனி என்றும் அக்காரக்கனி என்றும், சிற்றம்பலக்கனி என்றும் கூறப்படுவன வெல்லாம் நம் அருட்பெருஞ்ஜோதி ஒன்றேயாம். இப்பழத்தைப் பெற்றவர் எண்ணியது எண்ணியபடி அடைவதோடு, இதன் மயமேயாகி அல்லது இதனையே தன்னில் நிறைத்துக்கொண்டு உலகமெல்லாம் கண்டு கொள்ள விளங்கிக் கொண்டுள்ளாராம்.

(13)

1361. விண்ணியற் றலைவரும் வியந்திட வெனக்குப்
1362. புண்ணியப் பயனாற் பூத்த செம்பொன்னே

(உ-வி) தவ தானங்களால் அடையப் பெறும் சுக போகங் களில் களித்திருக்கும் உயர்பதவிப் பிறப்பில் உள்ளவர்கள்தாம் வானவர்கள் என்றும் தேவர்கள் என்றும் கூறப்படுவர். இவர் களில் தலையாய்வர்தான் விண்ணவர்கோன், தேவேந்திரன் எனப் படுவான். இவனது நாடு, அளகை, அளகாபுரி அல்லது அமராவதி என உரைக்கப்படுகின்றது. இங்குதான் தேவதருவாகிய கற்பக மரம் உண்டென்பர். அம்மரத்தடி சார்ந்து கேட்டதையெல்லாம்

கொடுக்கக்கூடியது அம்மரத்தின் சிறந்த தன்மையாம். அப்படிப் பட்ட சம்பத்துடைய தேவேந்திரன் இப்போது ஆச்சரியப்பட்டு வியந்து, தன்னையே தாழ்த்திக்கொண்டு நிற்கின்றானாம். ஏனெனில், நம் வள்ளல் பெற்ற அருட்ஜோதி செம்பொன்மலர் கண்டே அப்படி இடிந்துபோய் நிற்கின்றானாம் அத்தேவராஜன். இதனைக் கண்டு அவன் ஏன் அப்படி வியப்பும், திகைப்பும், தாழ்ச்சியும் அடையவேண்டும்? என்றால், அந்தக் கற்பகத்தை விட இந்த அருட்ஜோதிமலர், எல்லாம் செய்யும் ஆற்றலைக் கொடுத்து, என்றென்றும் இன்பொடு வாழவும், எண்ணியவெல் லாம் இனிது புரியவும், தேவரும் மூவரும், முத்தரும் சித்தரும், இதுபெற்ற நம் வள்ளலை ஏத்தவும் செய்துவிட்டுள்ளதாம். தேவ கற்பகம் அண்டினோர்க்குத்தான் வேண்டினதைத்தான் கொடுக்க வல்லது. மனிதன் உண்மை அறியாமையினால் தான் பெறவேண் டியது இன்னது என்று புரிந்துகொள்ளாமல், அவா, வெகுளி, மயக்கத்தோடு எதையாவது வேண்டினாலும் அதுகொண்டு அற்பசுகம் பெற்று அழியத்தான் நேரும். ஆகவே, திருவருளால் பூத்துக் குலுங்கும் இந்த செம்பொன்னைக் கொண்டு, சிறந்த இன்பம் பெற்றுத் திகழலாகும். மற்ற பொன் பொருள் வேட்கை யால் உலகம் பாழ்பட்டுக்கொண்டிருப்பதற்கு மனித உளம் பழுக் காததே காரணமாம். அருட்பொன்னைப போற்றிக்கொண்டு நலம்பெற உலகவரை எல்லாம் அழைக்கின்றார் நம் அருட்பிரகா சப் பெருமான்.

(14)

1363. நால்வகை நெறியினு நாட்டுக வெனவே

1364. பால்வகை முழுதும் பணித்தபைம் பொன்னே

(உ-வி) இவ்வுலக வாழ்வில் திருவருள் உண்மை வெளிப்பட்டு, அழியா இன்பப் பெருவாழ்வு, மனிதப்பிறப்பில் அனுபவப்படவே எல்லாம் ஆணை செய்யப்பட்டுள்ளனவாம். ஒளிமயமான இறை நிலை, புறம்சூழ்ந்து செயல்பட, அகமிருந்து அருள் ஆணை விதி முறை செய்து கொண்டேயுள்ளதாம்.

ஆன்மாவுக்குத் தேக வடிவம் நான்கு வகையாக விளங்கு கின்றதாம். அது நால்வகை யோனி எனப்படும்: சராயுஜம், அண்டஜம், உற்பீஜம், சுவேதஜம் எனப்படும். இந்நான்கு வகை

வடிவங்களில் ஆன்மாக்கள் வாசம் பண்ணிப் பக்குவமடைய வேண்டியுள்ளனவாம். இதுதான் இயற்கையில் ஆன்மபரிபாகம் அடையும் முறையாகும். இந்நெறிமுறை சரிவர நடைபெறற்குத் தான், விதிச்சட்டம் திருவருளால் வகுக்கப்பட்டுள்ளதாம். பால் வகை என்பது விதிமுறையே. இந்தப் பால், வினை, தெய்வம், ஊழ் என்பனவெல்லாம் மேற்படி உடல் வாழ்வுக்குரிய நியதிச் சட்டத்தையே குறிப்பதாம். இவ் விதிமுறை செய்கின்ற பதியைப் பால் வரை தெய்வம் என்கின்றனர்.

பசும்பொன்னாகிய அருட்பெருஞ்ஜோதிபதி நம் வள்ளற் பெருமானில் அத்துவிதமாய் நின்று, மேற்படி நால்வகை நெறி யினும் நாட்டுக எனவே பால்வகை முழுதும், பணிக்கின்றதாம். ''ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தி மேனிலைக்கேற்றவே, அவை கடகு நியதிமுறைப்படி நான்குவிதப் பிறவி வடிவங்களில் செலுத்தி உலகியலை நிலைநாட்டி விளங்கச்செய்வாய்,'' என்று பணிக்கின்றதாம், ஆணையிடுகின்றதாம்.

ஆன்மாக்களுக்கு அகமும் புறமும் சூழ்ந்த அருள்ஒளியின் செயல்தான் உள்ளிருந்து உத்தரவிடுவதும், புறஞ்சூழ்ந்து நிறை வேற்றுகின்றதுமாய் இருக்கின்றதாம். நம் வள்ளலார் இந்த அருள் ஒளியைத் தன்னதாய்க் கொண்டு வாழ்கின்ற பெருநிலை பெற்றதால், அவர்தாமே திருவருளால் பால் வரை தெய்வப் பணியை ஏற்று, நால்வகை உயிர்களையும் நன்னெறிப்படுத்தி, மேனிலைக்கேற்றி வருகின்ளார் என அறிகின்றோம்.

(15)

1365. எழுவகை நெறியினு மியற்றுக வெனவே
1366. முழுவகைகாட்டி முயங்கிய பொன்னே

(உ-வி) முன்சொன்னபடி, நால்வகை யோனிப் பிறப்பு வடிவங்கள், ஆன்மாக்களுக்குப் புறத்தனவாய் அமைந்து வளர்ந் தோங்கி வாழ்க்கைக்குப் புறப் பொருட்டுணையாகின்றனவாம். இந்த நால்வகை யோனித் தேகங்கட்கு உள்வளர் உயிர், அக அறிவு விளக்க வகையால் ஏழ்நிலைகளில் வெளிப்படுகின்றன வாம். இவைகளே ஏழ்வகைப் பிறவி எனப்படும். ஒவ்வொரு பிறப்பிலும் இந்த அக அறிவு சிறிது சிறிதாக ஒவ்வொன்றாகக்

கட்டவிழ்ந்து மலர்கின்றதாம். இப்படி மலரும் அருள்ஒளியையே அகநின்று செயல்படுத்தவே அருட்பெருஞ்ஜோதிபதி அருட் ஜோதி வள்ளலுக்கு அன்புக்கட்டளை யிட்டுள்ளதாம். இப்படி அன்போடு பணித்துவிட்டுச் சென்றுவிடவில்லை என்பதையுணர்த் தவே, முழுவகை காட்டி முயங்கியதாக மொழியப்பட்டுள்ளதாம். செயல்முறையை முற்றும் உணர்த்தியதோடு, பிரிந்து சென்று விடாது உடன்கூடி இருந்து உதவுகின்றதாம்.

அருட்பெருஞ்ஜோதிபதியின் கலப்பு நம் வள்ளலுக்கு அகத்தும் புறத்தும் ஏற்பட்டதால், இந்த ஏழ்வகை நெறியின் செயலும், நால்வகை நெறியின் செயலும் புரியும் வல்லவராகி விட்டுள்ளார் என்பது குறிப்பு. இதனைப் பிறிதொரு பாவில்

''வான்பதிக்குங் கிடைப்பறியார் சிற்சபையில் நடிக்கும்
மணவாளர் எனைப்புணர்ந்த புறப்புணர்ச்சித் தருணம்
தான்பதித்த பொன்வடிவம் தனையடைந்து களித்தேன்
சாற்றுமகப் புணர்ச்சியினாம் ஏற்றமுரைப் பதுவே.''

என்ற அனுபவமாலைப் பாசுரப் பகுதியால் இவர்பெற்ற புறப் புணர்ச்சி, அகப்புணர்ச்சியின் பயனாக, நால்வகை யோனிப் புறத் தோற்றச் செயலையும், ஏழ்வகைப் பிறப்பின் அகவிளைவுப் பயனையும் தம் அனுபவச் செயலாகத் தெரிவிக்கின்றார். அகப் புணர்ச்சிச் செயலால்தான், முடிந்த அருட்சித்தி பெற்று பொன் மேனியோடு சுத்த சுகானந்த வடிவில் வாழும்நிலை அடைந்து விட்டுள்ளார் என்பது அறியலாகும்.

221. உலவா நிதி

(1)

1367. எண்ணிய படியெலா மியற்றுக வென்றெனைப்
1368. புண்ணிய பலத்தாற் பொருந்திய நிதியே

(உ-வி) நிதியாவது, திரட்டப்பட்ட அல்லது சேகரிக்கப் பட்ட பொன் முதலிய செல்வம். முன்தலைப்பில் புண்ணிய பயனாற் பூத்த செம்பொன் எனப்பட்டது. இங்கு புண்ணிய பலத் தாற் பொருந்திய நிதியாகப் புகலப்படுகின்றது. பொன்னின் நுண்ணணுக்கள் மென்மையாகத் தோன்றிப் படர்ந்து ஒளிரும்

போது பூத்து மலர்வதுபோல விளங்கும். அதன்பின் அப் பொன்னின் துகள்கள் கூடித் திரண்டபோது பொற்கனி போலாகித் திகழும். இப்படிப்பட்ட பொற்றிரள்கள் நிறைந்து எடுக்க எடுக்கக் குறையாது விளங்கும் பொக்கிஷமேதான் உலவாநிதியாக இங்கு உரைக்கப்படுகின்றதாம். இது நம் பல்வேறு பிறப்பின் திரட்டப்பட்டு, வளர்ச்சியடைந்துள்ள புண்ணியவசத்தால் கிடைக்கப்பெறுகின்றதாகும்.

அப்படித் திரண்ட உலவாப் பெருநிதியைத்தான் நம் வள்ளல் பெற்றுக் கொண்டுள்ளார். அதுவே அருட்பெருஞ் ஜோதிநிதியாம். ஒவ்வொரு பிறப்பிலும் புண்ணியப்பயன் திரண்டு பெருகிக்கொண்டே வருகின்றது; பாவத்தின் பயன் அடுத்து வரும் வாழ்வால் அழித்து ஒழிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றது. முடிவில் திருவருள்கூடும்போது பாவமெல்லாம் தீர்ந்து இல்லையாகிவிடுகின்றது; புண்ணியம் ஒன்றே திரண்டு பெருகி உலவாநிதியாகித் திகழ்கின்றதாம். இந்நிதி கொண்டு உலகில், அருட்பெருஞ்செயல் புரிந்துகொண்டு உளநிறை மகிழ் வோடு வாழ்ந்து வரலாகும். இது நம் பெருமான் பெற்ற பேறு. இதனையே சுட்டுகின்றன இவ்வீரடிகள்.

"எண்ணிய படியெலாம் இயற்றுக என்றெனைப்
புண்ணிய பலத்தாற் பொருந்திய நிதியே,"

என்பதாம்.

(2)

1369. ஊழிதோ றூழி யுலப்புறா தோங்கி
1370. வாழியென் றெனக்கு வாய்த்தநன் னிதியே

(உ-வி) மனிதன், அகம், புறமாகிய இருநிலை கொண்டு வாழ்ந்து விருகின்றான். அகநிலையாகிய ஆன்மவடிவம் அழி யாதது. ஆனால் .அவ்வக ஆன்மாவுக்கு வாழ்வு ஏற்படுவது, புறஞ்சூழும் தேகத்தால்தானாம். இத்தேகமோ, சதா தோற் றமும் மாற்றமும், ஆவதும், அழிவதுமாய் இருக்கின்றதாம். அக ஆன்மா அருள் கொண்டு விளங்குவது, புறவுடல் பொருள் கொண்டு பொலிவது.

எல்லாம் வல்ல நம் பதி, அருள் நன்னிதியாக இருக்கின்றார். அவரே அருளாகி அகத்தும், பொருளாகிப் புறத்தும் விளங்கிக் கொண்டுள்ளார். அந்த அருட்பெரும் பதியின் சேர்க்கையால், இவர்க்கு அளவிட்டறிய முடியாத பொருளும் அருளும் கிடைக் கப்பெற்றுவிட்டதால், புறவாழ்வுக்கான எல்லாப் பொருள்களும், அகவாழ்வுக்காம் நிறை அருளும் கொண்டு எல்லோரையும் பல்லூழி காலமாக வாழ்வித்துக்கொண்டும், தாமே வாழ்ந்து கொண்டும் இருக்கும் பேறு பெற்று விட்டுள்ளாராம்.

அருட்பெருஞ்ஜோதிநிதி பெற்றதால் ஏற்படும் இந்தப் பெரு வாழ்வு நிலை, மற்ற உலகறி நிதி, பரிசு, புதையல், தெய்வங்களின் உதவி எது பெறினும் இம்மாதிரி ஊழிதோறூழியும் உலவா திருந்து இன்பசித்தியோடு வாழற்கு ஆகாதாம்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பர். அருளுக்கெல்லாம், பொருளுக் கெல்லாம் தாயகமாகிய அருட்ஜோதி நன்னிதியையே பெற்றுக் கொண்டால், அவ்வுலகும், இவ்வுலகும், மற்றெவ்வுலகும் கண்டு வாழவும், வாழ்விக்கவும் முடிவதாம். இது நம் அருள்ஒளி நிதியின் பெருமையாம்.

(3)

1371. இதமுற வூழிதோ றெடுத்தெடுத் துலகோர்க்
1372. குதவினு முலவா தோங்குநன் னிதியே

(உ-வி) இந்த நல்லஅருட்பெருநிதி நமது அகத்தே குவித்து வைக்கப்பட்டுள்ளதாகும். இதனைப் பிறர்க்கு உதவுவதற்கே நம் பதி தியாகேசர் வழங்கியுள்ளார். இங்ஙனம் பரநலம் கருதி உலகுயிர்கட்கு இந்நன்னிதியினின்று வழங்கிக்கொண்டேயிருக்க வேண்டும் நாம் என்பதுவே நம் பதியின் திருவுள்ளமாகும். இந்நிதியை, எத்தனை கோடி மக்கட்கு, எத்தனை கோடி காலம் எடுத்தெடுத்து வழங்கினும், வழங்கிக்கொண்டே யிருப்பினும், எப்போதும், சிறிதும் குறைவதே இல்லையாம்! இதுவே இந்நிதி யின் அருள் மாண்பு. இதுகொண்டு உலகம் மெய்யான இன்ப மாகிய இதமுறுதல் வேண்டும் என்பது கடவுட்சித்தம்.

உலகம் புறப்பொருள்களைப் புலன் வேட்கையால் அதிகம் விரும்புகின்றது. ஆனால் கடவுள் தேவையான அளவு மட்டும் இயற்கையாய் வழங்கிக் கொண்டுள்ளார். வீண் முயற்சியால் அளவுக்குமேல் பொருள்களைப் பெற்றுக் களித்தலால் பலவகை யிலும் துன்பமே விளைகின்றது. மெய்யின்பம் இன்னதென்றே அறியவும் முடியாதுபோய்ப் பிறவியே வீணாகின்றதாம். ஆகை யால், மக்களைத் திருத்தி நல்வழிப்படுத்தி வாழ்விக்க வேண்டிய நம் பெருமான் அருள் நன்னிதியைப் பெற்று வந்துள்ளார். அந் நிதி புலனின்ப வேட்கையாளர்க்கு விளங்காது, கிடைக்காது. தயவுடைய நல்லவர்களுக்கே இத்தயாநிதியை வாரி வாரி வழங்குவார். இப்படியுள்ளவர்களுக்குக் கொடுக்கும் மெய்ப் பொருள்தான் இந்த உலவாநிதியாம். இதுபெற்றால்தான் மெய்யின்பமுறலாம். இச்செல்வம் என்றும் குன்றாதது, இன் பமே நல்குவதாம்.

(4)

1373. இருநிதி யெழுநிதி யியநவ நிதிமுதற்

1374. றிருநிதி யெல்லாந் தருமொரு நிதியே

(உ-வி) இருநிதி, எழுநிதி, நவநிதி என்பனவெல்லாம் இந்த உலகத்திலே மக்களுக்குப் புற வாழ்வு சிறக்கவே உதவுவனவாம். இவற்றில் இருநிதியாவது, பொருட்செல்வமும், புறக் கல்விச் செல்வமுமாம். பொருட்செல்வத்தின் பெருமையை விளக்கும் வகையாலும் தொகையாலும், பதுமநிதி என்று குறிக் கப்படும். இவை தத்துவப் பொருள் கொண்டதாம். கோடி கோடி யாம் பொன் மதிப்புடையதை பதுமநிதி என்றும், நூறு கோடா கோடி மதிப்புடையதை சங்க நிதி என்றும் கற்பனை செய்துள் ளனர். இவ்விரு வகை நிதியின் நிறைவு பெற்றவன் தேவேந்திர னாவான். சாதாரணமாய்ப் பொன் பொருளே மக்களுக்குப் பெருஞ் செல்வமாக இருக்கின்றது. இந்த இரு என்பதற்குப் பெரிய என்ற பொருளோடு, இருத்தல் என்ற செயலையும் உணர்த்துவதாம். இப்பற்றால், மேலும் மேலும் பிறப்பு வளர்ந்து இவ்வுலகிலேயே உழன்றுகொண்டிருக்கும்படி செய்துவிடுவது இவ்விருநிதி. மேல், எழுநிதி என்பதுதான் அகக் கல்வி அறிவுச் செல்வம். இதில் சிறந்தது ஏழாம் நிராதாரத்திலங்கும் கடவுள் ஞானமாகிய உண்மைச் செல்வமாம். இது ஆறறிவு நிறைவேறி

மேல் விளைவுற்றுத் திகழ்வது, கற்றதனால் ஆயபயன் கடவுளை அறிந்தடைவதுதானே!

அடுத்து, நவநிதி எனப்பட்டுள்ளது. இது இயல் நவநிதி என்று குறிக்கப்படுகின்றது. கடவுளான்மநிலை நவமணிப் பிரணவ பீடத்து, நவநிலை சித்திகளைத் தந்து உலகம் மதிக்க விளங்கச் செய்வதாம். ஆனால், இவைகள் எல்லாம் நம் அருட்பெருநிதிக்குச் சிறிதும் ஒப்பாகாதாம். இவ்வருள் நிதி யொன்றே உலகறி திரு நிதிகள் யாவையும் தருவதாகும். மற்ற எந்த ஒரு நிதியாலும் அருள் நிதியைப் பெற முடியாதாம். ஆகவே இவ்வருட்பெருஞ் ஜோதி நிதியையே நம் குறிக்கோளாய்க் கொண்டு, சுத்த சன் மார்க்கத்தில் வாழ்ந்தால், திருவருளும் உடனிருந்து விரைவில் பெருவாழ்வில் என்றும் விளங்கச் செய்யும்.

(5)

1375. எவ்வகை நிதிகளும் இந்தமா நிதியிடை
1376. அவ்வகை கிடைக்குமென் றருளிய நிதியே

(உ-வி) செல்வம் பலவாக உள்ளனவாம். பொருட் செல்வத்தால் புலன் இச்சை பெருகுகின்றது. மக்கட் செல்வமும் நிறைகின்றது. இதன் விளைவு இன்றைய உலகம் அறிந்ததே! சுருக்கிட வழியில் லாது அவத்தையுறுகின்றது உலகம். இன்னும் கலைச் செல்வம், அறிவுச் செல்வம், குணச்செல்வம், சித்த மார்க்கத்தில் புகழ்ப் படும் அஷ்ட ஐசுவரியம் என்னும் யோக சித்திச் செல்வம் முதலி யனவும் இந்த நம்முடைய அருட்பெருஞ்ஜோதி ஆகிய பெருநிதி யொன்றினிடத்திருந்து திருவருளால் பெறலாகும். எப்படிப்பட்ட செல்வத்தை வேண்டினும், வேண்டியாங்கு தரவல்லது நம் அருட் பெருஞ்ஜோதியே ஆம்.

தயவு அல்லது அருள் அடிப்படையில் இருந்து வாழ முற்பட் டால்தான் நாம் எல்லா நல்ல செல்வங்களையும் நிறையவே பெற்று நீடு மகிழ்ந்து வாழலாம். தயவில்லாது வேண்டியும் முயன்றும், பெறுகின்ற எச்செல்வத்தாலும் நன்மையைவிடத் தீமையே அதிகம் வந்து சாரும். ஆகையால் தயவோடிருந்து இவ்வருள் நிதியை வேண்டுவோம்; பெற்று வாழ்வு அடைவோம். அருட் ஜோதி வள்ளல் பெற்று அனுபவத்தில் கண்டு எல்லாரும் உரிமை

யோடு அடையத்தான் சுத்த சன்மார்க்கத்தை வகுத்து வழங்கி யுள்ளார். அதனால், மற்றவற்றில் பற்றொழித்து, அருள்வழியில் வந்து, இந்த மேலான அருள்நிதியைப் பெற்று உலகமெல்லாம் உய்வடைவதாக.

(6)

1377. அற்புதம் விளங்கும் அருட்பெரு நிதியே
1378. கற்பனை கடந்த கருணைமா நிதியே

(உ-வி) பொருட்செல்வத்தை அதிகம் பெற்றவன், அது கொண்டு உலகில் புகழ்பட விளங்கும், அருங்கலை விளக்கப் பெருஞ்செயல்பல புரிந்துவிட்டுச்செல்கின்றான். அச்செயல்களைக் கண்டு களிக்கின்றது மக்கள் இனம். இதுபோல், ஒருவன் தான் அடைந்துள்ள அரிய ஆற்றல்களைக் கொண்டு பலர் புகழ சித்திச் செயல்களைப் புரிந்து உலகத்தாரால் கொண்டாடப்படுகின்றான்.

உலகில் விளங்குகின்ற செயலகளிலே, இயற்கையில் நிகழ்ந்து கொண்டுள்ளவை, சாதாரணச் செயல்களாகக் கருதப் படுகின்றன. இவைகளை எல்லாம் தினமும் பார்த்துப்பார்த்துப் பழகிப்போய் உள்ளதால், கண்டு வியப்பொன்றும் அடைகின்ற தில்லை. உண்மையில் அவைகள் எல்லாம் கடவுளின் அருட் பெருஞ்செயலின் வெளியீடே இவை பிறரால் எக்காலத்தும், எவ்வளவு முயன்றாலும் அடையமுடியாத ஒன்றாம். இந்த இயற் கைப் பேராற்றல் செயல்களுக்கு மாறாக, ஒருவன் சில அசாதா ரணச் செயல்களைப் புரிகின்றபோதுதான் அவைகளை அற்புதம்! அற்புதம்!! என்று வியந்து கொண்டாடுகின்றனர் உலகில் பலர். இவற்றிற்குமேலாக அருள்விசேடம் பெற்ற பெரியோர்கள் சித்திச் செயல்கள் பல புரிவதைக் காணும்போது உலகம் பெரிதும் வியந்து போற்றிக் கொள்ளுகின்றது. இவற்றிற்கெல்லாமேலான இறந்தார் எழுதல் முதலான சுத்த சன்மார்க்க சித்திகளை வழங்குவது நம் அருட்பெருநிதியின் ஆற்றலாகும். இந்த அரு ணிதிக்கு ஒப்பாகப் பிற எதனையும் கூற முடியாதாம். கற்பனை யால் எந்த விதத்தும் புனைந்து கூறிவிடமுடியாதது இக்கருணைப் பெருநிதி. கருணைமாநிதி என்றால், கருணையுள்ள பெருஞ்செல்வம் என்று பொருளாக்கலாம். ஆனால், கடவுட்கருணையின் உண்மை ஆற்றலும் பெருமையும் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? அந்தக் கடவுள்தானே ஒவ்வொருவருமாய் உருவாகி

விளங்கலின், ஒருவனுக்குக் கருணாநிதி என்று பெயர் இடுதல் எவ்வளவு பொருத்தமானது! ஆனால் அவன் தன்னுண்மையை தன்னுண்மையான இறையியல் உண்மையை அறிந்து அதற்குத் தக வாழாது மாறுபாடாய் வாழ்ந்து வீண்போவது எவ்வளவு அறியாமை! கடவுளின் கருணைமா நிதியால் உலகம் நலமெல்லாம் பெற்றுத் தழைத்தல் உண்மையாம்.

(7)

1379. நற்குண நிதியே சற்குண நிதியே
1380. நிற்குண நிதியே சிற்குண நிதியே

(உ-வி) நம் அருட்பெரும் செல்வம், எத்தனையோ வகையில் புனைந்து புனைந்து போற்றப்படுகின்றது. ஏனென்றால் அவர் எல்லாம் ஆனவராகவும் எல்லாத்தன்மையினராகவும், நன்மைகளுக்கு உறைவிடமாகவும், தீமைகளையெல்லாம் ஒழிப்பவராகவும், எதற்கும் எட்டாதவராகவும், உலகம் அறிந்த எதுவும் அல்லாதவராகவும், கற்பனையிற் படுகின்றவர்போல் தோன்றியும், அக்கற்பனைக்கு அப்பாலாய்க் கடந்து விளங்குபவராகவும் உள்ளார் என்று உணர்ந்துணர்ந்து ஓதினாலும் உணரப்படாராய் உள்ளார் என்பது யாவும் உண்மையே ஆம்.

ஆகவே, இங்கு நம் உலவாப் பரம்பொருளே இப்படி, நற்குணநிதியே என்றும், சற்குணநிதியே என்றும், நிற்குணநிதியே என்றும் சிற்குணநிதியே என்றும் புனைந்துரைக்கப்ப்டுகின்றார். இவற்றின் கருத்து விளக்கம்: நற்குணம், பிறர்க்கு நன்மையையே வழங்கி நல்லின்புறச்செய்யும் தன்மையாம். இத்தன்மை கொண்ட பரம்பொருள் தான் நற்குணநிதியாம். இதுபோல், சத்தாம் சுத்த நித்தியத் தன்மை கொண்டிலங்கும் பரம்பொருளே சற்குணநிதி எனப்பட்டுள்ளது. மேல், குறிப்பிடத்தக்க எக்குணமுமில்லாது நிர்மல சுத்த அருள் வண்ணமாய் எதற்கும் அறியப்படாததாய் இருத்தலின், நிர்க்குண நிதி என நிகழ்த்தப்படுகின்றார் நம் பதி. பின்னர், இப்பதி எல்லாம் அறிந்த, சர்வஞ்ஞன் என்னும்சித்தாம் ஞான வடிவினனாய்,தன்மையினனாய் உள்ளவன் என்ற கருத்தை விளக்கவே சிற்குணநிதி என்று செப்பப்பட்டுள்ளது. இப்படியுள்ள நம் அருட்பெருஞ்ஜோதியாம் பரம்பொருள், நமக்குத்

திருவருளால் வழங்கும் செல்வத்துட் செல்வம் அருட்பெருஞ் ஜோதியேயாம். இதுகொண்டு உலகம் உலவா இன்பம் பெறும்.

222. ஜோதி மலை

(1)

1381. பளகிலா தோங்கும் பளிக்குமா மலையே
1382. வளமெலா நிறைந்த மாணிக்க மலையே

(உ-வி) இப்பொழுது நம் பதி அருட்பெருஞ்ஜோதி மலை யாகக் கண்டு துதிக்கப்படுகின்றது. இறையுண்மை நிலையை மலை யாகக் குறிக்கப்படக் காரணம் உண்டு. யாதெனில், அகண்ட பெருவெளி முழுதும், அனாதி இயற்கையுண்மைப் பொருளாக விளங்கிக்கொண்டே யிருக்கின்றது நம் அருட்ஜோதியாம். இது எதனாலும், எக்காலும், எவ்வளவும் தாக்கப்படாததாய், அசைக் கப்படாததாய், சற்றும் அசைவற்றதாய் இருந்து கொண்டுள்ளது அந்த இறையொளி நிலை. மேலும் உலக மலைகளிற் காணப்படும் பலவாகிய உயர் பொருள்களும், தன்மைகளும், சூழ்நிலைகளும் வழங்கும் நலன்களைவிட எவ்வளவோ பெருநலன்களை வழங்கிப் பேரின்ப வாழ்வில் விளங்கச் செய்யும் ஆற்றல் இந்தக் கடவுட் ஜோதிமலைக்கே உண்டு என்று அறியலாகும். ஆனால் இந்த ஜோதிமலை அருள் வெளியிடைதான் தோன்றுகின்றதேயல்லா மல் புறத்தே வெள்ளிடை மலையாய் புறக்கண்ணுக்கு என்றும் தோன்றுகின்ற தில்லையாம்.

இந்த ஜோதிமலை பளகு (குற்றம்) இல்லாதது. எந்த வகை ஆபத்தும், கேடும், பயங்கரமும், குறைபாடும் இம்மலையில் இல்லை என்பது உண்மையாம். இது உயர்ந்தோங்கியுள்ளது. இதனால் ஓங்கல் என்னும் பெயர்க்கும் பொருத்தமாயுள்ளதாம். மேலும் இது சுத்தமான பளிங்குபோல் இருப்பதாம். சுத்தப்படிகம் போல் இருத்தலின், உச்சிச் சூரியனின் ஒளிபட்டு எதிர் ஒளி செய்யும்போது பெருஞ்ஜோதிப் பிரகாசமாய்த் தோற்றுவதாம். சுத்தப்படிகம் உச்சிச் சூரியனைச் சந்தித்தால் எத்தன்மை அத் தன்மை ஈசனிலை என்பதால் பளிக்குமலை எனக் குறித்தது பொருத்தமேயாம். அடுத்து அது மாணிக்க மலையாகக் கூறப்படு கின்றது. கடவுளைச் செம்பொருள் என்றும் சிவம் என்றும்

மாணிக்கஜோதி என்றும் புனைந்து கூறுவதில் எவ்வளவோ பொருட்செறிவு உண்டு. இத்தன்மையால், மலைவளமும், நிலவள மும், மனிதனின் இரத்தத்தால் உடல் வளமும் விளங்குதல் நம் அகம் கண்ட மாணிக்கமலையின் செயலாக இருக்கின்றதாம். இந்த மலை வளர் செம்மணியே அருட்ஜோதியாய்ச் சூழ்ந்து சுக வாழ்வு தருவதாம்.

(2)

1383. மதியுற விளங்கு மரகத மலையே
1384. வதிதரு பேரொளி வச்சிர மலையே

(உ-வி) சூரியனுக்குத்தான் இயற்கையில் நிறையொளி இருந்து, கதிர் வீசிக்கொண்டு இருக்கின்றது. அந்த ஜோதிக் கதிர்களே மற்ற கோள்களின் மேற்பட்டுப் பிரதிபலிக்கும்போது, அக்கோள்கள் உண்மையில் ஒளி உடையனபோல் தோற்றுகின் றன. உண்மையொளி கோள்களில் இல்லை. வெற்றுப் பிரதி பலிப்பே. வான்வெளியிற் கலந்த வாயுப்பொருட்கள், மின் அணுப் பொருட்கள், கோள் நில பொருட்சக்திகள் எல்லாம்தான், அக் கோள்களுக்கு ஒளியுளபோல் நமக்கு இங்கு தோற்றுவிக் கின்றன.

நிலவுக் கோளத்திலும் புதனிலும் பட்டுப் பிரதிபலிக்கின்ற ஜோதி, மரகதமலை மீதுண்டான ஒளிபோல் சந்திரிகை விளங்கு கின்றதாம். இந்த மதியொளியில் தண்ணமுத சக்தி உண்டாகி நம் தாவரப்பொருள்களுக்குப் பசுமை வளம் தருகின்றது; கனி கட்கு சுவையூட்டுகின்றது; மனித மதியில், உடலில் விளக்கமும் ஆற்றலும் வளரவும் தேயவும் செய்கின்றதாம். நம் ஜோதி மலையே இப்படி மரகத மதி ஜோதி சக்தியை நம்முள் விளங்கச் செய்கின்றதாம்.

வச்சிரம் அல்லது வைரம் அதிக வன்மையும் வெள்ளொளிக் கதிர்வீச்சும் பெற்று விளங்குவது. இவ்வொளிநிலை சுக்கிர கிர கத்தின் பிரதிபலிப்பாய்த் தோன்றி விளங்குவது. இது மனி தனில் சுக்கில சக்தியாய் விளங்கி உடல்வன்மைக்கும் வளவாழ் வுக்கும் உதவுகின்றதாம். அருட்ஜோதியின் மூலம் இதன் பயனை ஏற்கும்போது வதி தருவது, அதாவது வாழ்வு தருவ தாம்.

(3)

1385. உரைமனங் கடந்தாங் கோங்குபொன் மலையே
1386. துரியமேல் வெளியிற் ஜோதிமாமலையே

(உ-வி) அருட்பெருஞ்ஜோதிப் பொன்மலையின் உண்மையை, அதன் அனுபவ விளக்கத்தை வெளியிடற்கில்லை என்று கூறப்படுகின்றது. ஏனெனில், இந்தப் பொன்மலை மனதுக்கு விஷயமாகாததாம், மனதால் உணர்ந்துகொள்ள முடியாததாம். மனத்தாலே உணர்ந்துகொள்ள முடியாதது என்றால், அதைப் பற்றி விளக்கிச் சொல்ல முடியாது, எழுத்தால் எழுதிக் காட்டவோ உருவாற் செய்துகாட்டவோ எப்படி முடியும்? ஏதேதோ கற்பனைசெய்து, தெரிந்தவற்றோடு ஒப்பிட்டு ஏக உவமையாற் கூறவந்து குழப்பநிலையையே உண்டுபண்ணிவிட்டுள்ளனர் சிலர். எனவே, பொன்மலை எனக் குறிக்கப்பட்ட கடவுள் விளக்கம் மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதது என்று முதல் அடியில் குறித்துள்ளார்.

உரை, மனம் கடந்த கடவுளை, ஒளியை, எப்படித்தான் உணர்வது? உணர்ந்து தானே பற்றுவைத்து அடைய முடியும், அனுபவிக்க முடியும். உண்மையில் உணர்ந்து கொள்ளவிட்டால், மூடமாய் நம்புவதாலோ, நம்பாமல் இருப்பதாலோ ஒரு நன்மையும் உண்டாகாது. ஆகவே மெய்ப்பொருளை உள்ளபடி யுணர்ந்து பற்ற வழிகாண வேண்டியுள்ளதாம்.

மனம் ஒருமைப்படும்போது அதன் ஆற்றல் மிகுகின்றது. அப்படி ஒருமைப்பட்ட மனத்தை ஒன்றன்மீது செலுத்தினால், அதன் உண்மை வெளிப்படுவதாய் இருக்கின்றது. இக்காரணத்தால் மனதை அகமுகமாகத் திருப்பி இந்த ஜீவதேகத்தின் ஆதாரவித்து ஆகிய ஆன்ம அணுநிலையில் (சிரநடு நிலையில்) செலுத்தினால், அங்கு அந்த ஆன்ம உண்மை விளக்கம் சிறிது சிறிதாக வெளிப்படுகின்றது. தயாவொழுக்கமும், உளநெகிழ்ச்சியும் கொண்டு உள்நிலைக்கும்போது, விழிப்புநிலையும், கனவு நிலையும், உறக்க நிலையும் கடந்துநிற்கும் நிலையிலே, சூழ்நிலை முற்றும் உள்ளுணர்வு நிரம்பி, நினைப்பும், மறப்புமில்லாது விளங்கும் நிலையையே துரியமேல் நிலையாக அனுபவப்படுவதாம். அக விழிப்புற்று மெய்யுணர்வு கெடாது இருக்கும் நிலையே துரிய நிலை என்றும், அறிதுயில் நிலை என்றும், தூங்காமல் தூங்கும்

யோக நித்திரை நிலை என்றும் கூறப்படும். இந்நிலையில் சலன மற்று அலைவற்றுக் கலையாது இருத்தலின், துரியமலை என்று குறிக்கப்படுகின்றதாம். இந்நிலையுற்று ஒடுங்கி மறைந்திடாது, தயவு உணர்வு நிரம்பியவர்களாய், மக்கள் வாழ்ந்தால் சகல நன்மையும் இன்பமும் பெற்று நிலவுவார்கள்.

223. இயற்கைப் பொருண்மை

(1)

1387. புற்புதந் திரைநுரை புரைமுத லிலதோர்
1388. அற்புதக் கடலே அமுதத்தண் கடலே

(உ-வி) உலகில் இயற்கைப் பொருள்கள் நிரம்பியுள்ளன. அந்தப் பொருள்கள் யாவும், தோற்றிய இறையொளியில் நுண்ணிலையில் ஆற்றல்கள் வடிவாயிருந்து இப்படிப் பலவாம் இயற்கைப் பொருள்களாய்த் தோன்றியுள்ளன. இந் நிலவுல கத்தில் கடல் ஒரு முக்கியப் பொருளாய்க் காண்கின்றோம். இந்தக் கடலைப் பார்க்கும்போது, அகமெய்ஞ்ஞானி, கடவுள் உண்மையை இக்கடலின் இயல்போடு ஒப்பு நோக்கிச் சிறப் பறிந்து வெளியிடுகின்றான். உலகிலுள்ள எப்பொருளிலும் கடவுள் விளக்கம் ஏகதேசம் கண்டுகொள்ளக்கூடியதாயுள்ள தாம். எல்லாம் ஆனவர் நம் பதி, என்பதன் உண்மையை உளம் கொண்டால், எப்பொருளும் கடவுள் உண்மை கொண்டனவே என்று புரிந்து கொள்ளுதல் எளிதாம்.

இங்கு நம் அருட்பெருஞ்ஜோதிபதியையே ஒரு தெய்விக நலம் கொண்ட பெருங்கடலாகக் குறிக்கப்படுகின்றதாம். இது ஓர் அற்புதக் கடல், அமுதத் தண் கடல் எனப்படுகின்றது. இக் கடலில், புற்புதம் (நீர்க்குமிழி) திரை, (அலை) நுரை (நுண்ணிய திரண்ட வெண் மாசுப்பொருள்), புரை, (உப்புச்சத்தால் உறைந்து அல்லது பனியால் இறுகிப்போம் படிவ நிலை) இவை கள் ஏதும் இல்லாதது நம் அருள் அமுதக் கடல்.ஆதலின் இது வியப்புக்குரியதாம். அகநிறை அருளற்புதக் கடலில் என்றும் நிலை யான இன்போடு, எல்லாம் வல்ல சக்தி சித்திகளோடு ஆனந்த மாக வாழலாகும். இதற்கு முற்றும் மாறானது புறவுலகக் கடல். இதில் தோற்றிடும் நீர்க்குமிழி புறவாழ்வின் அநித்தியத் தன்மை

யைக் குறிப்பது; அலை—அவத்தைப்பட்டு உழலும் மனிதனின் அவலத் தன்மையை உணர்த்துவது; நுரையும் புரையும் உலக வாழ்க்கையின் விளை அற்பப் பயன்களையும் அனுபவங்களையும் சுட்டுவனவாம். மேலும் புறக் கடலில் ஆபத்தை விளைவிக்கும் புயல், சுழல் முதலியன உண்டாகலாம்; சுறா முதலிய பிராணி களால் தீங்கு நேரலாம். ஆனால் நமது அருட்ஜோதிக் கடலிலோ என்றும் சுகானந்த வாழ்வே விளங்குவதாம். ஆகவே நாம் இந்த அருள்நிலை அடைந்து ஆனந்தானுபவத்தோடு அனகமாக இவ் வுலகில் வாழவேண்டும் என்பது திருவுளக் குறிப்பாம்.

(2)

1389. இருட்கலை தவிர்த்தொளி யெல்லாம் வழங்கிய
1390. அருட்பெருங் கடலே ஆனந்தக் கடலே

(உ-வி) உலகிலுள்ள சமுத்திரம் கருநீல வண்ணத் தோற்ற முடையது. மங்கொளியிலும் கங்குலிலும் பேரிரைச்சலுடன் விளங் கும் கடல் அச்சத்தை யுண்டு பண்ணுகின்றதாம். இக்கடலின் மேல் தோற்ற அலை நிலைக்கு அடியில் செல்லச் செல்ல இருட்செறிவும் அழுத்தமும், உயிர்ப்புக்கும் உயிருக்கும் அவத்தையும், ஆபத்தும் பெருகித் துன்பமுண்டாகின்றதாம். இக்கீழ் நிலைகளே இருட் கலைகளா மொழியப்படும். இப்படிப்பட்ட இருணிலை யாவும் ஒழிந்த ஒளிமயமான சுகானந்த நிலையமாக விளங்குகின்றதாம் இந்த அருட்பெருங் கடலகம். அருட்பெருங் கடலே, ஆனந்தக் கடலே என்றதால், நம் அக அருட்பெருங் கடலின் இன்பானு பவம் விளங்குவதாம்.

இரவு வேளையில் அலைகடலைப் பார்க்க அச்சமாயுள்ளதோடு எப்பொருள்களும் தெளிவாய் விளங்காது, இயற்கையெழிலைக் கண்டின்புறக் கூடாததாயு மிருக்கின்றதாம். அந்த இருட்பட லத்தை யொழித்தெழுகின்ற ஞாயிற்றைக் காணும்போது தெளிவும் இன்பமும் ஏற்படுகின்றனவாம். நம் அருட்பெருங் கடலில் அருட் ஜோதி விளக்கம் எப்போதும் இருந்துகொண்டிருப்பதால் இருட் கலை முற்றும் ஒழிக்கப்பட்டுள்ளதாகும். ஆகையால் இங்கு எப் போதும் அருள் இன்பமே நிரம்பி விளங்குவதாம்.

(3)

1391. பவக்கடல் கடந்துநான் பார்த்தபோ தருகே
1392. உவப்புறு வளங்கொண் டோங்கிய கரையே

(உ-வி) இது கடலைக் குறித்து விளக்கம் செய்யும் பகுதி அல்ல. அக்கடலை அடுத்து உயர்கரையின் உயர்வை எடுத்து உணர்த்தும் பகுதியாகும்.

தொல்லை இரும் பிறவியைத் துன்பப் பெருங்கடலாகக் கண்டு, அதினின்று, தப்பிக் கரையேறி, நல்வாழ்வு பெறவே யாவரும் விரும்புகின்றனர். திருவருள் வலத்தால் நாம் பவ (பிறவி)க் கடலின் கரையை அடுத்துள்ளோம். முன்பு எவ்வளவு காலமாக, எத்தனை பிறவிச் சூழலால் எவ்வளவு துன்பப்பட்டுள் ளோமோ நாமறியோம். இந்த ஒரு பிறவியில் படுந்துன்பமே போதும், போதும் என்றாகி, எப்போது எப்படி அருட்பெருங் கரையேறி ஆனந்தபதியை அடைவோம் என்று ஏங்கி எதிர் பார்த்துக்கொண்டுள்ளோம். இது சமயம் நம் வள்ளல் உதவு கின்றார்; அவரனுபவத்தால் நமக்கும் வழிகாட்டிக் கொடுக் கின்றார்.

திருவருளைப் பெற்ற பெருமான், பிறவிக் கடற்கரையை நெருங்கியவராக இருக்கின்றார். ஆகையால் அருட்கரையை அகக்கண்ணால் கண்டு அகமகிழ்கின்றார். உவப்புறு வளம் கொண்டு ஓங்கும் கரையே, என்கின்றார். அக்கரை ஏறிய அவர் உவப்போடு, அருள் வள வாழ்வு கொண்டு ஓங்குகின்றார். கரை சார்ந்த அவர், உடலைவிட்டுக் கடவுள்மயமாகி மறைந்து போய் விடவில்லை. ஆனால் இவர் சார்ந்த கரை அருட்பெருங்கரையாம். கடவுளே இவரில் பூரணமாய் இறங்கிக் கலந்தொன்றி, அருட் பிரகாச வள்ளலென, அருட்பெருஞ்சித்தியொடு விளங்குகின்ற வராகியுள்ளார். இதனால் இவர் உடலைவிட்டுப் போகவில்லை. உடலை மாற்றிக் கொண்டு வாழற்குத் திருவருளே நிறைந்து கொண்டிருக்கின்றது. எனவே இவர் உடலை இழக்காமலே, இறக்காமலே, இறையருள்வடிவேற்று இலங்கும் பேறு பெற் றுள்ளார். இவ்விறையொளி வடிவோடுதான் வாழ்கின்றார் நம் வள்ளற்பெருமான். இதுதான் மேற்பிறவி சாராவண்ணம் இலங்கும் முறையாம். இதுவன்றி உடலை விட்டுக் கடவுள் ஐக் கியமாய்ப் போவது, கடவுள் வாழ்வாகாது. மறுபடியும் பிறந்து

அனுபவ வாழ்வு பெற வேண்டுவது அவசியமாம். ஆகவே, பிறவா நிலையுறுவது முடிவாகாது. இறவாமையுற்று வாழ்வது தான் ஆனந்தநிலையாம்.

(4)

1393. என்றுயர்ச் சோடைகள் எல்லாந் தவிர்த்துள

1394. நன்றுற விளங்கிய நந்தனக் காவே

(உ-வி) நந்தனம் என்பது நந்தவனம் அல்லது நந்தனவனம் ஆகிய பூந்தோட்டமாம். கா என்பது சோலையாகும். ஆகவே நந்தனக்கா என்றால், வளமிக்க மலர்நிறைந்த பூஞ்சோலை அல்லது பூங்கா (Park) ஆம். தினசரி வாழ்வில் உண்டாம் களைப்பும், சோர்வும் நீங்கி மகிழ்வு பெறப் பூங்காவில் மாலையில் உறைதல் மக்கள் வழக்கம். இதுபோல நம் அருட் டெரும்பதியே நம் துயரங்களும், அவா முதலியவற்றால் உண் டாகும் சோர்வு நோய்களும் போக்கி இன்பம் வழங்குவதற்காக நம் உள்ளத்திலேயே அருள்மணம் கந்திக்கும் பெரு நந்த வனத்தை வைத்து வளர்க்கின்றார். ஆதலின் இந்த அகம் வளர் பூங்காவை அருளால் அடைந்து இன்பப் பெருவாழ்வு பெற வேண்டுவதுதான் ஒவ்வொருவரின் கடமையாகும்.

நம் வள்ளலார் உளத்திற்கொண்ட பூங்கா அருள்நலம் நிரம்பிய (ன்றாகும். இதனால், அவரது துயரங்களும், வறட்சித் தன்மையுட பிறவான கேடுசூழ் தன்மைகள் எல்லாமும் ஒழிந்து, உள்ளமும், உயிரும், உடம்பும் சுகானந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளும்படி செய்துவிட்டதாம். இதையே, யீண்டு, ''என் துயர்ச் சோடைகள் எல்லாம் தவிர்த்துளம் நன்று உற விளங்கிய நந்தனக்காவே,'' என்றுள்ளார். உள் விளங்கும் அருள்ஒளி நிலையத்தில் வாழும் பேறு பெற்றுவிட்டால், புறத்தில் எவ்விட மும், எச்சூழலும் நன்னலஞ்செய்வனவாகவே திகழும் அல்லது அமைந்திலங்கும். திருவடி உளம் கொண்டிருந்த அடியார்க்கு, நீற்றறையும்கூட குளிர் தென்றலும், நறுமண நிறை இடமுமாய் விளங்கி இன்பமே நல்கியதாய்க் கூறப்படும் உண்மை இதனால் தெளியலாம். ஆகவே பிறவிடத்தெங்கும் கிடைக்காத பெருஞ் சுகமெல்லாம் இந்த அருள்ஒளி யுளத்திருந்தே பெறலாம் என்று அறியலாகும்.

(5)

1395. சேற்றுநீ ரின்றிநற் றீஞ்சுவை தருமோர்
1396. ஊற்றுநீர் நிரம்ப வுடையபூந் தடமே

(உ-வி) நல்ல பூங்காவின் நடுவே, படிகம்போல் தெளிந்த ஊற்றுநீர் நிரம்பிய மலர்த்தடாகம் ஒன்றுக்குச் சிறிதே ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்து நம் அருட்பெருஞ்ஜோதிப் பூந்தடம்.

நல்ல பூந்தடாகங்கள் அங்கங்கு உள்ளன. அவற்றில் ஒன்று இதுபோன்றது என்று எண்ணிப் பார்க்கலாம். அது, சுத்தமான தெளிந்த கண்ணாடி போன்ற நீர், அதுவும் தீஞ்சுவையும் தண்மையு மான நீர் நிரம்ப உடைய அழகிய சூழல்கொண்ட நீர்நிலையாக இருக்கவேண்டும். அச்சுத்த நீரிலே தாமரையும் குமுதமும் பூத்திருக்கவேண்டும். என்றும் வற்றாத ஜீவவூற்று உடையதாக இருக்கவேண்டும். அந்நீர் அருள்அமுத நன்னீராக இருந்து, அருந்துவோர்களுக்கு, நோயற்ற வாழ்வும் குறையற்ற செல் வமும் அருளி, சுகானந்த வாழ்வில் தழைக்கும்படி செய்து, அங்கிருந்தே அனகானந்த வாழ்வு நடத்தவுதவ வேண்டும் என்பது ஆண்டவர் திருவுள்ளம். இப்படி ஒரு சிறு குளத்தைக் கற்பனை செய்து கொள்ளலாம். உண்மை அனுபவம் பெறத் தயா வொருமையோடு தலைநடு கடவுள் ஒளி வளர் தலத்தை யோர்ந்துகொண்டு வாழலால் பெருநலம் ஓங்கும்.

(6)

1397. கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
1398. மேடைவாய் விசிய மெல்லிய காற்றே

(உ-வி) இவ்விரு அடிகளில், நம் பதியின் பொருண்மை அதாவது பொருளான தன்மை, தருநிழலாகவும், மென் காற்றா கவும் விளம்பப்படுகின்றதாம்.

குளிர்ந்த மரநிழல் எப்பொழுது ஒருவனுக்கு அதிக சுகமாக இருக்கும் என்றால், கொடிய வெயில் காய்கின்ற கோடை நண் பகல் வேளையில் ஆம். அப்படிப்பட்ட வேளையில் படர்ந்து விரிந்து பசுந்தழை நிறைந்த மரத்தடியில் உண்டாகின்ற சுகானுபவம் சிலர் அறிந்திருக்கலாம். இது ஓர் உதாரணத்திற்குச் சொன்

னதே. இதற்கு மேலான அனுபவம் நம் அருட்ஜோதி பதியிடத்து அடைவதாகும்.

மேற்குறித்த குளிர்தரு நிழலிலே ஒரு பசும்புல் மேடையில் இருந்துகொண்டு அங்கு மெல்லென வீசும் தென்றலையும் அனுபவித்தால் எவ்வளவு இன்பமாய் இருக்கும்! அதனினும் பன் மடங்கு சுகம் விளங்குமாம் அருட்பதியிடத்து. எதிலும் அருள் அனுபவத்தின் உண்மையைப் புரிந்துகொள்ளவே ஓர் ஒரு தோற்றம் வெளியாக்கப்படுகின்றதாம். ஆகையால், இவற்றைக் கண்டு, மேல் அனுபவம் பெறச் செல்ல வேண்டுமே அல்லாது எதிலும் பற்றுகொண்டு மிக மதித்து அச் சுகம் துய்த்தற்கு இறங்கிவிடக்கூடாது. கோடை வாய், மேடை வாய், என்ற விடத்து வந்துள்ள வாய் என்ற சொல்லுக்கு முதலாவதற்கு உச்சநிலை எனவும், இரண்டாவதற்கு இடம் எனவும் பொருள் கொள்ளவேண்டும். இந்த அடிகளின் விளக்கத்தையும் அடுத்த அடியின் கருத்தையும், இன்னும்விரிந்த விளக்கத்தையும் சேர்த்து அருள்விளக்க மாலைப் பாசுரம் ஒன்றில் அப்படியே காண்கின்றோம். அது:

''கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேயென் அலங்கலணிந் தருளே.''

இப்படி அரும்பொருள் யாவிலும் அருட்பரம்பொருளைக் கண்டு கண்டு போற்றிப் போற்றி அருட்பேரின்பானுபவத்திலே திளைத்திடுதல் இவர் செயலாக அறிய வேண்டும்.

இங்கு ஓர் அரிய உண்மை ஆழ்ந்து கிடக்கக் காண்கின்றோம். யாதெனில், ''ஆடையிலே எனைமணந்த மணவாளா, பொதுவில் ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்து அருளே,'' என்பதற்குப் பொருள், சிலர், நம் பெருமான் விளையாடித்திரியும் பிள்ளைப் பருவத்திலே நடராஜபதி வந்து மணந்து கொண்டுவிட்டதாகக் குறிக்கின்றனர். வேறுசிலர், ஆடல் புரிந்து கொண்டேயிருக்கும் அவர், உலகுயிர்களை யெல்லாம் ஆட்டிவைத்துக்

கொண்டும் இருக்கின்றார். அப்படி உயிர்களை ஆட்டிப் பக்குவ ஜீவான்மத் தலைவியைத் தன் மணவாட்டியாகவும் மணந்து கொண்டு விடுகின்றாராம் அருட்பெருஞ்செயலாலே. வள்ளற் பெருமானை இப்படித்தான், அம்பலத்தில் ஆடிக்கொண்டு ஆட் கொண்டும் மணந்துகொண்டும் உள்ளாராம். இவையெல்லாம் அறிவாலே ஆய்ந்து காண்பனவே. அருளாலே உள் தோய்ந்து உணர்ந்துகொள்ளும்போது காண்பது யாதெனில்:

அகண்ட பெருவெளியில் அனாதியே நிரம்பியுள்ளவர் நம் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர். இவர்தம் அருள் உண்மை அனுபவம் வெளிப்படவேண்டி இவ்வகண்ட பெருவெளியில் யாவு மாய்த் தோன்றிச் செயல்பட்டுக்கொண்டே யிருக்கின்றார். இந்த அருள்இயற் செயற்பாடே அருள் ஐந்தொழில் என்னும் திரு நடனச் செயலாகக் கூறப்படுகின்றதாம். அவர்தம் அருளே நாமாய் இன்று உணர்ந்து நின்று, அந்த அருளைக் கொண்டே அவரது இந்த உண்மையை எல்லாம் அறிகின்றோம். ஆகையால் உண்மையில் நாம் யார் என்றால், அவரோடு என்றும் அத்துவித மாக இருக்கும் பிரிவற்ற அவருடைய அருளே யன்றி வேறு எதுவும் அல்லவாம். திருவருட்செயல் வெளிப்படாதபோது, பஞ்சகிருத்தியம் தொடங்காதபோது, அகண்டவெளி முழுதும் அகண்ட ஒளிமயமாகத்தான் இருப்பதாம். அந்த ஒளியில் அருள் மறைந்து அடங்கிக்கிடக்கின்றதாம். ஐந்தொழிற்செயல் வெளிப் பட்டதும் தன் அருளைப் பிரபஞ்சத்தில் விளங்கச்செய்ததும் திருமணம் கொண்ட செயலாம். அனாதியே உள்ள அவர், நம் மையும் அனாதியே மணந்துகொண்டுள்ளார். இதுதான் ஆடையிலே நம்மை மணந்துள்ள உண்மை. மணத்தல் என் றாலே கலத்தல், புணர்தல், மன்றல், ஒன்றல் என்று பொரு ளாம். இப்படி ஒன்றிய நிலையே பேரின்பமாம்; பிரிவு, துன்பமே. அகநிலையில் எப்போதும் பதியோடு கூடிச் சுகித்திருக்கின்றோம்; புறத்தேதான் (அபக்குவத்தால் உண்மை அறியாது தேகம் நாம் என்ற பொய்மை உணர்வால்) பிரிந்து இருந்து துன்புறுகின்ற தாக உள்ளோம். இப்போது பக்குவமான ஓர் ஆன்மா, (நம் வள்ளலார்) சத்விசாரத்தால் உண்மை கண்டுதான் இப்படி ''ஆடையிலே எனை மணந்த மணவாளா பொதுவில் ஆடுகின்ற அரசே என் அலங்கலணிந்தருளே'', என்று வேண்டிக்கொள்ளு கின்றார். விசாரசாதனாநிலை இருந்து வேண்டும்போது இப்படிப்

புறநின்று துதிக்கின்றவர், விசாரமுடிவில் சாத்தியானுபவத்தில் அப்பதியோடு இரண்டற நின்று தன் அருட்பெருமண விசேடத்தைப் புறத்தெங்கும் பரப்புகின்றார். அவர் செயல் இவர் செயலாகி எங்கும் நிரம்பும்.

(7)

1399. களைப்பறக் கிடைத்த கருணைநன் னீரே
1400. இளைப்பற வாய்த்த வின்சுவை யுணவே

(உ-வி) ஒருவன் இவ்வுலகில் வாழ்வதற்கு உயிர்க்காற்றுக்கு அடுத்தபடியாக நீரும், அடுத்து சோறும் வேண்டியுள்ளன. உயிர்க்காற்று இயல்பாகவே இந்த நிலவுலக மேற்பரப்பில் எங்கும் பரவி நின்று, தானாகவே உயிர்களுக்குப் பயன்பட்டு வருகின்றது. ஆனால், தண்ணீர் உலகில் எங்கும் எளிதில் கிடைக்கும்படி திருவருளால் நீர்நிலைகளை இயற்கை அமைத்துள்ளது; மனிதன் எளிதில் பெற்று விடாய் தீர்த்துக்கொள்ளலாம். இதற்குமேல், சோறு அல்லது உணவு சிறிது முயன்று பெறவேண்டியதாய் இருக்கின்றது. முயன்று பெற்ற உணவை யுண்டு வாழ்வது நன்று. அப்படி முயல முடியாதவர்களுக்கு, முடிந்தவன் உதவுதல் கடமை. ஒருவன் உணவில்லாமல் பலநாள் உயிர்வாழ முடியும். தண்ணீர் இல்லாது ஒன்றிரண்டு தினம் இருந்து வாழலாம். ஆனால், காற்றில்லாது, அதிகநேரம் இருக்க முடியாது. ஆதலின், காற்றை மட்டும் தடைபடாது வழங்கிக் கொண்டுள்ளார் நம் பதி.

கருணைவான் சுரந்து, நன்னீரைப் பருகக் கொடுத்து நம் சோர்வைப் போக்குகின்றார் நம் பதி. நற்சுவையுணவை நாம் பெற வழங்கி, நாம் இளைத்திடா வண்ணம் தழைத்திடச் செய்கின்றார். உலகில் மக்கள் வாழ உண்டியும் நீரும் தேவை; கடவுள் கருணையால் கிடைக்கச்செய்துள்ளார். இவண் இந்த உண்டியால் மட்டும் மனிதன் மேன்மை அடைந்திட முடியாது. மனத்தின் உள்ளொளியாய் இருக்கின்ற கடவுள் கருணை அல்லது தயவு, தயா ஓர்மையாலே கண்டுகொள்ளப்படுகின்றது. அதனை பரோபகாரச்செயல் மூலம் வெளிப்படுத்தும்போது உள்ளத்தில் அத்தயாசக்தி அல்லது அருள் அனுபவம் உண்டாகின்றது. இவ்வருள் அனுபவம் அகத்தில் பெருகப் பெருக உயிரிலும் உடலிலும்

களைப்பும், இளைப்பும் குறைந்து ஒழிய ஜீவகளையும், தெளிவும் ஏற்படுகின்றன. இவற்றால் மாயப்பசி தாகம் முதலியன மறையும். ஆகவே, உலகில் புறத்தே கிடைக்கப்பெறுகின்ற நீராலும் சோறாலும் அப்போதைக்கு விடாயும் பசியும் நீங்கப்பெற்று நன்கு விளங்க முடிகின்றது. இதற்குமேல் அகத்தே கிடைக்கப்பெறும் நம் அருட்பெருஞ்ஜோதிபதியால் கருணை நன்னீரும், அருட்சுவை அமுதும் பெற்று, பசி தாகமற்று அருள் செயலோடு என்றும் வாழலாகும்.

(8)

1401. தென்னைவாய்க் கிடைத்த செவ்விள நீரே
1402. தென்னைவான் பலத்திற் றிருகுதீம் பாலே

(உ-வி) நீர்விடாயும், பசிக்களைப்பும் ஒருங்கே தீர்க்க வல்லது நல்ல இளநீராகும். செவ்விளநீரின் சுவைமிக்க நன்னீர் பருக மதுரமாய் இருப்பதோடு உடலிற் குளிர்ச்சி உண்டுபண்ணுவதற்கும், தேக சுகத்திற்கும் அனுகூலமாயுள்ளதாம். நல்ல முதிர்ந்த (தென்னம்பழம்) நெற்றுத் தேங்காயை உடைத்துத் திருகிப் பால் பிழிந்து பருகினால் நற்பலன் உண்டாம். அப் பால், சுவை மிக்கது. இயற்கையில் தாவரத்திலிருந்து, புலை, நிண, குணமற்ற சுத்த சத்துப்பொருளாய் உள்ளதாம். உடலுக்குத் தேவையான கொழுப்புச்சத்து, கொலைபுலையற்ற இயற்கை வழியிற் கிடைக்கப் பெறுகின்றது இத் தேங்காய்ப் பாலால்.

உலகியலார் தென்னம்பாலும், மதுவும் விரும்பிக்கொள்ளுவர். அருணிலை பெற்றோர்க்கு அருள் அமுதே யுணவாகும். இது மாங்காய்ப் பாலாகப் புனைந்து கூறப்படுகின்றது சித்தர் நூலில். ''மாங்காய்ப் பால் உண்டு மலைமேல் இருப்பவர்க்குத் தேங்காய்ப் பால் ஏதுக்கடி,'' என்று கேட்கின்றார் குதம்பைச் சித்தர். தேங்காய்ப்பால் புறஉணவில் சிறந்த ஒன்றே எனினும், அதனை விரும்பிடார் அருள்ஞான சித்தர்கள். ஏனெனில், இவர்கள் துரியமலைமேல் இருந்து, அங்கு அனுபவப்படும் அருட்ஜோதி அமுதம் கொண்டு வாழ்வோர் ஆவார்கள். இந்த அருள்ஒளி அமுதமே, மாங்காய்ப்பால் ஆகும். நம் முக்கனிகள், வாழை, மா, பலா முறையே ஞான, பிரணவ, சுத்த தேகத்தைக் குறிக்கக் கொள்ளுவர். இதில் நடுவுள்ளது மாங்கனி, பிரணவ தேகத்

தைச் சுட்டுவது, ஓங்கார வடிவமானது, அருள்ஒளியைக் குறிப் பதாம். இந்த அருள்ஒளியே மாங்காய்ப்பால் ஆகக் கூறப்பட்ட தாம். பால் என்ற சொல்லுக்கு அறிவு விளக்க ஜோதிப்பால் என்று பொருள் காண்பர் உண்மை கண்டோர். நம் பெருமான் அருள் ஒளியைத்தான் உளம்கொண்டு, அதன் ஏகதேசப் பொருள்களாக ஒவ்வொன்றையும் கண்டு கண்டு போற்றிக் கொள்ளுகின்றார். அப்படித்தான், தென்னையின் செவ்விள நீரையும், தேங்காயின் இனிய பாலையும் கண்டு, உண்ணின்று அது வதுவாக விளங்குகின்ற அருட்ஜோதியையே துதிக்கின்றார்.

''வாழைப்பழம் உண்ண வாய் நோவுமென்று சொல்லித் தாழைப் பழத்திற்குத்தான் அலைவர்.'' என்றதிலும், மருள் மாந்த ரின் அறியாமையால் நல்லதை வெறுத்தலும், நல்லதல்லாததை விரும்பலும் காண்கின்றோம். இதில் வாழ்வு தரும் அருள் ஞானக் கனியாக விளங்கும் வாழைப்பழத்தை வெறுக்கின்றவன், தாழை ஆகிய தென்னம்பழத்திற்காக (தாழ்ந்த புலனின்பத்திற்காக) அலைகின்றானாம். மக்கள் புலன் அவா நீக்கிப் புறப்பொருளுக்காக வீணில் அலைந்து கெடாது திருவருள் கூட்டிவைப்பதை அருள் ஒளியிற்கண்டு, ஒருவாறு தான் ஏற்றும், பிறர்க்கு உதவியும் நலம் காணவேண்டுவது நம் பதி ஆணையாம்.

(9)

1403. நீர்நசை தவிர்க்கும் நெல்லியங் கனியே

1404. வேர்விளை பலவின் மென்சுவைச் சுளையே

(உ-வி) நெல்லி ஓர் சிறந்த மூலிகையாகும். இது வாத, பித்த, சிலேத்துமத்தை சமனமாக்கும் தன்மை கொண்டதாம். மேலும், இது தண்ணீர்த் தாகத்தையும், நாவின் வறட்சியையும், அரோசிகத்தையும், குடற்புண்களையும் மாற்றி உடல் வளர்ச்சி யைத் தரும். துவர்ப்பு, இனிப்பு, புளிப்புடன் கூடிய சுவையும், கந்தகச் சத்தும் நிறைந்துள்ளதுமாம். இதுபோன்ற குண இயல்பும் தன்மையும் பயனும் உலகம் அறிந்துள்ளது. இவை யாவும் நம் அருள் ஒளிப்பதியின் ஏகதேசமாய்க் காண்கின்றோம் சுத்த சன்மார்க்க நிலையில். ஆதலின், இந்நெல்லியின் மூலமாக அருள்ஒளிப் பரம்பொருளின் விசேட இயல்பை ஒருவாறு ஆய்ந்து கொள்ளலாம். உள்ளங்கை நெல்லிக்கனி என்பது

நமது உள்ளமாகிய அகம் என்னும் ஆன்மாவை அனுபவமாகிய கரத்தில் பெறுவதைக் குறிப்பதாய்க் கொள்ளலாம். தாத்திரி என்பது நெல்லிக்கு ஒரு பெயர், -இது அருளனுபவத்தில் திரி தேகசித்தியை வழங்குவது என்ற பொருளில் வந்துள்ளதாம். முக்கனியினு மிக்கது இதுவென்பர். அன்றியும், இந்த ஒரு நெல்லி, மூன்று ஆப்பிள் கனிக்கு ஒப்பாகும் என்றும் கூறப்படும். சன்மார்க்கத்தில் இக்கனியின் அனுபவம், அவா என்னும் பிறவிக்குக் காரண நீர்நசையைப் போக்கி. அருள் அமுதமாய் விளங்கி, இறப்பையொழித்து முத்தேக சித்தியோடு வாழவைப் பதைக் குறிப்பதாய்க் கொள்ளலாம்.

அடுத்து நம் அருட்பதி வேர்ப்பலாவின் நற்சுவைச் சுளைக்கு ஒப்பு நோக்கிப் பார்க்கப்படுகின்றது. பலாமரத்தின் அடிப் பகுதியில் முளைத்து, வெடித்து நறுமண நற்சுவையோடு மென்மை கொண்டு விளங்குவது, பலாவின் சிறந்த இனக் கனியாகும். இந்தச் சிறந்த இயல்புகளைத் தந்து விளங்கச் செய்கின்ற நம் அருட் பெருஞ்ஜோதியின் இயல் எவ்வளவு சிறப்புடையது என்று எண்ணி எண்ணி, அதனை அறிந்து அடைய அவ்வருட் பெருஞ்ஜோதிக்கே அடைக்கலமாகின்றோம்.

(10)

1405. கட்டுமாம் பழமே கதலிவான் பழமே
1406. இட்டநற் சுவைசெய் யிலந்தையங் கனியே

(உ-வி) ஒவ்வொரு பொருளிலும் ஏகதேசக்கடவுள் விளக்கத்தைக் கண்டு போற்றும் தெளிவு பெற்றவர்கள் முக்கனியில் நம் முதல்வன் அம்சத்தையே சுவைக்காதே சுவைத்துப் பயன் பெறுகின்றார்கள். முன்னடியில் முக்கனியில் ஒன்றாகிய பலாவைக் கூறி, இங்கு மாவும் வாழையும் குறிக்கப்படுகின்றன. கட்டு மாங்கனியும், கதலியின்கனியும், சுவையிலும், மணத்திலும் குணத்திலும் சிறந்தனவாம். இனி இலந்தைக் கனியும் அக் கடவுட் சுவையின் விளைவாகவே கண்டு ஓதப்பெறுகின்றது. இக்கனியின் சிறப்பும், இம் மரம், இலை, வேர் இவைகளின் ஒஷதித்தன்மை களும் தெய்வாம்சத்தைத் தெளிவிப்பனவாயுள்ளனவாம்.

சிறந்த கனியின் சிறந்த தன்மைகளைக் கூறியுள்ளது, திருவருட்சக்தியில் யாவும், எல்லாவற்றிற்கும் மேலும் பேராற்றல்

உண்டு என்றும், அதனை அடைதலே குறிக்கோளாய்க்கொண்டு மேற்செல்ல வேண்டுமென்று உணர்த்தவேயாம். மற்றபடி, பழவர்க்க விளம்பரத்திற்கும், மருத்துவ விளம்பரத்திற்கும் அல்ல வாம். ஆகையால், இக்கனிகளைப் பெரிதாய், முக்கியமாய்க் கருதிக்கொண்டு பற்றுடன் விரும்பி ஏற்றுத் சுகம் காண முனைதல் கூடாது. ஏகதேசம் எப்பொழுதாவது கிடைக்கப்பெற்றால் கொள்ளலாம். இவைகளை யுட்கொள்ளும்போது, இவற்றின் இயல்புகளே இவ்வளவு நயமாய்த் தோன்றுகின்றதே, இதனினும் விவரிக்கமுடியாத சிறப்புடைய தெய்வநலம் தரு அருட்ஜோதியின் இயல்பு எப்படியிருக்குமோ, எப்படியிருக் குமோ என்று நினைந்து நினைந்து அந்நலம் பெறத் தயவொடு முயலுவோம்.

(11)

1407. புனிதவான் றருவின் புதுமையாம் பலமே
1408. கனியெலாம் கூட்டிக் கலந்ததீஞ் சுவையே

(உ-வி) என்றும் தூய்மையானதாய்ப், புத்தம் புதியதாய்ப் பழுத்துக் கனிந்து பக்குவமுடையதாய், உள்ள மரம், தெய்வ உலகத்துப் பொன்மயமான கற்பகத்தருவாம். இதில் உள்ள கனியும் எப்பொழுதும் பொன்னொளித் தோற்றத்துடன் திகழ்ந்து கொண்டிருப்பதாம். இது உண்மையில் நமது சிற்சபையில் கனிந்த நறுங்கனியாக விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதியே யாம். இதற்குமேல், கடவுட்சுவை, அருளின்பானுபவம் என் பதைக் குறிக்கும் வகையில், பல தீஞ்சுவைக் கனிகளின் சுவை யெலாங் கலந்த ஒரு கூட்டுச்சுவைப் பண்டமாக உவமித்துப் பார்க்கின்றார்.

''பலம்'', என்றது பழம் என்ற நற்றமிழ்ச் சொல்லின் வட மொழிப்பதமாக உள்ளது என்பர். நல்ல தமிழ்ப் பழம் இருக்க இத்திரி சொல்லை ஏன் கையாண்டுள்ளார், நம் அடிகளார் என்று வினவலாம். அதற்குத் தக்க காரணம் இல்லாமலில்லை. நமது அகப்பெரும் பதியின் ''அருட்பெருஞ்ஜோதி தனிப் பெருங் கருணை'' விளக்கம் வெளியாகி விளங்கும் சிரநடு சிற்றம்பல நிலை, ''பல்'' எனச் சத் விசாரத்தால் அறியப்படுகின்றது. இந்தப் ''பல்'' என்ற சொல்லின் உண்மை, பகர வடிவ ஆன்மபீடத்தின்

மீதுள்ள ''ல்'' பதின்மூன்றாம் மெய் எழுத்தாய் நின்று ''திரியோ தசம்'' என்னும் பதின்மூன்றாம் நிலை யனுபவமாகி அருள் அனுப வத்தை யுணர்த்துவதாம். இதனாலேயே, நம் அருட்பெருஞ்ஜோதி பதியின் பூரணவிளக்கம் தரும், ''அருட்பெருஞ்ஜோதி தனிப் பெருங்கருணை'', மந்திர வாசகம் கூட பதின்மூன்றே தனிச்சீர் கொண்டு விளங்கக் காண்கின்றோம். இவ்வருட்பேரனுபவம் குறிக்கவே ''பலம்'' என்ற சொல் கையாளப் பெற்றுள்ளதாம். இந்த அருட்பொருட்குறிப்பை நம் தமிழ் வழி நாமே காண்டல் எளிது. வடமொழியாளர் இப்பொருளை அச்சொல் வழி காணார். இதுபோல் பல வட சொற்கு நம் தமிழ் மூலம் அருள்விளக்க உரை காண்டல் கூடும்.

(12)

1409. இதந்தரு கரும்பி லெடுத்ததீஞ் சாறே
1410. பதந்தரு வெல்லப் பாகினின் சுவையே

(உ-வி) உயர்ரகக் கரும்பைப் பிழிந்து எடுத்து வடிகட்டி யுட்கொண்டால் மதுரமாய் இருக்கும். இது இனிப்புச்சுவை யோடு உடலின் இரத்த சுத்திக்கும் களைப்பு நீக்கத்திற்கும், சத்துவகுணத்திற்கும் துணையாயிருந்து இதம் செய்கின்றதாம். ஆனால் அதிகமாக உட்கொண்டால் கேடு விளைவிக்கும். இதற்கு மாறாக நம் அருட்பெருஞ்ஜோதியின் சக்தி எவ்வளவுதான் ஏற் றாலும் அதிக நன்மையே செய்யும் திகட்டாத அமுதமாய் இருப் பதாம். அக் கருப்பஞ்சாறு காய்ச்சாது வைத்துக் கொண்டிருந் தால் கெட்டுவிடும்.

ஆகையால் மேற்படி கரும்புச் சாற்றினை நன்கு காய்ச்சி விடு கின்றனர். அதில் பாகுபதம், தேன்போல் விளங்கும்; ஆதலின் அதனைத் தேன்பாகு என்கின்றனர். இத் தேன்பாகு சில தினங் களுக்குக் கெடாதிருக்கும். பின்பு புளித்துக் கெட்டுவிடும். ஆகையால் அதனையும் நன்கு காய்ச்சிடும் போது இன்சுவை யோடு கூடிய நறுமணம் வீசும்; பாகு சுண்டி இறுகி வெல்லக் கட்டியாகவும், தூள் சர்க்கரையாகவும் ஆகிவிடும். இது கேடில் லாதது; சுத்த சத்துவ ஆகாரமாகவும் விளங்கும்.

சுத்த சன்மார்க்கச் சாதகர்கள் அறுசுவையில் ஒரு சுவை யாகிய இனிப்பை மட்டும் விருப்பு வெறுப்பின்றி ஓரளவாகக்

கொண்டு, சாதனை செய்து, சாத்தியானுபவ நிலைக்கு ஏறுவர். அப்போது அவர்கள் விரும்புவது இந்தக் கடைச் சர்க்கரை அல்ல, அருட்சுவை செறிந்த அகஞானச் சர்க்கரையே "இக்கரை கடந்திடில் அக்கரையே, இருப்பது சிதம்பரச் சர்க்கரையே" என்கின்றார் நமது அருளடிகளார். நம் உத்தரஞான சிதம்பரச் சர்க்கரையாக உள்ளது "அருட்பெருஞ்ஜோதியே". மனிதனுக்குப் புலன் வாழ்வுப் புறநிலையே இக்கரையாகும். இதனைவிட்டு வாழ்வாகிய ஆற்றினைக் கடந்து, எதிர்க்கரையாகிய அருள் வாழ்வு நிலையாகிய அக்கரையை அடைந்திடல் வேண்டுமென்பது கருத்து. உலகியல் ஆற்றினைக் கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி என்ற சகோதரத்துவ பந்த பாசங்கள்; ஆறு கடந்து அருட்பதியுற்றால் அங்கு, பேத போத உறவு பகையுணர்வு கடந்து, அயலறியா ஒருமைப்பாட்டு அனுபவம் விளங்கும். இக் கருத்தைக் கொண்டு, "ஆறு கடக்கும் அளவும் அண்ணனும் தம்பியும், ஆறு கடந்தால், நீ யார்? நானார்" என்ற பழமொழி வழங்கப்பட்டுள்ளது. இப் பழமொழிக்கு மற்றொரு விளக்கம் ஆறு ஆதாரங்களைக் கடக்கும் வரையும் தான் என்றும், அது வென்றும், சூரியன் சந்திரன் என்றும், ஜீவான்மா பரமான்மா என்றும் இரண்டுபட இருந்து மேலே, நிராதாரநிலையிலே, பேத மற்று, இரண்டற்று ஒன்றி விளங்கும் நிலையாகும். இதில், நான், நீ என்ற பேதம் அற்று விளங்கலாகின்றதாம். இதுவே இன்பானுபவ நிலை. இதனைக் கூறாமற் கூறுவது: "பதம்தரு வெல்லப்பாகினின் சுவையே" என்பதாம். திருவடி இன்பம் இந்த வெல்லப்பாகின் சுவையைவிட மேலானது என்று உணர்த்திக் கொண்டுள்ளதாம்.

(13)

1411. சாலவே யினிக்குஞ் சர்க்கரைத் திரளே

1412. ஏலவே நாவுக் கினியகற் கண்டே

(உ-வி) வெல்லத்தைக்காட்டிலும், தூய்மையும் மென்மையும் உடையது சுத்தமான சர்க்கரை. இந்தச் சர்க்கரையே நல்ல பக்குவமுடையது, மிக விரும்பத்தக்கது. இது பொருத்தமான இன்சுவை கொண்டதாம். சுவை குன்றிய மட்ட ரக சர்க்கரையும், மிக இனிப்புடைய "சாக்கரின்" என்ற பொருளும் விரும்பி

ஏற்கத்தக்கன அல்லவாம். நம் பதியே, நல்ல சர்க்கரையாக நற்சுவை தரும் சிதம்பரச் சர்க்கரையாக வுள்ளார். அவரைப் போற்றி எவ்வளவு கொள்ளினும் நன்மையும், சுகவாழ்வும் பெருகும். பிற சர்க்கரை அதிகம் கொள்ளினும் அல்லது உண்ணும் பொருளில் உள்ள சர்க்கரைச்சத்து செரியாமையால் சர்க்கரை நோயே உண்டாகும். ஆதலின் அருட்ஜோதியாம் சர்க்கரையைத்தான் பூரணமாய்க்கொண்டு நிறை சுக வாழ்வு பெறலாகும்.

நம் அருட்பெரும்பதி, கற்கண்டோடு, ஒப்பிடப்படுகின்றது. சர்க்கரையைவிட மேலானது, சிறப்புடையது, அதிகநேரம் நாவுக்கு நல்ல சுவை அளித்துக்கொண்டிருப்பது. சர்க்கரையைப் போல் விரைவிலே கரைந்த உட்சென்று விடாததாம். கண்டு, உமிழ்நீரோடு கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து உணவுடன் கலந்துவிடுவதால் நல்ல பயன்பல விளைவிக்கின்றதாம். நம் தெய் விகக் கற்கண்டோ கரையாமல் இருந்துகொண்டு உண்ணாவிலே சதா மறையாத இன்சுவையைப் பெருக்கிக் கொண்டேயிருப்ப தாம். இந்தக் கருணைக்கண்டிற்கு ஒப்பேது இந்த உலகில்! இல்லை என்றாலும் கூட ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளவாவது பயன்படுகின்றதாம்.

சர்க்கரை, துகளாகப் பரவி விளங்கும் நிலையை அகண்ட ஜோதிபதியையும், அதிலே ஒரு சிறு பகுதி இறுகிக் கடினமாய்ப் படிகம்போல் விளங்கும் கற்கண்டு என விளங்கும் நிலை, அருட் பிரகாச வடிவுற்றிலங்குவதாகவும் கொள்ளலாகும். ஏலவே நாவுக்கு இனிய கற்கண்டே என்கின்றார். மிகவும் சுவையுள்ளது என்று அனுபவிப்பது நாக்கேயாம். இந்த நாக்குதான் ''நான்'' என்று விளங்குகின்து இந்த உலகிலே. நான் என்று சொல்வது நாவாக உள்ளது, யாவரும் அறிந்ததே. ஆனால் இந்த நாவுக்கு ஆதாரமும், ஆற்றல் தருகின்றதும் கடவுள்ஜோதியே. ஆகையால், ''நான்'' ''நான்'' என்றுசொல்லிக் கொண்டுள்ளது கடவுள் ஆன் மாவே என்பது உண்மையாம். இக்கடவுளான்மா தானே கடவுளும் கற்கண்டும் ஆகிப் பிரிவற உள்ளதனைக் குறிப்பதாய் அறியலாகும். இது, ஆன்ம நாவகத்தே கரையாதேயிருந்து கொண்டு இடையறாது இன்பானுபவத்தை வழங்கிக்கொண்டே யிருப்பதாம். அப்படி யிருப்பதாயின் அந்த இன்பம் நமக்கு ஏல தெரியவில்லை இப்போது, என்றால் மருள்நிலையிலே பொறிபுலன்

அனுபவத்திலே நாம் இருந்து வருவதால் அவ் அருளின் பானுபவம் சற்றும் தெரிந்துகொள்ள முடியாதிருக்கின்றதாம். எப்போது புலன் இச்சை யொழிந்து அருள் விசாரத்தாலே அகவுண்மைக் கடவுளான்ம நிலையிலிருந்து அருள் அனுபவத் தோடு விளங்குகின்றோமோ அப்போதுமுதல் அந்த அனுபவம் வெளிப்பட்டு என்றும் நிலவும்.

(14)

1413. உலப்புறா தினிக்கும் உயர்மலைத் தேனே
1414. கலப்புறா மதுரங் கனிந்தகோற் றேனே

(உ-வி) வளமிக்க உயர்மலைகளிலே சிறந்த மருத்துவ மூலி கைகள் உண்டு. அவைகளில் பூக்கின்ற நறுமலர்களிலே நல்ல தேன் துளிகள் உணடு. அவைகளைத் தேனீக்களும் வண்டுகளும் சேகரித்துக்கொடுக்கின்றன. இவ்வகையில் குறைவு படாது இனித்துக்கொண்டு, நெடுநாட்கள் கெடாது விளங்குவது குறிஞ்சித் தேனாகும். இதுபோன்று மலைத்தேனும், யாதொரு கலப்படமும் செய்யப்படாத சுவைமிக்க கொம்புத்தேனும் சிறந் தனவாகக் கொள்ளப்படும். தேன் ஒரு சத்துடைய, மருத்துவ குணம்படைத்த சன்மார்க்க உணவுப்பொருளாக உள்ளதாம். சர்க்கரையிலுண்டாம் குற்றம் இத்தேனால் உண்டாவதில்லை. சர்க் கரை நோயாளிகளும் இத்தேனை யுட்கொள்ளுவதால் தீமையுண் டாகாது. அதிலும், ஒருவகைப் பூக்களில் கிடைக்கும் தேன் அதற்குரிய தனிச்சிறப்பு உடையதாக இருப்பதால், எந்தவகைத் தாவரங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தேனோ, அதற்கு அத்தா வரக்குணம் இருக்கின்றது. அதனால் குறிப்பிட்ட சத்து கிடைக் கப்பெற்றுப் பயன் அடைய முடிகின்றதாம். இத்தேன்களால் உடலின்கண் அகத்தும் புறத்தும் பல பயன் பெறப்படு கின்றன.

இக்காரணங்களால் தேனைத் தெய்விக அமுதமாகக் கொண்டும், தெய்வத்தையே தேனோடு ஒப்பிட்டும் புகழ்கின் றனர் நம்முடைய மக்கள். முருகனைக் குறிஞ்சிக் கிழவன் (மலை நாட்டுக்குரியவன்) என்றும், குறிஞ்சி ஆண்டவர் என்றும், ''தேன்போல்வனைச் செவ்வேளினை'' என்றும் பாராட்டித் துதிக் கின்றனர். நம் பதியை இந்தத் தேனாகப் போற்றிக்கொள்வதில்

சுத்த சன்மார்க்க அனுபவம் எப்படிப் பெறப்படும் என்பதைப் பார்ப்போம். நம் அருட்பெருஞ்ஜோதிபதி தலைநடுத் தாமரை மலர்த்தடத்தில் விளங்குகின்றதால், அம்மலரை அடைந்து அனுபவிக்கும்போது அதில் ஊறும் அருள் அமுத மாகிய தேனையே உண்டு களித்திருக்கலாகின்றதாம். அத்தேன் உலப்புறா ஒன்றாம். அதாவது அத்தேன் என்றும் மறையாது, குறையாது விளங்கிக்கொண்டும் இன்பம் தந்துகொண்டும் இருப் பதாம். அந்நிலை வாழ்வை அருளால் அடைந்தோன், அங்கி ருந்தே இவ்வுலகில் உலவா இன்ப வாழ்வில் விளங்கிக் கொண் டிருக்க முடிகின்றதாம். இதுவே மரணமில்லாப் பெருவாழ்வின் அனுபவமாம். மேலும் நம் கடவுள் உண்மை சுத்த தயவுமய மாய் உள்ளதேயாம். அதிலே எந்தவிதமான கலப்பும், எந்தக் காலத்தும் ஏற்படுவதேயில்லை. ஆகவே சுத்த தயா சன்மார்க் கம் ஒன்றினால்தான் இந் நித்தியானந்த வாழ்வு சித்திக்கின்ற தாம்.

(15)

1415. நவையிலா தெனக்கு நண்ணிய நறவே
1416. சுவையெலாந் திரட்டிய தூயதீபம் பதமே

(உ-வி) நறவு, நறவம், நறா, நறை என்பனவெல்லாம் நன் மணமுடைய தேன்போல் இனிக்கும், பனஞ்சாறு அல்லது தென்னஞ்சாறு முதலியவற்றைக் குறிப்பது மரபாம். இதனைச் சுத்தமான பதநீர் என்பர். ஒரு மரத்துக் கள்ளெனவும் கூறப் படும். முக்கியமாகச் சுவை மிக்குடைய பனஞ்சாற்றினையே நறவம் என்று கொள்ளுவர். இது உடல் நலத்திற்கு உகந்ததாம். புளித்து நுரைத்துக் கள்ளாகிவிட்டால் போதையையும் சில கேட்டையும் விளைவிக்கும். புளிக்காத இனிய கள்ளே நவை (குற்றம்) இல்லாத நறவமாக மொழியப்பட்டுள்ளதாம். இது நம் அருட்ஜோதியே அன்றி வேறல்ல. நறவம் அருட்ஜோதியாம் அமுதமே.

நம் அருட்பெருஞ்ஜோதி அகத்தும் புற வான்வெளி முற்றும் நிரம்பியுள்ளது. ஆனால், அக ஆன்மவடிவில்தான், அருள்அனு பவம் கிடைக்கப்பெறுவதாயுள்ளது. இந்த அருட்பெருஞ்ஜோதி யைக் கள்ளாகக் கொண்டு, உருவகம்செய்து போற்றும் போது

"கள்ளுண்டேன் எனப் புகன்றார் கனகசபை நடுவே
கண்டதுண்டு சிற்சபையில் உண்டதுமுண்டு."

என்கின்றார். கனகசபையில் இந்த அருட்பெருஞ்ஜோதிக் கள் காணப்படுவது மட்டும்தானாம்; மற்றபடி சிற்பையில்தான் அனுபவிக்கப்படுகின்றது என்பது குறிப்பாம். இதனால், இந்த அருட்கள்ளை அறிந்து கொண்டு ஏற்று வாழ்வதால் அனைத்து நன்மையும் உண்டாகும்.

அடுத்த அடியில், நம் பதி, சுவை எலாம் திரட்டிய தூயதீம் பதமாக மொழிகின்றார். பலவாகிய நற்சுவைப் பொருள்களை எல்லாம் கொண்டு, அவற்றின் அச்சுவையின் அம்சத்தை மட்டும் எடுத்துத் திரட்டிப் பக்குவமாகக் காய்ச்சிப் பதப்படுத்தி ஆற்றி எடுத்த ஓர் அருஞ்சுவைப் பண்டத்திற்கு ஒப்பிடுகின்றார் கடவுட் கருணையின் சுவையை. இதுபோன்ற சுவையினும் மேன்மை யுடையது கடவுளின் அருளாகிய பொருள் என்ற உண்மையை உளம்கொண்டு, புறப் பொருட்சுவையில் மனம் செலுத்தாது, அக அருட்சுவை அனுபவம் பெறற்கான நன்முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

(16)

1417. பதம்பெறக் காய்ச்சிய பசுநறும் பாலே
1418. இதம்பெற வுருக்கிய விளம்பசு நெய்யே

(உ-வி) ஆவின் ஐந்து பொருளாகிய பஞ்ச கவ்யம் மனிதனின் இந்த ஐம்பூத தேகசுத்திக்கும் வளர்ச்சி விளக்கத் திற்கும் துணையாக வழங்கப்பட்டுள்ளன. இப்பொருள் ஐந்தும் ஒருவர்க்கு, உயிர்வதையற்ற அருள்வழியில் கிடைப்பனவேயாம். பால் அறிவு விளக்கத்தையும், நெய் உடல் விளக்கத்தையும், உஷ்ண சமனத்தையும் உண்டு பண்ணும். இக்காரணங்களால் இவைகள் விசேடப் பொருள்களாக மதித்துத் தெய்வத்திற்கு அபிஷேகத்திற்கு உபயோகித்துப் போற்றிக் கொள்ளப்படு கின்றன.

இங்கு கடவுள் உண்மையை, ஒன்று, பக்குவமாகக் காய்ச்சப் பட்ட நல்ல பசுவின் பாலுக்கும், இரண்டாவதாக, இன்ப நறு மணங்கமழ உருக்கப்பெற்ற இளம்பசுவின் நெய்க்கும் ஒப்பனை

செய்து உரைக்கப்படுகின்றது. நல்லாவின் பாலினைச் சுவை படப் பதமாகக் காய்ச்சினால் அதில் பொன்மையான மேலாடை தோன்றும், அடியிலுள்ள பாலும் சுவை பெற்று விளங்கும். இப் படிப்பட்ட பாலோடு உவமிக்கப்படும் கடவுள் உண்மை என்ன வென நோக்குவாம். ஐஞ்சக்தி கொண்ட கடவுள் உண்மையே ஒவ்வொரு ஆன்ம அணுவிலும் செயல்பட்டு ஐம்பூத தேகம் கொண்டு விளங்குவதாம். அந்த ஆன்மாவே, கடவுள் கொண்டு விளங்கும் தன் ஊர்தியாகக் குறிக்கப்படும். அருள்ஞான விசா ரத்தால் தன்னை ஆன்மஜோதியாகக் கண்டு, அருள்வாழ்வு மேற் கொள்ளும் போது சூழ்தேகமே சுத்த பொன்மேனியாகவும், அக ஆனந்த உணர்வே சுக இன்ப வடிவமாகவும் அனுபவத்தில் ஏற் பவனாகின்றான். ஆகையினால்தான் கடவுளை இப்படிக் காய்ச்சிய பாலுக்கு ஒப்பிடப்படுவதில் மெய்ப்பொருள் விளக்கம் காண முடி கின்றது.

பசுவின் நெய் சரியாகக் காய்ச்சினால்தான் நல்ல மணமுள்ள தாய் இருப்பதோடு சுத்தமாக ஆறி உறைந்து பக்குவமாய் விளங் கும். காய்ச்சற் குறைவாலும் அதிகமுறுகிப் போவதாலும் கெட்டுப்போம். இந்த நறு நெய்யைக் கடவுள் வண்ணமாகக் காண்பதில் சில உண்மைகளை யோர்ந்து கொள்ளலாம். ஆன் மாவின் இயற்கை தயவு அல்லது அன்பாம்; இது மனிதனில் சுத்தமாக விளங்கும் போது வாழ்வு இன்பமாக நிலவும்: அந்தச் சுத்த தயவுதான் நேயம் எனப்படும். நெய்க்கும் நேயும் என்ற சொல்வழக்குண்டு. ஆன்மநேயம்தான் நல்பசுவின் நெய் யாகக் கொள்ளப்படும். இந்த ஆன்மநேயமே அருளின்பமாக நிறைமனிதனில் அனுபவப்பட்டு விளங்குவதாம்.

(17)

1419. உலர்ந்திடா தென்று மொருபடித் தாகி
1420. மலர்ந்துநல் வண்ணம் வயங்கிய மலரே

(உ-வி) உலகில் வண்ண மலர்கள் எத்தனையோ தினமும் மலர்ந்து விளங்குகின்றன. அம்மலர்களில் சில கண்கவரும் நிறை தோற்றமும் நிறமும் கொண்டனவாய் இருக்கும், நல்ல மணம் இருக்காது, சில மணமிருக்கும் எழிலான தோற்ற மில்லாதனவாய் இருக்கலாம். ஆனால் இந்த வண்ண மலர்கள்

எல்லாம், சிறிது கால எல்லையில், வாடி வதங்கியும், வண்ணம் மாறியும், மணம் அழிந்தும், தரங்கெட்டும் சருகாகிவிடக் காண் கின்றோம். இப்படிக் கேடுற்றழியும் எந்த ஒரு மலரையும் கடவுளுக்கு ஒப்பிடக்கூடாது: பொருந்தாது. ஆகையால், இவை போன்றல்லாது, என்றென்றும் ஒரே தன்மையோடு மாறாது நின்று, வண்ணமும் மணமும் குணமும் எக்காலத்தும் குன்றாது பயன்தர விளங்கும் ஒரு கற்பனை மலரை உள்ளக்கண் முன் காட்டுகின்றார் நம் அண்ணலார். அது அருட்பெருஞ் ஜோதி அணிமலராக உள்ளதாம்.

அருட்பெருஞ்ஜோதி அணிமலரே என்றும் ஒருபடித்தாய், ஒரேமாதிரியாய் விளங்குவதாம். முழு மலர்ச்சியோடும், நல்ல வண்ணத்தோடும், குன்றாத நிறைகுணத்தோடும் விளங்குவதாம். இம்மாதிரியான தெய்விக மலரை உலகம் காண்கின்றதில்லை.

“ பொற்பூவும் நறுமணமும் கண்டறியார் உலகர்
புண்ணியனார் தம்வடிவில் நண்ணியவா றதுவே
நற்பூதி அணிந்ததிரு வடிவுமுற்றும் தோழி
நான்கண்டேன் நான்புணர்ந்தேன் நானதுவானேனே.”

என்கின்றார். இவர் போற்றிக்கொண்டுள்ள அருட்ஜோதிமலர் பொன் வண்ணமும் பசுங்கற்பூர நன்மணமும் கொண்டு எக் காலும், சாக்கிராதீதத்தில் விளங்கிநின்று உயிரிலும், உடம்பிலும் நிறைந்து நிலவுவதாம்.

(18)

1421. இகந்தரு புவிமுத லெவ்வுல குயிர்களும்
1422. உகந்திட மணக்கும் சுகந்தநன் மணமே

(உ-வி) இதுசமயம் தோன்றி விளங்குகின்ற இந்த உலகும், இதுபோன்ற எண்ணடங்கா உலகங்களும் பலவாகிய சிறந்த உயிர்கட்கு உறைவிடமாய் இருக்கின்றன. அவ்வுயிர்களெல்லாம் அறிந்து முகரத்தக்கதாயும், அறியாமலே யேற்று உயிர் விளக்கம் பெறத்தக்கதாயும் உள்ளது தெய்வ நன் மணம். யாவராலும், எக்காலத்தும் விரும்பிக் கொள்ளப்படும் இம்மணம் பிற எந்தக் கந்தத்திற்கும் ஒப்பாகாது. உலகிலுள்ள சாதாரண மலர் மணங்களும், மற்றபல வாசனைப் பொருள்களும்

வெளிப்பட்டுக் காற்றோடு கலந்து பரவிக்கொண்டிருக்கின்றன நறுமணங்களைப் பலர் விரும்பிக் கொள்ளுகின்றனர். அதனால் புலனிச்சை தூண்டப்பெற்று மயக்கக்கூடும். ஆதலின், அம்மணங் களை யாவரும் விழைந்து ஏற்கார். சில நன்மணம், சூழ்வானிலை யிற் கலந்த நச்சுத்தன்மைகளைப் போக்கிச் சுத்தமாக்குகின்றன வாம். அப்படியுள்ள ஒரு நல்ல மணம் பசுங்கற்பூர மணமாகக் கூறப்படுகிறது. இது வாயு மண்டலத்திற் கலந்து சுத்தி செய்து நல்ல காற்றை உயிர்களுக்கு உதவுகின்றதாம். இது சுத்த சன்மார்க்க வாழ்வில் நிறைவாழ்வு பெறுவோர்க்குரிய கடவுள் மணமாயுள்ளதுவாம். இந்த மணம் இயற்கை இறை மணமாகும். இதனைக் குறித்து நம் பெருமான் பல பாக்களில் விளக்கியுள்ளார்.

"அம்பலத்தே திருநடஞ்செய் அடிமலர்என் முடிமேல்
அணிந்துகொண்டேன் அன்பொடுமென் ஆருயிர்க்கு மணிந்தேன்
எம்பரத்தே மணக்குமந்த மலர்மணத்தைத் தோழி
என்னிசைப்பேன் இசைக்கவென்றால் என்னளவன் றதுதான்
வம்பிசைத்தே னன்றடிநீ என்னருகே இருந்துன்
மணிநாசி அடைப்பதனை திறந்துமுகர்ந் தறிகாண்
நம்புறுபார் முதல்நாத வரையுளநாட் டவரும்
நன்குமுகர்ந் தனர்வியந்தார் நன்மணம் ஈதெனவே."

என்றும்,

"கற்பூரம் மணக்கின்ற தென்னுடம்பு முழுதும்
கணவர்திரு மேனியிலே கலந்தமணம் அதுதான்
இற்பூத மணம்போல மறைவதன்று கண்டாய்
இயற்கைமணம் துரியநிறை இறைவடிவத் துளதே
பொற்பூவும் நறுமணமும் கண்டறியார் உலகர்
புண்ணியனார் தம்வடிவின் னண்ணியவா றதுவே
நற்பூதி அணிந்ததிரு வடிவுமுற்றும் தோழி
நான்கண்டேன் நான்புணர்ந்தேன் நானதுவா னேனே."

என்றும்,

'கற்பூர ஜோதி மருந்து—பசுங்
கற்பூர நன்மணங் காட்டு மருந்து
பொற் பூவி னோங்கு மருந்து—என் தற்
போதம் தவிர்த்தசிற் போத மருந்து."

என்றும் அந்த உயர்சிறப்புடைய கடவுள் மணத்தை இதுவென நன்கு காட்டியுள்ளார். இதனைத் திருவருளாலே அக அனுப வத்திலே பெற வேண்டுமேயன்றி புறமணத்தைப் போற்றிக் கொண்டும் ஏற்றிக்கொண்டும் இருந்து வீண்போதல் கூடாது.

(19)

1423. யாழுறு மிசையே யினியவின் னிசையே
1424. ஏழுறு மிசையே யியலரு ளிசையே

(உ-வி) நமது இறைவர், அருட்பெருஞ்ஜோதிபதி அரு ளொலியாம் பிரணவ நாதத்தோடு எங்கும் நிறைந்துள்ளவராவர். இக்கடவுள் ஒலியாம் இசையை நாதப்பிரம்மம் என்கின்றனர். கடவுளைக் கற்பனை செய்தோர், அவரை இசைப்பிரியன் என்றும், யாழ்வல்லோன் என்றும், இசையையே குண்டலமாய் அணிந் துள்ளவன் சிவன் என்றும் கூறுவர். மேலும், சிவபெருமானின் கரத்தும், சரசுவதியின் கையிலும், நாரதர், கின்னரர், அகத் தியர், இராவணன், கண்ணன் முதலியோரிடத்தும் யாழ், வீணை, குழல் முதலிய இசைக்கருவிகளை வழங்கியுள்ளனர். இவற்றில் யாழே தத்துவரீதியாகச் சிறந்திலங்குவதாம். ஆகவே நம் பதியை இவ்வியாழில் எழுகின்ற இசையாகவும், இனிய பண் ணாகவும், சங்கீதமாகவும், ஏழிசை என்னும் சப்தசுரங்களாகவும், இவைகளுக்கெல்லாம் மேலான அருள்மய ஆனந்தானுபவத்தை வழங்குகின்ற பரவசநாத அருளிசையாகவும் கண்டு கொண்டு போற்றப்படுகின்றதாம்.

இன்னிசையைப் பக்தி செய்வதற்கு என்று ஏற்படுத்தியுள் ளனர். அப்படிப் பக்தியால் உளமுருகும் பக்தர்கள், இசை வெள்ளத்திலே தம்மை மறந்து மூழ்கி இன்புறுகின்றனர். இன்னும், இசையால், மக்களையும், கீழின உயிர்களையும், ஓரறி வுடைய தாவரத்தையும்கூட வசப்படுத்தி நலம் காணச்செய்ய முடிகின்றதாம். உலகம் பலவாகிய இசைகளைக் கேட்டும், கருவி கானங்களைச் செவிமடுத்தும் மகிழ்ந்துள்ளது பிரணவநாத இயல் இசையிலேதான் உலகங்கள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டேயிருக்கின்றனவாம். இதற்குமேல் மனிதன் தயா வொழுக்கத்தோடிருந்து, பரநாத நிலைமீது ஏறிப் பெருஞ்ஜோதிக்

காட்சியைக் கண்டு பேரின்பம் அடையக்கூடியவனாய் இருக்கின்றான் என்பதைத் திருவருளாலே உணர்த்தப்படுகின்றோம். இது அருளிசையின் பெரும்பயனாம்.

இசை என்ற சொல் சங்கீதத்தைக் குறிப்பதல்லாமல், புகழ் கீர்த்தி முதலிய பண்புகளையும், இசைதல் அல்லது இணைந்து ஒன்றுபடல் என்ற செயலையும், பொருத்தம் என்ற பொருளையும் கொண்டதாம். இவை எல்லாம் முடிவில் மனிதனைக் கடவுளோடு கூட்டிவைத்துப் புகழ்பட இன்பொடு விளங்கச்செய்வதே உண்மை இசை என்னலாம்.

(20)

1425. திவளொளிப் பருவஞ் சேர்ந்த நல் லவளே
1426. அவளொடுங் கூடி யடைந்ததோர் சுகமே

(உ-வி) ஞாயிற்றினிடத்தில் பொற்சக்தி இருக்கின்றது. அதுவே, அக்கதிரவன் கதிர்களின் மூலமாக உலகெங்கும் பரவி, ஐம்பூதப் பொருள்களிலே, அதனாலான உயிரின வடிவங்களிலே எழில் தோற்றம் உண்டாகித் திகழ்கின்றதாம். இத்தோற்ற வடிவங்களிலே இம் மனிதப்பிறப்புத் தேகமும் ஒன்றாக, உயர் படைப்பாக விளங்குவதை அறிவோம். இம்மானுடப் பிறப்பில் புறத்தேகம் பெண் சத்தின் விளைவாகவும், அக மெய்யறிவு விளக்கம் ஆண் அம்சமாகவும் உள்ளனவாம். கதிரின் ஒளியால் அழகு பெற்று விளங்குவது இந்தப் பெண் கூறாகிய தேகமே யாம். இந்த வடிவம் பொதுவாகப் பெண்ணின் அம்சம் ஆக இருப்பதால், இந்த வடிவு கொண்டிலங்கும் பெண்களே மிக்க எழில் தோற்றம் கொண்டு விளங்குதல் இயற்கையாம். மாதர் என்ற சொல்லே அழகு என்று பொருள்படுவதாம். அதுவும் அப்பெண்கள், பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவங்களில், முன்னும் பின்னும், ஈரிரு பருவங்களுக்கு இடையுள் முப்பருவங்களில், அதாவது மங்கை, மடந்தை, அரிவைப் பிராயத்தில்தான் அதிகப் பொலிவோடு திகழ்வார். இதனைத்தான் இங்கு திவளொளிப் பருவம் எனப்படுகின்றது. திவா என்பது சூரியனாம். இவ்வொளியால் பெற்ற பொற்பொலிவுடன் திகழும் நல்லாளைச் சுட்டுகின்றது இவ் வடி. இப்பருவ நலம் மேனியில் மென்மையும்,

தளதளப்பும், துவட்சியும் கூடியதாய், ஜீவ காந்த சக்தி (Personal Magnetism) வாய்ந்ததாய் இருப்பதாம். அப்படிப் பட்ட மாதர்களின் முயக்கால் கண்ட சுகானுபவம் பெரிதென்பர் புலநெறியில் அழுந்திய உலகர். இதுவும் மிக அற்பமாகவே யுள்ளதெனக் காண்கின்றனர், கடவுட் பேரின்பமுறும் பெரி யோர்கள். எனவே, பேரின்பலட்சியம் உடையார் சிற்றின்பத் தைத் தெய்வாம்சமாகக் கண்டு விலகி நிற்பாரேயன்றி அதில் சிறிதும் விருப்பு வெறுப்புக் கொள்ளார்.

(21)

1427. **நாதநல் வரைப்பி னண்ணிய பாட்டே**

1428. **வேதகீ தத்தில் விளைதிருப் பாட்டே**

(உ-வி) செவிப்புலனாகும் பலவாகிய ஒலிகளில் பண்ணோ சைகள் சிறந்தனவாம். அந்தப் பண்ணிசைகளில் விளைவனவே நாதகீதங்கள் யாவும். ஒவ்வொரு பண்ணுக்கும் ஓசையின் இயல்பும், அதற்கு ஒரு வரையறையும் உண்டென்பது இசை நுணுக்கம் அறிந்தோர் நன்கறிவர். அவ்விசைக்கலை நன்கு பயின்று பாடப்பெறும் பாடல்கள் நல்ல நாத லயம் உடையன வாய்க் கூறப்படும். இவ்விசைகளின் பிறப்பும், இயக்கமும், பயனும் நன்கு ஆய்ந்து ஆக்கப்பெறுகின்ற பாடல்களே திருப் பாடல்களாக நவிலப்படும். அங்ஙனம் அமைந்தவைகள்தாம் நம் தேவாரப் பண்களும், சாமவேத கீதங்களுமாம். இவைகளை முறையோடு, பொருள் அறிந்து பாடினால் பயன் சிறந் திலங்கும்.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவருட்பா முதலிய பாடல்கள் இசையோடு பாடினால் நற்பயன் விளையும் என்பர். அப்படி இசையோடு எல்லோராலும் பாட முடிகின்றதில்லை. ஆகையால், பாட்டைக்கேட்டு ரசிக்கலாம் எல்லோரும். இசை யின் பொருளுணர்ந்து உள்ளொன்றி அனுபவித்தல்தான் முக் கியக் குறிக்கோளாகும். ஆகையால், பாடல்களைப் பொருள றிந்து பாடுதல் வேண்டும். பொருள் அறிந்து இனிக்க இனிக் கப்பாடினும் புலன் இன்பத்திற்காக அல்லாது, அக அருள் அனு பவத்திற்காகவே பாடப்படுதல் சிறந்ததாகும். ஆகையால் பாடுநர் முதலில் பொறிபுலன் இச்சையை விடுத்து நல்ல தயா

வொழுக்கம் உடையவர்களாய் இருக்க வேண்டியது இன்றியமை யாததாம். இசைகளை இனிது சுவைத்து இன்புறுகின்றவர்கள் கூட ஒழுக்கமும், சுத்த சத்விசாரமும் உடையவர்களாய் இருந்து பாடல்களைக் கேட்டு நற்பயன் பெறவேண்டுவது முக்கியம். பாடுகின்றவர்களைவிடப் பாடக் கேட்டுப் பயன்பெறுகின்றவர் களே எளிதில் பெருநலம் பெறலாகும். ஏனெனில், இசை பாடகர், நல்லிசை பாடுவதைக் கேட்டு நலம் காண்போர் எப் பொழுதும் அவ்விசைகளைக் கேட்கக்கூடிய முறையில் பதிவு செய்து பயன்படுத்திக்கொள்ள முடிகின்றதாம். அதனால் பாட கர்களின் நலம் கேடுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலே, நல்லிசையிற் பெரும்பயனை என்றும் அடையக் கூடியதாய் இருக் கின்றதாம்.

(22)

1429. நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே
1430. சன்மார்க்க சங்கந் தழுவிய பாட்டே

(உ-வி) நல்ல ஒழுக்கம் பூண்டவர்கள், கடவுட் சிந்தனையும், ஜீவ தயவும் கொண்டவர்கள், நன்மையே தரும் இன்சொல்லும் அன்புச்செயலுமே புரிகின்றவர்களாய் இருப்பார்க்ள். அவர் களுடைய செந்நாவிற் பயின்று வருவனவே திருப்பாடல்களாக, அருட்பாக்களாக இருக்கும். அப்பாட்டுகள் சன்மார்க்க சங்கம் பற்றியவையாகும். சன்மார்க்கம் ஒன்றே நன்னெறியாம்.

"சன்மார்க்கம் நன்மார்க்கம் நன்மார்க்கம்
சகமார்க்கம் துன்மார்க்கம் துன்மார்க்கம்."

என்பது திருவருட்பா தரும் விளக்கம்.

சன்மார்க்கம் என்பது சத்துமார்க்கம் என விரிவுபடுத்திப் பொருள் காண்பர். சத்தாவது, மெய்ப்பொருளான கடவுள் உண்மையே. ஆகையால், கடவுளை அடைவிக்கும் உண்மைநெறி எதுவோ அதுவே சன்மார்க்கம் எனப் படுகின்றது. மேலும் இந்நெறி சரியையாதி நான்கின் முடிந்ததாகிய ஞானமார்க்கம் என்றும் கொள்ளு கின்றனர். ஆனால், இந்நெறிகள் எல்லாம் புறத்திருந்து கட வுளைச் சார வழிகாட்ட வந்தனவேயாம். புறத்தைவிட்டு , சுத்

திலேயே ஒன்றிவிட்டால் கடவுணிலை பெற்றுவிடலாம் என்பது முன்னோர் கருத்து. அக் கருத்தின்பேரில்தான் எல்லா மார்க்கங்களையும் வகுத்தளித்தார்கள் அன்னோர். ஆகையால் அந்நெறி பயின்றோர் முடிவில் அகத்தே ஒடுங்கி மறைந்துதான் போனார்கள். கடவுள் அனுபவம் கெடாது விளங்கும் இந்த உயர் மனித உருவொடு வாழாமற் சென்றுவிட்டனர் என்பது உண்மையாம்.

இதுசமயம், மனிதனைக் கடவுள் அனுபவத்துடன் இவ்வுலகில் என்றும் அழியாது வாழவைத்து விளங்கச்செய்யும், அகப்பதியிடமிருந்து அனகமுறுகின்ற ஒரு நெறி முறை திருவருளாலே, திருவருட்பிரகாச வள்ளலார் மூலம் வெளியாக்கப் பட்டிருக்கின்றது. இதுதான், சத்தாகிய பரம்பொருளிடத் திருந்து நேரடியாகச் செயல்படுவது: ஆகையால், இதுவே உண்மைச் சத்து நெறி அல்லது சுத்த சன்மார்க்கமாம். இந்நிலை நின்று, தான் பதியோடு பிரியாது, அதுவாகி யிருக்கின்ற உண்மையைச் சுத்த சத் விசாரத்தால் ஒருவன் அறிந்து அகமிருந்து விளங்குகின்றான். இப்படி அகப்பதி நிலையைச் சத்தாய்ச் சார்ந்து நின்று, அருளாலே நித்தியமாய் வாழ்கின்றவன் தானே சன்மார்க்கி எனப்பட உரியவனாவான்.

இதனால், நன்மார்க்கர் என்போர் பொதுவாக நல்லொழுக்கம், தயவு, பத்தி முதலான நற்குண சம்பத்துடையவர்களாவர். இவர்கள் நாவிற் பயின்ற அல்லது பழகிய பாடல்களே நல்ல பாடல்களாம். இவர்களின் பாட்டு சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டுகளாம். தழுவிய என்றாலே புறத்தணைதல் என்ற பொருள்படுவதாம். ஆகையால், இந்த சன்மார்க்கம் பழநெறியினவாகவே கொள்ளமுடியும். ஆனால், நம் அகம் நின்று ஒளிர்கின்ற அருட்பெருஞ்ஜோதியினின்று ஒலிக்கின்ற அருட்பாவே இன்று சுத்த சன்மார்க்கப் பாடலாக அறிந்து கொள்ளப்படுகின்றதாம்.

(23)

1431. நம்புறு மாகம நவிற்றிய பாட்டே
1432. எம்பல மாகிய வம்பலப் பாட்டே

(உ-வி) கடவுளை வழிபட்டுக் கடைத்தேற வகுக்கப்பட்ட தந்திர ஒழுக்க முறைகளே ஆகமங்களாம். பசுபதியாம் கடவுள்

தத்துவத்தைப் பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது இந்த ஆகமம். இதுவே பதிநூல் எனப்படும். வேதமந்திர சொரூபி யாகிய கடவுளை விளக்கும் உரையே இத் தந்திர ஆகம முறை யாம். இது பதிநூல் எனவும் புராணங்கள் பசுநூல் எனவும் இதிகாசங்கள் பாசநூல் எனவும் கொள்ளுவர் ஒரு சாரார். இவ் வாகமமே முப்பொருள், அதாவது, ஆ-பசு, க-கடவுள், ம-மலபாசம் ஆகிய மூன்றும் கொண்டது எனவும் கொள்ளப்படும். அன்றி யும், ஆ-ஆணவம், க-கன்மம், ம-மாயை என்னும் மும்மலங் களையும் அருட்பக்குவத்தால் மாற்றி மெய்ப்பொருள் அனுப வத்தை வழங்கும் நூல் இது என்பதும் சிலர் கொள்கை. இப் படிப் பலரால் நம்பப்பட்டுள்ள ஆகம நூற்பாக்களே, ''நம்புறும் ஆகமம் நவிற்றியபாட்டு,'' ஆம். நமது உயிர், அறிவு, ஆற்றல் எல்லாமாகியது, அகம் வளர் அம்பலத்தொளிர் ''பா'' ஆகும். இதுவே ''எம்பலமாகிய அம்பலப்பாட்டு'', என்று குறித்துள்ளார் நம் பெருமான்.

''அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு''

என்று நாமாவளியிற் கூறியுள்ளார். நம் சிரநடு அம்பலத்தே திகழும் கடவுட்ஜோதியே மெய்ப்பொருளாக உள்ளதால், அதுவே அந்த (அம்+பல்+அம்) அம்பலத்தில், பகரபீடத்தில் ஒளிர்கின்ற உண்மை அருட்பாவாகும். அந்த உண்மைப் பொரு ளாய், ''அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை,'' ஒளிர் கின்றது. அதனையே நமக்கு விளக்கிக் காட்டிக் கூட்டிவைக்க, ஆக்கி அளிக்கப்பட்டுள்ளதுதான் திருவருட்பா என்றால் அது முழு உண்மையேயாம். அந்த அகம் ஒளிர் பா தரு பொருளே இந்த அகவற்பாவின் பொருளுமாம்.

(24)

1433. என்மனக் கண்ணே என்னருட் கண்ணே
1434. என்னிரு கண்ணே யென்கணுண் மணியே

(உ-வி) சிறந்த இம் மனிதப் பிறப்பில், சிரம்தான் சிறப் புடையது என்பர். அதிலும் கண்ணே மிகச் சிறந்தது ஆம். இம் முகத்துள்ள புறக்கண்களே, அகவுணர்ச்சிகள், அனுபவங் கள் பலவற்றிற்கும் உதவும் சாளரங்களாம். மெய்ப்பாட்டின்

வெளியரங்கமும் இவையே. இக் கட்புலனுக்கு நோக்கும் ஆற்றல், அகவுயிர் ஒளியால், கண்மணியின் ஆறாக வெளிப்படு கின்றதாம். இப்புறக் கண்ணால் காண்கின்ற காட்சி சிற்றளவே யாகும். அப்படிப் பலபோதும் கண்ட காட்சியின் நினைவுதான் உளத்தே பதிந்திருந்து எண்ணுந்தோறும் அல்லது எண்ணத் தூண்டுதல் ஏற்படும் போதும் உள் தோன்றுவதே மனக்காட்சி அல்லது கரணக்காட்சியாம். இம் மனம், சகல கேவலமற்று அருளால் தூய்மையுற்று அருள் உணர்வுமயமாய் நிற்கும்போது தெய்விக உண்மை பலவும் தோன்றும். இதுவே அருட்கண் காட்சி அல்லது ஆன்மக் கடவுட்காட்சியாம். இதில் நம் அருட் பெருஞ்ஜோதிபதிதானே அருள் வண்ணமாய் நின்று தன் உண்மை யைக் காட்டுகின்றதுமாம். இவ்வுயர் அனுபவம் உண்டாவதற் கென்றே மனக்கண்ணையும், புறத்தே புலக்கண்களையும் மலர்த்தி உளங்கொண்டிலங்கச் செய்து கொண்டுள்ளார் நம் ஆண்டவர். ஆதலின், அவரையே யாவுமாய்க் கொண்டு போற்றுதல் முறை யாம். இங்கு, ''என் மனக்கண்ணே, என் அருட்கண்ணே, என் இரு கண்ணே, என் கண்ணுள் மணியே,'' எனக் குறிக்கப்பட் டுள்ளதாம்.

கண், கண்மணி, கண்ணுண்மணி என்பன, பொறி புலன் உணர்வைக் கடந்து, அருளாலே ஆன்மக்கடவுள் உண்மையைக் காணச்செய்யும் பொருளைக் குறிக்கும். கண், புறக்கருவியா யுள்ளது. கண்மணி, கண்ணுக்கு நடுநின்று காண உதவுவது. அதற்கு மேலே கண்ணுண்மணி என்பதுதான், உள்ளொளியா யிருந்து காணும் ஆற்றலைக் கண்மணிக்கு வழங்குகின்றது. எனவே, நம் கண்ணுண்மணியாய் விளங்குகின்றது நமது அருட் பெருஞ்ஜோதியே ஆம். அந்த அருள்மணி ஒன்றே கண்ணாயும், மனக்கண்ணாயும், கண்ணுண்மணியாயும் ஆகி விளங்குவன கண்டு அந்த அருள் ஞானக் கண்ணை இங்கு போற்றிடுவோமாக.

(25)

1435. என்பெருங் களிப்பே யென்பெரும் பொருளே

1436. என்பெருந் திறலே என்பெருஞ் செயலே

(உ-வி) எல்லாமாய் இருப்பது அருட்பெருஞ்ஜோதி ஆண் டவர் ஒருவரே. அவரே அகவுணர்வில் அனுபவிக்கப்படுகின்ற

ஆனந்தமாய் உள்ளார் (இதனையே ''என் பெருங்களிப்பே'' என்கின்றார்.) அவ்வக வுணர்வு விளங்கத் துணைக்கருவியாகிய புறப் பொருள் யாவும் அவரே (இது, ''என் பெரும் பொருளே'' எனப் படுகின்றது) மேலும் அவ்வகப்புறத்தே வெளிப்படுகின்ற கருவி கரணச் சக்திகள் அல்லது ஆற்றல்கள் யாவும் அவரே (இதுவே, ''என் பெருந் திறல்'' எனப்பட்டுள்ளது) பின்னும், அச் சக்தி யினால் புறப்புறத்தே நிகழ்கின்ற செயல்கள் எல்லாமும் கூட அவரே (என்பதை ''என் பெருஞ்செயலே'' என்றுள்ளார்) ஆதலின் இந்நான் கிடத்தும் நம் பதியையே தனித்தனி யோர்ந்து உணர்ந்து கண்டுகண்டு போற்றி செய்தல் நமது கடமையாம். ஆண்டவர் ஆணையும் நம் குறிக்கோளும் இதுவே. உண்மை கண்டு, உவகை பொங்கப் பரோபகாரப்பணி புரிந்திருத்தலே போற்றி செய்தலாம்.

(26)

1437. என்பெருந் தவமே யென்றவப் பலனே

1438. என்பெருஞ் சுகமே யென்பெரும் பேறே

(உ-வி) நமது அருட்பெருஞ்ஜோதி பதி, சுத்த அன்பும் அறிவும் இன்பமுமாக உள்ளவராவார். அவ்வன்பும் அறிவுமே நமது ஆருயிரில் ஆதிமுதல் இன்றுவரை வளர்ச்சி அடைந்து கொண்டேயுள்ளதாகும். இம் மனிதப் பிறப்பில் அது (அன் பறிவு வளர்ச்சி) விசேடவிருத்தி அடைகின்றது. இதற்காகத் தான் தயவும் ஒருமையும் பெருக்கும் தவவாழ்வு மேற்கொள்ளப் படுகின்றது. ஈதல்லாத வெற்று ஒருமையால் சுடச்சுட நோற்றல் உண்மைத் தவமாகாது. இதனால் ஒருமைச் சித்தி யெய்திய கன்மசித்தர்கள் பலரும், அன்பறிவின்ப இறைமயமாகாது, ஆகி வாழாது சித்தாடிக் களிக் கூத்தாடிவிட்டுச் சென்றனர். ஆகை யால், ஒருமை, தயவோடு கூடியதாக இருந்து தவமியற்றுதல் முறையாம். எனவே, இத்தவ முறை காட்டிற் சென்று தனிமை இனிமை காணத் தறி எனச் சமாதி நிட்டை கூடிப் பெறுவ தன்றாம். அதற்கு மாறாகத் தயவுச்செயல் புரிந்துகொண்டு வாழ்வதே உண்மைத் தவமாம். இத் தயாவொருமை வாழ்வே ''என்பெருந் தவமே'' என்கின்றார். இத் தவ வாழ்வாற் பெற்ற நன்மைகள் பலவும், ''என் தவப் பலனே'' என்கின்றார். அத்

தவப் பயனால் ஏற்பட்ட பெறலரும் பெருஞ்சுக வாழ்வுதான், ''என் பெருஞ் சுகமே'' எனப்படுகின்றது. முடிவாக, இதுதான். தான் பெற்ற பேரின்பப் பேறு என்பதையும் குறிக்கவே, ''என் பெரும் பேறே'' என்றுள்ளார்.

(27)

1439. என் பெரு வாழ்வே யென்றன்வாழ் முதலே
1440. என்பெரு வழக்கே யென்பெருங் கணக்கே

(உ-வி) இவ்வுலகில் நமது வாழ்வு நல்ல முறையில் சிறந்த தாக விளங்கற்கு நம் பதியின் திருவருளே இன்றியமையாதது. அத்திருவருளோடு, வாழ்வுக்காம் எல்லாப் பொருள்களும், ஆற்றல் களும், மற்றெல்லாச் சூழ்நிலைகளும் தாமே வந்தமையும். ஆதலின், அவரையே, ''என்பெரு வாழ்வே'', என்றும், ''என்றன் வாழ் முதலே,'' என்றும் போற்றுகின்றார் நமது வள்ளற்பெருமான். வாழ் முதலாவது, வாழ்வுக்கு முதற்பொருளாய் உள்ள நம் பரம்பொரு ளேயாம். வாழ்வாகிய வியாபாரத்திற்கு முதல் தொகையாக உள் ளது நம் அருட்ஜோதி நிதியேயாம். உலகப் பொருள் வாணிபத் தில் கிடைக்கும் இலாபம் பொருளேயாம். அதனால் சிறு இன்ப வாழ்வு பெற்று ஒழியவே நேரும். ஆனால் அருள்முறையில் கிடைக்கும் ஆதாயம், அருட்பரம்பொருளாகவே இருத்தலின், அதனால் கிடைக்கும் இலாபமும் பேரின்பமும் கொண்டு அழிவற்று விளங்குவதாயுள்ளதாம்.

மேலும், அருட்பெரும்பதியேதான் நமக்கு நீதியாகவும், நீதிச் சட்டமாகவும், வாழ்க்கை வழக்க விதியாகவம், வாழ்வின் நியதியாம் வரவு செலவுக் கணக்காகவும் உள்ளதாம். இவ் வுண்மை கண்டே ''என் பெரு வழக்கே, என் பெருங் கணக்கே'' எனவும் போற்றியுள்ளார். ஒருவன், பிறவிகள் தோறும் அறப் பொருள் தேடி, அகப் பாங்கில் (Bank) சேமித்துக்கொண்டு வந் துள்ளான். ஆனால், இந்த உண்மைச் சேகரம் இவனுக்கே தெரியாதபடிதான் திருவருளாலே இவன் பேரில் வரவு கணக்கில் கூடிவந்துள்ளதாம்: இந்த நிதியைப் பிற எவரும் எவ்விதத்தும் வழக்கிட்டுப் பெற்றுவிட முடியாது. நம் பதியும் நமது உரிமைப் பொருளைக் குறைத்தோ, இல்லை என்று பொய் கூறியோ,

தவறான கணக்கு காட்டியோ பட்டிமை (வஞ்சனை) வழக்கிட்டோ மோசஞ்செய்து விடவேமாட்டார். நாம் அருட் பக்குவம் அடைந்து, அருள் மண வாழ்வுக்கு உரியவராகும் சமயம் நம் பொருள் முழு வதையும், வட்டிமேல் வட்டியிட்டுக் கோடி கோடியாகப் பெருக்கி நமக்கு உரிமையாக வழங்கிக் கணக்கை முழுவதும் தீர்த்து விட உள்ளார். இவ்வுண்மை எல்லாம் இந்த ஓர் அடியில் அடங்கிய தாய்க் காண்கின்றோம்.

(28)

1441. என்பெரு நலமே யென்பெருங் குலமே
1442. என்பெரு வலமே யென்பெரும் புலமே

(உ-வி) பெருநலம் என்பது பெருஞ்சுகானுபவ நிலையாம். இதன் ஒரு மிகச்சிற்றணுப் பிரமாணம் உலகில் நலவாழ்வாக விளங்குவது. இச் சிறு நல நிலையிலிருந்து பெரு நிலைக்கு ஏறவே தயா நன் முயற்சி மேற்கொள்ளுகின்றோம். உலகில் எல்லோரும்தான் நலம் விரும்புகின்றனர். ஆனால் எது உண்மை யான நலம் என்று அறியாமலும், அதனை அறிந்துகொள்ள முயலாமலும், தேகபோகப் புலன் அவாவை நிறைவேற்றிக் கொள்ளும் முறையில் எதை எதையோ நலன் எனக் கருதி அடையப் பெரு முயற்சி செய்தும், அடைந்தும்கூட முடிவில் ஏமாற்றமும், வெறுப்பும் அடைந்து துன்பத்திலே அழிகின்றனர். உண்மைநலம் சுத்த தயவினால்தான் வரும் என்பதும், அதற்காக விருப்பும் வெறுப்புமில்லா தயாநெறி பற்றிச் சூழ்நரை அன்பாலே வாழ்வித்தலே யாவருக்கும் உண்மைநலம் பயக்கும் என்பதை நம் வள்ளல் கண்ட சுத்த சன்மார்க்கத்தால் அறிகின்றோம். உலக மெல்லாம் இதனை அறிந்து ஏற்று இன்புற வேண்டும்.

நம் பெருமான் இங்கு எதைக் குலம் என்கின்றார் என்பதைப் பார்ப்போம். குலம் என்பது உயர் பிறவி மக்கள் இனமாம். அன்றியும், ஆன்மக்கடவுள் உண்மை குலவியிருக்கின்ற ஆலயமும் குலம் எனப்படும். உண்மையான நித்தியமான ஆண்டவர் விளங்கும் நித்தியமான 'ஆலயம் இந்த நம் ஆன்மாலயமாம் குலமேயாம். இவ்வுண்மையை அறிந்துகொண்டால், ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்றதன் உண்மை நன்கு விளங் கும். இவர் கண்ட ஒன்றான பெருங்குலம் தான் இன்று வடலூர்

சத்தியஞான சபை என அருட்பெருஞ்ஜோதியோடு விளங்கு கின்றதாம். ஒன்றான மக்கள் சமுதாயம் முழுமைக்கும் நல்வாழ்வு தர வந்துள்ளது இந்தக் குலம். ஒவ்வொரு வரும் தன் அக அம்பலமாகிய குலத்தில் அருட்பெருஞ்ஜோதியாகிய தெய்வத் தையே தனது உண்மைக் குலதெய்வமாகக் கொண்டு வாழ்ந்து உலகம் இன்பில் தழைத்தோங்கச் செய்தல் வேண்டும்.

அடுத்து, வலமும் புலமும் குறிக்கப்படுகின்றன. வலம் என்பது ஆற்றல், வெற்றி என்ற பொருள் கொண்டது; புலம் என்பது அறிவும் அது விளங்கும் இடமுமாம். வலம் இடம் என்ற இரண்டினைக் கடவுளான்மா விளங்கும் நிலையமாக கொள்ளக் கூடும். கடவுள், அருட்பெருஞ் சக்தியாக விளங்குவதை நாம் அறிவோம். அப்படி வெளிப்பட்டு விளங்குகின்ற இடம் நம் ஆன் மாலயமே என்பதையும் அறிவோம். எனவே, நம் ஆன்மா இட மாகவும், அதில் விளங்குகின்ற அருட்பேராற்றலைச் சுட்ட வலம் என்றதையும் கொள்ளலாம். ஆகவே, வலம் என்பது நம் அருட் பெருஞ்ஜோதி சக்தியே என அறியலாகும். இது நமக்கு இறை இன்ப வெற்றி வாழ்வைக் கொடுப்பதாம். மேல் புலம் என்பதும் நம் அருள் ஒளியைக் குறிப்பதாகவே கண்டுகொண்டு வாழ்வோ மாக.

(29)

1443. என்பெரு வரமே யென்பெருந் தரமே
1444. என்பெரு நெறியே யென்பெரு நிலையே

(உ-வி) நமது வாழ்க்கை நலனுக்கு நம் பதியிடம் வேண்டிப் பெறத் தக்க வரம் அல்லது பேறு அவர்தம் திருவருளே யாகும். இதுவே பெரு வரமாகப் போற்றிக் கொள்ளப்படுகின்றது. ஒருவன் தவம் செய்து, தான் விரும்பியதை வரமாகப் பெறு கின்றான். பெற்ற அதனால், தான் கருதிய நன்மை கிடைக் காமல் போகக் கூடும்; அல்லது, அந்த வரமே அறமாகி, தன் வேண்டுதலும் திரிபாகிய தீய பலனை விளைவித்தலும் கூடும். இதனால் நாம் விருப்பு வெறுப்பு காரணமாக எதையேனும் மிக வேண்டி தவமுயற்சி செய்து பெற்றும் அதனால் வருவது நன்மையா தீமையா என்பது தெரியாதிருக்கின்றதாலே, அப்படி எதனையும் வேண்டாது, திருவருளைப் பெற்று உய்வதே சால்

புடைத்தாம். அத் திருவருளையே வரமாகப் பெறின், அதனால் நமது உண்மைத் தேவை நிறைவேற்றி வைக்கப் பெறுவது நிச்சயம். அதில் ஐயமில்லை ஆகையால் அச்சமுமில்லையாம். ஆகவே நம் வள்ளல் வேண்டிப் பெற்றுள்ளது நிறை அருளாகிய பெரு வரமேயாம்.

அடுத்து, என் பெருந் தரமே என்று போற்றுகின்றார். தரம் என்றால் தன்மை, உயர்நிலை ஆகும் அருளாகிய தன்மையே நமது பெருந்தரமாக அறிந்து கொள்ளப்படும். அடுத்து, என் பெருநெறி என்றும், என் பெருநிலை என்றும் குறித்துள்ளார். இவரது நெறி யாதெனில் சுத்த சன்மார்க்கம் என்னும் பெரு நெறியே. உலகத்திற்கே இது ஓர் ஒப்பற்ற பெருமை வாய்ந்த அரிய பெரிய மார்க்கமாகும். இதனால் சிதறுண்டு அவத்தைகளால் துன்பப்பட்டு அழிந்து கொண்டிருக்கும் மக்கள் சமுதாயத்திற்கு ஒற்றுமையும், நன்மையும், இன்பமும் தழைத்தோங்கச் செய்யும் பெரும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றதாம். இந்நெறியால், நம் வள்ளல் பெற்றுள்ள நிலை, மரணமில்லாப் பேரின்ப சித்திப் பெருவாழ்வாகும். இந்நிலையைத்தான் குறிக்கோளாய்க் கொண்டு அடைய சுத்த சன்மார்க்கம் வழங்கப்பட்டுள்ளோம். இப்படி நெறியும் குறியும் சிறப்பு மிக்க பெருமையுடையனவாய் இருப்பதால் உலகெல்லாம் போற்றிக்கொள்ள வேண்டுவது அவசியமாகும்.

(30)

1445. என்பெருங் குணமே யென்பெருங் கருத்தே
1446. என்பெருந் தயவே யென்பெருங் கதியே

(உ-வி) சில அடிகளில் தொடர்ந்து வருகின்ற பெரும் என்ற சொல் பொதுவாகப் பெரியது என்னும் அளவையுரிச் சொல்லாய் இருப்பினும், கடவுட் பெருமையையும், சிறப்பையும், அதனால் பெறப்படும் தெய்விகப் பேறையும் உணர்த்த வந்ததாகக் கொள்ள வேண்டும்.

இங்கு முதல் அடியில் என்பெருங்குணம் என்கின்றார். பெருங்குணமாவது அன்பு, இரக்கம், ஈகை, முதலான சிறந்த இயல்புகளாம். இக்குணங்கள் எல்லாம் திரண்டுருவான

ஒன்றே நம் அருட்பெருஞ்ஜோதியாகும். ஆதலின், இந்த அருட்பெருஞ் ஜோதியைத்தான் இப்படி, ''என் பெருங் குணமே'' என்று துதிக்கின்றதாக அறிய வேண்டும். இவரது கருத்து, எண்ணம்கூட இதுவேதானாம்.

அடுத்த அடியில், ''என்பெருந்தயவே'' என்கின்றார். எல்லாம் வல்ல எங்கும் நிரம்பியுள்ள கடவுள் உண்மையைத் தான் இந்தத் தயவாகக் கண்டு போற்றுகின்றார். பெருஞ்ஜோதி மயமாய் அகண்டவெளி முற்றும் நிரம்பியுள்ள அந்த அருட் பெருஞ்ஜோதியையே தயவாகக் காண்பதில் ஒரு பெரும் சிறப்பு விளங்குகின்றதாம். யாதெனில், அருட்பெருஞ்ஜோதிபதி, புறத் தில் ஐவண்ணம் கொண்ட ஐஞ்சக்திமயமாய் இந்தப் பிரபஞ் சத்தில் காரியப்பட்டு விளங்க, இதற்கு ஆதாரமாய் பேரருட் பெருஞ்சக்தியாக அகமிருந்து விளங்குகின்றது எல்லாம்வல்ல எல்லாமான அருள் என்று இன்று அறியப்படுகின்றதாம். அதாவது, அகத்தில் அருளாக இருந்து கொண்டு, புறத்தில் பெருஞ்ஜோதியையே ஐவண்ணத் தோற்றங்கொண்டிலங்கச் செய்கின்றதாம். இதுவே அருட்பெருஞ்ஜோதிக் கடவுளின் அகம் புறம் நிரம்பிய பெருநிலை யுண்மையாகும். இந்த முழு உண்மை நிலையைத்தான் ''தயவு'' என்ற சொல் சுட்டுகின்ற தாக இன்று உணர்த்தப்படுகின்றோம். எப்படியெனில், இந்தச் சொல்லில், ''தய'' என்பது அருள் எனவும், ''வு'' என்பதே வகரமெய்யும் உகர வுயிரும், ஐமை ஐந்தியல் காரியப்பாடு ஆகிய சூழ்பெருஞ் ஜோதியுண்மையைச் சுட்டி நிற்பதாம். ஆகவே பெருஞ்ஜோதியே ''வு'' கரத்தால் குறிக்கப்பட, அருளே ''தய''வாக முன்னின்று, அருட்பெருஞ்ஜோதியே தயவு என விளங்கக் காண்கின்றோம்.

இன்னும், அருட்பெருஞ்ஜோதிபதியின் அனுபவ விளக்க சொரூபம், ''அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை'' என்று அறிவிக்கப்பட்டுள்ளோம். இதில், அகமிருக்கும் அருளே அருட் பெருஞ்ஜோதியாக விரிந்துள்ளதாயும், சூழ்பெருஞ் ஜோதி நிலையே தனிப் பெருங் கருணை வடிவாகியும் திகழ்வதாக உணர்த்தப் பெறுகின்றோம். இப்போது இந்த அருட்பெருஞ் ஜோதியாகிய அருள் தானே ''தய'' வென நின்று, தனிப் பெருங்கருணையே ''வு'' வாகக் கூடி அருட்பெருஞ்ஜோதி தனிப் பெருங் கருணையே ''தயவு'' என விளங்கக் காண்கின்றோம்.

மேலும் இவ் அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் விளக்கத்தை மகா உபதேசத்தில் விரித்துக் கூறும்போது:

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

என்று விரித்துள்ளார். இதுபோல் அந்தத் தயவுகூட விரிந்து விளங்கிடக் காண்கின்றோம் இன்றும். அதில், நம் தயவுதானே, முதலில், தயாபெருஞ் ஜோதியென விரிந்தும், அடுத்து, தயா பெருஞ்ஜோதி தனிப்பெருந்தயவு எனப் பெருகியும், முடிவிலும், தயாபெருஞ் ஜோதியென ஆகியும் மொத்தத்தில்

"தயாபெருஞ்ஜோதி
தயாபெருஞ்ஜோதி தனிப்பெருந் தயவு
தயாபெருஞ்ஜோதி"

என விளங்கி நிறைவு பெற்றுத் திகழ்கின்றதாம். இம் முடிநிலை யில்தான் தயவின் பெருமை முற்றும் வெளியாகி விளங்கக் காண் கின்றோம். இதுவே, இங்கு தனிப் பெருந்தயவு ஆகத் தோற்றி யுள்ளதாம். இந்த உண்மைக் குறிப்பு முற்றும், "என் பெருந் தயவே", என்றதில் அடங்கி நின்று வெளியாவதாக உணர்த்தப் பெறுகின்றோம்.

அடுத்து, என்பெருங்கதியே என்கின்றார். கதி என்பது செல்லும் வழி அல்லது நெறியும், சென்றடைகின்ற புகலிட முமாம். குறிக்கோளும், அதனை அடைகின்ற நெறியும் என்றும் விளங்குவதாம். இதனை மேனாட்டு வழக்கில் (Means and End) என்கின்றனர். நமக்கு இங்கு அடையவேண்டிய குறிக் கோள்நிலை அருட்பெருஞ்ஜோதி ஆம். அதனை அடைய மேற் கொள்ளப்படும் வழி துறையும் அருட்பெருஞ்ஜோதி நெறியாகவே யுள்ளதாம். இதனால் இந்த அருட்பெருஞ்ஜோதியை, "என் பெருங் கதியே", என்றுள்ளார்.

(31)

1447. என்பெரும் பதியே யென்னுயி ரியலே
1448. என்பெரு நிறைவே யென்றனி யறிவே

(உ-வி) இவ்விரு அடிகளும் இந்த இயற்கைப் பொருண்மை என்ற தலைப்பின் ஈற்றடிகளாக வந்துள்ளனவாம். இயற்கைப் பொருள்களிலே மிகமிகச் சிறந்தது எது என்றால், அது மெய்ப் பொருளான பரம்பொருளேயாகும். அந்தப் பரம்பொருளின் அனுபவ வெளியீடு இங்கு குறிக்கப்பட்டுள்ளதாகும். அக் கடவுள் அனுபவம் எப்படி விளங்குகின்றது என்பதைக் காண் போம். கடவுள் முழு உண்மை விளக்கம், முப்பகுதிகளாகக் கொள்ளப்படுகின்றனவாம். அப்பகுதிகள் மூன்றும்: 1. சத்து, 2. (சத்து+அசத்து=) சதசத்து, 3. அசத்து என்பனவாம். இவற்றைத் தனித்தனி விளக்கஞ் செய்து காண்பாம்.

1. சத்து = கடவுளின் சத்து அம்சமாகிய பகுதி, ஆன்மாவின் அகத்தே பிரிவறப் பதிந்து ''பதி'' என விளங்குகின்றது. இது அருவநிலை கொண்டதாம். இந்தச் சத்துப்பொருண்மை அகண்ட பெருவெளி முற்றும் நித்திய சத்துப்பொருளாகத்தான் இயற் கையாய் நிலவிக்கொண்டுள்ளது. எனினும் அது வெளிப்பட்டு விளங்கும் இடம் நமது ஆன்மநிலையமாக இருக்கின்றதாம். இந்த ஆன்மாவில்தான் பதிவுற்றிலங்குவதாகக் கடவுள் உண்மை அனுபவப்படுவதாம். இது வெளிப்படும் இடமே நம் தலை நடுப் பகர வடிவ பீடத்து விளங்கலின் பதி என்று கூறப்படுவது போலும்! ஆன்மாவாகிய பசுவிற் பதிந்து விளங்கும் பதியைப் பசுபதி என்றலும் பொருந்துவதே. இந்தச் சத்பதியின் உண்மை, அகண்டபெரும்பதியின் முழு உண்மையாகவே இருக்கின்றது அக அனுபவிகள் கண்டதாம். ஆகவே, அளப்பரிய பெரும் பதியே, இந்த ஆன்மாவில் வெளியாகிக் கண்டு கொள்ளப்படுகின்ற தாலே, இங்கு இப்பதியின் பெருமையும் நலமும் முழுமையாக அனுபவப்படுகின்றதாம். இதனாலேதான், இங்கு, ''என் பெரும் பதியே'' என்றுள்ளார்.

2. அடுத்து, என்னுயிர் இயலே என்கின்றார். இந்த உயிரின் இயல் என்ன? ஆன்மாவிலிருந்து தோன்றி உயிருடம்பில் செயல்படுகின்றது. அக்காலத்தில் தேகவாழ்வின் மூலம் சில அனுபவம் ஆன்மாவுக்கு ஏற்படுகின்றதாம். இவ்வுயிர் மறுபடி யும் ஆன்மாவிற் சுருங்கி மறையும்போது, உடல் இழப்பு நேரு வதாம். எனவே இந்த உயிரின் இயல், முன்னம் ஆன்மாவில் அருவமாய் இருந்துள்ளது, உடலில் தோன்றி விளங்குகின்ற போது அவ்வுயிர் அருவுருவமாய்த் திகழ்ந்து மறுபடியுள்ளொடுங்

குங்கால், உயிர் அருவமாகி விடுகின்றதாம். ஆன்மாவில் எப்பொழுதும் இருந்து வருகின்ற உயிர் நிலை நித்திய ஜீவன் என்றும், அவ்வான்மாவினின்று தோன்றுவதும் மறைவதுமான உயிர்நிலை, நிலையற்ற அல்லது அநித்திய ஜீவன் என்றும் கூறப்படும். இவ் விரண்டாகிய உயிர்நிலைகளே சத்தும் அசத்துமாய் உள்ளதால் இவ்வுயிரியலே சதசத்து எனப்படுகின்றது. இதுவே இங்கு 2-வது ஆகக் கொள்ளப்படுகின்றது.

3. ஆன்மாவினின்று வெளிப்பட்ட உயிர் உணர்வு இந்த உடம்பில் நிறைந்து விளங்குகின்றதாம். உடலின்றி உயிரனுபவம் விளங்க முடியாது. ஆனால், இந்த உடலும், இதில் நிரம்பியுள்ள உயிருணர்வும் நிலையற்றதாய் அல்லது அசத்தாய் இருக்கின்றன. பக்குவத்தே திருவருள் வெளிப்படுகின்றபோது, ஆன்மாவிலிருந்த அருள் ஒளி யுணர்வுதானே நித்திய ஜீவனாய் வெளியாகி சூழ் உடம்பில் நிறைந்து கொண்டு உடலையும் கூட நித்திய வடிவாக்கி விடுகின்றதாம். இது நித்திய ஆன்மாவின் அகம் விரிந்த அனக நிறைவு நிலையாம். இந்நிறைவுதான் உடம்பினையும் அருள் உருவான நித்திய வடிவமாக்கி வாழ்விக்கின்றதாம். இதனால் நம் அருட்ஜோதியேதான், இந்த அசத்தாம் உடம்பும் ஆக வுள்ளதென அறிகின்றோம். ''என்பெரு நிறைவே'', என்றதில், அருள் ஒளி நிறையுடம்பையே குறிக்கின்றார் என அறியலாகும்.

இப்படிக் கடவுள் அனுபவம், ஒருவனில் சத்தாய், சதசத்தாய், அசத்தாய் வெளிப்பட்டு விளங்கும் உண்மையை உள்ளபடி அறிந்து கொண்டுள்ள மெய்யறிவே சத்திய ஞானம், பிரம்ம ஞானம் என்பதெல்லாம். இதுவே, இங்கு தனியறிவாகச் சாற்றப்பட்டுள்ளதாம். தனி அறிவு, ஒப்பற்ற அனுபவசித்தி கொண்டு விளங்குவதாம். அனுபவஞானம் என்பதும் இதுவேயாம். நம் வள்ளற்பெருமானுக்கு இத்தனி ஞான அனுபவ சித்தித்ததினாலே அவர், சுத்த பிரணவ ஞான தேகத்தோடு என்றும் வாழும் பேறு பெற்றார் என்று அறிகின்றோம். இவ் வனுபவம் வழங்கியுள்ள ஞானத்தையே இங்கு ''என்தனி அறிவே'' என்றுள்ளார். இந்தத் தனி அறிவு நிலையை உலகமெல்லாம் உணர்ந்து அனுபவத்திற்கண்டு போற்றி ஆனந்த நிறை வாழ்வு பெறவே வடலூரின்கண் சத்திய ஞானசபையைத் தோற்றுவித்துள்ளார் நம் பெருமான்.

அச் சத்திய ஞானாலயம் மெய்யறிவுத் தலமேயாம்; அதனைக் கொண்டு அகத்தில் மெய்ஞ்ஞானக் கோவிலில் அருட்பெருஞ் ஜோதியைக் கண்டடைந்து அனுபவத்திற்பெறற்கான முறையில் ஞானசபை அமைக்கப்பட்டது. அதன் உண்மை சுத்த சத் விசாரத்தால் நன்கு அறிந்து பயின்று உளம் கொள்ளவும், அதற்குத் தக வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் ஏற்பட்டது சத்தியகலாநிலயம். கண்ட உண்மை கைவரப்பெற, பரோப கார ஜீவ தயவுச்செயல் ஓங்க சத்திய தர்மச்சாலையும் அமைக் கப்பட்டன. அவற்றில் தர்மச்சாலை மட்டும் ஒருவாறு இடை யறாமல் செயல்பட்டு வருகின்றது. முதலில் பசியாற்றும் பணி தானே முக்கியம்; அதுதான் நடக்கின்றது. அதை எல்லோரும் நல்ல முறையில், பிறர்க்கு எப்பொழுதும் உணவு கிடைக்கும்படி வழிவகுத்துக் கொடுத்துச் செயல்பட வைத்தல் வேண்டும். இதுவே பெரும் ஜீவகாருண்யத் தொண்டாகும். அடுத்து சத் விசாரப் பணிக்குக் காலநிலைக்கொப்ப, உண்மையை உலகெங்கும் பரவச்செய்யும் நிறுவனங்களைத் தோற்றுவித்து நடத்தப்படல் வேண்டும். எல்லோருக்கும், ஞானசபையில் மெய்யறிவு விளங்கு முறையில் வழிபாடுசெய்யப் பழக்கப்படுத்திடல் வேண்டும்.

மேற்படி சத்தியஞான சபை வழிபாட்டிற்குப் புறச்செயலை வடலூர்ப் பகுதியில் வெளியாக்கிட வேண்டுவது இன்றியமை யாததே.. அதற்குமுன் அந்த ஞான சபை வழிபாட்டை நம் தேக மாகிய உடலூர்ப் பகுதியில் நிறை அன்பும் அறிவும் ஓங்கச் செயல்படுத்தப் பழகிக் கொள்ளல் வேண்டும். அப்போதுதான் புறஞான சபையும் அதன் சூழ்நிலையும் நன்கு செயல்படச் செய்தல் கூடும். இக்கருத்தோடு தான் இந்த அகவல்கூட அமைக்கப்பட்டுள்ளது. ''ஞானசபையைக் கட்டிப் பாருங்கள்'' என்று அன்று வள்ளலார் குறிப்பிட்டார். அதன்படி கட்டிப் பார்க்க இன்னும் மக்கள் தயாராகவில்லைபோல் தோன்றுகின்றது. உளப்பண்பாடெய்தினால்தான் கட்டிடங் கண்டு கருணை வழிபாடு செய்து கழிவில்லாப் பேரின்பவாழ்வு பெறலாம். அந்நிலை வாழ்வு பெற்றால்தானே உலகெங்கும் அருட்பெருஞ்ஜோதியைப் பார்க்க முடியும். அகம் பழுக்க, அன்பு தழைக்க, அருள் விளைய வேண்டி இந்த அகவல் அடிகளும் மேலும் தழைக்கின்றன. வரும் அடி களில் அக அனுபவம் முக்கியமாகக் குறிக்கப்படுகிறது. அவற்றின் பொருள் விளக்கம் வெற்றுச் சொற்களால் மட்டும் புரிந்து கொள்ள முடியாது, அகமிருந்து அன்பும் அறிவும்

பெருகப் பெருக வாழ்வதால்தான் ஏற்படும். இதனை மேற்காண் பாம்.

224. தனி அன்பு

(1)

1449. தோலெலாங் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
1450. மேலெலாங் கட்டவை விட்டுவிட் டியங்கிட

(உ-வி) தனி அன்பு என்பது உயர்வுடைய கடவுள் அன் பாக வுள்ளதாம். இது புற வுலகெல்லாம் விளங்கிடற்குச் செயல்படுகின்றதாயும், அகத்தே மெய்யன்பாகிய அருள் ஒளி விளைவு கொண்டு நிரம்புதற்குக் காரணமாயும் இருக்கின்றதாகும். இவ்வக ஒளி பெருகப் பெருக ஜீவ, கரண, இந்திரியங்களில் தோன்றுகின்ற மாற்ற தோற்ற அனுபவங்கள் இவையிவை என எடுத்தெடுத்துத் தொடுத்துக் கூறப்படுகின்றனவாம். இங்கு முதலில் தேகேந்திரிய கரணத்தில் உண்டாம் நெகிழ்ச்சித் தன்மைகள் விரித்துரைக்கப்படுகின்றன.

இவ்வுடலில் தோலும், தசையும், நரம்பும் தடித்து உரம் பெற்று, இராசதத் தாமதத்தன்மையோடு உள்ள நிலை மாறிச் சத்துவமயமாய்க் குழைவும் மென்மையும் அடைந்து, ஆனால், உள்ளொளியின் அருள் ஆற்றலால் உறுதிபெற வுள்ளனவாம். தோலின் குழைவுத்தன்மையும், சூழ்நரம்பின் கட்டுவிட்டாற் போன்ற தளர்வுத் தன்மையும், மெலிந்த இயக்கமும் உளநெகிழ் அன்பின் காரணமாக ஏற்பட்டால் தான் அருள்ஒளியின் சேர்ப் பால், அருள் இன்பானுபவம் உண்டாகத் துணையாயிருக்கும். மாறாக இக்குழைவும், தளர்வும், மெலிவும் உணவு இன்மையால், பசியின் அதிகரிப்பால் அல்லது நோயின் காரணமாக உண்டா னால், அல்லலும், அவத்தையும் முடிவில் அழிவும்தான் ஏற்படும். ஆகையால் அன்புதான் முன்பு அகமிருந்து விளைவு கொள்ள வேண்டும்.

அன்பருளின்பநிலை அறியாத் தவயோக சாதனைகளாலும் மேற்படி உடலின் அகம்புறம் உண்டாம் மென்மைகளால் மேன்மையொன்றும் ஏற்படாது. ஆகவே மெய்யன்பு விளைந் திட தயவுச்செயல் மேற்கொண்டு வாழ்வதே முறையாகும். இம்

மெய்யன்பு இன்னது என்று, உள்ளது உள்ளபடி அறிந்து கொள்ளுவதற்கும், அப்படி அறிந்து கொண்டதைத் தயா வொழுக்கத்தோடு கூடிய பரோபகாரச் செயலால் அடைவதற்கும் முயலவேண்டும். திருவருளாலே அம்முயற்சி விரைவில் கைகூடும். ஆகவே சுத்த சன்மார்க்க முறையில் அகநெகிழ் அன்பு விளைவித்தல் வேண்டும். இவ்வக விளைவின் அனுபவம் புற நிலையில் எப்படி எப்படி விளங்கும் என்பன எல்லாம் வரிசையாகத் தொடர்ந்து கூறப்படுகின்றன அடுத்துவரும் சில அடிகளில்.

(2)

1451. என்பெலா நெக்குநெக் கியலிடை நெகிழ்ந்திட
1452. மென்படைத் தசையெலா மெய்யுறத் தளர்ந்திட

(உ-வி) நம் பதி சக்தி என்பினுட்ஜோதியாய், உட்பொருந்தி நின்று திருவருள் சேரும்போது அன்பென்புருக்கிட வுள்ளது. சுத்த அன்பு விளைகொண்டு சிறிது சிறிதாகப் பெருகுகின்ற ,சமயம், எலும்பே சிறிது சிறிதாக அருளமுத ஊற்றால் மென்மையுற்று நெகிழ்வதாம். அருட்பிரகாசத்தால் உருகும் எலும்பு வடிவம் அழியா இன்புருவமாக விளங்கவல்லதாகின்றதாம். ஆனால் அருள் இல்லாத பிற காசத்தால் (காச நோயினால்) உருகும் எலும்பு இளைத்துத் தேய்ந்துபோகத் துன்பமும் அழிவும் ஏற்படும். சன்மார்க்க உணவில் சர்க்கரை ஏற்கப்படும். இது மட்டும் குறைந்த அளவில் கொள்ளப்படுவதால் உணவாக விளங்கி பசியைத் தணிக்கவும், அகச் சுத்தியையும், புற மென்மையையும், சத்துவத்தன்மையையும் உண்டுபண்ணும். அன்புடையார்க்கு இதனால் பெருநன்மையுண்டாம். மற்றபடி சர்க்கரையை அதிகம் உட்கொள்ளுவதாலும், சர்க்கரை சத்துள்ள உண்டிகளை அதிகம் ஏற்பதாலும், அது நன்கு செரியாமல் நீரிலும், சோரியிலும் (இரத்தத்திலும்) கலந்து உடலுக்கு ஊறு செய்வதாம். சர்க்கரையில் பற்களையும் எலும்புகளையும் சில நாட்களுக்கு ஊற வைத்துப்பின் எடுத்துச் சோதித்துப் பார்ப்பின், அவை கடினத் தன்மை இழந்து இலேசில் உடையக்கூடியதாயிருக்கக் காண்போம். இதனால் சர்க்கரைக்கு எலும்பை உருக்கும் தன்மையுண்டென்று அறியலாகும். இதற்கு மாறாகச் சுண்ணாம்புச்

சத்துள்ள உணவுமூலம் எலும்பும் உறுதி பெறுவதாம்; எலும்பே சுண்ணச்சத்து கொண்டதாகும். அன்பினால், என்பின் தன்மை மென்மை அடைகின்றபோது, அதற்குமேலே படிந்துள்ள தசை இறங்கும், சதை தணிகின்றது. இதனால் புறத்தோற்றத்தில் இளைப்பாக விளங்கும். ஆனால் இவ் விளைப்பால் சிறிதும் ஆற்றல் குன்றுவதில்லை அருளாளருக்கு. மருளாளரோ வலி இழந்து அவத்தைப்பட்டு மடிவர். ஆதலின், மெய்யில் மெய்யன்பு வளர்ந்திட அனைத்து நலனும் விளைவு கொள்ளும். இது உண்மை.

(3)

1453. இரத்த மனைத்துமுள் ளிறுகிடச் சுக்கிலம்
1454. உரத்திடை பந்தித் தொருதிர ளாயிட

(உ-வி) இந்த உடலில் இரத்தம்தான் தேகக் கருவி கரணங்களின் விளக்கத்திற்கும், செயல் புரிவதற்கும் பொதுவாக வாழ்வுக்கும் மிக முக்கியப் பொருளாயுள்ளதாம். உண்ணப்படும் ஆகாரத்தின் சத்தம்சம் கிரகிக்கப்பட்டு, இரசாயன மாற்றங்களால் இரத்தமாகின்றது. பின்னும் மாற்றம் அடைந்து சுக்கிலமாகின்றதாம். இச்சுக்கிலம் உரத்திடை பந்தித்து ஒரு திரள் ஆயிட எனப்பட்டுள்ளது. இரத்தத்தின் சத்திலிருந்து சுக்கிலம் உண்டாகின்றது. இதுதான் தேகநலத்திற்கும் பலத்திற்கும் ஆதாரமா யிருக்கின்றதாம். இதன் தரம் கெடாமலும், அளவுடனும் இருக்க வேண்டும். இதற்கு உணவும், மனமும், செயலும் காரணமாயுள்ளனவாம். இவற்றில் நடுவுள்ள மனம்தான், உணவையும் செயலையும் கட்டுப்படுத்தி நன் னிலைக்குக் கொண்டு செல்ல உதவுகின்றதாம். ஆகையால் மனம்தான் தயவும் ஒழுக்கமும் கூடிய வழியில் விழிப்புடன் இருந்து சத்துவ உண்டியை அளவாகக் கொண்டு, தயாவொழுக்கச் செயலில் சோம்பலின்றி யீடுபட்டு நன்முயற்சியிலிருந்து வர வேண்டும். அப்போதுதான் சுக்கிலம் திரண்டு மணியாகி மேனோக்கிடும். உரம் என்ற சொல், ஊக்கம், திண்மை, வெற்றி, ஞானம், பாது காப்பு, மார்பு, எரு, மனம் ஆகிய பல பொருளைச் சுட்டும் ஒரு மொழியாக வுள்ளதாம். இந்தச் சொற்களில் மனம்தான் இங்கு மிகப் பொருத்தமாய் இருப்பதோடு, மற்ற பொருள்களின் விளக்கத்திற்கும் ஓர் ஒரு வகையில் பொருத்தமாய் இருக்கின்றதாம்.

யோகசித்தர்கள் இந்த மனத்தால்தான் சகலசித்தியும் பெற்று இச்சக மிசை இசைபட வாழ்ந்துள்ளனர். அவர்கள் முக் கியமாக மனதை மனோன்மணியாக்கி, மேனிலையில் நிறுத்தி, அவண் பெற்ற சக்தியால் மனம்போல் ஆடிக் களித்தனர். இன்று மக்கள் மனம் திரளவில்லை, மாறாக இச்சையிலே மிகப் புரளுகின்றது. இதனால், உண்டி விடயத்தில் தயவுக்கு மாறான இரசோ தமோகுண, கொலைபுலை உணவு கொண்டு, தம்மாலே தாம் கெட்டு அவத்தைப்பட்டுக் கொண்டுள்ளனர். ஆவல் பெருக்கால், இனப் பெருக்கமும், பொருட்பெருக்கமும் நட்டப் பெருக்கமும் தான் எங்கும் விளைந்து தொண்டுள்ளனவாம். இவற்றை எல்லாம் திருத்தி, நல்வழிப்படுத்தவே திருவருளால் சுத்த சன்மார்க்கம் வருகின்றது. தயவோடு யாவரும் இந்நெறி பற்றி உய்ய வேண்டியே இந்த அருள் நூலும், இதன்கண் இப் பொருளும் வழங்கப்பட்டுள்ளன. மக்கள் சமுதாயம் தய வோடு இது ஏற்றுப் பெருநலம் எய்துவார்களாக.

(4)

1455. மடலெலா மூளை மலர்ந்திட வமுதம்

1456. உடலெலா மூற்றெடுத் தோடி நிரம்பிட

(உ-வி) நமது ஓங்கார மூளை (Medulla-Oblongata) மீது ஜீவாமிர்த கலசம் (Cerebrospinal Cavity) இருக்கின்றது. இதி லுள்ள அமுதரசம்தான் மற்ற மூளைப்பகுதிகளுக்கும், அவற்றின் வழி உடல் முழுவதற்கும் உயிர்ப்பாற்றலைத் தந்து தொழிற் படச் செய்கின்றதாம். இவைகள் எல்லாம் நியதி முறைப்படி செயல் பட்டுக் கொண்டிருப்பது இயற் கையே. மனிதன் தன் தயா நன் முயற்சியால் அன் பொழுக்கம் பூண்டு வாழும்போது திருவருள் விசேடமாக வெளிப்பட, உள் அரும்பியிருக்கும் ஆன்ம மொட்டு மலர்ச்சி அடைய நெகிழ்கின்றதாம். அப்போது ஜீவாமிர்தசக்தி, அன்ப ருளின்ப வண்ணமாய் விரிந்து மூளைப்பகுதிகளிலிருந்து சிறிய பெரிய இரத்த நாளங்கள், நாடிகள், நரம்புகள், சுரப்பிக் கோளங்கள் மூலம் அவ்வமுத சக்தி தேக கரணம் முற்றும் பரவி அன்பொளிமயமாக ஆக்க உள்ளதாம்.

ஆகவே, அன்புதான் மக்களை வாழ்விப்பது, உலகை அமை தியும் ஆனந்தமும் பெறச் செய்வதுமாம். மெய்யன்பு அறியாது

பொய்ப் புலனிச்சையில் மோகம்கொண்டு உலகிடை பிழைத்துக் கொண்டிருக்கின்றவர்கள், மூளையின் நடுவிருக்கும் ஆன்மாவாகிய தம் மெய்யுருவை அறியாமலே, பொய்யுருவாகிய உடலிடம் கொண்டு பற்றால், அறமும் பாவமும் செய்து செய்து மேலும் பிறவியிற் சிக்கிச் சுழன்று கொண்டேயுள்ளனர். ஆன்மா மலராது மொட்டாகவே இருக்கின்றது அபக்குவிக்கு. ஆன்மா வாகிய யகரவடிவம், பத்து மாதம் நிரம்பிய கருவுருவாய்த்தான் இருந்து வருகின்றது எவ்வளவோ காலமாக, நிறைவுற்ற கருப் பிண்டம் சிறிது நேரத்தில் பிறந்து விடுவதை அறிவோம். ஆனால் இந்த ஆன்மக்கரு தசமதி நிறைந்ததாக இருந்தும் எவ்வளவு காலமாகத் தோன்றாமல், பிறந்திடாமல் இருக்கின்றது! ஆம், இவ்வுலகில் ஒரு கற்பகாலமாக எண்ணப்படுவது அக ஆன்ம வுலகில் ஒரு இமை நொடிப்பொழுதாக இருக்கின்றதாம். ஆகவே தான் இன்னும் நம் ஆன்மாவுக்கு, மெய்ஞ்ஞானப் பிறப்பு உண் டாகாதிருக்கின்றது போலும்! மெய்யன்பு உண்டானால், அந்த நொடியிலே ஆன்மக்கரு அன்புச்சேயாக வெளிப்பட்டு அருட் செல்வனாக வளர்ந்து அளவில் நெடுங்காலம் வாழும் அருட்பெருஞ் சித்தியும் சேரும்.

தவயோகப் பெருஞ்சாதனையால் ஓங்காரமான அமுத கலசத்தைத் திறக்க முயன்றனர் சிலர்; ஒருவாறு திறந்தும் விட் டனர். அதனால், அமுதரசம் மூளையிலும், உடலிலும் பாய்ந்து நிரம்பியும் விட்டது. ஆனால், அன்பு கொண்டு செய்யப்படாத யோகசாதனையால், அருள் அனுபவ வாழ்வு ஏற்படாமல், இருள் கவிந்த சமாதியில் அடங்கிவிடத்தான் செய்துவிட்டதாம் அவர் களின் செயல். அச் சமாதிநிலையில் உடலில் அமுதசக்தி நிரம்பிய காரணத்தால், தேகம் அழியாமல் மண்ணிற் புதைந்து கிடைக்க நேர்ந்துவிட்டதாம். ஒருசிலர் மூலக்கனலை எழுப்பி மேலை வெளியிற் சென்றபோது, அகத்தும் புறத்தும் பெருஞ் ஜோதி தோன்றிட அதில் மறைந்து போயினர். இதனாலும் இறை இன்ப வாழ்வுகிட்டவில்லை. ஆகையால் தனி அன்பின் மாண்பை நன்குணர்ந்து, ஒழுக்கமும் விசாரமும் கொண்டு, அக மிருந்து சுத்த அன்பு வாழ்வு ஏற்று நலம் கண்டு கொள்ளவேண் டுவதுதான் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

(5)

1457. ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுக மலர்ந்திடத்
1458. தண்ணிய வுயிர்ப்பினிற் சாந்தம் ததும்பிட

(உ-வி) உள்ளுணர்ச்சியில் அன்பின் நெகிழ்ச்சி யுண்டாம் போது ஒண்ணுதல் அதாவது, பிரகாசம் பொருந்திய நெற்றியில் வியர்வை துளிக்கின்றதாம், முகமலர்ச்சி அடைகின்றதாம். அப்போது சுவாசம் குளிர்ந்து வெளிப்படுகின்றது. உள்ளத் துணர்வில் இன்பானுபவம் விளங்குகின்றது. மனோ அமைதி யாற் சாந்தம் நிறைந்து முகத்தே யொளிர்கின்றது. இவ்வளவும் அன்புச்சக்தியின் செயலேயாம். இதற்குமுற்றிலும் மாறானது, இதுபோன்ற உலகியலார் அனுபவம். பொறிபுலன் உணர்ச்சி வசப்படாமலும் அங்க அவயவக் கிளர்ச்சி தளர்ச்சிகளாலும், அப்படி நுதல் வியர்த்தல் முகவண்ணத் தோற்ற மாறல் முத லியன உண்டாதல் கூடும். ஆனால் மூச்சில் தண்மையும், முகத் தில் உண்மைச் சாந்தமும் உண்டாகா. ஆதலால் இவற்றால் நலம் ஒன்றும் ஏற்படாது.

உள்ளொளிர் கடவுட்ஜோதியைத்தான் ''அன்பு'' வடிவ மாகக் கண்டிருந்தனர். அச்சொல்லால், அடிமுடி தொட்டு நிற்கும் ஆண்டவர், நடுத்தலையுள் பகரவுகர உண்மை விளங்கத் திகழும் நிலை கண்டு சார்ந்து வாழ்வதே அன்பு வாழ்வாகக் கொண்டனர். இந்த அன்பையே சிவமாகக் கற்பித்தவர்கள், இந்த அன்பு நிறை வாழ்வை சிவானந்தப் பேரின்பநிலை எனக் குறித்தனர். இந்த நம் அன்பும் அந்தக் கற்பனா சிவமும் இரண் டல்ல என்பதை அகமிருந்து காண்கின்றோம் இன்று. ஆகவே, அகத்தே அன்புநிலை நின்று, உருகி உலகிற் செயல்படும்போது மேற்படி ஒண்ணுதல் வியர்த்தலும், ஒளி முகம் மலர்தலும், தண்ணிய உயிர்ப்பினிற் சாந்தம் ததும்பிடலும் உண்டாம். இதனால் வாழ்வே அன்பருளின்ப நிறைவு பெறும்.

(6)

1459. உண்ணகை தோற்றிட வுரோமம் பொடித்திடக்
1460. கண்ணினீர் பெருகிக் கால்வழிந் தோடிட

(உ-வி) அன்பு, மெய்யன்பு நிறைகின்ற உள்ளத்தில் நெகிழ்வு காரணமாக அகநகை தோற்றுகின்றது. இது உள் உவகையாக அனுபவிக்கப்படுவதாம். இது மெய்யறிவில் விளங்குவதேயன்றி மனோமயக்கில் விளங்குவதில்லை. புற மெய்ப்பாட்டில் காணும் புன்முறுவலும், பெருஞ்சிரிப்பும், இளி வரல் (கேலி செய்தல்) முதலியவற்றில் தோன்றும் நகைப்பும், உண்ணகைக்கு ஒருகாலும் ஒப்பாகா. ஆதலின் அகத்தே அன்பு நிறைந்து நிறைந்து ஊற்றெழுங்கண்ணீர் அதனால் உடம்பு முழுதும் நனைந்து நனைந்து விடல் மெய்யனுபவமாம். மெய்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் பெருகல், நகைமுகம் மலர்தல் புற மெய்ப் பாட்டிலும் உண்டு. எனினும் இங்கு உண்டாகும் இத்தோற் றங்கள் முற்றும் திருவருள் அனுபவமாய்ச் சத்தியஞானானந்தத் தில் விளைகின்றனவாம்.

கண்ணீர் பெருகுதல், உண்மையான தயவு அல்லது அன்பு உள்ளத்தில் நெகிழ்ச்சியுண்டு பண்ணுவதால், பிறருடைய அவலநிலை கண்டு சகியாமல் கண்களில் நீர் பெருகுதல் நல்லதே. அதுபோல் நாம் திருவருள் அனுபவமும் பெறாது வீணிற் காலம் கழித்து வருகின்றோமே, என்றும், எப்படி அவ்வருள் அனுபவம் நமக்குக் கிடைக்குமோ தெரியவில்லையே! என்ன செய்வது என்ற மாட்டாமை ஏக்கத்தால் கண்ணீர் பெருகுதலும் நன்றே. ''என் அகத்தும் புறத்தும் இடையறா திருந்தும்; அருள் பாலித்து வாழ்விக்காது, அவலப்படவைத்துக் கொண்டிருப்பது ஏனோ, தெய்வமே தயை புரி, தயை புரி,'' என்று உளமுருகிக் கண்ணீர் பெருக்கி வேண்டுதல் நல்லதாம். மற்றபடி பொய்யான புற அழுகை, ஏழமை, பயம், கவலை, வேதனை, பிறரை ஏமாற்றல், பாசாங்கு, நடிப்பு ஆகியவற்றால் உண்மைபோல் அழுதுகொண் டிருப்பதில் நலம் உண்டாவதில்லையாம். கடவுளை, அழுது வேண்டினால் எதுவும் எளிதில் பெறலாமே என்பர் பலர். அந்தக் கண்ணீர் மாசற்ற அன்பு நிறைந்த உளத்திலிருந்து வருவ தாயின் நல முண்டே தவிர, மற்ற உள்ளத்துணர்ச்சியால், நினைத்தபோதெல்லாம் அழுது சாதிக்க முயன்றால் ஏதும் நற்பயன் உண்டாகாது.

கண்ணீர் பெருகிக் கால்வழிந்தோடிட என்பது, அன்பால் உண்டாம் கண்ணீராவது கண்களில் மிகப் பெருகும்போது, தாரை தாரையாக வழிந்திடும் நிலையைச் சுட்டுகின்றார்.

முதலில் சிறிதே கண்ணீர் படர்ந்து கண்பார்வையை ஒருவாறு மறைக்கும். கண்ணீர் சற்று அதிகரிக்கும்போது கண்களினின்று சிறு துளிகளாகச் சிந்தும். அதற்கும் அதிகமாகக் கண்ணீர் ஊற்றுபோல் பெருகும்போதுதான், அக்கண்ணீர் தாரையாக, கால்களாக வழிந்துகொண்டிருக்கும். அன்பே நிறைந்து ஊற் றெழுங் கண்ணீர் அதனால் உடம்பு முழுதும் நனைந்திடல் வேண்டும் என்பது அருட்பாமொழி. உடம்பு முழுவதும் எப் படிக் கண்ணீரால் நனையும் என்று வினாவப்படலாம். அன்புப் பெருக்கால் மயிர்க்கால் தோறும் அவ்வுணர்ச்சி பெருகும், அந்த அன்புப் பெருக்கு உணர்ச்சிநிலையே கண்ணீராக இருக்கின்ற தாம். கண்ணீர்மை அல்லது கண்மை என்பது தயவு, தாட் சிணியம், கண்ணோட்டம், இரக்க உணர்ச்சி ஆக இருக்கின்ற தால், இக்குண நிறைவால் உடலே இந்தக் கண்ணீர்மை அடை கின்றது. எனவே அன்பு நிரம்பிய நிலையையே இங்கு இப்படி யெல்லாம் குறிக்கின்றார் என அறியலாகும்.

(7)

1461. வாய்துடித் தலறிட வளர்செவித் துணைகளிற்
1462. கூயிசைப் பொறியெலாங் கும்மெனக் கொட்டிட

(உ-வி) அன்பின் காரணமாக உள்நெகிழ்வால், தயா வுணர்ச்சி மிகுதியால், பேச்சே குழறிப்போதல். செவிகள் கும் என அடைத்தல், கலக்க முறுதல் முதலியன உண்டாதல் இயற் கையே. இவைபோன்ற உணர்ச்சிகளும் அனுபவங்களும் சாதா ரணமாக ஒருவன், அதிகப் பசியினால் ஏற்படுகின்ற அவத்தை களில் ஓரளவு காண்கின்றான். ஆனால், அன்பின் அனுபவ நிலைக்கும், பசியின் அவத்தைக்கும் முக்கிய வேறுபாடு உண்டு. பசியினால் இந்நிலை உண்டாம் போது, நாவுலர்ந்து வாய் துடித்து அலறுவதும், புறஒலிகளை ஏற்கும் இரு செவிகளிலும் கும்மென்று இசைத்து அடைப்பதும், இரைச்சலில் கலங்குவதும் ஆகிய அவத்தைகளை அடைகின்றனர் சாதாரண மக்கள். ஆனால், அன்புநிறை அருள்நெறியாளன், இம்மாதிரி, வாய்த்துடிப்பும், காதடைப்பும், கலக்கமும் ஏற்பட்டபோதிலும், அகம் ஓங்கும் தன் அன்பின் ஆற்றலால் சிறிதும் துன்புறாது, தன் நிலை கெடாது, உளம் குளிர்ந்து உள்ளொளியை விடாது பற்றிநின்று

மகிழ்கின்றான். இவன் முடிவில் அடைவது இறவா இன்பப் பெருவாழ்வு நிலை.

நம் வள்ளலார் அருட்பெருஞ் ஜோதியையே பற்றிக் கொண்டு, எல்லா அனுபவசித்திகளையும் அடைந்துள்ளார் என்பது உண்மை. இங்கு தனி அன்பு எனக் கொண்டதும் அந்த அருட்பெருஞ்ஜோதியின் உண்மையைக் குறிப்பதுதான். இவ் அன்பு, அவரில் உயிர் இரக்கமாக இருந்து பெருகியுள்ள தாம். இவர் அந்த அன்பின் அருள் பெறவே எவ்வளவோ பாடு பட்டார் சிறுபோதிருந்தே. தான் பட்ட பாட்டையெல்லாம் அருட்பாட்டாகவே இசைத்துத் தந்து விட்டுள்ளார்.

''ஈராறாண்டு தொடங்கி யிற்றைப் பகலின் வரையுமே
எளியேன் பட்ட பாட்டை எண்ணில் இரும்பும் கரையுமே
ஏராய் அந்தப்பாடு முழுதும் இன்ப மாயிற்றே
இறைவ நின்மெய் அருளிங் கெனக்குச் சொந்த மாயிற்றே''

என்று மெய்யருளினை வியந்து வியந்து கூறியுள்ளார். அன்பினால் ஏற்படும் முடிந்த அனுபவம் இது ஆம்.

(8)

1463. மெய்யெலாங் குளிர்ந்திட மென்மார் பசைந்திட
1464. கையெலாங் குவிந்திடக் காலெலாஞ் சுலவிட

(உ-வி) உடம்பு முழுவதும் குளிர்ந்த தன்மை அடைவது பல காரணங்களால் உண்டாகலாம். ஆனால் அகநெகிழ் அன்பின் காரணமாக உண்டாம் தண்மை சிறந்ததாகும். இயல்பாகவே சிலரது உடல் குளிர்ந்திருக்கும். இரத்தக் குறைவினால், அச்சத் தினால், வாத சீதளத்தால், சன்னிபாத சுரத்தால், பட்டினி மிகையால் யோக சாதனா சக்தியால், மன அமைதியால் உடலில் குளிர்ச்சி யுண்டாகலாம். இங்கு அன்பின் ஆற்றலால் உடலில் அக்குளிர்ச்சித் தன்மை தோற்றுவதாய்க் குறிக்கப்பட்டுள்ளது. அந்த மாதிரித் தண்ணுடல் கொண்ட அன்பனின் நெஞ்சக் குழியில் இதயத் துடிப்புக்கு ஏற்ப உண்டாகின்ற சிற்றசைவும் கூட மெல்லிய மார்பினிடத்தே காணப்படுவதும் அகப்புற அனுபவங் களேயாம். மேலும், கைகள் தாமே குவிந்திடவும், கால்கள் நடக்கவும், நிற்கவும்கூட மாட்டாது சுழன்று மடங்கித் தளர்

வதும் புறத்தில் தோற்றும், இவ்வளவு தளர்ச்சிக்கும் தடுமாற்றத் திற்கும் உள்ளாகும் அருளில்லா ஜீவர்கள் அல்லலில் அழிவுறு கின்றார்கள். ஆனால் தேகப்பற்று நீங்கிய அருள்ஒளி பற்றி ஒழுகு கின்ற உத்தமர்கள் அவ்வருள் ஒளியாலேயே தாங்கப்பெற்று அல்லலில்லா ஆனந்தத்தில் தங்குபவர் ஆகின்றார்கள்.

பசியின் மிகுதியால் இம்மாதிரி தேகம் குளிர்ந்திடுதலும், இதயத் துடிப்பு மெலிதலும், நாடித்துடிப்பு நலிதலும், கை கால் களில் வலிமை குன்றி மென்மை ஏற்பட்டுச் சோர்ந்து, சுரணை கெட்டுத் தடுமாறலும், நிற்க முடியாது, தாங்கி நிற்பதும் உட்கார்ந்துவிடுதலும், படுத்துக் கிடத்தலும், கண் குழிந்து சுழல்தலும், வேறு எந்தவிதமான உணர்ச்சிக்கும் இடமில்லாமல் மயங்கிக் கிடக்கவும் நேரும். ஆனால், இவ்வளவும் நல்ல உணவு வழங்கி உண்பித்தபோது பெருமாற்றங்கள் தோன்றி ஆற்றலும் தெள்வும் ஏற்பட்டு நன்னிலைக்கு வருகின்றான் பட்டினி கிடந்தவன். அன்பருள் உடையோர்க்குத் திருவருள் துணையால், இம்மாதிரி யான சோதனை ஓரளவுக்கே ஏற்பட்டாலும், அன்பும் அறிவும் தெளிவும் அனுபவமும் குன்றாது உள் விழிப்போடு, நிறை அன்பு பெருகி அருள் ஒளியாகி வாழ்விக்கும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான். திருவருளும் அவனைத் தாங்கி, அருள் அமுத சக்தியை அகமிருந்து நிறைத்து அவனது உடலில் உயிரில் உள்ள குறைபாடுகளை எல்லாம் நீக்கி, உடம்பினையே சுத்த சுவர்ணதேக மென்னும் அன்புருவமாக ஆக்கிவிடுவதாம்.

(9)

1465. மனங்களிந் துருகிட மதிநிறைந் தொளிர்ந்திட

1466. இனம்பெறு சித்த மியைந்து களித்திட

(உ-வி) தனி அன்பின் செயல், மனத்தையும் அறிவையும் பக்குவப்படுத்துவதாம். மனம் என்பது என்ன? மனம் என்பது, கடவுள் ஞானசக்தியின், அபக்குவா பக்குவ உணர்வு ஆற்றலாக உள்ளதாம்; அதாவது, கடவுட்சக்தியின் ஞானப்பிரிவு மூன்று நிலைகளாக உள்ளதாம். புலன் உணர்வு, மன அறிவு, ஆன்ம ஞானம், ஆக மூன்று நிலைகளும், ஒன்று, அபக்குவ உயிரினமாகிய, மனிதனுக்குக் கீழ்பட்டவற்றில் புலன் உணர்வாகவும், இரண்டு, மனிதனில் மனஅறிவாகவும், பக்குவ மனிதனில் ஆன்மஞானமாய்

மூன்றாவதாக விளங்குகின்றதாம். மொத்தத்தில் ஞானசக்தியே இப்படிப் படிப்படியாகப் பரிணமித்துப் பக்குவியின்கண் கடவுள் உண்மை காண வல்ல ஆன்ம ஞானமாக மிளிர்கின்றதாம். எனவே, மனம், அபக்குவப் புலனுணர்வுக்கும், பக்குவ ஆன்ம ஞானத்திற் கும் இடையுற்றிலங்கும் அபக்குவாபக்குவ அறிவாக, பகுத்தறிவாக உள்ளதாம். அபக்குவம் முதலிலும், பக்குவம் அடுத்தும் இருத் தலின், முதற்கண், மனிதனின் மனம், கடினமானதாகக் கருங்கல் போன்று விளங்குவதாம். அந்தக் கடினத்தன்மை மாறி உருகிடும் நீர்மை அடையத்தான் அன்பு உதவுகின்றதாம். இந்த அன்பு தான், கருங்கல் போன்ற மனத்தைக் கடவுட் கற்பகக் கனியாக ஆக்க வல்லதாக இருக்கின்றதாம்.

பக்குவமனம் அன்பால் உருகும் தருணம், அம்மனத்தின் உள்ளொளியான மெய்யறிவு வெளிப்பட்டு நிறையொளிகொண்டு விளங்குவதாம். இதுவே இங்கு, ''மனங்கனிந்து உருகிட மதி நிறைந்து ஒளிர்ந்திட'', எனப்பட்டுள்ளது. மனம்தான், மனிதனில் பகுத்தறிவுடன் வெளிப்பட்டு, அது கடந்த அருள் உண்மை கண்டு சலியாதிருக்கும் நிலையே அறிவு அல்லது மெய்யறிவு எனப்படு கின்றதாம். இதுவே நிறைமதியாகும். அன்பாலே தான் மனம் உருகிட, அதன் உள்ளிருந்து மெய்யறிவு நிறைமதியாக வெளிப் பட்டிலங்குகிறதாம். இந்த அறிவு விளக்கம் உண்டானபோது, மனமும் அதன் இனமாகிய புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அகக்கரணம் நான்கும் கூடி இன்புறுகின்றனவாம். அன்பினாலே மனம், அறிவு மேம்பட்டு ஞானமானதும், அம்மனத்தின் இன மாகிய புத்தி என்னும் பகுத்தறிவுணர்வும், அந்த ஞானம் என்பது என்ன என்று விசாரித்து, ஆன்மக்கடவுள் அறிவேதான் ஞானம் என அறிவதும் புத்தியின் செயல். ஞானத்தால் மெய்ப்பொருளைச் சார்ந்து அதுவாகி நிற்கும் நிலை, சித்தம் எனப்படும். அது நாம் என்ற தெளிவு பெற்றால் மட்டும் அதுவாகிய அனுபவம் அடைந்து வாழ்வு பெற்றவர்கள் ஆகிவிட முடியாது. அது நாம் என்று உணர்ந்து சொல்லிக் கொள்ளுவதுதான் அகங்காரம் அல்லது ஆணவமாகும். இந்த அகங்காரம் தனி அன்பென்னும் அருள் வண்ணமானால்தான், அதுவாகிய அனுபவம் சித்திக்கும். நிறையறிவு என்பது, தனியன்பும் கூடிய அருள் அனுபவ ஞான நிலையே ஆகும். இதுதான் கடவுளோடு கூடிக் களித்து வாழ் கின்ற நிலையாம்.

(10)

1467. அகங்கார மாங்காங் கதிகரிப் பமைந்திடச்

1468. சகங்காண வுள்ளந் தழைத்து மலர்ந்திட

(உ-வி) ஒருவன் அறியாமை கொண்ட மனத்தால் அகங் கரித்து எழுந்து, உலக வாழ்வில் அனந்தவண்ணபேதச் சூழலை வெறுப்போடு கண்டு வாழும் போது இன்பமும் துன்பமும் கொண்ட பிறவிகள் தொடர்ந்து வருகின்றனவாம். இந்த அகங்கார வாழ்வுதான் இன்றைய உலகம் முழுவதையும் ஆட்டிவைத்துக் கொண்டு துன்பம் நிறைந்த துக்கப்பெருங்கடலாய் விளங்குகின்ற தாம். எங்கெங்கும் வீண்பெருஞ் செயல்களால் நட்டமும் அழிவும் பெருகிக்கொண்டே இருக்கின்றனவாம். இந்தப் பெருங்குறை பாட்டை யொழித்து, உலகில் பெருநல வாழ்வு தழைக்கச் செய்யத்தான் இப்போது சுத்தசன்மார்க்கம் தனி அன்போடு வெளியாக்கப்படுகின்றதாம்.

உள்ளத்தில் அகங்காரம் ஒழிந்து தனிஅன்பு என்னும் அருட்பெருஞ்ஜோதி கொண்டு விளங்கும் போது, உண்மை வெளிப்பட்டுத் திகழ்கின்றதாம். அகங்காரம் அன்பினால் ஒழிக்கப் படப்பட மனமும், புத்தியும், சித்தமும் தாமே அன்பொளி பெற்று சூழ்நிலை எங்கும் அன்பின் செயலையே காண்கின்றான் மனிதன். இதனால் உலகம் முற்றும் அன்பு செயல்படும் நிலைக்களனாகக் காண்கின்றான். இதுவே சன்மார்க்கத்தின் மலர்ச்சி எனலாகும்.

(11)

1469. அறிவுரு வனைத்து மானந்த மாயிடப்

1470. பொறியுறு மான்மதற் போதமும் போயிடத்

(உ-வி) மனிதன் பொறிபுலன் அறிவோடுதான் இவ்வுலக வாழ்வைத் தொடங்குகின்றான். புறத்தேயுள்ள பலவாகிய பொருள்களையும், உயிரின வடிவங்களையும், செயல்களையும் ஆற்றல்களையும், பயன்களையும் அறிந்தறிந்து தன் விருப்பப்படி வாழ்க்கையை நடத்த முயல்கின்றான். அல்லது சூழ்நிலைக்குத் தக்கபடி வாழப் பழகிக்கொள்ளுகின்றான். எப்படியும் அவனது குறிக்கோள் இன்பம் பெறுவதேயாகும். ஆனால் அவனது உள் ளத்தில் மெய்யன்பும் மெய்யறிவும் விளங்காதபோது வீணான

முயற்சிகளால், வேண்டாதனவெல்லாம் வேண்டுமெனக் கருதி அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றான். இவன் நலம் பெற வேண்டுமானால், இவனைச் சூழ்ந்த மக்கள் சமுதாயம் முழுவதும் நலம்பெற வேண்டுமானால், உலகம் முழுமையுமே இன்பில் தழைக்க வேண்டுமானால் முதலில் இவனுடைய உள்ளத்தில் மெய்யான அன்பைத் தோற்றுவித்துக்கொண்டு செய்கையில் வெளிப்படுத்த வேண்டும்.

சாதாரண மனிதன் பொறியுடம்பையே ''தான்'' என்று கொண்டு வாழ்ந்து வருகின்றான். பொதுவில், மக்கள் சமுதாயம் முழுவதுமே இந்தப் பொறியுருவில்தான் வாழ்ந்தும் வரலாறு கண்டும் வருகின்றது. இதற்கு ஒரு விலக்காகத்தான் சில ஆன்ம ஞானிகள் தம்மை உடல் வடிவினும் வேறான ஆன்ம சொரூபிகள் என்றும், தாம் அந்த நித்திய ஆன்ம வடிவில் எப்பொழுதும் இருப்பது உண்மை என்றும், தமக்கு உண்மையை யுணர்த்தவும், அவ்வுண்மையில் விளங்கச் செய்ய உதவியாக வுமே சூழுறு மாயாதேகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளன வென்றும், அந்த அகநிலையைப் பற்றிக்கொண்டு, புறவுடலை உதறிவிடலே தம் லட்சிய வாழ்வு என்றும் எண்ணிக்கொண்டிருந்தனர் அந்த ஆன்மஞான வேதாந்திகள். முடிவாக இவர்கள் ஆன்மாக்களே என்பது எண்ணம். இதுபோல் சித்தாந்திகள் தம்மை ஆன்மப் பசுக்களாகவே கொண்டிருக்கின்றனர். இவர்கள், தற்சுதந்தர மற்ற பசுக்களாய் இருப்பதால், திருவருளால் பாசத்தைக் துணித்துவிட்டு பதியோடு ஐக்கியப்படுவதுதான் சிவானந்தப் பேறு என்று கொண்டுள்ளனர். ஆகவே, இவர்கள் தம்மை உடல் வடிவினரல்லர் எனவும், ஆன்ம சொரூபிகளே என்றும் திட்ட மாகக் கொண்டுள்ளனர். இவர்களுக்கெல்லாம் இந்தப் பிர பஞ்சம் மாயை எனவும். மாயாகற்பிதத் தோற்றங்கள் எனவும், கடவுள்நிலை, தமக்கும, புறவுலகுக்கும், வேறானது என்றும் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆகையால், இந்த மாயா வுலகில் பற்று கொள்ளவும், கூடிவாழவும் உளம்கொள்ளாமல் துறவு மனப்பான்மையோடு விலகி நின்று பிரம்மானுபவத் திலோ சிவானுபவத்திலோ மறையவே விழைந்துள்ளனர். இவை யெல்லாம் சரி அல்ல என்பதுதான் இன்றைய தனி அன்புச் சுத்த சன்மார்க்கம் தெரிவிக்கும் உண்மை.

நம் எல்லாம் வல்ல கடவுள் ஒருவரே தன் நிறையருளாலே யாவுமாய் திகழும் உண்மையைத்தான் இந்நெறி முதற்கண்

தெளிவுபடுத்துகின்றது. ஒன்றான அருட்பெருஞ்ஜோதிபதியே எங்கணும் தன் முழு இயல்போடு நிரம்பி, தனது பேரருளாலே எப்பொருளாயும், எவ்வுயிராயும், மற்றெல்லாமாயும் உள்ளார் என்பது அறிவிக்கப்படுகின்றது. இதனால் அந்த ஒரு பொருளே தான் தனியொவ்வொரு ஆன்மாவாய் இருந்து நம் ஒவ்வொருவரு மாய்த் தோற்றிச் செயல்படுகின்றதாய் உணர்கின்றோம். ஆகவே, அக்கடவுள்தான் எந்த ஆன்மாவுமாய் இருந்து அருளையே ஒவ்வொருவரின் வண்ணமாகத் தோற்றுவித்துக் கொண்டுள்ளார் என்பது உண்மையாம். எனவே, நாம் புறவடி வினர்தாம் என்றோ, அல்லது, ஆன்மாக்கள்தாம் என்றோ கருதிக் கொள்ளுவது முழுத்தவறேயாகும். அந்தக் கடவுளைத் தவிர வேறு எதுவும், ஆன்மா ஆகவோ, மனிதர்களோ, பொருள்களோ தோற்றம் கொண்டதல்ல. ஆகையால் அப்பதியே இப்படி, ஆன்மாவாயும், மனிதனாயும், பொருள்களாயும் விளங்குகின்றது என்பது தெளிவான உண்மையாம்.

மேற்படி ஒன்றான கடவுள், சத்து சித்து ஆனந்தமானவர். இப்படி அனந்த வண்ணத் தோற்றத்தோடு விளங்கும் அவரது உண்மையை அனுபவபூர்வமாகக் கண்டு வாழ்வு பெறத்தான் இப் பொழுது இந்தச் சுத்த நெறி தனி அன்புடன் வெளியாகி இருக் கின்றதாம். இந்நெறியில் அன்பொடு பயின்று, மெய்ப்பொருளைக் காண்கின்றபோதுதான், இந்த ஒன்றாம் கடவுள்தானே, அறிவுரு அனைத்துமாய் விளங்கக் காண்கின்றோம். அவ்வறிவுருவெல்லாம் அந்த சச்சிதானந்தமாக இருக்கின்றதெனவும் அறிகின்றோம். இந்த ஆனந்தானுபவம் தனி அன்பினால், அருள் நிறைவால் ஏற் படுவது என்பது, பொறியுறு ஆன்ம தற்போதமும் போயிட எனப்பட்டுள்ளதாம். தேகமும், ஆன்மாவும் தான் ஒருவனுக்கு, அபக்குவத்தில் தற்போதப் பொருளாக இருக்கின்றது. பக்குவத் தில் எல்லாம் பதியுண்மையாகவே விளங்குவதாம். எனவே, அன்புவடிவாய், இன்பஇயல்போடு, கடவுள் ஒருவரே எங்கும் விளங்குகின்றதும், அதுவான அனுபவம் கொண்டு வாழ்வதும் நம் அருட்ஜோதியால் பெறுகின்றது உண்மையாம்.

(12)

1471. **தத்துவ மனைத்துந் தாமொருங் கொழிந்திடச்**
1472. **சத்துவ மொன்றே தனித்துநின் றோங்கிட**

(உ-வி) இறைவன் என்ற கடவுள் விளக்கப் பொரு ளுண்மை, என்றும் அழிவில்லாதிருப்பதும், யாவும், தோற்றி, விளங்கி, மறைந்து ஒடுங்கிட ஆதாரமாய் இருப்பதும் ஆகிய ஒன்றே இறைவனாக உணர்த்தப் பெறுகின்றோம். இந்த இறை ஞான உணர்வு பெறவே இந்த மனிதப் பிறவி தோற்றி அகவிளைவு கொண்டுள்ளதாம். இந்தப் பிறவியில்தான் யாவும் அறியக் கூடிய கருவி கரணங்கள், தத்துவங்கள், எல்லாம் முழுமையாக அமைக்கப்பட்டுள்ளனவாம். மற்ற எந்த உயிரின வடிவிலும் இந்திரிய, கரண, ஜீவ, ஆன்ம தத்துவங்கள் விளைவு பெற்றிட வில்லை. ஆதலின், அவைகளில் உண்மை வெளிப்படவும் முடி யாதாம். ஆகையால், அந்தக் கீழினப் பிறவிகளை எல்லாம் தாண்டி, ஒவ்வொன்றிலும் புலன் உணர்வு வளர்ச்சி பெற்றுவந்து, மனிதனில் பகுத்தறிவு விளங்கி விளைவுற்று முடிவில் உண்மை அறியும் கடவுள் ஆன்ம ஞானம் வெளியாகின்றதாம்.

மனிதனுக்கு ஆன்மஞானம் தோன்றி எவ்வளவோ காலம் ஆகிவிட்டது. அதனால், அறிவால், உலகுயிர்ப் பொருள்களின் உண்மையாகிய தத்துவங்களை எல்லாம் புரிந்துகொண்டான். இத் தத்துவாதீதமான பரம்பொருளை வேறாகவும், தத்துவங்க ளான, தனு, கரண, புவனபோகப் பொருள்களும் கடவுளுக்கு அயலாக இருக்கின்றதெனத்தான் கண்டுகொண்டிருந்தான். அதீதத்திலே இருந்துகொண்டு ஆனந்தத் தாண்டவம் புரிகின்ற ஆண்டவர், தன் அருட்பெருஞ் செயலால் இவ்வளவையும் விளங் கச் செய்கின்றார். அதனால் அவர் மயமாய் அகமிருந்து நோக்கும் போது எல்லாம் தாமே செயல்பட்டுக் கொண்டிருப்பனவாய் உணர்ந்தான் அகஞானி. தத்துவாதீதத்தில் பதிமயமாய்த் திகழ் வதாக உலகர், எண்ணிக்கொண்டு, அந்த ஞானிகளைப் போற்றி வழிபட்டாலே உலகெல்லாம் நலம் பெறும் என்று எண்ணினார்கள்.

"தானல்லார் தன்னதல்லார் தத்துவசா லத்தலைவர்
மேனிசதா னந்தம் விளையுமிடம்-யானைக்கை
போலே இவருடம்பிற் போகமெலாம் பூசையித
னாலே சகம்பிழைக்கு மென."

—ஒழிவிலொடுக்கம்

ஞானிக்குச் செய்யும் பூசையால் ஞாலம் தழைக்கும் என்பதும், தெய்வவேள்வி, விழாப் பூசைகளால், ஜீவர்களுக்குத் திருவருள் வாழ்வு வந்துவிடும் என்பதும் ஆன்றோர் உட்கோள். தத்துவா தீதத்தில் இருக்கும் கடவுள் உலகமெல்லாம் வாழ என்ன செய்

கின்றார் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாது, எல்லாம் திருவருட்பெருஞ்சக்தியாலே கடவுளே செயல்படுத்திக்கொண் டுள்ள உண்மையை உள்ளபடி அறிந்துகொள்ளாமல், அகமிருந்து சர்வசாட்சி ''தாம்'' என்ற எண்ணத்தில் செயலறக் கிடந்து வீண் போயினர். இப்போது, அவ்வகநிலையில், உள்ள தத்துவாதீத சத்துவப்பொருளின் உண்மையான தனி அன்புதான் கடவுளால் செயல்படுத்தப்படுகின்றது எனக் காணும் சுத்த சன்மார்க்கி அவ்வகநிலைநின்றே அனகமாக அன்புச்செயலோடு விளங்குகின் றான். இந்தச் சத்துவப்பொருளும் அதன் அருளும் நித்திய நிறை வோடு காரியப்பட்டுக்கொண்டிருப்பதால் அதுவான இச் சுத்த தயவாளனும் சுகானந்த வடிவில் திகழலாகின்றான்.

(13)

1473. உலகெலாம் விடய முளவெலா மறைந்திட
1474. அலகிலா வருளி னாசைமேற் பொங்கிட

(உ-வி) விடயம் அல்லது விஷயம் புலனைக் குறிப்பது. ஐம் பொறிவாயில் வழியே, புற உலகமெல்லாம் புலனாகின்றனவாய் அறிகின்றோம். இந்த ஐம்புலன்களுக்கு விடயமாகின்ற உலகம் மிகப் பெரியது. புலனாகின்ற இவ் உலகப்பொருள்களும், சக்தி களும், மற்ற கருவி கரணங்களும், தோற்றங்களும் என்றும் ஒரு படித்தாய் நிலைப்பனவன்றாம். அவை யாவும் அருகிய அல்லது நுண்ணிய நிலையிலிருந்து பெருகுவதும், அப்பெரு நிலையிலிருந்து மறுபடியும் சிதைந்து அருகி யொழிந்துபோவதும், கண்கூடு. இப் புறநிலையைத் தோற்றுவிப்பதும், மறையச்செய்வதும் திருவரு ளின் பெருஞ்செயலேயாம். அத் திருவருட்சக்தியொன்றே அக மிருந்து யாவையும் காரியப்படுத்திக் கொண்டுள்ளதாம்.

மனிதவடிவில்தான் கடவுளின் அருள் உண்மை வெளிப்படத் தயாராய் இருக்கின்றது. அவ்வருளுக்கு இயற்கை பரோபகார சக்தியாகும். அதனால்தான், அவ்வருள் அகமிருந்து அருளிக் கொண்டே யிருக்கின்றதாம். அதனை அடுத்து, கலவாமற் கலந்துள்ள நாமும் பரோபகார நிமித்தம் அன்புசெய்ய விழை வதும் இயற்கையில் நிகழ்கின்றனவாம். கடவுளின் அலகிலா அருளே இச்சையற்ற தயவோடு மனிதனில் சுத்த அன்பாக வெளியாகின்றதாம். அச் சுத்த அன்புப் பெருக்கிலே புற உலக

மெல்லாம் அதன் குறை ஏதும் தோற்றாது நிறையொளிமயமாய்த் திகழக் காணப்படுகின்றனவாம். இந்த அன்பொளியில் உலக மெல்லாம் உலகத்தை யுணர்கின்ற புலன்கள் எல்லாம் மறைந்து எங்கும் யாவும் ஜோதிமயமாய்த் துலங்குகின்றனவாம். சூரியன் உதித்தபோது, சூழ் இருள் நீங்குவதும், மீன்கணம் (நட்சத்திரக் கூட்டம்) மறைவதும் போலத்தான் அருட்ஜோதி உதயத்தால் உலக விடயங்கள் எல்லாம் மறைகின்றனவாய் அறிகின்றோம்.

(14)

1475. என்னுளத் தெழுந்துயி ரெல்லா மலர்ந்திட

1476. என்னுளத் தோங்கிய என்றனி யன்பே

(உ-வி) அணுத்துவமாகிய ஆன்மாவே, ஒருவனது இயற்கை யுண்மை வடிவமாக, ஆதிமுதலே இருந்து வருகின்றதாம். இந்தச் சிற்றணு வடிவிலேதான் கடவுளின் பேரருள் உண்மை முழுதும் இருந்துகொண்டு சிறிது சிறிதாக வெளியாக்கப்பட்டு வருகின்ற தாம். அவ்வக அருள் வெளிப்படுகின்றதைத்தான், ஐஞ்சக்திக் காரியப்பாடாகிய பிரபஞ்சத் தோற்றமாக விளங்குகின்றதாம். அஃஅருள் சக்தி, புறஒளியினை, அனைத்துப் பொருள்களாகவும், அனைத்து இயக்கங்களாகவும். அனைத்து உணர்வுகளாகவும், அனைத்துச் செயல்களாகவும், அனைத்து அனுபவங்களாகவும் விளங்கச்செய்து கொண்டுள்ளதாம். இப்போது மனிதனில், ஆன்மாவிலிருந்து ஆளும் அருட்சக்தியே, இவனது வடிவாயும், உயிராயும், அறிவாயும், ஆன்ம ஆற்றலாயும், அருள் உண்மை யாயும் வெளிப்பட்டு விளங்குகின்றதாம். இந்த அருள் உண்மை யால்தான், அந்த அகச்சக்தியே அருள்ஞானத்தால் உணரப் பட்டிருக்கின்றதாக அறியப்படுகின்றதாம். இப்படி அக நின்று ஓங்கி விளங்கும் அருட்பெருஞ்சக்தியைத்தான் தனி அன்பு என்று குறிக்கப்படுகின்றதாம்.

மேற்படி தனி அன்பின் வெளியீட்டிற்குத்தான், ஒவ்வொரு உயிரினத்திலும் அதனதன் ஆன்மாவிலிருந்து, அன்பின் ஏக தேசமே வேறு வேறு வண்ணமாய் மலர்ந்து கொண்டுள்ளதாம். அருட்பெரும்பதியைத் தன் அகத்திற்கண்டு கொள்ளும்போது, அதன் அகண்ட வடிவம் அகராகாச நிறைவாய் விளங்க, அதன் ஓர் அணுவே தனது ஆன்மாவாய், னகர மெய்யாய் இருக்கின்ற

தையும், அவ்வான்மா பகரமெய்யொடு ஐவண்ணங்கொண்டு மலரச் செய்வதை ''உ'' கரத்தால் சுட்டப்படுவதாயும் மொத் தத்தில் அருட்பெரும்பதியே அன்பு வடிவமாய் மலர்ந்திருப்பதை அறிகின்றான் சன்மார்க்கி.

ஒன்றான அன்புக்கடவுள்தானே ஒரு குறிப்பிட்ட மனிதனாய் மலர்ந்து விளங்குவது கண்டு கொள்ளப்படுகின்றபோது, அது போன்றே, மற்ற எல்லா ஆன்மாக்களிலும் இருந்து மலர்ந்து விளங்குவதாய் உணரப் பெறுகின்றதாம். இவ்வுண்மைக் குறிப்பே ''என்னுளத் தெழுந்துயிர் எல்லாம் மலர்ந்திட, என் னுளத்து ஓங்கிய என் தனி அன்பே,'' என்று ஓதப்பெற்றுள்ள தாம். இத் த்லைப்பின் தொடக்கத்தில், தோலெலாம் என்று ஆரம்பித்து, இருபத்தெட்டு அடிகளில் தொடர்ந்து அவ்அன்பினால் உண்டாம், அகப்புற மெய்ப்பாட்டு விளக்கத்தையும், அனுபவப் பண்புகளையும், இயல்புகளையும் தெளிவாக்கி, இங்குதான் ''என்னுளத்தோங்கிய என் தனி அன்பே'' என்று ஒரு முற்றுப் புள்ளி வைத்துள்ளார். மேல்வரும் அடிகளில் அவ்வன்பினைச் சிறப்பித்துப் போற்றுகின்றதைக் காணலாம்.

(15)

1477. பொன்னடி கண்டருட் புத்தமு துணவே

1478. என்னுளத் தெழுந்த வென்னுடை யன்பே

(உ-வி) கடவுள் சுத்த அருட்பெருஞ்ஜோதிமயமானவர். அந்த அருட்பெருஞ்ஜோதியே கடவுளின் எங்கும் நிறைந்த பேருருவாக இருப்பதாகும். ஆனால் அந்த அருள்ஒளி, அருள் ஞானத்திற்கே அனுபவப்படும் ஒன்றாக இருப்பதால், புலன் உணர்வுக்கும், மன அறிவுக்கும், மற்ற எந்தக் கருவியாலும் வெளிப் பட்டு விளங்குவதாயில்லையாம். அந்த அருள்ஞானம்தான் பக்குவமனிதனின் ஆன்ம அணுவில் வெளியாகி அனுபவப் படுகின்றதாம். அகசிற்றணுவிலே அருட்பெருஞ்ஜோதியின் நிறையுண்மை அனுபவம் முழுவதும் வெளிப்படவுள்ளது அந்த அருளின் பேரற்புதச் செயலேயாகும். ஆன்ம அணுவிலே இருந்த அந்த அருட்பெருஞ்ஜோதி சுத்தமானது. மாற்றறியாத பொன் னோடு ஒப்பிட்டு அதன் மாசுபடாத்தன்மை குறிக்கப்படுவதாம்.

அந்தக் கடவுள் தோற்றநிலையைப் பொன்னடிக்கு ஒப்பிடு கின்றனர் முடிவில் அதன் நிறைபயன் கொண்டு வாழும் நிலையே முடியாகவே கூறப்படுகின்றதாம். அருள்ஒளியாம் திருவடி, அகத்தில் அருளைக்கொண்டும், புறத்தில் ஒளியையே வேறு வேறு தோற்றங் கொண்டிடச்செய்து தாமே ஏற்று விளங்குகின்றார் என்பது நன்கு அருள் விசாரம் செய்தபின் தோன்றுகின்றதாம். ஆகவே அவ்வருள் திருவடி ஆன்மாவின் அகத்தில் அருளாயும், புறத்தில் பொருளாயும் விளங்குதல் உண்மையாம். இத்திருவடியுண்மை முன்னம் அறிவால் கண்ட தால், பொன்ஒளி மயமாய்த் தோற்றி மனிதனை அதில் அடங்கி யொழியச் செய்துவந்தது. இன்றோ அவ்வடி அன்பின் விளை வால் அருள்அமுத ஜோதியாக வெளியாகி ஆட்கொள்ளு கின்றது. இதனால், மனிதன், அருள்ஒளி வடிவினனாகி அழி யாமை யற்று விளங்கக் கூடியவனுமாகிவிடுகின்றான். இதுவே நம் வள்ளல் பெற்ற அனுபவம். அந்த அனுபவத்தின்பேரில் தான் இந்த, ''பொன்னடி கண்டு அருட் புத்தமுது உணவே, என்னுளத்து எழுந்த என்னுடை அன்பே,'' என்று போற்றி யுள்ளார்.

(16)

1479. தன்னையே யெனக்குத் தந்தரு ளொளியால்

1480. என்னைவே தித்த என்றனி யன்பே

(உ-வி) கடவுள், தன்னையே நாமாக ஆக்கிக்கொண்டுள் ளார். அவரே ஒவ்வொரு ஆன்ம அணுவிலும் பூரணமாகவே எப்பொழுதும் இருந்துகொண்டு, தன் அருள் ஒளியையே, தன் னுடைய பலவேறு வண்ணவடிவங்களாகத் தோன்றிடவும், மறைந்திடவும் செய்து கொண்டுள்ளார் என்பதை எல்லாம் இந்தத் தனி அன்பறிவாலே உணர்ந்துகொள்ளுகின்றான் மனிதன்.

கடவுளும் தானும் இரண்டற்ற ஒன்றாக இருக்கும் அத்து விதமான அனுபவம் தனி அன்பென்னும் அருள் அனுபவத்தாலே அடையவேண்டியிருக்கின்றது. இவ் அன்பு விளைவு கொள்ளாத போது மனிதன், கடவுளுக்கு அயலாயிருந்து வேண்டி வேண்டி பலவும் பெற்று மகிழ்ந்து வந்தான். முடிவில் அவனது வேண்

டுகை, அவராகவே, அந்தப் பதியாகவே ஆகிட அவரும் தன்னையே இவனுக்கு வழங்கிவிட்டார். அப்படி வழங்கிவிட்டதாக ஒரு புற அனுபவமே இது. உண்மையில், அவரே இவனாய்த் தோற்றித் தன் அன்பினால், இவன் அவராய் உள்ளதைத்தான் கண்டு அனுபவத்திற் கொள்ளுகிறான். இவன் அன்பு ஒளி சேராத போது, தன்னை உடல் வடிவினனாகக் கருதிக் கொண்டிருந்தான். இந்நிலை, தாமிரத்தில் களிம்பு காரணமாக மாசுள்ளது போன்றதாம். பரிசவேதியால் அத் தாமிரம், களிம்பு நீங்கிச் சுத்தத் தங்கம் ஆவதுபோல, இந்தத் தனித்த அன்பின் சேர்க்கையால் இவன் தங்கம் போன்ற சுத்த தேகி ஆகிவிடுகின்றான். அருள்ஒளி என்பதும், தனி அன்பு என்பதும் ஒன்றன் விளக்கமே. இந்த அன்பையே முன்னிலைப்படுத்தி வேண்டுகின்றார்.

(17)

1481. **என்னுளே யரும்பி யென்னுளே மலர்ந்து**
1482. **என்னுளே விரிந்த என்னுடை யன்பே**

(உ-வி) அருள்ஒளிக் கடவுள் அனுபவம், அரும்பி, மலர்ந்து, விரிந்ததாகக் கூறப்படுவதால், அதனை ஒரு மலராகக் கொள்ளலாகும். அது அருள் ஒளி மலராக, அருட்பெருஞ்ஜோதி மலராக நம் வள்ளலுக்கு அனுபவமாகியுள்ளதாம். அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே, ஒரான்ம அணுவில் இருந்து அனுபவப்பட இருக்கின்றது உண்மையாகும். மலரின் முழு இயலும் வெளியாகா முன், அது (அம் மலர்) சிற்றரும்பாய் இருக்கும்போதே, அதனுள் (அவ்வரும்பினுள்) அதி சூக்குமமாய் அருகி மறைந்துதான் இருந்ததாகும். பின்னர், அச்சிற்றரும்பு பேரரும்பாகிக் கட்டவிழ்ந்து மொட்டாகி இதழ் அகன்று மலர்கின்றதாம். அப்போது நிறமும் மணமும் தோன்றிப் பூரணமாய் விரிந்து பரவுகின்றது அந்த மணம். இது போலத்தான், மனிதனின் ஆன்ம அணு அறியாமை நிலையில் அரும்பென விளங்காதே விளங்கிநின்று, அறிவு ஏற்பட்டபோது அது ஒரு தெய்விக மலரெனத் தோற்றி மகிழ்வூட்டியதாம். பின்னர் தான் தனி அன்பு ஏற்பட்டுள்ள தருணம், அக்கடவுள் ஆன்மா அருள்ஒளி மலராக விரிந்து தன் அருள் மணத்தை உலகெங்கும் பரப்புகின்றதாகும்.

நிறை அன்பு தோன்றாத காலத்தே ஆன்மஞானியர் தம் உள்ளத்தில் கண்டது, கடவுள் ஒளிமலர்தான். ஆனால், அம்மலர், மலர்ந்து விரியாத அரும்பாகத்தான் காட்சியளித்துள்ளதாம். அக் காட்சி மாத்திரத்தாலேயே, எவ்வளவு சக்திசித்திகளைப் பெற்று, ஆனந்தக் கூத்தாடி, அருங்கலை விநோதங்கள் புரிந்து விட்டுள்ளனர் முன்னோர்! இன்று அவ் அகமலர் தனி அன்பாலே நிறை அருளோடு முழுமையாக மலர்ந்து விரிந்து, மேலான அருளாற்றலைக் கொடுத்ததோடு, மனிதனையே தன்மயமாக்கிக் கொண்டு, நிறை இன்பச் செயலொடு நித்தமும் விளங்க வைக்கின்றதாம். இதுதான் நம் வள்ளல் உள்ளத்தே அரும்பி, மலர்ந்து, விரிந்து, அருள்மணம் பரப்புகின்ற அருட்பெருஞ்ஜோதி மலரின் மாண்பாகும்.

(18)

1483. என்னுளே விளங்கி யென்னுளே பழுத்து
1484. என்னுளே கனிந்த வென்னுடை யன்பே

(உ-வி) இவ்வடிகளில் நம் பதி அருட்பெருஞ்ஜோதிக்கனியாகக் கண்டு போற்றப்படுகின்றார். அரும்பு மலர்ந்து, விரிந்து படும் இதழ்களின் நாப்பண், பிஞ்சுக்காய் முகிழ்க்கின்றது. அக் காய் பெருத்து, முதிர்ந்து பழுக்க ஆரம்பிக்கின்றது. பழுக்கப் பழுக்க வண்ணமும், மென்மையும், உட்சுவையும் கொண்டு கனிகின்றதாம். இதுபோன்றே கடவுள் ஆன்மாவும், மனிதனில் மெய்யறிவு உண்டானபோது, ஒரு தெய்வீகப் பிஞ்சென விளங்கியது; அதனைக் கண்டே உவகைகொண்டு கொண்டாடினர் பலர். பிஞ்சாகவும், காயாகவும் கண்டவர்கள், அதனை உண்டு களித்து அதன் ஆற்றலால் அனந்த சாத்திரங்களையும், கலைப் பொருள்களையும், தெய்வ விளக்கங்களையும் எண்ணி, எண்ணி, எண்ணற்றவைகளை ஆக்கிக் குவித்துவிட்டனர். இவர்கள் கண்டடைந்த அகப் பொருள், ஆன்மக் கடவுட்கனி அல்ல, அகாலத்தில் தோன்றி உதிர்ந்து போகும், பிஞ்சும், காயும், அரைப்பழமுமேயாம். நன்கு பழுத்துப் பக்குவப்பட்டுக் கனியும் வரை நிலைக்கவில்லையாம், அதற்குள் பறித்து, அழித்துவிட்டனராம்.

இப்பொழுது நம் பெருமானின் உள்ளத்தில் விளைந்த அருட்கனி நன்கு பழுத்துக் கனிந்து, ஐம்புலனுக்கும், மனோகரணத்திற்

கும், ஜீவ ஆற்றலுக்கும், ஆன்ம அனுபவத்திற்கும் பெரு விருந்தாய் விளங்கிக்கொண்டு, உதிராதே, கேடொன்றும் அடையாதே உலகவர்க்கெல்லாம் உலவா இன்ப வாழ்வு வழங்குவதாய்த் திகழ்கின்றதாம், தனி அன்பாய்த் துலங்குகின்ற அன்பர்களின் உள்ளத்திலெல்லாம். முன்பு ஏகதேச அன்புடையார் உள்ளத்தே, இஃது முக்கனியாகவும், கன்னற்கனியாகவும், அக்காரக் கனியாகவும், கற்பகக் கனியாகவும், பிற நற்கனிகளாகவும் போற்றிக்கொண்டனர். அருட்ஜோதியிலே, சிற்றம்பலக்கனியாகவும், அருட்ஜோதிக்கனியாகவும் இன்று காண்கிறோம். தனி அன்பினால், சிற்சபையின் கனிந்த நறுங்கனியாக விளங்கும் இது உளத்திருந்து உயிருடம்பு முழுவதும் இடையறாது, உலவாது என்றும் இனித்துக்கொண்டிருப்பதோடு அருட்பேராற்றலையும், அழியா இன்ப வாழ்வையும் வழங்குவது இதுவாகும்.

(19)

1485. தன்னுளே நிறைவுறு தரமெலா மளித்தே
1486. என்னுளே நிறைந்த என்றனி யன்பே

(உ-வி) எல்லாம் வல்லவராகிய அருட்பெரும்பதி தன்னதாக உள்ள இயல் செயல் யாவையும், இந்த அன்பு வழி மனிதனுக்கே பூரணமாய் வழங்கிவிடுகின்றாராம். இப்படி அருளுகின்றதாலே ஆன்மாவுக்கு அக்கடவுள்தன்மை யாவும் சித்திக்கின்றதாகும்.

மேற்படி அனுபவ உண்மையைத்தான் நம் பெருமான் இங்கு விரித்து விளக்கம் செய்கின்றார். சிற்றம்பலத்தரசாய் ஆன்ம சிற்றணுவிலே மன்னியுள்ள அருட்பெரும்பதி, இன்று அன்புருவாகத் திகழ்ந்து, அனகநிறைவு கொள்ளுகின்றார்.. அணுவடிவிற் செறிந்து நிற்கும் பரன், தன்னருட் பூரண சுதந்திரத்தால் யாவையும் ஆள்கின்றார். எல்லாப் பொருள்களுக்கும், சக்திகளுக்கும் இயல்புகளுக்கும், நிலைகளுக்கும் சூக்கும நிலைக்களனாக இருப்பதே நம் பதியின் தரமாகும். அப்படிப்பட்ட தன் பெருந்தரத்தையே அகமிருந்து விரித்து, ''தன்னில் நிரப்பி யருள்கின்றார் எனவும், அணுவிலிருந்து ஆண்ட ஆண்டவர், தன்னுளே நிறைந்து, அவரில் அவராய் இருந்து அன்பு செய்ய இசைந்துள்ளார் எனவும் அவரே இவராய் இருந்துகொண்டு இத்தனி அன்பின்

உண்மையை விளக்கிக் கொடுதது வாழ்விற் கொள்ளவும் செய் கின்றார் எனவும்,'' தெளிவு செய்கின்றார் வள்ளலடிகள்.

(20)

1487. துன்புள வனைத்துந் தொலைத்தென துருவை
1488. இன்புரு வாக்கிய என்னுடை யன்பே

(உ-வி) ஒவ்வொருவரும் இன்பம்தான் வேண்டுகின்றனர். ஏன் அப்படி இன்பத்தையே விழைவதும், துன்பத்தை விலக்குவதும் மக்கள் செயலாய் இருக்கின்றது என்றால், இன்பம் சுகத்தையும், துன்பம் வேதனையையும் கொடுக்கின்றன. உண்மையில் மனிதன் சச்சிதானந்தபதியின் அம்சமாகத் தன்னை அறியாமலே இருந்து வருகின்றான். ஆகையால், அவனது உண்மையே சச்சிதானந்தமாகும். இதனை அறியாவிட்டாலும் உள்ளிருந்து, விழைவு கொள்ளச் செய்கின்றது இறைவண்ணமாய் உள்ளதால் இன்பத்தை விரும்புவது மனிதனுக்கு இயல்பாயிருக்கின்றதாம். ஆனால், மனிதன் பொறி புலன் இச்சையாலும், உண்மை அறியாமையாலும், மெய்யின்பம் இன்னது என்று தெரிந்து கொள்ளாமலே புலன் இன்பத்தையே நிசம் எனக் கருதி அடைந்து முடிவில் துன்பில் அழிகின்றான். ஏகதேசப் பக்குவ வசத்தால் ஆன்ம சுகமே மேன்மை என அறிந்தும் கூட, அதனையும் புறத்திருந்து கண்டடைய முயன்று ஓரளவு யோக ஞான அற்புத சித்திகளைப் பெற்றும் முடிவில் ஆன்ம சுகத்தில் இருந்து அழியாது வாழக் கூடாது போயினன். இப்பொழுது திருவருளால் இயல் உண்மையை அறிகின்றதால், அக இன்ப நிலையில் இருந்துகொண்டு, புறத்தில் சுத்த தயவு புரிந்து கொண்டும் இருக்கும் சன்மார்க்கி நலமே சூழப்பெறுகின்றான். அக இன்ப நிலையிலிருந்து, அருளால் அன்புச் செயலை அனகமாய்ப் புரிந்து கொண்டிருக்கின்றான் இவன். ஆகையால் அகமுடையானின் ஆணைப்படி இன்பமெல்லாம் சூழ வருகின்றனவாம்.

இதனையே நம் பெருமான், ''துன்புள வனைத்தும் தொலைத்தெனது உருவை இன்புரு வாக்கிய என்னுடை யன்பே,'' என்கின்றார். அருளால் அல்லது தனி அன்பால் ஒருவனுக்கு, துன்பமெல்லாம் தொலைக்கப்படுவதும், இன்பம் ஒன்றே தழைத்

தோங்கச் செய்யப்படுவதும் இயல்பாய் இருக்கின்றனவாம். வள்ளலாருக்கு வ்ழங்கப்பட்ட இன்பம், பொய்த்துப்போகும் பொய்யான பொறிபுலன் இன்பமல்ல: மெய்யான சச்சிதானந்த இன்பம் பெற்றார். அன்பு நிறைவால் இந்த இன்பம் அகத்தில் தோன்றியதோடு அனகநிறைவு கொண்டதால் சூழ் தேகமே இன்பவடிவமாகி விட்டதாம். இவர்க்குப் பொறியுறு ஆன்ம தற்போதம் போய்விட்டதால், அறிவுரு (தோற்றுகின்ற தேகம், ஞான வடிவம்) இன்ப வுருவாக ஆகிவிட்டதாம். தனி அன்பு தோன்றாதபோது ஆன்மானுபவம் அகநிலையில் சச்சிதானந்தமாய்த் தோன்றி இருந்தும் அனகப்படாததாலே, அப்படியே அடங்கிவிட்டது. அதனால் தேகம் அழிந்து வாழ்வும் ஆனந்தானுபவமும் கெட்டு ஒழிந்து போயிற்றாம். இதனால், இத்தனி அன்பால் பெறப்படுகின்ற இன்புருவத்தின் மாண்பு இதுவெனக் காணலாகின்றது.

(21)

1489. பொன்னுடம் பெனக்குப் பொருந்திடும் பொருட்டா
1490. என்னுளங் கலந்த என்றனி யன்பே

(உ-வி) தத்துவத் துரிசுகளால் உருவாகியுள்ள அசுத்த மாயா தேகம், பலவற்றாலும் துன்புற்று, நலிந்து, சிதைவுற்று, ஒழிந்துபோகக் கூடியதாயுள்ளது. அப்படி அத்தேகம் கெட்டு ஒழிந்து போகாது, பொன்னவிர் சுத்த உடம்பாய் விளங்கி நிலவச்செய்யத் திருவுளம் கொண்டுள்ளார் நம் தனி அன்புப்பதி. இதற்காக வேண்டியே அவர் பண்டே தொட்டு நம்முட் கலந்து மறைந்திருந்து கொண்டே பண்படுத்திவந்துள்ளார் இந்நாள் வரையும். பரிபக்குவம் ஏற்படும் வரை, வந்து வந்து சூழ்ந்து நீங்கிக் கொண்டிருந்த தேகம் யாவும் நியதிப்படி ஒழிக்கப் பட்டுக்கொண்டிருந்தனவாம். இத்தருணம் அன்பு விளைந்து தனி நிலையுற்றதால், அகமிருந்து அருளமுத சக்தி அனகமாக வெளியாகிச் சூழுடலை நிறைத்து விட்டதாம். அதனால். உடம்பின் அசுத்த இயல்பும், அழிவுறு தன்மையும் மாறி சுத்த நித்திய வண்ணமாயிற்றாம்.

ஆன்மாவின் அகமிருக்கும் அருட்ஜோதி அமுதம் தனி அன்பினால் உளத்திருந்து உயிருடம்பில் கலந்திட்டதாலே

தேகம், அமுதால் அழியாமையும், ஜோதியால் பொன்மையும், அருளால் சுகானந்த இயல்பும் கொண்டுவிடுகின்றதாம். இங்கு, அந்தத் தனி அன்பினால் பெறப்பட்ட வடிவம், பொன் வடிவம் சுத்த தேகம் அல்லது அன்புருவம் என்று குறிக்கப்பெற்றுள்ளதாம். அன்புருவம் பொன்வடிவம் என்று விளங்கலின், பொன்னார் மேனிச் சிவபெருமானை அன்பு வடிவினராகவே முன்னோர் வெளியாக்கி யிருந்தனர். அந்தப் பொன்னார் மேனி அன்புச்சிவம்தாம் சத்திய ஞானசபையில் மாற்றறியாத அருட்பெருஞ்ஜோதிப் பொன்னுருக் கொண்டு திகழ்கின்றதாம். இந்த அருட்ஜோதி பதியே நம் அருட்ஜோதி வள்ளலுக்குப் பொன்னுடம்பை வழங்கியுள்ளதாம்.

(22)

1491. தன்வச மாகித் ததும்பிமேற் பொங்கி
1492. என்வசங் கடந்த என்னுடை யன்பே

(உ-வி) நிறை அன்புக்கு உறையுளாக இருக்கின்ற பதி, தன்வசத்தே அதனை அத்தனிப் பேரன்பினை அடக்கிக்கொண்டு நமது ஆன்ம சிற்சபையில் திகழ்கின்றார். நம்மில் சுத்த அன்பு பெருகும்போது, அகமிருந்த கடவுள் அன்பே எப்பக்கமும் பொங்கி வழிகின்றதாம். அப்படி அன்பு நிறைந்து பொங்கி வழிகின்ற தருணமும் நம் பதியின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றதாம். அந்த மெய்யன்பின் வெளியீடே நல்லவர்களின் மெய்யன்புச் செயலாகச் சித்தி வல்லசக்தியுடன் தோன்றிப் பிறர்க்கு நலம் தந்து விளங்குவதாம். இது அருட்சித்திச்செயல் எனப்படும். இதனால், இது புரியும் அன்பர்க்கு இன்பவாழ்வு பெருகும், நிலைத்து விளங்கும். அன்பு பொங்கிடா உள்ளத்தில் அருள் ஏகதேசத்தால் வெளிப்படும் சித்திசக்தியால் உலகம் வியந்து கொள்ளக்கூடும். ஆனால் அது புரியும் அற்புதசித்தர்க்கு அழியா இன்பவாழ்வு உண்டாகாது.

நம் வள்ளற்பெருமான் உள்ளத்தில் அன்பே நிரம்பி யிருந்ததால், அது கடவுளன்பின் சார்புகொண்டு விளைந்ததால் அதன் சக்தியால் ஏற்பட்ட சித்திச் செயல்கள் எல்லாம் பெரு நன்மையே விளைவிக்கின்றன. மேலும், அவ்வன்பே உடலையும் சுத்த தேகமாக ஆக்கி என்றும் இன்புடன் விளங்கச்செய்து விட்டதாம்.

ஆன்ம அணுவில் அமைந்திருந்த பேரன்புச்சக்தி, வெளிப்படா திருந்த காலமெல்லாம் அதனைக் கட்டுப்படுத்தி வைத்திருந்த பதி, அச்சக்தி வெளிப்படாமலே, அகமிருந்தே அனகமாக எங்கும் நிரம்பி செயல்படுத்திக்கொண்டிருந்ததாம். ஆகையால், புறத் தில் எல்லாம் தோன்றி விளைந்து வருகின்றனவாம். முடிவில் அந்த இறையன்பு சக்தியே, தனி அன்பாய் வெளிப்பட்டபோது, அது உடலையே அன்பு வடிவமாக்கிவிட்டது. இந்தத் தனி அன்பு வடிவம் ஆன்ம அகமிருந்து வெளிப்பட்டு, ஜீவதேகத்தில் நிரம்பி, அத்தேக நிலையையும் கடந்து, தேகத்தைச் சூழ்ந்த அகண்ட வெளி எல்லாம் நிறைந்ததாய் விளங்குகின்றதாம். இதனையே ''என்வசங் கடந்த என்னுடை அன்பே'' என்று கூறியுள்ளார்.

(23)

1493. **தன்னுளே பொங்கிய தண்ணமு துணவே**

1494. **என்னுளே பொங்கிய என்றனி யன்பே**

(உ-வி) கடவுள் அணு தான் மனிதனின் ஆன்மா. அதற்குள் இருக்கும் அருட்பெருஞ்ஜோதியே குளிர்ச்சி பொருந்திய அருள் அமுதமாக இருப்பது. அந்த அமுதம் அருளால் அனகமுறுவதே பொங்கி வழிவதாகும். அப்படி அகமிருந்து, வெளிப்படாமலே, அனகமாய் எங்கும் நிரம்பி யிருப்பது காரணமாகப் புறத்தே எங்கும் எக்காலத்தும், யாராலும் அனுபவத்தில் கொள்ளப் படாதிருந்தது. இப்போது ஆன்ம இயற்கையாகிய அன்பு நிரம்பித் தனி அன்பென ஆகி, அனுபவப்படத் தொடங்கிய போது, அதுவே கடவுளின் அருளமுதமாக அனுபவமாகின்ற தாம்.

அருட்பெருஞ்ஜோதி அமுத பதி எங்கும் பூரணமாக இருக் கின்றதுவே உண்மை. அதாவது, ஒவ்வொரு ஆன்ம சிற்றணு விலும் கூட நம் பதி, ''அருட்பெருஞ் ஜோதி தனிப் பெருங் கருணை'' மயமாய்ப் பூரண நிறைவோடு இருந்து கொண்டுள்ளார் என்பதாம். அப்படி இருந்தும், ஆன்மாவுக்கு அனுபவமாகாமல் தான் யுகயுகமாக இருந்து, அந்த ஆன்மாவுக்கு, உருவும், உயிர் உணர்வும், செயல் திறனும், அறிவு விளக்கமும், ஆன்ம உண்மை யும் வெளிப்பட வேண்டிப் பலவாகிய சூழ்நிலையை ஆக்கிக் கொள்ளவே, அவ்வகப் பெருஞ்சக்தியைப் பொங்கிடச் செய்து

செயல்படுத்தி வந்துள்ளதாம். அந்தக் கடவுளான்மாவுக்குத் தன்னையே அறியும் தன்ஞானம் ஏற்பட்டுள்ளது, இம்மனித வடிவின் சூழலால்தான். இந்த மனிதனாகிய ஆன்மாவிலிருந்து பொங்குகின்ற அனகசக்தியை இதுகாறும் அறியாதிருந்த மனிதன் இப்போது அறிந்துள்ளதோடு, அந்த இறை சக்தி சுத்த அருட்பெருஞ்ஜோதிசக்தி என்றும் அதனை அறிவால் ஏக தேசம் அறிந்தால் மட்டும் அனுபவப்படாதென்றும், சுத்த அன்பி னால்தான் பெறமுடியும் என்றும் திருவருளால் உணர்த்தப்பெற் றுள்ளான். ஆகவே நம் அடிகளின் உள்ளத்திலிருந்து புறப்பட்ட தன் அன்புதான் அருட்பேரநுபவத்தை இவர்க்கு வழங்கிவிட்டுள் ளதாம். ஆதலின், அந்த அருட்பெருஞ்ஜோதி அனுபவத்தைத் தன் உள்ளத்திலிருந்து பொங்கி எழுந்து பரவும் தனி அன்பாகக் கண்டு போற்றுகின்றார். இதுபோல் ஒவ்வொரு ஆன்மாவிலும் அன்பு பொங்கினால், அருள் ஒளி நிரம்பி வழியும், இன்பவாழ்வு நிலைத்து விளங்கும். இதுதான் தனி அன்பின் பெருஞ் சிறப் பாகும்; அன்பின் அனுபவப்பொருள் முத்தேக சித்திநிலையே ஆம். இந்த அனுபவம் முன்பு எக்காலும் உண்டானதில்லை, திருவரு ளால் இப்போதே வெளியாக்கப்பெற்றுள்ளதாம்.

அன்பு — திரிதேக சித்தி அனுபவமே

மனிதனின் நிறை உண்மை, இந்த அன்பு என்ற சொல்லில் அனுபவப்படவுள்ளதை இன்று சுத்த சன்மார்க்கத்தால் அறிந்து கொள்ளப்படுகின்றது, தேகமாகிய காயம், ஆகாயம் நிரம்பி யுள்ளது. அவ்வாகாயம் அல்லது ஆகாசம் அகரமாயுள்ளது. இத்தேகத்திற்குள்ளீடாய், இதற்கு அடிநிலை ஆதாரப் பொரு ளாய் விளங்குவது ஆன்ம அணுவாகும். இந்த ஆன்ம அணுவில் தான் கடவுளின் சச்சிதானந்த ஆற்றல் முழுவதும் அடங்கிநின்று வெளியாவதாம். இதுவே நம் தமிழின் முடிந்த எழுத்தாம் னகர மெய்யாய்க் கொள்ளப்படுவது. எனவே ''ன்'' என்பது கடவு ளான்மாவாகும். இக்கடவுளான்மாவே இம் மனிதனின் தலை நடுவுள் பகர வடிவப் பீடத்தில் உகர உயிர் ஆகிய ஐம்மை இயல் போடு செயல்படுகின்றதாம். ஆகவே, அன்புதான், உடல், உயிர் அல்லது ஆன்மா, அனுபவநிலையாம். இம் மூன்றிலும் அன்பு முழுமையாகச் செயல்படும்பொழுது, உடல்-சுத்த தேக மாயும், உயிர் ஆன்மா-ஞான தேகமாயும், அனுபவநிலை-பிரணவ தேகமாயும் அனுபவமாகும். இதற்குச் சத் விசாரம் செய்து கடவுளான்மநிலையை அடைந்து, அங்கிருந்து அன்பு உண்மை

விளங்கத் தயவுச்செயல் புரிவதுதான் முறையாகும். நம் வள்ள லார் இப்படிச் சிற்சபை யுற்று அகத்தே அருள்ஒளி மயமாய் நின்று, தனி அன்பு வண்ணமாய் உலகில் வாழும் நிலையை பெற்றுக்கொண்டுள்ளார். அருள்ஒளி யனுபவத்தில் இருக்கும் இவருக்கு உடல் சுத்த அன்புத் தேகமாகவும், ஆன்மா ஞான தேகமாகவும், உயிரிடத்தே உண்டாம் அருள் இன்பானுபவம் ஆனந்த வடிவம் அல்லது இன்புருவம் என்று கொள்ளப்படு கின்றன. இப்படித் தனி அன்பின் சித்தியை வள்ளல்மூலம் காண்கின்றோம்.

225. நித்திய விளக்கு

(1)

1495. அருளொளி விளங்கிட ஆணவ மெனுமோர்
1496. இருளற வென்னுளத் தேற்றிய விளக்கே

(உ-வி) அருள்ஒளி விளக்குதான் நித்தியமானது, உண்மை யைக் கண்டு கொள்ளச் செய்வது, இறவாமையையும் இன்ப வாழ்வையும் வழங்குவது, மொத்தத்தில் எல்லாம்வல்ல இறை வண்ணமானதாம். இப்படிப்பட்ட ஒளியுடைய விளக்கை மக்கள் உலகம் கண்டதில்லை; மற்ற எவ்வுலகமும் அறிந்து கொள்ளவில்லை. மற்ற எத்தனையோ விளக்குகளை, ஒளிசெய் பொருள்களை, ஞாயிறு முதலான ஜோதி கோளங்களைத்தான் பல ரும் அறிந்துள்ளனர். இம்மாதிரியான சிறிய, பெரிய ஒளி எதனா லும் புறஇருள்தான் ஓரளவு நீங்கும். உலகும், உடலுருவும் புறத் தனவாய் இருத்தலின், புற இருளகற்றும் சாதாரண ஒளிகளால் பயனுண்டு. உடலுக்குள்ளும், பொருள்களுக்குள்ளும் மறைந்தும் புதைந் தும் கிடக்கும் இருளைக்கூட விலக்கிச் சில X—கதிர், மின்காந்த அலையொளி போன்றவை கண்டுகொள்ளச் செய்கின்றனவாம். கற்பனையாலும், ஒருமை மனோ சக்தியாலும் சில மறை பொருட் களைக் காண முடியும். ஆனால், இவ்வொளிகள் எல்லாம், அருள் ஒளி ஆகாது. புற இருளிலே இருக்கும் ஒருவன், தான் இருளில் இருப்பதை யுணர்கிறான்.

புற ஒளி எதனாலும் நீக்கமுடியாதது ஆணவ இருள். மனித னுக்கு இந்த ஆணவ இருள் தான் உடன்பிறந்த ஒன்றாய் இருக்

கின்றது. ஒருவனுக்குத் தான் இருக்கின்றது ஆணவமாகிய அக இருளில் என்பதுகூடத் தெரிகின்றதில்லையாம். அந்த இருளைத்தான் எத்தனை கோடி சூரிய ஒளியாலும் அகற்ற முடிகின்றதில்லை. அவ் ஆணவ இருளை அகற்றுவதுதான் அருள் ஒளி. இவ் அருள் ஒளி புறத்தெங்கும் காணப்படாதது. ஒருவன் மனம் தூய்மை ஆகி, அருள்ஞானம் அடைந்தபோது உள்ளொளியாய் விளங்குவது தான் அருள் ஒளியாம்.

அருட்பெருஞ் ஜோதிபதியே நமது ஆன்மச் சுடர் விளக்காய் நம் தலை நடுநின்று ஒளிர்கின்றது. அந்த ஆன்ம விளக்கு நாமாய் இருந்தும், இதனைச் சற்றும் அறிந்துகொள்ள முடியாமல் அறியாமை இருள் மூடிக்கொண்டிருக்கின்றது. அதனால், தேகமே நமது மெய் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். சற்று ஆன்ம அறிவு ஏற்பட்டு விசாரத்தில் அழுந்தியபோது, நாம், தேக வடிவினரல்ல, அக ஆன்மாவே நம் உண்மை உரு என எண்ணி மகிழ்கின்றோம். இந்த அழியா ஆன்மவடிவம் நாம் என்ற எண்ணத்தில் உண்டான மகிழ்ச்சியில் தேகத்தை அலட்சியமாய் விட்டுவிட நேருகின்றது. தேகம் இழக்கப்பட்டால், ஆன்ம அனுபவம் சூன்யமாய் ஒழிந்துபோம். ஆகையால், உடலை விட்டிடக்கூடாது. நித்திய ஆன்மாவே நாம் என்பதுதான் ஆணவம். அருளால் கடவுளே ஆன்மாவாய்த் திகழ்கின்றார். இப்படி விளங்கும் கடவுளைத் தவிர நாம் என்ற ஒன்று வேறாய் இல்லையாம். ஆகையால் நாம், கடவுளான்மாவுக்கு வேறாய் இருந்துகொண்டு, அது நாம் என எண்ணுவதோ பாவிப்பதோ கூடாது. கடவுளே அருளால் ஆன்மாவாய் அது நாமாய் இருக்கின்றதை உள்ளூற உணர்ந்து அந்த கடவுளான்மாவாய், விளங்குதல் தான் அருளனுபவமாம். ஆகவே, நாம் அந்த அருள் ஒளியாய் இருக்கின்றோம் என்பதை அருளாலேதான் உணர்ந்து அதுவாய்த் திகழ்கின்றது உண்மையாம். இந்த அருள் உணர்வாகிய ஒளிதான் அறியாமை என்னும் ஆணவ இருளை ஒழிக்கின்றதாம். கடவுளே இந்த அருள் ஒளி விளக்காக நம் உளத்தே ஏற்றி வைக்கப்பட்டுள்ளதை அருளால் காண்கின்றபோது அறியாமை இருள் முற்றும் இல்லாதுபோய்விடுகின்றதாம்.

மேற்படி அருள் ஒளி விளக்குதான், அருள்ஞானத்திற்கே புலனாகும் அருட்பெருஞ்ஜோதி அகண்டதீபமாய் நம் சத்திய ஞான சபையில் என்றும் பிரகாசித்துக்கொண்டுள்ளது. ஜீவ

கருணையும், சத் விசாரமும் நிரம்பி, தைப்பூரணையாகிய நிறை ஞானம் பெற்று, அக வானிலே பூசம் குறிக்கும் காற்குளம்தான் இத் தேகமாய கடத்தின், கம்—என்னும் தலை நடுவில்தான் இந்த அருள் விளக்கைக் கண்டு அதுவாய் நின்று விளங்குதல் அருளனுபவமாம்; ஆணவ இருள் அற்ற நிலையாகும்.

(2)

1497. துன்புறு தத்துவத் துரிசெலா நீக்கிநல்
1498. லின்புற வென்னுளத் தேற்றிய விளக்கே

(உ-வி) உலகிலும், உடலிலும் நல்லொளியில்லாத அசுத்த மல மாசும் விடப்பொருள்களும் சேர்ந்து பலவாகிய கேடுகளை விளைவித்து ஜீவர்களைத் துன்புறுத்தும். 96 தத்துவங்களாலாகிய இம்மனிதப்பிறப்புருவில் அருள் விளங்காத அபக்குவ காலத்தில், தத்துவத் துரிசுகள் நிறைந்திருப்பதால் துன்பியல் வாழ்வே சூழுகின்றது. துரிசு என்றால் குற்றம். தேக கரணங்களிலே, போகப் பொருட்களிலே, சூழ்நிலைகளிலே பலவாகிய குற்றம் குறைகள் தோற்றிக்கொண்டே யிருக்கும். கவனக்குறைவாலும், அறியாமையாலும் பழக்கவசத்தாலும் அறிந்தும் அறியாமல் குற்றம் நிகழ்கின்றன. அவற்றால் கேடும், துன்பமும் விளைந்து வருத்துகின்றன. இத் தீமை செய் துரிசுகளை எல்லாம் விலக்கிக்கொள்ளுதல் எளிதல்ல. முயன்றால் பல குற்றங்களைத் தடுத்துக்கொண்டே விடலாம். ஆனால், குற்றங்களே நிகழாமல் செய்துகொண்டு வாழ்தல் (முக்கியமாக, பிணி, மூப்பு, சாக்காட்டை யொழித்துவிட்டு வாழ்தல்) திருவருளின் பெருந்துணையின்றி அமையாதாம்.

நம் அகமாகிய ஆன்மாவில், அருள்விளக்கு என விளங்கிக் கொண்டுள்ளார், எல்லாம் வல்ல ஆண்டவர். அந்தப் பதி தானே நாமாகி இருப்பதை அருள் விளக்கத்தால்தான் அறிந்து கொண்டு, இந்தத் தத்துவக் கூட்டத்தில் பட்டும் படாது தாமரை இலைத் தண்ணீர்போல் இருந்து, அருள் வாழ்வு வாழ்வதால் அருள் ஒளிப் பதிமயமாய் விளங்குவோம். அப்போது தத்துவக் கேடுகளால் விளையும் பலவாகிய துன்பங்கள் நம்மைச் சூழாமல் திருவருளே தடுத்து ஆட்கொண்டு வாழ்விக்கும். அதனால் தீமை

யற்ற நல்ல இன்பமே சூழும். தீபஒளி கண்டவுடன் சேர்ந்தது சந்தோடம் என்பர். அருள் ஒளித் தீபத்தை அருளால் கண்டால் கண்டுகொண்டு, அது நாமாகி விளங்க நேருகின்றதால், அதனு டைய இயல்பாகிய சச்சிதானந்த அனுபவம் நம்மதாய் விளங்கு வது உண்மையாம். இதனால் இந்த நித்திய தீபத்தால் நித்தி யானந்த வாழ்வு சேரும் என்பது சத்தியம்.

(3)

1499. மயலற வழியா வாழ்வுமேன் மேலும்

1500. இயலுற வென்னுளத் தேற்றிய விளக்கே

(உ-வி) அருள் விளக்கை ஆன்மத் தளியில் நித்தியமாய் எரிந்துகொண்டு விளங்கும்படி செய்துள்ளார் நம் அருட் பெரும்பதி. ஆனால், அவ்விளக்கு, அருட்கண் பெறாதவர் களுக்கு எப்படியும் அறியமுடியாதபடி தோற்றா திருக்கின்ற தாம். பொறி அறிவாகிய புலனுக்கும், கரண அறிவாகிய மன துக்கும் ஜீவ அறிவாகிய சாதாரண உணர்வுக்கும் சற்றும் விளங் காத விளக்கு இதுவாகும். மேல் ஆன்ம ஞானம் பெற்று அகக்கண் கொண்டு உணர்வோர்க்கு ஒருவாறு வெளிப்பட்டு, ஆன்மபாவனை யில் சிலகாலம் விளங்கி நின்று, சில அற்புத சித்தி சக்திகளையும் வழங்கி நிலவி, தேக அந்தியத்தில் மறைந்து சூனியமாகி விடு கின்றதாம். ஆகவே, ஆன்மஜோதி தீபம் தோற்றா நிலையும், தோன்றி மறைபடும் நிலையும், அருள் உண்மை வெளிப்படாத மருள்மயக்க நிலையே ஆகும். இந்த மருள் நிலையே இங்கு மயல் எனப்படுகின்றது.

மேற்படி மயல் அறவும், அழியா வாழவு மேன்மேலும் இயலுறவும், அதாவது மயல் என்னும் மருள்நிலை நீங்கிடவும், அருள்ஒளி தோற்றி, நித்திய வாழ்வு இடையறாது என்றென்றும் விளங்கிக்கொண்டிருக்கவும் இந்த அருட்பெருஞ்ஜோதி தீபம் நம் உளத்தே பிரகாசித்துக் கொண்டிருப்பதாம். மனிதப் பிறவி ஏற்ற ஆன்மாவுக்கு, மருள்நிலை நீங்கி, அருள்நிலை யுண்டாகும் வரையும், மேலும்மேலும் பிறப்பும் இறப்பும் வந்து அகன்று கொண்டே யிருக்கின்றனவாம். ஒவ்வொரு பிறப்பிலும் வாழ்க்கை அனுபவத்தால் சுக துக்கத்தில் பட்டுப்பட்டுத் தேறி, வேண்டுதல் வேண்டாமை யற்ற நிலை அருளில் நாட்டமுண்டாகி தயாவிசார

வாழ்வு மேற்கொள்ளும்போது இத் தீபம் வெளியாகின்றது. இத் தீப ஒளி மயமாகி நின்று அருட்பணி புரிந்து வரவர, அந்த அருள் விளக்கின் ஒளி உயிருடம்பு முழுதும் நிரம்பிட, மரணமில்லா நித்தியானந்த வாழ்வு சித்திக்கின்றதாம். இப்படி இவனே அருட்சுடரின் இயல்பினனாய், அருட்பிரகாச வடிவினனாய் விளங்கிடும் பொருட்டே இவனில் இத்தீபம் ஒளிவிடச் செய்து வைக்கப்பட்டுள்ளதாம்.

(4)

1501. **இடுவெளி யனைத்தும் இயலொளி விளங்கிட**

1502. **நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே**

(உ-வி) வெளி என்பது வெற்றிடம் (Vacant Space). இது அகண்டமாக அளவு கடந்து அனாதிகாலமாக விளங்கிக்கொண்டிருப்பதாம். இவ்வெளி முழுதும் இயல்பாக என்றென்றும் நிரம்பியுள்ளது ஆகாச நுண்பூதம். இதனால், அகண்டமான ஆகாச வெளியே, கடவுள் கொண்டுள்ள பெருவடிவம் ஆகும். இவ்வாகாசத்தில் உள்ள கடவுட்சக்தி, ஒவ்வொரு ஆகாச அணுவின் நடுவிருந்து இயக்கசக்தியாக வெளிப்பட அதுவே காற்றாய்த் திரண்டு சலித்துக்கொண்டுள்ளதாம். காற்றின் சலன வேகத்தால், அதன் அணு நடுவிருந்து தீ வெளியாகின்றது. தீயின் தன்மை யாறி தண்மையாகிவிட அதனடுவிலிருந்து தண்ணீர் உண்டாகின்றது. அந்நீரணுவின் நடுவிருந்து பிரிக்கப்படுகின்றது மண்கூறாகிய பிருதிவி அணுக்கள். இப்படித்தான் வான் வெளியில் ஐம்பூதங்களும் தோன்றித் திரண்டு செயல்பட்டு பிரபஞ்சம் எல்லாம் விளைந்துள்ளதாம்.

ஐம்பூத செயற்பாடாகிய இந்த உலகத்திலே, பிருதிவியணுவின் நடுவிருந்து திருவருட்செயலால் உயிராற்றல் வெளியாகிட, அவ்வுயிர் சக்தியை நடுவைத்து அதைச் சூழ ஓரறிவுப் புல்லாதி ஆறறிவு மக்கள் வரையுள்ள பலவாகிய தேகவடிவத் தோற்றங்கள் வெளியாகி வளர்ந்தும், பிறந்தும், மறைந்தும் கொண்டிருக்கின்றனவாம். இத் தேக உயிர்ச்சக்தியின் அகமிருந்து ஞானசக்தி தோன்றி உள்ளிருக்கும் ஆன்ம உண்மையும் அறிந்துகொள்ளப்பட்டது. இந்த ஆன்ம சக்தியால் அற்புத சித்திகள் பல இயற்றப்பட்டன. அவற்றில் ஆன்மாவே கடவுள்

அம்சமாக தோற்றிப் பலவகையிலும் வழிபட்டடைய முயன்று முடிவில் அதில் ஒன்றி ஒழியத்தான் முடிந்ததாம். அக்கடவ ளான்மாவே இன்று அருட்பெருஞ்ஜோதித் தீபமாகத் திருமுன் நின்று கண்டதோடு, அருள் அனுபவத்தால் அதுவே நாமாகி விளங்கிக்கொண்டு நித்தியமாய் நிலவவும் அருள்செய்யப் பெற்றுள்ளோம்.

மேற்படி அருள் விளக்கு நிலையிலிருந்து நோக்கும்போது, இதன் உண்மையாகிய அனாதியியற்கைநிலை ஆகாச நடுவி ருந்து, பூத நிலை, தேக நிலை, ஜீவநிலை, கரணநிலை, ஆன்ம நிலை எல்லாவற்றிலும் தன்னொளியைப் பரப்பி விளங்கச்செய்து கொண்டுள்ளதாக அறியப்படுகின்றது. வான்முதல் மேற்படி நிலைகள் யாவும் ஒன்றுக்குள்ளொன்றாகச் செருகி வைத்தாற் போல ஒவ்வொன்றாக் வெளியாகி விளங்குகின்றதாம். சூனியம் போல் இருந்த வான்வெளியிலிருந்து இவ்வளவு விளைவுற்றிருப் பது இன்று கண்டு யாவையும் நாமே விளங்கச் செய்து கொண்டு நித்திய விளக்காய் விளங்குகின்றோம்.

(5)

1503. கருவெளி யனைத்துங் கதிரொளி விளங்கிட
1504. உருவெளி நடுவே யொளிர்தரு விளக்கே

(உ-வி) இருண்ட பெருங் காட்டிலே ஒரு விளக்கை ஏற்றி வைத்தால் அவ்விளக்கைச் சூழச் சிறிது தூரத்திற்குத்தான் வெளிச்சம் இருக்கும். அது போல, அகண்ட வெளியிலே, ஞாயிறு ஒளி விட்டிலங்குகின்றபோதும், ஒரு குறிப்பிட்ட எல்லை வரைதான் ஒளி விளங்கிக்கொண்டிருக்கும்.அதற்குப் புறச் சூழ லெல்லாம் இருண்டேதான் இருக்கும். இதனால், இப்பெரு வெளியுலகை மா இருண் ஞாலம் என்கின்றனர். இங்கு இதுவே கருவெளி என்று குறிக்கப்பெற்றுள்ளது.

இக்கரு வெளி மிகப் பெரு வெளியாக இருக்கின்றது. இப் பெரு வெளியிலே எண்ணற்ற சூரிய கோளங்கள் ஒளியிட்டுக் கொண்டேயுள்ளன. அப்படியிருந்தும் 'கூட ஒரு ஞாயிறுதான் ஒரு குறிப்பிட்ட பகுதிப் பிரபஞ்சத்தில் விளங்குகின்றது.மற்ற ஞாயிற்று கோளங்கள் வெகு தொலைவில் இருத்தலின், மிகச்

சிறிய விண்மீனாக விளங்குகின்றனவாம். எனவே ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு சூரியனாகப் பிரகாசித்துக்கொண்டிருப்பது மெய்யாகும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பகுதிப் பிரபஞ்சத்திற் குரியதாய் ஒளிர்கின்றது. ஆதலின் அப்பகுதிப் பிரபஞ்சத்தில் உள்ளவர்களுக்கு அந்த ஒன்று மட்டும் சூரியனாயும், பிற ஜோதி கோளங்களெல்லாம் மீன் கணங்களாயும் தோன்றும். இப்படிக் கோடிக்கணக்கான ஜோதி கோளங்களை விளங்கிடச் செய்கின் றது எது?

ஆன்ம வெளியின் நடுவிலே அருள்ஒளி விளக்காக என்றும் மிளிரிக்கொண்டு இருக்கின்ற அருட்பெருஞ்ஜோதி தீபமே யாவற் றிற்கும் ஆதாரகாரணமாய் அகநின்று அது அதுவாய் தோற்றஞ் செய்து கொண்டு விளங்குகின்றதாகும். ஆகவே, இந்த நம் அருள் விளக்கே, தன் அருட்பேராற்றலால் அனந்தங்கோடி சூரிய னாய் வான்பெரு வெளியில் அங்கங்கு விளங்கிக்கொண்டிருத்தல் உண்மையே ஆம்.

(6)

1505. தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
1506. ஏற்றிய ஞான வியலொளி விளக்கே

(உ-வி) வித்தென்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது, வித்தை, வேதம். இதற்குப் பொருள் அறிவு என்பதாம். வேதங் கள் யாவும் ஆன்ம ஞானத்தை ஆதாரமாய்க் கொண்டு ஆக்கப் பட்டவையாம். மனோ அறிவுக்கு முடிவிடத்தே விளங்கும் ஆன் மாவில் ஒருமையாற் பொருந்தி நின்று கண்டு தெளிந்த விளக்கங்களையே வேதங்களாய்த் தொகுத்தனர் ஆன்றோர். ஓங்கார பிரணவத்தின் உண்மையைத் தெரிவிப்பது அகர வுகர மகரம் மூன்றும், மூவேதங்கள் தந்தன; மேற்கொண்டு ஓமே நான்காவதாகிய அதர்வணத்தைத் தந்துள்ளதாம். இந்த ஓங் காரம் கடவுளுக்குத் திருவடி என்றால், இவ்வோங்காரத்தின் உட் பொருளான திருவருளே திருமுடியாகக் கொள்ளப்படுகின்றதாம்.

வேதம் அறிவு நூலே. தெளிந்த அறிவாலே ஒருவாறு கண்டு கொள்ளப்படுவது ஆன்மாவே. இவ் ஆன்ம ஞானமே கடவுள் திருவடியாக இருக்கின்றது. ஆகையால் ஆன்மாவே கடவுளின்

திருவடியாகிய (கால்+முளை=) கான்முளை எனப்படுவதாம். வேதத்தின் முடிவாகிய வேதாந்தம் இந்தத் திருவடிநிலையை அடையத்தான் உபதேசித்துள்ளதாம். அறிவின் முடிவு அதற்கு மேல் செல்லாது. அறிவால் அறிதற்கரியது அருள். இதுவே ஓங்காரத்தின் உட்பொருள். இவ்வருளினால் விளங்கி அனுபவப் படுவதுதான் திருமுடியாகும். இந்த அருள் விளக்க அனுபவம் வழங்கிடற்கென்றே ஞானத்தின் இயல்ஒளி கொண்ட அருள் விளக்கு நம் பதியால் ஏற்றிவைக்கப்பட்டுள்ளதாம்.

இந்த நித்திய விளக்கு, ஞான இயல் ஒளி கொண்டதாம். இது சத்சித் மயமானது என்பர். வேதம் ஓதியும் விழைவை விட்டிடார் காண்டற்கரிய பரம்பொருளை அருள் என்னும் இயல் ஞானத்தினாலே காணும்படி இசைத்துள்ளார் நம் இறைவர். அந்த அருளேதான் இயல்ஒளி விளக்காகக் கூறப்படுகின்றது.

''வேதா கமத்தின் அடியும் நடுவும் முடியும் மற்றுமே
வெட்ட வெளிய தாகி விளங்கக் கண்டேன் முற்றுமே
நாதா சிறிய நாய்க்கும் கடையேன் முற்றுங் கண்டதே
நானோ கண்டேன் எந்தாய் கருணை நாட்டங் கண்டதே''.

என்றதால், அந்த வேத ஆகமங்களில், அடி, நடு, முடி எல்லாமும் முழுமையாகக் காண்பதற்குக் கடவுட் கருணையான கண் வேண்டும் என்பது குறிப்பு.

(7)

1507. ஆகம முடிமே லருளொளி விளங்கிட
1508. வேகம தறவே விளங்கொளி விளக்கே

(உ-வி) வேத விழுப்பொருளை மேவுதற்கு உரைநூலாக சோபானம் (படிகள்) உடைய நூலாக வெளியிடப்பட்டது ஆகமம். ஆனால் அவ்வாகமத்தும் அப்பேரருட்பெரும்பதியின் உண்மை வெளியாகவில்லை. அருளாலன்றி வெளியாகுமாறு இல்லை. ஆதலின், பிறவிச் சூழலில் வேகங்கொண்டுழலும் ஆன் மாக்களுக்கு, இறவாப் பேரின்ப வாழ்வு கிடைக்கவில்லை. ஆகையால், அவ்வேகங் கெடுத்துத் தடுத்தாட்கொள்ளவே நம் பதி அருள் ஒளி விளக்கை அவ்வாகம முடி மேலே நன்கு ஒளிவீசி விளங்க வைத்துள்ளார். அருள் ஒளி பெறாத மருள்மனத்

தார்க்கு, ஆகமம் எவ்வளவு உதவினாலும், புறவுலக வாழ்வில் உழல்வதைவிட்டு மேற்செல்ல முடிகின்றதில்லை. அப்படியே உலகை விட்டுச்சென்று பதிபதத்தில் ஐக்கியப்பட்டு மறைந்தாலும் வாழ்வு நிலவாது சூனியமுறத்தான் நேருகின்றதாம். ஆகமத்தின் முடிவு இதுவே. இதற்குமேல் திருவருளால் தான், அகம்வளர் அருட்ஜோதி மயமாகி அனகநிறை இன்ப வாழ்வு பெற முடிகின்றதாம். இந்த அருள்விளக்கு வெளிப்பட்டு பிறவி வேகத்தைத் தடைசெய்து மேனிலைக்கே ஏற்றாமல் ஏற்றிவைத்து விடுகின்றதாம். அம்மேனிலையிலிருந்து வாழ்வோர் எதனாலும் தாக்கப்படாது, இறப்பையே நீக்கி இந்த உடலையே சுத்த உடம்பாக ஆக்கிக்கொண்டு வாழ்வார்கள். இதனால் மேற்கொண்டு பிறப்பு ஏற்படுவதில்லை. பிறப்பு இறப்பின் வேகம் முற்றும் ஒழிக்கப்பட்டதாகும்.

(8)

1509. ஆரியர் வழுத்திய வருணிலை யனாதி
1510. காரியம் விளக்குமோர் காரண விளக்கே

(உ-வி) அருள்நிலையே, அனுக்கிரகம் என்றும், அது சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமாமென்றும் வேத வித்துகளாகிய ஆரியர் வழுத்துவர். வேதம், அறிவு நூலாகவும், உபதேசமுறையால், செவிவழி அறிவுறுத்தி ஓதிப் படித்தலால் எழுதா மறை எனவும் குறிக்கப்படும். வேதம் ஓதலின், வேதியர் என்றும், மறையவர் என்றும், அது ஒலி விளக்கம் கொண்ட அறிவுடையோர் என்ற பொருளைத்தர ஆரியர் என்றும் கூறப்படுகின்றனர். பிற்காலத்தில் பிரமத்தை அணவி நிற்போன்-பிராமணன் என்றும், அந்தமாகிய முடி பொருளைக் கொண்டுள்ளோன் அந்தணன் என்றும், முப்புரி நூலணிதலின் நூலோன் என்றும், ஐ என்னும் கடவுணிலை பெற்று விளங்குகின்றவர் என்ற பொருளில் ஐயர் என்றும் சிறந்த பொருள் படவுள்ள கருத்துடைய பண்புமொழிகளை எல்லாம் தமக்குரிய அடைமொழிகளாகப் புனைந்து கொண்டனர், அருளறியா மருணிலை மக்களிற் சிலர்.

ஆரியர் வழுத்திய அருணிலை, கடவுளர் ஐந்தொழிற்செயலே யாம். அந்தக் கடவுள் அனாதியாக உள்ளவர் ஆதலின் அவர்

தம் ஐந்தொழிற்செயலும் அனாதியாகவே இருந்துவருகின்றது. மேலும் இவ்வருள் நிலை ஐந்தொழில் அனாதிகாலம் தொட்டு நிகழ்த்தப்பட்டு வருவதால் அனாதி சற்காரியம் என்றும் கூறுகின்றனர். ஆனால் காரணமின்றிக் காரியம் உண்டாகாதன்றோ! இந்த உலகக் காரியப்பாடு எதற்குப் பண்டே தொட்டு நிகழ்ந்து வருகின்றது? காரணம் என்ன? என்ற வினாக்களுக்குச் சரியான விடை தெரியாதிருந்தது இதுகாறும். ஏதேதோ காரணம், கடவுள் இச்சை, பிரம்ம சங்கற்பம், திருவிளையாடல், லீலை, மாயை என்றெல்லாம் ஒருசிலர் கருதினார்கள். இயற்கைப் பகுத்தறிவுடையோரும், பொருள்முதல்வாத அறிவியலாரும் பிரபஞ்சச் செயற்பாட்டுக்கு காரணம் ஒன்றும் தேவையில்லை, எல்லாம் இயற்கையின் விளைவே என்று கூறி வந்தனர். காரணமற்றதைக் காரணமுள்ளதாகக் கருதி அதனை அறியக் காலமெல்லாம் வீணில் முயன்று வீண்போவது அறியாமையே என்று ஏளனமாகக் கூறிவந்தனர் இயற்கைவாதிகள் பலர்.

இன்று நம் அருள்ஒளி விளக்கின் பெருந்துணையால் உண்மை எல்லாம் உள்ளபடி அறிகின்றோம். அருள் ஐந்தொழில் அனாதி காலமாக நடைபெற்று வருவதற்குத் தக்க காரணம் இன்று அறியப்படுகின்றது. அருட்பெரும்பதியின் இந்த அருட் பேருண்மை எல்லாம் வெளிப்படவும், இவ்வுண்மையால் உலகில் அழியா இன்ப அருட்பெருவாழ்வு மனிதனில் வெளியாகி, மனிதனே அவ்வருட்பதி மயமாய் விளங்கவும் கூடியவனாகின்றான். ஆகவே இந்தப் பிரபஞ்சக் காரியப்பாடு, கடவுள் மய நித்தியானந்த வாழ்வு வெளிப்படும் காரணத்தால் நடத்தப்படுகின்றது என்ற தெளிவும் அனுபவமும் இந்த அருட்பெருஞ்ஜோதி நித்திய விளக்கால் விளங்குகின்றதாம்.

226. நிறை மதி

(1)

1511. தண்ணிய வமுதே தந்தென துளத்தே

1512. புண்ணியம் பலித்த பூரண மதியே

(உ-வி) நமது அருட்பெருஞ்ஜோதிபதியே இங்கு நிறை மதியாகக் கண்டுகொள்ளப்படுகின்றது. குளிர்ச்சியும் அமுத

சக்தியும், பூரண ஞானமும், நிறை ஒளியும், அருள் ஆற்றலும் கொண்டு என்றும் நிலவுவது இந்த அருட்ஜோதிமதி. இந்த மதி இப்போது வெளிப்பட்டு அருளக் காரணம் யாதெனில், இது வரை செய்து வந்த புண்ணியத்தின் பயனாய், இன்று பலித் துள்ளதாகும். உண்மையில் புண்ணியம் என்பது திருவருளே யாம். இத் திருவருள் ஒவ்வொரு ஆன்மாவிலும் வெளிப்பட வேண்டி அறிவனுபவம் ஓங்க பல பிறப்புகளில் நன்மையும் தீமையும் ஏற்பட்டு, நன்மை மேன்மேலும் விளைய, தீமை அடுத் தடுத்து ஒழிய முடிவில் அந்த நன்மையே புண்ணியப்பேறாக வந்து, அருள்ஞான நிறைவாகத் தோற்றித் திகழ்கின்றதாம்.

அகவானிலே அருண்மதி என்றும் நிறைவொளியோடு விளங்குகின்றதை அருட்புண்ணியத்தால் கண்டுகொள்கின்றோம் இன்று. இது நம்மையும் தன்மயமாக ஆக்கி வாழ்விக்க உள்ள தாம். இந் நித்திய நிறைமதியை உலகர் காணார். புற வான் மதியின் தோற்றத்தையும், விளக்கத்தையும், இயல்பையும் அறிந்தும், கண்டும் நேரிற் சென்றும் என்ன நன்மையைப் பெறு கின்றார்கள் இவர்கள்! அகவுண்மையை அறிவதற்கு உதவியாகத் திருவருளால் புறத்தே ஒவ்வொன்றையும் படைத்துள்ளார் நம் பதி. ஆதலின் புறப்பொருள்களை ஒருவாறு துணைக் கருவியாகக் கொண்டு சத் விசாரம் செய்து அருள்ஞானத்தால் அகவுண்மை யைக் கண்டடைவதுதான் நம் கடமையாகும். ஆகவே அருள் ஒழுக்கம் பூண்டு அகநிலையில், கடக நடுப்பூசம் குறிக்கும், நம் அருள் ஒளிமயமாகிப் பேரின்பம் உறுவோமாக.

(2)

1513. உய்தர வமுத முதவியென் னுளத்தே
1514. செய்தவம் பலித்த திருவளர் மதியே

(உ-வி) மதி மது (திங்கள், சோமம், கள், தேன் என்னும் சத்தொளி கொண்டு விளங்கும்) நிலவாகும். சந்திரிகை என்னும் ஒளியுடைய சந்திரனுமாம். இந்த வான்மதி யொளிக்கு மது சத்துத்தன்மையும், ஆற்றலும், அறிவு விளக்கமும் ஓரளவு இருப்பது உண்மையே. நினைப்பு, மறப்புள்ள மன அறிவு, வளர் வதும் தேய்வதுமான கலையுடைய வான்மதிக்கு ஒப்பாகும்.

இம்மதி யொளியாலும், ஆற்றலாலும் உலக உயிர்களிலும் பொருள்களிலும், அறிவு அனுபவமும், சத்துத்தன்மையும் ஏற்படு கின்றனவாம். இப் புறத் திங்களையும் இதன் தோற்ற ஆற்றல் களையும் விளைபயன்களையும் பெரிதென மதித்துத் துதித்துக் கொண்டு, மது போதையில் மயங்கிக் கிடந்துவிடக் கூடாது. இது சுட்ட வந்த அகம்வளர் அருள்மதியைக் கண்டும் கொண்டும் அருட் பேரின்பம் உற வேண்டுவதே ஆண்டவர் ஆணையாம்.

அருட்ஜோதிபதியே நம் அருள் நிறைமதியாக அறியப் படுகின்றது. இதுவே நமக்கு உய்தர அமுதம் அருள்வதாம். இது உளவானில், எப்பொழுதும் நிறை முழுமதியாக ஒளிசெய்து கொண்டிருப்பதோடு, எது எது எப்போதெப்போது தேவையோ அது அதை அப்போதப்போது வழங்குவித்து வாழ்விக்கின்ற தாகும். இது திருவளர் மதியாகும். பலவாகிய பிறவிகளின் ஆகூழால் (நல்வினைப்பயனால்) இந்த நிறை மதியை நம்முன் இன்று காண்கின்றோம். ஒவ்வொரு பிறப்பும் அந்த அருள்தான் வழங்கி வாழ்வித்தது. அந்த வாழ்வே தவமாக விளங்கி, அதன் பயனாகி விளைந்துள்ளது இன்றைய அனுபவநிலை. வள்ளல் அனுபவம் இதுவாக உள்ளது. இந்தத் திருவளர் மதியே, திருமதியாகியும், அருள் ஒளித் திருவாகியும் வெளிப்பட்டுக் கலந்துகொண்டு அருட்பேரின்பவாழ்வை நல்கியுள்ளதாம். அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரே இவ்வருள் ஒளித் திருவை இவருக்கு இரண்டரைக் கடிகையில் மணம் புரிவித்துள்ளார். இதனை விளக்க அகச் சான்றான அருட்பாவை யூன்றி ஆய்ந்தால் உண்மை விளங்கும்.

(3)

1515. பதியெலாந் தழைக்கப் பதம்பெறு மமுத
1516. நிதியெலா மளித்த நிறைதிரு மதியே

(உ-வி) பதி என்பது இடத்தையும், தலைவனையும் குறிக்கும். உலகுயிர்களையும் அண்ட பிண்டங்களையும் பொதுவாகச் சுட்டு கின்றதாகவும் கொள்ளப்படும். சிறப்பாக நம்மில் கடவுள் உண்மை விளைவு கொண்டு வெளிப்படுவதை, இங்கு குறித்துள் ளார் நம் பெருமான். கடவுள்தானே நமது உள்ளத்திலே நிறை திருமதியாகத் தோற்றி விளங்கி, அருள் அமுத சக்தியால்

அழியாவரமுழ் அருள்நிதியால், அருட்பெருஞ் செல்வத்தால் அருள் இன்ப வளவாழ்வும் வழங்கியுள்ளதாம்.

நமது தலைநடு வளர் ஒளியே நிறைமதியாக உள்ளதாம். பக்குவத்தால் பதியின் திருவடியாகத் திகழ்கின்றதை இன்று நாம் பெற்றுள்ள பரிபாகமாகிய பதத்தால் காண்கின்றோம். பகரவடிவ பீடம், பரம்பொருளின் திகழிடம், பக்குவமுற்றபோது பதம் ஆக விளங்குகின்றது. பகரம் இடத்தையும், தகரம் கடவுள் வடிவத்தையும் மகரம் இயல்பையும் குறிப்பதாக அறிந்து அடைதலே பதம் பெறுதலாம். அப்பதமே பதியாக என்றும் அவ் ஆன்மாவிற் பதிந்திருந்து கொண்டு, யாவையும் அருள்கின் றார். நம் பதி நம்மைத் தம்மோடு ஏற்று, அவரது அருட்பெருஞ் செயல் எல்லாம் நம் செயல் என்னும்படி புரிந்துகொண்டிருப் பதை அனுபவத்தால் ஏற்கின்றவர்களாயுள்ளோம்.

அருட்பெருஞ்ஜோதிபதியே, அருட்பிரகாசர்க்கு நிறை திரு மதியை உள்ளத்தே கண்டடையச் செய்து, சகல செல்வமும் வழங்கி, உலகமெல்லாம் அருள் ஒளி பெற்று தழைத்தோங்கும் படி அருள் பாலித்துள்ளதாம். அதனால் இவரும் அருளாணைப்படி உலகுயிர்கள் எல்லாம், முக்கியமாக மக்கள் சமுதாயம் முழுவதும் பரிபக்குவம் அடைந்து பதம் பெறும்படி உதவிக் கொண்டிருக் கின்றார். இவர் வழிப்படி உலகம் திருந்தி அருள் நெறியிற் பழகி யாவரும் ஒத்து வாழச் செய்வதாம்.


(4)

1517. பாலெனத் தண்கதிர் பரப்பியெஞ் ஞான்று
1518. மேல்வெளி விளங்க விளங்கிய மதியே

(உ-வி) மேல்வெளி என்பது, பரவெளி யென்றும், அருட் பெருவெளி யென்றும் கூறப்படும். இது புற ஆகாச வெளி, அண்டவெளி, பிண்டவெளி, இந்திரிய வெளி, கரண வெளி, ஜீவ வெளி, ஆகிய யாவுக்கும் மேலாய் விளங்கும் ஆன்ம வெளிக்கும் மேல் விளங்குகின்ற அருள் வெளியைக் குறிப்பதாக இவ்விடத் தில் கொள்ளப்படும். இவ் வருட்பெரு வெளியிலே எக்காலத்தும், அருட்ஜோதியாம் பால் போன்ற குளிர்ந்த சந்திரகலா அமுதக் கிரணங்களை திசை திசை தோறும் நிரப்பிக்கொண்டேயுள்ளதாம் நமது நிறைமதி.

சந்திரப்பிரகாசம் பால் போன்றொளிர்கின்றதாம். பால் நிலவு என்றும் குறிப்பிடுவர். நல்ல பசுவின்பால் பக்குவமாகக் காய்ச்சியபோது சற்று மஞ்சள் கலந்த வெள்மை நிறமாகத் தோற்றும். பூரண சந்திரப் பிரகாசத்திலும் இப்படிப் பொன்னொளியும், வெள்ளொளியும் கலந்தாற்போல் இருக்கின்றதாம். பசுவின் ஐம்பொருளாகிய பஞ்ச கவ்யத்தில் ஒவ்வொன்றும் ஓர் ஒரு பூத சுத்தியை இந்த மனித தேகத்தில் உண்டு பண்ணுவதாம். இவற்றில் பால் ஆகாச பூத சுத்தியை அதாவது தெளிவையும் அறிவு விளக்கத்தையும் வழங்குவதாம். இதுபோல் பால் நிலவும், அகம்வளர் பதியின் தன்மையையும் விளக்கத்தையும் வழங்குவதாகும். நிலவொளியில் கலந்துள்ள கால் பங்கு பொன்னொளியும், முக்கால் பங்கு வெள்ளொளியும் கடவுளின் பொன்னார் திருமேனி வடிவையும், அருட்சக்தி ஆற்றலையும் முறையே காட்டிக் கொடுக்கின்றனவாம். இப்படி விளங்கும் நித்த நிறை அருள்மதியை யாரே அறிவர்! யோகியர் தம் அகத்தே நிலா மண்டபத்தில் நிறைந்த அமுதுண்டு, அந்தரத்தின் மேல் உலவும் ஆற்றல் பெற்றவர்க்கு அருண்மதியுண்மை விளங்கினதில்லை. வான வெளியில் விமானத்திற் சென்று நிலாக் கோளத்தை அடைந்து சூழ் நிலையை அனுபவித்தவர்களும், வான வெளியில் தன் உடற்கனம் இழந்து மிதந்தவர்களும் நம் அருண் மதியின் உண்மையைச் சிறிதும் அறிகின்றார்களில்லை. நிலாக் கதிர்களாகிய சந்திரிகையை உட்கொண்டு வான வெளியிலே வாழ்ந்து வருவதான (நூல்களிற் புனைந்து கூறப்படுகின்ற) சகோதரப் புள்ளும் நித்த மதியை அறிந்ததில்லையாம்.

அருள் ஒழுக்கம் பூண்டு, ஜீவ தயவோடு நன்மார்க்கிகள் சத்விசாரத்தாலே இந்த நிறைமதியைத் தம் உள் கண்டு கலந்து அதுவாகி நின்று நிறை அருள் அனுபவமுண்டாக வாழ்கின்றபோது அச்சந்திரிகையின் அமுத ஜோதிமய அருட்பெருஞ்சக்தியால் அழியாத திரிதேக சித்தி பெற்று அருளற்புதம் செய்து கொண்டு இவ்வுலகில் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.



அருட்செல்வர் திருப்பணி செய்த சித்திவளாகத்
திருமாளிகையும், திருஅருட்பிரகாசர் வழிபட்டு
வந்த அருட்பெரும்ஜோதி ஆண்டவரும்



சித்திவளாகத் திருமாளிகையில் வள்ளலார் திருக்காப்பிட்டுக்
கொண்ட அறையின் கதவு

227. கருணை மழை

(1)

1519. உயங்கிய உள்ளமு முயிருந்த தழைத்திட
1520. வயங்கிய கருணை மழைபொழி மழையே

(உ-வி)கடவுளை மழைக்கு ஒப்பிடுதல் நம்மனோர் வழக்கமே. கடவுளின் கருணை உண்மை வெளிப்படற்கு, மெய்ஞ்ஞானம் விளை வதற்கு, எல்லாத் தேகாதி பிரபஞ்சம் முற்றும் தழைத்து ஓங் கிடற்குப் புறவுலகில் நல்ல மழை பொழியவேண்டி யிருக்கின்ற தாம். வான் சுரக்காவிடில் இவ்வுலகில் நீர் நிலைகள் வற ளுற்று பசும் புல்லாதி உண்பொருள்கள் அருகி யொழியும். அப் படியெல்லாம் அழிந்து ஒழிந்து போகாமல் காலத்தே மழை பொழி வித்து ஆருயிர்களைக் காத்து வளர்க்கின்ற பெருமைதான் கடவுட் கருணையின் மாண்பாகும். இதனால், காக்கும் கடவுளைக் கார்மேக வண்ணன் என்றும், நீலமேக சாமளன் என்றும் கூறியுள்ளனர் ஆன்றோர். இந்த உலகத்தில் மழை பொழிகின்றதால் தான், உயி ரினங்களும், அவற்றிற்குத் தேவையான உணவுப் பொருள்களும் விளைகின்றன. முக்கியமாக உயிரின வாழ்வுக்குக் காற்றும் நீரும், உணவுப் பண்டங்களும் தேவையாம். இவற்றில் நீர்தான் நடுநிலை யினின்று உதவுகின்றதாம்.

நம் நிலவுலகு, உயிர்தரு காற்றால் சூழப்பெற்றுள்ளது. அக் காற்றில் பலவிதத் தனிமங்கள் அடங்கியிருக்கின்றன. அத் தனி மங்களின் அளவைபேதச் சேர்க்கையால்தான், எத்தனையோ விதப் பொருள்கள், ஆவதும், மாறுவதும், வேறு ஆவதுமாக இருக்கின்றன. மழைகூடத்தான் காற்றிலுள்ள, உயிர் வளி (Oxygen) நீரகவளி (Hydrogen) ஆகிய இரண்டும் இணைந்து தண்ணீராவதாம். இப்படித்தான் தொடக்க காலத்தில் நில வுலகில் நீர்நிலை தோற்றிப் பரந்து கிடந்து பின்னர், ஞாயிற்றின் சூட்டால் நீராவியும் மேற் சென்று முகிலாகி வானத்து நீர் சத்தையும் கலந்து (அப்படிக்கலக்கும்போது ஏற்படும் இரசாயன மாற்றத்தால்) இடிமின்னலை யுண்டாக்கிக்கொண்டு மழையாகப் பார் எங்கும் கால காலத்தில் முறைப்படி மழை பொழிகின்ற தாம். ஆகவே, காற்று முதற் பொருளாய் இருக்க, மழையும், மழையால் ஊண் பொருளும் விளைந்து உயிரினங்கள் வாழ்வதற்கு

துணையாயிருக்கின்றன. காற்றுமண்டலம் சூழாத நிலவுக்கோளம் போன்ற அண்டங்களில் மழைக்கு வழியில்லை. ஆகையால் உயிர்கள் வாழவும் அங்கு வகையில்லை. அப்படிப்பட்ட கோட்களிலோ, உப கோட்களிலோ, உயிரினங்கள் தோன்றி விருத்தியாக முடியாது. மனிதவாழ்வுக்கு உபயோகமில்லாத இடங்களில் கடவுட்கருணையின் அனுபவம் சிறிதும் வெளியாகாதென்று சொல்லவேண்டியதே யில்லை.

கடவுட்கருணைக்கோர் அடையாளமாக உள்ளது, இந்த வான்பெயல் ஆகிய மழையாம். இதனாலே திருக்குறளில், கடவுள் வாழ்த்துக்கு அடுத்து, வான் சிறப்பு வைக்கப்பட்டுள்ளதாகும். வான் பொழியும்போது மெய்ஞ்ஞானியர் கடவுட் கருணையே பொழிவதாகக் காண்கின்றார்கள். பயிர் தழைக்கப் புற மழை பொழிவதாம். ''உயங்கிய (வாடி வருந்துகின்ற) உள்ளமும் உயிரும் தழைத்து விளங்கிட, நல்ல கருணை மழையைப் பொழிவிப்பாயாக, நீயே பொழிவாயாக'' என்று, வேண்டுகின்றார் அடிகளார். ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்,'' என்றது ஏன்? பயிர்வாட்டம் மக்களின் உயிர் வாட்டத்திற்குக் காரணமாகும் என்ற மனிதாபிமானக் கருணையால் இரக்கம் காட்டுவதே இது. மற்றபடி தாவரத்தின் பேரில் வைத்த பேரிரக்கத்தால் அல்லவாம். மக்களிடத்தில்தான் கடவுள்தயவு நேரடியாக அனுபவப்பட இருக்கின்றது. தாவரத்திடத்து அத்தயவு, மேற்பிறவிக்கு ஏறத் துணை புரிகின்றதாகும். ஆகையால், மனிதன் தயவோடு மனிதவர்க்கத்தைக் காக்கத் தாவரத்தைப் பயன்படுத்துவது முறையாக உள்ளதாம். தயவுடையவன் தாவரமல்லாத உயிர்களை வதைத்துத் தனக்கு உணவாக ஆக்கிக்கொள்ளக் கூடாது. அப்படிச் செய்வதால் கடவுட் கருணை பெற முடியாது போகும். கொலை புலையற்ற சுத்த வாழ்வு தோன்றினால், உலகெங்கும் காலத்தே நல்ல மழை பெய்யும். புறமும் அகமும் தழைத்து ஓங்கும். ஆகவே, ஜீவர்களிடத்தே நாம் இயன்ற அளவு கருணை பொழிவோம். அப்போது கடவுள் தன் கருணையை நம் மீது பொழிந்து பேரின்பில் தழைத்து ஓங்கச் செய்வார்.

(2)

1521. என்னையும் பணிகொண் டென்னுள்ளே நிரம்பி
1522. மன்னிய கருணை மழைபொழி மழையே

(உ-வி) கடவுள் எல்லாமானவர் என்றால், மழையும் ஆனவர்தானே! ஆம். புறமழையும் அவரே; அகத்திலங்கும் கருணைமழையும் அவரேயாவார். புறமழை, அளவாகக் காலத்தே பெய்வதால்தான் நன்மையாம்; அல்லாமல், அதிவிருஷ்டி (அதிக மான மழை)யும், அனாவிருஷ்டி (மழையே இன்மை)யும், அகால மழையும் தீமையையே விளைவிக்கும். ஆனால் நம் பதியாகிய மழை, (மனிதனுக்கும் மழை என்றே பெயர் வைக்கின்றனர் சிலர்) கருணையின் வெளியீடே. இம் மழை நம் உள்ளே எப்போதும் நிரம்ப இருந்துகோண்டே (மன்னி) இருப்பதாம். இது எவ் வளவு பெய்தாலும் தீமையொன்றும் உண்டாகாது நன்மையே தழைத்திடும்.

அருட்பெருஞ்ஜோதி பதியே தனிப்பெருங்கருணை மழையாக, வள்ளல் உள்ளத்தில் நிலைத்து விட்டுள்ளதாம். அப்படி நில விடும், அம்மழை, இவரை ஆட் கொண்டு நிரம்பி நின்று வாழ்விக் கின்றது உண்மையாகும். இக்கருத்தினையே,

"என்னையும் பணிகொண்டு என்னுளே நிரம்ப
மன்னிய கருணை மழைபொழி மழையே."

என்கின்றார்.

(3)

1523. உளங்கொளு மெனக்கே யுவகைமேற் பொங்கி
1524. வளங்கொளக் கருணை மழைபொழி மழையே

(உ-வி) கடவுட் கருணையே விண்மாரியாகப் பொழியக் காண்கின்றனர் அருளாளர்கள். அப்படிக் காண்கின்றவர்கள் அப்பதியின் பெருங்கருணையை நினைந்து நினைந்து, உளமுருகித் துதித்துத் துதித்துக் கண்மாரி பொழிந்து நிற்கின்றார்கள் கடவுட் பெருங்கருணையையும், அது நமக்கே முழுமையாக வழங்கி வாழ்விக்க, அப்படிக் கருணை பாலிக்கின்றதையும், எண்ணி எண்ணிப் பார்க்கப் பார்க்கக் கண்ணீர் வருதல் கூடும். எண் ணமும் வேறு எதையும் இச்சியாது. இந்தக் கருணைக் கண்ணீர் தான் வாழ்வளிப்பது. மற்றபடி, துன்பக்கண்ணீர், பொய்யான முதலைக் கண்ணீர், ஏய்ப்புக் கண்ணீர், வீம்புக் கண்ணீர், பொரு

ளுக்காகக் கண்ணீர், விளையாட்டுக் கண்ணீர் முதலியவைகளால் எல்லாம் பெருமை உண்டாகாது.

அக வானிலிருந்து அருட்பெருஞ்ஜோதிபதியே கருணைமழை பொழிந்து கொண்டுள்ளார். அம்மழை நீர், உயிரில், உடலில், உளத்தில் பட்டாலே இன்பானுபவத்தினைத் தருவதாம். இவர் அம் மழையை அருள் அனுபவத்தால் உளம் கொண்டுள்ளார். அப்படி உளம் கொண்டத்தாலே, அந்த உள்ளத்திலே, உவகை நிரம்பி, வழிகின்றதாம். அப்படி நிரம்பி வழிகின்ற அக் கருணை மழையின் செயலால், உணர்விலே, உயிரிலே, உட்கருவி கரணங்களிலே, உடல் அவயவங்களிலே, உடம்பு முழுவதிலேயும் சொல்லற்கரிய இன்பானுபவம் விளங்குகின்றதாம். இதனால் அருளின்ப வள வாழ்வு இவருக்குக் கிடைக்கின்றதாம். மழையினால் நிலத்தில் பசுமை வளத்தோடு தண்மையும் எழிலும் தோன்றுகின்றன. கருணை மழையினால், உயிரும் உடலும் வளம் கொழிக்க, முன் ஏற்பட்டிருந்த, சோர்வும், தளர்வும், பிணியும், மூப்பும் பிறவாகிய குறைகள் எல்லாமும் நீங்கித் திருவருளாலே, அருட்பேரின்பத்தோடு, அருட்சித்துச்செயல் புரிந்து கொண்டு எக்காலத்தும் அழியாதே விளங்கும் திரிதேகப்பெருஞ் சித்தி வாழ்வும் கிடைக்கப் பெறுகின்றதாம்.

(4)

1525. நலந்தர வுடலுயிர் நல்லறி வெனக்கே
1526. மலர்ந்திடக் கருணை மழைபொழி மழையே

(உ-வி) மழைநீர், வளந்தரு சத்து மிக்கதாக இயற்கையிற்றானே கிடைக்கப் பெறுவதால், சேய்க்குத் தாய்ப்பால்போல், செய்க்கு (நிலத்திற்கு)ச் செழுமை நலம் எல்லாம் தருகின்றதாம். வான்பெயலால் தாவரவுயிர்கள் தழைத்துப் பூத்துக் குலுங்குதல் போல், கருணைமுகில் தான் சுரத்தலால் நமது உயிர்ச்சக்தியோங்கிடவும், உடல் நலம் பெருகிடவும், அறிவு விளக்கம் மிகுந்திடவும் காண்கின்றோம். இக் கருணை மழை வண்ணனாகிய அருட்ஜோதிபதியை வழிபடுவதால், அகப்புற நலமெலாம் எய்தி ஆனந்த வாழ்வில் நிலவலாம் என்பது சுத்த சன்மார்க்க அனுபவம்.

உலகப் பொது நலம் கருதியும், மழைக் கடவுளாகிய வருணனை வேண்டியும், மேகவாகனனாகிய இந்திரனைப் போற்றியும், அருச்சனைகள் புரிவதும், வேள்விகள் நடத்துவதும், பெரு நல வாழ்வை நல்கிவிடாது என்பது உண்மையாம். ஆகையால் ஜீவதயா வொழுக்கம் பூண்டு, தயாவாழ்வு மேற்கொண்டு சத் விசாரம் செய்தால் கருணைமிகு கடவுள் உண்மை எல்லாம் கண்டு கொள்ளலாம். அக்கடவுள் உண்மை நம் உள்ளத்தளியில் கருணைமழையின் அம்சமாய், எப்போதும் பொழியாதே பொழிந்து கொண்டுள்ளதாய், அருள்விளைவு உண்டாகாதவரை அறியப் படாததாய் இருந்துகொண்டு, அனகமாய் தன் நியதி முறையைச் செயல்படுத்திக்கொண்டும் இருப்பதாய் அறிகின்றோம். அருள் விசாரத்தாற் கண்டு, அதனோடு ஒன்றிநின்று, அருளொடு மலர் கின்றோம். இந்த அருள்மலர்ச்சியால், உடலிலும், உயிரிலும், அறிவிலும் நலம் ஏற்படுகின்றது. இவை மூன்றுமே, தூல, சூக்கும, காரண, வடிவங்களாய்க் கொள்ளப்படுவது முன்னெறி முறையாம். இப்போது ஆன்மாவில் விளைந்துள்ள அருள் அல்லது கருணையே மலர்ந்து விரிந்து சூக்குமமாகிய உயிரிலும், தூலமாகிய உடலிலும் விளங்குகின்றதாம். இது கருணைமழையின் செயலாகும்.

(5)

1527. தூய்மையா லெனது துரிசெலா நீக்கிநல்
1528. வாய்மையாற் கருணை மழைபொழி மழையே

(உ-வி) புறத்தூய்மை நீரான் அமைவது; அகத் தூய்மை சுத்த அன்பெனும் நீர்மையான் அமைவதாம். அவ் அன்பொடு கூடியது, இனிமையும், வாய்மையும், தயவும் நிரம்பிய சத்திய வாசகமாகும். இத்தன்மையற்ற வாய்மையும் பொய்மையேயாம். ஒருவன் விசாரத்தால் அகம்ஒன்றிய நிலையில் மெய்யுருவாய், சத்திய வடிவாய், விளங்குகின்றான். இப்படி இருக்கும் ஒருவன், தான் என்ற அகங்காரபோதம் ஒழிந்தவனாய் இருந்தும்,தானாக ஏதும், தன்செயலாய்க் காட்டிக்கொள்ளாது, எல்லாம் தன் அக முடையானின் கருத்துப்படி நடக்கின்றதாய்க் கண்டு மகிழ்ந்து நிற்கின்றான். இந்த நிலையே உண்மைத் தலைவியின் உயர்நிலை யாகும். இவளே நிறை (கற்பு)வுடையவள். வேறு எந்தத்

தெய்வத்தையும் தொழாள்; தன் கொழுநனையே தொழுது நிற்பாள். அப்படிப்பட்டவள் சொல்லுக்கு எச்சக்தியும், இயற்கையும் பணிந்து ஏவல்புரியும் என்பது உண்மையாம். அவள் தயவோடு, கற்பின் நிறைவோடு ''மழையே நீ பொழிவாய்'' என்று கூறினால், மழையும் பொழியும். ''தீயே நீ சுடாதே குளிர்ந்திருப்பாய்'', என்றால் அப்படியே நெருப்பும் அடங்கி நிற்கும். எந்த மனிதனும் இந்த உண்மையை யுணர்ந்து கொண்டு அகமிருந்து தயவோடு உண்மை வாசகம் புகன்றால் அது திருவருளால் நிறைவேற்றப்படுவது சத்தியம். மழையை வேண்டுவோர் இப்படிப்பட்ட சத்தியம் மொழிந்தால், ஜீவ தயவுச்செயல் புரிந்தால் போதும், மழை வேண்டிய அளவு பொழியும். மற்றபடி அவி சொரிந்து ஆயிரம் வேட்டலினும் தயவுச் செயலே வேண்டியதை வழங்குவிக்கும் என்பது உண்மையாகும்.

தூய்மை என்பது பரிசுத்தமான, நிர்மலமான வெண்மையான கடவுள் தன்மையே ஆம். அக்கடவுள்தன்மை தயவு அல்லது கருணையாம். இக்கருணையே எல்லாவிதமான குற்றம் குறைகளையும், துரிசுகளையும் அறக்களைந்து விடுவதாம். இப்படித் தூய்மையான போதுதான் அகத்தே கருணைவடிவமாக, சத்திய சொரூபமாக விளங்க நேருகின்றதாம். அக்கடவுட்கருணையே இங்கு கருணை மழையாகக் கொண்டு போற்றிக்கொள்ளப்படுகின்றது. வெற்றுமழை நீரால் புற அழுக்கு நீங்குகின்றது, வள வாழ்வுக்கு உதவி கிடைக்கின்றது. கருணை மழை நீராலோ அக அழுக்கு ஒழிக்கப்படுகின்றது, அருளின்ப வாழ்வு தழைக்கின்றதாம். நம் தனிப்பெருங்கருணை மழைதான் உலகுக்குஎல்லாம் நன்மையும் வழங்கி வாழ்விப்பதாம். ஆகவே நம், கருணை மாமழை போற்றுவோம் தயவு மாமழை போற்றுவோம் ஓம் அருள் நலம் தருதலான்.

228. செஞ்சுடர்

(1)

1529. வெம்மல விரவது விடிதருணந்தனிற்
1530. செம்மையி லுதித்துளந் திகழ்ந்தசெஞ் சுடரே

(உ-வி) இரவில் நல்ல மழை பொழிந்துவிட்டு, வானம் சுத்தமாகி விட்டுள்ளது. நிலம் குளிர்ந்து மெல்லிய பூங்காற்று வீசுகின்றது, பிராதகால அமுதவேளை. இருள் பிரிந்து அருணோதயம் வெளியாகும் நேரம், விடி தருணம். இப்படிப்பட்ட ஒரு புறச் சூழ்நிலைக் காட்சி. இக் காட்சிக்கு ஒப்பவே, அருட்ஜோதி உதய மாட்சியைச் சொற்சித்திரமாக வழங்கும் அடிகள் இவையாம்.

ஆன்மாவாகிய சிற்றணு, எப்பொழுதும் பெருஞ்ஜோதி சக்தியால் சூழப்பட்டே யிருக்கின்றது. அந்தச் சூழ்ஒளி சாதாரணமான ஒளியாகத் தோன்றாது, வேறு வேறு பொருள்களாக, வேறு வேறு ஆற்றல்களாக, வேறு வேறு தோற்றங்களாக, வேறு வேறு அனுபவங்களாக இருந்துகொண்டிருப்பதால், உண்மை மறைபட்டுக் கிடக்கின்றதாம். அம்மறைப்பெல்லாம் ஜோதியின் அம்சமே, ஜோதியின் இயல்பு சுடுந்தன்மையாம். இச் சுடும் தன்மையே வெம்மை எனப்படுவது. ஆன்மாவானது இந்த வெம்மைசெய் மலம் என்னும் கற்பூரத்தால் சூழ்ந்திடப் பெற்று மறைந்து கிடக்கின்றதாம். ஆன்ம பரிபாகமுறாத அபக்குவ நிலையில் சூழ்மறைப்பு அசுத்தப்பொருளாய் இருக்கின்றதாம். இதனால் இது வெம்மலச் சூழல், இருள் இரவாகக் குறிக்கப்படுவதாம். இம் மாயச் சூழலில் பரிபாகமுறலே நல்ல மழையால் இருளில் குளிர்ந்து பண்பட்டதாகும். பக்குவமடைந்த வேளையே விடிதருணம். அப்போது திருவருளின் செயல், திருவடியின் தோற்றம், உளத்தெளிவு எல்லாம் பூங்காற்றாகவும், அமுத வேளையாகவும் அருணோதய காலமாகவும் வெளியாகின்றனவாம். இக்குறிப்பே, ''வெம்மல இரவு அது விடி தருணம் தனில் செம்மையில் உதித்து'' என்று கூறப்பட்டுள்ளதாம். அப்படித்தோற்றியுள்ள செஞ்சுடர் (செவ்வொளியுள்ள உதயசூரியன்) உள்ள அம்பரத்தில், அக ஆகாசத்தில் திகழ்கின்றதாகும்.

அக அனுபவம் விளங்கும் அருள் வெளியிலே இந்த அருட் செஞ்சுடர் திகழ்கின்றதாம். இது எப்போதும் அப்படியே ஒரு படித்தாய் அருளொடு திகழ்ந்து கொண்டே இருக்கின்றதாம். இக்கடவுட் சுடர், மறைவதுமில்லை, மறுபடி உதிப்பதுமில்லை, நித்தியமாய் நின்று நிலவுவதாம். இவ்வக அனுபவம் உண்டாகின்ற தருணம் சூழ்நிலை முற்றும் ஒளியாக விளங்குகின்றது. அந்தக் கடவுட்சுடரேதான் இந்த ஆன்ம அணு என்றும், அதனைச்

சூழ்ந்திருக்கும் ஒளிநிலையே, அசுத்தமலமென இருந்தது மாறிச் சுத்தக் கற்பூர ஜோதிப் பொருளாய் விளங்கலாகின்றதாம். ஆன் மாவுக்கு ஆணவமலம் இயல்பெனத் தோற்றியதுபோய், அது (ஆன்மா) கடவுட் சிற்றுருவே, அகண்ட கற்பூரச் சூழலில் விளங் குவதாக அனுபவப்படுவதாம். இதுவே, வெண்ணீறு ஆகிய சுடலைப்பொடி பூசிய செம்பொருட்சிவமாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த அருள் அனுபவத்தைப் பூரணமாகப் பெற்றுக் கொண்டவர் நம் வள்ளற் பெருமான், ஆதலின் அவர் உடம்பு முழுதும் கற்பூர மணம் நித்தியமாய் வீசுவதாயுள்ளதாம். இக் கருத்தைத் தெளிவு செய்கின்ற அனுபவமாலைப் பாசுரம் ஒன்றைக் கீழே குறிப்பாம்:

"கற்பூர மணக்கின்ற தென்னுடம்பு முழுதும்
கணவர்திரு மேனியிலே கலந்தமண மதுதான்
இற்பூத மணம்போலே மறைவதன்று கண்டாய்
இயற்கைமணம் துரியநிறை இறைவடிவத் துளதே
பொற்பூவும் நறுமணமுங் கண்டறியா ருலகர்
புண்ணியனார் தம்வடிவில் நண்ணியவாறதுவே
நற்பூதி அணிந்ததிரு வடிவுமுற்றும் தோழி
நான்கண்டேன் நான்புணர்ந்தேன் நானதுவானேனே."

என்றதால், கடவுட்சுடரின் இயற்கைமணம் கற்பூரமணமே எனவும், அது அருளனுபவத்தால் மட்டும் வெளியாகுமேயல் லாது, இருளுலகில், மருள் நிலையில் மலச் சூழலாய்த்தான் தோற்றி விளங்கிக் கொண்டிருப்பதாம். ஆகவே பக்குவமுறும் காலையில் மனிதன் அகத்தே, இருள் கடிந்துள்ளத்து எழுகின்ற ஞாயிறு போன்று இந்தச் செஞ்சுடர் விளங்குகின்றதாம். இந்தச் செஞ்சுடரை நித்தியமாய் எரிந்து கொண்டிருக்கும் புகை யாத கற்பூரச் சுடர் தீபத்திற்கும் ஒப்பிடுவர்.

(2)

1531. திரையெலாந் தவிர்த்துச் செவ்வியுற் றாங்கே
1532. வரையெலாம் விளங்க வயங்குசெஞ் சுடரே

(உ-வி) உலகம் உவப்ப உதித்தொளிர் ஞாயிறு, முதலில் கருந்திரை போன்ற இருள்நிலையைச் சற்றே விலக்க அடுத் தடுத்து. நீலமும், பச்சையும், செம்மையும் பொன்மையுமான

வண்ண மறைப்புகளும் மேல் சற்று வெண் மறைப்பும் விலக்கி, மேலே ஒரு கணத்தில் கலப்பு வண்ணத்திரை நிலை எல்லாம் விலகிடக் கீழ்வான் செங்கதிர் கால்கொண்டு எழுந்து விளங்கு கின்றதாம். உதயகிரிமீது எழுந்து விளங்கும்போது, வெள் ளிடைமலைக் காட்சியாய் விளங்குகின்றது ஞாயிறு. இவை எல் லாம்புற உலக அனுபவம்.

அகப்பக்குவத்தே மலஇருண் மறைப்புகள் ஏழ் வண்ணத் திரைகளின் நீக்கமாய் விளங்கிட உளத்தே அருட்செஞ்சுடர் காட்சியளித்து நிற்பதாம். செவ்வி என்றால் பக்குவமாம். அருள் ஒழுக்கமும், விசாரமும் நிரம்பிய பக்குவ காலத்தே இந்தச் செஞ்சுடர் அகவானில் துலங்குகின்றது. அது எப்பொழுதும் அங்கு செங்கதிர் பரப்பித் திகழ்ந்துகொண்டேயிருந்தும் ஏன் காணப்பட்டதில்லை என்றால், நாம் மண்ணுலகதிலே, மண்ணுடற் பற்றால் இருட்பக்கத்தில் இருந்துவந்ததே காரணம்; மறு பக்கம் ஒளி செய்து நிற்கும் மார்த்தாண்டஜோதியை, இருட்பக் கத்திலிருந்து காண முடியாதது இயல்புதானே! நாம் ஒளிமுன் உற்றபோதுதான் இருள் நீங்கி ஜோதிக்காட்சி பெறுகின்றோம். மண்ணுடம்பின் பற்று நீங்கி, அகமுகமாகின்றபோது இந்த அருட்சுடர் தெரியவருகின்றதும் இயல்பே.

வான் ஜோதிக் காட்சியால் குலவரையாகிய மலைகள் நன்கு விளங்குகின்றனவாம். இதுபோல் அருட்ஜோதிக் காட்சியால், அருணாசலக்காட்சியால், ஆறாதார வரைகளிலே, குன்றுதோறாடும் குமரன் விளக்கமும் ஆற்றலும், அற்புதச்சித்தி அனுபவங்களும் விளங்குவனவாம்.

''ஆதார வெற்பில் அபிடேகம்—போதத்
திருளில் எழுபானு என்ன ஒழிவில்
கருணைபொழி வானெடுத்த கை. —ஒழிவிலொடுக்கம்

என்றதால், தற்போத ஒழிவில் விளங்கும் அகஜோதியின் சக்தி ஆதாரமலை மீது அந்த ஜோதிப் பரவலைக் காட்டி அதன்கண் பெறப்படும் அனுபவசித்திகளையும் கூட்டிவைக்கின்றதாம். அருட் செஞ்சுடரின் உண்மையைக் கண்டு அதுவாகி நின்று உலகில் வயங்குதல் வேண்டும்.

(3)

1533. அலகிலாத் தலைவர்கள் அரசுசெய் தத்துவ
1534. உலகெலாம் விளங்க வோங்குசெஞ் சுடரே

(உ-வி) உலகெலாம் என்பதற்குப் புறப் பிரபஞ்சத்தின் கண் சூழ்ந்து சுழன்று கொண்டிருக்கும், தூலகோளங்களும், அவற்றின் சூக்குமநிலைகளும், பிண் டானுபவத்தில் காணப்படும் தத்துவ உலகங்களும் கோடிகோடியாக உள்ளனவெல்லாம் என்று கொள்ளப்படும். இவைகளிலே சிறந்த தத்துவ உலகங் கள் எண்ணற்றவை யுளவாம். இவற்றில்தான் எண்ணடங்காத் தலைவர்கள் இருந்துகொண்டு ஆட்சிபுரிந்து வருகின்றனராம். இந்தப் பெருந்தலைவர்களையும், இவர்கள் புரிகின்ற செயல் களையும், அச்செயல்கள் காரியப்படுகின்ற எல்லா உலகங்களையும், எக்காலத்தும் தழைத்தோங்கி விளங்கச் செய்துகொண்டுள்ளது எதுவோ அதுவே நமது அருட்செஞ்சுடர்.

அருட்பெருஞ்ஜோதியே, இந்தச் செஞ்சுடர் ஆம். இது நம் உள் அம்பரத்தே எப்போதும் ஓங்கி நின்று விளங்குகின்றது. இது அகில உலகத்தும் அருந்தவப்பயனால் ஆக்கலாதிசெய் தலை வர்கள் பலப்பலரை நியமித்து அவ்வுலகங்களையும் அவற்றின் உயிர்ப்பொருள் முதலிய யாவையும் விளங்கச்செய்து கொண் டுள்ளதாம். இப்படியுள்ள செஞ்சுடரைத்தான், நம் பெருமான் உளத்தே கண்டு அடைந்துள்ளார். இதனால் இவர் எவ்வுல கத்து எத்தேவரையும், எத்தலைவர்களையும் தம் அகம் வளர் சுடரின் சிற்றணுப் பிரமாணமாகவே கண்டு, அவர்களைப் பெரி யோர் எனச் சிறிதும் மதித்துக்கொள்ளாமலும், சிறியர் என எள்ளித்தள்ளாமலும், எல்லோரும் பெரும் பதியின் பேரருளுக்கே உரியரெனக் கண்டு உள நெகிழ் தயவால், யாவருக்கும் அக மிருக்கும் கடவுள்தயவு அனகநிறைவாழ்வு சேர்க்கவே யாவரை யும் பக்குவம் செய்து கொண்டுள்ளார். ஆகவே, அனகமொளிர் செஞ்சுடரே இன்று திருவருட்பிரகாசராய் அனகநிறைவு கொண்டு அருட்பெருஞ்செயலோடு விளங்குகின்றதாம்.

(4)

1535. முன்னுறு மலவிருள் முழுவது நீக்கியே
1536. என்னுள வரைமேல் எழுந்தசெஞ் சுடரே

(உ-வி) பக்குவத்திற்குமுன் அபக்குவமும் கனிக்குமுன் காயும், அமுதத்திற்குமுன் விஷமும், ஆனந்தானுபவத்திற்குமுன் அவத்தானுபவமும், அருள்தோன்று முன் இருள்மருள் இருப்பும், ஜோதி எழுமுன் காரிருளும் ஏற்பட்டு நீங்குகின்றனவாம். இவை களைப் போன்றே இச் செஞ்சுடர் உதயமாகுமுன் மல இருள் சூழ்ந்துள்ளதாம். இதுவே ஈண்டு முன்உறு மல இருள் என்று வைக்கப்பட்டுள்ளது. இவ்விருள் முன்பு தொட்டே இருந்து வரு வதாகத் தோற்றுகின்றது. இந்தப் பிரபஞ்சக் காரியப்பாட்டில் எப்போது ஆன்மாக்கள் வெளியாயினவோ, அப்போதுமுதலே அவைகள் உண்மையில் அருட்பெருஞ்ஜோதிச் சூழலில் இருந்தும், அந்நிலையைச் சற்றும் அறிந்து கொள்ள முடியாமலே கோடி கோடி யுகங்களாகக் கடந்து வந்துள்ளனவாம். ஒரு குறிப்பிட்ட ஆன் மாவைச் சூழ்ந்திருக்கும் ஒளிநிலை, மனித வடிவாகி, அவ்வடிவிலே ஆன்மாவை யுணரும் மெய்யறிவாகி விளங்காதவரை, அவ்வான்மா தன்னைத்தான் அறிந்துகொள்ள முடியாதிருந்துள்ளதாம். இப் பொழுது அச் சூழ்ஒளியே அருள்ஞானமாய் இருப்பதால், இந்த ஞானத்தாலே தானாகிய அந்த ஆன்மாவும், சூழவுள்ள பேரொளி யும் அருட்பெருஞ்ஜோதியே என அறிந்து கொள்ளப்பட்டுள்ள தாம். ஆகவே இதுகாறும் இருந்துவந்த அறியாமையே மல இருள் எனக் கருதப்படுகின்றது.

தன் உள்ளமாகிய மலையின்மேல் விளங்கும் அருட்செஞ்சுடர், முன்பிருந்த மல இருளை நீக்கி விட்டிருக்கின்றதாக அறியப்படு கின்றதாகவும், இப்பொழுது தோன்றியுள்ள அச் சுடர், புதிதாக உதித்ததல்ல. எப்பொழுதும் அவ்விடத்திலேயே உதய கிரிமேல் விளங்கும் நித்திய ஜோதியாக உள்ள தெனவும் அறியப்படு கின்றதாம். இனி இச் செஞ்சுடர் என்றும் மறையாது, ஒளியாது, நிலையாக உள் விளங்கிக்கொண்டே யிருப்பதோடு, அதனைக் கண்டு அருளால் அதுவே தானாகி விட்டிருக்கும் நம் அருட்பிர காசர்க்கும் அழியா இன்ப வாழ்வு சித்தித்துள்ளதாம்.

(5)

1537. ஆதியு நடுவுட னந்தமுங் கடந்த
1538. ஜோதியா யென்னுளஞ் சூழ்ந்தமெய்ச் சுடரே

(உ-வி) உலகில் விளங்கும் ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு உயிரும், ஆற்றலும், தோற்றமும் பிறவும், ஒவ்வொரு காலத்தில் (எப்போதோ) வெளியாகியுள்ளன என்பது உண்மையே. அப்படி வெளிப்பட்டிலங்கும் எதுவும் மாற்றமும் சிதைவும் அடைந்து எப்பொழுதாவது மறைந்து போவது நிச்சயம். இந்த, வெளியான தோற்றநிலை ஆதி எனவும், மாறி விளங்கிக் கொண்டிருக்கும் நிலை நடு எனவும் அழிந்து மறையும் நிலை அந்தம் எனவும் குறிக்கப்படும். ஆகவே உலகில் தோற்றிடும் எதற்கும், ஆதியும், நடுவும் அந்தமும் உண்டென்ப. இவற்றிற்கெல்லாம் மாறாக அதீதத்தில் என்றென்றும் தோற்றக் கேடில்லாது துலங்கிக் கொண்டேயிருக்கின்றது எதுவெனில் அது நம் அருட்செஞ்சுடரேயாம். இந்த நித்திய சத்தாம் ஜோதியே மெய்ச்சுடராகக் கண்டு கொள்ளப் படுகின்றது இத் தருணம்.

இந்த மெய்ச் சுடரைப் புறவுலகம் காண்கின்றதில்லை. இவ்வுலகில்தான் காணப்படும் எதுவும் நிலைக்காது அழிந்துபோவது நியதியாக உள்ளதால், புறத்தே தோற்றாதே நிந்தியமாயிருக்கும் ஒன்றுக்கு அழிவே யில்லையன்றோ! யாவற்றிற்கும் முழுமுதற் காரணமாகிய பரம்பொருள், ஆதியும் அந்தமும் இல்லாது அனாதியாக உள்ளது எனப்படும். இந்த செஞ்சுடர் அல்லது மெய்ச் சுடர் என்பது அந்த நித்திய பரம்பொருளே என அறியவேண்டும். இப்படித் தோற்றக் கேடில்லாத மெய்ச்சுடர் என்றும் விளங்கிக்கொண்டிருத்தல் உண்மையாயிருக்க, இதுகாறும் இதனைக் காணும் மெய்ஞ்ஞானக்கண் பெறாதிருந்ததால், மனிதன் கண்டு கொள்ளாதிருந்தான். இப்போதுதான் அவ்வருட்கண் திறக்கப் பெற்றுள்ளதால், அதுகொண்டு இந்தச் செஞ்சுடரைக் காண்கின்றான். கண்டு போற்றிப் போற்றி அருளாலே அத்தோடு ஒன்றி, அதுவாகி நின்று, அழியாது வாழும் ஆனந்தநிலையும் அடைகின்றான்.

229. அருட் கனல்

(1)

1539. உள்ளொளி யோங்கிட வுயிரொளி விளங்கிட

1540. வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே

(உ-வி) அருட்பெருஞ்ஜோதியைத் தான் அருட்கனல் என்று ஈண்டு, கண்டு துதிக்கப்பெறுகின்றது. கனல்-நெருப்பு அல்லது நெருப்பின் சூடு. நெருப்புக்குச் சுடுந்தன்மை இயல் பாம். உலகம் அறிந்த தீ, தன் சுடுந்தன்மையாலே நன்மையும் செய்கின்றது, தீமையும் விளைவிக்கின்றது. வேண்டாதனவற்றை எல்லாம் எரித்து நீறாக்கிவிடுவதும், மற்று புதியன தோற்ற உதவுவதும் கனலால் உண்டாம் நன்மைகளாம். இக்கனலால் துன்பம் விளைவது அறிவோம். இதற்கெல்லாம் மாறானது உல கறியா அருட்கனல்.

நெருப்பின் சூடு,. பொருளுக்குத் தகுந்தாற்போலும், தூரத் திற்குத் தகுந்தாற்போலும் கூடியும், குறைந்தும். போகும். தீயின் சூட்டால் ஒன்றைத் தாக்கும் போது பற்றி எரிந்து கனலைப் பரப் பும். ஒரு சிலவற்றை (உலோகங்களை) தீயின் சூடு அதிகமாகத் தாக்கும் போது உருகிடச்செய்வதாம்.நீரின் கொதிநிலை 100 ° C எனவும், மற்ற உலோகங்களின் கொதிநிலை, நீரினைவிடப் பன் மடங்கு அதிகமான தென்றும் காண்கின்றோம். மேலும் கனலின் பரவல் தூரம் தள்ளிச் செல்லச் செல்லக் குறைந்து மறைந்து போவ தாம். வானஜோதியாகி, சூரியனின் அளவுகடந்த வெப்பநிலை கோடிக்கணக்கான மைல் வரை பரவி வந்து இவ்வுலகில் நாம் பொறுக்கக்கூடிய அளவுக்கு உதவிக்கொண்டுள்ளதாம். இந்நில வுலகைக் கடந்து இன்னும் வெகு தூரத்திலுள்ள வியாழன், சனி முதலான கோட்களில் சூரிய வெளிச்சம் மங்கலாயும், சூடு மிகத் தணிந்தும் இருப்பதாய் அறிவியல் ஆதாரத்துடன் அறியமுடி கின்றது. இதுபோல், ஞாயிற்று ஜோதியின் அருகாமையிலுள்ள புதன் கோளில் அதிசூடும் ஒளியும் இருப்பதாய் அறிகின்றோம். விண்மீன்களின் கனற்பரவல் நமக்குச் சிறிதும் தோற்றுகின்றதே யில்லை. உண்மையில் நட்சத்திரங்கள் சூரியனைவிட மிகப் பெரியனவே எனினும், வெகு வெகு தொலைவிலிருக்கின்றதால், அவற்றின் தோற்றம் மிக அருகித் திகழ்கின்றதாம்.

நமது அருட்ஜோதியின் அருட்கனல், உலகத்திலுள்ள எந்தக் கனலுக்கும் மேலானதாய்ப் பேராற்றல் கொண்டதாய்ப் பெருமை எல்லாம் உடையதாய், எங்கும் எக்காலத்தும் ஒரு படித்தாய், அதனை அடைந்தோர்க்கு என்றும் நல்லின்ப வாழ்வே தருவதாய் இருக்கின்றதாம்.

மெய்யான அருட்கனல் என்றுமே உள்ளது என்றாலும், அது வெளியாகி அனுபவத்தில் விளங்கிட்டால் தானே அதன் உண்மை உலகுக்கு விளங்கும். ஆகவே அந்த அருட்கனல், வெளியெல்லாம் நிரம்பியுள்ள ஒன்று, புறவானிலே நம் பகுதிப் பிரபஞ்சத்திற்குரிய ஒரு கனலி (சூரியன்) ஆகத் தோன்றித் தன் புறக்க னலால், நமது நிலவுலகமாதி எண் கோட்களையும் தோற்று வித்து, இந்நிலவுலகில் எல்லாவிதமான அகப்புற வசதிகளோடு, மனிதப் பிறப்பு வடிவத்தையும் ஆக்கிக்கொண்டு, இத்தேகத்தில் உள்ளொளி ஆகிய மெய்யறிவுக்கனல் விளங்கிடவும், உயிர்க்கன லாகிய ஜீவ உஷ்ணம் விளங்கிடவும் செய்துள்ளதாம். இப்படி மெய்யருட்கனலின் உண்மை, தன்னில் வெளிப்பட்டு விளங்கக் கண்டு போற்றுகின்றார், புகழ்கின்றார், துதிக்கின்றார் நம் அருட் பிரகாசப் பெருமான்.

(2)

1541. நலங்கொளப் புரிந்திடு ஞானயா கத்திடை
1542. வலஞ்சுழித் தெழுந்து வளர்ந்தமெய்க் கனலே

(உ-வி) செந்தீ வளர்த்து வேள்வி புரிந்திட உலகம் நல முற்றோங்கும் என்பது உலகியலார் உட்கோள். ஓமத்தீயின் வலஞ்சுழித்தெழுகின்ற செந்தழல் வாயுசக்தியோடு கலந்து மந்திரநாத இசையை வானில் நிறைத்து உலகைக் காப்பதாகக் கூறப்படும். இப் புற நல வாழ்வு, பொறி புலன் நிலைவரைதான் விளங்குவதாயுள்ளது. மெய்ஞ்ஞானமாகிய அருள்உண்மை விளங்கும் அகத்தே அருட்ஜோதி நித்தியமாகக் கொழுந்து விட்டு எரிந்துகொண்டு வலஞ் சுழித்து மேலெழுகின்றது. இதுதான் அருள்ஞான இயல் உண்மை வேள்வி. இந்த மெய்யருட்கனல் அகண்டவானம் எல்லாம் நிரம்பி நியதிமுறை தவறாது அருள்நல வாழ்வுக்கு உதவிக்கொண்டேயுள்ளதாம்.

இயற்கையில் கடவுள் அருட்சக்தி "ஓம்" ஒலியாகி இடை யறாது வான்வெளியில் இசைத்துக்கொண்டேதான் உள்ளது. இதனால் உலகில் கடவுட் கருணைத் தொழில் ஐந்தும் தடைபடாது நடத்தி, ஆன்மாக்களை அருளானந்த நிலைக்கு ஏற்றிக்கொண்டுள் ளதாக அறியலாகும். ஆதலின் இவ்வருள் உண்மையைக் கண்டு அருட்பெரு நல வாழ்வு பெற முயலுவதுதான் சன்மார்க்கக் குறிக்

கோளாகக் கொள்ள வேண்டும். இவ்வுண்மையை அறிந்து கொள்ளாது, பொறி புலன் வாழ்வில் குறுக்கிடும் தடைகளைத் தவிர்த்தற்கும், அனுகூலங்களைப் பெருக்குதற்கும் முயன்று, அவி சொரிந்து ஆயிரம் ஆயிரம் வேள்விகளைப்புரிந்தாலும் கடவு ளாணைப்படி வாழ்கின்றவர்களாகமாட்டார்கள் இவ்வுலகிய லார்.

செந்தீ வலஞ்சுழித் தெழுதல், நல்ல குறி என்பது உலக வழக்கு. நமது அருட்பெருஞ்ஜோதி வளர் ஞான யாகத்தில் எழுகின்ற எழுநாதீக் கொழுந்து, (நெருப்புக்கனல்) எல்லாப் பிறப்பிடையும் அகமிருந்து வளர்ந்து வருகின்றதால், ஒவ் வொன்றின் சிருஷ்டிக் கிரமத்தில், அதனதன் உறுப்பு வடிவங்கள் வலஞ்சுழித்த பிரணவ வடிவத்தோடு காணப்படுகின்றனவாம். உதாரணமாக விதையின் முளைகள், சங்கு சிப்பிகளின் உரு அமைப்புகள், மற்ற ஜீவ வர்க்கத்தின் தோற்ற உருவங்களும், மனிதக் கருப்பிண்ட வடிவத்தோடு மூளையாதி உள்ளவயவங்கள், காதுகள் யாவும் வலஞ்சுழிப் பிரணவத்தின்காரணத் தோற்றங் களேயாக விளங்குகின்றனவாம்.

ஆகவே, அருள் ஓங்க ஓங்கும் மெய்க்கனலை அகத்தே கண்டு அதனைக் கொண்டு அருள்வாழ்வு வாழ்தலே, எவ்வுயிர்க்கும் செந் தண்மை பூண்டொழுகும் அருட்செந்தழல் ஓம்பும் மெய் அந்தணர் செயலாய் விளங்கும். இதற்கு முரணான செயலால் பிழைத்திடு வோர் திருவருள் அடையார். அருட்கனல் ஒன்றே எல்லோர்க் கும் மெய்யின்பம் பயக்கும்.

(3)

1543. வேதமு மாகம விரிவும் பரம்பர

1544. நாதமுங் கடந்த ஞானமெய்க் கனலே

(உ-வி) ஞானமெய்க் கனல், எங்கும் பூரணமாய் இருந்து கொண்டிருந்தபோதிலும், புறத்தே எங்கும் கண்டுகொள்ளக் கூடாததாயிருக்கின்றதாகும். இது எல்லாவற்றிற்கும் உள்ளகத் திலிருந்து கொண்டு அனகமாகவே எங்கணும் நிரம்பி நின்று உலகியல் எல்லாம் விளங்க உதவிக்கொண்டேயிருக்கின்றதாம். இதனால், புறத்தளவில் இக்கனலைக் காண முடிகின்றதில்லை.

தற்கால அறிவியலார்க்கும், அணுக்களைச் சிதைத்தும்,இணைத்தும் பார்த்தபோது, அவ்வணுவகப் பெருஞ்சூட்டைக் காண முடி கின்றதே யல்லாது அருட்கனலை அங்கும் காண முடிகின்ற தில்லை; எப்படி முடியும்? மெய்யருள் ஞானத்தாலன்றி பிறிதெ தனாலும் இவ்வருட்கனல் தோற்றாதாம்.

பழையனவாகிய வேதாகமங்களாலும், யோக ஞான சாதனை களாலும் காணக்கூடாது நம் ஞான மெய்க்கனல். அவைகளை எல்லாம் கடந்து சுத்த சன்மார்க்க நிலையை அடைந்தவர்களே சுத்த அருள் விசாரத்தாலே தம்முள் இவ்வருட்கனலைக் காண்பர். கண்டு, அதுவாகி நின்று, அருளின்பானுபவமுண்டாக வாழ்கின்ற போதுதான் அதன் மெய்ப்பயனை உண்மையில் அடைந்தவர்களா வார்கள். அருள்வண்ண ஞான மெய்க்கனலாக உள்ளது நமது அருட்பெருஞ்ஜோதி. இது பரநாத நிலையின் மேல் விளங்கும் உத்தர ஞான சிதம்பரத்தே அனுபவப்படுகின்றதாம். இப் பர நாதாந்த வைந்துவநிலை (அருள் ஒளி நிலை) புறக் காரியப்பாடாம் பிரணவ அபரநாதநிலையில் கண்டு கொள்ள முடியாது. ஆனால், இவ் அபர நிலையினின்றே சகல வேதங்களும் ஆகமங்களும் தோன்றி வளர்ந்து தழைத்துள்ளனவாம். எனவே இவற்றால் அதீத அருட்கனலைக் காண முடியாது என்பது உண்மையாம். இதுபோல், தவயோக சாதகர்கள், உடலை அசைவற யிறுத்தி சுவாசத்தையும் மனத்தையும் அகத்தே நிறுத்தி, மூலக்கனலால் குண்டலி சக்தியை வருத்தி எழுப்பி, பரமாகிய மேலான அம்பர மாம் சிதாகாசத்தே நாதங்கடந்த நிலையில் பரவசப்பட்டு சமா தியிற் கிடந்து விடுகின்றார்கள். அதற்குமேல் அனுபவம் உண் டாகின்றதில்லை இவர்கட்கு. ஆனால் அந்த நாதநிலைக்கப்பால் தான் அருட்பெருஞ்ஜோதிமலையாக உள்ளது இந்த அருட்கனல். ஆகையால், அந்த யோக சத்தியால் அஷ்டமா சித்தி பெற் றோரும் இந்த அருட்பெருங்கனலைக் கண்டடையாது போனவர் களே ஆவர்.

ஆகவே, இந்த அருட்கனல், சுத்த அருட் சன்மார்க்கத்தால் மட்டும் அடையக்கூடியதாயிருக்கின்றதாம். அருள் ஒழுக்கத் துடன் ஞான மெய் விசாரத்திருந்தால், அந்த வேதமும், ஆகம விரிவும், பர அம்பர நாதமும் கடந்த மேனிலை மேலே விளங்கும் இந்த ஞான மெய்க்கனலைக் காணவும், கண்டு அதன்மயமாகி வாழவும், உலகை எல்லாம் வாழ்விக்கவும் முடியும்.

(4)

1545. எண்ணிய வெண்ணிய வெல்லாந் தரவெனுள்
1546. நண்ணிய புண்ணிய ஞானமெய்க் கனலே

(உ-வி) கொலை புலையற்ற தயாஞானமே, ஞானம் என்றும், மெய்ஞ்ஞானம் என்றும் விளம்புவர் மேலோர். அந்தத் தயா ஞானியரே புண்ணியர் ஆவார்கள். தயவற்றவர்கள், உண்மை யில் ஞானியர்கள் ஆகமாட்டார்கள், புண்ணியர்களும் அல்லர். உண்மை ஞானியர் உள்ளத்தே மன்னி யொளிர்கின்றது அருள் ஒளி வீசுகின்ற ஞான மெய்க் கனல். இவ்வுள்ளொளி கண்டு உறைகின்ற புண்ணியவான்கள், உலக உபகாரமாக எவ்வெண் ணமும் எண்ணுவார்கள்; எண்ணியாங்கு புரிவார்கள். இவர் கட்கு ஆதரவாகவே அவ்வகங்கண்ட அருட்கனல் உதவிக் கொண்டுள்ளதாம். இதனால் இப் புண்ணியர்கள் அருள் ஆற்றல் மிகப் படைத்த திண்ணியர்கள் எண்ணியவெல்லாம், எண்ணி யாங்கு எய்தி இன்புற்றிலங்குவர்.

அருட்பக்குவத்தாலே வள்ளலுள்ளத்தில் நண்ணியுள்ளது இந்த ஞான மெய்க் கனல். எங்கும்தான், எவர் ஆன்மாவினுள் ளும்தான் என்றென்றும் இருக்கின்றது இம்மெய்க்கனல். எனினும், எந்த ஒரு ஞானியின் உள்ளத்தில் தயவும் ஒருமையும் கூடி விளங்குகின்றதோ அங்குதான் இக்கனல் வெளியாகி அனு பவம் வழங் கிக் கொண்டிருக்கின்றதாகும். மற்றபடி அகமிருந்தும், புற அனுபவத்திற்கு வராது அனகமாகவே ஆண்டுவருகின்ற தாம். நம் அடிகளார்க்கு இந்தக் கனல் கைவரப் பெற்றுவிட்ட தால், நினைத்தவை நினைத்தபடி செய்து முடிக்கும் வல்லபசக்தி யும் அடைந்துவிட்டார். அப்படியானால், சுத்த சன்மார்க்கத்தை வெளியிடாததற்குக் காரணம், அவரது மாட்டாமை அல்ல;மற்ற வர்களின் அபக்குவநிலையே ஆகும். எல்லாம் செய்யவல்ல கடவுளே மனிதனில் அருட்பக்குவம் முறையாக உண்டாக வேண்டி, இச் சுத்த நெறியை இதுகாறும் வழங்காதிருந்தது போன்றே, இவரும் இந்நெறிக்குரிய பக்குவம் ஏற்படாத மக்கள் சமுதாயத்திற்கு வலிய வழங்க முன் வரவில்லை. தக்க காலம் வரும் வரை ஒவ்வொருவரையும், அருளாலே, உள்ளும் புறமும் சூழ்ந்து இருந்து கொண்டு பக்குவப்படுத்திவருகின்றார். அப் படிச் செய்வதுதான் திருவுள்ளச் சம்மதமும்கூட. ஆகையால்,

இவரது எண்ணமும் திருவுளத்திற்கு இணங்கவே எண்ணும். அதன்படி அதுவும் நிறைவேறும். இது அருட்கனலின் திருச் செயலேயாம்.

(5)

1547. வலமுறு சுத்தசன் மார்க்க நிலைபெறு
1548. நலமெலா மளித்த ஞானமெய்க் கனலே

(உ-வி) வலமுறு சுத்தசன்மார்க்கம்-வினைத்திட்பமும் கூடிய அனக நெறியாம். வலம் என்றால் வலிமை, வல்லமை, ஆற்றல் ஆகும். சாதாரணமாக மக்கள் உடலில் வலதுபாகம்தான் ஆற்றல் மிக்கதாயுள்ளதாம். இதனால் வலம் என்றாலே ஆற்றல் என்று பொருள் கூறப்படலாயிற்று. ஆற்றல் மிக்கது இச் சுத்த நெறி. ஏனெனில், இது கடவுள் உண்மையாகிய ஞான மெய்க் கனல் அல்லது அருட்பெருஞ்ஜோதியினிடத்திலிருந்தே நேரடி யாகச் செயல்படுவதாம். மற்ற நெறிகள் எல்லாம் புறத்திருந்து, மனிதனுடைய நிலையிலிருந்து செயல்படுத்தப்படுவனவாம். மனிதனும், இவனுடைய ஆற்றலும், நித்தியமும் நிறைவும் இன் மையால் தடைபட்டு ஒழியும் என்பது நிச்சயம். ஆகையால் தான், சன்மார்க்கம், சத்தாகிய கடவுளிடத்திலிருந்து வருவதாய் இன்று கொள்ளப்படுகின்றதாம். நேற்றுவரை சன்மார்க்கம் என்பதற்குச் சத்தாகிய கடவுளை அடைய வகுக்கப்பட்ட வழி என்றுதான் கொள்ளப்பட்டுவந்ததாம்.

மனிதனின் உண்மையே கடவுளாக அகமிருந்து விளங்கு கின்றது. கடவுளே சுத்தம்-அது அருள்-அது ஆனந்தம். ஆகை யால், உண்மை நெறி, சுத்த சன்மார்க்கம் என்றும், அனகநெறி என்றும் கூறப்படுவது. உள்வளர் மெய்ப் பொருளான உண்மை யிலிருந்து வெளியாகிப் பரவுகின்றதாம். நம் திருவருட்பிரகாச வள்ளலார் திருவருளாலே, அருட்பெருஞ்ஜோதிநிலையில் அத்து விதமாய் விளங்கும் உண்மை பெற்றார். அந்நிலையில் பெற்ற அருட்பேராற்றல் இவர்க்கு எல்லா நலமும் வழங்கியுள்ளதாம். அதுகொண்டு இவர், பேரும் புகழும் அடையவோ, சித்திகள் புரிந்து போற்றப்படவோ சிறிதும் விழைய வில்லை. அவர் தயா வுள்ளத்தால் உலகுக்கெல்லாம் நல்லின்பவாழ்வை வழங்கவல்ல ஒன்றான சுத்த சன்மார்க்கத்தைத்தான் எல்லோருக்கும் விளக்கிக்

காட்டி யுணர்த்தி, ஏற்று வாழச் செய்யவே மிகவும் விரும்பினார். அதற்காகத் தன்னை வந்து சார்ந்தவர்களுக்கு ஜீவகாருண்யமும், கடவுள்உண்மையும் போதித்தார். மக்கள் உள்ளம் புறவாழ் வில்தான் தணியாக் காதல் கொண்டு உழல்வதைக் கண்டு வருந் தினார். இந்த மக்களைத் திருத்தி சுத்தசன்மார்க்கத்திற்குக் கொண்டு வருவது, மந்திர தந்திரத்தாலோ, சித்துச்செயலாலோ ஆகாது, உலகவாழ்வில் நியதிப்படி வாழ்ந்து சுக துக்கங்களில் பட்டுத் தெளிந்து, வேண்டுதல் வேண்டாமையற்ற தயவுடைய உள்ளம் ஏற்படும் போது அகவுண்மைப்பதியின்பால் நாட்டம் உண்டாகும், அகநிலையற்று அருளொடு வாழும் இந்த சுத்த சன்மார்க்கமும் ஏற்கப்படும் என்று தெரிந்து கொண்டுவிட்டார். ஆதலால், அந்நெறி விளக்கம் குறித்தே திருவருட்பாவின் முக் கியப்பகுதியையும், புறத்துணையான சத்திய ஞானசபை, தர்மச் சாலை முதலியவற்றையும் வழங்கியுள்ளார். அவற்றின் உண்மை யும் பயனும் பக்குவ காலத்தே வெளியாகி உலகெங்கும் விளங்கும்.

280. பரஞ்சுடர்

(1)

1549. இரவொடு பகலிலா வியல்பொது நடமிடு

1550. பரமவே தாந்தப் பரம்பரஞ் சுடரே

(உ-வி) இங்கு பரஞ்சுடர் எனக்கொண்டு போற்றப்படுகின் றதும் நம் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணைப்பதியே ஆம். பரஞ்சுடர் என்றால் சிறந்த மேலான ஜோதி ஆகும்.அதற்கு முன்பும் பரம் என்பதை ஓர் அடைமொழியாக்கிப் பரம்பரஞ் சுடர் எனப் பகரப்பட்டுள்ளது. இது, சிறப்பிற் சிறப்புடைய மிக மேலான ஜோதியைச் சுட்டுவதாம். வேதத்திற்குச் சிறிதும் எட்டாதது, வேதாந்தமாகிய உபநிடதத்திற்கும் விளங்காதது. அதற்கும்மேலே அருள்நிறைவோடு விளங்குவது எதுவோ அதுவே இந்தப் பரஞ்சுடராம். அம்மேல் நிலையே இரவு பக லில்லா இயல் பொதுவாகும். இரவு, பகல் என்பது, அல்லது பகல் இரவு, நினைப்பு மறப்பு, பிறப்பு இறப்பு, சகலம் கேவலம் அற்ற இடம் என்றெல்லாம் குறிக்கப்படுவது அருட்ஜோதி நிலை யமே ஆகும்.

அருட்ஜோதி ஆகிய பரஞ்சுடர், அருள்வெளியிலே நித்தி மாய் இருந்துகொண்டு, தன் ஐந்தொழிலைப் புரிந்து கொண்டே யிருக்கின்றதாம். அவ் அருட்பெருவெளி, பொதுவெனப்படும். அந்தப் பொதுவிலிருந்து ஆனந்தத் திரு நடனம் ஆடிக்கொண் டுள்ளார் நம் ஆண்டவர். மனிதன், புறநிலையில் வாழ்கின்றவரை பிறப்பும் இறப்பும், நினைப்பும் மறப்பும் அடைந்துகொண்டே இந்தப் பகலும் இரவும் உடைய நிலவுலகில் வசித்து வருகின் றான். இந்தத் துவந்த நிலை இருக்கும்வரை அருள் உண்மை அறியமுடிகின்றதில்லை. சுத்த சத்விசாரத்தால் அகம் ஒளிர் சுடரின் உண்மையை யுணர்ந்து அதுவே தன் உண்மை என்பதை அனுபவபூர்வமாகக் கண்டு நிற்கும்போதுதான் அவன் சுத்தநிலை பெற்றவனாகின்றான். இவன்தான் அச்சுடராய் என்றும் விளங் கலின், பிறப்பும் இறப்பும் அற்றவனாக, இராப்பகலில்லா இடத் தில் இருக்கின்றவனாக உள்ளான். அந்நிலை யனுபவத்தைப் பெற்றுவிட்டால், பின்னர், அதனை மறப்பதாகிய கேவலமும் சூழ் உலகத் தோற்றங்களைப் பலவாகக் காண்கின்ற சகலநிலையும் ஏற் படாது. சுத்தநிலையில் இருந்துகொண்டு, எங்கும் பதியுருவை. அருட்சுடரை, அனந்தவண்ண தோற்றங் கொண்டுள்ளதாகவே காண்பான்.

ஒன்றாகிய பரஞ்சுடர்தான் ஒவ்வொரு ஆன்மாவிலும் இருந்து ஆக்கலாதி ஐந்தொழில் நடனம் புரிந்து வருகின்றார். ஒன்றான பதி எல்லா ஆன்மாவிலும் இருந்து விளங்கலின், நடமாடுகின்ற தலம் ஒரு பொதுவிடமாக ஒருவன் காண்கின்றான். ஒன்றில் கண்டுவிட்டால் போதும் அதுவே எங்கும் விளங்குவதாகவும் கண்டுகொள்ள முடிகின்றதாம். அன்றியும், அருள்ஞானம் விளங் கும் உள்ளம், ஓர் அக அனுபவிக்கே உரியதாக இருக்கின்றது. அந்த ஓர் உள்ளத்தலம் போக வேறு எங்கும் அருள் விளங்குவ தில்லை; அழிந்துபடும் வேறு வேறான தோற்றங்களே புறத்தில் சூழ்ந்து விளங்கக் காண்பான். ஆகவேதான், சுத்த சன்மார்க் கிக்கு, அவனது ஆன்ம சிற்சபையே உறையுளாகவும், கடவுட் பொதுவாகவும், இருக்கின்றதாம். இதிலிருந்துதான் அருள் நடனம் புரிகின்ற கடவுளும், அப்பதியோடுறையும் மனிதனும் எங்கும் தாமாய் இருந்து விளங்கும் உண்மை அனுபவிக்கப் படுகின்றதாம்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், அருட்பொதுவிருந்து ஆடு கின்றார்; அவர்மயமான திருவருட்பிரகாச வள்ளலும் நித்திய

மான வாழ்வை உலகெல்லாம் கண்டுகொள்ளச் செய்கின்றார். அருட்பொது உண்மை இதுகாறும் உலகுக்கு அறியப்படாதிருந்தது. அந்த அருட்பொதுவே அருட்பிரகாசர் வடிவில் நிறைந்து நிலவத் தொடங்கிவிட்டிருப்பதால், இந்த வள்ளல் மூலம் உலகம் அருட்பொதுவை அருள் அனுபவத்தில் கண்டுகொள்ளக்கூடியதாகிவிட்டிருக்கின்றதாம்.

(2)

1551. வரநிறை பொதுவிடை வளர்திரு நடம்புரி
1552. பரமசித் தாந்தப் பதிபரஞ் சுடரே

(உ-வி) கடவுள் விளங்கும் இடம், பொதுவாம், ஒரு தன்மைத்தான ஆன்மாவே ஆகும். கடவுள் ஒருவரே அல்லாது பலர் அல்லர் என்பதை நன்கு அறிந்து, மறவாது உளம் கொண்டிருத்தல் வேண்டும். உலகில் கடவுள் விளங்கும் ஆலயம் என்னும் பொதுவோ எண்ணடங்காதனவாய்த் தோற்றுகின்றன. அப்படியுள்ள ஆன்மாக்கள் தோறும் தனித்தனி இருந்து ஆட்சிபுரிகின்ற கடவுள் பலராக அல்லவா இருக்க வேண்டும் என எண்ணமிடுகின்றனர் பலர். உண்மை அப்படி அல்ல. ஒன்றான கடவுள் தான் எனினும், அருளாலே எங்கும் பூர்ணமாய் உள்ளவராய் இருக்கின்றார். ஆகையால் ஓர் ஆன்மாவில் அனுபவப்படுவது பூர்ணமாகவே விளங்கும். ஆதலின், அனுபவத்தில் கடவுளும் அது விளங்கும் ஆன்மாவும் ஒன்றாகவே கொள்ளப்படும். இந்த அனுபவிக்குத் தானே எங்கும் இருப்பதாய் விளங்கும். அயலறியாத நிலையிலிதுவாம்.

முன், பரம வேதாந்தப் பரம்பரஞ்சுடர் எனப்பட்டது. இங்கு, பரம சித்தாந்தப் பதி பரஞ்சுடர் எனப்படுகின்றது. வேதாந்தம் பரப்பிரமத்தை ஆன்மாவோடு அத்துவிதமாகக் கொண்டு கூறுகின்றது. இந்த ஆன்மா கடவுள் என்கின்றதாம். இது பாவிக்கப்படுவதேயன்றி, அனுபவம் அல்லவாம். இதற்கு அருட்சேர்க்கை ஏற்பட்டு, அருட்பெருஞ்ஜோதியே கடவுள் என்றும், அதுவே அணுத்துவமாய் விளங்கும் நிலையே ஆன்மா என்றும் கொள்ளல்தான் அனுபவமாகும். இதனால் அந்த வேதாந்தத்திற்குமுன் அடையாக ''பரம'' என்ற சொல் இணைக்கப்பட்டுள்ளது, இதனால் அது சுத்த வேதாந்தமாகி விளங்கும்.

சுத்த என்பதே அருளைச் சுட்டுவது. ஆகையால் அருளால் வேதாந்த முடிவைக் காண்டல் வேண்டும் என்பது குறிப்பு. இதுபோல் சுத்த சித்தாந்தத்தால் பதியைப் பரஞ்சுடராய் அனுபவத்தில் குறிக்கப்பட்டது. சித்தாந்தத்தில் பதியொடு ஐக்கியப்பட்டு வாழும் அனுபவம் கிடைப்பதில்லை. மறைவே முடிவாகும் அச்சித்தாந்திகளுக்கு.

''வேதாந்த நிலையொடு சித்தாந்த நிலையும்
மேவும் பொதுநடம் நான் காணல் வேண்டும்
சூதாந்தற் போதத்தைச் சுடுவாயோ தோழி
துட்டநெறியிற் கெடுவாயோ தோழி.''

என்ற பாவின் மூலம், தற்போதத்தை அருளால் சுட்டெரித்து விட்டு, அருட் பொதுவில் நடனமிடும் பதி யனுபவம் பெறவே தன் மனத்தோழியை அறிவுறுத்தி அழைத்துக்கொள்ளுகின்றார். இதனால் ஏற்படுவதுதான் வேதாந்த சித்தாந்தங்களின் முடிந்த குறிக்கோளை எய்தி அருளொடு வாழ முடிகின்றதாம். இந்த அருட்பொது வரம் நிறை பொது எனப்பட்டுள்ளது. திருவருளாலே இப் பொதுவாழ்வு சித்திப்பது உண்மை. இவண் வருவோரை வருக என வரவேற்று, வாழ்க என வரம் அருளி வாழ்விக்கின்றது நம் அருட் பரஞ்சுடர்.

(3)

1553. சமரச சத்திய சபையி னடம்புரி

1554. சமரச சத்திய தற்சுயஞ் சுடரே

(உ-வி) தற் சுயஞ் சுடர், தனித்த சிறப்பு வாய்ந்த ஒன்றாகிய தான்தோன்றியாய் விளங்கும் ஒளி; அது, இயல்பாகச் சத்சித் மயமாய் விளங்கிக் கொண்டிருக்கும் இறையொளியாம் அருட் பெருஞ்ஜோதியே ஆம். அது, அருள் ஒளியே. சத்தியம் என்னும் சத்தாம் ஒளிக்குள்ளே அதன் தன்மையாகிய அருள் விளங்குவதாக அருட்பக்குவமுறும் காலத்தே கண்டு கொள்ளப் படுகின்றதாம்.

சமரசம் சத்தியம் இவை இரண்டுமே அருளும் ஒளியுமாய் இருக்கின்றன. இதன் விளக்கத்தைக் கருணையும், சிவமும்

எனவும், அகிம்சையும் சத்தியமும் எனவும், அன்பும் அறிவும் எனவும் பலர் பலவாறாகக் கொள்ளுகின்றனர். ஒன்றாகிய மக்க ளினம் அன்பினால், தயவினால், கருணையினால்தான் ஒன்றுபட்டு வாழ வகை செய்யும். பொது நோக்கத்திற்குத் தடையாகிய சமய மதநெறிகள் மக்களினத்தைப் பிரித்து வைக்கின்றன. எல்லாச் சமய மதத்தினரும் ஒருமைப்பாடு கொண்டு விளங்க வேண்டு மானால் முதலில் உள்ளத்தில் பரந்த அன்பு அல்லது தயவு தோன்றவேண்டும். அன்பொழுக்கத்தில் இருந்து, சத்விசாரம் மேற்கொண்டால், சத்தியமான உள்ளொளியைக் கண்டு கொள் ளலாம். எனவே, சமரசம் மக்களை ஒன்றுபடுத்தும் தன்மையாம். திருவருள் அல்லது கடவுள் தயவு ஒன்றுதான் மக்களினத்தை ஒற்றுமையோடு கூடிவாழச் செய்யும்.

முன்கண்ட சமய மதங்களைக் கொண்டு சமரச வாழ்வு பெற முயன்று முடியவில்லை. அதுபோல் வேதாந்தம், சித்தாந்தம் முதலிய ஆறந்தங்களையும் வைத்துச் சமரசம் காண முனைந்தும் அமையவில்லை. பின்னுற்ற உலகியலார் சமரச மனப்பான்மை யோடு ஏற்படுத்தின சங்கங்கள், பொது மன்றங்கள், எவற்றாலும் உண்மையான சமரசம் ஏற்படவில்லை. ஆகவே உள்ளத்தில் அருள்நாட்டம் ஏற்பட்டால்தான் சமரசம் காணமுடியும் என்பது உண்மை. அந்த அருளே சத்தியமாகவும் கண்டு கொள்ளலாகும். ஆகவே சத்தியமென்னுஞ் சபையில்,சமரச சத்தியமாம் அருட் ஜோதியைக் காண வேண்டும். அதுவே நித்தியமாய்ச் சுயஞ் சுடராய்த் திகழ்ந்து பொது மக்கள் சமுதாயம் முழுவதையும் அருள் ஒளியில் மெய்யின்புடன் வாழ்விக்கும்.

''தவமான சத்தியஞானப் பொதுவில், துவமார் துரியம் சொரூபமதாமே'', என்ற திருமந்திர விளக்கப்படி சத்தியஞான சபையில் தற்சுயஞ் சுடராய், அது நாமாய் இருந்து வாழ்வதே பொருளாகக் கொள்ள வேண்டும்.

231. அருட்பெருஞ்ஜோதி

(1)

1555. சபையென துளமெனத் தானமர்ந் தெனக்கே
1556. அபய மளித்ததோர் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந்த அருட்பெருஞ்ஜோதி அகவலின் ஈற்றுத் தலைப்பும், அருட்பெருஞ்ஜோதியாக வழங்கப்பெற்றுள்ளது. ''சித்தெல்லாம் வல்ல திறல் அளித்தெனக்கே, அத்தனென் றோங்கும் அருட்பெருஞ்ஜோதி'', என்றது வரை, (874 அடி)யில் அருட்பெருஞ்ஜோதி மகுடம் வழங்கி மேல், வேறு வேறான மகுடங் களுடன் பொலியச்செய்து இங்கிருந்து மறுபடியும் அருட்பெருஞ் ஜோதி முடிவுடன் அருளி நிறைவேற்றுகின்றார்.

அகண்டபேரொளியான அருட்பெருஞ்ஜோதி, எங்கும் பரிபூரணமாய் இருந்துகொண்டு, யாவுமாய்த் தோற்றி விளங்கு கின்றபோதிலும், எவ்விடத்தும் கண்டு கொள்ளப்படாதிருந்து, அருள் அறிவு பெற்ற மனிதனின் திருவுள்ளத்தில் திருவருளால் தான், கண்டுகொள்ளப்படுகின்றதாம். அந்த அருள் உள்ளம் பெற்றவர் நம் திருவருட்பிரகாசரே யாவார். அவர்தம் உள்ளத்தே முதலில் இந்த அருட்பெருஞ்ஜோதியைக் கண்டு கொண்டார். இவர்க்கு இந்த அருட்பெருஞ்ஜோதிக் காட்சி உள்ளமாகிய சத்தியஞானசபையில் தோற்றமாயது; அது, புதிதாக அங்கு எழுந்தருளித் தோற்றியதல்ல. அப்படி வந்துதித்தது என்றால் எப்படியும் நிலைக்காது மறைந்துபோய்விடும். ஆனால் அது நித்தி யமாய் இருந்தும் அபக்குவ காலமெல்லாம் தோற்றாதிருந்து அருட் பக்குவத்தே தோன்றியுள்ளது. ஆகையால், நிலையாக அமர்ந்து விட்டுள்ளதாய் விளங்குகின்றதாம். அப்படி நிலைத்திலங்குகின்ற தோடு, அருளால், இறப்பச்சத்தை முழுவதும் போக்கி, அடைக் கலம் அளித்து விட்டுள்ளதாம்.

இப்படி அபயந்தந்து ஆட்கொண்டுள்ள அருட்பெருஞ்ஜோதி யைத்தான் திருமுன் நின்று (புருவ மத்தியிலிருந்து) துதிக்கின் றார், புகழ்ந்தேத்துகின்றார். இவ்வகவலும் அப்படிச் செய்யப் படுகின்ற போற்றிச் செயலே யாகும். இவரே முன்னிலை நின்று போற்றிடத் தன்மையாயிருந்து வரைந்துள்ளதுதான் இந்தத் திருவருட்பாவின் பெருஞ்சிறப்பாகும். திருவாசகத்தை, மணி வாசகர் சொல்ல திருச்சிற்றம்பலமுடையாரே ஒரு மனித வடிவில் வந்து கேட்டு எழுதி முடித்து முடிவில், ''திருச்சிற்றம்பலமுடை யான்'' என்று கைச்சாத்துமிட்டதாகக் கூறுவர். எனவே இந்த அகவலின் அருள் மாண்பு நன்கு விளங்கும்.

(2)

1557. மருளெலாந் தவிர்த்து வரமெலாங் கொடுத்தே
1558. அருளமு தருத்திய அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஓர் ஆன்மா பரிபாகம் அடைவதற்கு, இருள், மருள், அருள் என்ற மூவித நிலைகளிற் செலுத்தப்படவேண்டியுள்ளதாம். ஐம்புலன் அறிவு மட்டும் கொண்டு விளங்கும் ஆன்மாக்கள் இருள் நிலையிலுள்ளவை. கடவுள் நியதியால் தேகபோகங்கள் கொண்டு மெய்யறிவு விளங்கா அந்தகாரத்தில் அவ்வான்மாக்கள் வாழ்ந்து வருகின்றனவாம். அப் பிறவிகள் யாவும் கடந்து, மனிதப் பிறப் படைந்து, மன அறிவு கொண்டு விளங்குநிலையே மருள்நிலை யாகப் பகரப்படுகின்றது. இம் மனோ பகுத்தறிவு அன்பினால் நிரம்பிப் பக்குவப்படப்பட்ட அறிவு ஒளியும் அதிகரிக்கும். இப்பக்குவ மனோஅறிவில்தான் ஆன்ம உண்மையும் கடவுள் ஞானமும் வெளிப்படும். இவ்வான்மக் கடவுளின் இயல் உண்மைப் பெருந் தன்மையே அருளாம். இதுவே ஆன்மாவுக்கு, முடிவான அருள் நிலையாக ஆணை செய்யப்பட்டுள்ளதாகும். ஆதலின், மனிதன் அருள்நிலைக்கும் இருள்நிலைக்கும் இடையில் மருளில் மயங்கி வாழ்ந்து கொண்டுள்ளான். இந்நிலைநின்று தெளிவுபெற வேண்டியுள்ளது. இவனுக்கும் கடவுள் நியதியால் தேக போகங் கள் உண்டாகின்றன. ஆனால், அறிவறியாமையால், பற்று மிகுதி யால் இருளிலும், ஓரளவு பற்றறலால் ஒளியிலும் சென்று சென்று மயங்கிவீழ்ந்தும், தெளிந்து எழுந்தும் முடிவில் வேண்டு தல் வேண்டாமையற்ற அருள்நிலையில் அமைகின்றான்.

நம் வள்ளலை ஆட்கொண்ட அருட்பெருஞ்ஜோதி, மருள் மயக்கை எல்லாம் ஒழித்துவிட்டதாம், மாயா கன்மச் செயல்கள் யாவும் அருள் ஒளியின் காரியமாகக் காண்கின்றார். மேலும் அவ் வருள் ஒளி இவர்க்குச் சிறந்த வரம் யாவும் வழங்கிவிட்டதாம். அதனால் இவருடைய குறைகள் தீர்ந்தன. முடிவாக அருள் அமுதம் ஊட்டப்பெற்று மரணமில்லாப் பேரின்ப வாழ்வும் அருளப் பெற்றார் என்று அறிகின்றோம்.

(3)

1559. வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
1560. ஆழியொன் றளித்த அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) அருட்பெருங்ஜோதியால் மரணமில்லாப் பேரின்ப வாழ்வு வழங்கப்பெற்றுக் கொண்டதற்காக நன்றி தெரிவிக்கும் முகத்தான் ஆண்டவருடைய பேரருளையும், பெருஞ்சிறப்பையும் வாழ்க, வாழ்க என்று வாழ்த்துக் கூறுகின்றார்.

இவருக்கு அருளப்பெற்ற அருட்பேறுக்கு விளக்கம் ஆழி என்ற சொல்லால் அணிந்து கூறப்பட்டுள்ளது. இந்த ஆழி என்ற வார்த்தை, மோதிரம், சக்கரம், கடல் ,எனப் பொருள் படுவதாம். இம் முப்பொருளும் கொண்ட ஆழியைத் தமக்கு அருட்பதி வழங்கியுள்ளதைக் கண்டு உள்ளத்து உவகை கொள் கின்றார். மோதிரம் என்ற பொருளுக்கு ஒப்ப அவர் விரலுக்கு அணி செய்யும் ஆழி. இவர் பெற்ற கடவுள் திருமணத்திற்கோர் அடையாளமாகும். ஆழி என்பதனைச் சக்கரமாய்க் கொள்ளும் போது, அது உலகெல்லாம் ஆட்சி செய்யும் சின்னமாகத் தோற்றுகின்றது. மேலும், இதற்குக்கடல் என்னும் மற்றொரு பொருள் கொண்டு பார்க்கும்போது, இவ்வாழி ஆனந்தக்கட லாகத் தன்னைச் சூழ்ந்து பேரின்பில் வாழ வைக்கின்றதாம். இந்த அருட்பேரின்ப வாழ்வு பெறார்க்கு, இவ்வுலக வாழ்வு அல்லல்நிறைந்த துன்பப் பெருங்கடலாக, துக்க சாகரமாக இருப் பதாம். அதனால் மருள்நிலையிலிருந்து கொண்டு பிறவிப் பெருங் கடலைக் கடந்து, கடவுட்டிருவடிநிலையாகிய கரைசேர விரும் பினோர் முன்னோர். இப்போது அருள்நிலையில் இப்பிரபஞ்ச முழுதுமே அருட்பெருஞ்ஜோதிக்கடலாகக் கண்டு இதில் அருட் பெருஞ்சித்து புரிந்துகொண்டு என்றும் ஆனந்தமாய் விளங்க அருள் பாலிக்கப் பெற்றுள்ளான் சுத்த சன்மார்க்கி. நம் வள்ளல் பெற்ற பேறு இதுவாகும்.

(4)

1561. என்னையும் பொருளென வெண்ணியென் னுளத்தே
1562. அன்னையு மப்பனு மாகிவீற் றிருந்து

1563. உலகியல் சிறிதும் உளம்பிடி யாவகை
1564. அலகில்பே ரருளால் அறிவது விளக்கி

1565. சிறுநெறி செல்லாத் திறனளித் தழியா
1566. துறுநெறி யுணர்ச்சிதந் தொளியுறப் புரிந்து

1567. சாகாகல்வியின் றரமெலா முணர்த்திச்
1568. சாகா வரத்தையுந் தந்துமேன் மேலும்

1569. அன்பையும் விளைவித் தருட்பே ரொளியால்
1570. இன்பையு நிறைவித் தென்னையு நின்னையும்

1571. ஒருரு வாக்கியா னுன்னிய படியெலாஞ்
1572. சீருறச் செய்துயிர்த் திறம்பெற வழியா

1573. அருளமு தளித்தனை யருணிலை யேற்றினை
1574. அருளறி வளித்தனை அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இது அருட்பெருஞ்ஜோதியின் அருளியற்செயலையும், அதனால் தான்பெற்ற அருட்பெரும் பேறுகளையும் எண்ணி எண்ணிப் புகழ்ந்த அருட்புகழ்ச்சியின் விரிவுரையாகும். இதனைப் பதினான்கு அடிகளில் விரித்துக் கூறியுள்ளதாக அறிகின்றோம். அடிக்கு அடி உரைவிளக்கம் கண்டு கூட்டிக்கொள்வாம். (1561-1562) புறத்தில் சிறிதும் எவ்வகையிலும் விளங்கற்கில்லாத ஆன்ம சிற்றணு வடிவினனாய் இருந்த இச் சிறியேனையும் ஒரு பொருளென மதித்துப் பொருட்படுத்தி என்னுள்ளத்தே பிரியாது வீற்றிருந்துகொண்டு, அணுவனை இவ்வுலகறிய வருவித்ததற்காக, ஓர் அன்னையும் ஓர் அப்பனுமாய்ப் புறத்தே தோற்றிக் கூடி அடியேற்கு இம் மனித உடல் ஏற்பட உதவினாய். (1563-1564) அப்படி உலகில் தோற்றிய இச்சிறியேனுக்கு உலகியலில் சிறிதும் மனம் பதியா வண்ணம், நினது அளப்பரிய திருவருளால், உண்மையை அறியச் செய்தனை. அதனால், புலன்கள் இழுத்த இழுப்பினும், மனம் போன போக்கினும் செல்லாது (அருட்பெரு நெறியிற் செல்ல) மனத்திற்கு ஆற்றலும் வழங்கப்பட்டதாம். திருவருளால் நல்ல அறிவு விளங்கிவிட்டது. அறிவு கொண்டு, அதற்குத்தக வாழ வேண்டுமே. (1565-1566) அதற்கும் சிறிய நெறிகளில் பற்று கொண்டு செல்லாதிருக்கவும் ஆற்றல் கொடுத்ததாம். அதன்மேல் மரணமில்லாது வாழும் சரியான மார்க்கத்தை உளத்தில் தெளிவுபடுத்தினாய். உளத்தில் உண்மையான அருள் ஒளி விளங்கச் செய்தாய்.

(1567-1568) அருள் அறிவாலே, அறிதற்கரிய சாகாக் கல்வியின் உண்மை இன்னது என்றும் உணர்த்தினாய். முன்னோர் கண்டிருந்த, உடலை விட்டு ஆன்மா நிலையுறுவதே சாகாக் கல்வி என்ற கருத்து தவறானது என்பதைத் தெளிவுபடுத்தித் திருவருள்ாலே, அழியா அகநிலை நின்றே அனகவாழ்வு மேற்

கொள்ளலால், சூழ்தேகமும் அழியாத அனக கனக உருவமாகி விளங்கும் என்பதைப் போதித்தாய். அப்படியே அழியாது வாழும் வரத்தையும் நல்கி விட்டாய். வரத்தை அளித்துவிட்டால் மட்டும் போதுமா? அழியாமை பெற்றுவிட்டதால் இவ்வுலகில், சலிப்பும், கவலையும் துன்பமும் உண்டானால், அவ் அழியாமையில் வெறுப்பல்லவா உண்டாகிவிடும். அப்படி வாழ்வதும் தவறென்றல்லவா நினைக்க நேரும். அப்படி யெல்லாம் பிறழ்ந்து போகாதிருக்கவே மேன்மேலும் *(1569-1570)* என துளத்தே அன்பை விளைவித்துக் கொண்டேயுள்ளாய். அவ் அன்பின் விளைவால் அக அனுபவத்திலே அருள் ஒளி ஏற்பட்டு அதனால் சதா இன்பம் பெருகிக் கொண்டேயுள்ளதாம். அந்த இன்ப நிறைவிலே, நான் நீ என்ற இருநிலை ஒருநிலை யாகிட அடியனை அருள்(ஞான்+நீ=) ஞானியாகச் செய்துவிட்டாய். *(1571-1572)* அப்படி ஒருருவாகிய நான் அன்பறிவோடு கருதிய வெல்லாம் மிகச் சிறப்பாகச் செய்து முடித்திட அருளினை. அப்படி இயற்றுகின்ற அருட்செயலாலே உயிர்ச்சக்தி நித்திய ஜீவனாகி அழியா ஆற்றல் கொண்டு விட்டதாம். ஓர் ஆன்மாவுக்கு ஏற்பட்ட உயிர் உடம்பு குறிப்பிட்ட ஆயுட்காலம் வரையிருந்து நீங்குவதுதான் சாதாரண விதி முறையாம். காலத்தே உயிர் ஒடுங்க உடல் நீங்கிவிடும். ஆனால் அருட்பக்குவம் உண்டான போது விதி விலகி விடுகின்றது. ஆயுளும் முடிவற்றதாகிவிடுகின்றது. அப்போது உயிர் மறைவதுமில்லை, உடம்பு அழிவதுமில்லை, இதுதான் நித்திய ஜீவநிலை.

*(1573-1574)*மேற்படி நித்திய வாழ்வுநிலை ஏற்படுவதற்கு அருள் என்னும் அமுதத்தைப் புகட்டிவிட்டாய். அருள் என்னும் மாற்றமு மறைவுமில்லாத பெருநிலைக்கண் ஏற்றி வைத்துள்ளாய். இந்த வாழ்வுநிலைதான் பேரருள் அனுபவ ஞானம் என்று மொழியப்படும். சாதாரண உபாய ஞானத்தால், அறிவரிதாயும், உண்மை ஞானத்தாலே உள்ளது உள்ளபடி அறியப்படுவதாயும், அனுபவ ஞானத்தாலே அறிந்து கொண்டதன்படி வாழ்வில் ஏற்கப்பட்டதாயும் உள்ளதாம்.

இப்படியாகத் தான் அடைந்த அருள் அனுபவங்களையும் பேறுகளையும் அடுக்கடுக்காகக் கூறி அருட்பெருஞ்ஜோதியைப் பதினாங்கு அடிகளிற் புகழ்ந்து மேற்தொடர்கின்றார்.

(5)

1575. வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
1576. அல்கலின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) நமது அருட்பெருஞ்ஜோதி பண்டே தொட்டு அகத்தும் புறத்தும் சூழ்ந்து கொண்டுள்ளதாம். அகத்தே அருளாக நிலைத்திருந்து கொண்டே, புறத்தில் ஜோதியைத் தன்னாணைப் படி, வேண்டியாங்கு வேண்டியாங்கு, பலபல பொருள்களாயும், ஆற்றல்களாயும், அறிவனுபவங்களாயும் உருவாக்கியும் நீக்கியும் கொண்டேயுள்ளதாம் அந்த அக அருள். அகமும் புறமும் அந்த அருளும் ஒளியும் இடையறாது மேலும் மேலும் விளைவும் விளக்கமும் கொண்டேயிருக்கும் உண்மையைக் குறிக்க வந்த சொல்லே, ''அல்கலின்று ஓங்கிய'' என அமைந்துள்ள சொற்றொடராய்க் காண்கின்றோம். இதன் பொருள் ''நீங்குதல் இல்லாமல் வளர்கின்ற'' எனக் கொள்ளப்படும். இவ்வகம், புறமாகிய இருநிலையுண்மையை யுணர்த்தவே, ''வெல்கநின் பேரருள், வெல்கநின் பெருஞ்சீர்'' என்று ஓதப்பெற்றுள்ளது. வெல்கநின் பேரருள் என்றதால், அகம்வளர் அருளின் வெற்றியைப் போற்றுவதாகவும், வெல்கநின் பெருஞ்சீர் என்றதால் புறஞ்சூழ் ஜோதியின் வெற்றிச் சிறப்பும் குறிக்கப்பட்டதாகக் கொள்ளலாகும். அருளும், சீரும், குன்றா தோங்கி வாழத் துணைபுரிகின்றனவாதலின் அவற்றை வாழ்த்துகின்றார். வாழ்த்தி வாழ்வு பெற்று வெற்றி கொண்டாடுகின்றார்.

(6)

1577. உலகுயிர்த் திரளெலா மொளிநெறி பெற்றிட
1578. இலகுமைந் தொழிலையும் யான்செயத் தந்தனை
1579. போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
1580. ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) இந்தப் பெரும் பிரபஞ்சம், அருடபெருஞ் ஜோதிக் கடவுள் உண்மை வெளிப்பட வேண்டி செயல்பட்டுக் கொண்டேயுள்ளதாம். அகண்ட பெருவெளி முழுவதும் சத்தாகிய ஆன்மாக்கள் என்னும் உயிர்த்திரள் நிரம்பியுள்ளனவாம். சத்தாம் ஆன்மாக்களுக்குச் சித் விளக்கம் ஏற்படுத்துவது கடவுளின்

ஐந்தொழிற் செயலாம். இவ்வைந்தொழிலின் முடிவில்தான் ஆன்மா, அருள்நிறை அனுபவம் அடைந்து, அழியா இன்பில் வாழும் சுத்த சன்மார்க்க மனித வடிவம் எய்தி மன்னி நிதமும் விளங்கலாகின்றதாம். இவன் காண்கின்ற அருட்பெருஞ் ஜோதிக் கடவுள்—இயற்கை விளக்க நிறைவாகிய அகண்ட பெரு வெளியிலே, இயற்கையுண்மை வடிவாகிய ஆன்ம சிற்றணு வுருவில் இருந்துகொண்டு, இயற்கையின்பத் திரு நடனச் செயலை, அவ்வான்மாவுக்கு அனுபவப்படும்படியாகச் செய்யப் படுகின்றதாகும். எல்லா ஆன்மாக்களும் இந்த இன்பானுபவ நிலை எய்துவது திருவருளாணை.

மேற்படிக் கடவுள் உண்மையை உள்ளபடி அறிந்து கொண் டால்தான் இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றமும், இதில் செயல் பட்டுக் கொண்டேயுள்ள உயிர்ப்பொருள்களின் வாழ்வும் பயன் களும், முடிவும் யாவை என அறிதல் கூடும். கடவுள் ஒருவரே தான், ஒரு குறிப்பிட்ட ஆன்ம அணுவிலிருந்து கொண்டு, ஐந் தொழிலால் அருள் அனுபவத்தைவெளிப்படுத்துவதாக அறி கின்றது அந்த ஆன்ம சிற்றணு. அப்போது கடவுளே தன் முழுத் தோற்றத்தையும், அவ் ஆன்மாவின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டு, ஐந்தொழிற் செயலோடு திகழ்கின்றதாகவும் அறியப் படுகின்றதாம். இப்போது இக் கடவுட் சித்தி பெற்ற ஆன் மாவே கடவுள் மயமாய் இருந்து கொண்டு, தானே மற்ற எல்லா உலகத்து எல்லா ஆன்மாக்களுக்குள்ளுமிருந்து அருள் ஐந் தொழில் புரிவதாக அறியப்படுகின்றது. அப்படித்தான் அருட் பெருஞ்ஜோதி ஆண்டவர், இயற்கையாக ஒவ்வொரு ஆன்மாவிலு மிருந்து ஐந்தொழில் செய்கை வெளிப்படுத்திக் கொண்டுள் ளதையே நம் இராமலிங்க அடிகளாய் உருவொடு விளங்கிய ஒரு ஆன்மாவில் அனுபவப்பட்டது. அவ்வருள் அனுபவம் கொண்ட அடிகளார் தாமே அவ்வைந்தொழிலைப் புரிந்து கொண்டுள்ள தாய் அறிகின்றார்.

கடவுளின் ஐந்தொழிற்செயல அருள் நியதிப்படி, முடி விலாக்காலம் நடந்துகொண்டே இருப்பதாகும். எப்போது எந்த ஒரு மனித வடிவில் அந்த அருட் பேரனுபவம் வெளியாகின் றதோ அந்த மனிதனே சித்தி பெற்றவனாகி விளங்குகின்றான். உண்மையில் கடவுளே, அவனது உருவிலிருந்து ஐந்தொழில் புரி கின்றதாக அறியலாகின்றது. கடவுள் நியதி முறைப்படி ஒவ்

வொரு ஆன்மாவுக்கும் அருள்பாலிக்க நீண்டகாலம் செல்ல வேண்டியுள்ளது. ஆனால் கடவுட்சக்தி பெற்றுவிட்ட ஒருவன், அச்சித்தி வசத்தால், பிறரை மிக விரைவிலே, விதியையே மாற்றித் தன்போல் மரணமில்லாப் பெருவாழ்வில் விளங்கச் செய்ய வல்லவனாகி விடுகின்றான். இந்தச் சன்மார்க்கச் சாத்தியனின் செயல்முறையே இங்கு ஒளிநெறி எனப்படுகின்றது. நம் வள்ளலாரே இச் சுத்த சன்மார்க்க ஒளிநெறிக்குத் தலைவராகி இருந்து கொண்டு ''உலகுயிர்த் திரள் எல்லாம் ஒளி நெறி பெற்றிட,'' இலகும் ஐந்தொழிலையும் புரிகின்றவராகியுள்ளார். கடவுளே இதுகாறும் விதிவழி மக்களுக்கு ஐந்தொழிலின் முடிவில் அருள் பாலித்து தம்மோடு ஐக்கியப்படுத்திக் கொண்டு வந்தவர், இப்பொழுது, நம் அருட்பிரகாச வடிவில் வெளியாகி உலகறிய இருந்துகொண்டு, சுத்த சன்மார்க்க அருள் நெறிமுறையால், பக்குவிகளை அருள்ஒளி உடம்பினராய் ஆக்கிக் கொண்டு விளங்க உள்ளார். இந்த அருட்பெருஞ்ஜோதி நெறிமுறைக்கு நம் திருவருட் பிரகாச வள்ளலாரே, முதல்வராக, முழு முதற்றலைவராக விளங்குகின்றார். இதற்கு முன் இந்நெறிமுறை வெளிப்படாததினால், மக்கள் எவ்வகையிலும் இறையனுபவத்துடன் என்றும் அழியாது இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்க முடியாதிருந்தது. இப்போது முதலே மனிதன் சுத்த சன்மார்க்கியாய், நிறை இன்புடன் என்றும் வாழ அருள் பாலிக்கப்படுகின்றான்.

உலக மக்கள் அருள் ஒளி நெறியை அறிந்து பற்றி அழியா இன்பில் தழைக்க வேண்டியது திருவுள்ளமாக இருக்க, அறியாமையால், முன்பிருந்த மருள் நெறிகளிலே சென்று சென்று மறைதல் கடவுட் சம்மதமல்லவாம். முன்னெறிகளே மேலானவை எனவும், அவைகளையே பற்றி யொழுகினால்தான் கதியுண்டு என்று நம்பிக் கொண்டிருப்பதும், புதிய நெறி எதுவும் சிறந்ததாகாது என்று எண்ணி மதியாமலும், ஏற்காமலும் இருந்து வீண்போவதும் முறையன்றாம். நமது அருட்புதுநெறி, கடவுளின் கற்பனை கடந்துள்ள உண்மையைக் காட்டிக் கொடுத்து எல்லோரையும் அருள் ஒளி உலகில் ஒத்து வாழ்ந்து இன்பில் ஓங்க உதவுவதாகும். ஆகையால், இப் புது மார்க்கம், பழையனவற்றை எல்லாம் நன்கு அருளால் விளக்கி, அவற்றின் நிறை விளைவே இவ்வருட்பெரு நெறி என்பதையுணர்த்தவந்துள்ளதாம். இக்கருத்தை யோர்ந்து கொண்டு, இந்நெறியைச் சம்மதமாய்க் கொண்டு திருவருளை

நிறையப்பெற்று மக்கள் சமுதாயம் முற்றும் பெருநலம் பெற வேண்டுவது அவசியம்.

இப்படியான அருட்ஜோதிசித்தி பெற்றுள்ள நம் பெருமான் அந்தப் பதியின் பேரருளையும், பெருஞ்சீரினையும் கூறித் துதிக்கின்றார், போற்றுகின்றார். அந்த அக அருளும், புறச் சீரும், மிக ஆற்றல் கொண்டு செயலோடு விளங்குகின்றதாம். அவ்வருட் சிறப்பின் காரணமாக ஏற்பட்ட ஆற்றலைக்கொண்டு உலகரைப் பக்குவப்படுத்த வந்துள்ளது வலிமைமிக்க சுத்த சன்மார்க்கம்.

(7)

1581. மூவருந் தேவரு முத்தருஞ் சித்தரும்
1582. யாவரும் பெற்றிடா இயலெனக் களித்தனை
1583. போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
1584. ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) ஆன்மாக்கள் அருள்நியதிப்படி, ஆக்கலாதி முத்தொழிலால் தோன்றி, விளங்கி, மறைந்து வந்தனவாம். அப்படி வந்த ஆன்மாக்களிலே பக்குவ நிலையுற்ற ஒரு சில ஆன்மாக்கள் திருவருள்வலத்தால், ஆக்கல்தொழிலைப் புரியும் அயனாகவும், காத்தல் தொழிலைச் செய்யும் அரியாகவும், அழித்தலைச் செய்யும் அரனாகவும் ஆக்கப்பெற்று மூவரென விளங்கலாயினர். மற்றும் தவதான முயற்சிகளால் சிறந்து விளங்கின ஆன்மாக்கள் தேவர்களாகிய பதமுத்தி நிலை எய்தினராம். இவர்களல்லாது, உடற்பற்றை அறவிடுத்து, உலகிலே ஜீவன் முத்தர்கள் என்று விளங்கி வாழ்ந்து, முடிவில் உடலையே உதறிவிட்டு விதேக (தேகம் இல்லாத) நிலை எய்திய ஆன்மாக்கள் முத்தர் எனப்படுகின்றனர். இதற்கு மேல் சில ஆன்மாக்கள் யோக ஞான சித்திகளாலும், காயகற்ப முறைகளாலும் ஆயுளை நீடிக்கச்செய்து கொண்டு வாழ்ந்தவர்கள் சித்தர் எனப்படுவார்கள். இவர்கள் யாவரும் நம் அருட்பெரும்பதியின் ஓர் அளவு விசேட சக்தியைப்பெற்று விளங்கிப் பின்னர் அழிவுறுவதுதான் முடிவாம்; அப்படி அழிவுற்றால், திரும்பவும் மனிதராக வந்து பிறந்துதான் மறுபடியும் கடவுளுண்மை கண்டு அருள் பெற்று உய்ய வேண்டியவர்களாவார்கள். பிறவியே வேண்டாம் என்று வரம்பெற்ற ஆன்மாக்கள், தம் அனுபவம் கெட்டு, வாழ்வு அற்று, வெளிநிறை யொளியால் சூழப்

பெற்று, சூனியத்தில் மறைந்தே கிடப்பர். அப்படி எத்தனை கோடி காலம் இருந்தும் பயன் ஏதும் இல்லையாம். அப்படி, தான் என்றும், அதுவென்றும் பிரித்தறியமுடியாது அளவற்ற நெடுங் காலமாய்க் கிடந்துவந்த ஆன்மாவுக்குக் கடவுள் தயவு செய்த தாலே தானே, நால்வகை யோனி, ஏழ்வகைப் பிறவி, எண்பத்து நான்கு லட்சம் ஜீவபேத தோற்றங்கள் உண்டாகி, முடிவில் மனித வடிவில் தன் ஞானம் பெற்று விளங்கினது. இவ்வளவு உயர் நிலைக்கு வந்த ஆன்மா, தன்னையும், கடவுளுண்மையையும் ஒரு வாறு அறிந்தும், மறுபடியும் இப்பிறப்பை இழந்து, அனுபவம் கெட்டுச் சூனியமாய்ப் போவது கடவுள் திருவுள்ளமல்ல; அருளால், அழியாது வாழ்வுபெற்று விளங்குவதுதான் திருவருட் சம்மதம் என்று அறியவேண்டும்.

மேற்படி திரிதேக சித்தியுடன் அழியாவாழ்வில் நிலவுவது தான் வள்ளல் பெற்ற சுத்த சன்மார்க்கப் பெருநிலை அனுபவ மாகும். இதனைத்தான் ஈண்டு,

''மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல் எனக்(கு) அளித்தனை''

என்று குறிப்பிட்டுள்ளார் இவ்விரண்டு அடிகளில். பிற யாரும் இதுகாறும் பெற்றிடா மரணமில்லாப் பெருவாழ்வு அற்புதசித்தி யொடு வாழும் அருள் வாழ்வு இவர்க்கு வழங்கியுள்ளது அருட் பெருஞ்ஜோதி. ஆகையால் அந்த அருட்ஜோதியை, பேராற்ற லோடு விளங்கி அகத்தும் புறத்தும், அருளையும் ஒளியையும் உணர்வாகவும் உடலாகவும் விளங்கச்செய்த அதனை அகநின்று அனகமாக போற்றுகின்றார். இவர் திருவருளாலே யாவற்றுள்ளும் இன்று இருந்துகொண்டு அருட்பெருஞ்ஜோதியைத் துதித்துக் கொண்டிருப்பது உண்மையாதலின், யார் ஒருவர் தம் அகத்தே அருள் ஒளியைக் கண்டு கொள்ளுகின்றனரோ, அவர், அருட்பிர காசரையும், அவரது அருட்புகழ் இப்பாட்டினையும் எந்தக் காலத் துமே கேட்டு மகிழலாம். மற்று அவரைக் காண்பது மட்டும் போதாது. அவரது திருவருளை அடைந்து அவர்மயமாகி வாழ வேண்டுவதே மிக முக்கியமாகும்.

(8)

1585. சித்திகளனைத்தையுந் தெளிவித் தெனக்கே
1586. சத்திய நிலைதனைத் தயவினிற் றந்தனை

1587. போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
1588. ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) சித்திகள் பலவாம்: கர்மசித்தி, யோக சித்தி, ஞானசித்தி எனவும், அட்டமாசித்திகள், எனவும் வாதசித்தி, காயசித்தி எனவும், இன்னும் எத்தனையோ சித்திகள் உள என்பதும் அனுபவிகள் கண்டடைந்து வெளியிட்டவைகளாம். இப்படியுள்ள சித்திகள் அனைத்தையும் பற்றிய இரகசியம் யாவும் நன்கு தெளிவித்து விட்டதாம் அந்த அருட்ஜோதி. இந்த அற்புத சித்திகளிலே நாட்டம் கொள்ளச்செய்யாது தெளிந்து மேற் சென்று திருவருட் பூரணத்தாலே அந்த அருட்பெரும்ஜோதி யையே கண்டு கலந்து ஒன்றி வாழும் பெருநிலையை அடைந்து விட்டுள்ளார் நம் வள்ளற் பெருமான். அப்பெரு நிலையே இங்கு ''சத்திய நிலை'' என்றுள்ளார். இச்சத்திய நிலையைத் தயவினில் தந்துள்ளதாம் அப் பேரருட்ஜோதி.

தயவினில் அல்லது தயவினால் அல்லது தயவாகவே அச் சத்தியநிலையுள்ளது என்ற குறிப்பினை இங்கு உய்த்துணர வைக்கின்றார். சத்தியம் என்றால், கடவுளின் இயற்கையுண்மை விளக்கச் செயலாம். சத்து, சித்து, ஆனந்தமே கடவுளாய் அதுவே இந்தப் பிரபஞ்சக் காரியப்பாடாய் உள்ளதையுணர்த்து வது. சத்தே உண்மையாயும், சித்தே விளக்கம்செய்யும் வாய்மை யாயும், ஆனந்தமே இயற்கை இன்பானுபவத்திற்குரிய தேக நிலையாயும் உள்ளன. இதனாலே சத்தியம் என்பதற்கு நம் தமிழில், உண்மை, வாய்மை, மெய்மை என்ற மூன்றில் வைத்து வழங்கப்படுகின்றதாம். இம் மூன்றுமே அக ஆன்ம உண்மை யாயும் அகப்புறத் தோற்ற மொழியாகிய வாய்மையாயும் புறத் தேகத் தோற்ற மெய்மையாயும் கண்டு கொள்ளப்படுகின்றன வாம். இவற்றில் ஆன்ம உண்மை தலையிடத்தே மெய்யறிவுநிலை யில் தகரவண்ணமாய் அமைந்தும், மொழி விளக்க வாய்மை சுத்த இதயத்தினின்று பெறப்படலால், உயிர் செயல்படும் அவ்விதய நிலையை யகரமாயும், இவ்வுடம்பின் செயலாக இன்பம் விளைக்கப் படலின், அருள் ஒளி அம்சமானது இம் மெய் என்பது குறிக்கவே

வகர மெய்யொடு புணர்ந்த உகர வுயிர் சேர்த்து ''வு'' என விளங்குகின்றதாம். ஆகவே சத்தியமே இந்த நம் தயவு ஆகித் தேகக் காரியத்தில் வெளியாகின்றனவாய் அறியப்படும். இந்த உடலையே தயவு விளக்கப்பொருளாகக் கொண்டு, அக அருவ நிலையிலிருந்து, அகப்புற அருவுருவச் சொல்வடிவாய் வெளியாகி, உருவமாகிய காயச்செயலாய் விளங்குகின்றதாம். தயவாய்க் கிடைக்கப்பெற்றுள்ள சத்திய நிலையே எல்லாச் சித்திகளுக்கும் மேம்பட்டதாய், திருவருள் நிறைவாலன்றிப் பிறிது எதனாலும் அறிந்து அடையப்படாததாய் உள்ளதாம். அந்த நிறையருளாற் பெறப்படும் அருட்பெருஞ்சித்திப்பேறு, மூவா இன்ப முத்தேக சித்திநிலையேயாம். தயவு என்னும் சத்திய நிலையே, இந்த சுத்த, பிரணவ, ஞான தேக நித்தியானந்த சித்திப் பேறாகும்.

இப்படி இப்பெருஞ்சித்தி வாழ்வு வழங்கியுள்ள அருட் பெருஞ்ஜோதியை இங்கு மறுபடியும், ''போற்றி நின் பேரருள், போற்றி நின் பெருஞ்சீர்,'' என மூன்றாவது முறையாகப் புகழ்ந் துள்ளார். அருள் ஒளியின் பேராற்றல் எல்லாம் இந்தப் பக்குவ மனிதனில்தான், அகத்தே அருள்இன்ப உணர்வாயும், புறத்தே அருள்ஒளி வடிவாயும் விளங்கக் கண்டு போற்றிக் கொள்ளப்படு கின்றனவாம். அருட்பெரும்பதியின் உண்மை அருள்ஒளி ஆகும். அருளின்பம் அனுபவத்தில் விளங்குவதேயன்றி மற்றபடி எந்த நிலையிலும் விளங்காது. அருளும், ஒளியும் இரண்டாகக் குறிக்கப் படினும், அது பிரிக்க முடியாத ஒன்றான, அத்துவிதப் பொருளாக உள்ளதாம். அருள் ஒளியைக் கடவுள் என்னும்போது, ஒளி வடி வம் என்றால், அருள், அதன் தன்மையாயிருப்பதாம். அந்த ஒளி நிலையே புற வடிவமாய் உருவாகி விளங்க, அருளே, அறிவுணர் வாகி அவ்வுருவுடன் இருந்து கொண்டுதான் அறிகின்றதாம். அந்த அருளாகிய தன்மை நாமாய் உள்ளிருந்து உணர, ஒளியே நம் புறவடிவாய் சூழ்ந்து நின்று அவ்வுணர்வுக்குத் துணையாய் இருந்து உணரச் செய்கின்றதாம்.

அருட்பெருஞ்ஜோதியின் ஆற்றல், எல்லாம் வல்ல பெருஞ் செயல் திறன்கொண்டதாம். ஆனால், அந்த அருள்நிலை வெளிப் படக் கீழிருந்து அதாவது, சடபூத உயிருணர்வற்ற நிலையிலிருந்து உயிருடைய நிலைக்கு முன்னுக்கு வருகின்றது. உயிர் வடிவில் அறிவு நிலைக்கு வருகின்றது. அதிலிருந்து அருள் உணர்வு நிலைக்கு ஏறுகின்றது. அந்த அருள் நிலையிலிருந்தே அருட்

பெருஞ்ஜோதியை அறிய முடிகின்றதாம். இதனால் உயிரினங்கள் உலகில் சுக துக்கங்களின் மத்தியில் வாழ்ந்து வாழ்ந்து, பொறி யுடம்பின் பற்று கடந்து மேலே கடவுள் ஒளியின் நிலைக்கு வரவேண்டியுள்ளதாம். இப்படிக் கீழிருந்து வருவதாலேதான் அனுபவ வாழ்வு உண்டாகும். ஆகவேதான் ஆன்மாக்களுக்கு அறம்பாவம் நியதி செய்யப்பட்டுள்ளது. முறையோடு முன்னே றிச் செல்லாமல், யாவையும் அனுபவியாமல் ஒரேயடியாக மேலே போய்விட முடியாது. கடவுளும் அப்படி முதலிலேயே மேனிலைக்கு ஏற்றிவிட மாட்டார். மனிதன் தயவுடையவனாயிருந்தால், உலகில் துன்பியல் வாழ்வு பெருகாது, இன்பியலே ஓங்கும். உல கிலே துன்பமே அதிகமாய்ச் சூழ்ந்திருக்கின்றது என்றால், காரணம், தயவுச்செயல் மேற்கொள்ளப்படாததால்தான் என்பது உண்மையாம். அருட்பெருஞ்ஜோதியின் ஆற்றலால் எப்படியும் உலகில் அருளின்பம் விரைவில் சூழும். அதனையே போற்றிக் கொள்ளுவோமாக.

(9)

1589. உலகினி லுயிர்களுக் குறுமிடை யூறெலாம்
1590. விலகநீ யடைந்து விலக்குக மகிழ்க

1591. சுத்தசன் மார்க்க சுகநிலை பெறுக
1592. உத்தம னாகுக வோங்குக வென்றனை

1593. போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
1594. ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி

(உ-வி) நம் வள்ளலார் அருட்பெருஞ் ஜோதியின் நிறை வாழ்த்தும், நிறை ஆசியும் கொண்டு நிறைவாழ்வும் பெற்றுள் ளார். இந்த அடிகளில் தான் அடைந்த பெரு நிலையையும், கடவுட்பேற்றையும் நன்கு குறிப்பிடுகின்றார்.

உலகிலே உயிர்களுக்குப் பல வகையிலும் இடையூறுகள் வந்து வந்து சூழ்கின்றன. அந்தத் தடைகளை எல்லாம் அருள் நியதியேதான் விதித்து வருவித்துக் கொண்டுள்ளது. அத் துன்பங்களும் உயிர்களின் பக்குவத்திற்கே என்பது உண்மை யாயினும், தயவாளன் பிறவுயிர்களின் துன்பங்கண்டு சகி யானாய், அவற்றிற்கு உதவி செய்து இன்பம் கொள்ளச் செய்

கின்றான். அதனால், உயிர்களின் துன்பம் அதி விரைவில் முடி கின்றதோடு, தயவாளனின் அகத்தே தயாவொளி பெருகி பெருநிலை யனுபவம் உண்டாகத் துணையாயிருக்கின்றதாம். இதனால்தான், ''உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூறெலாம், விலக நீ, அடைந்து விலக்குக, மகிழ்க,'' என்று ஆசீர்வதிக் கின்றார் அருட்பெருஞ்ஜோதிபதி. ஒருவன் தன் முயற்சியால், ஆற்றலால், எத்தனை பேருக்கு உதவி துன்பந் துடைத்திடக் கூடும்? இவருக்கோ உலகினில் உயிர்களுக்கு உண்டாம் இடை யூறுகளை எல்லாம் விலக்கும்படியும், அவ்வுயிர்களை நெருங்கி அடைந்து உதவும்படியும் அல்லவா ஆணையிடப் பெறுகின்றது. இது இவரால் ஆகக் கூடியதே என்பதை யுணரும்போது, இந்த ஆசி வெற்று உபசார மொழியன்று எனவும், உண்மையில் சாத் தியமானதே என்றும் அறிவோம். ஆம், இவர் பெற்ற முத்தேக சித்தியாலும் அருளதேக ஆற்றலாலும், எவ்வுலகத்து எவ்வுயிர்க் கும் அடுத்துநின்று உதவும் செயல் முடியும் என்றே அறிகின் றோம். அருள்நெறியில், விதிமுறைக்கும் மேலான விலக்கு ஏற் படும்படி அருட்செயலால் மக்கள் அதிவிரைவில் அவத்தைகளைக் கடந்து, ஆனந்தானுபவ நிலையுறுவது உண்மையாம்.

சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக, உத்தமனாகுக, ஓங்குக என்று பேராசி வழங்குகின்றார் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். சுகநிலை என்பது ஓங்காரமாகிய பிரணவ தேகநிலையாம். உள் ளொளியாம் ஆன்மஜோதியாக விளங்கிக் கொண்டிருக்கும் தன் னுண்மை வடிவிலே கலந்து அதுவாகி, சுகானந்த அனுபவத்தோடு அகத்தே நிலவல்தான் சுகநிலை எனப்படுகின்றது. இந்நிலை யனுபவம், முன்னோர் அகத்தேயுணர்ந்தது முண்டு. ''துகளில் சாயுச்சியகதியை யீறற்ற சொல் சுக சொரூபத்தையுற் றடை வேனோ,'' என்று அருணகிரியார் வேண்டிக்கொள்ளுகின்றார். அச்சுக வடிவம் அகத்தில் இருந்து, அதிலேயே ஆழ்ந்து மறைந் திடச்செய்து விட்டது அவர்க்கு. அவரைத் தான் வேண்டின சுக வடிவம் பெற்று அம்பிகையின் கரத்தில் சுக (கிளி) வடிவத் தில் விளங்குவதாக உருவாக்கிக் காட்டியுள்ளனர் பக்தர்கள். இம்முடிவுதான் அன்றைக்குப் பெற முடிந்தது ஆன்றோர்க்கு. ஆனால், இப்போது, சுத்த சன்மார்க்கம் வெளியாகிவிட்டுள்ள தால், இச் சுத்த சன்மார்க்கச் சுகநிலை வேறாக, மிகச்சிறந்த ஒன்றாக இருப்பதாம்.

சுத்த சன்மார்க்கம், அகத்திலங்கும் அருள் ஒளி நிலையி லிருந்து, விரிந்து மனோ வாக்கு காயத்திற் கலந்து செயல்படுவது. அதனால், இந்நெறி, அருட்சுத்தமாகிய, அக ஒளியாய் விளங்கி நிலவுவதாகும். ஓங்கார நிலையைப் புறத்திருந்து சார்ந்து கொள்ளுவதால், அதுவாகி யுள்ளொடுங்கிடச் செய்தது முன் னெறி, இது புறப்புணர்ச்சியின் அநித்திய அனுபவநிலை. ஆனால், நம் சுத்தநெறி அகப்புணர்ச்சியின் நிறையருள் நிலைத்த அனுபவ மாக உண்ணின்று ஓங்கலின் அழியாமை பெற்று அருட்சுகானந்த வாழ்வில் விளங்கச்செய்கின்றதாம். இந்தச் சுத்தநிலை ஓங்காரத் தின் உட்பொருளாகிய அருளின் பேரனுபவமாகும். ஆகவே, இவர் பெற்றுள்ளது சாதாரண சுகநிலையன்று; சுத்த சன்மார்க்கச் சுகநிலை என்பது தெளிவாக அறிந்துகொள்ளப்படுகின்றது.

இந்தச் சுத்த சன்மார்க்கச் சுகநிலை பெற்றதால், இவர் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்ற, முதல்வர், சிறந்த மேலான தலைவர் (இப் பொருளெல்லாம் தருவது ''உத்தமன்'' என்ற சொல்) ஆகிவிட்டார். இப்படி உத்தமனாகி விளங்கவும், என்றும் தழைத்து ஓங்கவும் அருள்வாக்கு அருட்ஜோதிபதியால் பெற்று விட்டார் என்பது உண்மை.

(1593,1594) இங்கு நான்காம் முறை, ''போற்றி நின் பேர ருள், போற்றிநின் பெருஞ்சீர், ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி'', என்றுள்ளார். இதன் கருத்து, முழுமுதற்கடவுளை அருட்பெருஞ்ஜோதிவண்ணமாய்க் கண்டும், அதுவே அகமுதல் நான்கிடத்தும் நிறைந்து விளங்கும் உண்மையையும், அப்படியிருந்து ஆருயிர்களைத் தன்னிலைக்கு ஏற்றியருள்கின்ற உண்மையையும் ஓர்ந்து போற்றி செய்ய நேர்ந்ததால் இவ் அகவற்பா இங்ஙனம் விரிந்ததாம். இந் நான்காம் முறை போற்றி கூறியதின் காரணம், அருளாம் திருவடி அல்லது காலின் (1/4) முழுமைத் தோற்றம் நான்கு கால்களால் அமைவதால் இப்படி நான்குமுறை போற்று வதாலே அத் திருவருள் வெளிப்பட்டு நம்மை எல்லாம், நான் காம் பாதமாகிய ஞான சுத்த சன்மார்க்கத்தில் செலுத்திச் சாயுச்சிய நிலையாகிய தானான தன்மையில் வைத்து, சுத்த சுக பூர்ண ஆனந்தவாழ்வில் என்றும் விளங்கச் செய்வதான குறிப்பை புணர்த்துகின்றதாம்.

அருட்சிவநெறிசார் அருட்பெருநிலைவாழ் அருட்சிவபதி யாம் அருட்பெருஞ்ஜோதி என்ற தொடக்க அடி முதல் ஆற்றலின்

ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி, என்ற அடிமுடிய இவ் அகவலை யுருவாக்கி, அருட்சிவம்தான், அருட்பெருஞ்ஜோதி என்ற உண் மையை அனுபவபூர்வமாகக் காட்டிக் கூட்டி வைக்கின்றார் நம் பெருமான். ஆதலின், சிவம் என்ற சொல்லைச் சைவ சமயத் திற்கு மட்டும் உரியதாகக் கொள்ளாது சமயாதீதத்திற் சென்று, கடவுட் ஜோதியாக, சச்சிதானந்தப் பரம்பொருளாகக் கொண்டு, எல்லோரும் போற்றிப் பணிந்து, பேரின்பநிலையுறல் வேண்டும் என்பதுதான் நமது திருவருட்பிரகாச வள்ளலாரின் திருவுள்ள மாகும். இவ் அகவலின் பொருள், இலக்கண இலக்கியக் கலை அறிவால், மட்டும் விளங்கிடாது; அருளறிவால் விளங்குவதா யுள்ளதால், அவ்வருளை அடைவதுதான் முதற் கடமையாகும். அன்பினால் அருளடைந்து, அவ் அன்போடு கூடிய அறிவினால் அருளின் மெய்ப்பொருளை யோர்ந்து கொள்ள வேண்டியுள்ளதாம். அருட்பெருஞ்ஜோதிதான் நமது அருள் அறிவாக வெளிப்பட்டு, அது நாமாகி வாழ அருள்பாலிக்கின்றதாம். வாழ்க அருட் பெருஞ்ஜோதி.

(10)

1595. அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
1596. அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

(உ-வி) இவ்விரண்டடிகள் முடிவின் கண்ணின்று, நமது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் இயல் உண்மை நிறை நிலையைச் சுட்டிக்கொண்டுள்ளனவாம். எல்லாம்வல்ல கடவுள ரின் முழுமுதற்பெருமையை யுணர்த்தத்தான் இங்கும் நான்கு முறை அருட்பெருஞ்ஜோதி வந்துள்ளதாம். அகவல் ஆரம்பத் திலும் இப்படியே நானிலை கொண்டு ஒளிரும் நல்லருட்பெருஞ் ஜோதியைத்தான் தலைமையில் அமைத்துக் காட்டப்பட்டதாம். பரிபூர்ண நிறைவாய், அகண்ட பெருஞ்ஜோதியாக அருள்வெளி முற்றும் நிறைந்த பதியுண்மைநிலை என்றென்றும் உள்ளதாகும். என்றுமுள்ள இந்தக் கடவுணிலை யனுபவம் இந்த நல்ல மனிதப் பிறவியில்தான் திருவருள் ஞானத்தால் விசாரித்துக் கண்டு கொள்ளப்படுவதாம். அப்படிக் கண்டு போற்றிப் போற்றிப் பணிந்து, அருள் அடைந்து, அதுவாகி வாழவேண்டியுள்ளோம் நாம். இக்காரணமாகத்தான் ஈண்டு இவ் அருட்பெருஞ்ஜோதி

அகவல் இதுகாலை வெளியிடப்பெறத் திருவருள் பாலித்துள்ளார் நம் பதி.

அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் உண்மை, நமது மெய்யருள் அறிவு விளங்கும் அம்பலத்தில்தான் வெளியாகின்றது. அந்த அம்பலம் என்ற அருள்மொழியில் உண்மை என்றோ வெளியாகிவிட்டிருந்தது. அருட்பெருங்கடவுளே, தமிழ் கண்ட அற்புத ஞான சித்தர்களின் உளத்திருந்து, தன் உண்மையை, அத்தமிழ் எழுத்திலும், சொல்லிலும், பொருளிலும் வெளிப்படச் செய்துவிட்டார். அந்தக் கடவுள் உண்மையைத்தான் இந்த ''அம்பலம்'' என்ற சொல்லில் வெளியாகிவிட்டுள்ளதை, அருள்ஞான விளைவால் இன்னே காண்கின்றோம் நாம். அச்சொல்லை, அம்+பல்+அம் எனப் பிரித்து நோக்கும் போது, அம் என்னும் பிரணவநாத நிலை முன்னும் பின்னும் இருக்க, நடுவுற்ற ''பல்'' நிலையில் நமது அருட்பெரும் பதி விளங்கி அனுபவப்பட உள்ளதை அறிவிக்க வந்ததாகும். இவ்வுண்மை அடிப்படையின் மீதுதான் இந்த அருட்பெருஞ்ஜோதி அகவற்பாவும் அமைந்துள்ளதாகும். ஆகையால்தான் நானிலை அருட்பெருஞ்ஜோதியைத் தொடக்கத்திலும், இறுதியிலும் இருத்தி, நடுவே அந்த அருட்பெரும்ஜோதியின் தனிப்பெருங்கருணை விளக்கம், வியந்து வியந்து, போற்றிப் போற்றிப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளதாகும். இவ் அகவலால், அருட்பெருஞ்ஜோதிபதியின் உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டுகொண்டு, அருளாலே அடைந்து ஆனந்தவாழ்வில் ஓங்கவேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.

மேற்படி அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் உண்மையை வெளிப்படுத்தும் நோக்கத்தோடுதான் நமது வள்ளலார் மகாஉபதேசம் செய்து, அருட்பெருஞ்ஜோதி மந்திர விளக்கமும் அருளியுள்ளார். அது இது:

“அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி,”

என்பதே நம் கடவுளின் பூர்ண விளக்க மந்திர மகா வாக்கியமாகும். இதில் அருட்பெருஞ்ஜோதியை முன்னும் பின்னும் காட்டி நடுவில் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்ற

திரயோதசாந்த அருட்பெரும்பதி யனுபவ நிலையும் தெரிவிக்கப் பட்டுள்ளதாம். அம் என்பதே ஓங்காரம் குறிக்கும் மெய்ப்பொருள் விளக்க அருட்பெருஞ்ஜோதியாய் முதலீறு விளங்க அந்த ஓங்கா ரத்தின் அக அனுபவப்பொருளாகிய அருள்விளக்கம், பல் நிலை யில் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணையால் விரிந்து விளங்குகின்றதாம். தலைநடுப் பகரபீடம், நம் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணையுடன் விளங்கும் இடமாய், அதன் மீதுள்ள அருள்வெளி அனுபவநிலையே பதின்மூன்றாவது மெய்ந்நிலை எழுத் தாகிய ''ல்'' என்னும் லகரமெய்யால் அமைந்ததையே நம் பதி யுண்மை விளக்கும் ''அருட் பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை'', என்னும் பதின் மூன்றே தனிச்சீர் பெற்ற மந்திர வாசக மாகக் குறிக்கப்பட்டுள்ளதாம்.

இதனால், அருட்பெருஞ்ஜோதிச் சூழலில் என்றும் விளங்கிக் கொண்டிருக்கும் கடவுளை, நமது சிரநடு சிற்றம்பலத்தே தான் ''அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை'' வண்ணமாய்த் திகழ்கின்றதை இதுசமயம் அறிந்து கொண்டுள்ளோம். இவ் வுண்மை அறிவாலேதான் கடவுளை இன்று இங்கு அறிகின்றோம். இவ்விடத்து இந்த அறிவு தோன்றாதபோதும், இவ்வளவு நாளும் இது இருந்துள்ளது மெய்யே. மேலும், இந்தச் சிற்றம் பலக் கடவுள் உண்மையே எங்கெங்கும், எக்காலத்தும் இருந்து கொண்டு இருப்பினும் தன்னை, அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணையாக வெளிப்படுத்திக்கண்டு கொள்ளச்செய்யாமல்தான் எங்கும் நிரம்பியிருந்தும், புறத்தே பல பொருள்களாய், உயிர்க ளாய், ஆற்றல்களாய், அறிவு அனுபவ நிலைகளாய்த் தோன்றித் தோன்றி அழிந்துபோய்க்கொண்டே யிருக்கச் செய்ததாம். இப்போதுதான், அந்தக் கடவுள் உண்மை இந்த இடத்தில் இப்படி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணையாய் வெளி யாகியுள்ளதாம். இக்கடவுள் ஞானம் அனுபவபூர்வமாய் வெளியாகி விளங்குகின்ற இந்தப் ''பல்'' நிலையிலே காணப்பட் டுள்ளதே அல்லாது எவ்விடத்தும், எப்பொருளிலும், எவ்வுயிரி லும், எந்த வகையிலும் காணப்படாதே உள்ளிருந்தபடி, புறத்தே அனந்த வண்ணத் தோற்றங்கொண்டுள்ளதாம். ஆகையால், கடவுள் நம்தலைநடுவுள் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை வடிவாய் விளங்குகின்றதோடு மற்றெங்கும் அகவுண்மை தோற் றாத அருட்பெருஞ்ஜோதியின் பலவாகிய புறத்தோற்றங்களே காணப்படுகின்றனவாம். இதிலிருந்து அனுபவப்படுகின்றது,

ஒன்றான கடவுளே புறத்தில் பல்வேறு தோற்றங்கொண்ட அருட்பெருஞ்ஜோதியாயும், அகத்தில் ஒருபடித்தான தனிப் பெருங்கருணையாயும் விளங்கிக் கொண்டுள்ளார் என்பது உண்மை யாம். இப்படி ஒன்றான கடவுளின் உண்மை விளக்கமே, ஒவ் வொரு மனிதனுக்கும் (ஆன்ம அணுவுக்கும்). அனுபவப்படும்போது அகத்தில் தனிப்பெருங்கருணையும், புறத்தில் அருட்பெருஞ்ஜோதி யின் மாற்ற தோற்றங்களும் விளங்குகின்றனவாம்.

ஆரம்பத்தில் அருட்பெருஞ்ஜோதியின் விளக்கம் நான்கு நிலையோடு குறிக்கப்பட்டதே போல், முடிவிலும் அதுநான்கு நிலையோடே குறிக்கப்படுகின்றது. முதலில் அருட்பெருஞ்ஜோதி யின் உண்மையை விசாரநிலையில் அண்டத்தும் பிண்டத்தும் விளங்குவதைத்தான் ஒருவாறு அறிந்துகொள்ள முடிந்தது. அப்படி அறிந்துகொண்டதை அடைந்து அனுபவத்தில் பெற வேண்டித்தான் இந்த அருட்பேரகவலின் முழுநிலையும் விரித்து வழங்கியுள்ளார் நம் பெருமானார். அதனால், அந்த விளக்கத்தைப் பற்றிய எல்லாக் குறிப்புக்களும், அடி அடிதோறும் ஆய்ந்து, அருட்பெருஞ்ஜோதியின் உண்மையை, சத்திய ஞான சபையில் கண்டு கலந்து அதுவாகி நிற்கும் அனுபவ நிலைக்கு வந்து சேர்ந் தோம். இதனால், நாம் வேறு அந்த அருட்பெருஞ்ஜோதி வேறு என்னாது ஒன்றாகி அகநின்று விளங்குகின்றதை அருளால் உணர்ந்து கொண்டுள்ளோம். இந்நிலையிலிருந்தே அகம், அகப் புறம், புறம், புறப்புறம் ஆகிய பிண்டநிலை நான்கிலும் அருட் பெருஞ்ஜோதி அனுபவத்தையும் காண்கின்றோம். அண்டநிலை நான்கினும் அருட்பெருஞ்ஜோதியை விண்கலந்த காரொளியான அக்கினியையும், ஞாயிற்று ஜோதியையும், திங்கள் கோளையும், நட்சத்திர ஒளியையும் அருட்பெருஞ்ஜோதி நிலையிலிருந்து பார்க் கும்போது பிண்டநிலை நான்கினும், அண்டநிலை நான்கினும் உள்ளீடாய் இருந்து விளங்குகின்ற ஒன்றான அருட்பெருஞ் ஜோதியே எனவும், அந்த ஒன்றே ஒவ்வொன்றின் அகமிருந்து புறத்தே அதுவதுவாகித் தோற்றி விளங்கிக் கொண்டிருப்ப தையும் உணர்கின்றோம்.

எனவே யாவையும் அருட்பெருஞ்ஜோதியாய்க் கண்டு நிற்கும் நாமும் அருட்பெருஞ்ஜோதியாய்த் தனிப்பெருங்கருணை யோடு விளங்குவதை அகமிருந்து உணர்ந்து அனகமாக வாழ வேண்டும் என்று ஆணை செய்யப்படுகின்றோம். ஆகவே, அருட்

பெருஞ்ஜோதி அம்பலத்தில், அதுவாகியிருந்துகொண்டு, அரு ளனுபவமாம் இன்பம் பெருகப் பெருக அருட்பெருஞ்ஜோதியுல கில் தயவுசெய்துகொண்டே யிருப்போமாக. இப்படித் தயவு செய்து கொண்டேயிருப்பதுதான் நிறை அருட் பெருஞ்ஜோதி வாழ்வு ஆம். இதுதான் இவ் அகவலின் முதல் ஈற்று எண்ணிலை அருட் பெருஞ்ஜோதியின் கருத்து.

முடிவுரை

கடவுளின் நிறையுண்மை அருட்பெருஞ்ஜோதியாகத்தான் இருக்கின்றது. கடவுளின் அடியும், நடுவும், முடியும் அருட்பெருஞ் ஜோதிதான் என்பதைக் குறித்து, விளக்கம் தருகின்றது இந்த அருள் அகவல் முற்றும். அகண்டபெருவெளி முற்றும் அனாதி யாக இருந்து கொண்டிருப்பது இவ் அருட்பெருஞ்ஜோதி இறை பரம்பொருள் ஒன்றேயாகும். இது எங்கும் பூர்ணமாக, அணுவ ளவும் இடையீடின்றி நிரம்பி எப்போதும் ஒரு படித்தாய் விளங்கிக்கொண்டேயுள்ளதாம். இப்படியெல்லாம் இருந்து வந்த போதிலும், அந்த அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் உண்மை உள்ள படி அறிந்து கொள்ளப்படாதிருந்தது இதுவரை. நிறைபெறும் ஒளிநிலையைக் கந்தழியாகக் கண்டவன் பழந்தமிழ் மகன். அவன் அவ்வொளியை, எல்லாம் வல்ல, எல்லாமான அருட்பேரொளி யாகக் காணவில்லை அன்று! மேலும் அவ்வொளிக்குத், தான் வேறாக ..யலாக இருந்துதான் கண்டு அடைய முயன்றான். முடிவில் ..'திற் கலந்து மறைந்துபோனான்! பின்னுற்ற கோடி கோடி மக்களும் கடவுள் உண்மையை ஏகதேசம் அறிந்தும் அறி யாமலும், தெய்வ கற்பனா வடிவங்களையும் அதனை அடையும் பலவாகிய கொள்கை கோட்பாட்டு நெறிமுறைகளையும் ஒருமை யால் எண்ணி எண்ணியும் உணர்ந்துணர்ந்து வெளியிட்டும் பயின்று அடைய முயன்றும், உண்மை கண்டு கொண்டு, வாழாது வீண் போயினர், இந்த அருட்பெருஞ்ஜோதி தோற்றி அனுபவப்படா முன்னர்.

முடிவாக இப்பொழுதுதான் அந்த அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே, இம் மனிதனில் இவனது உண்மையாகவே சிரநடு சிற் சபையில் எழுந்தருளி, பக்குவத்தால் புருவத்திடையுறு ஞானக் கண்ணைத் திறப்பித்து, அகம்வளர் ஒளியைக் கண்டு அது தானாகக் கொண்டு விளங்கும் உண்மையை அருளாலே புகட்டப்பெற்றான்.

இதனால் இவன் தானே அருட்பெருஞ்ஜோதி அனுவடிவினனாய் இருப்பதையுணர்ந்து கொண்டிருக்கின்றதோடு, இந்த அருட் பெருஞ்ஜோதியே கடவுளின் நிறையுண்மை அனுபவம் வழங்கும் சிற்றுருவாய் எங்கணும் நிரம்பிநின்று எல்லாமாய்ப் புறத் திலங்குகின்றனவாகவும் உணர்ந்து கொண்டுள்ளான். இது குறித்து விளக்கவே இந்த அருட்பெருஞ்ஜோதி அகவல் திருவரு ளாலே வெளியாக்கப்பட்டுள்ளதாம்.

இதன்மூலமாகக் கண்டு கொள்ளப்படுகின்ற கடவுள் உண் மையும், விரிநிலை விளக்கங்களும், உருவாகியுள்ள உலகுயிர்ப் பொருள்களும், அருட்பெருங்கடவுளின் சத், சித், ஆனந்தமாகிய மெய்யறிவின்ப வாழ்வை வழங்கவந்தனவே என்று திருவருளே யுணர்த்த உணர்கின்றோம். அருட்பெருஞ்ஜோதி வெளியில், அறியாமையாகிய இருளும், ஏகதேச மனோபகுத்தறிவாகிய மருளும் நீங்கி, சுத்த அருள் ஒளியில் உண்மை எல்லாம் உள்ளது உள்ளபடி விளங்குகின்றதாம். இதனால் மக்கள் சமுதாயம், இந்த அருட்பேரொளி கொண்டு உண்மையை முதலில் கண்டு கொள்ள வேண்டும். அப்போதுதான் முன்னெறிகளில் உள்ள கருத்துக்களின் உண்மை உள்ளது உள்ளபடி அறியமுடியும். மெய்ப்பொருளாம் கடவுள் இந்த அருட்பெருஞ்ஜோதி ஒன்றே என்பதை யுணரவும், அந்த ஒன்றே எங்கும் உள்ளீடாய் இருந்து கொண்டு எத் தெய்வ வடிவமாயும், எம்மனித வடிவாயும், எவ் வுயிரின் உருவாயும், எப்பொருளின் வண்ணமாயும், மற்றெல்லா வற்றின் தோற்றங்களாயும் உள்ளது என அறிந்து கொள்ளவும் முடியும்.

மேற்படி அருட்பெருஞ்ஜோதியின் உண்மையை உணர்ந்து கொண்டு, நாமே அதுவாய் இருப்பதையுள்ளூறப் புரிந்துகொண்டு, அன்பாலே அறிவாலே உலகோடு பயின்று எல்லோருக்கும் இன்பமுண்டாக வேண்டும் என்ற பெரு நோக்கோடு வாழ வேண்டும். இந்த அருட்பெருஞ்ஜோதி வெளிப்பட்டு விளங்கும், நம் வடலூர் உள்வளர் சத்திய ஞானசபையில், தயாவொழுக்கத் துடன் சுத்த சத் விசாரத்துடனும் சென்று திருமுன் நின்று நினைந்தும் நோக்கியும் போற்றியும் உள்ளம் எல்லாம் உருகி அந்த உள்ளொளியோடு கலந்து ஒன்றித்து அதுவாகிவிட வேண் டும். இப்படிப்பட்ட சாதனைதான் எல்லோருக்கும் முதலில் வேண்டப்படுவதாகும். பிற புற ஆலயங்களிலும், தெய்வ நிலை

யங்களிலும் எந்த வகையிலும் எந்தக் காலத்திலும் அடையாத முடியாத பேரின்பப் பெரும்பயனை யாவரும் பெறலாம். ஆகையால், புறத் தோற்றங்களிலும், செயல்களிலும், கொள்கைகளிலும், பழக்கவழக்கங்களிலும் வீணிற் பெரும் பற்று கொண்டு, வம்பும் வாதமும், சண்டையும் சச்சரவும் செய்துகொண்டு தனக்கும் உலகுக்கும் அவத்தைகளையும் அழிவையும் தேடிக்கொள்ளக் கூடாது. நாம் ஒவ்வொருவரும் அருட்பெருஞ்ஜோதியின் உண்மையிலிருந்து வாழவந்துள்ளோம். ஆதலின், அதுகொண்டு அன்பும் இன்பமும் பெருக வாழ்வதே முக்கியம் என்பதை யுளம் கொள்வோமாக. ஆகையால் புலன்வாழ்வில் பற்று கொண்டு, அழிவுறும் புற வடிவினை நாம் எனவும், அழிவுறுவதே முடிவெனவும் எண்ணிக்கொண்டு வீண்போதல் அறியாமையாம்.

நமது அருட்பெருஞ்ஜோதியின் உண்மை நிலையை அறிந்து பற்றிக்கொண்டு, அருள்வாழ்வு வாழத் தொடங்கிவிட்டால், திருவருளே உட்கலந்து நிறைந்து, அழியுருவையும் அருள் ஒளியுருவாக்கிவிடும் என்பதுதான் நம் திருவருட்பிரகாச வள்ளல் கண்ட அனுபவம். தன் உண்மையையும், அனுபவத்தையும் உலகெல்லாம் புரிந்துகொண்டு அடைந்தின்புற வேண்டும் என்றே திருவருட்பாவையும், அதில் இந்தச் சிறப்பிற் சிறப்புடைய அருட்பெருஞ்ஜோதி அகவலையும் திருவுளச்சம்மதமாய் வெளியிட்டுள்ளார். மற்றபடி அவரது புறத்தோற்றம் வரலாறும் வாழ்வுநிலைகளும் குறித்துப் பெரும் சர்ச்சையில் காலத்தையும் ஆற்றலையும் வீணாக்கிக்கொண்டிருத்தல் கடவுட் சம்மதமன்று, உலகில் எங்கும் புலனெறியாளர்களே நிரம்பியுள்ளதால், அவர்கள் அம்மாதிரிப் புற ஆராய்ச்சிகளில் உழன்று கொண்டிருக்கின்றனர். அவற்றால் பெருநன்மையொன்றும் உண்டாகாது. நம் முன்னோர்கள்கூட இந்தவகைப் புற வாழ்வு வரலாற்று விடயங்களில் பற்றற்றவர்களாயிருந்து விட்டது குறித்து இப்பொழுது சிலர் குறைபட்டுக் கொள்ளுகின்றனர். அது ஒன்றும் கவலைப்பட வேண்டிய விஷயம் அல்ல. மேலும், அவர்கள் அக உண்மையில் அதிகம் பற்றுக் கொண்டு, புறநிலையைப் புறக்கணித்து வந்ததே புறச் செய்திகளைப் புகலாது விட்டனர் என்பதும் உண்மையாம். திருவருட்சம்மதம் அதுவெனக் கொண்டு, போனவற்றை கிண்டிக் கிளறிக்கொண்டு இருக்காது, ஜீவ தயாவொழுக்கம் பூண்டு சூழ் உலகம் நல்லின்பம் பெற ஆவனசெய்து கொண்டிருத்தலே திருவுளத்தின் ஆணையாகும்.

சுத்த சன்மார்க்கம் உலகுக்கு நிறை இன்பம் நல்க, வந்துள்ள, எல்லாருக்கும் உரிய ஒரு பொது நெறி, புது நெறி. இதனைச் சன்மார்க்கம் என்றதனால், இதுவரை வழக்கத்திலிருந்து வருகின்ற சமய, மத நெறிகளைப் போன்ற ஒன்று என்று கருதி விடக்கூடாது. அம்மாதிரியான பழைய, புதியனவாகிய எந்த ஒரு மார்க்கமும் போன்றதல்ல இது. சுத்த சன்மார்க்கம் என்ப தற்குப் பொருளே அருட்பெரும்ஜோதிதான். இதன் விளக்கம் இப்படிக் காண வேண்டும். அருட்பெருஞ்ஜோதியின் விளக்கம், அருள் என்றும் பெருஞ்ஜோதி என்றும் இரண்டாகக் கொண்டு, அருளை நம்மின் கடவுள் ஞான உணர்வு ஆகவும், அது கொண்டு விளங்கும் சூழ் உலகுயிர்ப் பொருள்களெல்லாம் அருளாலே செயல்படுத்தப்படுகின்ற பெருஞ்ஜோதி நிலையாகவும் இருப்ப தால், அந்த அக அருள்ஞான ஆன்மநிலையிற் பொருந்தி இருந்து கொண்டு சூழுலகில் அருளியலால் வாழ்வதுதான் இந்த அருட் பெருஞ்ஜோதியின் உண்மை கொண்ட சுத்த சன்மார்க்கத்தின் மெய்ப்பொருளாம். இது உலகமெலாம் இன்புற்று வாழும் வழி துறையாக, சுத்த நெறியாகக் கண்டு கொள்ள வேண்டும். ஆகையால், எவரும் புற நாட்டங்கொண்டு உண்மை காணாது, இந் நெறியைப் புரிந்துகொள்ளாமல் வாளாவிருத்தலோ, மாறு பட்டுப் போவதோ கூடாது. இம்மார்க்கம் மேற்கொள்ளுவதால் எக்குறையும் நேராது. எவர்க்கும் நலமே உண்டாம். பழநெறி களால் பெறக்கருதிய நன்மைகளுக்கு மேலான பெருநன்மையைப் பெறலாம். பழைய மார்க்கங்களுக்கும் லட்சியங்களுக்கும் உண் மையில் முரணானதல்ல இம்மார்க்கம். ஆகவே, அன்பும் அறிவும் கொண்டு அருள் ஒளி கொண்டு, வாழ ஒவ்வொருவரின் அக ஞானசபையிலிருந்து வரவேற்கின்றது அருட்பெருஞ்ஜோதி.

வாழ்க

"அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை"

அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை விளக்கம் முற்றும்.

தயவு

அருட்பெருஞ்ஜோதி அகவலின் முடிவுரை

அனாதி நித்தியப் பரம்பொருள் அருட்பெருஞ்ஜோதியாக உள்ள ஒன்றாம். அது அருவமாக இருந்து, ஒரு பக்குவ மனித உள்ளத்தில், சிதம்பரம் இராமலிங்கரின் ஆன்ம அகத்தில், முதல் முதலில் அருட்பெருஞ்ஜோதியாகத் தனிப்பெருங்கருணையோடு வெளிப்பட்டு விளங்கினது; அதனை அருள் அறிவாற் கண்டு கொண்டார். அப்போது அந்த இறை அருட்பெருஞ்ஜோதி அருவுருமாக விளங்கினது உண்மையே!

அப்போது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் இராமலிங்கர் உள்ள ஞானசபையில் அருவுருமாய் எழுந்தருளித் தன்னை முழுமையாக உணர்த்தித் தனிப்பெருங்கருணையோடு வெளிப்படத் திருவுளம் கொண்டது. அதன்படி தான் அந்த இறை உண்மை விளக்கம் ஒருவாறு ஒரு நீண்ட அகவற்பாவாக விரிந்து வெளிப்பட்டது. அந் நெடுஞ் செய்யுள், அருள் ஒளி இறையின் அகப்புற விளக்கமாகவே, ஓர் அரிய எழுத்தோவியமாக அமைந்து விட்டது. அருவ ஆண்டவர் இயலே, அருவுருவ வள்ளல் உள்ளமாகத் திகழ்ந்து, பா உருவாகி உலகறிய வந்துவிட்டது உண்மையாம்.

ஆகவே இந்த அகவல் உலக மக்கள் சமுதாயம் முழுமைக்குமே ஓர் அருட் பிரசாதமாகும். இதனால் இதன் சொல்லும் பொருளும் கற்பனை கடந்த மெய்ப் பொருள் உண்மையையே வழங்கப் போந்துள்ளது. நூலறிவும் நுண்ணுணர்வும், மேலான கற்பனைத் திறனும் கொண்டு மட்டும் இதன் அருள் உரை கண்டு கொள்ள முடியாத ஒன்றாம். தயா ஒழுக்கத்தோடு அகத் தொன்றி இருந்து கொண்டு அருள் உணர்வால் உரை காணத் தொடங்கினபோது, சொல்லும் பொருளுமான, அருள் ஒளியே கருணை பாலித்ததால், நாளும் சிறிது சிறிதாகத் தொடர்ந்து வெளிப்பட்டது. தினம் இரண்டிரண்டடிகளாக உரை செய்து முடிக்கப் பெற்றது. 798 நாட்களில் 1596 அடிகள் கொண்ட அகவல். அவ் அகவல்

நாட்குறிப்பேட்டில் சுருக்கமாக இருந்தது; பின்னர், விரிவாக அக நின்று அனக விளக்கமாக ஓர் ஆயிரம் பக்கங்களில் எழுதி வைக்கப் பெற்றது.

அவ் அருள் விளக்க உரை நூலே, பொள்ளாச்சி அருட்செல்வர் திருநிறை. நா. மகாலிங்கம் அவர்கள் மூலம் 1974ஆம் ஆண்டு, வள்ளலார் முத்திறல் வடிவேற்ற நூற்றாண்டு விழாவில் வெளியிட்டு கொண்டாடப் பெற்றது. பின்னர் இரண்டாம் பதிப்பும் வெளியிட்டு வழங்கினார், அருட்செல்வர் அவர்களே. அடுத்து இப்போது, சத்திய ஞான கோட்ட, தயவு நூல் வெளியீட்டு அறக்கட்டளை மூன்றாம் பதிப்பாக இவ் அகவல் அருள் விளக்க உரை நூல் வெளியாகியுள்ளது.

இப்போது தான், மக்கள் உள்ளத்தில் அருள் நாட்ட விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டு ஆவலோடு எதிர்பார்க்கும் நிலை உண்டாகி உள்ளது. வள்ளற் பெருமானே அகமும் புறமும் இருந்து, மக்களைத் தன் வழிக்கு ஈர்த்து நல்வாழ்வு பெற்று உய்ய உதவுகின்றார் என்பது தெளிவு.

முடிவுரையின் விளைவு

அருட்பெருஞ்ஜோதி இறைவன், அனாதி நித்தியர், அணுவில் அணுவாயும், அகண்டத்தில் அகண்டமாயும் அருவமாய் இருந்து, எங்கும் நிறை 'அருட்பெருஞ்ஜோதி'யாக வெளிப்பட்ட நிலை, அருவுருவத் தோற்றமாகும். இது, பிரபஞ்ச நிறைவாய் இருந்தும் மனிதனில் ஆன்ம சிற்றணுவில் தான் பக்குவத்தே தோன்றி, அருட் பிரகாச மனித வடிவில் நிறை அனுபவம் ஏற்பட்டுள்ளது. இது தான், ஆண்டவரின் நித்தியானந்தத் திருவுருவாகும். இது, மக்கள் இனத்திற்கே பொது உரிமையாகும். இவ்வுரிமை கொண்டு மக்கள் சமுதாயத்தைப் பேரின்ப வாழ்வில் தழைத்து ஓங்கச் செய்ய வந்துள்ளது உண்மை இறைவன் ஆணை. ஆதலின், இவ்வுரை விளக்கத்தை ஒவ்வொருவரும் எப்படியாவது, தம்தம் தாய்மொழி மூலம் ஆகவேனும் நன்கு அறிந்து ஏற்று, வாழ்வில் நிறைவு பெற வேண்டுவது திருவுள்ளம்.

தயவு மூலம் நிறைவு

அருட்பெருஞ்ஜோதி இறைவன், ஓம் என்ற ஒரு சொல்லாய், அதன் முப்பொருளாய் உள்ளவர்.

த - தகராகாசப் பேரொளி.

ய - நிறைஒளியின் ஓர் அணு ஆன்மா.

வு - கடவுளான்ம மனிதனின் நித்திய முத்திறல் வடிவம்.

இத் தயாஇயல் விளக்கத்தை நன்கு யாவரும் அறிந்து வாழ்வில் ஏற்றுக் கொள்ளவே பெரு விளக்கம் வழங்க வந்துள்ளது. இவ் அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்க உரை நூல்.

ஏற்று வாழ்க

உலகமெல்லாம்.

தயவு **சரவணானந்தா.**

21-3-97.

சத்தியஞானகோட்டம்,
கீழ ரத வீதி, 4. நாகசாமி சந்து,
திண்டுக்கல். 624 001.

தயவு நூல் வெளியீட்டு பட்டியல்

(20.3.97 இருப்புப் படி)

1)	அகவல் உரை விளக்கம் (தமிழ்)	டெம்மி சைஸ்
2)	அகவல் உரை விளக்கம் (ஆங்கிலம்)	,,
3)	தயவுப் பாக்கள் முற்பகுதி	,,
4)	இங்கித மாலை உரை	,,
5)	முறையீடு	,,
6)	தயவுக் குறள்	,,
7)	தயவுப் பெருநெறி	கிரவுன் சைஸ்
8)	திருவடிப் புகழ்ச்சி உரை	,,
9)	இரண்டற்ற இன்ப வாழ்வு	,,
10)	ஒன்று மூன்றான உண்மை	,,
11)	சிறந்த நாள்	,,
12)	ஞான சரியை உரை	,,
13)	திருப்பள்ளி எழுச்சி உரை	,,
14)	தயா பெரும்பழம்	,,
15)	பிரமான்மபதி	,,
16)	குரு பூஜா மலர்	,,
17)	சுத்த சன்மார்க்கம்	,,
18)	தயவு மனிதனின் நெற்றிக்கண்	,,
19)	திருக்கதவும் திறத்தல் உரை	,,
20)	காட்சிக் கண்ணிகள் உரை	,,
21)	சிற்சக்தி துதி உரை	,,
22)	சுத்த சன்மார்க்க விளக்க உரை	,,
23)	அருட்பெருஞ்ஜோதி அட்டகம்	,,
24)	இராமலிங்கர் வாழ்க்கை உண்மை	,,
25)	அருட்பா அமுதத் திரட்டு	1X16 சைஸ்
26)	பாராயண அகவல்	,,
27)	சாகா கல்வி	,,
28)	மகோபதேசம்	,,
29)	நாளந்தாதி	,,